2952

T.N.C.A. Debates

Official Report

Vol. 30    No 1 & 2

18, 19 November 1986

(C)

D 1
V211,31 N86
N86.30.1&2
136492

வெளியீடு 2-8-1987

Issued 2-8-1987

16/12/87

2452

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை நவம்பர் 18, 1986—தொகுதி 30 எண் 1

Tuesday the 18th November 1986—Volume 30 No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras-600009

விலை ரூ. 3]

[Price Rs. 3

136477
600 008

# உள்ளடக்கம்

18-11-1986

| | | பக்கங்கள் |
|---|---|---|
| (i) | தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | IV—V |
| (ii) | Personnel of the Government of Tamil Nadu | VI |
| (iii) | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். | VII—IX |
| (iv) | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி) | X—VII |
| 1. | வினாக்கள்—விடைகள்— | 1—49 |
| | உடுக்குறியிட்ட வினாக்கள்— | |
| 2. | தகவல் கோரல்— | |
| (அ) | இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து பெங்களூரில் நடந்த பேச்சு வார்த்தைகள் | 50—53 |
| (ஆ) | அரசு விழாக்களில் உறுப்பினர்கள் அழைக்கப்படுவதும் அவர்கள் பெயர் அழைப்பிதழில் அச்சடிக்கப்படுவதும் குறித்து | 53—54, 56—57 |
| (இ) | இந்திய மருத்துவக் கவுன்சில் அனுமதி இல்லாமல் தனியார் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுவது | 54—55 |
| (ஈ) | நீக்கம் செய்வது குறித்து | 55—56 |
| 3. | அறிவிப்புகள்— | |
| (அ) | உறுப்பினர்கள் கைது செய்யப் பெற்றுள்ளது | 58 |
| (ஆ) | அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவை—உறுப்பினர்கள் தேர்தல் | 58—59 |
| (இ) | அவை ஈர்ப்பு தள்ளி வைக்கப்பெறுதல் | 59 |
| (ஈ) | நகராண்மைச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு, 1986 (ஆ.இ.) | 111 |

பக்கங்கள்

4. கவன ஈர்ப்பு—

திருச்சி மாவட்டம் துறையூரிலுள்ள கதர்வாரிய கண்டசாரி சர்க்கரை ஆலைக்குக் கரும்பு கொடுத்த விவசாயிகளின் பாக்கிகளைத் தீர்த்துவைத்தல் 59—63

5. அறிக்கை அளித்தல்—

பொது நிறுவனங்கள் குழு 63

6. அரசினர் தீர்மானங்கள்—

(அ) பாரதியார் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்கள் தேர்தல் 63—64

(ஆ) பாரதிதாசன் பல்கலைக் கழகப் பேரவை-உறுப்பினர்கள் தேர்தல் 64

(இ) காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகப் பேரவை-உறுப்பினர் தேர்தல் 64

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—

(அ) வேளாண் விளை பொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு விளை பொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனிவகை முறைகள்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1986 65—68

(ஆ) பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1986 69

(இ) தமிழ்ப் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986 69

(ஈ) ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்தல்) தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1986 70

(உ) சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலைகள் (கையகப் படுத்தல் மற்றும் உரிமை மாற்றம் செய்தல்) சட்ட முன்வடிவு, 1986 70



2952

பக்கங்கள்

(ஊ) பத்திரப் பதிவுச் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1986 71—108

(எ) சென்னை மாநகராட்சி இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு, 1986 71
- திரு. எ. தெய்வநாயகம். 71—75
- திரு. ஆ. நடராசன் 76—79
- திரு. சைதை சா. துரைசாமி 79—84
- திரு. ஆர். செங்காளியப்பன் 84—88
- திரு. ஜே. ஹேமச்சந்திரன் ..
- திரு. எஸ். என். இராமசாமி 88—93
- மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி 93—106

(ஏ) கோயம்புத்தூர் மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986 108—110

(ஐ) மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986 110—111

(ஒ) நகராண்மைச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986 112—126
- மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி 112, 124—126
- திரு. ஜி. கே. ஜெயபாரதி 112—115
- திரு. அ. ரகுமான்கான் 115—118
- திரு. செ. செம்மலை 118—122
- திரு. வி. பி. சிந்தன் 122—124
- திரு. வை. பாலச்சந்திரன் 124

(ஓ) இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1986 126
- மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் 126, 141—144
- திரு. டி. ஆர். வேங்கடரமணன் 127—128
- திரு. ஜே. ஹேமச்சந்திரன் 129—130
- திரு. செ. செம்மலை 130—133
- திரு. மா. மணிமாறன் 133—135
- திரு. வை. பாலச்சந்திரன் 135—141

8. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள் 145—146

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

ஆளுநர்—திரு. சுந்தர் லால் குரானா

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

| | | |
|---|---|---|
| 1. | முதலமைச்சர் .. .. | மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன். |
| 2. | நிதி அமைச்சர் .. .. | மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். |
| 3. | உணவு அமைச்சர் .. | மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன். |
| 4. | உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி. |
| 5. | தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர். .. | மாண்புமிகு திரு. க. இராசாராம் |
| 6. | மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம். |
| 7. | கல்வி மற்றும் சட்ட அமைச்சர். .. | மாண்புமிகு திரு. சி. பொன்னையன். |
| 8. | போக்குவரத்துத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. சு. முத்துசாமி |
| 9. | வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர். .. | மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு. |
| 10. | சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர். .. | மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன். |
| 11. | மதிய உணவு, சமூகநலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர். .. | மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன். |
| 12. | ஊரகத் தொழில் அமைச்சர் .. | மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன். |

13. வணிக வரித் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. த. இராமசாமி.

14. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. அ. அருணாசலம்.

15. பொதுப் பணித் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. கே.கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்.



# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR—THIRU SUNDAR LAL KHURANA

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

| | |
|---|---|
| 1. The Chief Minister .. .. | Hon. Dr. M.G. Ramachandran |
| 2. The Minister for Finance .. | Hon. Dr. V. R. Nedunchezhian |
| 3. The Minister for Food .. | Hon. Thiru S. Ramachandran |
| 4. The Minister for Local Administration and Labour | Hon. Thiru K.A. Krishnasamy |
| 5. The Minister for Industries and Agriculture | Hon. Thiru K. Rajaram. |
| 6. The Minister for Health .. | Hon. Thiru P. U. Shanmugam |
| 7. The Minister for Education and Law. | Hon. Thiru C. Ponnaiyan |
| 8. The Minister for Transport .. | Hon. Thiru S. Muthusamy |
| 9. The Minister for Housing and Handlooms | Hon. Thiru S. Thirunavukkarasu |
| 10. The Minister for Tourism, Prohibition and Electricity. | Hon. Thiru V. V. Swaminathan |
| 11. The Minister for Noon Meal, Social Welfare and Khadi. | Hon. Thiru R. Soundararajan |
| 12. The Minister for Rural Industries. | Hon. Thiru Anoor P. G. Jagadeesan. |
| 13. The Minister for Commercial Taxes. | Hon. Thiru T. Ramasamy |
| 14. The Minister for Adi-Dravidar Welfare. | Hon. Thiru A. Arunachalam |
| 15. The Minister for Public Works | Hon. Thiru K.K.S.S.R. Ramachandran |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. மா. சின்னராசு.

திரு. செ. செம்மலை.

திரு. சைதை சா. துரைசாமி.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்.

திரு. பொன் முத்துராமலிங்கம்.

### செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி.



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

(அகரவரிசைப்படி).

| | |
|---|---|
| பள்ளிகொண்ட பெருமாள், திரு. பெ. .. பி.ஏ., பி.எல். | கூடுதல் செயலாளர். |
| பத்மநாப நம்பியார், திரு. பி. எம்., .. பி.ஏ., பி.ஜி.எல். | இணைச் செயலாளர் |
| சீதாராமன், திரு. வெ. பி.காம்., .. பி.ஜி.எல். | துணைச் செயலாளர் |
| டில்லிதுரை, திரு. த.ப., பி.எஸ்ஸி., .. பி. எல். | ஷை |
| ஜானகிராமன், திரு. செ. சு., பி.ஏ., .. பி.எல். | ஷை |
| இராமச்சந்திரன் திரு. வை., .. எம்.ஏ., எல்.எல்.பி. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| கோதண்டராமன், திரு. தா., .. பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர். |
| சீனிவாசன், திரு. ஜ. அ., .. .. பி.ஏ. | குழு அலுவலர். |
| சீனிவாசன், திரு. சா., .. .. பி.எஸ்ஸி. | ஷை |
| இராமச்சந்திரன், திரு. ஆர். கே., .. பி. ஏ. | சார்புச் செயலாளர் |
| கனகசபாபதி, திரு. பெ. ச., .. பி. ஏ., பி.எல். | ஷை |
| கேசவராம், திரு. .. .. .. பி. ஏ. | ஷை |
| சந்திரசேகரன், திரு. ஆர். .. .. பி.ஏ. | ஷை |

| | | |
|---|---|---|
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல். | .. | ஷை |
| தியாகராஜன், திரு. கே., பி.ஏ., பி.எல். .. | .. | ஷை |
| பாலகிருஷ்ணன், திரு. ப., பி. காம். .. | .. | ஷை |
| ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி. ஏ. | .. | ஷை |
| ஜான், திரு. வ. சா., பி. ஏ. | .. | ஷை |
| ஜேக்கப் ஆர்தர், திரு. டி., பி.ஏ., பி.எல். | .. | ஷை |
| ஜோசப், திரு. மா. ஞ., பி. ஏ. | .. | ஷை |
| வெங்கட்டராமன், திரு. கோ. | .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| சுவாமிநாதன், திரு.ச., எம். ஏ. | .. | தலைமை நிருபர் (குழுக்கள்). |
| நம்பி ஐயங்கார், திரு. எஸ். | .. | தலைமை நிருபர் (பேரவை). |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### உறுப்பினர்களின் பட்டியல் (அகரவரிசைப்படி).

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| **அ** | | |
| 1. அண்ணாதாசன், திரு. எம். | .. | திருவரம்பூர் |
| 2. அப்துல் சமத், திரு. ஆ. கா. அ. | .. | திருவல்லிக்கேணி |
| 3. அப்துல் மஜீத், திரு. எச். | .. | வாணியம்பாடி |
| 4. அரங்கநாயகம், திரு. செ. | .. | தொண்டாமுத்தூர் |
| 5. அரிக்குமார், திரு. இரா. | .. | பேரணமல்லூர் |
| 6. அருணாசலம், திரு. இரா. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 7. அருணாசலம், திரு. எ. | .. | வரகூர் (செ.வ.) |
| 8. அன்பழகன், திரு. க. .. | .. | பார்க் டவுன் |
| 9. அன்பழகன், திரு. கே. .. | .. | ஓமலூர் |
| 10. அன்பழகன், திரு. தி. .. | .. | நாட்ராம்பள்ளி |
| 11. அன்பழகன், திரு. பொ. | .. | இளையான்குடி |
| **ஆ** | | |
| 12. ஆண்டி அம்பலம், திரு. மெ. | .. | நத்தம் |
| 13. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி, திரு. | .. | ஆண்டிமடம் |
| 14. ஆபிரகாம், திரு. ம. .. | .. | ஆலந்தூர் |
| 15. ஆறுமுகம், திரு. அ. .. | .. | வந்தவாசி |
| 16. ஆறுமுகம், திரு. ஆர். எஸ். | .. | ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 17. ஆறுமுகம், திரு. எ.எஸ்.ஏ. | .. | விருதுநகர் |
| 18. ஆறுமுகம், திரு. எச். ஜி. | .. | பென்னாகரம் |
| 19. ஆறுமுகம், திரு. செ. .. | .. | மதுராந்தகம் |
| 20. ஆறுமுகம், திரு. மு. .. | .. | சேலம்-2 |
| 21. ஆனந்த கிருஷ்ணா, திரு. ஜி. | .. | பூந்தமல்லி |
| 22. ஆனந்தன், திரு. மு. .. | .. | உளுந்தூர்பேட்டை |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| **இ** | |
| 23. இரகுபதி, திரு. கோ. | காட்பாடி |
| 24. இரத்தினம், திரு. எம்.வி. | பொள்ளாச்சி |
| 25. இரத்தினவேலு, திரு. செ. | முசிறி |
| 26. இராசமாணிக்கம், திரு. ஆர். | அரூர் (செவ.) |
| 27. இராசமாணிக்கம், திரு. எல்ல. | தாம்பரம் |
| 28. இராசரத்தினம், திரு. எப்.எம். | கொளச்சல் |
| 29. இராசரத்தினம், திரு. எம். | விழுப்புரம் |
| 30. இராசாங்கம், திரு. மு. | திருவிடைமருதூர் |
| 31. இராசாம்பாள், திருமதி தா. | தலைவாசல் (செ.வ.) |
| 32. இராசாராம், திரு. க. | பனைமரத்துப்பட்டி |
| 33. இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 34. இராசு, திரு. வி. கே. | அரக்கோணம் (செ.வ., |
| 35. இராசேந்திரன், திரு. எஸ்.என். | தூத்துக்குடி |
| 36. இராமச்சந்திரன், டாக்டர் எம்.ஜி. | ஆண்டிப்பட்டி |
| 37. இராமச்சந்திரன், திரு. கே.எஸ். எம். | போடிநாயக்கனூர் |
| 38. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர் |
| 39. இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 40. இராமச்சந்திரன், திரு. சோ.மா. | அண்ணாநகர் |
| 41. இராமச்சந்திரன், திரு. ப.ந. | பட்டுக்கோட்டை |
| 42. இராமசாமி, திரு. எஸ்.என். | சாத்தான்குளம் |
| 43. இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 44. இராமநாதன், திரு. மு. | கோயம்புத்தூர் மேற்கு |
| 45. இராமலிங்கம், டாக்டர் கே.பி. | ராசிபுரம் |
| 46. இளங்கோவன், திரு. ஈ.வே.கி.ச. | சத்தியமங்கலம் |
| **ஈ** | |
| 47. ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ. |
| **உ** | |
| 48. உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 49. உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர் |
|---|---|
| **எ** | |
| 50. எத்திராசன், திரு. கி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| **க** | |
| 51. கணபதி, திரு. சே. ஆர். | சிதம்பரம் |
| 52. கதிர்வேலு, திரு. மா. | ராணிப்பேட்டை |
| 53. கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 54. கந்தசாமி, திரு. பீ. | பொங்கலூர் |
| 55. கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 56. கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 57. காளிமுத்து, டாக்டர் கா. | மதுரை (கிழக்கு) |
| 58. கிருஷ்ணசாமி, திரு. கே.ஏ. | ஆயிரம் விளக்கு |
| 59. கிருஷ்ணசாமி, திரு. வி. இரா. | அணைக்கட்டு |
| 60. கிருஷ்ணமூர்த்தி, திரு. கி. | கும்பகோணம் |
| 61. கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்-1 |
| 62. குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 63. குப்புசாமி, திரு. வே. | செய்யாறு |
| 64. குமரகுருபர ராமநாதன், திரு. க. | விளாத்திகுளம் |
| 65. குமரி அனந்தன், திரு. | ராதாபுரம் |
| 66. குமாரதாஸ், டாக்டர் தே. | கிள்ளியூர் |
| 67. கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| 68. கோவிந்தசாமி, திரு. ஆர். | குடியாத்தம் |
| 69. கோவிந்தசாமி, திரு. ச. | எடப்பாடி |
| 70. கோவேந்தன், திரு. எம்.ஆர். | பேராவூரணி |
| **ச** | |
| 71. சங்கரலிங்கம், திரு. ச. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 72. சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 73. சண்முகம், திரு. என். | சோளிங்கர் |
| 74. சண்முகம், திரு. ப.க. | மேல்மலையனூர் |
| 75. சண்முகையா பாண்டியன், திரு. எம். | ஆலங்குளம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| **ச—தொடர்ச்சி.** | |
| 76. சந்திரசேகரன், திரு. ஆ. .. | சோழவந்தான் |
| 77. சந்திரசேகர், திரு. மு. .. | முகையூர் |
| 78. சம்சுல் ஆலம், திரு. வி. எஸ். டி. | பாளையங்கோட்டை |
| 79. சமரசம், டாக்டர் கே. .. | காவேரிப்பட்டினம் |
| 80. சரோஜா, திருமதி இரா. .. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 81. சாமிக்கண்ணு, திரு. தா. .. | செங்கம் (செ.வ.) |
| 82. சித்தன், திரு. என். எஸ். வி. .. | திருமங்கலம் |
| 83. சித்தன், திரு. வி. பி. .. .. | வில்லிவாக்கம் |
| 84. சிவக்குமார், திரு. ஆ. .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 85. சிவக்குமார், திரு. எம். .. | கூனூர் (செ.வ.) |
| 86. சிவஞானம், திரு. ந. .. .. | திருவோணம் |
| 87. சிவப்பிரகாசம், திரு. சீ. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 88. சிவராமன், திரு. எஸ்... .. | சின்னசேலம் |
| 89. சிவராஜ், திரு. சு. .. .. | ரிஷிவந்தியம் |
| 90. சின்னக்குழந்தை, திரு. மு. .. | ஆரணி |
| 91. சின்னச்சாமி, திரு. ரா. .. | தர்மபுரி |
| 92. சின்னசாமி, திரு. வே. கு. .. | பவானிசாகர் |
| 93. சின்னராசு, திரு. க. இரா. .. | கிருஷ்ணகிரி |
| 94. சின்னராசு, திரு. மா. .. | மேட்டுப்பாளையம் |
| 95. சுந்தரதாஸ், திரு. மா. .. | விளவன்கோடு |
| 96. சுப்பராயன், திரு. கே. .. | திருப்பூர். |
| 97. சுப்பிரமணிய ஆதித்தன், திரு. எஸ். ஆர். | திருச்செந்தூர் |
| 98. சுப்பிரமணியன், திரு. உ. .. | சிவகங்கை |
| 99. சுப்பிரமணியன், திரு. வீ. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 100. சுப்புராயர், திரு. சி. .. .. | கம்பம் |
| 101. சுவாமிநாதன், திரு. வி. வி. .. | புவனகிரி |
| 102. செங்காளியப்பன், திரு. ஆர்... | சிங்காநல்லூர் |
| 103. செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டிப்பாளையம் |
| 104. செங்கோட்டையன், திரு. வெ. | கபிலர்மலை |
| 105. செம்மலை, திரு. செ. .. | தாரமங்கலம் |
| 106. செல்லமுத்து, திரு. எம். .. | திருவாரூர் (செ.வ.) |
| 107. செல்லப்பா, திரு. வி. கோ. .. | கடலூர் |
| 108. செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| **ச—தொடர்ச்சி.** | |
| 109. சேகர், திரு. கே. பி. கே. .. | பொன்னேரி (செ.வ.) |
| 110. சொர்ணலிங்கம், திரு. கா. .. | திருவாடானை |
| 111. சோலைராசு, திரு. க. .. | மருங்காபுரி |
| 112. சௌந்திரராஜன், திரு. ஆர்... | ஸ்ரீரங்கம் |
| 113. சௌமிராஜன், டாக்டர் கே... | தியாகராயநகர் |
| **ஞ** | |
| 114. ஞானசுந்தரம், திரு. சா. .. | மன்னார்குடி |
| **ட** | |
| 115. டேனியல் ராஜ், திரு. எஸ். .. | ஸ்ரீவைகுண்டம் |
| **த** | |
| 116. தங்கமணி, திரு. மு. .. | மாயூரம் |
| 117. தங்கமணி, திரு. கே. எம். .. | திண்டிவனம் |
| 118. தங்கராசு, திரு. ஏ. .. | குறிஞ்சிப்பாடி |
| 119. தங்கராசு, திரு. செ. .. | மங்களூர் (செ.வ.) |
| 120. தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 121. தங்கவேலு, திரு. வி. .. | வால்பாறை (செ.வ.) |
| 122. தமிழ்மணி, திரு. .. | திருப்போரூர் (செ.வ.) |
| 123. தமிழரசன், திரு. கு. .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 124. தனபால், திரு. ப. .. | சங்கரி (செ.வ.) |
| 125. தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 126. தியாகராசன், திரு. ஆர். .. | விருத்தாச்சலம் |
| 127. திருஞானம், திரு. பி. ஆர். | ஏற்காடு (ஆ.வா.) |
| 128. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி |
| 129. திருமலைச்சாமிக் கவுண்டர், திரு. சு. | உடுமலைப்பேட்டை |
| 130. தீர்த்தகிரி கவுண்டர், திரு. டி. | மொரப்பூர் |
| 131. தீர்த்தராமன், திரு. ம. .. | பாலக்கோடு |
| 132. துரை அன்பரசன், திரு. .. | நெல்லிக்குப்பம் |
| 133. துரை கிருஷ்ணமூர்த்தி, திரு. | தஞ்சாவூர் |
| 134. துரை கோவிந்தராசன், திரு. | திருவையாறு |
| 135. துரைசாமி திரு. சைதை சா. | சைதாப்பேட்டை |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| **த—தொடர்ச்சி.** | |
| 136. துரைராசு, திரு. எஸ். பி. .. | காரைக்குடி |
| 137. துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில் |
| 138. தெய்வநாயகம், திரு. எ. .. | மதுரை (சென்ட்ரல்) |
| 139. தேவராஜ், திரு. வி. எம். .. | வேலூர் |
| **ந** | |
| 140. நடராசன், திரு. ஆ. .. | பேரூர் |
| 141. நரசிம்ம பல்லவன், திரு. க. | உத்திரமேரூர் |
| 142. நரசிம்மன், திரு. பூ. மு. .. | பள்ளிப்பட்டு |
| 143. நல்லமுத்து, டாக்டர் க. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 144. நல்லுசாமி, திரு. என். .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 145. நாச்சிமுத்து, திரு. கே. பி. .. | மேட்டூர் |
| 146. நாராயணன், திரு. பு. கோ... | பவானி |
| 147. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | ஆத்தூர் |
| **ப** | |
| 148. பஞ்சவர்ணம், திரு. வி.எஸ். | அருப்புக்கோட்டை |
| 149. பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 150. பரமசிவம், திரு. பா. ந. .. | பல்லடம் |
| 151. பரிதி இளம்வழுதி, திரு. .. | பெரம்பூர் |
| 152. பழனி, திரு. த. .. .. | ஆற்காடு |
| 153. பழனிச்சாமி, திரு. கா. செ... | காங்கேயம் |
| 154. பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர் |
| 155. பாண்டியன், திரு. பி. எச். .. | சேரன்மாதேவி |
| 156. பாண்டுரங்கன், திரு. மு. .. | கலசப்பாக்கம் |
| 157. [illegible] சுப்பிரமணியன், திரு. | குத்தாலம் |
| 158. பாரதி, திரு. ஜி.கே.ஜெ. .. | திருவொற்றியூர் |
| 159. பாரமலை, திரு. க. .. | மானாமதுரை (செ.வ.) |
| 160. பாலகிருஷ்ணன், திரு. ச. .. | மொடக்குறிச்சி |
| 161. பாலகிருஷ்ணன், திரு. வி. | சிவகாசி |
| 162. பாலச்சந்திரன், திரு. வை. .. | பத்மநாபபுரம் |
| 163. பாலசுப்பிரமணியன், திரு. க.. | சீர்காழி (செ.வ.) |
| 164. பாலசுப்பிரமணியன், திரு. எம். | அம்பாசமுத்திரம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| **ப—தொடர்ச்சி.** | |
| 165. பாலசுப்பிரமணியன், திரு. வேடசந்தூர், வி.பி. | வேடசந்தூர் |
| 166. பாலன், திரு. சு. .. .. | எழும்பூர் |
| 167. பாலாஜி, திரு. கே. .. | காஞ்சிபுரம் |
| 168. பாலுச்சாமி, திரு. ஏ. .. | பரமக்குடி (செ.வ.) |
| 169. பாலுசாமி, திரு. அ. .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 170. பிரணவநாதன், திரு. அ. .. | கடலாடி |
| 171. பிரேம்குமார், திரு. ஆ. .. | திண்டுக்கல் |
| 172. புருசோத்தமன், திரு. எஸ். | அரியலூர் |
| 173. புஷ்பராசு, திரு. த. .. | திருமயம் |
| 174. பெரியசாமி, திரு. அ. .. | தாராபுரம் (செ.வ.) |
| 175. பெரியசாமி, திரு. ரா. .. | தொட்டியம் |
| 176. பெருமாள், திரு. தெ. .. | கடையநல்லூர் |
| 177. பெருமாள் பிள்ளை, திரு. கோ. | கன்னியாகுமரி |
| 178. பொன் முத்துராமலிங்கம், திரு. | மதுரை (மேற்கு) |
| 179. பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ். | பழனி (செ.வ.) |
| 180. பொன்னுசாமி, டாக்டர், அ. | பெருந்துறை |
| 181. பொன்னுரங்கம், திரு. ப. .. | ராயபுரம் |
| 182. பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| **ம** | |
| 183. மணவாளன், திரு. எஸ். பி. | திருப்பத்தூர் |
| 184. மணிமாறன், திரு. மா. .. | நன்னிலம் (செ.வ.) |
| 185. மலர்மன்னன், திரு. அ. .. | திருச்சிராப்பள்ளி-1 |
| 186. மனோகரன், திரு. கி. .. | புரசைவாக்கம். |
| 187. மனோகரன், திரு. தி.நா.கோ.அ. | திருநாவலூர் |
| 188. மாசிலாமணி, டாக்டர் ந. .. | ஜெயங்கொண்டான் |
| 189. மாதவன், திரு. செ. .. | திருப்பத்தூர். |
| 190. மாதையன், திரு. யு.பி. .. | அந்தியூர் (செ.வ.) |
| 191. மாரிமுத்து, திரு. த. .. | குளத்தூர் (செ.வ.) |
| 192. மாரிமுத்து, திரு. மு. .. | திருப்பரங்குன்றம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| **ம—தொடர்ச்சி.** | |
| 193. மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம் |
| 194. முகம்மது கனி, திரு. ஜே. | புதுக்கோட்டை |
| 195. முகம்மது சலீம், டாக்டர், த. | பெரியகுளம் |
| 196. முசிறிபுத்தன், திரு. பி. .. | குளித்தலை |
| 197. முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு |
| 198. முத்துராமலிங்கம், திரு. பி.கே.எம். .. | உசிலம்பட்டி |
| 199. முத்துவேல், திரு. கே. .. | முதுகுளத்தூர் |
| 200. முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி |
| 201. முருகானந்தம், திரு. டி.என். | செஞ்சி |
| 202. முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| **ய** | |
| 203. யசோதா, திருமதி. டி. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| **ர** | |
| 204. ரகுமான்கான், திரு. அ. .. | சேப்பாக்கம் |
| 205. ரமணி, திரு. கு. .. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 206. ரவீந்திரன், திரு. ஏ. எஸ். .. | திருவண்ணாமலை |
| 207. ராமஜெயம், திரு. ம.நா. .. | வானூர் (செ.வ.) |
| 208. ராமன், திரு. கி. .. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 209. ராஜாபாபு, திரு. ஜெ. .. | போளூர் |
| 210. ரெங்கசாமி, திரு. ஆர். .. | கோவில்பட்டி |
| 211. ரெத்தினராஜ், திரு. எஸ். .. | நாகர்கோவில் |
| **ல** | |
| 212. லட்சுமி, திருமதி, பி. .. | அவினாசி (செ.வ.) |
| **வ** | |
| 213. வடிவேல், திரு. கு. .. | கரூர் |
| 214. வளர்மதி, திருமதி, பா. .. | மயிலாப்பூர் |
| 215. விசயலட்சுமி பழனிச்சாமி, திருமதி. | வீரபாண்டி |
| 216. விஜயபாலன், திரு. என். .. | பூம்புகார் |



| தொடர் எண்ணும் உறுப்பினர் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| **வ—தொடர்ச்சி.** | |
| 217. வீரய்யன், திரு. கோ. .. | நாகப்பட்டிணம் |
| 218. வீரப்பன், திரு. ஆர். எம். .. | திருநெல்வேலி |
| 219. வீராசாமி, திரு. தா. .. | ஒரத்தநாடு |
| 220. வீரானம்பலம், திரு. க.வெ. | மேலூர் |
| 221. வெங்கடரெட்டி, திரு. டி. .. | ஓசூர் |
| 222. வெங்கடாசலம், திரு. அ. | ஆலங்குடி |
| 223. வெங்கடாசலம், திரு. கி. .. | லால்குடி |
| 224. வெங்கடாசலம், திரு. டி.எம். | பரகூர் |
| 225. வேங்கடரமணன், திரு. டி. ஆர். | தென்காசி |
| 226. வேணுகோபால், திரு. எஸ். | டாக்டர் இராதாகிருஷ்ண நகர் |
| 227. வேணுகோபால், திரு. கே.வி. | தல்லி |
| 228. வேலு, திரு. கூடலூர், இ.வி. | தண்டாரம்பட்டு |
| **ஜ** | |
| 229. ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குநேரி |
| 230. ஜெகதீசன், திரு. ஆனூர்பு.கோ. | செங்கல்பட்டு |
| 231. ஜெகதீசன், திரு. சு. .. | அரவக்குறிச்சி |
| 232. ஜெயச்சந்திரன், திரு. சா. .. | காட்டுமன்னார் கோவில் (செ.வ.) |
| 233. ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| **ஹ** | |
| 234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு |
| 235. பிரான்சிஸ், திரு. ஜி. கே. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு பெற உரிமை பெற்றவர்:

திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி .. தலைமை வழக்கறிஞர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986, நவம்பர் 18, செவ்வாய்க்கிழமை.

கார்த்திகை 4, அக்ஷய—திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்

'' சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.''

தான் கருதியவற்றை நன்கு சொல்ல வல்லவனாய்ச் சொல்லும்போது சோர்வு இல்லாதவனாய், அஞ்சாதவனாய் உள்ளவனை மாறுபாட்டால் வெல்வது யார்க்கும் முடியாது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

இலங்கை அகதிகளுக்கு தமிழகத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகள்.

46—(*வினா எண். 3936) திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியுள்ள தமிழர்களுக்காக தமிழகத்தில் கட்டப்பட்டுள்ள மொத்த வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அவற்றிற்கான மொத்த செலவு என்ன ?

(இ) எத்தனை வீடுகள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (இ) : இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்காக தனியாக வீடுகள் அரசால் கட்டப்படுவதில்லை. ஆனால், தாயகம் திரும்பிய குடும்பங்களுக்கு கண்டியிலுள்ள இந்திய ஹைகமிஷன் பரிந்துரைக்கேற்ப, வீட்டுக்கடன் பெறத் தகுதியுடையவர் என்ற பரிந்துரைக்கேற்ப வீட்டுக் கடன் வழங்கப்படுகிறது. இந்த வகையில் 15,753 குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்ள முழு உதவி அளிக்கப்பட்டு சொந்தமாக வீடுகள் கட்டி குடியிருந்து வருகின்றனர்.

(ஆ) 31–12–1985 முடிய 39,127 குடும்பங்களுக்குத் தவணை வாரியாக வீட்டுக்கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில், வீடுகள் கட்டி குடியிருந்து வரும் 15,753 குடும்பங்களும் உள்ளிட்ட தாகும். எனவே, இது சம்பந்தமாக ரூ. 17,79,93,141 வீட்டுக் கடன் வழங்கப்பட்டதில் செலவாகியுள்ளது.

திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தாயகம் திரும்பிய இலங்கைவாழ் தமிழர் களுக்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர் களின் அரசு கருணையும் கனிவும் கொண்டு பல்வேறு நல்ல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இப்படி நடைபெறுகின்ற போது இந்த தாயகம் திரும்பியவர்களுக்கு வீடு கட்டுவதற்காக கொடுக்கப்பட்ட கடனை சில ஒப்பந்தக்காரர்கள் மொத்தமாகப் பெற்று, அந்த தாயகம் திரும்பியவர்களுடைய இயலாமையை யும், அறியாமையையும், இல்லாமையையும் பயன்படுத்தி அவர் கள் கட்டுகின்ற வீடுகளை அந்த தாயகம் திரும்பியவர்களுக்கு ஒப்படைக்காமல் பல்வேறு இடங்களில், வேறு நபர்களை குடி யமர்த்தி தாயகம் திரும்பியவர்களை ஏமாற்றுகின்ற நிலை நடை பெறுவதை அரசு அறியுமா/ அப்படி இருக்கின்ற நிலையை மாற்றுவதற்கு, அரசு மாநில அளவிலே அதிகாரிகளை கொண்டும், தாயகம் திரும்பிய தமிழர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்டும், குழு அமைத்து தாயகம் திரும்பியோர் வீட்டுவசதிப் பிரச்சினையை மேற்பார்வையிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தாயகம் திரும்பியவர்களுக்கு வீடு கட்டுவதற்காக வழங்கப்படு கின்ற கடன் அவர்களது வீடுகளை அவர்களே கட்டிக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். இதிலே ஒப்பந்தக்காரர்கள் எப்படி ஊடுருவுகிறார்கள் என்பது தெரியவில்லை. அவர்கள் பெயரால் ஒரு வேளை கையெழுத்து வாங்கி ஏமாற்றி இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவார்களேயானால் அது சம்பந்தமாக அரசு உரிய நடவடிக்கை எடுக்கும். இருந்தாலும் தாயகம் திரும்பியோர் ஒரே பகுதியிலே இருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்குள் ஒரு கூட்டுறவு அமைப்பை வைத்து இந்தக் கடனை பெற்று வீடு கட்டும் திட்டத்தை மேற்கொள்ளலாம்.

திரு. மு. மாரிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தாயகம் திரும்பியோரை சேர்ந்தவர்கள் ஏறத்தாழ 15,000-க்கு மேற்பட்டவர்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அதைப்போல, நம்முடைய அரசு கொடுக்கின்ற கடன் தொகை ஏறக்குறைய ரூ. 17 கோடி அளவில் வருகிறது என்று சொன்னார்கள். இவ்வளவு பெரிய திட்டத்திற்கு அரசு தன்னுடைய பொதுப்பணித் துறை மூலமாக வீடுகள் கட்டித்தரக்கூடிய நிலையை ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே ஒப்பந்தக்காரர்களை ஒழிப்பதற்கு இது சரியான வழியல்ல.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லு கின்ற நேரத்திலே 15,753 பேர்களுக்கு வீடுகள் வழங்குகின்ற திட்டத்தில் ரூ. 17 கோடி செலவிடப்பட்டதாகச் சொன்னார்கள். இந்தத் தொகை முழுவதும் மத்திய அரசு கொடுத்ததா அல்லது மாநில அரசு கொடுக்கின்ற தொகையா? இன்னும் தகுதியானவர் கள் எத்தனைபேர் இருக்கிறார்கள்? நம்முடைய அனுதாபத்தை பெற்ற அவர்களுக்கு இன்னும் எத்தனை காலத்திற்குள் வீடுகள் கட்டிகொடுக்க முடியும் என்று அரசு நம்புகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பிய மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை 1,15,432. இவர்களுக்கு வீட்டுக் கடன்கள் என்கின்ற வகையில் ரூ. 17.79 கோடி வழங்கப்பட்டிருக்கிறது. இதுவரை 39,127 வீடுகளுக்குக் கடன் தரப்பட்டிருக்கின்றன. இந்த உதவிக்கான கடன் தொகையை நாம் மத்திய அரசிடமிருந்து பெறுகிறோம்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலைக்கு அருகிலுள்ள சாத்தனூர் வட் டாரத்தில் ஸ்ரீலங்கா தமிழர்களுக்காக எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன? இவ்வாறு வீடுகளைக் கட்டிக் கொடுப்பதைவிட அவர்களையெல்லாம் நிரந்தரமாகப் பணிகளில் அமர்த்துவதற்கான திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, ஸ்ரீலங்காவிலிருந்து இருவகைத் தமிழர்கள் இங்கே வந்திருக்கின்றனர். அவர்களில் ஒரு வகை யினர் தாயகம் திரும்பியோர் எனப்படும் ''ரிப்பேட்ரியேட்ஸ்'' எனப்படுபவர். இன்னொரு வகையினர் இங்கே அகதிகளாக ''ரெஃப்யூஜீஸ்'' என்று வந்திருக்கின்றனர். இவர்களில் மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் எந்த வகையினரைக் குறித்துக் கேள்வி கேட்டிருக்கின்றார் என்று எனக்குத் தெரியவில்லை. எனவே தனிக் கேள்வி கேட்டால், தகுந்த விவரங்கள் தரப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நுகர் பொருள் வாணிபக் கழக ஊழியர்களை கூட்டுறவு சங்கங்களுக்கு மாற்றல் பற்றி உயர்மட்டக் குழுவின் அறிக்கை.

47—(*வினா எண் 8538) திரு. ஆர். ரெங்கசாமி மற்றும் திரு. கே. உச்சி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஊழியர்களை கூட்டுற வுச் சங்கங்களுக்கு மாற்றுவது பற்றிய உயர்மட்ட அதிகாரிகள் குழு தனது அறிக்கையை அரசுக்கு அனுப்பி விட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) அதுகுறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இக்குழு 6–6–1984, 12–6–1984, 23–6–1984 மற்றும் 3–1–1986 ஆகிய நாட்களில் கூடியது. 6–6–1984, 12–6–1984 மற்றும் 23–6–1984 ஆம் நாளிட்ட கூட்டங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் நியாயவிலைக் கடை களை கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாற்றும்போது பணியாளர்களை எவ்விதம் மாற்ற வேண்டும், கட்டிடங்கள் மாற்றம், பண்டங்கள் வழங்குவது, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு நிதி அளிப்பது போன்றவை குறித்து ஆராயப்பட்டு அரசுக்கு குழுவின் பரிந்துரைகள் அனுப்பப்பட்டன. 3–1–1986 ஆம் நாள் நடந்த கூட்டத்தில் உச்சநீதி மன்றத்துக்கு பதிலளிப்பது குறித்து ஆராயப்பட்டு பரிந்துரைகள் அரசுக்கு அனுப்பப்பட்டன.

(இ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக ஊழியர்கள் கடைகளை கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாற்றுவதை எதிர்த்து உயர்நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் வழக்குகள் பதிவு செய்துள்ளனர். உயர்நீதிமன்றம் அரசு ஆணைகளுக்கு இடைக் கால தடை விதித்துள்ளது. உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடை பெற்று வருகிறது.

திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனைச் சார்ந்த ஊழியர் கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாற்றப்படும்போது அதே சம்பளம் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயலாது என்பதால்தான் வழங்கவில்லை.



திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனைச் சார்ந்த ஊழியர் களேசிவில் சப்ளை கார்ப்பரேஷனை நடத்த அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அந்த ஊழியர்களே கூட்டுறவு சங்கங்கள் அமைத்துக் கடைகளை நடத்தப் போவது குறித்து பணியாளர்களே ஒரு செயல்முறைத் திட்டத்தை அரசுக்குத் தரவேண்டுமென்றும் அதுபற்றி அரசு முடிவெடுக்க வேண்டுமென் றும் உச்ச நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது. அத்தகைய செயல் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

சத்துணவு மையங்களுக்கு வழங்கப்படும் அரிசி.

48. (வினா எண் 9363) திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்மையில் மதுரையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சத்துணவு மையங்களை சோதனையிட்டபோது சத்துண வுக்கு கொடுக்கும் அரிசியின் தரம் சரியில்லை என்று கூறியது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதை போக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத்' திட்டத் திற்கு போதுமான அளவு வெள்ளை நிறம் கொண்ட சாதாரண ரக அரிசி ( Common Variety ) எல்லா மாவட்டங்களிலும் தொடர்ந்து வழங்கப்பட்டுவரவேண்டும், என்றும், அது போத வில்லை எனில் சன்னரக (Fine Variety) அரிசி வழங்கப்பட வேண்டும் என்றும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. சிவப்பு நிறம் கொண்ட டிகேஎம் 9 ரக அரிசி தற்போது முதலமைச்சரின் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு வழங்கப்படுவதில்லை.

திரு. ப, ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சரின் குழந்தைகள் சத்துணவுத் திட்டத் திற்கு சிவப்பு நிறம் கொண்ட அரிசி வழங்கப்படுவதில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். உயர்ந்த ரக அரிசியே அங்கே வழங்கப்படுவதாக அமைச்சர் அவர்கள்

[1986 நவம்பர் 18

சொன்னதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன், இவ்வாறு
சத்துணவு மையங்களுக்கு அரிசி வழங்கப்படும்போது சிவில்
சப்ளைஸ் கார்ப்பரேஷன் அரிசியை நிறுத்து வழங்குவதில்லை.
மூட்டை மூட்டையாகவே அவர்கள் அனுப்பி விடுகிறார்கள். இதன்
காரணமாகச் சத்துணவு மையங்களில் பணிபுரிகிறவர்கள் எந்த
அளவுக்கு அரிசி வந்துள்ளது என்பதைச் சிவில் சப்ளைஸ் கார்ப்ப
ரேஷன்காரர்கள் சொல்வதையே அடிப்படையாக வைத்து
எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே இனியாவது
அரிசியை நிறுத்து அளந்து கொடுப்பதற்கான நடவடிக்கையை
அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பெரும்பாலும் இரவு நேரங்களிலேயே
சத்துணவு மையங்களுக்கு அரிசி லாரிகள் கொண்டு செல்லப்பட்டு
வழங்கப்படுகிறது. பெரும்பாலான சத்துணவு மையங்களின்
பெண்களே, அமைப்பாளர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிற
காரணத்தால் இரவு நேரங்களில் மையங்களில் அவர்கள் இருந்து
அரிசியை எடுத்துக் கொள்ள ஏதுவாக இல்லை. எனவே சத்துணவு
மையங்களுக்கு இரவு நேரங்களில் அரிசியை வழங்குவதற்குப்
பதிலாக காலை 10 மணி முதல் மாலை 5 மணிக்குள் வழங்கு
வதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய
விரும்புகிறேன்.

[முற்பகல் 9–10]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே,
இரவு நேரம் என்பது 12 மணி நேரத்தைக் கொண்டிருக்கிறது.
ஆகவே எந்த வரையறை என்பதை நாம் வைத்துக்கொள்ளவேண்
டும். சுமாராக இரவு 8 அல்லது 9 மணிக்கு மேல் கொண்டுபோய்
அரிசி மூட்டையைக் கொடுப்பது என்பதை அரசு நடவடிக்கை
எடுத்து தவிர்க்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் சொல்லும்போது சத்துணவு மையங்களுக்கு சன்ன
இரக அரிசி அல்லது வெள்ளை அரிசி அனுப்பப்படுவதாகத்
கூறினார்கள். 26–10–1986 அன்று ஆவுடையார்புரம் சத்
துணவு மையத்தை பார்வையிட்டபோது சிவப்பு அரிசிதான்
இருந்தது. ஆகவே எப்போதிலிருந்து இந்த அரிசி கொடுக்கப்
பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.



1986 நவம்பர் 18]

மாண்புமிகு திரு. ச. இராமச்ாந்திரன் : தலைவர் அவர்களே,
தற்போது இந்த வெள்ளை நிற அரிசி தர வேண்டுமென்று
சொல்லப்பட்டிருக்கிறது. அது ஏற்கெனவே உள்ள இருப்பாக
இருக்கலாம். ஆகவே சட்டமன்ற உறுப்பினர்கள் பார்க்கும்
போது அது குறித்து நேரிடையாக எனக்கோ அல்லது இந்தத்
துறைக்கோ கடிதம் அனுப்பினால் உரிய நடவடிக்கை உடனடி
யாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க அவைத் தலைவர்
அவர்களே, பசித்த வயிறு கொண்ட பிஞ்சு உள்ளங்களுக்கு
வயிறு ஆற கொடுக்கப்படும் உணவுப் பொருள்களில் இருந்து
சிலர் அரிசியையும், எண்ணெயையும், பருப்பையும் திருடுகிற
போது அவர்கள் மீது கடுமையான தண்டனை விதிக்காத கார
ணத்தால் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் எங்களைப் போன்ற
பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு வந்து கொண்டிருக்கின்றன.
இதுபோல் நடந்துக்கொண்டு இருப்பதைத் தடுக்க எதிர்காலத்திலா
வது அவர்களுக்கு வழங்கப்படும் தண்டனையை கடுமையாக்க
வேண்டும். அல்லது அத்தகைய தவறுகள் நடக்காமல் தடுக்க
நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே,
பசித்த வயிறானாலும் சரி, பிஞ்சு உள்ளமானாலும் சரி, திருடு
நடக்கிறது என்றால் அதைக் கண்டுபிடித்து தண்டிக்கப்பட
வேண்டிய ஒன்றுதான் அது. அத்தகைய திருடுகள் நடை
பெறாவண்ணம் அரசு உரிய நடவடிக்கையை நிச்சயமாக மேற்
கொள்ளும். சத்துணவு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இதில்
ஈடுபட்டு தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

திரு. நி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தமிழகம் முழுவதும் சத்துணவு திட்டத்திற்காக
சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக எவ்வளவு அரிசி
வழங்கப்படுகிறது. என்ன விலையில் வழங்கப்படுகிறது என்
பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர்
அவர்களே, ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் போது அந்த
விவரங்கள் வரும். ஆண்டு ஒன்றுக்குச் சுமார் இரண்டு இலட்சம்
டன் செலவாகிறது என்பது என்னுடைய நினைவு.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர்:
அவர்களே, சத்துணவு மையங்களுக்கு அரிசி, பருப்பு, எண்ணெய்
ஆகியவற்றை வழங்குவது பற்றி சென்ற ஆண்டு கேட்டபோது
உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். இப்
போதுகூட 100 கிலோ கொண்ட ஒரு அரிசி மூட்டையை சத்

துணவுக் கூடங்களுக்கு அனுப்பப்படும்போது அதை நிறுத்துப் பார்த்தால் 94 கிலோதான் இருந்தது, 6 கிலோ குறைந்து விட்டது. அவர்களைக் கேட்டால் நாங்கள் என்ன செய்வது என்று சொல்லுகிறார்கள். இந்த ஆண்டாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னபடி எடை போட்டு சத்துணவு மையங்களுக்குக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? அதே நேரத்தில் கொடுக்கக்கூடிய பொருள்கள் எல்லாம் சத்துணவு மையங்களில் பாதுகாப்பாக வைக்க இடம் இல்லாமல் இருப்பதால் அவர்கள் தங்களுடைய வீட்டிலே வைத்துக் கொள்கிறார்கள். அதனால் சில பொருள்கள்........................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது கேள்வி நேரம்.

**திரு. பெ. உத்திராபதி :** கேள்விதான் கேட்கிறேன். அப்படி அவர்கள் தங்கள் வீட்டிலே வைத்துக் கொண்டிராமல் அந்த இடத்திலேயே பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டிய அளவிற்கு அதற்குரிய நடவடிக்கையை எடுத்து பாதுகாப்பாக வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சத்துணவுக் கூட நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் மாண்புமிகு சத்துணவு அமைச்சரிடத்திலேதான் கேள்வியைப் போட வேண்டும். அரிசி வழங்குவதைப் பொறுத்த வரையில், அரிசி மூட்டை இளைக்காமல் இருக்க பாதுகாத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிவில் சப்ளைஸ் சப்ளை செய்யும் அரிசி குறைபடுகிறது என்பதில் ஒருவர் மீது ஒருவர் பழியைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே லாரியில் போகும் போது அரிசியுள்ள சாக்குப் பையில் குத்தூசி போட்டுச் சிலபேர் எடுத்துவிடுகிறார்கள். இவைகளைத் தவிர்க்க குறைந்த பட்சம் சத்துணவுக் கூடங்களுக்கு விநியோகிக்கப்படுகின்ற அரிசியை பாலித்தீன் பைகள் மூலம் சப்ளை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, விஞ்ஞானம் என்பது திருடர்களுக்கும் தெரிந்த ஒன்றுதான். பாலித்தீன் பைகளுக்கேற்ற ஊசியை ஒரு வேளை பயன்படுத்துலாம். (சிரிப்பு) ஆகவே அரிசி மூட்டையைப் பொறுத்த வரையில் ஒழுங்காகப் போய்ச் சேர உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.





**திரு. வே. இரா. ஜெயராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலுள்ள சத்துணவு மையங்களில் நடைபெறும் தவறுகள் குறித்து தொடுக்கப்பட்ட வழக்குகள் எத்தனை? எத்தனை வழக்குகளில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, தனிக் கேள்வியை, தக்க அமைச்சரிடம் போடவும்.

**திரு. என். பி. மணவாளன் :** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்றபோது, சத்துணவு மையங்களிலே பொருள்கள் குறைகின்றபோது, அவற்றைப் பார்த்து தகவல் சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படுமென்று சொன்னார்கள். ஆனால் இப்போது இருக்கின்ற அரசாணையின்படி சட்டமன்ற உறுப்பினர்கள் சத்துணவு மையங்களுக்குச் சென்று, பார்த்து, ஆலோசனை மட்டும் கூறலாம். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருப்புகளை சரி பார்க்கும் அதிகாரம் இல்லை என்று இருக்கிறது. எனவே இருப்புகளை சட்டமன்ற உறுப்பினர்கள் சரி பார்க்கும் அதிகாரத்தை அரசு அவர்களுக்கு அளிக்குமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவரவர்களே, அத்தகைய குறைபாட்டை எங்களுக்குத் தெரிவியுங்கள் என்று நான் தெரிவித்தேன். இல்லையென்றால் * * என்று ஆகக் கூடாது என்று அத்தகைய உத்திரவு போட்டிருக்கலாம். எனவே குறைபாடுகள் இருக்கும்போது எங்களிடம் சொன்னால், உரிய நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. மு. ஜான் வின்சென்ட் :** பேரவைத் தலைவரவர்களே, சிவில் சப்ளைஸ் துறையிலிருந்து அனுப்பும் அரிசியை சத்துணவு அமைப்பாளர்கள் பெற்றுக் கொள்வதற்கு முன்பு எடை போட்டு கொடுக்கிறார்கள். 100 கிலோ உள்ள மூட்டை, 94, 95 கிலோ இருந்தால்கூட, அவர்கள் 100 கிலோ பெற்றுக் கொண்டதாக ஒப்பம் கேட்கிறார்கள். அப்படி ஒப்பம் போடாமல் இருந்தால், அங்கே பிரச்சினை வளருகிறது. அவர்கள் கேட்டபடி அதற்கு ஒப்பம் போட்டுக் கொடுத்த பிறகு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வந்து பார்த்து, எடை குறைந்திருப்பதற்காக சத்துணவு மைய அமைப்பாளர்களை சஸ்பென்ட் செய்கிறார்கள். இது குறித்து அரசு மறுபரிசீலனை செய்து, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்குமா?

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, * * என்று சொன்னேன். அதை நீக்கிவிடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசும்போதே நானும் நினைத்தேன். அந்தப் பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல, குறைபாட்டை நிவர்த்தி செய்யலாம்.

## புதிய ரேஷன் கார்டுகள்.

49—(*வினா எண். 10059)—திரு. வி. பி. சிந்தன் மற்றும் திரு. செ. செம்மலை : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ரேஷன் கார்டுகள் இந்த ஆண்டுடன் காலாவதியாவதைக் கணக்கில் கொண்டு, மீண்டும் புதிய கார்டுகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) இதுவரை கார்டு இல்லாதவர்கள் தங்கள் பெயர்களை பதிவு செய்ய அரசு வசதி செய்து தருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) வசதிசெய்துத் தரப்படும்.

திரு. செ. செம்மலை : பேரவைத் தலைவரவர்களே, தற்போதுள்ள முறையில் ஏதாவது குறைபாடுகள் காணப்படுகின்றன என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா ? அப்படி கொண்டுவரப்பட்டிருக்குமானால், புதிதாக குடும்ப அட்டைகள் வழங்கப்படும் காலக்கட்டத்தில் அந்தக் குறைபாடுகளைக் களைவதற்கு புதிய வழிமுறைகளை அரசு ஆராய்ந்து, அமுல்படுத்த இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தற்போதுள்ள முறையில் போலி கார்டுகள் சில வழங்கப்பட்டிருக்கின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டு, அதன்மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மேலும் தகுதியான குடும்பங்களுக்கு ரேஷன்

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



கார்டுகள் தரப்படவில்லை என்ற குறைபாடும் இருக்கிறது. ஆகவே, பழைய கார்டுகளை அறவே நீக்கிவிட்டு, அவரவர்களுடைய வருமானத்திற்கேற்ப எல்லோருக்கும் புதிய ரேஷன் கார்டுகளைத் தக்க முறைப்படி, ஒழுங்காகத் தர வேண்டுமென்று மாண்புமிகு முதல்வரவர்கள் உத்திரவிட்டிருக்கிறார்கள். அரசு அதற்காக நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பண்டங்கள் விநியோகிக்கப்படுகிறபோது இரண்டு தவறுகள் நடைபெறுவதாகப் பொதுமக்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். ஒன்று, எடையில் தவறு பெரும்பாலாக ஏற்படுகிறது. இன்னுமொன்று, அந்த நியாய விலைக் கடைகளுக்கு வருகிற உணவுப் பொருள்களை ஒட்டு மொத்தமாக மொத்த வியாபாரிகளுக்கு விற்றுவிடுகிறார்கள் என்பது. அது உண்மையாக இருந்தால் நடைமுறையில் அதற்கு வாய்ப்பு இருந்தால், இந்தக் குறைபாடுகளைக் களைய வேண்டும். எனவே, கார்டுகளுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் கொடுக்கும்போது, அவற்றை பாக்கெட் முறையில் விநியோகிக்கலாம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, பாலிதீன் பைகளில் உணவுப் பொருள்களைப் போட்டு, விநியோகிக்க அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, இது நல்ல யோசனை. ஆனால், நம்முடைய நாட்டில் சில இடங்களில் வியாபாரிகள் ரொம்பவும் கெட்டிக்காரர்களாக இருக்கிறார்கள். அவர்கள் ரேஷன் கார்டுகளை விலைக்கு வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கார்டுகள் மூலம் அவர்கள் பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடிகிறது. இந்தக் குறைபாடுகளை எல்லாம் எப்படித் தவிர்க்கலாம் என்று அரசு யோசித்து வருகிறது.

[முற்பகல் 9—20]

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது, புதிய கார்டுகள் வழங்குவதற்கான வாய்ப்புகள் ஏற்படும் என்பதை எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். புதிய கார்டுகள் கிராமப்பகுதிகளில் வழங்குகின்றபோது கிடைத்தவர்களுக்கும் கிடைக்காதவர்களுக்கும் சேர்த்து வழங்கப்படும் என்று சொல்கின்றார்கள். இன்னொன்று சொல்லிக்கொள்கிறேன். உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றிருக்கின்ற நேரத்தில் உள்ளாட்சி மன்றங்கள் மூலம் அல்லது தண்டோரா மூலம் புதிய கார்டுகளை உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒப்படைத்து அவர்கள் மூலம் புதிய கார்டுகள் மக்களுக்கு கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்துமா ?

**மாண்புமிகு திரு. ச. (ராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அது சாத்தியம் ஆகாது. ஏனென்றால் உள்ளாட்சி மன்றத்தினர் ஒழுங்காக கொடுத்தாலும் வோட்டுப் போட்டவர்கள் வோட்டு போடாதவர்கள் என்று பார்த்து கொடுத்து விட்டார்கள் என்ற வீண் பழி வந்துவிடும். ஆகவே, அந்த யோசனை ஏற்க முடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கார்டுகள் புதிதாக வழங்கப்படும்போது விடுபட்டவர்களுக்கும் வழங்கப்படும் என்று சொன்னார்கள். விடுபட்டுபோய் இருப்பவர்கள் பூரா பேர்களுக்கும் எப்போது வழங்கப்படும் ? போலி கார்டுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். இதுவரையிலும் எத்தனை கார்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வரும் ஆண்டு அத்தகைய நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வதாக இருக்கிறோம். 1986 ஜூலை மாதத்தில் தணிக்கைப்படி 5 மாவட்டங்கள் நீங்கலாக மொத்தம் 69,238 குடும்ப கார்டுகள் போலி என்று கண்டுபிடிக்கப்பட்டன.

**திரு. க. சோலைராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறை அதிகாரிகள் மாற்றம் காரணமாக இடம்விட்டு வேறு ஊர்களுக்கு மாறி செல்கின்றபோது அவர்களுக்கு வேண்டிய ரேஷன் பொருள்கள் உடனடியாக அவர்கள் வாங்கிக் கொள்ள அனுமதிக்கப்படும் என்கிற அளவில் அட்டைகளை ஏற்றுக் கொண்டு இதிலே கால தாமதம் ஏற்படாமல் உடனடியாக ரெனீவல் செய்துகொள்ள துறை பரிசீலிக்குமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பரிசீலிக்கப்படும்.

**திரு. கு. ரமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எல்லோருக்கும் புதிய கார்டுகள் வழங்கும்போது, இதுவரையில் கார்டு இல்லாதவர்களுக்கும் கணக்கெடுத்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. சாதாரண கார்டுகள் புதிய கார்டுகள் வழங்கும் சந்தர்ப்பத்தில், எல்லாக் கார்டுகளை புதுப்பித்துக் கொடுக்கும்போது, இந்த இடைக்காலத்தில் பல குடும்பங்களில் இடம் மாற்றம் ஏற்பட்டு இருக்கும். புதிய குடும்பங்கள் உருவாகியிருக்கின்ற நிலைமைகள் ஏற்பட்டு இருக்கும். அப்படிப்பட்டவர்களுக்கு ரேஷன் கார்டுகள் கொடுக்க எந்தவிதமான நடவடிக்கை





யும் இல்லை. இதில் மாவட்ட ஆட்சியாளர் அல்லது மாவட்ட சப்ளை ஆபிசர்ஸ் போன்றவர்களுக்கு அதிகாரம் கொடுக்கலாம். ரொம்ப கீழே இருப்பவர்களுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும் என்று சொல்லவில்லை. அவர்கள் கொடுக்கின்ற விண்ணப்பங்களை உடனடியாக பரிசீலித்து அவர்களுக்கு கார்டு கொடுக்க ஏற்பாடுகள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. (ராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு இதைப்பற்றிப் பரிசீலித்து முடிவெடுக்கும்.

### ஏழைக் குழந்தைகளுக்கு இலவச பாடப் புத்தகங்கள் வழங்கல்

50—(*வினா எண். 5322)—**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை படிக்கும் ஏழை குழந்தைகளுக்கு இலவசமாக பாடப் புத்தகங்களை வழங்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

: மாண்புமிகு பேரவைத்

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்**

தலைவர் அவர்களே, (அ) ஆம்.

சத்துணவு திட்டத்தின்

(ஆ) முதலமைச்சர் குழந்தைகள்ம் வகுப்பு வரை பயிலும்

கீழ் பயன்பெறும் 1-ம் வகுப்பு முதல் 8- வச பாடப புத்தகங்கள்

அனைத்து ஏழைச் சிறுவர்களுக்கும் இல ணையிடப்பட்டுள்ளது.

(துணைப் பாடங்கள் நீங்கலாக) வழங்க ஆ

**டாக்டர் ந. மாசிலாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர

வர்களே, இந்த ஏழை மாணவர்களுக்கு புத்தகங்கள் வழங்கு

கின்ற திட்டத்திலே பரீட்சை முடிகின்ற வரையிலே புத்தகங்கள்

வந்து சேருவதில்லை என்ற புகார்கள் வந்திருக்கின்றன. அதை

சீர்படுத்தி, உரிய நேரத்தில் புத்தகங்கள் மாணவர்களுக்கு வழங்க

அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத்

தலைவரவர்களே, தேர்வு நேரம் வரை புத்தகங்கள் வருவதில்லை

என்பது சரியாக இருக்கமுடியாது. காலதாமதம் இருக்கின்றது

என்றால் அதற்கான தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் 1-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை பயிலும் அனைத்து ஏழைச் சிறுவர்களுக்கும் இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்க ஆணையிடப்பட்... து என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ... ழங்கப்படுகின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை எவ... தற்காக அரசுக்கு ஆகி இருக்கும் செலவு எவ்வளவு என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை சுமார் 58,97,000 மாணவர்களுக்கு இலவசமாக நூல்கள் வழங்கப்பட்டிருக்கின்றது. 1985–86-ம் ஆண்டுக்கு, ரூ. 11,80,00,000 செலவழிக்கப்பட்டிருக்கின்றது.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவசக் கல்வி பத்தாம் வகுப்பு வரை அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பாடப் புத்தகங்களை பத்தாம் வகுப்பு வரையில் இலவசமாக வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்த செயற் குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. பிறகு ஆராயப்படும்.

திரு. கே. சுப்பராயன் : தலைவர் அவர்களே, ஏழைக் குழந்தைகள் என்பதற்கு அரசு எந்த அடிப்படை வரையறையைக் கொண்டிருக்கிறது என்பதை அறிய அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச சத்துணவு மையங்களிலே உணவு கொள்கின்ற அனைவரும் ஏழைக் குழந்தைகள் என்ற அடிப்படையில், 58 இலட்சத்து 97 ஆயிரம் குழந்தைகளுக்கு இலவசமாக புத்தகங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

திருவையாற்றில் இசைக் கல்லூரி.

51—(*வினா எண். 5693)—திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் திருவையாற்றில் தியாகராஜ சுவாமிகள் நினைவாக ஓர் இசைக்கல்லூரி ஆரம்பிப்பதற்கென அரசிடம் ஏதேனும் கொள்கைக் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது ஆரம்பிக்கப்படும் ?





மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு தென்னிந்திய பண்பாட்டு கலாச்சார மையம் திருவையாற்றிலே பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களால் துவக்கப்பட்டது. தென்னிந்தியாவிலே தஞ்சை நுண்கலையில் பெயர் பெற்றது என்பது அனைவருக்கும் தெரியும். ஆகவே, இந்த நுண்கலைப் பயிற்சிக் கல்லூரியை திருவையாற்றில் துவக்க இனியாவது அரசு சிந்திக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து இதுகாறும் செயற்குறிப்பு இல்லை. இது குறித்து பிறகு ஆராயப்படும்.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருவையாறு தொகுதி, நான் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதி என்ற காரணத்தினால், கடந்த ஆண்டு தென்னிந்திய கலாச்சார மையத்தை பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களும், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்களும் 5 கோடி ரூபாய் செலவில் திருவையாற்றில் துவக்கி ஓராண்டு காலமாகியும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை குறிப்பிடுவதோடு, தென்னாட்டு மக்களுடைய கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் வெளிப்படுத்துகின்ற வகையில் ஒரு மையம் ஏற்படுத்துகின்ற சாத்தியக்கூறு இதுவரையில் அங்கே ஏற்படுத்தாததால், பாரதப் பிரதமரும், தமிழக முதல்வரும் துவக்கிய அந்தத் திட்டத்தை விரைவிலே செயற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்க நடவடிக்கையை இது குறித்து அரசு ஆய்ந்து எடுக்கும்.

தனியாரால் நடத்தப்பெறும் சுயநிதி உதவி பொறியியல் கல்லூரி மாணவர்கள்.

52—(*வினா எண். 7172) திரு. மா. சுந்தரதாஸ் :—மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் சுயநிதி உதவி கொண்டு செயற்படும் தனியார் பொறியியல் கல்லூரிகளில் 1985—86-ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்ட பல மாணவர்கள் வேறு கல்லூரிகளுக்கு மாற்றல் கேட்டுள்ளனரா?

[1986 நவம்பர் 18

(ஆ) அவ்வாறு மாற்றல் கேட்ட மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,(அ) ஆம்.

(ஆ) சுமார் 1,400 பேர்.

(இ) முதல் பட்டியலில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள், மற்ற பொறியியற் கல்லூரிகளில் உள்ள காலி இருக்கைகளில் பழங்குடியினர், மலை சாதியினர், ஏழ்மை நிலையில் உள்ளோர் மற்றும் பெண்கள் என்ற அடிப்படையில் விடுதியில் உள்ள இடவசதியைப் பொருத்தும் பகல் நேரத்தில் கல்லூரிக்கு வெளியே இருந்து படிக்க இசைவு அளிக்கும் நிலையிலும் தொழில் நுட்பக் கல்வி இயக்குனரால் நடவடிக்கை எடுக்கப்பட்டது

**திரு. மா. சுந்தரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய மனுக்களை மாணவர்கள் கொடுத்தும் அந்த மனுக்கள் மீது நடவடிக்கை எடுத்து, அவர்கள் விருப்பப்பட்ட கல்லூரிக்கு மாற்றப்படவில்லை என்பது அமைச்சர் அவர்களுடைய பதிலில் இருந்து தகவல் அறியப்படுகிறது. ஆகவே, இந்த மாணவர்களுக்கு அங்கே படிப்பதற்கு செல்ப் பைனான்சிங் கல்லூரிகளில் அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை மாணவர்கள் மாறுதல் கோரியிருந்தனர் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டது. 1,400 என்று சொன்னேன். எத்தனை கோரிக்கைகள் ஏற்கப்படவில்லை என்பதை நான் சொல்லவில்லை 1400 மனுக்களில் 1005 மனுக்களின் கோரிக்கை நியாயத்தின் அடிப்படையில் ஏற்கனவே ஏற்கப்பட்டிருக்கின்றன. சுய நிதியிலிருந்து இயங்குகின்ற கல்லூரிகளைப் பொறுத்தவரையிலும், இன்பிரா ஸ்டிரக்சுரல் பெசிலிடீஸ் அதாவது அடிப்படை வசதிகள் எல்லாம் மிகைப்படுத்தப்பட வேண்டும் என்பதை அரசு அறிகிறது. அதற்கான நடவடிக்கையையும் எடுத்து வருகிறது.

**திரு. மா. சுந்தரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செல்ப் பைனான்சிங் கல்லூரிகள் தாங்கள் செலுத்த வேண்டிய பணத்தை அரசுக்குச் செலுத்தவில்லை. மாணவர்களுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுக்கவில்லை. இருப்பதற்கு இட வசதியும் அங்கே இல்லையென்று அறிகிறேன். ஆம் என்றால், அந்தக் குறைகளைத் தீர்ப்பதற்கு அரசு முன்வருமா? அவர்கள் இந்த வசதிகளை செய்து கொடுக்கவில்லை என்றால், அவர்களுடைய பர்மிஷனை ரத்து செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1986 நவம்பர் 18]

(முற்பகல் 9-30)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா சுயநிதிக் கல்லூரிகளிலும் அவ்வாறு இருப்பதில்லை. சில கல்லூரிகளிலே அப்படி இருக்கலாம். சில இடங்களில் குறைபாடுகள் இருக்கலாம். அவற்றைக் களைய வேண்டியது கட்டாயம் என்பதை அரசு உணர்கிறது. அதற்காகத் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் மூலமாக கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சுயநிதி பொறியியல் கல்லூரிகள் பல ஆரம்பிக்கப்பட்டு அவை மூலமாக மாணவர்களுக்கு இடம் கிடைக்கச் செய்ய வேண்டுமென்பதை அரசு தனது கொள்கையாக வைத்திருக்கிறது. இந்த நிலையில் விண்ணப்பித்த அவ்வளவு பேர்களுக்கும் இடம் கிடைத்துவிட்டதா? தகுதியிருந்தும் இடம் கிடைக்காத மாணவர்களில் எண்ணிக்கையை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுகுறித்த தகவல் தற்போது என்னிடம் இல்லை.

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுயநிதிக் கல்லூரிகள் அதிகமாக நாட்டிலே வந்துகொண்டிருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் வியாபார நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டவை என்று பலவாறாகப் பேசப்படுகிறது. அந்தக் கல்லூரிகளிலே சரியாக வசதிகள் செய்து தரப்படாத காரணத்தினால் மாணவர்களிடமிருந்து பெறப்படுகிற பணத்திற்கு ரசீது கொடுப்பதற்கு அரசு வற்புறுத்துமா? அப்படிச் செய்தால் அவர்கள் எவ்வளவு பணம் வசூலித்தார்கள் என்றும் என்ன என்ன வசதிகளைச் செய்திருக்கிறார்கள் என்றும் பின்னாலே சரிபார்க்க முடியும். ஆகவே பெறப்படுகிற பணத்திற்கு ரசீது கொடுக்க வேண்டுமென்று அவர்களை அரசு வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுயநிதியில் செயல்படுகிற கல்லூரிகளைப் பொறுத்தவரைக்கும் அவை மக்களின் நலன் கருதி சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்ற முறையிலே ஏற்கெனவே அவர்களுக்கு சில அறிவிப்புகள், சில உத்திரவுகள் அரசால் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் அடிப்படையில் அவை கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்று அரசு வற்புறுத்தும்.

திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இவ்வாறு தொடங்கப்படுகிற சுயநிதிக் கல்லூரிகளிலே ஹாஸ்டல் வசதி, சாப்பாடு வசதி, போன்றவற்றிற்காக போடப்படுகிற மெஸ் பில், பெறப்படுகிற தொகை அதிகமாக இருக்கிறது என்று பலர் புகார்கள் கூறியிருக்கிறார்கள். அவைகளுக்காக அந்தக் கல்லூரிகள் இவ்வளவு தான் வாங்க வேண்டுமென்ற முறையிலே தொகையை நிர்ணயம் செய்ய அரசு முன் வருமா? அப்படிச் செய்வதன்மூலமாக டிஸ்கிரிமினேஷன், ஏற்றத் தாழ்வு ஆகியவற்றை அகற்றுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப் பாகுபாடுகள் இருக்கின்றனவா என்ற தகவல் இல்லை. அப்படி இருப்பின் அவற்றைக் களைய தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

### நீலகிரி மாவட்டத்தில் நடமாடும் நூலகங்கள்.

53—(*வினா எண். 7648)—திரு. கே. உச்சி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) நீலகிரி மாவட்டத்தில் நடமாடும் நூலகங்கள் அமைக்க அரசு பரிசீலனை செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் மலைப்பாங்கான பகுதியாக இருப்பதால் அங்கே உதகை, குன்னூர், கோத்தகிரி, கூடலூர் ஆகியவை தவிர மற்றப் பகுதிகள் அனைத்துக் கிராமப் பகுதிகளாக இருப்பதால் அங்கே போதுமான நூலகங்கள் இல்லை; நூலகங்கள் அதிகமாக ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை நான் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயும் அமைச்சர் அவர்களிடத்திலேயும் நேரிடையாகக் கொடுத்துள்ளேன். ஆகவே "இல்லை" என்பதை விட அதை மறுபரிசீலனை செய்து அங்கே நூலகங்களை ஏற்படுத்த அரசு முன் வருமா ?





மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற் குறிப்பு பரிசீலனையில் இல்லை என்றுதான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நியாயமான அடிப்படையில் இருக்கிறது. மலைப் பகுதியிலே, ஆங்காங்கு மக்கள் தொகை குறைவாக இருந்த போதிலும் நூலகங்களை அமைக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது. அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

### தேசிய இலக்கியமாக திருக்குறள்.

54—(*வினா எண். 8316)—திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருக்குறள் தேசிய இலக்கியமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்குறள் தேசிய இலக்கியமாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகில் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட உலக மனித சமுதாயத்திற்கு எல்லாம் ஒட்டு மொத்தமான வாழ்க்கை நலன்களையும், சமூக நலன்களையும், அரசியல் வழி முறைகளையும் எடுத்துச் சொல்கிற திருக்குறள் தேசிய இலக்கியமாக ஆக்கப்பட வேண்டுமென்று முன்னாள் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கூட கருத்துத் தெரிவித்தார்கள். அதை இந்த அரசின் கருத்தாக ஏற்று அது தேசிய இலக்கியமாக ஆக்கப்படுவதற்கு அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து ஏற்கனவே நாம் மைய அரசுக்கு எழுதி இருக்கிறோம். எல்லா மக்களுக்கும் எல்லாக் காலத்திற்கும் பொதுமறையாக இருந்து வருகிற பொதுத் தன்மையையும் சாதி மத சமயப் பாகுபாடுகளுக்கு அப்பால் ஒரே பொக்கிஷமாக இருக்கிற காரணத்தால் அது தேசிய இலக்கியமாக்கப்பட வேண்டுமென்று மீண்டும் மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தும்.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி திருக்குறளை தேசிய இலக்கியமாக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்து இருக்கிறதோ அதைப் போல இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தையும் தேசிய நூலாக ஆக்குவதற்கு மைய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா ?

[(1986 நவம்பர் 18

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதி சமய மாச்சர்யங்களுக்கு அப்பாலே இருக்கின்ற பொதுத் தன்மை வாய்ந்த பொது மறையாக திருக்குறள் இருப்பதால் தேசிய இலக்கிய நூலாக ஆக்க நாம் வற்புறுத்துவோம். அதில் வெற்றி பெற்ற பிறகு மற்றவற்றைப் பற்றி பார்க்கலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினரின் பெயர் இளங்கோவன் என்று இருப்பதால் சிலப்பதிகாரத்தை தேசிய நூலாக ஆக்க கேட்கிறார் போலும். (சிரிப்பு).

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் குறளை சொல்லிய பிறகுதான் சட்டமன்ற நடவடிக்கையை தினமும் ஆரம்பிக்கிறீர்கள். ஆகவே நம்முடைய சட்டமன்றத்திலேயே ஒரு தீர்மானம் இது சம்பந்தமாக நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி அதன் வாயிலாக திருக்குறளை தேசிய நூலாக, இலக்கியமாக ஆக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசு ஆராயும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்டமன்ற நூலாய் திருக்குறள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**குடந்தை மாநகரில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்.**

55—(*வினா எண் 9751) **திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடந்தை மாநகரில் இரண்டு மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் இயங்கி வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதில் ஒன்றான வலங்கைமான் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தை பாபநாசம் நகருக்கு மாற்ற அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இல்லை.



1986 நவம்பர் 18]

**திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக தனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தை பாபநாசத்தில் அமைக்கின்ற உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணத்தில் இயங்கி வரும் வலங்கைமான் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தைப் பாபநாசத்திற்கு மாற்ற செயற்குறிப்பு அரசிடம் இல்லை. மாறாக பாபநாசத்தில் ஒரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தைத் தனியாக அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில் தனி நீதிமன்றங்கள் அமைத்து பெண்களுக்கு எதிராக செய்கின்ற தவறுகளையும், குற்றங்களையும் விசாரிக்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரி லீகல் எய்ட் போர்ட்ளை ஆங்காங்கே கிராமப் பகுதிகளில் அமைக்க, இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

**திரு. செ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய நலனைக் கருதி ஒன்றிய அளவில் சிறு சிறு நீதிமன்றங்களை அமைத்து மக்களுடைய சிரமங்களைக் குறைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ? இது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. சி. போன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்ட அளவில் சில இடங்களிலே சிவில் கிரிமினல் நீதிமன்றங்களை அமைக்க முதற்கட்டமாக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. நீதிமன்றங்கள் மூலமாக மக்களுக்கு நீதி கிடைக்க கால தாமதம் ஆவதால் பிரி கன்சிலியேசன் மெதட் என்ற முறையிலே சம்பந்தப்பட்டவர்களுடன் சுமுகமாகப் பேசித் தீர்க்கக் கூடிய வகையிலே நீதிபதிகள், வழக்குரைஞர்கள், அந்தந்தத் துறையைச் சார்ந்த வல்லுநர்கள் இப்படிப்பட்டவர்கள் அடங்கிய குழு மூலமாக தீர்ப்பளித்து அந்த வகையில் மக்களுடைய குறைகளைக் களைய இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

**திரு. கோ. பெருமாள் பிள்ளை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குஜராத் மாநிலத்திலே மக்கள் மன்றங்கள் அமைக்கப்பட்டு அதன் மூலமாக வழக்குகளைப் பொறுத்தவரையில் இயன்ற அளவுக்கு விரைவில் தீர்ப்பளிக்கப்பட்டு மக்கள் பலன் அடைந்து வருகிறார்கள் என்பதைப் பற்றியும், அவை எவ்வாறு

நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன என்பதைப் பற்றியும் குஜராத் உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி அவர்கள் அண்மை யில் கூறியிருக்கிறார்கள். அது போன்ற ஆலோசனையை இந்த அரசும் ஏற்றுக்கொள்ளுமா ? அது குறித்து நடவடிக்கை எடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தில்தான் ஆண்டுக்கு 37 இலட்சம் ரூபாய் செலவிலே பிரி லீகல் எய்ட் போர்ட் என்று சொல்லப்படுகின்ற இலவச சட்ட ஆலோசனைக் குழு மிகவும் நல்ல முறையில் தன்னுடைய பணியைச்செய்து வருகிறது. ஏற்கனவே நாம் தமிழகத்தின் சில பகுதிகளில் கன்சிலியேசன் போர்டு முறையை ஆரம்பித்து விட் டோம். அது போல தமிழகத்தில் எல்லா இடங்களிலும் மக்கள் நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொன்றுக்கும் நீதி மன்றத்திற்கு சென்று மக்கள் வழக்குகளை நடத்தாமல் நெகோசி யேசன் மூலமாக மக்களுடைய வழக்குகளுக்கு தீர்ப்புகள் விரை வில் கிடைக்கும் வகையில் இதனை விரைவு திட்டமாக கருதிக், அரசு தற்போது நடவடிக்கை எடுத்திருக்கிறது.

(முற்பகல் 9-40)

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுகா அளவிலுள்ள ஒவ்வொரு இடத்தி லும் நீதிமன்றங்கள் அமைக்க வேண்டுமென்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிவித்தார்கள். அப்படியானால் குடவாசல் தாலுகாவிலே ஒரு நீதிமன்றம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னேன், ஒவ் வொரு வட்டத்திற்கும் சிவில் மற்றும் கிரிமினல் நீதிமன்றங் களைக் கொண்டு வரவேண்டுமென்பது அரசு ஏற்றுக்கொண்ட கொள்கை. அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வரு கிறது. குடவாசல் வட்டமாக இருக்கிற காரணத்தால் மாண்பு மிகு உறுப்பினருடைய கோரிக்கையும் படிப்படியாக, கட்டாய மாக நிறைவேறும்.

திரு. வி. பி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நீதிமன்றங்களுடைய தீர்ப்பு கட்டுப்படுத்தப்படுமா ? அப் பீல் உரிமை இருக்கிறதா? அல்லது இந்தத் தீர்ப்புகள் இரு தரப்பாலும்—கன்சிலியேஷன் என்றால் இரு தரப்பாலும் ஒத்துக் கொள்ளப்படும், — இஷ்டபூர்வமாக ஒத்துக் கொள்ளப்படும் தீர்ப்பா என்பதை விளக்குமாறு கேட்டுக்கொள் கிறேன்.



மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, All these will be settled out of court peacefully between the parties—

என்ற முறையிலே இரு சாராருக்கும் இடையிலே சுமுகமான முறையிலே பேசி, அவர்கள் ஒத்த தீர்வினைக் காண்பார்கள்.

### ஜெயங்கொண்டத்தில் அரசு ஊழியர்களுக்கு வீடுகள்

56—(*வினா எண் 4499) டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா---

(அ) திருச்சி மாவட்டத்தில் ஜெயங்கொண்டம் நகரில் அரசு ஊழியர்களுக்கு (N.G.O.) வீடு கட்டித் தரும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலே வேறு எந்தத் தாலுகாவி னுடைய தலைநகரத்திலாவது இப்படி என்.ஜி.ஓ.க்களுக்கு வீடு கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு அலுவலர் குடியிருப் பைப் பொறுத்தவரையிலும், மாவட்டத் தலைநகரங்கள் மற்றும் கோட்டாட்சித் தலைநகரங்களில்தான் இந்தத் திட்டம் செயல் பட்டு வருகிறது. ஜெயங்கொண்டாம் வட்டத் தலைநகரம் என்ற காரணத்தாலே இந்தத் திட்டம் இப்பொழுது அங்கே இல்லை.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்ற பொழுது, மாவட்டத் தலைநகரங்களிலும் மற்றும் கோட்டத் தலைநகரங்களிலும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவதாகக் குறிப்பிட்டார்கள். தாலுகா தலைநகரங்களிலும் அதிகமான அளவிலே என்.ஜி.ஓ.க்கள் பணி புரிகின்றார்கள். ஜெயங்கொண்

டாம் பகுதியிலே அதிக வீட்டு வசதி இல்லாத காரணத்தால் இதை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து, தாலுகா தலை நகரங்களுக்கும் விரிவுபடுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுகா அளவில் பின்னால் விரிவு செய்யும்போது, ஜெயங்கொண்டாம் கவனத்தில் கொள்ளப்படும்.

கோவையில் உலக வங்கி அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை.

57—(*வினா எண். 6584) திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த ஆகஸ்டு முதல் வாரத்தில் கோவை வந்த உலக வங்கி அதிகாரிகளிடம் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டதா?

(ஆ) கோவை நகரில் எந்தெந்தத் திட்டம் விவாதிக்கப்பட்டது?

(இ) விவாதத்தின் முடிவில் இறுதியாக்கப்பட்டவை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) மற்றும் (இ): கோவை உட்பட 5 நகரங்களுக்குப் பல திட்டங்கள் செயல்படுத்துவதுபற்றிப் பொதுவாக விவாதிக்கப்பட்டது. சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் ரூ. 428 கோடி மதிப்பீட்டில் ஒரு அறிக்கை தயாரித்து, தமிழ்நாடு பெருநகர் வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் மைய அரசுக்கு அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. கே. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியிடமிருந்து கோவை நகரத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக பெற உத்தேசிக்கப்பட்டுள்ள தொகையின் மொத்த அளவு என்ன? அப்படி உத்தேசிக்கப்பட்டிருக்கிற திட்டங்கள் எந்தக் கால அளவில் துவக்கப்படும்? துவக்கப்படுகிற திட்டங்களை விரைவாக முடிப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்த 5 நகரங்களுக்கும் சேர்த்து, ரூ. 428 கோடிக்குத் திட்டமிட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. கோவையைப் பொறுத்தவரைக்கும் மேம்படுத்தப்பட்ட மனைகள் திட்டத்திற்காக ரூ. 25 கோடி,





குடிசை மேம்பாட்டிற்காக ரூ. 5 கோடி, இப்படி மொத்தம் ரூ. 53 கோடிக்குத் திட்டமிடப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மத்திய அரசு அனுமதி கிடைத்து, உலக வங்கியினுடைய அனுமதியும் கிடைத்த பின்னால்தான் இந்தத் திட்டம் செயல்படத் தொடங்கும். ஆகவே, கால அவகாசம் பற்றி உறுதியாக இப்பொழுது சொல்ல முடியாது.

திரு. கே. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரத்தின் எல்லைக்குட்பட்ட வளர்ச்சித் திட்டங்கள் என்ற அடிப்படையில் எந்த, எந்தத் திட்டங்கள் விவாதிக்கப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, மேம்படுத்தப்பட்ட மனைகள் திட்டம், குடிசைகள் மேம்பாடு, சாலைகள், நகராட்சி நிர்வாகம், சாக்கடை மற்றும் குடிநீர்த் திட்டம், தொழில் நுட்ப உதவி இப்படிப் பல்வேறு 'ஐட்டம்' களின் கீழே ரூ. 53 கோடிக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன.

திரு. மா. சின்னராசு : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை நேரில் பார்வையிட்டு பரிசீலிப்பதற்காக இரண்டு முறைகள் உலக வங்கி அதிகாரிகள் கோவை மாநகருக்கு வந்து, பல்வேறு திட்டங்கள் குறித்து பரிசீலனை செய்திருக்கிறார்கள். நம்முடைய அரசு மத்திய அரசுக்கு இதுகுறித்து திட்டங்களை அனுப்பி, அவர்களுடைய அங்கீகாரத்தைப் பெறுவது எந்த நிலையில் இருக்கிறது? மத்திய அரசு இதுகுறித்து தமிழக அரசுக்கு பதில் எழுதியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, உலக வங்கி அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை 'பிரிலிமினரி டிஸ்கஷன்' என்ற முறையில் அமைந்திருந்தது. முதல் கட்டப் பேச்சுவார்த்தை 1986 செப்டம்பரில் நடத்தப்பட்டது. தமிழக அரசின் சார்பில் மத்திய அரசுக்கு திட்டங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. மத்திய அரசின் அனுமதியைப் பெற தொடர்ந்து முயற்சி செய்யப்படும்.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது 5 நகரங்களுக்கு 428 கோடி ரூபாய் என்று சொன்னார்கள். அவற்றில் கோவை மாநகரைப்பற்றி மட்டும் சொன்னார்கள். மீதியுள்ள 4 நகரங்கள் யாவை? எந்த எந்த நகரில் என்ன என்ன பணிகள் நடைபெற திட்டமிடப்பட்டிருக்கின்றன? அவற்றுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது?

[1986 நவம்பர் 18

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்
களே, கேள்வி கோவை மாநகரைப்பற்றி மட்டும் இருந்ததால்
அதற்கு மட்டும் பதில் சொன்னேன். நியாயமாக மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் கேட்ட விவரங்களுக்குத் தனிக் கேள்வி
போட வேண்டும் என்றாலும் விவரம் கையில் இருப்பதால்
பதில் சொல்கிறேன். சென்னை, கோவை, மதுரை, திருச்சி,
சேலம் ஆகியவை அந்த 5 நகரங்கள். சென்னை மாநகருக்கு
219 கோடி ரூபாய், கோவை மாநகருக்கு 53 கோடி ரூபாய்,
மதுரை மாநகருக்கு 61 கோடி ரூபாய், திருச்சிக்கு 55 கோடி
ரூபாய், சேலத்திற்கு 40 கோடி ரூபாய் ஆக மொத்தம் 428
கோடி ரூபாய்.

ஆற்றோர குடிசைப் பகுதிகளை வெள்ள அபாயத்திலிருந்து
மாற்று இடங்களில் குடியமர்த்தல்.

58—(*வினா எண். 7622) திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ள அபாயத்திலிருந்து ஆற்றோரப் பகுதி
களான சூர்யா நகர், சத்யா நகர், ஜோதியம்மாள் நகர்,
கோட்டூர்புரம் 'தீ' பிடிக்காத வீடுகள் போன்ற குடிசைப்
பகுதிகளை உலக வங்கித் திட்டத்தின்கீழ் மாற்று இடத்தில்
குடியமர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அறநிலையத் துறை, பொதுப்பணித்
துறை, கல்வித்துறை முதலிய துறைகளுக்குச் சொந்தமான காலி
யான இடத்தை கையகப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்
ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) சம்பந்தப்பட்ட துறைகளின் ஒப்புதல் பெற்று, நிலத்
தை தன்வசம் பெறுவதற்கான நடவடிக்கை தமிழ்நாடு
குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் எடுக்கப்பட்டு வருகிறது.

திரு சைதை சா. துரைசாமி : தலைவரவர்களே, இந்தத்
திட்டத்தினால் பயன்படும் குடும்பங்கள் எத்தனை? இந்தத்
திட்டத்திற்கு செலவிடப்படவிருக்கிற தொகை எவ்வளவு என்ற
விவரங்களை அறிய விரும்புகிறேன்.



1986 நவம்பர் 18]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தினால் அன்னை சத்தியா நகர், சூரியா நகர், ஜோதியம்மாள் நகர், சித்திரா நகர், கோட்டூர்புரம், மல்லிப்பூ நகர் ஆகிய பகுதிகளில் உள்ள சுமார் 2,043 குடும்பங்கள் பயன் பெறும். இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு 1,03,20,000 ரூபாய்.

திரு. சைதை சா. துரைசாமி : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானால் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பணிகளை முடிக்க தேவையான நிலங்களைக் கையகப்படுத்த துரித நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு கோவில் நிலம், குதிரைப் பந்தய நிறுவனத்திற்குச் சொந்தமான நிலம், காவல் துறையைச் சேர்ந்த நிலம், பொதுப்பணித் துறையைச் சேர்ந்த நிலம் போன்ற பல்வேறு துறைகளுக்கு அல்லது நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களை அரசு கையகப்படுத்தி, அதற்குப் பின்னால் பணியைத் தொடங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, கால நிர்ணயத்தை இப்போது உறுதியாகச் சுட்டிக்காட்ட முடியாது. இருப்பினும் வேகமாக நிலத்தைக் கையகப்படுத்தி, பணிகளை முடிக்க அரசு முயற்சி செய்யும்.

சேலம் மரவட்டம் இடைப்பாடியில் வீட்டு வசதி வாரிய வீடுகள்.

59—(*வினா எண். 8271) திரு. ச. கோவிந்தசாமி : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் இடைப்பாடியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(அ) இடைப்பாடி கிராமத்தில் தற்பொழுது நில ஆர்ஜிதம் மற்றும் அபிவிருத்திப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணி முடிந்தபின் பல்வேறு வீட்டு வசதித் திட்டங்கள் தீட்டப்படும்.

திரு. ச. கோவிந்தசாமி : தலைவரவர்களே, அங்கு நீண்ட நாட்களாக வீட்டு வசதித் துறை வீடு கட்டும் பணியைத் தொடங்காமல் காலதாமதம் செய்கிறது. இந்தப் பணியை எப்போது தொடங்குவார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, பொதுவாக நில ஆர்ஜிதம் செய்கின்றபோது பல்வேறு நிலச் சொந்தக்காரர்கள் நீதிமன்றங்களுக்குச் செல்வதால் காலதாமதம் ஏற்படுகிறது. இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ 91 ஏக்கர் நிலம் ஏற்கனவே கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. நிலச் சொந்தக்காரர்களுக்கு ஈட்டுத் தொகை நிர்ணயிக்கிற ஏற்பாடு நடைபெற்று வருகின்றது. ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய், சுமார் 500 மனைகளுக்கும் 800 குடியிருப்புக்களுக்கும் அந்தப் பகுதியிலே கொடுக்கப்படும்.

(முற்பகல் 9–50)

திரு. ச. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்த வீட்டு வசதித் திட்டத்தைப் பேரூராட்சிப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அதுபோன்ற உத்தேசம் ஏதும் இல்லை.

**குமரி மாவட்டத்தில் குடிசைகளை மாற்றி வீடு கட்டுவதற்கு ஒதுக்கிய தொகை.**

60—(*வினா எண். 8985) திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் குடிசைகளை மாற்றி வீடு கட்டிக் கொடுப்பதற்காக இவ்வாண்டில் (1986-87) எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது ?

(ஆ) அது பற்றிய விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): குமரி மாவட்டத்தில் உள்ள நாகர்கோவில் நகரம், ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கிற 43 நகரங்களில் ஒன்றாகத் தேர்வு செய்யப்பட்டு இருக்கிறது. இந்த நகரத்தில் வீடுகள் கட்டித் தரப்படும்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய திட்டங்களைப் பார்க்கும்போது மீனவர் பகுதிகளிலும், பனை ஏறும் தொழிலாளர்கள் வசிக்கும் பகுதிகளிலும் அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற வகையில், அதுவும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைமாற்று வாரியத்தினுடைய பணிகளைப் பொறுத்த வரையில் ஏற்கனவே சென்னையிலேயும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலே மட்டும்தான் நடைபெற்று வருகிறது. இப்போது 43 நகரங்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் பணிகள் பரவலாக்கப்பட்டு இருக்கின்றன. கடலோரப் பகுதி மீனவர்களைப் பொறுத்த வரையில் அதற்கென்று தனியாக இலாக்காக்கள் இருக்கின்றன. அந்த இலாக்காக்களின் சார்பாக அவர்களுக்குக் கட்டித் தரப்படுகிறது. இப்போது நான் சொன்னது போல் சென்னை தவிர மற்றும் 43 நகரங்கள் தேர்வு செய்யப்பட்டு இருக்கின்றன. அதிலே கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நாகர்கோவிலும் வருகிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் குடிசைகளை மாற்றி வீடுகள் கட்டிக் கொடுக்க எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? எந்த காலகட்டத்திற்குள்ளாக அது கட்டி முடிக்கப்படும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வீட்டிற்கு சுமார் 6,000 ரூபாய் விதம்—ஏறக்குறைய 2,153 குடும்பங்கள் 8 குடிசைப் பகுதிகளில் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுஇருக்கிறது. அந்த குடிசை வாழ் மக்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தஞ்சை மாவட்டம் குத்தாலத்தில் கிராமிய வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம்.**

61—(*வினா எண். 10338) திரு. பாப்பா சுப்பிரமணியன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குத்தாலத்தில் ஒரு கிராமிய வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்ட அளவிலான கிராமிய கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களைப் பிரித்து தாலுக்கா அளவிலான கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

[1986 நவம்பர் 18

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுக்கா அளவிலான சங்கங்கள் துவங்க வேண்டுமென்ற சிந்தனை அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. பாப்பா சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தாலத்தைச் சுற்றியுள்ள பகுதி மிகவும் பிற்படுத்தப்பட்டுள்ள குக்கிராமங்கள் சூழ்ந்துள்ள பகுதியாகும். அதிலும் குறிப்பாக ஆதிதிராவிடர்கள் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள விவசாயத் தொழிலாளர்கள் வாழும் பகுதியாக அது இருப்பதால் இனியாவது இதுபற்றிப் பரிசீலனை செய்து மயிலாடுதுறையில் உள்ள தாலுக்கா அளவிலான கூட்டுறவுச் சங்கத்தைக் குத்தாலத்தில் அமைக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் குத்தாலம் தொகுதியில் கிராமிய வீடு கட்டும் சங்கம் ஆரம்பிப்பதற்கான எந்தவிதமான பிரேரணையும் அரசுக்கு வரவில்லை. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி பாளையூர் பகுதியில் ஒரு சங்கம் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். பாளையூர் பகுதியை உள்ளடக்கிய மற்ற கிராமங்கள் அத்தனைக்கும், அந்தப் பகுதிக்கான தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் ஏற்கெனவே சீர்காழியிலே ஒரு சங்கம் இருப்பதால் இப்போது அது போன்ற சிந்தனை ஏதும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று தேவையானால் பின்னர் பரிசீலிக்கப்படும்.

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிராமிய வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கிராமப்புற மக்களுக்கு கடன் கொடுக்கும் போது ஆதிதிராவிட மக்களுக்கு கடன் கொடுப்பதைப் பொறுத்த வரையில் தற்போது நிறுத்தி வைத்து இருப்பதாகத் தெரிகிறது. அது உண்மையா ? அப்படி என்றால் அதைத் தளர்த்தி அவர்களுக்கும் கடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கு என்று தனியாக ஹட்கோ மூலமாக வீடுகள் கட்டப்பட்டு வருவதால் ஒருவேளை அவ்வாறு இருக்கலாம் என்று கருதுகிறேன். ஆனால் சரியான விவரங்கள் இல்லை தனிக் கேள்வி கேட்டால் விவரங்களைச் சேகரித்துத தருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1986 நவம்பர் 18]

**திரு. வே. கு. சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமிய வீடு கட்டும் சங்கத்தால் கட்டப்படுகிற வீடுகளுக்கு குறிப்பிட்ட விதிகள் விதிக்கப்பட்டு இருப்பதாக அந்தச் சங்கத்தின் மூலம் தெரிவிக்கிறார்கள். அது என்ன விதி என்பதையும், எந்த அடிப்படையில் எவ்வளவு ரூபாய் கடன் கொடுக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூபாய் 6,000 ஆகக் கொடுக்கப்படுகிறது. அதிலே ரூ. 4,500 கடனாக வழங்கப்படுகிறது. மீதம் உள்ள ரூ. 1,500-ஐ உறுப்பினர்கள் சொந்த மூலதனமாகப் போட்டு அந்த வீடுகளைக் கட்டிக் கொள்ள வேண்டும். தற்போது 1,400-க்கு மேற்பட்ட சங்கங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு சங்கத்தினுடைய எல்லையும், அந்தச் சங்கங்கள் எந்தெந்த எல்லைப் பிரிவிற்குள் வரும் என்பதையும் நிர்ணயம் செய்திருக்கிறோம். எனவே சங்கத்தின் இடத்தையும் மற்றவற்றையும் குறிப்பிட்டுக் கேட்டால்தான் பதில் சொல்ல முடியும்.

**திரு. சி. பழனிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமிய வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் வீடுகள் கட்டுவதற்கு, ஒவ்வோராண்டும் ஒதுக்கீடு செய்கிறார்கள். அதில் 4,500 ரூபாயை கடனாகக் கொடுக்கிறார்கள். அந்தக் கடன் தொகை 4,500-க்கும் ஆஸ்பெஸ்டாஸ் ஷீட், செங்கல், சிமெண்ட் போன்றவற்றைக் கொடுத்து வீடுகளைக் கட்டிக் கொள்ளுங்கள் என்று சொல்லி விடுகிறார்கள். அவை வீடுகள் கட்டுவதற்குப் போதாமல் இருக்கின்றன. 4,500 ரூபாய் என்னும் தொகை மிக மிகக் குறைவு. ஆகவே, அந்தத் தொகையை பத்தாயிரமாக ஆக்கி உறுப்பினர்களுக்குக் கடன் கொடுத்தால் வீடுகளை ஓரளவிற்குக் கட்ட முடியும். ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் 225 வீடுகள் கட்டுவதற்கு ஒதுக்கப் பட்டுள்ளது. ஆனால் அந்தத் தொகைக்குள் வீடுகளைக் கட்ட முடியாததால், கிராமப்புறங்களில் யாருமே அதைப் பயன் படுத்த முன் வராத அவலநிலை இருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? ஆகவே அதைப்போக்க இந்த ரூ. 4,500 கடன் தொகையை 10 ஆயிரமாக உயர்த்திக் கொடுக்க அரசு முன் வருமா ?

[1986 நவம்பர் 18

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : அரசின் நிதி நிலைமைக்கு ஏற்ப பின்னால் பரிசீலிக்கப்படும்.

**கன்னியாகுமரி மாவட்டத்தில் சத்துணவுத் திட்டத்தில் தவறிழைத்து பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள்.**

62—(*வினா எண். 5097) டாக்டர் கே. குமாரதாஸ் : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் சத்துணவுத் திட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டவர்களில் தவறிழைத்த தன்காரணமாக தற்காலிகமாகவும், நிரந்தரமாகவும் பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் இதுவரை எத்தனை பேர் ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் சத்துணவுத் திட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டவர்களில் தவறிழைத்ததின் காரணமாக இதுவரை நிரந்தரமாக 8 நபர்களும், தற்காலிகமாக 11 நபர்களும் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், ஃபேமிலி பிளானிங் ஸ்கீமிற்கு பெண்களை ஏற்பாடு செய்து கொடுக்கவில்லை என்ற காரணத்தால், பல சத்துணவு ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்திருப்பதாக புகார்கள் பெறப்பட்டிருக்கின்றன. டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்திலே கூட இது எழுப்பப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட புகார்கள் ஏதேனும் அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படியானால் அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார் ஏதும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. ஏற்கெனவே சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றுகிறவர்களை, குடும்ப நலத் திட்டத்திற்கு ஆள் பிடிப்பதற்கு பயன்படுத் தக்கூடாது என்று அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே அவர்களை குடும்ப நலத்திட்டத்திற்கு பயன்படுத்துவதில்லை. அங்கே வருகிற தாய்மார்களிடத்தில் பிரச்சாரம் செய்யத்தான் பயன்படுத்துகிறோமே தவிர, ஆள் பிடித்து வர பயன்படுத்துவதில்லை.



1986 நவம்பர் 18]

**திரு. டி. என். முருகானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டம் என்பது இந்த அரசினுடைய உயிர்நாடித் திட்டமாக இருந்து வருகிறது. இந்தச் சூழ்நிலையில் தமிழகத்தில் பல இடங்களில் குறிப்பாக என் தொகுதியில் கூட காலியாக உள்ள சத்துணவு ஆசிரியர்கள் அல்லது அமைப்பாளர்கள் பதவிகள், ஒரு காலகட்டத்திற்குள் நிரப்பப்பட வேண்டும் என்ற ஒரு திட்டவட்டமான முடிவை அரசு எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களுக்குத் தேவையான பணியாளர்களை பத்திரிகையில் விளம்பரம் செய்து, அவர்களிடத்திலிருந்து உரிய விண்ணப்பங்கள் வரப் பெற்றவுடன், நேர்முகத்தேர்வின் மூலமாகத்தேர்ந்து எடுக்கப்படுகின்றனர். ஆகவே, கணிசமான அளவுக்குத் தேவை என்ற நிலையில், முறையாக எடுக்கப்படுகிறது. உடனடியாக தேவைப்படுகிற சத்துணவுக் கூடங்களில், பக்கத்திலே இருக்கின்ற சத்துணவுக் கூடத்தில் வேலை புரிபவர்கள் கூடுதல் பொறுப்பாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். தேவைப்படுகிற காலங்களில், சில இடங்களில் சில பேர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

**திரு. பரப்பா சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குற்றச்சாட்டு கேள்வி நேரத்தில் கூடாது. அது நீக்கப்படுகிறது.

தென்னாற்காடு மாவட்டத்தில் கதர்வாரிய கைத்தொழில்கள்

63—(*வினா எண். 3077)—திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் கதர் வாரியத்தால் மேற்கொண்டுள்ள கைத்தொழில் பணிகள் யாவை?

(ஆ) அதன் மூலம் பயனடைவோர் எண்ணிக்கை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக 56 அலகுகளும், சங்கங்களின் மூலமாக 59 அலகுகளும், தனி நபர் மூலமாக 3255 அலகுகளும் செயல்பட்டு வருகின்றன. அதன் மூலமாக 16,859 நபர்கள் வாய்ப்பும், பயனும் அடைந்து வருகிறார்கள்.

---

****மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.**

[1986 நவம்பர் 18

**திரு. துரை அன்பரசன் ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் வாரியத்தின் மூலமாக தொழில் தொடங்கி நடத்தி வருகிற நேரத்தில் அதன் மூலம் நட்டம் வருகிறது என்ற காரணத்தால் சில நிறுவனங்கள் மூடப்பட்டு இருக்கின்றன. அப்படி மூடப்பட்ட நிறுவனங்கள் எத்தனை? அதனால் வேலை இழந்தவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல்–10.00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதியுடன் வினாக்கள் விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி நஷ்டமடைந்து மூடப்பட்டதாக அரசுக்கு எந்தத் தகவலும் வரவில்லை. ஆதாரம் ஏதாவதுஇருந்து உறுப்பினர் அதனைத்தருவார்களானால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. துரை அன்பரசன் :** தலைவர் அவர்களே, அதேபோல் தென்னாற்காடு மாவட்டத்தில் நிறைய நிலையங்கள் மூடப்பட்டிருப்பதாக எனக்கு செய்தி வந்திருக்கிறது. அதனால் ஏராளமான பேர்கள் வேலை இழந்திருக்கிறார்கள் என்பதும் தெரிகிறது. அதை எழுத்து மூலமாகக் கூட கொடுக்கிறேன். அப்படித் தருகிறபோது அவர்களுக்கு மாற்றுப்பணி ஏற்படுத்தித் தரமாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெரிந்திருக்கிறது, செய்தி வந்திருக்கிறது' என்பதை வைத்துமட்டும் குறிப்பிட்ட ஒருபதிலைச் சொல்லி விட முடியாது. குறிப்பாக ஏதாவது ஆதாரத்தை காட்டுவார்களானால் அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

ஆற்காடு வட்டத்தில் கதர்த்துறை மூலம் காகிதம் தயாரித்தல்

64—(*வினா எண். 9115) **திரு. த. பழனி :** மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆற்காடு வட்டத்தில் கதர்த்துறை மூலமாக காகிதம் தயாரிக்கப்படும் அலகு ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



1986 நவம்பர் 18]

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தர்ராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு வட்டத்தில் ஆரப்பாக்கம் என்னுமிடத்தில் ஏற்கெனவே ஒரு கைமுறைக் காகித அலகு அமைக்கப்பட்டு, இயங்கி வருகிறது. இவ்வட்டத்தில், மேலும் புதிதாக கைமுறை காகித அலகுஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**திரு. த. பழனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு வட்டத்தில் அமைந்திருக்கிற ஆரப்பாக்கம் கிராமத்திலிருக்கிற கைமுறைக் காகித அலகு தொழிற்கூடத்தில் எத்தனை தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள்? அந்தத் தொழிலாளர்கள் அங்கு தினக்கூலியாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா? அந்தத் தொழிற் கூடத்தை விரிவுபடுத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தற்போதுஅந்தக் கைமுறைக்காகித அலகில் 25 டன் மேலட்டை தாளும், 10 டன் படியெடுக்கும் தாளும் உற்பத்தி செய்யப்படுகிறது. இதன் மூலமாக 35 பேர்கள் பயனடைந்து வருகிறார்கள். இதிலே பணியாற்றுகின்றவர்களை நிரந்தரம் ஆக்குவதற்கான வழிமுறைகளை அரசு பரிசீலித்து வருகிறது.

**திரு. த. பழனி :** தலைவர் அவர்களே, அவர்கள் கடந்த 10, 12 ஆண்டுகளாக அதிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். தினந்தோறும் அவர்கள் மத்தியில் ஏற்படும் தொழில் தகராறுகள் போன்ற பல்வேறு சிக்கல்களும், சங்கம் அமைத்துக் கொள்வதும், வேலைக்கு போகாமல் இருப்பதும் அவர்கள் நிரந்தரம் ஆக்கப்படாமல் இருப்பதற்கு காரணங்களாக அமைகின்றன. ஆகவே அரசு இதில் வேகமாக நடவடிக்கையெடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** தலைவர் அவர்களே, ஒரு தொழில் கூடத்தில் இருக்கிறவர்கள் அத்தனை பேரையும் நிரந்தரம் ஆக்க வேண்டுமென்கிறபோது அந்தத் தொழில் கூடத்தினுடைய தாங்குகிற தன்மையையும், அது தயாரிக்கின்ற பொருள்கள் விற்பனையாகின்ற தன்மையையும், அதன் மூலமாக வருகிற இலாபத்தையும் நாம் கணக்கிலே கொள்ள வேண்டும். இது குறிப்பாக கிராமங்களில் இருக்கிற மக்கள் பயனடைய வேண்டுமென்ற நோக்கத்தோடு துவங்கப் பட்டிருக்கிற தொழிலாகும். இந்தத் தொழில் தற்போது தான் நம்முடைய மாநிலத்தில் விரிவாக, கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி வருகிறது

ஆகவே அதனுடைய முன்னேற்றத்தைப் பொறுத்து தொழிலா
லாளர்களுடைய நலன் கவனிக்கப்படும். எங்காவது பிரச்சினை
கள் வருமானால் நம்முடைய கதர் வாரியத்தின் மூலமாகப்பேசி,
உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களுடைய பிரச்னை
களைத் தீர்த்து வருகிறோம்.

திரு. க. சோலைராசு : தலைவர் அவர்களே, கதர்த் துறையி
னுடைய வெள்ளி விழாவை முன்னிட்டு தமிழகம் முழுவதிலும்
25 கிராமங்களை துறை தத்து எடுத்துக் கொண்டது. அப்படி
தத்து எடுத்துக் கொண்ட ஊர்களில் கதர்த் துறைமூலம் பல்வேறு
மக்களுக்கு வேலை தருகிற பணிகளை அரசு துரிதப்படுத்துமா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்
களே, தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்ல இயலும்.

**அரசு கட்டுமான ப்பணியில் மதிப்பீட்டுத் தொகைக்கு கூடுதலாக**
**டெண்டர் போடுதல்.**

65—(*வினா எண்.4968) **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி.**
**பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்)** மாண்புமிகு
பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) ஒப்பந்தக்காரர்கள் கூட்டுச் சேர்ந்துகொண்டு அரசு
கட்டுமானப் பணியில் மதிப்பீட்டுத் தொகைக்குக் கூடுதலாக
டெண்டர் போடுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைக்தவிர்க்க அரசு எடுத்துக்கொண்ட
நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு** திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். **இராமச்சந்திரன்**
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இது
பற்றியதகவல்கள் ஏதும் இல்லை. குறிப்பிட்ட புகார்கள் வந்நால்
விசாரித்து ஆவன செய்யப்படும்.

(ஆ) கேள்வி எழவில்லை.

**மாண்புமிகு** திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :
(பேரவைத் துணைத் தலைவர்) : அரசு கட்டுமானப் பணிகளுக்கு
டெண்டர் போடுகிறபோது ஒப்பந்தக்காரர்கள் சங்கம் அமைத்
துக்கொண்டு, கூடிப் பேசிக்கொண்டு அரசு நிர்ணயிக்கிற
தொகைக்கு மேலே கூடுதலாகப் போடுகிற வழக்கம் எல்லாத்
துறைகளிலும் நடைப்பெற்றுக் கொண்டிருக்கிறது. இதை
அரசாங்கமே தவிர்ப்பது என்றாலும் கூட மிகக் கடுமையான



காரியம் தான். அரசுக்கு பல சிரமங்கள் இருப்பதை ஒப்புக்
கொள்கிறோம் அதேநேரத்தில் டெண்டர் போடுவது ஒரு நிர்
வாகப் பொறியாளர் அலுவலகத்தில் என்றால் இரண்டு, மூன்று
அலுவலகங்களில் டெண்டர் போடுவதற்கான வாய்ப்பினை உரு
வாக்கி அவைகளையெல்லாம் ஓரிடத்தில் கொண்டு வந்து,
உடைத்து, சரிபார்த்து, யார் தகுதியானவர்கள் என்பது அறிவிக்
கப்படும் என்கிற நடைமுறையை அரசு அமல்படுத்தினால்
ஓரளவிற்கு இதனைத் தவிர்க்க வாய்ப்பிருக்கிறது. எனவே இதை
அரசு பரிசிலிக்குமா? அதேபோல கட்டுமானப் பணிகளில் நடை
பெறுகிற தவறுகளை, கண்காணிக்க கட்டுமானப் பணி முடிந்த
பிறகு ஒரு 5 ஆண்டுக் காலத்திற்குள் அந்தக் கட்டிடத்திலோ
அல்லது பாலத்திலோ ஏதாவது ஒரு தவறு நேர்கிறது என்றால்,
அதற்கு அந்த வேலையை எடுத்த காண்ட்ராக்டர்தான் பொறுப்பு
என்கிற வகையில் 'இன்டெம்னிட்டி பான்ட்' வாங்கி 5
சதவீதம் அந்தத் தொகையிலேயிருந்து பிடித்து வைத்துக்கொள்
வதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :**
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெண்டர் பார்ம்
களை பல இடங்களில் வாங்கி ஒன்று சேர்க்கவேண்டும் என்று
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அதனுடைய
சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து பார்த்து முடியுமானால் அதன்
மீது நடவடிக்கை எடுக்கலாம். இன்னொன்று 5 ஆண்டுகளுக்கு
அந்தக் கட்டிடத்தினுடைய பொறுப்பை காண்ட்ராக்ட்காரர்
கள் ஏற்கவேண்டும் என்று சொல்கிறார்கள். ஏற்கனவே இப்
போது உள்ள சட்டத்திலேயே இதற்கு இடம் இருக்கிறது என்
பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரம்ணியன் :**
(பேரவைத் துணைத் தலைவர்:) மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இதை ஓரளவுக்குப்போக்குவதற்கு அரசு கட்டுமானப்
பணிகள் நடைபெறுகிற அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற,
வேலையில்லாமல் இருக்கின்ற,இன்ஜினியரிங் படித்த பட்டதாரி
களுக்கு முன்னுரிமை கொடுத்து இந்தப் பணிகளைக் கொடுப்
பதற்கும், இல்லை என்றால் அவர்கள் மூலம் ஒரு கூட்டுறவுச்
சங்கத்தை உருவாக்கி அந்த வேலையில்லாத பட்டதாரிகள்,
வேலையில்லாத பொறியியல் பட்டதாரிகள் மூலம் ஒரு கூட்டுறவு
அமைப்பை உருவாக்கி அவர்களிடம் இப்படிப்பட்ட அரசி
னுடைய கட்டுமானப் பணிகளைக் கொடுப்பதற்கு அரசு நட
வடிக்கை எடுக்க முன்வருமா என்ற விவரங்களை அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டதாரிகளுடைய கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அப்படி அந்தச் சங்கங்கள் எல்லாம் டெண்டர்களிலே கலந்துகொள்கிற நேரத்தில் அவர்களுக்கும் முன்னுரிமை வழங்கிக் கொண்டு இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது என்று பல தடவைகள் அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது. எனவே இந்தக் கேள்வி நீக்கப்படுகிறது.

திரு. எஸ். சிவராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒப்பந்தம் போடுவதிலே ஒப்பந்தக்காரர்கள் ஒன்று சேர்ந்து கொண்டு போடுவதாக துறைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது உண்மைதான். இருந்தாலும் ஒப்பந்தங்கள் இல்லாமலேயே அரசாங்கத்திலே உள்ள செயற்பொறியாளர் அளவிலே இருக்கக்கூடியவர்கள் ஒப்பந்தத்தை நாமினேசன் என்ற பெயராலே கொடுக்கிறார்கள். இதனால் அவைகள் தரம் குறைந்த வேலைகளாக இருந்துகொண்டு இருக்கின்றன. அப்படி கொடுப்பது அரசுக்கு நியாயமா? அல்லது ஒப்பந்தம் மூலமாகக் கொடுப்பது நியாயமா? அதேநேரத்தில் அந்த வேலைகள் சரியில்லை என்று சொன்னால் ஒப்பந்தக்காரர்கள் மட்டும் அதற்குப் பொறுப்பல்ல. அதை நிர்வகிக்கக்கூடிய பொறியாளர்களும் பொறுப்புதான். எனவே அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்விகளை சுருக்கமாகக் கேட்கவேண்டும்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைகள் அத்தனையும் டெண்டர் மூலமாகத்தான் கொடுக்கப்படுகின்றன. அவசர வேலைகளை, அரசாங்க உத்தரவின் பேரில்தான் அவர்கள் நாமினேசனிலே கொடுக்க முடியும். எங்காவது தவறுதலாக அப்படிக் கொடுப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வார்களானால், நான் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கிறேன்

---

மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் வேலைகள் சரியாக இல்லை என்று சொன்னால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தான் முழுப் பொறுப்பும் எடுத்துக் கொள்கிறார்கள். சஸ்பென்சன் போன்ற கடுமையான நடவடிக்கைகளை அவர்கள் மீது எடுத்துக் கொண்டிருக்கிறோம் அப்படி தவறு நடந்த இடத்தைச் சுட்டிக்காட்டினால், நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தக்காரர்கள் கூட்டு சேர்ந்து கொண்டு, அதிகமான தொகைக்கு டென்டர் எடுக்கிறார்கள் என்பது ஒருபுறம் இருக்க, அங்கத்தினர்களாக இல்லாத ஒப்பந்தக்காரர்கள் எல்லாம் சேர்ந்து கூட்டுறவுச் சங்கம் என்று வைத்துக்கொண்டு அவர்கள் சலுகைகளை அனுபவித்துக்கொண்டு இருக்கிறார்கள். இதுபற்றி ஏதாவது அரசுக்கு தகவல் உண்டா ? அப்படி தகவல் வந்திருந்தால் இப்படிப்பட்ட சங்கங்களைக் கண்டறிந்து அதை நிரந்தரமாக நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய அந்தச் செய்தி அரசாங்கத்தினுடைய கவனத்திலே இல்லை. அப்படி பொய்யான முறையில் சங்கங்கள் இருக்கும் என்று சொன்னால் நிச்சயமாக அந்தச் சங்கத்தின் மீது சம்பந்தப்பட்ட துறையின் மூலமாகச் சொல்லி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில இடங்களில் ஒப்பந்தக்காரர்கள் ஒன்றிரண்டு பேர்கள் போட்டி போட்டுக்கொண்டு, 20, 25 விழுக்காடுகள் குறைவாக சில வேலைகளை ஒப்புக்கொண்டு அரசினுடைய திட்டம் நிறைவேறாதவாறு பல ஆண்டுக்காலத்திற்கு வேலைகள் கிடப்பிலே போடப்படுகிறது. இதைப்பற்றி துரித நடவடிக்கை எடுத்து, அரசு அப்படிப்பட்ட குறைபாடுகளைப் போக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய அந்த குறைகள் இருப்பதை அரசு கண்டு கொண்டுள்ளது. அதன் மீது அரசு சரியான நடவடிக்கை எடுக்கும். வேகமாக வேலைகளைச் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் செய்து கொண்டு இருக்கிறது.

செ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலைகள், கட்டிடங்கள் ஆகிய வேலைகளைச் செய்கின்ற ஒப்பந்தக்காரர்கள் இன்றைக்கு 40 சதவீதம் வரைக்கும் போட்டி போட்டுக்கொண்டு தள்ளி எடுத்துவிடுகிறார்

கள் அப்படி தள்ளி எடுத்து விடுவதினாலே இன்னொரு 10, 15 சதவீதம் அதோடு சேர்த்துக் தள்ளவேண்டியதிருக்கிறது. ஆக, 30, 35 சதவீதத்தில் எந்த அளவிற்கு வேலைகள் நடைபெறும்? எனவே இதைத் தவிர்ப்பதற்கு இந்த அளவிற்குத் தான் விழுக்காடு தள்ளிப் போடவேண்டும் என்ற வகையில் அரசு உத்தரவைக் கொண்டு வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய அந்த சதவீதம் குறைந்து எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதுவேலை நடந்து கொண்டிருக்கிறது. அப்படி வேலை நடக்காமல் ஒரு சூழ்நிலை உருவாகும் என்று சொன்னால் அதன் மீது தகுந்த நேரத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மானாமதுரைத் தொகுதி உப்பாற்றில் செய்களத்தூர் அருகே கால்வாய் வெட்டுதல்.**

66—(வினா எண் 7566)—திரு. க. பாரமலை : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரைத் தொகுதியில் உப்பாற்றில் செய்களத் தூர் அருகே கட்டப்பட்டிருக்கும் அணையிலிருந்து செல்லும் கால்வாய் வெட்டி முடிக்கப்படாமல் பயனற்று இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) அணையிலிருந்து வெட்டப்பட்டிருக்கும் கால்வாயில் மொத்த நீளம் 21 கி. மீ. தலைப்பிலிருந்து 16 கி.மீ. வரையிலும் அதற்கு கீழே சில ப திகளிலும் வேலை முழுதும் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள வேலைகளுக்கு அருகிலுள்ள நிலங்களிலிருந்து மண் எடுப்பதற்கு பொது மக்களிடமிருந்து எதிர்ப்பு இருப்பதால், செயல்ப த்த முடியாமல் உள்ளது. எனினும், மீதமுள்ள வேலைகளை விரைவில் முடிப்பதற்கு நல ஓவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.



திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபோது 21 கிலோ மீட்டர் தூரத்தில் 16 கிலோ மீட்டர் தூரம் வெட்டி முடித்ததாக சொன்னார்கள். இது அதிகாரிகள் கொடுத்த தகவல் என்று நான் கருதுகிறேன். அந்த 16 கிலோ மீட்டர் தூரத்தில் கூட இடை இடையே பலயிடங்களில் வெட்டாமல் இருக்கிறது. சில வெட்டிய இடங்களிலும் மூடப்பட்டிருக்கிறது. முழுமையாக அந்த கால்வாய் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. அந்த 16 கிலோ மீட்டர் தூரத்திற்கும் கால்வாய் முழுமையாக பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. இதற்கு மொத்த மதிப்பீடு ஆரம்பத்தில் எவ்வளவு எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். ஆர். இராமசந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியது போல் பலயிடங்களில் பாறையாக இருந்த காரணத்தால் அங்கே வெட்டாமல் இருப்பது அரசின் கவனத்தில் இருக்கிறது. இதை எல்லாம் வைத்துக்கொண்டு முதலில் ஏறத்தாழ 9 லட்ச ரூபாயில் ஆரம்பிக்கப்பட்ட வேலை 25 லட்ச ரூபாய் வரைக்கும் ஏறத்தாழ செலவழித்துக் கொண்டிருக்கிறோம். இப்போது மீதமுள்ள வேலையை செய்வதற்கு ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாக 40 லட்ச ரூபாய்க்கு மத்திய அரசுக்கு நாங்கள் பரிந்துரை செய்து இருக்கிறோம். ஆகவே நிச்சயமாக அந்த வேலைகள் செய்து முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் இந்த வேலை சேர்க்கப்பட்டு இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேலை எப்போது துவங்கப்படும்? அந்த மீதம் உள்ள 5 கிலோ மீட்டர் தூரத்தில் அதிகமான நில எடுப்பு சம்பந்தப்படவில்லை. ஆகவே, அந்த 5 கிலோ மீட்டர் தூரத்தையும் இத்தோடு சேர்த்து செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 40 லட்ச ரூபாயில் மீதமுள்ள வேலை சேர்த்து எடுப்பதற்கு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து இருக்கிறோம். மத்திய அரசு ஒப்புக்கொண்டு வந்த உடனே உடனடியாக வேலை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. என். முருகேசன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இது போன்ற பல பணிகளில் அதிகாரிகள்
அதாவது இன்ஜினியர்கள் அடிக்கடி மாற்றப்படுவதால் அந்த
பணிகள் முடிவதற்கு காலதாமதம் ஏற்படுகிறது. புதிதாக
வருகின்ற இன்ஜினியர்கள் அந்த பணியைப் புரிந்து கொண்டு
வேலையைத் தொடங்கும் முன் அவரும் மாற்றப்படுகிறார்.
ஆகவே, நாட்டின் நலன் கருதி அதிகாரிகள் மாறுவார் என்பது
ஒரு கால கட்டத்திற்குள் தான் செய்ய வேண்டும் என்ற ஒரு
கண்டிப்பான உத்திரவை அரசு பிறப்பிக்குமா என அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்
பினர் சொல்லியது போல் இந்தத் துறையில் நடக்கவில்லை.
காரணம் ஒரு அதிகாரி 3 வருடம் இருக்கவேண்டும் என்ற ஒரு
கட்டாயம் இருக்கிறது. அதேபோல் 1 1-2 வருட காலத்திற்குள்
எந்த காரணத்தைக் கொண்டும் மாற்றக்கூடாது என்பதையும்
அப்படி மாற்றுகின்ற நேரத்தில் சரியான காரணம் அவர் மீது
இல்லாமல் மாற்றக்கூடாது என்ற உத்திரவை மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பதை
மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. அய்யாமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த கால்வாய் மானாமதுரை தொகுதிக்கும்,
இளையாங்குடி தொகுதிக்கும் பயன்பட இருக்கின்ற காரணத்தால்
இதைப் பற்றி அதிகாரிகளை கேட்கின்ற நேரத்தில் வெட்டப்
படுகின்ற கால்வாயில் தண்ணீர் ஏற முடியாத நிலை இருக்கிற
காரணத்தால் வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது என்று எங்களிடம்
சொன்னார்கள். அது உண்மையா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்
பினர் அவர்களுக்கு சொல்லப்பட்ட தகவல் சரியான தகவல்
இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### வால்பாறையில் நல்லாறு அணைத் திட்டம்

67. (வினா எண் 8383).—திரு. வி. தங்கவேலு—மாண்புமிகு
பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் நல்லாறு அணைக்கட்டுத்
திட்டம் எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

(ஆ) இதன் மதிப்பீடு எவ்வளவு ?





மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) நல்லாறு
அணைக்கட்டுத் திட்டம் ஆய்வில் உள்ளது.

(ஆ) இதன் மதிப்பீடு இன்னும் முடிவாகவில்லை.

திரு. எம். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த நல்லாறு அணைக்கட்டுத் திட்டம் ஆய்வில்
இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்
கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதன்
திட்ட மதிப்பீடு எவ்வளவு? வேலை எப்போது ஆரம்பிக்கப்
படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எ. ஆர். இராமச்சந்திரன்:
மாண்புமிகு பேரவைந் தலைவர் அவர்களே, திட்டத்தினுடைய
தற்போதைய மதிப்பீடு 81.50 கோடி ரூபாய். இது நீர்ப்பாசன
திட்டம் மட்டும் அல்லாமல் மின் உற்பத்தி திட்டமாகவும் இருக்
கிறது. கேரள அரசோடு பேசி முடிவு எடுக்க வேண்டிய ஒன்றாக
இருப்பதால் இந்தப் பிரச்சினையை உடனடியாக எடுக்கப்
படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்
கிறேன்.

திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்
களே, இந்த அணை கட்டப்படும்போது கீழே உள்ள ஆயக்
கட்டுதாரர்களுடைய உரிமை பாதிக்கப்படாத அளவிற்கு
கட்டப்படுமா? இதுவரைக்கும் இதுமாதிரி மேலே அணையைக்
கட்டும்போது, அணைகள் ஒவ்வொன்றுக்கும் கீழே இருக்கின்ற
நிலச்சுவான்தார்கள் பாதிக்கக்கூடிய அளவிற்கு, மேலேயிருந்து
தண்ணீர் தடுத்து விடப்பட்டு பாதிப்பு ஏற்படுகிறது. இதிலே
ஆயக்கட்டுகள் இருக்கின்றன. நஞ்சை, புஞ்சை பாசன நிலங்கள்
இருக்கின்றன. அந்த மாதிரி பாசன நிலங்கள் இருக்கிறபோது,
எந்த அளவிற்குக் கீழே தண்ணீர் வந்து கொண்டிருந்ததோ,
அந்த அளவிற்குக் குறையாமல் வருவதற்கு ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே.கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இப்படி அணைக்கட்டுகள் கட்டப்படு கின்ற நேரத்தில், கீழே இருக்கின்ற நஞ்சை நிலமாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்த நிலமாக இருந்தாலும் சரி, அது பாதிக் கப்படாத நிலையில் சிறப்பான முறையில் பார்த்துத்தான் கட் டப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி, திட்டத்தை நிறைவேற்றும்போது அந்த நிலைமைகள் எல்லாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, சீராகக் கட்டப்படும்.

திருமலைராஜன் அரசலாறு கரைகளை அகலப்படுத்துதல்

68—(வினா எண் 8483)—திரு. மா. மணிமாறன்: மாண்பு மிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமலைராஜன், அரசலாறு ஆகிய ஆறுகளின் கரைப்பகுதி களை அகலப்படுத்த அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ் எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. மா. மணிமாறன்: தலைவர் அவர்களே, கேள்வி கேட்கப்பட்ட முறையே கொஞ்சம் மாறியிருக்கிறது என்று நினைக்கிறேன். கரையை அகலப்படுத்துவதற்காக கேட்கப் பட்ட கேள்வியேயல்ல அது. கரையை அகலப்படுத்த வேண் டாம். இந்த இரண்டு ஏரிகளிலிருந்தும் வாய்க்கால்கள் இருக் கின்ற காரணத்தால், திருமலைராஜன், அரசலாறு (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போட்ட கேள்விக்குத் தான் பதில் கிடைக்கும். அதற்கேற்றவாறு கேள்வி கேளுங்கள்.

திரு. மா. மணிமாறன்: தலைவர் அவர்களே, திருமலை ராஜன் ஏரி, வேளாண்மைத் துறையால் பரிந்துரை செய்யப் பட்டு, திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அப்படி விவசாயத்துறையால் பரிந்துரை செய்யப்பட்ட காரணத்தால், திருமலைராஜன் ஏரியின் கரைகளை அகலப்படுத்தும் போது,— ஒரு கரையிலிருந்து இன்னொரு கரைக்கு விவசாயிகள் செல்ல வேண்டியிருக்கிறது. அப்படிச் செல்லும்போது கரைகளை வண்டி போக்குவரத்திற்காக வெட்டி விடுகிறார்கள். அதன் காரணமாக வெள்ளக் காலங்களில் உடைப்பு ஏற்பட்டு விடுகிறது. எனவே அதைத் தவிர்ப்பதற்கு அந்த வண்டிப் பாலத்தையும் அகலப்படுத்துகின்ற பணியை திட்டத்தோடு சேர்த்து பாலம் அமைக்க, அது ஒரு வழி பாலமாக இருந்தாலும் போதும், அரசு முன்வருமா?



மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப் பினர் கூறியதை ஆராய்ந்து பார்த்து, சரியாக இருக்குமென்ற நிலையில் அது நிறைவேற்றப்படும்.

திருமூர்த்தி அணையிலிருந்து ஏரிகளுக்கு தண்ணீர் விடுதல்.

69—(*வினா எண் 9423)—திரு. கு. ரமணி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம் ஆளியார் பாசனத் திட்டத்தைச் சேர்ந்த திருமூர்த்தி அணையிலிருந்து தெற்கு பகுதியில் உள்ள ஏழு ஏரிகளுக்கு வெயில் காலத்தில் தண்ணீர் திறந்து விட்டு நிரப்புவது உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) உண்டு.

(ஆ) ஏழு குளத்தில் இரண்டாவது பாசன காலம் வெயில் காலத்தை ஒட்டி (அதாவது மார்ச் முதல் மே மாதம் முடிய) வருகிறது. இப் பருவத்தில் திருமூர்த்தி அணையில் நீர் இருப்பின் திறந்துவிடப்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏழு ஏரிகள் நிறைவேற்றப்படும் திட்டத் தினால், சில குறிப்பிட்ட வசதி படைத்தவர்கள் தான் பயன் பெறுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதுவும் சில அதிகாரி களுடன் சேர்ந்து அந்த ஏற்பாடு செய்யப்படுவதாகச் சொல்லப் படுகிறது. இது சம்பந்தமாக சில புகார்கள் அரசுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது என்று தெரிய வந்திருக்கிறது. அரசுக்கு அந்தப் புகார்கள் கிடைக்கப்பெற்றனவா? அப்படியென்றால், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? வசதி படைத்தவர்கள் மட்டுமல்லாமல் ஏழை விவசாயிகளுக்கும் அந்தத் தண்ணீர் கிடைக் கக்கூடிய வகையில், அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அப்படி புகார் எதுவும் அரசினுடைய கவனத்தில் இல்லை. புகாரை யாரும் அனுப்ப வேண்டிய அவ சியமும் இல்லை. தவறு இருக்குமென்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, கோடிட்டுக் காட்டினால் போதும். அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற திட்டம் பெரியார் மாவட்டத்தில் கீழ்ப் பவானி அணையிலிருந்து வருகின்ற, மேட்டுப்பாளையம் பகுதி வழியாக, புஞ்சைப் புளியம்பட்டி போன்ற பகுதிகளில் உள்ள குட்டைகளுக்குத் தண்ணீர் விடுகின்ற திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

(பிற்பகல் 1-20)

**மாண்புமிகு** திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்விப் போட்டால் சரியான பதில் சொல்லப்படும்.

**திரு.** ஏ. எஸ். ரவீந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே இத்தகைய அணைக்கட்டுகளை கட்டுகின்ற பணிகள் ஆரம்பிக்கும் காலத்திலேயே எந்தெந்தப் பகுதிகளுக்கு முதல் தவணை தண்ணீர் விடப்படும் என்றும் இரண்டாவது முறை யாருக்கு விடப்படும் என்றும் தீர்மானிக்கப்படுகிறது. ஆனால், அதன்படி அதிகாரிகள் செயல்படுவதில்லை. குறிப்பாக திருவண்ணாமலையில் சாத்தனூர் அணையைப் பொறுத்தமட்டில் வடகரை தென்கரை ஆட்களுக்கு முறைப்படி தண்ணீர் விடுவதில்லை. ஆகவே ஒரு முறையைப் பின்பற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு** திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி அந்த அணைக்கட்டுத் திட்டம் ஏற்படுத்திய நேரத்தில் அந்த வரையறை செயல்பட்டதோ அது போன்று தான் விட்டுக்கொண்டிருக்கிறோம். ஒருசில நேரங்களில் தண்ணீர் பற்றாக்குறையுள்ள பகுதிகளில், உங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் வருகின்ற நேரத்தில் மனிதாபிமான முறையில் அப்படிப்பட்ட நிகழ்ச்சி நடைபெறும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ச. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம் ஆளியார் பாசனத் திட்டத்திலே தற்போது பாசன நிலங்களுக்கு விவசாயம் செய்வதற்கு தண்ணீர் திறந்துவிடப்படுவதாக அறிகிறோம். ஆனால், ஏரிகளுக்கும், குளங்களுக்கும் தண்ணீர் விடுவதன் காரணமாக பாசன நிலங்களுக்குத் தண்ணீர் கிடைப்பதில்லை என்று புகார் அரசுக்கு வந்துள்ளதா ? ஆம் எனில், அதன் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா ? குளங்களுக்கும், ஏரிகளுக்கும் தண்ணீர் விடப்படுவதன் காரணமாக, அதிகாரிகள் அங்கே பல முறைகேடுகள் செய்துகொண்டு இருக்கிறார்கள் என்று அந்தப் பகுதி விவசாய பெருமக்கள் அரசுக்கு செய்தி தெரிவித்திருப்பதால் அதன் மீது அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு** திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, குடிக்க நீர் இல்லை என்று சொன்ன காரணத்திற்காக அந்தப் பகுதியிலே சில குளங்களுக்கு தண்ணீர் விடப்படுவதாக தகவல் வந்ததாக என் நினைவிலே உள்ளது. அப்படி தண்ணீர் விடப்படுகின்ற நேரத்தில், அதிகாரிகள் தவறு செய்திருப்பதாக, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதிக்கொடுத்தால் நிச்சயமாக தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### ஆலந்தூர் தொகுதி ஜாபர்கான் பேட்டையில் அடையாற்றில் வெள்ளத் தடுப்புச் சுவர்

70—(*வினா எண். 9722)—திரு. ம. ஆபிரகாம் மற்றும் திரு. சைதை. சா. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலந்தூர் தொகுதியில் ஜாபர்கான் பேட்டை பகுதியில் மழைக் காலங்களில் அடையாறு ஆற்று நீரால் ஏற்படும் வெள்ளப் பெருக்கை கட்டுப் படுத்த ஆற்றின் இரு பகுதிகளிலும் சுவர் எழுப்ப அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு** திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆம். ஜாபர்கான்பேட்டை தாழ்பாலம் முதல் மறைமலை அடிகள் பாலம் வரை அடையாறு ஆற்றின் இடது கரையில் சுமார் 800 மீட்டர் நீளத்திற்கு மட்டும் சுவர் எழுப்பதிட்டமுள்ளது.

திரு. ம. ஆபிரகாம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியது உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்கிறது. அதற்கு நன்றி கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கடந்த ஆண்டு இதுபோன்ற தடுப்புச் சுவர் இல்லாத காரணத்தால் மாடி வீடுகள் எல்லாம் மூழ்கடிக்கப்பட்டு ஒவ்வொருவரையும் படகிலே வீடுகளுக்கு அழைத்துச் சென்று, அப்புறப்படுத்துகின்ற சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே, இந்த ஆண்டாவது, மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்ற அந்த மக்களுக்கு உடனடியாக பாதுகாப்பு ஏற்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதை வரவேற்கிறேன். அது உடனடியாக செயல்படுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு** திரு. கே. கே. என். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்திற்கு தற்போது தமிழக முதல்வர் அவர்கள் ரூ. 85 இலட்சம் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அந்தப் பணி உடனடியாகத் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டப் பணியானது முழுக்க, முழுக்க எனது தொகுதி மக்களுக்கு பயன்படுகின்ற ஒன்றாகும். இந்தத் திட்டம் சைதை மறைமலை அடிகள் பாலம் வரை நிறைவேற்றப்பட இருப்பதாக சொன்னார்கள். இந்த மன்றத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ரோட்டேர்புரம் வரையில் அந்தத் தடுப்புச் சுவர் நீட்டிக்கப்படும் என்று சொன்னார்கள். அந்தத் திட்டம் என்ன ஆனது? இப்போது எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்ற திட்டத்தின் மொத்த தொகை எவ்வளவு? ரூ. 85 இலட்சம் ஒதுக்கியிருப்பதாகச் சொன்னார்கள். அது ஜாபர்கான்பேட்டை தாழ்பாலம் முதல் சைதை மறைமலை அடிகள் பாலம் வரையா? அல்லது ஜாபர்கான்பேட்டையிலிருந்து ஒரு ரீச்சிற்கு உண்டான தொகையா என்ற விபரத்தையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தடுப்புச் சுவர் கட்டும் பணிக்காக மொத்தம் ரூ. 275 இலட்சங்களைக் கேட்டிருக்கிறார்கள். முதல் ஒரு ரீச்சுக்காக ரூ. 85 இலட்சம் இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். வெள்ளத் தடுப்பு அல்லது அதை நிவர்த்தி செய்வதற்காக இப்பொழுதுஅந்த வல்லுநர் குழுவினர் ஏறத்தாழ ரூ. 12 கோடி வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதிலே இப்பொழுது ரூ. 2 கோடி தமிழக அரசு ஒதுக்கியிருக்கிறது. அதிலே தான் ஒரு பகுதியாக ரூ. 85 இலட்சம் ஒதுக்கி ஒரு ரீச்சிற்குத் தடுப்புச் சுவர் கட்டும் பணியை ஏற்படுத்தியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை துரிதமாக எடுத்துக் கொள்ளாவிட்டால் அடுத்து வருகின்ற வெள்ளக்காலங்களில் பாதிப்பு ஏற்படும். கட்டியிருக்கின்ற அந்தப்பகுதியும் பாதிக்கப்படும். எனவே, இதைக் கருத்தில் கொண்டு கேட்கப்பட்டிருக்கின்ற தொகையான ரூ. 275 இலட்சங்களையும் விரைவில் ஒதுக்கி 3 மாத காலத்தில் இந்தப் பணிகள் முடிவடைய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடிந்த அளவிற்கு நிதி ஆதாரங்களை ஒதுக்கியிருக்கிறார்கள். வேலைகளை துரிதப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. ஆகவே தகுந்த நேரத்தில் வெகுவேகமாக பணிகள் முடுக்கிவிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





திரு. ம. ஆபிரகாம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஜாபர்கான்பேட்டை என்னுடைய தொகுதியின் எதிர்ப்புறத்தில், அதே நேரத்தில் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வாழ்கின்ற ராமாவரம் தோட்டத்திற்கு எதிரில் நந்தம்பாக்கம் பேரூராட்சியைச் சேர்ந்த பகுதி. அங்கு பர்மா தமிழர்கள் நீண்ட காலமாக வாழ்கிறார்கள். அங்கேயும், அதே போல் தான் மழைக் காலங்களில் ஆற்று நீர் வெள்ளப் பெருக்கெடுத்து குடிசைகள் எல்லாம் அடித்துச் செல்லப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் அந்த மக்கள் கரைஏறி, டிஃபன்ஸ் காலனியிலேயும், சர்ஜிக்கல் குவார்ட்டர்ஸிலேயும் தங்குகிறார்கள் அதையும்மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்தில் கொள்ளவேண்டும்ஏற்கனவே அந்தத் தொகுதி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய தொகுதி. அவருக்கு ஓட்டுக் கேட்கின்ற நேரத்தில் அந்த மக்களுக்கு, வாக்குறுதியைக் கொடுத்த தொண்டர்களில் நானும் ஒருவன். இப்போது அவர் முதல்வராக இருக்கிறார். அந்த ஏழை எளிய பாமர, பர்மாத் தமிழர்களுக்கு அந்தக் கரையில் தடுப்புச் சுவர் கட்டி, மழைக் காலங்களில் வீடுகள் எல்லாம் வெள்ளத்தில் அடித்துச் செல்லாதபடி தடுத்து நிறுத்த, அரசு இந்த ஆண்டிலேயே, இதே திட்டத்திலே அதையும் இணைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வெள்ளத் தடுப்பிற்காக தனியாக ஒரு குழு அமைத்து, அந்தக் குழு பல்வேறு வகைகளிலே ஆராய்ந்து, எந்த, எந்தக் காரணங்களினாலே வெள்ளம் வருகிறது என்பதைச் சரிபார்த்து, அதற்காக ஏறத்தாழ 12 கோடி ரூபாய் வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. பல பிரிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே நந்தம்பாக்கம் பாலத்திற்குக் கீழே இருக்கிற ஆற்றை அகலப்படுத்துகிற பணியும் இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட பணிகள் மூலமாக வெள்ளம் வருகிற நேரங்களில். அதற்கு தடுப்பு நடவடிக்கைகள் எடுத்து இருக்கிறோம். அதிலே ஆக்கிரமிப்புக்கள் மூலமாக வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அதை நாம் ஒன்றும் செய்ய முடியாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெறவில்லை என்பதைக் குறிக்கும்.]

## (2) தகவல் கோரல்.

### (அ) இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து பெங்களூரில் நடந்த பேச்சு வார்த்தைகள்

**திரு. என்.எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் வரை, பெங்களூரிலே நடைபெற்ற தெற்கு ஆசியத் தலைவர்கள் மாநாட்டின்போது நாம் மெத்த அக்கறை கொண்டு இருக்கிற இந்திய-இலங்கைப் பிரச்சினை குறித்து, இந்தியத் திருநாட்டினுடைய பிரதம அமைச்சர் மேன்மைக்குரிய திரு. ராஜீவ் காந்தி அவர்களும், தமிழகத்தி னுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இலங்கையி னுடைய அதிபர் ஜெயவர்த்தனே அவர்களும், பல சுற்றுக்கள் பேச்சு வார்த்தை நடத்தியதாகவும், அப்போது நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களும் உடன் இருந்த தாகவும், அந்தப் பேச்சுக்களின் போது, நல்ல முன்னேற்றம் கண்டதாகவும் அறிந்து நாம் சற்று ஆறுதல் அடைகிறோம்.

எனவே, நான் உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவது—அந்தப் பேச்சு வார்த்தைகள் பற்றிய முழுமையான விவரங்களை கொடுக்க இயலாது, கொடுக்க முடியாது என்றாலும்கூட—பொதுவான முன்னேற்றம் குறித்து அவர்கள் இந்த அவைக்குத் தெரிவிப்பார்களேயானால், அது தமிழகத்திற்கும், நமக்கும் உதவியாக இருக்கும். எனவே, அதை அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. கி. மனோகரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் இங்கே எழுப்பிய கேள்வியையொட்டி நானும் ஒன்றைக் கேட்டுத் தெளிவுபெற விரும்புகிறேன். பாரதத்தின் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் 'சார்க்' மாநாட்டில் கலந்து கொள்வதற்கு பெங்களூர் வந்த நேரத்தில் நமது முதலமைச்சரையும் அவர் அழைத்து, இலங்கைப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணுகிற தீவிர முயற்சியில் தூய்மையான முயற்சியில் ஈடுபட்டதாக பத்திரிகைகளில் செய்தி கள் வந்திருக்கின்றன. அத்தோடு, விடுதலைப் புலிகளின் ஒரு இயக்கத்தைச் சேர்ந்த தலைவர் நண்பர் திரு. பிரபாகரன் அவர் களை உடனடியாக பெங்களூருக்கு வரவேண்டும் என்று பிரதம அமைச்சர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவரும் சென்றதாக வும், முதலமைச்சரும், பிரதம அமைச்சரும் இரண்டு கட்ட சுற்றுப் பேச்சுக்களை முடித்ததற்குப் பிறகு, அந்த மூன்று பேர் களும் உட்கார்ந்து பேசியதாகவும் செய்திகள் கிடைத்திருக் கின்றன, வெளியேசொல்லப்பட்ட செய்திகளில், பத்திரிகைகளிலே வந்திருக்கிற செய்திகளில், பாரதத்தின் பிரதமர் பத்திரிகை





நிருபர்களுக்கு அளித்த செய்தியில்—பேச்சிலே முன்னேற்றம் தெரிகிறது ; ஆகவே, சுமுகமான ஒரு உடன்படிக்கை அல்லது உடன்பாடு ஏற்படுவதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்று அவர்கள் பேசி இருக்கிறார்கள். அதுவும் ஒரு பக்கத்திலே வந் திருக்கிறது.

இன்னொரு பக்கத்தில், விடுதலைப் புலிகளைச் சேர்ந்தவர் கள் அதிலே பங்கு பெற்றோர் வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்கின்ற 'லிங்க்கேஜ்' பிரச்சினையை ஒத்துக் கொள்ளாத வரை நிச்சயமாக சமரசப் பேச்சு வார்த்தைக்கு இடமே இல்லை என்ற கருத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். இந்த முரண்பட்ட, முரண்பாடான, குழப்பமான பிரச்சினைக்குப் பதில் சொல்ல வேண்டும் என்று நமது முதலமைச்சரோடு கலந்து கொண்ட நமது உணவு அமைச்சர் அவர்கள், விரிவான, உள்ளார்ந்த விளக் கத்தைத் தரவேண்டும் என்றுகூட நான் கேட்கவில்லை ; அதை விளக்கிச் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இது ஒரு முக்கியமான பிரச்சினை என்ற காரணத்தினால்.

(முற்பகல் 10-30).

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஞாயிறன்றும், திங்கள் கிழமை யன்றும் தெற்காசியத் தலைவர்களின் மாநாடு பெங்களூரில் நடைபெற்றது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, தமிழகத்தின் சார்பில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்ட மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் பாரதப் பிரதமர் அவர்கள் ஸ்ரீலங்கா அரசோடு பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க—நமது பாரதப் பிரதமர் அவர்கள் ஸ்ரீலங்கா அதிபர் திரு. ஜெயவர்த் தனா அவர்களோடு பலமுறை நேரிலும், சில முறை அதிகாரிகள் மட்டத்திலும், சிலமுறை வெளியுறவு அமைச்சர்கள் மட்டத் திலும் கலந்து கொண்டு பேசியிருக்கிறார்கள். நேற்றுகூட, மாலையில், வெகுநேரம் ஸ்ரீலங்கா அதிபர் திரு. ஜெயவர்த்தனா அவர்களோடு—இருவரும் அவர்களுடைய தலைநகருக்குச் செல்ல வேண்டியிருந்தும் கூட—நமது பாரதப் பிரதமர் அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

இதிலே இரண்டு முக்கியமான விஷயங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒன்று அதிகாரப் பகிர்வு. அதாவது தமிழ்ப் பகுதிகளுக்கு ஸ்ரீலங்கா அரசு எவ்வளவு அதிகாரங்கள் தர வேண் டும் என்பது ஒன்று, அந்த அதிகாரப் பகிர்வு குறித்த பேச்சு வார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதைத்தான் பாரதப் பிரதமர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1986 நவம்பர் 18

இன்னொன்று ஸ்ரீலங்காவின் தமிழர்கள் வாழ்கிற தாயகப் பகுதி பற்றியது. ஸ்ரீலங்காவில் வட மாகாணம், கிழக்கு மாகாணம் என்று இருக்கக் கூடிய பகுதிகள் தமிழ் மக்களின் தாயகப் பகுதி என்று ஸ்ரீலங்கா அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஸ்ரீலங்கா தமிழர்கள் ஒரு புறமும், அந்த இரண்டு மாகாணங்களும் இரண்டு மாகாணங்களாகவே இருக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா அரசு ஒருபுறமுமாக தொடர்ந்து ஒரு நிலையை மேற்கொண்டு வருவதனால் அந்தப் பிரச்சினை மேற்கொண்டும் பேசப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது. இதுதான் இப்போது இருக்கக் கூடிய நிலைமை.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், பாரதப் பிரதமர் அவர்கள் ஸ்ரீலங்கா அரசோடு பேச்சு வார்த்தை நடத்துகிறபோது பாரதப் பிரதமர் அவர்களுக்குத் தேவையான—அவர்கள் விரும்புகிற—காரியங்களில் கலந்து கொள்வதற்காகத்தான் நேற்றும் அதற்கு முன்தினமும் அங்கே இருந்தார்கள். பாரதப் பிரதமர் அவர்களை இரண்டு முறை சந்தித்தார்கள். அப்போது போராடுகிற ஸ்ரீலங்கா தமிழர்களுடைய உணர்வுகளையும் இங்கே உள்ள தமிழ் மக்களின் உணர்வுகளையும் எடுத்துச் சொல்லுகிற அளவுக்கு, அந்தத் தீர்வுக்கு, பாரதப் பிரதமருக்கு உறுதுணையாக இருந்தார்கள்.

பாரதப் பிரதமரோடு நாம் பேசும்போது நமக்குத் துணையாகத்தான் போராளிகள் இருந்தார்கள். ஆனால் நேரடிப் பேச்சுவார்த்தை நடந்தது என்னவோ இந்திய அரசுக்கும் ஸ்ரீலங்க அரசுக்கும் இடையேதான். நாங்கள் ஸ்ரீலங்கா அரசைச் சந்தித்ததாகவோ மற்றும் போராளிகள் ஸ்ரீலங்கா அரசைச் சந்தித்ததாகவோ வந்த செய்திகள் சரியான செய்திகள் அல்ல. பாரதப் பிரதமர் அவர்களுக்கு உறுதுணையாக நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருந்தார்கள். நமது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு உறுதுணையாகப் போராளிகள் இருந்தார்கள். அந்த வகையில்தான் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. இந்தப் பிரச்சினையில் இதற்கு மேலும் விளக்கம் கேட்டு விவாதிப்பது என்பது சரியாக இருக்காது. ஏனென்றால் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கும்போது அதைக் குறித்து இங்கே நாம் இதற்கு மேல் பேசுவது சரியல்ல, தேவையில்லை. எனவே, இதோடு விட்டுவிடுங்கள்.

திரு. கி. மனோகரன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய உணவு அமைச்சர் அவர்கள் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள்*

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1986 நவம்பர் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் தயவு செய்து உட்கார வேண்டும். இது வெளி விவகாரம் பற்றிய பிரச்சினை. This is connected with External Affairs. இதைத்தான் காலையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் என்னைச் சந்தித்தபோதே சொன்னேன். எனவே இதற்கு மேல் இந்தப் பிரச்சினையில் ஒன்றையும் எழுப்ப வேண்டாம். The talks are in progress and it should not be spoiled.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் அதைப்பற்றி இங்கே பேசி நல்லதைச் செய்ய முடியாவிட்டாலும்கூட கெட்டதை யாவது செய்யாமல் இருப்பது நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : This is connected with External Affairs Talks are going on. எனவே இதற்கிடையில் நாம் பேசுவது சரியல்ல. எனவே இதோடு விட்டுவிட்டு அடுத்த பிரச்சினைக்குப் போக வேண்டும். இதற்கு மேல் பேச வேண்டாம்.

இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றுமில்லை. ஒரு தகவல் கேட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் தகவல் சொல்லிவிட்டார்கள். எனவே அதற்கு மேல் ஒன்றும் பேசுவது சரியல்ல. அதோடு அது முடிந்துவிட்டது.......

திரு. கி. மனோகரன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே,**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையெல்லாம் இங்கே விவாதிக்க முடியாது. அந்த சப்ஜெக்ட்டைப்பற்றி நாம் இங்கே விவாதிக்க முடியாது. (குறுக்கீடு) இதெல்லாம் தேவையில்லாதது. ரெக்கார்டு ஆகாது.

(ஆ) அரசு விழாக்களில் உறுப்பினர்கள் அழைக்கப்படுவதும் அவர்கள் பெயர் அழைப்பிதழில் அச்சடிக்கப்படுவதும் குறித்து.

*திரு. இ. இருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியாகிய குடந்தை பகுதியில் பட்டீஸ்வரம் என்ற ஊரில், கும்பகோண வட்டார அளவில் 33-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா கடந்த 15-11-1986 அன்று நடந்திருக்கிறது. அதிலே சட்டமன்ற உறுப்பினர்களின் பெயரோ அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயரோ இல்லை. அவர்கள் யாவரும் அழைக்கப்படவில்லை. நான் இங்கே கொடுக்கிற அழைப்பிதழ் வேறு ஒரு தோழருக்கு வந்ததாகும். ஆகவே........

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை இப்போது என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதை என்னுடைய அறைக்கு அனுப்புங்கள். அதை அவை முன்னவரிடத்திலே கொடுத்து நடவடிக்கை எடுக்கச் சொல்லு கிறேன். (குறுக்கீடுகள்) நானே நடவடிக்கையை எடுக்கச் சொல்லுகிறேன். உங்களுடைய உரிமையைப் பாதுகாக்கிறேன்.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : ஒரு இறுதியான முடிவைச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அழைப்பிதழை என்னிடம் கொடுங்கள். அதை அவை முன்னவரிடம் கொடுத்து சம்பந்தப் பட்டவர்களிடம் விசாரித்து அவர் பதில் சொல்லுவார்.

(இ) இந்திய மருத்துவக் கவுன்சில் அனுமதி இல்லாமல் தனியார் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுவது.

திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே டில்லியில் நடைபெற்ற மாநிலங்கள் அமைச்சர் கூட்டத்தில் சுகாதார இராஜாங்க மந்திரி அவர்கள் ஒரு கேள்விக்கு எழுத்து மூலமாக பதில் கொடுக்கும் போது தமிழகத்திலே தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருக் கிற மூன்று மருத்துவக் கல்லூரிகள் இந்திய மருத்துவக் கவுன் சிலின் அனுமதி பெறாமலும், மத்திய அரசின் அனுமதியைப் பெறாமலும்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடம் எழுதிக் கொடுங்கள். நாளைக்கு அது பற்றி நீங்கள் பேசலாம். இப்போது என்ன பேசுகிறீர்கள் என்று தெரியவில்லை. நீங்கள் ஓர் 'அட்ஜெர்ன்மென்ட் மோஷன்' கொடுத்திருக்கிறீர்கள். அது என் ஆய்வில் உள்ளது. அதை எந்த விதத்தில் எடுக்கலாம் என்று யோசித்துச் சொல்லுகிறேன்.

திரு. பொன் முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, இது சாதாரண விஷயம், பத்திரிகையில் வந்த விஷயம். சாதாரண மாகச் சொல்லலாம். அதைப் பற்றி 'மென்ஷன்' பண்ணலாமா இல்லையா என்பதுதான். அகில இந்திய மருத்துவக் கவுன்சிலின் அனுமதி பெறாமலும், மத்திய அரசின் அனுமதியைப் பெறா மலும் தொடங்கியிருப்பதாக இந்திய அரசினுடைய இராஜாங்க சுகாதார அமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். உண்மையிலேயே அப்படி நடந்திருக்கிறதா ? அப்படி நடந்து கொண்டிருந்தால் இந்த அரசு என்ன நடவடிக்கையை எடுக்க விருக்கிறது என்ற விளக்கத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து எதிர்பார்த்து அமைகிறேன்.





(பதில் இல்லை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'அட்ஜெர்ன்மென்ட் மோஷன்' பற்றி இப்போது சொல்லியாகிவிட்டது. அமைச்சரின் ரிப்ளை இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டரை எழுப்புகிறேன். ஒரே ஒரு விஷயம். இந்தச் சபையும், மக்களும் தெரிந்துகொள்வதற்காக ஒரு பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையைக் குறித்து, ஓர் உறுப்பினர் இப்படி ஒரு தவறு நடைபெற்றிருக்கிறது. அது அரசாங்கத்திற்குத் தெரியுமா, தெரியாதா என்று கேட்கிற போது, சம்பந்தப்பட்ட அமைச்சர் இந்த அவையில் இல்லை யென்றால் பரவாயில்லை. அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எழுந்து விவரம் சொல்லுகிறேன் என்று சொல்லலாம் அல்லவா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்காகத்தான் சொன் னேன், என்னுடைய ஆய்வில் இருக்கிறது என்று. அவருக்கு நோட்டீஸ் கொடுத்தால் பிறகு அவர் விளக்க வர முடியும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : "பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். முத்துராமலிங்கம் எழுப்பியுள்ள பிரச்சினையில் தெளிவு பெற விரும்புவதில் தவறில்லை. குறுகியகால கேள்வியாகக் கேட்டால் முழு விவரத்தையும் சொல்லலாம். அல்லது கேள்வி யாகக் கேட்கலாம். கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலம் கொண்டு வரலாம். விவாதத்தின் மீது சொன்னால் பதில் சொல்லலாம். பொது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்து, நேற்று நடந்ததாக இருந்து உடனடியாகச் சொல்லக் கூடிய நிலைமையில் இருந்தால் குறுகியகாலக் கேள்வியாக மாண்புமிகு உறுப்பினர் கேட்டு அமைச்சர்கள் பதில் சொல்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கலாம். விளக்கம் பெற விரும்பு வதில் தவறில்லை. ஆனால் அதற்கான ஒரு முறையைக் கையாள வேண்டுமென்றுதான் மாண்புமிகு தலைவர் அவர்கள் கருதுகிறார்கள்.

(முற்பகல் 10-40)

(ஈ) நீக்கம் செய்வது குறித்து.

திரு. சோ. மா. இராமச்சந்திரன் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, நேற்றைய தினம் இந்தச் சபையிலே பேசிய பேச்சுக்கள் அனைத்தும் குறிப்பிலே இருக்குமென்றுதான் இந்தச் சபையிலே இருக்கிற உறுப்பினர்கள் அத்தனை பேரும் நம்பிக்கொண்டிருக்கிறோம். அவையில் நேற்றைய தினம் விவா தம் நடைபெற்றபோது, அவற்றிலே சில பகுதிகளை நீக்க

சபையினுடைய தலைவருக்கு உரிமை இருக்கிறது என்பதை யாரும் மறுக்கவில்லை. இருந்தாலும், நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேற்று பேரவைத் துணைத் தலைவர் அதை 'எக்ஸ்பஞ்ச்' பண்ணிவிட்டார். அதைப் பற்றித் திரும்பப் பேச வேண்டியதில்லை.

**திரு. சோ. மா. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, நான் சொல்வதெல்லாம் நீக்குவதற்கு அவர்களுக்கு......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குறிப்புகளை என்னிடத்திலே கொடுத்தால், ஒப்பிட்டுப் பார்த்து, தவறு இருக்கிறதா என்று பார்க்க முடியும். தவறு நேர்ந்திருந்தால் அதைத் திருத்த முடியும்.

**திரு. சோ. மா. இராமச்சந்திரன் :** இங்கே, குறிப்புகளிலே, பேசாததுபோல் இருக்கிறது. இந்தச் சபையிலே நடைபெறும் விவாதங்களின் குறிப்புகள் மாற்றப்படுமா ? சுருக்கெழுத்தாளர்கள்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு பகுதியை 'எக்ஸ்பஞ்ச்' பண்ணினால், அது குறிப்பிலிருந்து எடுக்கப்படும். இங்கே குறிப்பெடுப்பது 'வெர்பாடிம் ஸ்பீச்' தான். பேசுவது அப்படியே தான் இருக்கும் 'கலோகியல்' ஆகப் பேசினால்கூட அப்படியே இருக்கும்.

**(ஆ) அரசு விழாக்களில் உறுப்பினர்கள் அழைக்கப்படுவதும் அவர்கள் பெயர் அழைப்பிதழில அச்சடிக்கப்படுவதும் குறித்து—தொடர்ச்சி.**

**திரு. செ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. இன்றைக்கு மதுராந்தகம் வட்டத்தின் சார்பில் கூட்டுறவு வார விழா நடைபெறுகிறது. மதுராந்தகத்தில் இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். நான் மதுராந்தகம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவன். அழைப்பிதழிலே என்னுடைய பெயரைப் போடவில்லை. இன்றைக்கு மாலையிலே விழா தொடங்க இருக்கிறது. இந்த விழாவிலே கலந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கம் எனக்கில்லை. ஆனால் இந்த நேரத்திலே பேரவைத் தலைவரவர்களை ஒன்று கேட்டுக்கொள்வேன். தொடர்ந்து எதிர்க் கட்சி உறுப்பினர்களை இப்படி விலக்கி வைத்துவிட்டு விழா நடத்துவது ஆளுங்கட்சிக்கு நியாயம் தானா ?

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் சொல்லுவது நியாயம் இல்லைதான். (சிரிப்பு) ஆங்காங்கே நடைபெறுகின்ற அரசு விழாக்களில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பெயர்களையும் அழைப்பிதழில் போட வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இன்னும் ஒரு படி மேலே போய், நான் கலந்து கொள்கிற ஒவ்வொரு விழாவிலும், அந்த ஊரில் பேரூராட்சித் தலைவர் அல்லது ஊராட்சித் தலைவர் இருந்தால் அவர் பெயர், ஊராட்சி ஒன்றியத்தின் பெருந்தலைவர், அந்த ஊரின் சட்டமன்றப் பேரவை உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் பெயர்கள் அத்தனையையும் விழா அழைப்பிதழில் போடுங்கள் என்று சொல்லி, அப்படி போட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) நான் சொல்லி, போட்டிருக்கிறார்கள்.

15ஆம் தேதி செங்கற்பட்டில் நடந்த கூட்டுறவு வார விழாவிற்குப் போயிருந்தேன். 17-ஆம் தேதி திருவண்ணாமலைக்குப் போயிருந்தேன். அழைப்பிதழிலே போட்டிருந்த எம்.எல்.ஏக்களில் 2, 3 பேர்தான் வந்தார்கள். (குறுக்கீடு) போட்டும், மதிக்காமல், வராமல் இருக்கிறார்கள். அழைப்பிதழிலே போட்டிருந்தும் வரவில்லை. (குறுக்கீடு) அழைப்பிதழிலே போட வேண்டுமென்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அழைப்பிதழில் போடவில்லை என்பது எந்த அளவுக்குக் குற்றம் சாட்டுவதற்கு உரியதோ அந்த அளவுக்குப் போட்டும் வரவில்லை என்பதும் குற்றச்சாட்டுக்குரியது. அவர்களால் வர முடியவில்லை என்றால், 'ஓய்வில்லை', 'உடல் நலமில்லை' என்று சமாதானம் சொல்லலாம். அழைப்பிதழில் போட்டும், வராமல் இருக்கிறார்கள். அதற்கு என்ன செய்ய வேண்டுமென்று யோசிக்க வேண்டும்.

அழைப்பிதழில் போடாமல் இருப்பது தவறு என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். எங்கேயாவது விடுபட்டிருந்தால் அது கவனிக்கப்பட வேண்டும். பெயரை அழைப்பிதழில் போட்ட பிறகு, வர முடியவில்லை என்றால் முன்கூட்டியே எழுதலாம். எதிர்பாராத காரணங்களால் வர முடியாமல் போகலாம். வேறு நிகழ்ச்சி இருக்கலாம். அமைச்சர்களுக்குக்கூட வர முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. இதையெல்லாம் சுட்டிக்காட்டத்தான் இவற்றைச் சொல்கிறேன். இந்த அரசு மேற்கொண்டிருக்கிற முறைகளையும், நடவடிக்கைகளையும் பற்றித்தான் எடுத்துச் சொல்கிறேன். வேறல்ல. இது ஏற்கெனவே எல்லோருக்கும் சொல்லியிருக்கின்ற ஒன்றுதான்.

**திரு. செ. ஆறுமுகம் :** நான் என் பெயரைப் போடாமலே கூட்டம் நடக்கிறது என்று சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் உட்காரவும். இன்றைக்கு இது போதும். இன்று பாயின்ட் ஆஃப் ஆர்டர் அதிகமாகவே கொடுத்தாகிவிட்டது.

## 3. அறிவிப்புகள்.

### (அ) உறுப்பினர்கள் கைது செய்யப்பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

"I have been informed by the Commissioner of Police, Madras, to the effect that Thiruvalargal K. Anbazhagan, S. Balan, P. Ponnurangam, A. Selvarasan and Parithi Ilamvazhuthi, Members of the Legislative Assembly have been arrested on the afternoon of 17th November 1986 under Section 143 I.P.C. 41 Madras City Police Act, Section 2 of the Prevention of Insults to National Honour Act, 1971 read with 7 (1) (a) Criminal Law Amendment Act, when they assembled in violation of the prohibitoray orders in force in the City and burnt Part XVII of the Constitution of India pertaining to the Official Language of the Union to condemn the alleged imposition of Hindi by the Centre.

Thiruvalargal K. Anbazhagan, S. Balan and Parthi Ilamvazhuthi were remanded till 1st December 1986 and Thiruvalargal A. Selvarasan and P. Ponnurangam were remanded till 28th November 1986 and ledged in the Central Prison, Madras on 17th November 1986."

### (ஆ) அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவை—உறுப்பினர்கள் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

" அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பேரவையில் (Senate) இச்சட்டமன்றப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருக்கும் திருவாளர்கள் (1) அ. தங்கராசு, (2) ஆர். தியாகராசன், (3) பி. என். ராமச்சந்திரன் ஆகியோரின் பதவிக் காலம், 1986 டிசம்பர் மாதம் 5-ஆம் தேதியுடன் முடிவடைவதால் அப்பேரவைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து மூவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் சட்டப்படி ஒற்றை மாற்று வாக்குமூலம் இத்தேர்வு நடைபெறும்.





எனவே, வேட்பாளர்கள் நியமனத்தாட்களை 19-11-1986
புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம்
சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செய
லாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 20-11-1986 வியாழக்கிழமை காலை
11-00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்
கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 20-11-1986 வியாழக்
கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை
வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது மூன்றுக்கு மேற்படு
மாயின் 22-11-1986 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல்
1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்
கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

### (இ) கவன ஈர்ப்பு தள்ளிவைக்கப் பெறுதல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உள்ளாட்சித்
துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க திரு.
செ. செம்மலை அவர்கள் கொடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானம்
வேறு ஒரு நாள் எடுத்துக்கொள்ளப்படும்.

## 4. கவன ஈர்ப்பு.

### திருச்சி மாவட்டம், துறையூரில் கதர் வாரிய கண்டசாரி சர்க்கரை ஆலைக்குக் கரும்பு கொடுத்த விவசாயிகளின் பாக்கிகளைத் தீர்த்து வைத்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் வி. தங்க
வேலு, இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து
கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர்
மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர் துறை அமைச்
சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

(திருவாளர்கள் வி. தங்கவேலு, இரா. தாமரைக்கனி ஆகியோர்
இருப்பிடத்தில் இல்லாததால், திரு. என். எஸ். வி. சித்தன்
அது குறித்து அமைச்சரின் கவனத்தை ஈர்க்க அனுமதிக்கப்
பட்டார்.)

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, " திருச்சி மாவட்டம், துறையூரில் கதர்
வாரியத்தின் மூலம் இயங்கி வந்த கண்டசாரி சர்க்கரை ஆலைக்குக்
கரும்பு கொடுத்த விவசாயிகளுக்குப் பணம் கொடுக்கப்படாத

தால் அப்பகுதி விவசாயிகளிடம் ஏற்பட்ட நிலை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர் துறை அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திருச்சி மாவட்டம் துறையூர் கண்டசாரி சர்க்கரை உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு சங்கம் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால், 21-9-1965ல் பதிவு செய்யப்பட்டு 24-8-1965ல் பணி துவங்கியது. இச்சங்கத்தில் 432 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களின் மொத்தப் பங்குத் தொகை ரூ. 76,000 ஆகும். இச்சங்கத்திற்கு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ரூ. 1.00 இலட்சம் நடைமுறை மூலதனக் கடனாகவும், ரூ. 3.98 இலட்சம் முதலீட்டுக் கடனாகவும் வழங்கியுள்ளது.

இச்சங்கம் ஆரம்ப காலத்திலிருந்து அதாவது 24-8-1965 முதல் 11-1-1975 வரை 9 நியமன உறுப்பினர்கள் கொண்ட நிர்வாகக் குழுவினால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. இக்காலத்தில் சங்கம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கியதால் இதன் நிர்வாகக் குழு கலைக்கப்பட்டது. 12-1-1975 முதல் தனி அலுவலர் நியமிக்கப்பட்டார். எனினும் தனி அலுவலர் பொறுப்பேற்று இரண்டாண்டுகளுக்குப் பிறகு உறுப்பினர்கள் ஒத்துழைப் பின்மையால் இச்சங்கம் சரிவர இயங்கவில்லை. இதன் காரண மாக சங்க லேவாதேவிகள் நடைபெறாமல் போயிற்று. வசூலிக்கப் படவேண்டிய இனங்கள் வசூல் செய்ய இயலாத நிலையும் கொடுக்கப்பட வேண்டிய இனங்கள் கொடுக்க இயலாத நிலையும் ஏற்பட்டது.

எனவே தமிழ்நாடு கூட்டுறவு சங்க சட்டம் 1961 பிரிவு 66-ன் கீழ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரிய தலைமைச் செயல் அலுவலரின் பரிந்துரையின் படி, 19-4-1978-ல் சங்கம் கலைக்கப்பட்டு, அன்று முதல் கலைத் தல்-அலுவலர், சங்கத்தின் பொறுப்புக்களை ஏற்றார். அப்போது ரூ. 4,35,867.14 மொத்த நட்டம் சங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது. கலைத்தல் அலுவலர் பொறுப்பேற்ற பிறகு சங்கத்திற்கு வர வேண்டிய பாக்கி நிலுவைத் தொகைகளை வசூல் செய்து முன் னுரிமையாக வாரியக் கடனின் பொருட்டு அசலில் ரூ. 55,000 மும் வட்டியின் பொருட்டு ரூ. 23,000-ம் ஆக மொத்தம் ரூ. 78,000 வாரியத்திற்கு செலுத்தியுள்ளார். இன்றைய தேதியில் வாரியத்திற்கு வட்டி மற்றும் அபராத வட்டியும் சேர்த்து சங்கம் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ. 5,19,460 ஆகும்.





மேற்படி சங்கம் துவங்கிய பிறகு 1969-70-லும், [illegible] 1974-75 மற்றும் 1975-76 ஆகிய ஆண்டுகளிலும், விவசாயிகளிட மிருந்து மொத்தம் 1,938 டன் கரும்பு கொள்முதல் செய்யப் பட்டுள்ளது.

1971-72 முதல் 1973-74 ஆகிய ஆண்டுகளில் இயந்திரக் கோளாறினால் சங்கம் செயல்படவில்லை. 1976-77 மற்றும் 1977-78 ஆகிய ஆண்டுகளில் சங்கம் செயலிழந்தது. 1978 ஏப்ரல் திங்களில் கலைத்தல் அலுவலர் பொறுப்பேற்றார். சங்கத் தால் கொள்முதல் செய்யப்பட்ட கரும்பின் மதிப்பு ரூ. 1,00,982.98 ஆகும். இதில் 1969-70-ல் ரூ. 28,160.60-ம், 1975-76-ல் ரூ. 14,728.28-ம், 1976-77-ல் ரூ. 12,174.40-ம் ஆக மொத்தம் ரூ. 55,051.68, இவ்விவசாயிகளுக்குக் கொடுக்கப் பட்டு தற்போது ரூ. 45,931.30 மட்டுமே நிலுவையாக உள்ளது. பிறகு சங்கம் செயலிழந்ததால் ரொக்க ஆஸ்திகள் ஏதும் இல்லா மையால் நிலுவையைத் தீர்க்க இயலவில்லை.

இன்றைய தேதியில் கரும்பு கொடுத்த சங்க உறுப்பினர் களுக்கு ரூ. 45,931.30 கொடுக்கப்படவேண்டியுள்ளது. இவற்றின் வட்ட வாரியான நிலுவை விவரம் கீழ் வருமாறு :—

| வ.எண். | வட்டம். | சங்க உறுப்பினர்கள் (கரும்பு உற்பத்தியாளர்கள்). | ரூபாய். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | துறையூர் வட்டம் — — | 10 | 14,081.22 |
| 2 | திருச்சி வட்டம் — — | 5 | 6,104.6[illegible] |
| 3 | லால்குடி வட்டம் — .. | 5 | 12,64[illegible] |
| 4 | முசிறி வட்டம் — .. | 3 | 7,301.[illegible] |
| 5 | பெரம்பலூர் வட்டம் .. | 4 | 5,795.1[illegible] |
| | மொத்தம் ... | 27 | 45,931.30 |

மேற்படி பாக்கித் தொகையான ரூ. 45,931.30-ஐக் கொடுக்க சங்கத்தில் தற்போது ரொக்கத் தொகை ஏதுமில்லை. ஆயினும் சங்கத்திற்குச் சொந்தமான கட்டிடம் மற்றும் நிலம் ஆகியவைகளின் மதிப்பு தற்போது சுமார் ரூ. 8 இலட்சம் என மதிப்பிடப்படுகிறது. இவைகளை விற்பனை செய்து, வாரிய [illegible]

கடன்களைத், தீர்க்கவும், கரும்பு விநியோகம் செய்த சங்க உறுப்பினர்களுக்கு விவசாயிகளுக்குச் சேரவேண்டிய பாக்கிகளைத் திருப்பிக் கொடுக்கவும், தக்க துரித நடவடிக்கைகள் வாரிய அறிவுரைப்படி சங்கக் கலைத்தல் அலுவலரால் எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே கரும்பு கொடுத்த சங்க உறுப்பினர்களுக்கு (விவசாயிகளுக்கு) கொடுக்கப்பட வேண்டிய பாக்கிகள் விரைவில் தீர்க்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களாலே கொடுக்கப்பட்டு இருக்கிற இந்த விரிவான அறிக்கையிலே இந்த ஆலை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து கிட்டத்தட்ட நஷ்டத்திலே இயங்கி வந்ததாகவும் இயந்திரக் கோளாறு காரணமாகவும் இந்தக் கூட்டுறவுச் சங்கம் செயலற்று இருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் அதே நேரத்திலே 1976–77-ம் ஆண்டு முதல் விவசாயப் பெருமக்களிடம் வாங்கிய கரும்புக்காக சுமார் ரூ. 45,931.30 மட்டுமே நிலுவையாக இருக்கின்றது என்று விவர அறிக்கையிலே கூறப்பட்டிருக்கின்றது. நான் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புவது, ஏற்கெனவே கடனாளியாகப் பிறந்து, கடனாளியாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற, கரும்புக்கு அதிக விலை கேட்டுக்கொண்டிருக்கின்ற விவசாயிகளின் தொகையான ரூ. 45,931-ஐ பல ஆண்டுகளாக நிலுவையாக வைத்திருக்க காரணம் என்ன ? வாரியம் இந்தத் தொகையைக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கின்றதா ? இந்தத் தொகையை ஏதாவது ஒரு விரைவான ஏற்பாட்டின் மூலமாகக் கொடுக்க முடியுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்த அறிக்கையிலே பாக்கிகள் விரைவில் தரப்படும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த விரைவில் என்பது நம்முடைய உள்ளாட்சி மன்றத் தீர்மானம் போல இருந்துவிடக்கூடாது என்ற அளவில், எப்போது கொடுக்கமுடியும் என்று இங்கே சொல்வார்களேயானால் அது பயனுள்ளதாக இருக்குமேயொழிய வேறல்ல. அது எந்த தேதியில் கொடுக்கப்படும் என்பதனை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதனை அறிவிப்பார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10–50)

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துறையூரில் கதர் வாரியத்தின் மூலம் இயங்கி வந்த கண்டசாரி சர்க்கரை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு



சரியாக, நல்லமுறையில் இயங்காததால் அதை நல்ல முறையில் இயங்க வைப்பதற்காகப் பல முறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் தகுந்த பலன் தராததால் அது மூடப்பட வேண்டுமென்ற நிலையில் அதற்கான நடவடிக்கைகள் கூட்டுறவுச் சங்கச் சட்டத்தில் எந்த அளவு நிலைமைகள் இருக்கின்றனவோ அதற்கு ஏற்ப கையாளப்பட்டிருக்கின்றன. இதனால் விவசாயிகளுக்கு உடனடியாக தரப்பட வேண்டிய பணம் தரப்படாமல் சொத்துக்களை விற்று வழங்க வேண்டுமென்ற நிலை உருவானது. அதை விற்கக் காலதாமதம் ஆனதால்தான் ரூ. 45,931.30 கொடுக்கப்படாமல் இருந்தது. நேற்றைக்கு இதுகுறித்து என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட பிறகு இன்னும் ஒரு மாத காலத்திற்குள் அதைத் திருப்பிக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆகவே இன்னும் ஒரு மாதத்திற்குள் இந்தப் பணம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

5. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கையைக் குழுவின் தலைவராகிய நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

" 1960–61 மற்றும் 1962–63 முதல் 1969–70 வரையிலான ஆண்டுகளுக்குரிய தமிழ்நாடு அரசுக் கணக்குகள் குறித்த பொது நிறுவனங்கள் தொடர்பான பத்திகள் பற்றிய குழுவின் (1982–83) இருபத்தி மூன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் முப்பத்தி நான்காவது அறிக்கை."

6. அரசினர் தீர்மானங்கள்.

(அ) பாரதியார் பல்கலைக் கழகப் பேரவை—உறுப்பினர் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 நவம்பர் 18

" கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு (Senate) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து கீழ்க்கண்ட இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

1. திரு. மா. சின்னராசு
2. திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(ஆ) பாரதிதாசன் பல்கலைக் கழகப் பேரவை—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

" திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு (Senate) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து கீழ்க்கண்ட இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்:—

1. திரு. க. பாலசுப்பிரமணியன்
2. திரு. கி. கிருஷ்ணமூர்த்தி "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

(இ) காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகப் பேரவை—உறுப்பினர் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

" காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு (Senate) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

திரு. வ. பாலகிருஷ்ணன் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.



7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். "

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அகிரிகல்சரல் மார்க்கெட்டிங் சொசைட்டிகளுக்கு நடத்தப்பட வேண்டிய தேர்தல்களை நடத்தாமல் மீண்டும் ஒரு வருடத்திற்குத் தேர்தலைத் தள்ளிப் போடுவதற்கான ஒரு திருத்தச் சட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்கு முன்னால் இந்தப் பொறுப்பிலே இருந்த மாண்புமிகு அமைச்சரவர்கள் சென்ற சட்டமன்றக் கூட்டத்திலே, இப்படிப்பட்ட சட்டம் கொண்டு வந்து, விரைவிலே தேர்தல் நடத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இப்பொழுது என்ன சொல்லப்படுகிறது ? இந்த ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ்-ஐப் படித்துப் பார்த்தால், ஒரு தேர்தலே நடத்த வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்பதைப்பற்றிக் கூட இன்றைக்குச் சந்தேகம் ஏற்படுகிறது. அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது ?

"........ The various aspects of the proposed legislation are being examined in greater detail, having regard to the various provisions of the Model Agricultural Produce Markets Bill drawn by the Working Group constituted by the Government of India for the purpose and sent to this Government for consideration ........".

போன தடவை சொல்லப்பட்ட காரணம் இது அல்ல. ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு காரணத்தைக் கண்டு பிடித்து இப்படி இந்தக் தேர்தலைத் தள்ளிப் போடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா ?

இந்த பில்லின் அடிப்படையில் உள்ள திட்டம் ஒரு வருட காலத்திற்குள்ளே நிறைவேற்றப்படும் என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லாத நிலையிலே இன்றைக்கு விஷயங்கள் அமைந்து கொண்டு இருக்கின்றன. ஆகவே......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜ். அப்போஸ் பண்ணுகிறீர்கள். கன்சிடரேஷன் ஸ்டேஜிலே பேசுவதையெல்லாம் இப்பொழுது பேசினால் என்ன ஆவது ?

Thiru J. HEMACHANDRAN : Sir, I, am not going beyond that. I am not going into the details. I am only relying on the 'Statement of Objects and Reasons'.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைத்தான் பேசுகிறீர்கள். பேசியதை வேண்டுமானால் நீங்கள் படித்துப் பாருங்கள். இதற்கென்று ஒரு முறை இருக்கிறது. இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜிலே அப்போஸ் பண்ணுவது என்றால், I oppose the Bill என்று மட்டும் சொல்ல வேண்டும். அவ்வளவுதான். சுருக்கமாக முடியுங்கள். கன்சிடரேஷன் ஸ்டேஜிலே எவ்வளவு வேண்டுமானாலும் பேசுங்கள்.

Thiru J. HEMACHANDRAN : Apart from the 'Statement of Objects and Reasons' there is no guarantee that a legislation would be enacted by the Government of India within a year. In that circumstances, how can a Bill be introduced saying that after one year alone election will be conducted ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் சொல்வதெல்லாம் மெரிட்டிலேதான் வரும். அதுவெல்லாம் கன்சிடரேஷன் டைமிலே தான் வரும். அப்போஸ் பண்ணுகின்ற டைமிலே 'Un–Constitutional' ஆக இருக்கிறது என்று அதை மட்டும்தான் சொல்ல முடியும். பாராளுமன்ற நடவடிக்கைக் குறிப்புகளைக் கூட எடுத்துப் பாருங்கள். ஒரே வரியிலே சொல்கிறார்கள். 'I. oppose the Bill because it is



Un–Constitutional' என்று அவ்வளவுதான். உட்கார்ந்து விடுகிறார்கள். கன்சிடரேஷன் டைமிலே பேசுங்கள். உங்களைப் பேச வேண்டாமென்று சொல்லவில்லை. இன்ட்ரொடக்ஷன் நேரத்திலே, அப்போஸ் பண்ணுகிறேன் என்பதற்காக ஒருமுறை பேசி, பிறகு கன்சிடரேஷனிலே ஒரு முறை பேசுவது என்றால் காலம் ஆகி விடும். அதற்காகத்தான் சொல்கிறேன். நீங்களே கன்சிடரேஷனிலே பேசுங்கள்.

Thiru J. HEMACHANDRAN : Sir, what I say is that according to the Statement of Objects and Reasons there is no guarantee that the Government has got any intention to conduct an election. The Government can conduct an election on the basis of the present legislation and the Government has got powers to bring in any legislation at any time. When the Central Model Agricultural Produce Markets Bill is studied in depth and a final decision is arrived this Government can very well bring in another legislation and conduct election on the basis of the newly formed legislation. But, for the time being the Government can very well conduct elections on the basis of the existing legislation.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண்மை விளை பொருள் சந்தை அங்கத்தினர்களுக்கு ஓராண்டு நீடிக்கக் கூடிய சட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். நான் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம், 1978 ஆம் ஆண்டிலிருந்து எட்டாண்டுக் காலம் ஒரு ஆண்டு, ஒரு ஆண்டாக தனி அலுவலர் காலத்தை நீடித்தே வருவது தவிர, இந்த எட்டாண்டுக் காலத்தில் தேர்தல் நடத்த விரும்பியிருந்தால் எப்படியும் தேர்தல் நடத்தியிருக்க முடியும். ஆனால் விரிவான சட்டம் செய்வதற்காக பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது, அதனால் கருதியுள்ள சட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுப்பதற்கு இன்னும் சில காலம் ஆகும் என்று இப்படி ஒவ்வொரு தடவையும் காரணம் சொல்லி வருவதால் இந்த நிர்வாகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாததால், என்னென்ன விளைவுகள் ஒவ்வொரு அமைப்பிலும் உருவாகி வருகின்றன என்பது அமைச்சருக்குத் தெரியும். அந்த அடிப்படை இருந்தும் கூட மேலும் ஓராண்டுக் காலத்திற்கு இந்தப் பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டும் என்று கேட்பது

நியாயம் அல்ல. அந்த அடிப்படையில் ஆரம்பத்திலேயே இந்தச் சட்ட முன்வடிவைத் திரும்பப் பெற்றுக் கொண்டு தேர்தலுக்குத் தேதி அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, இப்பேர்ப்பட்ட பில்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக நான் கடுமையாக எதிர்த்து அமர்கிறேன்.

(முற்பகல் 11-00)

திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண் விளை பொருள் சந்தைகள் இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை ஜனதா கட்சி ஆரம்பத்திலேயே எதிர்க்கிறது. இந்தச் சட்டத்தைச் சென்ற தடவை கொண்டு வந்த அமைச்சர் அவர்கள் அடுத்த தடவை, சட்டமன்றம் கூடும்போது தேர்தல் நடத்தப் பட்டிருக்கும் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். மறுபடியும் சட்டத் திருத்தம் வந்திருக்கிறது. இந்தச் சட்டமுன்வடிவை அரசு வாபஸ் பெற்றுக் கொண்டு, தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க அவைத்துணைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே இந்த மசோதாவை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.



(ஆ) பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) தமிழ்ப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

[1986 நவம்பர் 18

(ஈ) ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1886.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப் படுத்தல்) தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்தல்) 1986 ஆம் ஆண்டு திருத்தச் சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(உ) சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலைகள் (கையகப்படுத்துதல் மற்றும் உரிமை மாற்றம் செய்தல், சட்ட முன்வடிவு), 1986,

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலைகள் (கையகப்படுத்துதல் மற்றும் உரிமை மாற்றம் செய்தல்) சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.



1986 நவம்பர் 18]

(ஊ) பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(எ) சென்னை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986 (விவாதம்)—தொடர்ச்சி).

திரு. எ. தெய்வநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சித் தேர்தலை நடத்த வேண்டுமென்று நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொண்டு, அது பற்றி சில கருத்துக்களை இந்த மாமன்றத்தின் முன் வைக்க விழைகிறேன்.

எங்களைப் பொறுத்தமட்டில், மதுரை மாநகரம் சீரும் சிறப்பு மாக, கலைப் பொக்கிஷமாக விளங்குகின்ற ஒரு பெரிய நகரமாக இருக்கிறது. சென்னை மாநகரைப் பொறுத்த மட்டில் பல ஆண்டுகளாகத் தேர்தல் நடத்தப்படாமல் தனி அதிகாரியின் அதிகாரத்திற்குள்ளே இருந்து கொண்டிருக்கிறது. அந்தப் போலவே கோவை மாநகரும் தனி அதிகாரியின் அதிகாரத்தில் இருந்து கொண்டிருக்கிறது.

எங்களுடைய மதுரை மாநகரம் மாநகராட்சியாக்கப்பட்டு, 4 மேயர்களை இடையிலே ஒரு தேர்தலையும் சந்தித்து விட்டு, ஒரு மாநகராட்சியாக விளங்கியது. இப்படி யும் கண்டிருக்கிற தருணத்தில் நல்ல பல திட்டங்களைச் செயல் படுத்து பட்ட வோம் என்று மக்களிடம் கூறினோம். இன்றைக்கு அந்தத் திட்டங்கள் எல்லாம் செயலிழந்து கிடக்கின்றன.

[திரு. எ. தெய்வநாயகம்] [1986 நவம்பர் 18

இன்றைக்கு மதுரை மாநகரத்திலே உலகத் தமிழ் சங்கத்தை ஸ்தாபித்து, அதனைச் சிறப்பாகச் செயல்படுத்த வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்களால் சமீபத்திலே கால்கோள் விழா எல்லாம் நடத்தப்பட்டது. அது எல்லோரும் அறிந்த விஷயம். இப்படி கால்கோள் விழா நடத்தி, மதுரை மாநகரி னுடைய சிறப்புகளை எல்லாம் உயர்த்த வேண்டுமென்ற எண் ணத்தோடு செய்யப்படுகின்ற காரியங்களைப் பார்த்தால் அந்தச் சிறப்புகள் எல்லாம் சீரழிக்கப்பட்டுவிடுமோ என்று நாங்கள் அஞ்சுகிறோம். காரணம் என்னவென்றால் பல சாலைகள் அங்கே பழுதடைந்திருக்கின்றன. சாலைகளைச் செப்பனிட வேண்டுமென்று தனி அதிகாரிகளை அணுகினால் அதற்கான பண வசதி இல்லை என்ற குறையைச் சொல்கிறார்கள். சாலை களைச் செப்பனிடுவதற்கு ரூ. 3 கோடிக்கான திட்டத்தை நாங்கள் வரையறை செய்து அரசுக்கு அனுப்பியுள்ளோம் ; அனுப்பி 3 மாதங்கள் ஆகின்றன ; எந்தவிதமான பதிலும் வரவில்லை என்று எங்களிடம் கூறுகிறார்கள். அது உண்மையா, பொய்யா என்பது எங்களுக்குத் தெரியாது. அப்படி அதிகாரிகள் கூறுகின்ற காரணத்தால், அதை மக்களிடம் கூறுவதற்கு எங்களுடைய சக்திகளைப் பயன்படுத்தினால் மக்கள் அதை பொய்ப் பிரச் சாரமாகக் கருதுகிறார்கள். மக்கள் மன்றம் அங்கே இருக்கு மானால் இப்படிப்பட்ட குறைபாடுகளை நிவர்த்திப்பதற்கு, மக்களுடைய பிரதிநிதிகள் அவ்வப்போது வலியுறுத்திச் சொல் வதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆக, இன்றைக்குச் சாலைகள் பூராவும் பழுதடைந்து, மோசமான நிலையில் இருக்கின்றன.

இப்படிப்பட்ட நிலையில் பழுதடைந்த சாலைகளைப் பழுது பார்க்க முயற்சிகளைச் செய்யும் போது யாருடைய கட்டுப் பாட்டிலே அந்தச் சாலைகள் வருகின்றன என்பதிலே சர்ச்சை வருகிறது. அது ஹைவேஸுக்குச் சொந்தமான சாலையா அல்லது மாநகராட்சிக்குச் சொந்தமான சாலையா என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லுங்கள் என்கிறார்கள். ஆனால் சாலைகள் எல்லாம் மாநகராட்சியின் பிடியிலே தான் இருக்கின்றன. குறிப் பிட்ட சாலை யாருக்குச் சொந்தமானது என்று குறிப்பிட்டுக் கூறினால் எங்களுக்குச் சம்பந்தம் இல்லை என்று மாநகராட்சி அதிகாரிகள் கூறுகிறார்கள். ஹைவேஸ் டிபார்ட்மென்டைக் கேட்டால் அவர்கள் எங்களுக்குச் சம்பந்தம் இல்லை என்று சொல்லுகிறார்கள். இப்படிப் பல்வேறு காரியங்கள் செய்யப் படாமல், கருத்துக்களை மோதவிட்டு, அலைக்கழிக்கிறார்கள்.

அதிலும் குறிப்பாக மதுரை மாநகரில் எல்லீஸ் நகர் ஒன்று இருக்கிறது. அங்கே கிட்டத்தட்ட 2,000 குடும்பங்கள் இருக் கின்றன. அங்கே தண்ணீர் தேங்கினால் அந்தத் தண்ணீர் வெளியே செல்வதற்கு இடமில்லை. அதற்குப் பக்கத்திலே மதுரை கல்லூரி என்று ஒரு கல்லூரி இருக்கிறது. அது மிதக்கும்



1986 நவம்பர் 18] [திரு. எ. தெய்வநாயகம்]

கல்லூரியாகக் காட்சியளிக்கிறது. மழைக்காலத்தில் என்று இல்லாமல் எல்லாக் காலங்களிலும் அந்தக் கல்லூரி மிதந்து கொண்டே இருக்கிறது. அதனால் அங்கே மாணவர்கள் பஸ் மறியல் செய்கிறார்கள் ; உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அப்போது அதிகாரிகள் வந்து ஆலோசனைகள் சொல்கிறார்கள். ஆனால் நடைமுறையில் ஒன்றும் நடக்கவில்லை. இப்படிப்பட்ட நிலைமை அங்கே இருந்து கொண்டிருக்கிறது.

அது மட்டுமல்ல; புகைவண்டி நிலையம், பேருந்து நிலையம், டவுன் ஹால் ரோடு 1, மதுரையில் மையப் பகுதி ஆகியவை தண்ணீரால் சூழப்பட்டிருக்கின்றன. அந்தத் தண்ணீர் வெளியே செல்வதற்கான மார்க்கத்தை இது வரையில் வகைப்படுத்த வில்லை.

அது மட்டுமல்ல. அங்கே மூன்று நதிகள் ஓடிக்கொண்டிருக் கின்றன. அவை ஓடிக் கொண்டிருக்கின்றன என்று சொல்வதை விட அங்கே அந்த நதிகளே இல்லாமல் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு இருக்கின்றன என்று சொல்லலாம். கிருதமால் நதி, செட்ட கத்தி வாய்க்கால், அரும்பாநதி வாய்க்கால் என்பவை அந்த மூன்று நதிகள். அவற்றிலே, ஆக்கிரமிப்பின் காரணமாக, தண் ணீர் தேங்கி நிற்கிறது; தண்ணீர் ஓடாமல் தேங்கி தெருக்களிலே ஓடுகிறது. ஆக்கிரமிப்புகளை அகற்றி, தேங்கி நிற்கின்ற நதி நீரை அகற்ற வழிவகை இல்லை. அந்த நீர் விவசாயத்திற்கும் பயன்படவில்லை. ஆகவே அந்த நதிகளை எல்லாம் அகற்றி விட்டு, அவற்றை இல்லாமல் செய்தால்கூட நல்லது. அந்த நதிகளில் தண்ணீர் தேங்காமல் இருக்க ஏதாவது செய்ய வேண்டு மென்று சொன்னால் அது பி.டபிள்யூ.டி. செய்ய வேண்டிய வேலை என்று சொல்கிறார்கள், பொறுப்பைத் தட்டிக்கழிக் கிறார்கள்.

[முற்பகல் 11-10.]

மேலும், மதுரை மாநகரில் இப்படிப்பட்ட பல்வேறு பணி களைச் செய்வதற்கு உலக வங்கியின் மூலம் ரூ. 84 கோடி வர விருக்கிறது என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். ஆய்வுக் குழுவும் ஆய்வு செய்துவிட்டது. அது வந்தால்தான் இந்த ரோடுகளை எல்லாம் செப்பனிட முடியும், இந்த வசதிகளை எல்லாம் செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். நாங்கள் சுரங்கப் பாதை கட்டப் போகிறோம், பாலம் கட்டப் போகிறோம் என்றெல் லாம் ஆறுதல் வார்த்தை எங்களுக்குச் சொல்கிறார்கள். ஆனால் அவை மக்களுக்குப் பயன்படுகிற வகையில் நடைமுறைக்கு வருமா என்ற ஐயப்பாட்டை நாங்கள் கொண்டிருக்கிறோம்.

[திரு. எ. தெய்வநாயகம்] [1986 நவம்பர் 18

அங்கே சுகாதாரக் கேடு அதிகமாகிக் கொண்டிருக்கிறது. குப்பை கூளங்கள் ஆங்காங்கே தெருவில் குவிந்து கொண்டிருக் கின்றன. அவற்றை அகற்றுவது பற்றி டிவிஷன் ஆஃபீஸிலே சொன்னால் வாகன வசதி இல்லை என்று சொல்கிறார்கள். வாகனங்களைச் செப்பனிடுவதற்காக என்று ஒர்க்ஷாப் இருக் கிறதே தவிர வாகனங்களைச் செம்மைப்படுத்துவதற்கான எந்தவிதமான முயற்சியும் அங்கே எடுக்கப்படவில்லை. அந்த ஒர்க்ஷாப்ஸ் அத்தனையும் மூடிக் கிடக்கின்றன. அதுபற்றி அதிகாரிகளிடத்தில் கேட்டால் ஒர்க்ஷாப்பில் உள்ள மெஷினரிஸ் எல்லாம் பழுதடைந்து இருக்கின்றன, அவற்றைத் திருத்தி அமைக்க பல கோடி ரூபாய் வேண்டும் என்று சொல்கிறார்கள். அந்த ஒர்க்ஷாப் இயங்காத காரணத்தால் பழுதடைந்த வாகனங்களைக் கொண்டு போய் தனியாரிடத்திலே செப்பனிடு வதற்காகக் கொடுக்கிறார்கள். அதனால் சரியான நேரத்தில் உபயோகிப்பதற்குரிய வகையில் அந்த இயந்திரங்கள் அதிகாரி களின் கைக்கு சிக்குவதில்லை.

இப்படிப்பட்ட இடர்ப்பாடுகளை எல்லாம் களைய வேண்டும் என்று நாங்கள் போராடிக் கொண்டு இருக்கிறோம். குப்பை களை அகற்றுவதைப் பொறுத்த வரையில் வாரத்தில் இரண்டு நாட்கள் வந்து ஒட்டுமொத்தமாகக் குப்பைகளை அப்புறப் படுத்துகிறார்கள். இதனால் பலவிதமான இடைஞ்சல்கள் ஏற் படுகின்றன. வியாதிகள் பரவுவதற்கான மூலகாரணமாக அது அமைகின்றது. இப்படி துர்நாற்றத்தை உற்பத்தி பண்ணக் கூடிய அளவுக்கு நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமையைப் போக்குகின்ற வகையில் மக்களுக்கு உதவ நாம் பக்கபலமாக இருக்க வேண்டும் என்ற வகையில் அவர்களிடத்தில் எடுத்துச் சொல்வதற்கு மக்கள் பிரதிநிதிகள் வேண்டும் என்பது தான் எங்களுடைய குறிக்கோள்.

குடிதண்ணீர் வசதி மிகவும் மோசம். குடிநீர் வடிகால் வாரியத் தால் பல ஆழ்துளைக் குழாய் கிணறுகள் தோண்டப்பட்டு இருக்கின்றன. ஆனால் அதிலே இருந்து சப்ளை செய்வதற்கான குழாய் வசதி இல்லை என்று சொல்கிறார்கள். போரிங் போட்டு விட்டோம், ஆனால் சப்ளை செய்கின்ற உரிமை மாநகராட்சிக் குத்தான் உள்ளது என்று சொல்கிறார்கள். பைப் எங்கள் கை வசத்தில் இல்லை என்று சொல்கிறார்கள். இப்படி பல காரணங்களைச் சொல்லித் தப்பித்துக் கொள்கிறார்கள். குடிநீர் வடிகால் வாரியம் செய்ய வேண்டிய வேலையை மாநகராட்சி செய்ய முடியாது என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் தவிர்க்க வேண்டும் என்றால் மாநகராட் சிக்குத் தேர்தல் நடத்த வேண்டும். மக்கள் பிரதிநிதி வந் தால்தான் அதைச் செம்மையாக நடத்த முடியும்.



1986 நவம்பர் 18] [திரு. எ. தெய்வநாயகம்]

அது மட்டுமல்ல. அங்கே குடிதண்ணீர் வசதி, சுகாதார வசதி, ரோடு வசதி போன்றவை இருந்தால்தான் அங்கே வரு கின்ற பல வாகனங்கள் பணிமனைகளில் தங்குவதற்கான சூழ்நிலை உருவாகும். அந்தப் பணிமனைகளில் வாகனங்கள் நிற்கும் இடங் களைச் சுற்றித் தண்ணீர் சூழ்ந்து நிற்கிறது. அந்தத் தண் ணீரை வடிப்பதற்கான சாக்கடை வசதியைக் குடிநீர் வடிகால் வாரியம் செய்ய வேண்டுமென்றால் உலக வங்கியிலே இருந்து எங்களுக்குப் பணம் வரப்போகிறது என்று சொல்கிறார்கள். உலக வங்கியிலேயிருந்து பணம் வருவதற்கான அந்தக் கோப்புகள் பொறுத்தவரையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்து, மோசமான நிலைமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து நல்ல நிலைமையை உருவாக்க ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. மதுரை மாநகராட்சியைப் பொறுத்த வரையில் அங்கே வீட்டு வரி, சொத்து வரி விதிப்பதில் சில முரண் பாடுகள் இருக்கின்றன. எங்களுடைய ஆட்சிக் காலத்தில் சொத்து வரி விதிப்பதைப் பொறுத்தவரையில் ஒரு அறிக்கை யாகத் தந்து 40 விழுக்காடு, 30 விழுக்காடு என்று நடப்பு வரியிலே சேர்த்து வசூல் செய்யலாம் என்று சொல்வார்கள். அதாவது 15 நாட்களுக்கு அல்லது ஒரு வாரத்திற்கு முன்பாகவே அவ்வாறு அறிவிப்பு வரும். ஆனால் இப்போதெல்லாம் திடீ ரென்று இரண்டு மடங்கு, மூன்று மடங்கு என்று சொத்து வரியை விதித்து வரி செலுத்துவதற்கே ஒரு இக்கட்டான சூழ் நிலையை உருவாக்குகிறார்கள். இதைப் பொறுத்த வரையில் ஒரு வரையறையை ஏற்படுத்தி அதற்கான சட்டத்தை இயற்றித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. சொத்து வரி, குழாய்த் தண்ணீர் வரி போன்றவற்றைப் பொறுத்தவரையில் மூன்று, நான்கு பீரிய டாக வசூல் செய்யாமல் ஒட்டுமொத்தமாக வசூல் செய்கிறார் கள். சரியான வகையில் உயர்ந்த அதிகாரிகள் செயல்படு கிறார்கள். ஆனால் கீழ்மட்ட அதிகாரிகள் இதற்குச் செவி சாய்ப்பதாகத் தெரியவில்லை. மேல்மட்ட அதிகாரிகளைப் பொறுத்த வரையில் உத்தரவு வழங்கி விட்டோம், ஆனால் கீழ் மட்ட அதிகாரிகள் தான் இவ்வாறு ஒட்டுமொத்தமாக வசூல் செய்கிறார்கள் என்று குறை சொல்கிறார்கள். ஆகவே உயர் மட்ட அதிகாரிகளுக்கும் கீழ்மட்ட அதிகாரிகளுக்கும் இடையே ஒற்றுமை மனப்பான்மை இல்லை என்றுதான் நான் கருது கிறேன். இதை எல்லாம் போக்க வேண்டும் என்றால் மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தூண்டி னால்தான் மக்கள் மன்றம் நல்ல மன்றமாக அமைய ஒரு சந்தர்ப்பம் இருக்கும். எனவே மக்களாட்சிக்கு உதவுகின்ற வகையில் மக்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க தேர் தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று கேட்டு நான் விடை பெறுகிறேன்.

[1986 நவம்பர் 18

*திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, மதுரை. கோவை, சென்னை மாநகராட்சிகளுடைய
தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிப்புச் செய்யும் சட்
டத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே எதிர்க்
கிறேன். இந்தச் சட்டத்தை கடந்த 10 ஆண்டுக் காலமாகக்
கொண்டு வருவதும், அதை எதிர்ப்பதும் இந்தச் சட்டமன்றத்
திற்கு வாடிக்கையான ஒரு காரியமாக இருந்து வருகிறது. பல்
வேறு கட்சியைச் சார்ந்தவர்களும், எங்களுடைய கட்சியைச்
சார்ந்தவர்களும், மிகத் தெளிவாக தனி அதிகாரிகளுடைய ஆட்சி
யின் கொடுமைகளைப் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.
கோவையைப் பொறுத்த வரையில் என்னுடைய கருத்தையும்,
கோவை மாநகராட்சியினுடைய நிலைமைகளைப் பற்றியும்
எடுத்துச் சொல்ல நான் விரும்புகிறேன்.

தற்போது உள்ளாட்சித் துறைக்கு அமைச்சராக புதியதாக,
சாதனை புரிந்த, நம்முடைய மாண்புமிகு திரு கே. ஏ. கே. அவர்
கள் பொறுப்பு ஏற்றிருக்கிறார்கள். ஏற்கெனவே இருந்த
அமைச்சர்கள் பல்வேறு கட்டங்களில் இந்தத் தேர்தல்களை
எல்லாம் தள்ளி வைத்தாலும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர்
திரு. ப.உ.ச. அவர்கள், இந்த ஊராட்சி மன்றத் தேர்தல்
களையும், ஒன்றியத் தேர்தல்களையும் நடத்தினார்கள். ஆனால்
அவர் அப்படித் தேர்தலை நடத்திய காரணத்தினாலோ என்
னவோ இன்றையதினம் அவரை உள்ளாட்சித் துறையிலிருந்து
நீக்கியிருக்கிறார்கள். எனவே நம்முடைய புதிய உள்ளாட்சித்
துறை அமைச்சர் அவர்கள், இந்த மாநகராட்சித் தேர்தலை
நடத்துவாரா என்பது ஐயப்பாடாக இருக்கிறது. அவரும் நடத்த
வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் தேர்தல்களை நடத்தாத காரணத்தால் தனி அதிகாரி
களுடைய நிர்வாகத்தின் கீழ் நடக்கின்ற மாநகராட்சிகளில் முறை
யாக நிர்வாகம் நடத்தப்படுவதில்லை என்பது கண்கூடாகத்
தெரிகிறது. இன்றையதினம் பல்வேறு வசதிகள், வாய்ப்புகள்
மக்களுக்குக் கிடைக்காமல் இருக்கின்றன. பாதைகள் இல்லை,
விளக்குகள் இல்லை என்ற புகார்கள் பரவலாக இருக்கின்றன.
வீட்டு வரி போன்ற வரி வசூலிப்புகளில் லஞ்ச லாவண்யம் நடை
பெற்று வருகிறது. குடி தண்ணீர் விநியோகத்தைப் பொறுத்த
வரையில், எந்த அளவுக்கும் குடிநீர் விநியோகம் மற்றும் கழிவு
நீர் வடிகால் வாரியமும், மாநகராட்சியும் இணைந்து செயல்பட
முடியாத நிலைமை இருப்பதை நான் சுட்டிக் காட்ட விரும்பு
கிறேன்.

அதைப் போல, தேர்தலைக் கொண்டுவருவதைத் தள்ளி
வைப்பதற்குக் காரணமாக, வெளி மாநிலங்களுடைய சட்டங்
களை எல்லாம் ஆராய வேண்டும் என்று சொல்வது உள்ளபடியே



1986 நவம்பர் 18] [திரு. ஆ. நடராசன்]

நியாயமான ஒரு காரணமாக இல்லை, காரணம் தமிழ்நாட்டிலே
போடப்படுகிற சட்டங்களைத்தான் மற்ற மாநிலங்க
களிலே இருப்பவர்கள் வந்து பார்க்கக் கூடிய நிலைமை
கடந்த பத்தாண்டுக் காலத்திற்கு முன்பாக இருந்ததைப் பார்த்
திருக்கிறோம். எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களின்
ஆட்சிக் காலத்தில் வீட்டு வசதித் துறையில் அரிசன மக்களுக்காக
தனியாக ஒரு வாரியத்தை ஏற்படுத்தியபோது நம் நாட்டிலே
இருக்கக் கூடிய பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த அமைச்சர்
களும் வந்து பார்த்தார்கள். அதைப்போல கண் சிகிச்சை முகாம்
களையும் வந்து பார்த்தார்கள். அதைப்போல அவருடைய
ஆட்சிக் காலத்திலேதான் ஆசியாவிலேயே பெரிய பாலம்
கோவை மாநகராட்சிப் பகுதியில் கட்டப்பட்டது. அவற்றையெல்
லாம் வெளி மாநிலங்களிலே இருந்து வருபவர்கள் பார்க்கக்
கூடிய நிலைமை இருக்கிறபோது, இங்கே, இப்போது, மற்ற மா
நிலங்களுடைய சட்டத்தைப் பார்க்கப்போகிறோம் என்று
சொல்வது நியாயமானதுதானா என்பதை எண்ணிப்பார்க்க
வேண்டும்.

இது ஏதோ தேர்தலை ஒத்திப் போடுவதற்கான காரணமாக
இருக்கலாமே தவிர, தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கை
எடுக்கும்படியான காரியமாக இல்லை. அந்தக் காரியத்தில்
இனியாவது அரசு ஈடுபட வேண்டும். நம்முடைய அருமைச்
சகோதரர், உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் பேசுகிற
போது நாங்கள் ஒவ்வொரு வாக்காளரையும் போட்டோ எடுக்கச்
சொல்லியிருக்கிறோம் என்று சொன்னார்கள். இந்த போட்டோ
பிரச்னையைப் பொறுத்தமட்டில் அதைக் கொஞ்ச நாட்
கள் நாம் கைவிடுவது நல்லது. ஏற்கனவே 20 அம்சத் திட்டத்
திற்காக ஏராளமான போட்டோக்கள் எடுக்கப்பட்டதினாலே,
போட்டோ ஸ்டுடியோக்களில் போட்டோக்களின் விலை ஏறி
யிருக்கிறது. இந்த நிலையில் அடுத்த தேர்தலுக்கு வேண்டு
மானால் இந்தப் போட்டோ பிரச்னையை வைத்துக் கொள்ள
லாமே தவிர இந்தத் தேர்தலுக்கு அவசியமான காரியம் அல்ல
என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். எனவே, தேர்தலை
நடத்தாமல் ஒத்தி வைப்பதற்கான காரணங்களைக் கண்டு
பிடிப்பதைக் காட்டிலும் இந்தத் தேர்தல்களை நடத்துவதற்
கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த
நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில், பேரூர்
பகுதியைச் சார்ந்த பல்வேறு இடங்களில் குடி தண்ணீர் பிரச்னை
ஏராளமாக இருக்கிறது. இன்றைக்குக் கோவை மாநகராட்சி
யின் தனி அலுவலராக கோவை மாவட்ட ஆட்சித் தலைவர்
அவர்கள்தான் இருக்கிறார்கள். அவர்கள் பல்வேறு மாவட்ட
நிர்வாக பொறுப்புகளோடு இதையும் சேர்த்து கவனிக்க
வேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தால், அவர் எவ்வளவு
பொறுப்போடு செயல்பட்டாலும் நிர்வாகப் பிரச்னைகள் இருக்

கின்றன. அதிகாரிகளைப் பொறுத்த வரையில் அவர்கள் தேர்
தலில் நிற்கக் கூடியவர்கள் அல்லர். ஆனால் தேர்ந்து எடுக்கப்
பட்ட மக்களின் பிரதிநிதிகள் இருந்தால்தான், மக்களின் அன்
றாடப் பிரச்னைகளைக் கவனிக்க முடியும். குறிப்பாக, என்
னுடைய பேரூர் தொகுதியில் அனல் மின் காலனி, மேலாண்டி
பாளையம் போன்ற பகுதிகளில், குடி தண்ணீர் பிரச்னையும் மற்ற
பிரச்னைகளும் அதிகமாக இருக்கின்றன. அவை தீர்க்கப்பட
வேண்டும் என்று பலமுறை ஆணையாளரிடமும், மாவட்ட
ஆட்சித் தலைவரிடமும் முறையிட்டும், அவை எல்லாம் தீர்க்கப்பட
வில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதைப்போல
மேலாண்டிபாளையத்தில் ஒரு உயர்நிலைப் பள்ளி வேண்டும்
என்பதற்கு முன் மொழிவு அனுப்ப வேண்டும். 1-3/4 ஆண்டு
காலமாக மாநகராட்சி தனி அதிகாரியிடத்திலும், ஆணையாள
ரிடமும் பல முறை கேட்டுக் கொண்டும் அது நிறைவேற்றப்பட
வில்லை. இப்படிப்பட்ட நடவடிக்கைகள் தவிர்க்கப்பட வேண்
டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

அதேபோல முத்துசாமி காலனி என்கிற பகுதியில் குடி
தண்ணீர் பிரச்னை இன்னும் தீர்க்கப்படவில்லை. சொக்கம்பு
தூரில் கழிப்பிடம் 1-3/4 ஆண்டுகளாகக் கட்டப்பட்டு அரை
குறையாக நிறுத்தப்பட்டிருக்கிறது. பலமுறை அமைச்சர்களிடத்
திலும், அதிகாரிகளிடத்திலும் எடுத்துக் கூறியும் அது நிறைவேற்
றப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை மாநகரத்தில் இராமநாதபுரத்தில் பல லட்சம்
செலவு செய்து கட்டப்பட்ட மாநகராட்சி உயர்நிலைப்பள்ளிக்
கட்டிடம் இன்றையதினம் பயன்படுத்தத்தக்கதாக இல்லாமல்
மூடப்பட்டிருக்கிறது. இவைகள் எல்லாம் தனி அதிகாரியினுடைய
தவறான நிர்வாகத்தின் காரணமாக ஏற்படுகின்றன என்பதை
மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு
வருகிறேன். அதைக் கட்டிய ஒப்பந்தக்காரர்கள் மீது உங்
களால் நடவடிக்கை எடுக்க முடிவதில்லை. ஒப்பந்தக்காரர்கள்
ஆளும் கட்சிக்கு அனுசரணையாக இருக்கக்கூடியவர்கள் என்ற
காரணத்தால் எந்தக் காரியத்தையும் செய்ய முடிவதில்லை
என்பதைத் தெளிவாகச் சொல்லிக் கொள்கிறேன். இதனைக்
குற்றச்சாட்டாக கூட சொல்வதில் தவறில்லை. காரணம் உங்
களுடைய கட்சிக்காரர்களா இல்லையா என்பதைக் காட்டி
லும், அந்தக் கட்டடம் மூடப்பட்டிருப்பது எல்லோரும் அறிந்த
விஷயமென்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரு
கிறேன்.





அடுத்து கோவை மாநகரத்தில் மிகப்பெரிய கொள்ளையாக
இருப்பது மாநகராட்சியினுடைய கழிப்பிடங்களில் கட்டணம்
வசூல் செய்கிற நிலைமை. அங்கே சிறுநீர் கழிப்பதற்கு ஒரு
நபருக்கு 50 பைசா கட்டணம் வசூல் செய்கிறார்கள். மாநக
ராட்சி நிர்ணயித்து இருக்கிற கட்டணம் எவ்வளவு என்பதையும்
எழுதி வைப்பதில்லை. இந்த நிலைமைகளையெல்லாம் மாற்று
வதற்கு உடனடியாக நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர்
அவர்கள் தேர்தலை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதைப்போல
நான் தெரிவிக்க விரும்புகிறேன், கோவை, மதுரை, சென்னை
மக்களை நீங்கள் பொறுத்திருங்கள், பொறுத்திருங்கள் என்று
சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள். ஆறு மாதக்காலத்தில்
தேர்தலைக் கொண்டு வருகிறோம் என்று சொல்கிறீர்கள். தனி
அதிகாரிகளுடைய கொடுமையான நிர்வாகத்தை எதிர்க்கிறோம்.
ஆனால் அதேநேரத்தில் நீங்கள் அவசரச் சட்டத்தின் மூலம்
கால அவகாசத்தைக் கொடுத்துக் கொண்டு வருகிறீர்கள்.
பொறுத்தார் பூமியாள்வார் என்று சொல்வார்கள். நம்முடைய
மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் பொறுத்தார். இப்போது
பூமியை ஆண்டு கொண்டு இருக்கிறார். கோவை, மதுரை,
சென்னை மக்கள் எப்போது பூமியாள்வது என்பது தெரிய
வில்லை. எனவே இந்தச் சட்டத்தை எதிர்த்து அமர்கிறேன்.

*திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, நேற்றும், இன்றைய தினமும்
இந்தத் திருத்தத்தை எதிர்த்தும், ஆதரித்தும் பேசிய உறுப்பினர்
களில் ஒருசிலர் மிகக் கடுமையாகவும், ஏதோ தேர்தல் நடை
பெறாத காரணத்தால் மக்களது பணிகள் எல்லாம் ஸ்தம்பித்து
விட்டதைப் போலவும், தேர்தல் நடைபெற்ற இடங்களில் எல்லாம்
எல்லாவிதமான திட்டங்களும் நிறைவேறி விட்டதைப்போலவும்
பல குற்றச்சாட்டுகளையும், குறைகளையும் எடுத்துச் சொன்
னார்கள். தேர்தல் நடைபெற வேண்டும் என்பதில் எங்களுக்கு
எந்தவிதமான மாற்றுக் கருத்தும் கிடையாது. ஜனநாயக
முறைப்படி நடைபெற வேண்டிய தேர்தல் நடைபெற வேண்டும்.
அந்த ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற
காரணத்தால் இதில் காலதாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது.

நேற்றையதினம் கூட இங்கே பேசிய அருமைச் சகோதரர்
திரு. ரகுமான்கான் அவர்கள், பழைய படம், புதிய கதாநாயகன்
என்றார். பருவ மங்கை என்றார். எனக்குக்கூட புரியவில்லை.
அவர்கள் சொல்கிற உதாரணங்கள் பொருத்தமுடையதா, ஏற்பு
டையதா என்பதை மன்றமே முடிவு செய்யட்டும். ஆனால்
சென்னை மாநகராட்சி என்பது பருவ மங்கையல்ல. திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சியால் நடத்தை கெட்ட கணவனை

விவாகரத்து செய்யப்பட்ட மங்கையே தவிர பருவ மங்கை
யல்ல. அந்த விதவைக்கு, விவாக ரத்து செய்து விட்ட சென்னை
மாநகராட்சியென்ற மங்கைக்கு மறுவாழ்வை வழங்குகிற பணியை
தமிழகத்தினுடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களு
டைய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மையே
தவிர சென்னை மாநகராட்சி பருவ மங்கையல்ல.

அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். குழாயில் தண்
ணீர் வரவில்லையென்றால் மாநகராட்சிக்கும் அதற்கும் என்ன
சம்பந்தம்? ஒரு சட்டமன்ற உறுப்பினர், தான் தேர்ந்தெடுக்
கப்பட்ட தொகுதியில் இருக்கிற பிரச்னையை யாரிடத்தில்
சொல்ல வேண்டும், எந்த இலாக்காவில் சொல்ல வேண்டு
மென்று கூட பார்க்காமல், சட்டம் படித்த திரு. ரகுமான்கான்
அவர்கள் இங்கே பேசுவது எனக்கே கூட வருத்தமாக இருந்தது.
ஆகவே அவர்களுக்கு எந்த அளவிற்குத் தொகுதி மக்களோடு
தொடர்பு இருக்கிறது என்பதை எங்களைப்போன்றவர்களால்
உணர்ந்து கொள்ள முடிகிறது. மக்களது பிரச்னையை, மக்
களது தேவையை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.
தெரிந்துக் கொண்ட பிறகு உரியவர்களிடம் எடுத்துச் சொல்ல
வேண்டும். எடுத்துச் சொல்லிய பிறகு அந்தப் பணி நடைபெற
வில்லை என்றால் அதைக் குற்றச்சாட்டாகச் சொல்லலாம்.
நான் கேட்கிறேன், இன்றைக்கு மாநகராட்சியைப் பொறுத்த
மாத்திரம் ஒரு சிறப்பான தனி அதிகாரி, சிறப்பான ஆணையாளர்
ஆகியோர் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதியை எடுத்துக் கொண்டால், இந்த
இரண்டு ஆண்டுக் காலத்தில், மாநகராட்சிப் பணிகள் மாத்திரம்
ஏறத்தாழ 4 கோடி ரூபாய்க்கு மேல் நடைபெற்றுக் கொண்டு
இருக்கின்றன. காரணம் என்ன ? என்னைப் போன்றவர்கள்
எல்லாம் நாள்தோறும் மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி
அதிகாரி அவர்களைச் சந்தித்து, எங்களது குறைகளையும்,
எங்களது தேவைகளையும் சொல்வது உண்டு. அவர்களைப்
பலமுறை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு இந்தப் பகுதி
யிலே வெள்ளம் வந்துவிட்டது, இந்தப் பகுதியில் சாலை சரி
யில்லை, இந்தப் பகுதியிலே மழை நீர் கால்வாய் சரியில்லை,
அந்தப் பகுதி சுகாதாரக் கேடு அடைந்திருக்கிறது என்று சொன்
னால் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பொன்
விளக்கானாலும் தூண்டுகோல் தேவை. ஆகவே சொல்லுகின்ற
வாய்ப்பை நாம் பெறவேண்டும்.

அருமை நண்பர் திரு. ரகுமான்கான் அவர்கள் இதுவரையில்
அவர்கள் தொகுதி சம்பந்தப்பட்ட எத்தனை பிரச்சனைகளை
மாநகராட்சி ஆணையாளர் அவர்களிடமும் உள்ளாட்சித் துறை
அமைச்சர் அவர்களிடமும் தெரிவித்து இருக்கிறார்கள் என்ற





விவரத்தைச் சொல்வார்களானால் அது நியாயமான குற்றச்
சாட்டாக இருந்தால் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் தேர்ந்
தெடுக்கப்பட்ட ஒரு சட்டமன்ற உறுப்பினர்......

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய துணைத் தலைவர்
அவர்களே, சைதை சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுவது
போல் மாநகராட்சி 4 கோடி ரூபாய் அளவில் எந்தவிதமான
பணிகளையும் என்னுடைய சேப்பாக்கம் தொகுதியில் செய்ய
வில்லை. அதற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியாது.
ஆனால் இந்த 9 ஆண்டுக் காலமாக என்னுடைய சேப்பாக்கம்
தொகுதியிலே உள்ள 8 டிவிசனிலே உள்ள குறைபாடுகளை
அன்றாடம், போன வாரம் கூட நான் சுற்றுப் பயணம் செய்து,
தொகுதியினுடைய குறைபாடுகளை அறிந்து எழுத்து மூலமாக
அந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கொடுத்து, அப்படி
நான் தரவில்லை என்று சொல்வார்களோ என்ற காரணத்தாலே,
நான் கையெழுத்து வாங்கி வைத்திருக்கிறேன். தனி அதிகாரி
அவர்கள் இங்கே இருக்கிறார்கள், அவர்களையும் சந்தித்து,
மன்னிக்க வேண்டும், நம்முடைய கமிஷனர் அவர்களையும்
சந்தித்து, இதுபற்றி பேசியிருக்கிறேன். இதுவரைக்கும் என்
னுடைய தொகுதிக்கு அதிகாரிகள் வரவில்லை. அமைச்சர் அவர்
களிடம் தனிப்பட்ட முறையிலே கேட்டேன். விரைவிலே வந்து,
சுற்றுப் பயணம் செய்து நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லி
இருக்கிறார்கள்.

**திரு. சைதை ச. துரைசாமி :** துணைத் தலைவர் அவர்களே,
அருமைச் சகோதரர் திரு. ரகுமான்கான் அவர்கள் அப்படிச்
செய்திருந்தால் அந்த விவரங்களை மாண்புமிகு துணைத் தலை
வர் அவர்களிடம் ஒப்படைத்து, அவர் மூலமாக அமைச்சர் அவர்
களிடம் கொடுக்கலாம். எனவே அந்த விவகாரத்திற்குள் நான்
போக விரும்பவில்லை. இருந்தாலும் ஒரு பணியை ஒரு சட்ட
மன்ற உறுப்பினர் சொல்லியும் நடைபெறவில்லை என்று சொன்
னால், ஒரு மாநகராட்சி உறுப்பினர் சொல்லி, அது நடைபெற்று
விடும் என்ற அந்த நம்பிக்கையும் பொய்த்துவிடும். சட்டியில்
இருந்தால் அகப்பையிலே வரும். மேம்பாட்டுத் திட்டங்களை
நிறைவேற்றுவதற்கும் மக்களுடைய பணிகளைப் பூர்த்தி செய்
வதற்கும் நிதி தேவை. ஆகவே அந்த அடிப்படையிலே சட்ட
மன்ற உறுப்பினர்களாகிய நாம், நமது தேவைகளை உரியவர்
களிடத்திலே சொல்லும்போது அந்தப் பணிகளுக்கு நிச்சயமாகப்
பயன் உண்டு என்பதை அனுபவித்தவன் என்ற காரணத்தால்
எனது தொகுதியிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்ற
காரணத்தால் இது ஆதாரமற்ற குற்றச்சாட்டு என்று என்னால்
மறுத்துச் சொல்ல முடியும்.

அது மாத்திரம் அல்ல. என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய மதிப்பீட்டுக் குழு வட மாநிலங்களிலே சுற்றுப் பயணம் சென்றபோது, கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் பல மாநிலங்களுடைய தலைநகரங்களையும் பார்த்தோம். பார்த்தபோது அங்கே சொன்னார்கள், சென்னை எவ்வளவோ பரவாயில்லை என்று. ஆகவே இந்தியாவிலே உள்ள நகரங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது சிறப்பான ஒரு இடத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிற தமிழ்நாட்டினுடைய தலைநகரமான சென்னை மாநகரத்தின் தேவைகள் இன்னும் அதிகம் என்பதை நாங்கள் ஒத்துக் கொள்கிறோம். இன்னும் பணிகள் நமக்குத் தேவை. சுகாதார வசதிகள் தேவை. சாலை வசதிகள் தேவை. விளக்கு வசதிகள் தேவை, அடிப்படை வசதிகள் தேவை. ஆனால் அந்த அடிப்படை வசதிகளைப் பற்றிக் தெரிவிப்பதற்குத் தேர்தல் மாத்திரம் காரணமாக அமைந்துவிடாது, பொது மக்களுக்கும் அந்த உணர்வு வேண்டும்.

இன்றைக்குப் புரட்சித் தலைவர் அவர்கள் சென்னை மாநகரத்தை அழகுபடுத்த வேண்டும் என்பதற்காக ஒரு மேம்பாட்டுக் குழுவை அமைத்தார்கள். அந்தக் குழுவிலே ஒரு முடிவு எடுக்கப்பட்டது. அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இணைந்து, சென்னை மாநகரத்தைச் சீரழித்துக் கொண்டிருக்கிற கால்நடைகளை அப்புறப்படுத்தவேண்டும், அதே போல் நடைபாதைக் கடைகளை அகற்ற வேண்டும் என்று, சென்னை மாநகரத்தினுடைய தார்மீக வளர்ச்சியைப் பற்றி, அடிப்படை சுகாதார வசதியைப் பற்றி பேசி முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் அதை அவர்கள் ஏற்று கொண்டார்களா ? அந்தப் பணியை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால் அதை அரசியலாக்குகிறார்கள். ஒரு தெருவிலே 2 பேர்கள் மாடுகளை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்றால், அதனால் 100 பேர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அந்த மாடுகளினுடைய சாணங்கள் எல்லாம் கழிவு நீர் பாதையிலே செல்கிறது, மழைநீர் கால்வாயில் செல்கிறது. எப்படிச் சீர்படுத்த முடியும் ? ஆகவே அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த பிரதிநிதிகள் ஒன்று கூடி, ஒரு முடிவு எடுக்க வேண்டும். மாடு வளர்ப்போர் தேவை—அவர்கள் பாதிக்கப்படக் கூடாது. எனவே மாடு வளர்ப்போருக்குத் தனியாக நகருக்கு வெளியே இட வசதி செய்து தர வேண்டும்.

(முற்பகல் 11—30)

சென்னை நகர மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்ற கொள்கையை ஏன் ஏற்றுக் கொள்ளவில்லை ? நடைபாதைக் கடைகளையும் அத்துமீறி நடைபாதைகளில் போடப்பட்ட குடிசைகளையும் அகற்ற கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டபோது, அது அரசியல் ஆக்கப்பட்டதே, ஏன் ? மாநகராட்சிப் பணிகளை நடைபெறாமல் செய்து விடுகிறார்





கள். சென்னை மாநகரத்து மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கும் சென்னை மாநகரத்து மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்வதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அரசியலாக்கக் கூடாது என்பதை அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படி ஏற்றுப் கொண்டால் தான், சென்னை மாநகரத்தை நிச்சயமாக மிக அற்புதமாக, எழில்மிக்க நகரமாக உருவாக்கலாம். ஆக அதற்கு பொது மக்கள் மத்தியிலே கட்டுப்பாடு தேவை. மாநகராட்சி ஏற்படுத்தியிருக்கின்ற மழை நீர்க்கால்வாயை.மழை நீர்க் கால்வாயாக உபயோகிக்க வேண்டும்.

இவை எல்லாம் இன்றைக்கு முறையாக பயன்படுத்தப் படாமல், மழைநீர்க் கால்வாயில் கழிவுநீர் செல்கிறது. மழை நீர்க் கால்வாயில் குப்பைகள் கொட்டப்படுகின்றன. இந்நிலையில் சென்னை மாநகரத்தை அழகுபடுத்த எவ்வளவு முயற்சி எடுத்துக் கொண்டு நடவடிக்கைகள் எடுத்தாலும், அதனால் பயன் ஏற்படுவதில்லை. ஆகவே நான் மாண்புமிகு அமைச்சரவர்களை, பேரவையின் துணைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு கேட்டுக் கொள்வதெல்லாம், கால் நடைகளை அப்புறப்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். எனினும் சென்னை மாநகர மக்கள் பலர் கால் நடைகளை நம்பித் தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் தொல்லை தராமல், அவர்களுக்கும் பாதிப்பு இல்லாமல், கால் நடைகளை அப்புறப்படுத்த வேண்டும். அதற்கும் மேலாக நடைபாதைக் கடைகளையும், நடைபாதை குடிசைகளையும் அப்புறப்படுத்த வேண்டும்.

அடுத்து மூளைக் காய்ச்சல் நோய் வருவதற்குக் காரணமான பன்றிகள் இன்றைக்குச் சென்னை நகரில் குடிசைப் பகுதிகளில் அதிக அளவில், வளர்க்கப்படுகின்றன. அந்தப் பன்றிகளை உடனடியாக அந்தப் பகுதிகளிலிருந்து வெளியேற்ற வேண்டும். அது மட்டுமல்ல. பன்றிக் கறியை சிலர் பொது இடங்களில் விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். அதைத் தடை செய்ய வேண்டும்.

இறுதியாக மாநகராட்சி மன்றத் தேர்தலுக்கு நிச்சயமாக அடையாள அட்டைகளை வழங்கிவிட்டுத்தான் தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம், இன்றைக்கு நாள்தோறும் சென்னை மாநகரத்தில் ஆயிரக்கணக்கான புதிய குடியிருப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. ஒரு தெருவிலே வசிப்பவர்களுக்கு அடுத்த வீட்டுக்காரர் யார் என்று கூட தெரிவதில்லை. இப்படிப்பட்ட நிலையில் தேர்தல் நடைபெற்றால் முறையான தேர்தலாக இருக்காது. நான் இதனால் பாதிக்கப்பட்டவன், 1980-லே பாதிக்கப்பட்டவன், 1984-லும் பாதிக்கப்பட்டு ஆக இரண்டு முறையும் பாதிக்கப்பட்டவன், 'தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், இறுதியில் தர்மமே வெல்லும்' என்ற அடிப்படையில் வெற்றி

பெற்றேன். கள்ள வாக்குகளால் நான் பாதிக்கப்பட்டவன் அந்த அடிப்படையிலே உண்மை வாக்காளர்கள், ஜனநாயக உரிமை படைத்தவர்கள் வாக்களிக்க வேண்டும். அதற்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டும். அடையாள அட்டைகள் வழங்கப்படவில்லை என்றால், அந்தத் தேர்தலை உண்மையில் ஜனநாயக முறைப்படி நடத்த முடியாது. எனவே அடையாள அட்டைகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநகராட்சிப் பணிகள் இன்னும் சிறப்பான முறையில் நடைபெற, மாநகராட்சிப் பணியாளர்களை உடனடியாக அதிகமாக நியமிக்க வேண்டும். பெருக்குகின்ற அந்தத் துப்புரவுத் தொழிலாளர்கள், மின்சார இலாக்காவில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள், மாநகராட்சியில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் தேவைக்குக் குறைவாக இருக்கின்ற காரணத்தால், பணிகள் தாமதப்படுகின்றன. அதிகமாக அந்தப் பணியாளர்களை மாண்புமிகு அமைச்சரவர்கள் பணிகளில் அமர்த்துவதற்கு ஏற்பாடு செய்து, சென்னை நகரத்தினுடைய மக்களின் தேவைகளையும், அனைத்து வசதிகளையும், பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மூளைக் காய்ச்சல் நோய் தமிழகமெங்கும் பரவியிருக்கின்ற காரணத்தினால், இந்த அபாயம் நீங்க சென்னை நகரத்தின் அனைத்து வட்டங்களிலும் ராணுவ வேகத்தில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லி, அதே நேரத்தில் மருந்தடிக்கும் பணிகளையும் தொடங்க வேண்டுமென்றுசொல்லி, அடையாள அட்டைகளை வழங்கிய பின் தேர்தலை நடத்தலாம் என்ற கருத்தை வலியுறுத்தி அமைகிறேன் வணக்கம்.

*திரு. ஆர். செங்காளியப்பன் : மாண்புமிகு சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாநகராட்சித் தேர்தலை ஒத்தி வைக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தின் மீது சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். மாநகராட்சித் தேர்தலானது பலமுறை ஒத்திவைக்கப்பட்டு இருக்கிறது. நகராட்சித் தேர்தலானது மக்கள் மத்தியிலே எப்பொழுது நடத்துவார்களோ என்று கேள்விக்குறியாக இருந்துகொண்டு இருக்கின்ற நேரத்திலே, இதோ இந்த ஆண்டு முடிந்தவுடனே தேர்தல் நடைபெறும் என்று நாங்கள் எல்லாம் வாக்காளப் பெருமக்களிடம் சொல்லிக் கொண்டிருந்தோம். தேர்தல் வந்தால் தான் ஆங்காங்கு இருக்கக்கூடிய கவுன்சில்கள் நல்லமுறையிலே நடைபெறும். அதன் மூலம் மக்களுடன் தேர்ந்தெடுக்கப்பட்டோர் நேரடியாகத் தொடர்பு வைத்துக் கொள்ள முடியும். அதனால் பிரச்சனைகள் சுமுகமாக முடிக்கப்படும் என்ற காரணத்தினால்தான் தேர்தல் நடத்த வேண்டும் என்று நாங்கள் கூறுகின்றோம். தேர்தல் நடத்துவதின் மூலம் ஆங்காங்கு



இருக்கக்கூடிய சுகாதாரக் கேடான நிலைமையைப் போக்கவும், குடிதண்ணீர் பிரச்சனையைத் தீர்க்கவும், லைட் வசதிகளைச் செய்து கொடுக்கவும், பாதை வசதிகளை அமைக்கவும் முடியும். மன்றம் சிறப்பாக செயலாற்றுமேயானால் இது போன்ற பிரச்சினைகளைப்போக்க முடியும்.

சட்டமன்ற உறுப்பினர்களாக நாங்கள் இருக்கின்றோம். ஒவ்வொரு நாள் காலையிலும் எங்களிடத்தில் நூற்றுக்கணக்கான பேர்கள் எங்களுக்குக் குடிதண்ணீர் வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. எங்களுக்கு லைட் வசதிகள் இல்லை என்றெல்லாம் முறையிடுகின்ற நிலையை நாம் பார்க்கின்றோம். அப்படிப்பட்ட நிலைமைகளை போக்க வேண்டுமென்றால் நாம் உடனடியாகத் தேர்தலை நடத்தியாக வேண்டும். தேர்தலை நடத்துவதன் மூலம்தான் மக்களுக்கு ஒரு நம்பிக்கை ஏற்படும். அந்த நம்பிக்கையை ஊட்டக்கூடிய முறையிலே தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆக அதே நேரத்தில் இன்று தேர்தலை இன்னும் 6 மாதத்திற்கு ஒத்தி வைப்பதற்கான சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். 6 மாதங்கள் கழித்து நிச்சயமாகத் தேர்தல் நடைபெறும் என்று இந்த மன்றத்திலே அறிவித்தாலும் கூட எங்களைப் போன்றவர்களுக்கெல்லாம் ஒரு நம்பிக்கை பிறக்கும். ஆனால் என்ன செய்யப் போகிறார்கள் என்ற அச்சம் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகையினால் தேர்தல் நடைபெறுகின்ற வரையிலாவது ஆங்காங்கு இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களை, அந்த அதிகாரிகள் தீர்மானிக்கின்ற கமிட்டிகளிலே அங்கத்தினர்களாக ஆக்கிக்கொண்டு, எப்படி District Development Council நடைபெற்றுகொண்டிருக்கிறதோ அதுபோன்று, சட்டமன்ற உறுப்பினர்களையும் கூட்டத்திற்கு அழைத்து அங்கிருக்கக்கூடிய திட்டங்களை நிறைவேற்றி அதன் மூலமாக பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு ஒரு வழிவகை செய்தாலும் கூட பரவாயில்லை என்று நான் கருதுகின்றேன். அதையாவது இந்த நேரத்திலே நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

என்னுடைய தொகுதியானது மாநகராட்சியிலே புதிதாக சேர்க்கப்பட்டதாகும். அதிலே குறைபாடுகள் நிறைய இருக்கின்றன. குடிநீர்க் குழாய்கள் வைக்கப்படவில்லை. அங்கு லைட்டுகள், ஸ்விச்சுகள் எல்லாம் அமைக்கப்படவில்லை. தனி அதிகாரியிடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கின்றோம். சொன்னாலும் அதற்குண்டான நிதிநிலைமைகளை நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. எனவே அப்படிப்பட்ட மாநகராட்சிக்கு

நீங்கள் அரசாங்கத்திலிருந்து நிறைய பணம் ஒதுக்கீடு செய்து, நிதி உதவி அளிப்பதன் மூலம், புதியதாக சேர்க்கப்பட்ட பின் தங்கிய பகுதிகளுக்கெல்லாம் நல்ல வசதிகளைச் செய்து கொடுக்க முடியும்.

அது மட்டுமல்ல. முன்னாலே நகராட்சியாக இருந்தபோது நிறைய இடங்களிலே நிலம் விற்றவர்கள் எல்லாம், பிளான் சாங்ஷன் இல்லாமல், அப்ரூவல் செய்யப்படாமல் அந்த இடங்களை விற்று விட்டார்கள். அதனால் நிறைய தகராறுகள் ஏற்பட்டிருக்கின்றன. வாங்கியவர்கள் வீடு கட்டுவதற்கு லைசென்சும் கிடைப்பதில்லை. மாநகராட்சிக்குச் சென்றால் அங்கே, பிளான் அப்ரூவல் ஆகவில்லை, சாங்ஷன் ஆகவில்லை, டெவலப்மெண்ட் சார்ஜ் உடனடியாக கட்டவேண்டுமென்று சொல்கிறார்கள்.

இது மாநகராட்சியான காரணத்தினால் ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ. 3,000 டெவலப்மெண்ட் சார்ஜ் கட்ட வேண்டும் என்ற நிலையைப் பார்க்கின்றோம். அந்தப் பகுதியில் வசிக்கக்கூடியவர்கள் எல்லாம் சாதாரண பஞ்சாலைத் தொழிலாளர்கள்- டெவலப்மென்ட் சார்ஜ் ரூ. 3,000, ரூ. 4,000 என்று கட்டவேண்டுமென்றால் அவர்களால் ஒரேடியாகக் கட்ட முடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. அதற்கெல்லாம் அமைச்சர் அவர்கள் வழிவகை செய்ய வேண்டும். வீட்டிற்கு வரி கட்டுகிறார்களே, அதோடு சேர்த்து இந்த டெவலப்மெண்ட் சார்ஜையும் தவணை முறையில் கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் கட்டுவதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி இல்லையென்றால் ஏழை எளிய மக்கள், தொழிலாளர்கள் பகுதியில் வசிக்கக்கூடியவர்கள் என்றும் குடி தண்ணீர் வசதியைப் பெற முடியாது, லைட் வசதியைப் பெற முடியாது. சுகாதார வசதிகளைப் பெற முடியாது. ஆகையினால் டெவலப்மெண்ட் சார்ஜை அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் கொஞ்சம் கொஞ்சமாக வீட்டு வரியோடு சேர்த்து கட்டுவதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11–40)

அது மாத்திரமல்ல. வெளிப் பகுதியிலிருந்து, மாநகராட்சிப் பகுதிக்குள்ளே பல பள்ளங்கள் மழைக் காலங்களில் வருகின்றன. என்னுடைய தொகுதியில், சந்தனூர் பள்ளம் மற்றும் வேறு இரண்டு, மூன்று பள்ளங்கள் வந்து கொண்டு இருக்கிறது. அது நகரத்தை அழித்து விடுகிறது. வீடுகளை, ஊரை எல்லாம் அடித்துக் கொண்டு போகிறது. இதைப் பற்றி பலமுறை





அதிகாரிகளிடம் சொல்லியாகிவிட்டது. அதிலே மாநகராட்சிக்கும், அங்கு இருக்கக்கூடிய பி.டபிள்யூ.டி. டிபார்ட்மென்டிற்கும் தகராறு—இந்தப் பள்ளம் மாநகராட்சி செய்ய வேண்டியதா, அல்லது பி.டபிள்யூ.டி. செய்ய வேண்டியதா என்ற நிலை.

இந்த ஆண்டிலே கூட அங்கு சில வீடுகளை அழித்து விட்டது. அதற்குப் பிறகு அதிகாரிகளிடம் சொல்லி பள்ளிக்கூடங்களுக்கு ஜனங்களைக் கொண்டு சென்றார்கள். சாப்பாடு பொட்டலம் எல்லாம் கொடுத்து, அந்தத் தண்ணீர் வடிந்ததற்குப் பிறகு, அவர்களை வீடுகளில் குடியமர்த்தப்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம். அதற்கு அரசாங்கத்திற்கு எவ்வளவு செலவு ஆகிறது என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

அதற்கு முன்னாலேயே அதை யார் செய்தாலும், அரசாங்கத்தினுடைய பணம் என்ற முறையில் செலவழித்து, உடைப்புக்நளை எல்லாம் அடைத்து, வெள்ளத்தைத் தடுத்து அவர்களுக்கு நல்லமுறையில் உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். என்னுடைய தொகுதியிலே அவினாசி ரோட்டிலிருந்து, சத்தி ரோட்டிற்கு வரவேண்டுமென்றால், அங்கே டெவலப்மெண்ட் ரோடு ஒன்று போடப்பட்டிருக்கிறது. அங்கு எப்.சி. கோடவுனும், பெட்ரோலியம்—மத்திய அரசாங்கத்தினுடைய பெரிய ஸ்தாபனமும் இருக்கிறது. அதற்குச் சமீபத்திலேதான், 2, 3 ஆண்டுகளுக்குள்ளேதான் கட்டிடங்கள் எல்லாம் கட்டி ஸ்டோரேஜ் செய்து வைத்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலிருந்து வரக்கூடிய பஞ்சாலைத் தொழிலாளர்கள்—7, 8 மில்கள் இருக்கின்றன. அங்கு பீளமேட்டிலே 5, 6 காலேஜ்கள் இருக்கின்றன. அங்கிருந்து தொழிலாளர்களுடைய குழந்தைகள் எல்லாம் அந்த வழியாகத் தான் வரவேண்டும். கிராமங்களிலிருந்து வரக்கூடியவர்கள் எல்லாம் அந்த வழியாகத் தான் வரவேண்டும். அப்படி வந்தால், 3. 4 கிலோ மீட்டரிலே வந்து விடுவார்கள். ஆனால், இப்போது தடுக்கிறார்கள். அப்படித் தடுக்கிற காரணத்தினாலே, 12 கிலோ மீட்டர் சுற்றி வந்துதான், மறுபடியும் காலேஜிற்கும், பீளமேட்டிற்கும் வரவேண்டிய நிலை இருக்கிறது. அதை எல்லாம் மாநகராட்சி எடுத்துக் கொள்ளுமேயானால், அது ஜனங்களுக்கு சௌகரியமாக இருக்கும்.

அதற்கும் கூட, நாங்கள் மாநகராட்சி தனி அதிகாரியிடம் சொன்னோம்—நாங்கள்கூட, மக்களேகூட நிதியின் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்கிறோம், அதே நேரத்தில் மாநகராட்சி ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளட்டும்; பெட்ரோலியம், எப்.சி. கோடவுன், ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளட்டும்; மூன்றிலே ஒரு பகுதியைக் கொடுப்பதற்கு கூட நாங்கள் தயாராக

இருக்கிறோம் என்று சொன்னோம். அதற்கு அனுமதி வழங்காமல் இருக்கிறார்கள். அதையும் மாநகராட்சி கவனித்து, அந்த ரோட்டையும் எடுத்துக் கொண்டு, அந்த வழியில் நடப்பதற்குண்டான வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோயம்புத்தூரைச் சேர்ந்தவர். அவருக்குக் கோயம்புத்தூர் நிலைமை நன்றாகத் தெரியும். ரொம்பப் பின் தங்கிய தொகுதி என்னுடைய தொகுதி. புதிதாகச் சேர்க்கப்பட்டது. இதற்கு முன்னாலே உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த திரு. ப. உ. ச. அவர்கள் அங்கு வந்திருந்தார்கள். ஒரு காலேஜ், இரண்டு திருமண மண்டபங்கள் ஆகியவற்றிக்கு அவர்கள் அனுமதி வழங்கினார்கள். ஆகவே, நம்முடைய அமைச்சர் அவர்கள் கோயம்புத்தூர்காரராக இருக்கின்ற காரணத்தினாலேயும், எனக்குச் சொந்தக்காரராக இருக்கின்ற காரணத்தினாலேயும் அத்தொகுதிக்கு வந்து அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுடைய குறைகளைப் போக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு, இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவேண்டும் என்று கேட்டு, எனக்குக் கிடைத்த இந்த வாய்ப்புக்கு நன்றியைத் தெரிவித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தேர்தலை ஒத்தி வைப்பதற்காகவுள்ள மசோதாவின் மீது பல கருத்துக்கள் பலரால் எடுத்துச் சொல்லப்பட்டன. ஒன்று மட்டும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சிலர்கள் இருப்பதன் காரணமாக நிச்சயமாக அங்கே நடக்கக்கூடிய வேலையின் தரத்தை உயர்த்திக் கொள்ள முடியும். சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த வேலைகளையும் கவனித்து, அவர்களுடைய மற்ற வேலைகளையும், இடையிலே அங்கே நடக்கக்கூடிய பப்ளிக் ஒர்க்ஸ் சம்பந்தமான வேலைகளையும் காலாகாலத்திலே பரிசீலனைசெய்து அதனுடைய தரத்தை உயர்த்துவதில் சிரமம் இருக்கிறது. அந்தக் காரணத்தினாலேயும்கூட, இந்த முனிசிபாலிட்டிகளிலே, கார்ப்பரேஷனிலே தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சிலர்கள் வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம்.

அந்த முறையிலே மட்டுமல்ல. ஏற்கனவே மதுரை நகரத்தில் உள்ள நிலைமைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்களும், திரு. தெய்வநாயகம் அவர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதோடு சேர்த்து ஒரு சில தகவல்களை இந்த அவை வழியாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.





இன்று மதுரை நகரத்திலுள்ள ரோடுகளுடைய நிலை பற்றி அனைவருக்கும் நன்றாகத் தெரியும். நான் ஒரு உதாரணத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மதுரை நகரத்தினுடைய முக்கிய இடத்திலே இருக்கிறது மத்திய பேருந்து நிலையம். அந்தப் பேருந்து நிலையத்தில், அரை மணி நேரம் மழை பெய்தாலும், தண்ணீர் தேங்கி மக்கள் அங்கே நடந்து செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. அதற்குப் பின்னாலே ''திடீர் நகர்'' என்ற ஒரு பகுதி இருக்கிறது. மழைக் காலத்தில் தண்ணீர் தேங்குவதன் காரணமாக அங்கே ஏற்படுகிற நிலைமைகள் காரணமாக மக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது.

அது மட்டுமல்ல. மதுரை மாநகரில் பாதாள சாக்கடைகள் எல்லாம் சரியாக இல்லாததன் காரணமாக முக்கியமான வீதிகளில் கூட மழைக் காலத்தில் நடக்க முடியாது சிரமமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இத்தகைய மோசமான சுகாதார நிலை காரணமாக அங்கே மூளைக் காய்ச்சல் நோய்கூட ஏற்பட்டிருக்கிறது என்று நேற்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் அங்கே மாற்றப்பட வேண்டுமென்றால் அந்தப் பணிகளுக்குத் தேவையான பணியாளர்களை நாம் நியமித்தாக வேண்டும். அங்கே போதுமான அளவுக்குப் பணியாளர்கள் தற்போது இல்லை என்பதுமட்டுமல்ல, பணியாளர்களுக்குத் தேவையான கருவிகளும் இல்லை என்ற காரணத்தால் அங்கே உள்ள ஸ்வீப்பர்கள் எல்லாம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் கூட ஈடுபட்டார்கள் என்பது நாம் அறிந்த உண்மையாகும். மிக முக்கியமான வேலைகள்கூட செய்து முடிக்கப்படாமல் இருக்கின்றன. அத்தகைய வேலைகளைச் செய்து முடிப்பதில் முக்கிய அதிகாரிகள்கூட ஏனோ தானோ என்ற போக்கைத்தான் கைக்கொண்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

இந்த நேரத்தில் நான் இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மதுரை நகரில் மின்சார வாரியத்திற்கும் முனிசிபல் கார்ப்பரேஷனுக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதன் காரணமாக நகரில் உள்ள மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதோடு மதுரை முனிசிபல் கார்ப்பரேஷனில் மின்சாரப் பகுதியில் போதுமான அளவுக்குப் பணியாளர்கள் இல்லாத காரணத்தால் அங்கே தற்போது உள்ளவர்கள் அதிகமான வேலையைச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதிகப்படியான வேலைப்பளு மட்டுமல்ல, பல ஆண்டுகளாகவே அவர்களெல்லாம் நிரந்தரப்படுத்தப்படாமல், நிரந்தரத் தொழிலாளர்களுக்குரிய வசதிகள் மற்றும் உரிமைகள் அவர்களுக்குக் கொடுக்கப்படாமல் தினக்கூலிகளாகவே வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

மின் வாரியத்தில் உள்ள ஊழியர்களுக்கு என்னென்ன சர்வீஸ் கண்டிஷன்கள் இருக்கின்றனவோ, என்ன ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அவைகளெல்லாம் மதுரை முனிசிபல் கார்ப்பரேஷன் மின் ஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் மற்றொரு முக்கியமான விஷயத்தையும் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மக்களுடைய கோரிக்கைகள் மற்றும் குறைகளை கவனிப்பதில் ஒரு ஏனோதானோ போக்கு தான் அந்த நகராட்சியின் பொறுப்பில் இருப்பவர்களிடம் இருக்கிறது. இதற்கு ஒரு எடுத்துக்காட்டைச் சொல்ல வேண்டுமென்றால் மதுரை முனிசிபல் கார்ப்பரேஷனைச் சார்ந்த நவமணி என்கிற ஆசிரியை வேலை நீக்கம் செய்யப்பட்டது சம்பந்தமாக 1983 ஆம் ஆண்டிலே ஒரு புகார் கொடுக்கப்பட்டு அதன் மீது இன்னும் முடிவு செய்யப்படாமலேயே இருக்கிறது. இங்கே கோட்டையில் உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அணுகிக் கேட்டபோது '' நாங்கள் மதுரையில் உள்ள முனிசிபல் கார்ப்பரேஷன் அதிகாரிகளிடமிருந்து ரிமார்க்ஸ் கேட்டிருக்கிறோம். அது இன்னும் வரவில்லை'' என்கிறார்கள். இப்படி 1983 ஆம் ஆண்டில் கொடுக்கப்பட்ட மனுவின்மீது கார்ப்பரேஷன் அதிகாரிகள் எப்படிப்பட்ட போக்கைக் கடைப்பிடிக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு என்ற வகையில் சொல்லுகிறேன்.

(முற்பகல் 11–50)

அதுமட்டுமல்ல. இப்போது நமக்கெல்லாம் ஒரு புது அனுபவம் கூட வந்திருக்கிறது. நகராட்சிகளுக்கு அண்மையில் நடைபெற்ற தேர்தல்களுக்குப் பிறகு பலர் புதிதாகப் பொறுப்புக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் கடந்த 15, 16 ஆண்டுகளாக முனிசிபாலிடிகள் தனி அதிகாரிகள் ஆட்சியில் இருந்த காரணத்தால் மக்களுடைய குறைகளை முனிசிபல் கவுன்சிலர்கள் அதிகாரிகளிடத்தில் சொன்னால் அதை மதிக்காத போக்கு இன்றைக்கும் இருக்கிறது. முனிசிபல் தலைவர்கள் சொல்லுகிற வேலைகளைச் செய்யாத நிலைமைதான் பல இடங்களில் இன்றைக்கு இருக்கிறது. அதுமட்டுமல்ல. கவுன்சிலர்களைக்கூட அலட்சியப்படுத்தும் போக்கும் இன்றைக்கு இருக்கிறது. இதையெல்லாம் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் தனி அதிகாரிகளுடைய ஆட்சியை, நீடிக்கச் சொன்னதன் காரணமாக ஜனநாயகத்திற்கே ஒரு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டத்தான். உதாரணத்திற்கு இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நெல்லிக்குப்பம் முனிசிபாலிடியில் இப்போது ஒரு பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. பொல்யூஷன் கண்ட்ரோல் சட்டப்படி அங்கே ஒரு சர்க்கரை ஆலையின் நிர்வாகம் முனிசிபாலிடியிடமிருந்து லைசென்ஸ் பெற வேண்டும். ஆனால் கடந்த 18 ஆண்டுகளாக அந்த நிர்வாகம் லைசென்ஸ் பெறவில்லை.





ஏன் அவர்களிடமிருந்து லைசென்ஸ் திரும்பப் பெறவில்லை, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற பிரச்சினை ஏற்பட்டு, அந்தப் பிரச்சினையை முனிசிபல் கவுன்சில் விவாதிக்கும் நேரத்தில் அதற்குத் தக்க பதில் சொல்ல முடியாத காரணத்தால் அந்தக் கமிஷனர் அந்தக் கவுன்சில் கூட்டத்திலேயிருந்து வெளியேறிச் சென்ற நிகழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அது பற்றி சம்பந்தப்பட்டவர்களுக்குப் புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. எப்படி முனிசிபல் கவுன்சில்களுக்கு வர வேண்டிய வருவாய் வராமல் முனிசிபல் கவுன்சிலின் நலன் பாதிக்கப்படுகிற அளவுக்கு எப்படி அந்த இடங்களில் உள்ள அதிகாரிகள் தவறு செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்காகத்தான் இதைச் சுட்டிக் காட்டுகிறேன். மேலும் அந்த அதிகாரிகள் எப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட சேர்மெனையும், கவுன்சிலையும் அலட்சியப்படுத்துகிற போக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டவும் நான் இதை எடுத்துக்காட்டாகச் சொல்லுகிறேன். இதைப் பற்றி ஓரிடத்திலே புகார் சொல்லப்பட்ட நேரத்தில், '' சென்ற 15 ஆண்டுகளாக அவர்கள் ஒரு போக்கிலே வளர்ந்தவர்கள். திடீரென்று அவற்றை மாற்றுவதில் சிரமங்கள் ஏற்படலாம். ஆகவே நீங்கள் அதைப் பொறுத்துக் கொள்ளுங்கள் '' என்று சொன்னார் அவர். ஆகவே இப்படித் தேர்தல் நடத்தப்படாமல் தனி அதிகாரிகளுடைய ஆட்சியை நீட்டிக்கும் நிலை ஏற்பட்டால், அந்த அதிகாரிகளுடைய ஆட்சிக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சில் வந்தாலும்கூட மக்களுக்கு நன்மைகளை ஏற்படுத்துவதில் சிரமங்கள் ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான் இதை எடுத்துக்காட்டாகச் சொல்கிறேன்.

இன்னொரு விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எங்களுடைய மாவட்டத்தில் பத்மநாபபுரம் என்ற முனிசிபாலிட்டி இருக்கிறது. அதிலே சுகாதாரக் கேடுகளைப் போக்க போதுமான பணியாளர்கள் இல்லாததால்............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது கார்ப்பரேஷன் பற்றிய பில்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: முனிசிபாலிட்டியிலிருந்துதான் கார்ப்பரேஷன் வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கார்ப்பரேஷனிலிருந்து முனிசிபாலிட்டிக்குப் போய் அப்படியே பஞ்சாயத்துக்குப் போய்விடும். இது கார்ப்பரேஷன் பில்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: போதுமான பணியாளர்களை நியமனம் செய்ய வேண்டுமென்று சொன்னால் அங்கே பொறுப்பிலுள்ள கமிஷனர் அதைச் செய்யத் தயாராக இல்லை. அதற்குப் பிறகு கவுன்சிலில் ஒரு தீர்மானம் போட்டு வேலைக்கமர்த்திய தினக்கூலித் தொழிலாளிகளுக்கு உரிய ஊதியத்தைக் கொடுக்க மறுக்கிறார்.

இன்று சென்னை நகர கார்ப்பரேஷனில் உள்ள அதிகாரிகளைப் பற்றியும், கோவை கார்ப்பரேஷனில் உள்ள அதிகாரிகளைப் பற்றியும் ஆளும் கட்சியின் தரப்பிலே உள்ள திரு. சைதை துரைசாமி போன்றவர்களும்கூட எடுத்துச் சொன்னார்கள். அந்த அளவிற்குப் போதுமான பணியாளர்கள் இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாக பாதிப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆகவே போதுமான பணியாளர்களை நியமனம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இருந்தால் நாளாவட்டத்திலே மக்களுடைய குறைகளைப் பற்றி சம்பந்தப்பட்டவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து ஒருசில நிவாரணங்களை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். ஆகவே, தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள் இருந்தால் குறைகளைப் போக்க இடம் கொடுக்கும் என்பதால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று (மணி அடிக்கப்பெற்றது). ஒரு நிமிடத்திலே முடித்துக்கொள்கிறேன். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டால் உடனே எல்லா வேலைகளும் முடிந்து விடும் என்றோ, எல்லாம் ஒழுங்காக மாறும் என்றோ, நான் சொல்லவில்லை. கல்கத்தாவில் நடைபெற்றதைப்பற்றி நேற்று சொன்னார்கள். அவ்வளவு மோசமாக உள்ள கல்கத்தாவில்கூட தேர்தல் நடத்தப்படுகிறது, தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சில் அங்கே செயலாற்றிக் கொண்டிருக்கிறது.

இன்னுமொன்றை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன். இந்தியாவிலேயே 'கிளீன் சிட்டி' என்று சொல்லக்கூடிய சிட்டி திருவனந்தபுரம். 'கிளீன் சிட்டி' என்று சொல்லக்கூடிய அந்த திருவனந்தபுரத்திலே, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு கார்ப்பரேஷன் கிடையாது. அதைப் போல சென்னையைப் பொறுத்தவரையில் இங்கே சொல்லப்படுகிற வாதங்களைக் கேட்கும் நேரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சில் வேண்டாம் என்று சொல்லுவதற்கு முயற்சிக்கிறார்களோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சில் வந்தால் எல்லா விஷயங்களும் முடிந்துவிடும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் ஒரு சில குறைகளைத் தீர்க்க அது வாய்ப்பாக இருக்கும் என்பதால் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னுமொன்றை மட்டும் சுட்டிக்காட்டி முடித்துக்கொள்கிறேன். பஞ்சாயத்துத் தேர்தலைக் கூட, சில சட்டங்களை ஏற்படுத்தி, நடத்த வேண்டுமென்று தீர்மானித்தோம். ஆனால் அரசியல் காரணத்தால் அப்படிச் செய்ய முடியவில்லை. அதனால் ஏற்கெனவே இருந்த சட்டத்தின்படி நடத்தப்பட்டது. அதையே எடுத்துக்காட்டாக எடுத்துக்கொண்டு புதிய சட்டத்தை இயற்றுவதைப் பின்னால் வைத்துக்கொள்ளலாம்





என்றும், இப்போதுள்ள சட்டத்தின்படி தேர்தலை நடத்துவதற்கு ஏற்பாடு செய்வதுதான் மக்களுடைய தேவை என்பதையும் சுட்டிக்காட்டி அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கூறி இந்தச் சட்டத்தை வாபஸ் பெற வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாநகராட்சிகளின் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிக்கும் திருத்த மசோதாவின்மீது நான் சார்ந்துள்ள காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். தனி அதிகாரிகள் மூலம் நடைபெறுகின்ற சென்னை, கோவை, மதுரை ஆகிய மூன்று மாநகராட்சிகளின் தேர்தல்களை, உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற்றபோதே நமது அரசு நடத்தியிருக்கலாம். மாறாக தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிப்பதால் பல நல்ல காரியங்கள் நடப்பதற்குத் தடங்கல் ஏற்பட்டிருக்கிறது. அதிகாரிகளிடத்தில் பொது மக்கள் தங்கள் குறைகளைச் சொன்னால், உடனடியாக அந்தக் குறைகளை அதிகாரிகள் நிவர்த்தி செய்வதாகத் தெரியவில்லை. குறிப்பாக மாநகராட்சியில் சரியான முறையில் தண்ணீர் விநியோகம் செய்ய முடியவில்லை. ரோடுகள் பல இடங்களில் பள்ளத்தாக்குகளாகி, தண்ணீர் கட்டி, சுகாதாரக் கேடுகளை விளைவிக்கும் தன்மைகளை நாம் நேரிலே பார்க்கிறோம். விளக்குகள் சரியான முறையில் எரியவில்லை. குறிப்பாக மதுரையைச் சுற்றியுள்ள சாலைகள் மிகவும் சுத்தக் குறைவாக இருக்கின்றன. பல பகுதிகளில் தண்ணீர் கட்டி, மோசமான நிலையில் இருப்பதால், பொது மக்கள் நடந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

அடுத்து சென்னையில் பல பகுதிகளில் சாலை ஓரங்களில் ஏழை மக்கள் குடிசைகள் போட்டுக்கொண்டு வாழும் நிலை இருக்கிறது. அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்கள் சென்னையைச் சுற்றி பல இடங்களில் இருக்கும் காரணத்தால், இந்த ஏழை மக்களுக்கு அந்த இடங்களிலே குடிசைகள் போட்டுத் தர அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். மாநகராட்சியில் பல இடங்களில் சாலைகள் பள்ளமாகி, அதனால் அந்த இடங்களில் மழைத் தண்ணீர் தேங்கி, கொசுப் பெருக்கம் ஏற்பட்டு, தொத்து நோய்கள் பரவ வாய்ப்பு இருக்கிறது. இதையெல்லாம் உடனடியாகச் சரி பார்த்து சீர் செய்யும் நிலையில் மாநகராட்சி நிர்வாகம் இருக்க வேண்டும்.

[திரு. எஸ். என். இராமசாமி] [1986 நவம்பர் 18

சென்னை மாநகராட்சியில் தேர்தல் நடத்தப்பட்டு 12 ஆண்டுக்காலம் ஆகிறதென்று சொல்லப்படுகிறது. கோவை மாநகராட்சியில் தேர்தல் நடந்து 6 ஆண்டுக் காலம் ஆகிறதென்று சொல்லப்படுகிறது. மதுரை மாநகராட்சியில் தேர்தல் நடந்து 3 ஆண்டுக் காலம் ஆகிறதென்று சொல்லப்படுகிறது. ஆகவே நமது அரசாங்கம் இனியும் காலங்கடத்தாது மாநகராட்சித் தேர்தலை நடத்த வேண்டும். சென்னை, கோவை, மதுரை ஆகிய மூன்று மாநகராட்சிகளிலே உள்ள பொது மக்களின் நலன்களை எந்த வகையிலே உயர்த்தலாமென்று நினைக்கும் எண்ணத்திற்கு மாறாக, அங்கே சுகாதாரக் கேடுகள் அதிகம் ஏற்பட்டு, டாக்டர்களின் தனிப்பட்ட முன்னேற்றத்திற்கு உரிய நிலை இருந்து வருகிறது. இந்த நிலைகளைப் போக்கும் வகையில் உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டுமென்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

(நண்பகல் 12—00)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சென்னை, கோவை, மதுரை ஆகிய மாநகராட்சிகளினுடைய தனி அதிகாரிகள் பதவி நீட்டிப்புக்கான சட்டமுன்வடிவின்மீது கடந்த 2 நாட்களாக 15 மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை எல்லாம் நல்கியிருக்கிறார்கள். வருகின்ற 6 மாத காலத்திற்கும் இந்த மூன்று மாநகராட்சிகளுடைய நிர்வாகப் பொறுப்பும் ஒவ்வொரு தனி அதிகாரியினுடைய பொறுப்பிலேயிருந்து மாநகராட்சியினுடைய பிரச்சினைகளைத் துரிதமாகத் தீர்த்து அவற்றை நடத்துவதற்கு வழி செய்கின்ற வகையில் இந்த மசோதா உங்களுடைய மேலான பரிசீலனைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. இதில் கருத்துக்களை நல்கிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நல்ல பல ஆலோசனைகளையெல்லாம் நல்கியிருக்கின்றார்கள். குறிப்பாக இந்த மூன்று நகரங்களும் ஒவ்வொரு வகையிலே ஒவ்வொரு தனித் தன்மையைப் பெற்ற நகரங்களாகும். சென்னை மாநகராட்சி, 300 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றி பல நல்ல வளர்ச்சித் திட்டங்களையெல்லாம் உருவாக்கி நிலையான சின்னமாக பரிமளித்துக் கொண்டிருக்கின்றது. அதைப் போலவே, அண்மையில் மாநகராட்சியாக வடிவம் பெற்று தமிழகத்தின் கலாச்சாரத் தலைநகரமான மதுரை நகரத்திலே கடந்த ஆண்டுகளில் சிறந்த பணியை மக்களுக்கு அங்கே ஆற்றிக்கொண்டு வந்திருக்கின்றது மதுரை மாநகராட்சி. கொங்கு தலைநகரான கோவைத் தலைநகர மாநகராட்சி ஒரு தனித் தன்மையைப் பெற்றிருக்கின்றது. 1981ம் ஆண்டு தொழிலாளர்கள் தினமான மே 1-ம் தேதி தோன்றி கடந்த 5 ஆண்டுகளாக அந்த அந்தஸ்தைப் பெற்று அந்தப்பகுதி



1986 நவம்பர் 18] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

மக்களுக்கு நல்ல பல பணிகளையெல்லாம் ஆற்றி வருகிறது. இந்தப் பகுதிகளிலே இருக்கின்ற மக்களுக்கு அடிப்படை வசதிகளையும் மற்ற மற்ற காரியங்களையும் செய்வதற்கு ஒரு நல்ல அமைப்பு, ஒரு நல்ல நிறுவனம் வேண்டுமென்று ஒரு நல்ல நோக்கத்தோடு எங்கள் இதயத் தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்கள்.

குறிப்பாக சென்னை நகரத்தினுடைய பல பிரச்சினைகளை இங்கே உறுப்பினர்கள் இந்த மாமன்றத்திலே வைத்திருக்கின்றார்கள். அதைப் போலவே, மதுரையையொட்டிய பல பிரச்சினைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள். கோவையைப் பொறுத்த வரையிலும் பல நல்ல விவரங்களையெல்லாம் அரசினுடைய கவனத்திற்குக்கொண்டு வந்திருக்கின்றார்கள். குறிப்பாக இப்போது ஒரே ஒரு அம்சம் வருகின்றது. 6 மாதத்திற்குள்ளாக ஒரு புதுச் சட்டத்தை உருவாக்கி அதன் அடிப்படையிலே இந்த மூன்று மாநகராட்சிகளுக்கும் தேர்தலை நடத்தவேண்டுமென்ற குறிக்கோளோடு அந்த முயற்சியிலே இன்றைக்கு அரசு ஈடுபட்டிருக்கின்றது. அதன் மீது பலப்பல கருத்துக்களையெல்லாம், ஆக்கபூர்வமான கருத்துக்களை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே அரசினுடைய கவனத்திற்கும் கொண்டு வந்திருக்கின்றார்கள். அந்தக் கருத்துக்களை எல்லாம் மிக்க உணர்வுபூர்வமாக இந்த அரசு மனதிலே வைத்துக்கொண்டு, புதிய சட்டம் வருகின்ற நேரத்திலேயும் சரி, அந்தச் சட்டம் வருகின்றவரையிலே உள்ள இடைக்காலத்திலேயும் சரி, மக்களுடைய நலனைக் காக்கின்ற செயல்வகையினை, முயற்சியை எடுக்கும் என்று உறுதி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக கொண்டு வருகின்ற புதிய சட்டத்தை —Common Legislation— இன்றைய சட்டங்களிலே இருக்கின்ற குறைகளைப் போக்குகின்ற ஒரு முழுமையான சட்டமாகக் கொண்டுவரவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு அந்த முயற்சியிலே அரசு ஈடுபட்டிருக்கின்றது. குறிப்பாக இந்தச் சட்டத்திலே இருக்கின்ற அம்சங்கள், விதிகள் காரணமாக மக்களுக்குச் சேவை செய்கின்ற வாய்ப்புக்களையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் மிகத் தெளிவாக உணர்வார்கள். தற்போதுள்ள நிலை மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் பதவிக் காலம் 6 ஆண்டுகள். ஆனால் அதே நேரத்திலே அவையின் தலைவராக, வழிநடத்திச் செல்கின்ற தேர்ந்தெடுக்கப்படுகின்ற தலைவர், மேயர், துணை மேயர் இவர்களின் காலம் ஒரு ஆண்டாக இருந்தது. இனி இந்த ஒரு ஆண்டு என்பது, 2 ஆண்டுக் காலம்—மேயர் பொறுப்புக்காலம்—என்று மாறியிருக்கிறது. ஆனால் ஓராண்டுக்கு, இரண்டு ஆண்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த மேயர் திட்டவட்டமான காரியத்தைச்

செய்ய முடியாத நிர்ப்பந்தத்தில் இருப்பதால் அவருடைய பதவிக் காலத்தை நீட்டித்து, எப்படி உறுப்பினர்களுக்கு 6 ஆண்டுக் காலம் என்று இருக்கிறதோ அப்படிப்பட்ட ஒரு நிலையை இவர்களுக்கும் கொண்டு வரலாமா என்கிற பரிசீலனையும் இன்றைக்கு அரசிடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள், எல்லாச் சட்டங்களையும் ஆய்ந்து பொதுச் சட்டம் கொண்டு வருகிறோம் என்று சொல்லியுள்ளதைக் குறிப்பிட்டு இந்தியாவிலுள்ள 22 மாநிலங்களுக்கும் சென்று, கண்டு, ஆய்ந்து அறிந்து அதற்குப் பிறகு கொண்டு வருவதென்றால் நீண்ட நெடுங்காலம் பிடிக்குமே என்கிற அச்சத்தைச் சொன்னார்கள். ஆனால் அரசின் எண்ணம் அதுவல்ல. இந்தியத் துணைக் கண்டத்திலே இன்றைக்கு கல்கத்தா, பம்பாய், சென்னை, டெல்லி இப்படி நான்கு பெரிய நகரங்கள் இருக்கின்றன. அதாவது (Metropolitan Cities) இப்படிப்பட்ட பெரிய நகரங்களில் இருக்கிற சட்டத் திட்டங்களை எல்லாம் நன்றாக ஆய்ந்தறிந்து, அங்கு ஏற்பட்டுள்ள அனுபவத்தின் அடிப்படையில் ஒரு புதிய பொதுவான சட்டத்தை உருவாக்க இருக்கிறோம். குறிப்பாக இது சம்பந்தப்பட்ட பணி 4, 5 மாதங்களுக்கு முன்பே முடிந்துவிட்டது. இதற்காக என்று அமைக்கப்பட்ட குழு உறுப்பினர்கள் பம்பாய், கல்கத்தா, அவுரா, டெல்லி போன்ற நகரங்களுக்குச் சென்று பார்த்து அங்கெல்லாம் எப்படி நடைமுறை இருக்கிறது என்பதை எல்லாம் அறிக்கையாகக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கை அரசின் ஆய்வில் இருக்கிறது. விரைவிலே அது சம்பந்தமாக பொதுச் சட்டம் உருவாக்கி அரசு அதனைச் செயல்படுத்தத் துவங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே பல விவரங்கள் இருக்கின்றன. அதற்குரிய காலங்கள் வருகின்றபோது இந்த மாமன்றத்திற்கும் நாட்டுக்கும் அதனைத் தெரிவிப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மசோதாவினுடைய நோக்கமே விரைவாக பொதுவான சட்டம் கொண்டு வர வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல் ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டு புதிதாக வந்திருக்கின்ற அமைப்புகளில் எந்தவிதமான சட்டங்களும் தொல்லைகளும் இருக்கக்கூடாது என்கிற தொலைதூர நோக்கத்தோடு, நல்ல நோக்கத்தோடு இச்சட்டமுன்வடிவு இங்கே கொண்டு வரப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு கருத்தை வலியுறுத்தினார்கள். குறிப்பாக இந்த ஆட்சியை நடத்துகின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலை நடத்துவதற்கு, சந்திப்பதற்குபயப்படுகிறதா? தயக்கம் காட்டுகிறதா? தடுமாறுகிறதா? அஞ்சுகிறதா? என்றெல்லாம் சில உறுப்பினர்கள் தங்களுடைய உணர்வுகளை





வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஒவ்வொரு கோணத்திலிருந்தும் மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொன்னார்கள். ஆனால் இந்த ஆட்சியைப் பற்றி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பற்றி இந்த ஆட்சியைத் தேர்ந்தெடுத்த மக்கள் மிகத் தெளிவான சிந்தனையோடு முடிவோடு இருக்கிறார்கள். குறிப்பாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலைக்கண்டு ஒதுங்குகிற இயக்கமோ அல்லது மக்களைச்சந்திக்கத் தடுமாடுகிற இயக்கமோ அல்ல என்பதை இந்த நாட்டிலே நடந்து வருகின்ற நிகழ்ச்சிகள் மூலமாக நன்றாக தெரிந்துகொள்ளலாம். குறிப்பாக இந்த ஆண்டிலேயே, 1986 ஆம் ஆண்டிலேயே இரண்டு களங்களை நம்முடைய தமிழ்நாடு சந்தித்தது. ஒன்று உள்ளாட்சித் தேர்தலுக்கான தேர்தல்களம் பிப்ரவரியில் நடைபெற்றது. அடுத்து செப்டம்பர் மாதம் இரண்டு இடங்களில் இடைத்தேர்தல் நடைபெற்றது. அதாவது நெல்லைச் சீமையான திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதியிலும், காமராஜர் மாவட்டத்திலுள்ள அருப்புக்கோட்டை சட்டமன்ற தொகுதியிலும் இடைத் தேர்தல் நடைபெற்றது. இந்த இரண்டு தேர்தல்களின்போதும் ஒன்றைக் கண்டோம். சிறிது கால இடைவெளியில்தான் இரண்டு தேர்தல்களும் நடைபெற்றன. அதன்மூலம் நம்முடைய தமிழ்நாட்டு மக்களுடைய இதய ஒலிகளையும் நாம் கண்டோம். பிப்ரவரி மாதம் உள்ளாட்சித் தேர்தல் நெடுநாட்களுக்குப் பிறகு வந்தது. அத்தேர்தலை மிகவும் உறுதியாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நடத்திக் காட்டினார்கள். அதற்குப் பிறகு இடைத் தேர்தலையும் மிகவும் உறுதியாக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் நடத்திக் காட்டினார்கள். பிப்ரவரி மாதம் தேர்தல் முடிந்தபோது அன்றைய அரசியலைப் பொறுத்தவரையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு மக்கள் மத்தியிலே இருக்கிற செல்வாக்கு உலர்ந்துவிட்டது, குறைந்துவிட்டது, காற்று எங்கோ திசை மாறி சென்றுகொண்டிருக்கிறது, நாட்டுமக்கள் வாக்களிக்க மறுதலிக்கிறார்கள் என்று அத்தேர்தல் முடிவை வைத்து அன்றையதினம் சிலர் கருத்துக்களைச் சொன்னார்கள். ஆனால் அதே

(பிற்பகல் 12.10)

தமிழ்நாட்டு மக்கள் நடந்த அருப்புக்கோட்டை தேர்தலிலேயும், திருநெல்வேலி தேர்தலிலேயும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கின்ற செல்வாக்கை இந்த நாட்டு மக்கள், எங்கள் இனிய தலைவர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர்மீது வைத்து இருக்கின்ற செல்வாக்கை அறுதியிட்டு, தெளிவாக, உறுதியாகக் காட்டினார்கள். இதை எதற்காக நான் நினைவுகூர்கிறேன் என்றால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்

(திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி) (1986 நவம்பர் 18

என்றுமே தேர்தலைக் கண்டு அஞ்சியதே கிடையாது. இன்றைக் கிருக்கின்ற பிரச்சினையெல்லாம் 12 ஆண்டுகளாக சென்னை நகரிலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை. அது எப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாமல் போயிற்று என்ற அந்த அடிப்படைப் பிரச்சனைகள் இந்த நேரத்தில் நான் செல்ல விரும்பவில்லை. ஆங்கிலத்தில் விவிலிய நூலில், பைபிளில் ஒரு வாசகம் உண்டு. It is e sy to des:roy but very d ff cul to build ஒருமுறை ஒரு கட்டுக்கோப்பான அமைப்பை அழிப்பது எளிது: ஆனால் அந்தஅமைப்பை உருவாக்குவது என்பது அவ்வளவு எளிது அல்ல என்று விவிலிய நூலில், பைபிளில் ஒரு வாசகம் உண்டு. அதைப்போல 1974-வது ஆண்டு தொடங்கப்பட்ட சீர்குலைவு வேலையைச் சரிசெய்யவே தொடர்ந்து பல காரியங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், அதனுடைய ஆட்சியும் தொலை நோக்குப் பார்வையோடு மிக எச்சரிக்கையாக காரியங்களைச் செய்து கொண்டு இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள்—எங்களுடைய தலைவர் என்பதற்காகவோ, எங்களுடைய இயக்கத்தினுடைய வழிகாட்டி என்பதற்காகவோ தான் அந்தக் கருத்தைச் சொல்லவில்லை. கட்சிக்கு அப்பாற்பட்டு, ஐந்து கோடி மக்களுடைய நம்பிக்கையைப் பெற்ற நாயகனாக விளங்குகின்ற ஒரு பான்மையை தமிழ்நாடு இன்றைக்கு கண்டு கொண்டிருக்கிறது. இந்தியத் துணைக்கண்டத்திலேயே தேசிய ஒருமைப்பாட்டை நிலைநிறுத்துவதற்காகவும், ஒருமைப் பாட்டோடு இல்லாமல், மெத்த சிரமப்பட்டு 37 ஆண்டுகளுக்கு முன்பு உலக உத்தமர் காந்தியார் போன்ற பெருமக்களெல்லாம் பெற்றுத் தந்த சுதந்திரம் சிதையாமல் இருக்கவும் அவர் எடுத்து வருகின்ற அற்புதமான முயற்சிகளையெல்லாம் இன்றைக்கு அவனி மிகக் கூர்மையாகக் கவனித்துக்கொண்டு இருக்கிறது.

நேற்றும், முன்தினமும் பெங்களூர் திருநகரத்திலே அவருடைய இராஜதந்திரத்தையும் சாதுர்யமான அவருடைய அரசியல் நடவடிக்கைகளையும் இன்றைக்குக் கட்சிக்கு அப்பாற்பட்டவர்கள்கூட மெத்தப் பாராட்டிக் கொண்டிருக்கின்ற பாங்கைப் பார்க்கிறோம்.

பலர் கருதினார்கள், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தேர்தலைக் கண்டு அஞ்சுகிறார் என்று. அஞ்சுகிறார் என்றால் அது குழந்தை வாதம் என்றுதான் நான் கருதுகிறேன். தமிழகத்தினுடைய பின்புலத்தைப் புரியாதவர்கள், இன்னும் சொல்லப்போனால் புரட்சித் தலைவரையே புரியாதவர்கள் அவர் கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்வது என் தார்மீகக் கடமை என்று கருதுகிறேன்.



1980 நவம்பர் 18] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

குறிப்பாக, 1984 இல் தமிழ்நாட்டு அரசியலிலே ஒரு திருப்பு முனை. எங்கள் இனிய தலைவர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஐயாயிரம் மைல்களுக்கு அப்பாலே இருந்த புரூக்லீன் மருத்துவமனையில் இருந்தார்கள். இங்கே தேர்தல். பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் புகழோடு மறைந்து விட்டார்கள். இரண்டு மாபெரும் தலைவர்கள் இல்லாமல் இந்தியத் துணைக் கண்டத்திற்கும் தேர்தல் நடைபெறுகிறது. தமிழ் நாட்டிற்கும் தேர்தல் நடைபெறுகிறது. அந்த நேரத்திலே கேட்டார்கள், இந்தத் தேர்தலினுடைய முடிவு என்னவாகும்? இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தமிழகம் வாய்ப்பு கொடுக்குமா? அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய புரட்சித் தலைவரின் தம்பிமார்களுக்கு மீண்டும் தொண்டாற்ற வாய்ப்பு வருமா, என்று. ஆனால் தமிழ்நாட்டு மக்கள் எங்கள் இனிய தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவருக்கு, 5,000 மைல்களுக்கு அப்பால் இருந்த அவருடைய மௌனக் கட்டளைக்கு ஏற்ப மீண்டும் மூன்றாவது முறை வாய்ப்புக் கொடுத்தார்கள்.

அன்றைக்கு 'இந்து' பத்திரிகை—இன்றைக்கு அகில உலகத்திலேயே நம்முடைய தமிழ்நாட்டிற்குப் பெருமையை அளித்துக் கொண்டிருக்கின்ற இந்து பத்திரிகை—ஒரு வாசகத்தைச் சொல்லியது. அதை மட்டும் இந்த நேரத்திலே நினைவுபடுத்துவது அதுவும் இந்த கண்ணியம் மிக்க சபையிலே நினைவுபடுத்துவது எனது தார்மீகக் கடமை என்று கருதுகிறேன். 1984 தேர்தல் முடிவு. இந்து பத்திரிகை விருப்பு வெறுப்பு இல்லாமல், உணர்ச்சிகளுக்கு ஆட்படாமல், ஒரு பொது நோக்கோடு ஒரு தேசியப் பார்வையோடு, அகில இந்தியப் பார்வையோடு எழுதுகின்ற ஒரு தரமான பத்திரிகை. அதனுடைய மதிப்பீடு இன்றைக்கு எல்லோராலும் போற்றப்படுகின்ற நிலைமையில் இருக்கிறது. அந்த 'இந்து' பத்திரிகை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்குச் செல்வாக்கு இருக்கின்ற தன்மை, தேர்தலிலே அவருக்கு இருக்கின்ற ஈர்க்கின்ற சக்தி, மக்களுடைய உள்ளத்தை எப்படி நெருடி வருகிறார்கள் என்பதையெல்லாம் ஜனவரி மாதம் 6 ஆம் தேதி 1985-வது ஆண்டு இந்து பத்திரிகை "L ad r with a mission" என்று ஒரு தலையங்கம் எழுதியது.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது "Leader with a mission" என்று இந்து பத்திரிகை தலையங்கம் எழுதியிருக்கிறது. அதிலே அவர்கள் பல்வேறு கருத்துக்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவற்றிலே ஒன்றை மட்டும் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏனென்றால் அனைத்திந்திய அண்ணா தி.மு. கழகம் அல்லது இந்த ஆட்சி, தேர்தலைச் சந்திக்க அஞ்சுகிறது, நடுங்குகிறது அல்லது ஒதுங்குகிறது என்ற எண்ணத்திலே சில மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். அவர்களுடைய சிந்தனைக்காக இதை நான் குறிப்பிடுகிறேன்.

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1987 நவம்பர் 16]

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எப்படிப்பட்ட அடிப்படையோடு இருக்கிறார்கள், செல்வாக்கோடு இருக்கிறார்கள் என்பதை விருப்பு வெறுப்பு இன்றி, நடைபெறுகின்ற இந்துப் பத்திரிகை வெளியிட்டிருக்கின்ற பல்வேறு கருத்துக்களில் ஒரே ஒரு கருத்தை மட்டும் மாண்புமிகு உறுப்பினர்களின் சிந்தனைக்கு எடுத்து வைக்க விரும்புகிறேன்.

"When that happened a decade age, few would have seen the superman in MGR who could not only dislodg his adversaries from power and position, but also demolish the edifice of the Party from which he was hounded out."

எம். ஜி. ஆர்.-க்கு உள்ளே ஒரு சூப்பர் எம். ஜி. ஆர். இருக்கிறார். அந்த சூப்பர் எம். ஜி. ஆர். 10 ஆண்டுகளுக்கு முன்பு, தான் வளர்த்த அமைப்பே தன்னைத் தூக்கி எறியும் போது அதனை எதிர்த்து ஒரு புயலைக் கிளப்பி, போர்க் குரலை வெளியிட்டு, தன்னைத் தூக்கி எறிந்தவர்களையே தூக்கி எறிந்தார். அத்தகைய ஆற்றல் அவருக்கு உண்டு.

அது மட்டுமல்ல. தன்னைத் தூக்கி எறிந்தவர்களைத் தூக்கி எறிந்ததோடு அவர்களை ஆட்சியிலிருந்து இறக்கிய வல்லமை மாண்புமிகு புரட்சித் தலைவருக்கு உண்டு. அந்த அளவுக்கு மக்களுடைய செல்வாக்கு அவருக்கு இருக்கிறது. அதனால்தான் தன்னைத் தூக்கி எறிந்தவர்களை ஆட்சியிலிருந்தே அப்புறப்படுத்திவிட்டு மூன்று முறை ஆட்சிக்கு வந்திருக்கிற "Leader with a mission" என்று இந்து பத்திரிகை தலையங்கத்தில் எழுதியிருக்கிறது.

அது மட்டுமல்ல. "Leader with a mission" என்று சொல்லுகிறபோது அவர் ஒரு சாதாரண வர்க்கத்தினருடைய தலைவராகவும் விளங்குகிறார். ஜாதிக்கு அப்பாற்பட்டு, இனத்திற்கு அப்பாற்பட்டு, பல பிரிவுகளுக்கு அப்பாற்பட்டு "Leader with a mission" என்று சொல்லத்தக்க அளவுக்கு எல்லா மக்களுடைய தலைவராகவும் அவர் விளங்குகிறார். அவருடைய வெற்றிக்கான இரகசியம் என்ன என்பது பற்றி "A man of the masses, MGR lived up to his idealism through his movies and never forgot his poverty-stricken childhood days" என்று குறிப்பிடுகிறது. அவர் அந்த வறுமை நாட்களை மறந்தது கிடையாது. கோட்டைக்கு வந்தாலும் கோட்டைக்கு வர யார் காரணமாக இருந்தார்களோ அவர்களை மறக்கவில்லை. தான் வறுமையில் வாடியதைப்போல அந்த மக்கள் வறுமையில் வாழக்கூடாது, அந்த மக்களுக்கு வறுமை இருக்கக்கூடாது என்று திட்டங்களைப் போட்டு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஆட்சிக்கு வந்தாலும் தன்னை



600 008 13697

1986 நவம்பர் 18] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

மறக்காதவர் எம்.ஜி.ஆர். அதுதான் ஆளாக்கியவர்களை மறக்காதவர் எம்.ஜி.ஆர். அதுதான் அவர்களுடைய வெற்றிக்கான இரகசியம் என்று இந்துப் பத்திரிகை 1985 ஜனவரி 6-ந் தேதியில் குறிப்பிட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட ஒரு மாபெரும் தலைவர், இந்த நாட்டு மக்களுக்கு வழிகாட்டியாக இருக்கிற ஒரு தலைவர் மாநகராட்சித் தேர்தலை கண்டு அஞ்சுகிறார், பயப்படுகிறார் என்று கூறுவது எந்த வகையில் நியாயம்? அவர்கள் உள்ளாட்சித் தேர்தலைச் சந்தித்தார்கள்; நாடாளுமன்றத் தேர்தலைச் சந்தித்தார்கள்; மூன்று முறை சட்டமன்றத் தேர்தலைச் சந்தித்தார்கள். இப்படிப் பல்வேறு தேர்தல்களைச் சந்தித்தவர் மாநகராட்சித் தேர்தலைச் சந்திக்க அஞ்சுகிறார் என்று குறிப்பிட்ட மாண்புமிகு உறுப்பினர்கள் இதை எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு பொதுவான கருத்தைத் தெரிவித்தார்கள். அது என்னைப் போன்றவர்களுக்கும் உடன்பாடானதாகும். அவர்கள் என்னைப் போன்றவர்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு கருத்தை வலியுறுத்தினார்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌரிராசன் அவர்கள் சொல்லுகின்ற போதும், அண்ணன் திரு. அப்துல் சமத் அவர்கள் சொல்லுகிறபோதும் நாங்கள் எல்லாம் இன்றைக்கு சென்னை மாநகர மக்களின் தூதுவர்கள், சென்னை மாநகர மக்களுடைய பிரதிநிதிகள்; அதனால் பிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இல்லாத சில சங்கடங்கள் எங்களுக்கு ஏற்படுகின்றன என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னதைப்போல சென்னை மாநகரிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாநகராட்சி உறுப்பினர்களின் பணியும் இருக்கிறது என்பதிலே எனக்கும் உடன்பாடுதான். நான் அமைச்சராக இருந்தாலும் சென்னை மாநகரின் ஒரு சட்டமன்ற உறுப்பினர் தான். அவர்கள் குறிப்பிட்ட சங்கடங்கள் எனக்கும் உண்டு. ஆகவே, வெகு நாளைக்கு இந்த தனி அதிகாரிகளுடைய ஆட்சி நடக்கக்கூடாது என்று சொன்ன கருத்தில் நானும் உடன்படுகிறேன். இருந்தபோதிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் வந்து, தனி அதிகாரிகள் அதிகாரம் முடிகின்ற வரையில், அந்தத் தனி அதிகாரிகளைக் கட்டுப்படுத்த, அவர்களை ஒழுங்குபடுத்த, அவர்கள் மக்களுக்கு நல்லமுறையில் சேவை செய்ய இன்றைக்கு இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை பணிவன்போடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-50)

அது மட்டுமல்ல, நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு அண்ணன், திரு. அப்துல் சமத் அவர்கள் இங்கே தெளிவுபடுத்தினார்கள். குறிப்பாக High Power Committee பற்றிச் சொன்னார்கள். அட்வைசரி போர்ட் போடுவதாகச் சொன்னீர்களே என்று கேட்டார்கள். அதைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவெடுத்து விரைவில் அட்வைசரி கமிட்டி உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு செயலாற்ற இருக்கிறது. தேர்தல் வருகிற வரையில், அதிகாரிகளின் பொறுப்பிலே இருக்கிற வரையில் நிகழ்கிற காரியங்களைப் பொறுத்த வரையில் அந்தப் பொறுப்பான செயல்களை எல்லாம் அட்வைசரி போர்ட்டிலே வைத்து அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டுச் செய்வதற்குரிய வகையில் இன்றைக்கு முடிவு எடுத்து இருக்கிறார்கள். ஒரு சில நாட்களுக்குள்ளாக அந்த உறுப்பினர் பட்டியல் வெளிவரும் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்து மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்தில் பொதுவாக சிவிக் அமெனிட்டிஸ் பற்றிக் குறிப்பிட்டார்கள். இது இன்றைக்கு எல்லாப் பகுதிகளிலும் விவாதத்திற்குரியதாக இருக்கிறது. குறிப்பாகச் சாலை வசதி, பல இடங்களிலும் அதிக அளவில் காணப்படுகின்ற குப்பை கூளங்கள், சுகாதார வசதி, கொசுத் தொல்லை போன்றவற்றைப் பற்றிக் குறிப்பிட்டதுடன் பன்றிகள் வாயிலாக மூளைக் காய்ச்சல் வந்து விடுமோ என்ற ஆதங்கத்தையும் கூட இங்கே எடுத்துச் சொன்னார்கள். இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் பல விவரங்கள் தெரிகிற காரணத்தால் நான் அதிக அளவிற்கு இதிலே செல்லவில்லை.

மாண்புமிகு அண்ணன் திரு. அப்துல் சமத் அவர்கள், எங்களை எல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணாவினுடைய சதுக்கத்திற்கு அருகிலே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்ற கலவை இயந்திரம் அதாவது 'Re-mixer Plant' பற்றி எடுத்துச் சொன்னார்கள். அந்த 'Plant' குறித்த ஒரு தகவலை அண்ணன் அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அண்ணா சமாதிக்கு அருகே தற்சமயம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சாலை போடும் மறு கலவை இயந்திரம் அதாவது 'Re-mixer Plant' தனியாருக்குச் சொந்தமானது. அது. மாநகராட்சிக்குச் சொந்தமானதல்ல குறிப்பிட்ட ஒரு நிறுவனத்திடமிருந்து அந்த வேலையைச் செய்வதற்காக ஒப்பந்தத்தின் மூலம் பெற்று வைத்திருக்கிறார்கள். இதன் மூலம் ஒரு கோடி ரூபாய் செலவில் சாலைப் பணிகள் இதுவரையில் அந்த நிறுவனத்தால் செய்யப்பட்டு இருக்கிறது. அடுத்து ஒரு கோடியே 85 இலட்சம் ரூபாய்க்கு பணிநடைபெற இருக்கிறது. அக்டோபர், நவம்பர் ஆகிய இரண்டு





மாதங்களும் மழைக் காலம் என்ற காரணத்தால் அந்தப் பணி சுணக்கமாக இருந்து கொண்டிருக்கிறது. மழைக் காலம் சென்ற பிறகு அந்த இயந்திரம் பயன்படுத்தப்பட்டு சாலைகள் எல்லாம் போடப்படும். முதலில் குறிப்பிட்ட ஒரு கோடியே 85 இலட்சம் ரூபாய் அதற்காக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஒதுக்கி இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அண்ணன் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சுகாதாரப் பிரச்சினை பற்றி எல்லாம் இன்றைய தினம் சொன்னார்கள். சென்னை மாநகரில் சுகாதார வசதியை மேம்படுத்த உலக வங்கியின் உதவியுடன் தலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் (Hydro-con roll off Tripper) என்ற புது இயந்திரங்களைப் பயன்படுத்தி அதிக அளவில் குப்பைகளை எடுத்து நகரைச் சுத்தப் படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் கொத்தவால்சாவடி போன்ற குப்பைகள் அதிகம் சேரும் பகுதிகளில் விரைவில் அவற்றை அகற்றி சுத்தம் செய்ய வழி ஏற்படுகிறது. இவ்வாறு வேறு எந்தப் பகுதிகளில் இருக்கிறதோ அங்கும் இந்த புதிய இயந்திரம் பயன்படுத்தப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து குப்பைகளை எரித்து அதன் மூலம் மின்சாரம் பெற்று பயன்படுத்த வேண்டும் என்ற திட்டம் ஒன்றும் ஆய்வில் இருக்கிறது. அந்தப் பணி பெல் நிறுவனத்தின் ஆய்வில் இருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம், பெரிய அளவில் சென்னை மாநகரில் சேரும் குப்பைகளை மின்சாரம் தயாரிக்கப் பயன்படுத்த வகை ஏற்படும். தெரு விளக்கு எரிக்கவும் இந்த மின்சாரத்தைப் பயன்படுத்தலாம் என்ற ஆய்வும் இருக்கிறது. அதுவும் தொடர்ந்து துரிதப்படுத்தப்படும்.

அதைப் போலவே சென்னை போன்ற பெரு நகரங்களில் உள்ள கழிப்பிடங்களைப் பொறுத்த வரையில் அவற்றை நவீனப் படுத்தி கட்டணக் கழிப்பிடங்களை மேலும் கட்டி, சுகாதார வசதியை மேம்படுத்த வகை செய்யப்பட்டு வருகிறது. குளியல் அறை வசதியுடன் கூடிய கழிப்பிடங்கள் 30 இடங்களில் கட்டப்பட்டு இருக்கின்றன. தேவைகளை அனுசரித்து தொடர்ந்து 11 பகுதிகளில் நவீன கழிப்பிட வசதி செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை போன்ற பெரு நகரங்களைப் பொறுத்தவரையில் Public Convenience என்ற வகையில் உள்ள பொதுக் கழிப்பிடங்களில் தண்ணீர் பற்றாக்குறை என்பது ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இதன் காரணத்தால் கழிப்பிடங்களில் சுகாதாரக் குறைவு ஏற்படுவதால் 24 மணி நேரமும்

(திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி) ]1986 நவம்பர் 18

தண்ணீர் கிடைக்கும் வகையில் எல்லா பொதுக் கழிப்பிடங் களிலும் பம்ப் செட்டுகள் அமைக்கப்பட்டு எந்த நேரமும் தண்ணீர் வசதி கிடைக்க வகை செய்யப்படும். உலக வங்கித் திட்டப் பணியின் முதற் கட்டமாக ஆழ் குழாய்க் கிணறுகள் அமைத்து தண்ணீர் பெறும் வகையில் குடிநீர் வடிகால் வாரியத் திடம் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

அடுத்து ஸ்டார்ம் வாட்டர் பிரச்சினை, மழைக் காலத்திலே பல இடங்களில் இருப்பதைப் பற்றி இன்றைக்குப் பல உறுப்பினர் சகோதரர்கள் சொன்னார்கள். அண்ணா சாலையில் பெரியார் சிலைக்கருகிலும், திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, போன்ற பெரிய சாலைகளில் எல்லாம் கூட 10 நிமிடம், 15 நிமிடம் தொடர்ந்து மழை பெய்தால், அங்கே பெரிய காவிரி ஆறு ஓடுவது போன்று வெள்ளம் ஓடுகின்ற பாங்கினைப் பார்க்கிறோம். குறிப்பாக என்னுடைய ஆயிரம் விளக்குத் தொகுதியிலே, அண்ணா சாலையிலே, பெரியாருடைய சிலை இருக்கிற இடத் திற்கு அருகில் உள்ள அண்ணா மேம்பாலத்திற்கு அருகிலேயும் 10 நிமிடங்களுக்கு மழை பெய்து விட்டால், அது மிகத் தாழ் வான பிரதேசமாக இருக்கிற காரணத்தாலே, அங்கே பெரிய வெள்ளக்காடு இருப்பது போன்ற காட்சியை, அனுபவத்தில் நான் பெற்றிருக்கிறேன். ஆகவே, இந்தப் பிரச்சினையைப் போக்கு வதற்காக சென்னை போன்ற பெரு நகரங்களிலே, தலையாய பணி மழை நீர் வடிகால் அமைத்தல் ஆகும். அப்படி வடிகால் வசதி இல்லாது போய்விடும் இடங்களில் கொசுத் தொல்லை ஏற்படும். ஆகவே, பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப, குடியிருப்புப் பகுதிகளில் மழை நீர் வடிகால்கள் அமைக்கும் பணிகள் மேற் கொள்ளப்படுகின்றன. 1,200 கிலோ மீட்டர் நீளத்திற்கு இது அமைக்கப்பட வேண்டும். தற்போது 480 கிலோ மீட்டர் நீளத்துக்குத்தான் ஸ்டார்ம் வாட்டர் பெசிலிட் டீஸ் இருக்கிறது. மிகுதியாகி இருக்கும் பகுதிகளுக்கும் ஸ்டார்ம் வாட்டர் பெசிலிட்டீஸ் செய்து தரப்படும். நடப்பு ஆண்டில், 3 கோடி ரூபாய் செலவில் இப் பணிகள் மேற் கொள்ளப்படும். ஏற்கெனவே உள்ள வடிகால்களைச் செப்பனிடும் பணியும் எடுத்துக் கொள்ளப்படும். அதையும் சேர்த்து 4 கோடியே 435 இலட்சம் ரூபாய் இந்த ஸ்டார்ம் வாட்டர் புரோகிராமிற்காக இந்த ஆண்டு ஒதுக்கிட முடிவு எடுக்கப்பட்டு, அந்தக் காரியங்கள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சென்னையிலே இருக்கிற எல்லா உள்ளங்களையும் அலைக்கழித்துக் கொண்டிருக்கிற பிரச்சினை மின்சாரம். அதாவது மின் விளக்கு.

குறிப்பாக சென்னை நகரத்தில் 1,200 கிலோ மீட்டர் நீளத்திற்கு மின்சார கேபிள்கள் உள்ளன. சாதாரணமாக 10, 12 ஆண்டுக் காலம் வரையில்தான் இவை செயலில்



1986 நவம்பர் 18] (திரு கே. ஏ. கிருஷ்ணசாமி)

இருக்கும். ஆனால் தற்போதுள்ள கேபிள்களைப் போட்டு 30 முதல் 40 வருடங்கள் வரையில் ஆகி உள்ளதால், அடிக்கடி மின் தடங்கல் ஏற்படுகிறது. குறிப்பாக மழைக் காலங்களில் தெரு விளக்குகளிலேயே மின் தடங்கல் ஏற்படுகிறது. எனவே அந்த மின்சார ஒயர்களை ஒட்டு மொத்தமாக மாற்ற திட்டமிடப்பட் டுள்ளது. நடப்பு ஆண்டில் 175 இலட்சம் ரூபாய் செலவில் பழு தடைந்த மின்சார ஒயர்கள் பல்வேறு இடங்களில் மாற்றப்பட்டு வருகின்றன. மேலும் சோடியம் வேப்பர் விளக்குகள், மெர்க்குரி விளக்குகள் போன்றவற்றை ஆங்காங்கே போட்டு, மின்சார வசதியை நவீனப் படுத்தவும் இருக்கிறோம்.

சென்னை நகரத்தில் முதன் முறையாக அண்ணா சாலையில் பெரியார் அவர்களின் சிலை இருக்கிற இடத்துக்குப் பக்கத்தில் அண்ணா மேம்பாலத்தில் நவீன மின் விளக்குகளை, அதிக மின் திறன் கொண்டவைகளை 9 இலட்சம் ரூபாய் செலவில் போடத் திட்டமிடப்பட்டுள்ளது என்ற அளவில் சொல்லி வந்த திட்டங் கள் மதுரை மற்றும் கோவை மாநகரங்களிலேயும் மேற்கொள் ளப்பட உள்ளன என்பதையும் இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஆக, நான் தொடக்கத்திலேயே சொன்னது போல இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த சரித்திர பின்பலம் கொண்ட 3 மாநகர மக்களுக்கும் நவீன வசதிகளைக் கொடுக்க வேண்டும். அடிப்படை வசதிகளைக் கொடுக்க வேண்டும், அவர்களுக்கு காலத்திற்கு ஏற்ப நவீன வசதிகளைச் செய்து தர வேண்டும். அதற்கான அமைப்பு கள் வேண்டும். அந்த அமைப்புகள் நலமாக இயங்கச் சட்டங்கள் வேண்டும். மக்களுடைய தேவைகளை நிறைவேற்றுகிற அள வுக்குப் படைக் கலன்களாக அந்தச் சட்டங்கள் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்தப் புதிய சட்ட முன்வடிவுகள் கொண்டு வரப்பட இருக்கின்றன. ஆகவே 6 மாத காலத்திற்கு அந்தத் தனி அதிகாரிகளுடைய காலம் நீட்டிக்கப்பட இருக்கிறதே ஒழிய அதற்கு வேறு உள்நோக்கமோ அல்லது தேர்தலைக் கண்டு பயமோ, அச்சமோ அல்ல.

இன்னும் சொல்லப் போனால் ஒரு கண்ணாடியில் தூசு பட்டு விட்டால் அந்தத் தூசை எடுப்பதற்கு எவ்வளவு கவனம் தேவையோ அந்தக் கவனத்தோடு இதைச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக் கிறார்கள். ஆகவே கண்ணாடி என்ற சென்னை மாநகராட்சி யிலே தூசு பட்டு விட்டது. அதை எடுக்க எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று அவர்கள் இப்படிப்பட்ட நடவடிக் கையை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பின் புலத் தையும் மனத்திலே வைத்துக் கொண்டு, இந்தச் சட்ட முன்

வடிவிற்கு ஆதரவு நல்கி விரைவிலே தேர்தலை நடத்துவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டும் என்று சொல்லி நான் அமர்கிறேன். வணக்கம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க அவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், புதிதாகப் பொறுப்பேற்றிருக்கிற இந்த இலாகாவைப் பற்றியும், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய பல்வேறு சந்தேகங்களுக்கும் மிகத் தெளிவான பதிலை உணர்ச்சி பூர்வமாக, உருக்கமாகக் கூட என்றும் சொல்லலாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆனால், நான் அவரிடம் உங்கள் மூலமாகக் கேட்க விரும்புவது எல்லாம், அவரிடத்தில் நாங்கள் என்ன எதிர் பார்த்தோமோ அதற்கான பதில் அவரிடமிருந்து கிடைக்கவில்லையே என்பதுதான். அதுதான் எங்களுடைய ஆதங்கம் எல்லாம். பல்வேறு அமைச்சர் பெருமக்கள் இந்த இலாக்கா பொறுப்பை ஏற்றுக் கொண்டவர்கள், பல்வேறு சமயங்களில் கொடுத்த வாக்குறுதிகள் எல்லாம் ஒருபுறமிருக்க, இப்போது வந்திருக்கக் கூடிய மாண்புமிகு அமைச்சர் அவர்களாவது, குறைந்த பட்சம் இந்த 6 மாத காலத்திற்குள்ளாகவாவது—தேதியைச் சொல்ல முடியாது என்பதை நன்றாக அறிவேன். ஆனால் நிச்சயமாக இந்த ஆறு மாத காலத்திற்குள் தேர்தல் நடைபெறுமென்ற அறிவிப்பை, மக்கள் எதிர்பார்க்கும் நல்ல அறிவிப்பை இந்த மன்றத்திற்குக் கொடுப்பார்களானால் அது பொருத்தமாக இருக்கும்; இதற்கு மேலும் ஒத்திவைத்துக் கொண்டு போவது அவர்களுக்கும் நல்லதல்ல, நமக்கும் நல்லதல்ல. நாட்டிற்கும் நல்லதல்ல. மாநகராட்சிக்கும் நல்லதல்ல என்ற முறையில், அந்த மகிழ்ச்சியான இனிப்பான செய்தியை அமைச்சர் அவர்கள் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 12–30)

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, விவாதத்தில் கலந்து பங்கு கொண்டவன் என்ற முறையில் உங்கள் மூலம் அரசின் கவனத்திற்கும், அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். இங்கே மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள் தேர்தலைக் கண்டு அஞ்சவில்லை என்று விளக்கங்களை எடுத்துத் தெரிவித்தார்கள். அது குறித்து யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. ஏனென்றால், தேர்தலைக் கண்டு அஞ்சியிருந்தால் பஞ்சாயத்துத் தேர்தலை நடத்த அரசு முன் வந்திருக்காது. ஆகவே அது பிரச்சினை இல்லை. எனவே அதுபற்றி அஞ்சாத நல்ல சூழ்நிலை இருக்கிறது. நான் கேட்க விரும்புவது, தேர்தலை நடத்துவதற்கு எந்தவிதமான தடையும் இல்லை. கோர்ட்டிலே கூட கேஸ் கிடையாது.





ஆனால் ஒரு முக்கியமான விஷயம். இப்போது பல்வேறு மாநிலங்
களில் இருக்கக்கூடிய கார்ப்பரேஷன் ஆக்ட், அதனுடைய அட்
மினிஸ்ட்ரேஷன் இவைகளையெல்லாம் பரிசீலித்து ஒரு காமன்·
லா கொண்டு வந்த பிறகுதான் தேர்தல் நடத்தப்பட வேண்டு
மென்று சொல்லும்போது செலக்ட் கமிட்டியாவது இப்போது
போடப்பட்டிருக்கிறதா? அதற்கான முயற்சியிலே அரசாங்கம்
ஈடுபட்டிருக்கிறதா? எந்தக் கால கட்டத்திற்குள் அந்தப் பணி
கள் முடிவடையும்? '3 மாதமா, 4 மாதமா என்றெல்லாம்
சொல்லவில்லை. இதன் காரணமாக எங்களுக்கு எல்லாம் அச்சம்
ஏற்படுகிறது. எனவே, இந்தச்சட்டங்களைப் பரிசீலித்து ஒரு
காமன்-லா கொண்டு வருவதற்கு அரசு இதுவரையில் என்ன
நடவடிக்கை எடுத்திருக்கிறது? இரண்டாவது, அதற்கு என்ன
கால வரையறை? எனவே விரைவிலே தேர்தலை நடத்துவதற்கு
அரசாங்கம் காலக் கெடுவைச்சொல்ல வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

**திரு ஆ. க. ஆ. அப்துல் சமத் :** துணைத் தலைவர் அவர்
களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்த அரிய விளக்கத்
திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கலவை இயந்திரத்
திற்கு ஏற்கெனவே ஒரு கோடி ரூபாய் செலவிட்டது போக
மேற்கொண்டு ஒரு கோடியே 85 இலட்சம் ரூபாய் மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் சென்னை நகரத்தினுடைய சிங்கார
வீதிகளை மேலும் அழகுபடுத்த அனுமதித்து இருக்கக் கூடிய
அந்தப் பெருந் தன்மையையும் நான் மனமார வரவேற்கிறேன்.
இதற்காக கச்சாப் பொருள்களுக்கு எவ்வளவு ஆயிற்று என்ற
விவரம் எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும்கூட கோடி
ரூபாய்க்கு மேலே, அந்த இயந்திரத்திற்கு, ஒரு தனியார் இயந்
திரத்திற்கு வாடகை தந்திருக்கிறோம் என்று அறிய முடிகிறது.
அப்படி இருக்குமானால், அவ்வளவு பெரிய தொகையை வாடகை
யாகத் தொடர்ந்து கொடுப்பதைவிட அதை நாமே சொந்தமாகப்
பெறுவதற்கு யோசிக்கலாமா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாநகராட்சி
சட்டத்தின் மீது பேசும்போது பல்வேறு விளக்கங்களைக்
கூறிவிட்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்தலை நடத்து
வதற்கு ஒத்துழைப்பாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்
கொண்டார். அப்படிக் கேட்கும்போது தேதி அறிவித்துச்
சொல்லியிருந்தால் மிகவும் நன்றாக இருக்குமென்று கருது
கிறேன். எனவே தேதியை அறிவிப்பார்களா என்று அறிய
விரும்புகிறேன்.

**திரு. வி. பி. சிந்தன் :** துணைத் தலைவர் அவர்களே,
தேர்தலைச் சந்திப்பதற்கு ஆளும் கட்சி தயங்குகிறது என்ற
குற்றச்சாட்டை எழுப்பிய நான் அந்தக் கருத்திலே உறுதியாக
நிற்கிறேன். அதை விவாதத்திற்காக இப்போது நான் எழுப்ப

[திரு வி.பி. சிந்தன்] [1986 நவம்பர் 18

வில்லை. இந்தத் தயாரிப்பு வேலைகள் எப்போது முடியும் என்பதையும், எப்போது தேர்தலை நடத்துவீர்கள் என்பதையும் அமைச்சர் அவர்கள் அரசின் சார்பிலே அறிவிப்பார்களானால் நன்றியுள்ளவனாக இருப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** : பேரவை முன்னுள்ள கேள்வி :

" 1986 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 61/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1986 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 61/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

## (ஏ) கோயம்புத்தூர் மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருவாளர்கள் அ. ரகுமான்கான், ப. பொன்னுரங்கம் ஆகியோர் அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானத்தைக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் தீர்மானத்தை மொழிவார்.



1986 நவம்பா 18]

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" ஆளுநர் அவர்களால் 30-5-1986 ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பெற்ற 1986 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/1986) இப்பேரவை நிராகரிக்கிறது."

தீர்மானம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1986 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு ** (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

திரு. அ. ரகுமான்கான் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

" 1986 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

---

**14-11-1986 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1986 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஐ) மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : : திருவாளர்கள் அ. ரகுமான்கான், ப. பொன்னுரங்கம் ஆகியோர் அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானத்தைக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் தீர்மானத்தை மொழிவார்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" ஆளுநர் அவர்களால் 19-7-1986 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற 1986 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 5/1986) இப்பேரவை நிராகரிக்கிறது ".

தீர்மானம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1986 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு **(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 63/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

திரு. அ. ரகுமான்கான் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

**14-11-1986 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





" 1986 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 63/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1986 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 63/1986) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(அ) நகராண்மைச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராண்மைச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 64/1986) அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

[1986 நவம்பர் 18

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(9) நகராண்மைச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த)
சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்
மானத்தை மொழிகிறேன் :

'' 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராண்மைச் சட்டங்கள்
(இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு **(சட்டமன்றப் பேரவை
சட்ட முன்வடிவு எண். 64/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்
பெற வேண்டும்.''

*திரு. ஜி. கே. ஜெ. ப்ரரதி : பேரவையின் துணைத் தலை
நாயகர் அவர்களே, மாநகராட்சி மற்றும் நகராட்சிகள் தொடர்
பான சட்டங்களை மேலும் திருத்துவதற்கான சட்ட முன்வடிவை
ஆய்வுக்கு எடுத்துக்கொள்கின்ற நேரத்திலே, நான் சார்ந்திருக்
கின்ற காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக சில கருத்துக்களைச்
சொல்லலாம் என்று கருதுகிறேன்.

(பிற்பகல் 12-40)

மாநகராட்சிகள், நகராட்சிகள், நகரியங்கள் ஆகிய அனைத்
திலும் உள்ள ஆசிரியர்களையும், மற்றும் ஆசிரியர்கள் பள்ளி
யிலே பணியாற்றுகிற அலுவலர்களையும் அரசு ஊழியர்களாக
மாற்றுகின்ற தன்மையிலே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்
திருக்கும் சிறப்பான நிகழ்ச்சியை உள்ளபடியே நான் வாழ்த்து
கிறேன். ஆனால், அப்படி வாழ்த்துகின்றபொழுது, இந்த ஆசி
ரியப் பெருமக்களை அரசு ஊழியர்களாக ஆக்குகின்ற நிலைமை
எந்தச் சூழ்நிலையில் நடைபெறுகிறது என்று அந்த
சூழ்நிலையையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.
குறிப்பாக முன்பு ஏ விங், பி விங் என்ற பிரிவுகளை வைத்து
இருந்தார்கள். இந்த இரண்டு பிரிவுகளையும் முன்பு கல்வி அமைச்
சராக இருந்த மாண்புமிகு திரு. அரங்கநாயகம் அவர்கள் ஒன்றாக
சேர்த்து ஒரு வரையறைக்குள் உட்படுத்தினார்கள். அதில்
கூட பதவி உயர்வு என்று சொல்லுகின்றபோது பல்வேறு துறை
களிலே இருந்த ஆசிரியர்கள் நீதி மன்றத்திற்குச் சென்று அரசு
ஊழியர்களாக முறையிட வேண்டிய சூழ்நிலை இருந்தது. அப்
படிப்பட்ட சூழ்நிலையில் இருக்கின்றபோது இப்போது நகரியங்களி
லும் மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும் உள்ள ஆசிரியர்களை

** 14-11-1986 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்
வெளியிடப் பெற்றுள்ளது.





அரசு ஊழியர்களாக எடுத்து இருக்கிறார்கள். இப்படி எடுத்து
இருக்கின்ற அரசு ஊழியர்களை எந்தத் தகுதியின் அடிப்படை
யில் நீங்கள் தேர்ந்தெடுக்கப் போகிறீர்கள். குறிப்பாக
தலைமை ஆசிரியர்களை அப்படி எடுப்பதாகச் சொல்லுகிறீர்கள்.
மிக்க மகிழ்ச்சி. அப்படி எடுப்பதன் மூலம் ஆசிரியர்களின்
உணர்வுகளை எல்லாம் பார்த்து, அவர்களை செலக்‌ஷன்
கிரேடு, ஸ்பெஷல் கிரேடு என்று பிரிக்கும் போது எந்த அடிப்
படையில் தேர்ந்தெடுக்கின்ற சூழ்நிலை என்பதை ஒரு வரை
யறைக்குள் உட்படுத்தி அரசு ஊழியர்களாக ஆக்குகின்ற நல்ல
சூழ்நிலை இருக்குமானால் மிகவும் சிறப்பாக இருக்கும்.

மேலும் பி விங்கில் 5 வருடம் எக்ஸ்பிரியன்ஸ் பட்டறிவு
பெற்று இருந்தால் அவர்கள் தலைமை ஆசிரியராக வர முடியும்.
ஆனால் ' ஏ ' விங்கில் இருப்பவர்கள் 15 ஆண்டுகள் பட்டறிவு
பெற்றால்கூட தலைமை ஆசிரியராகவோ சிறப்பு ஆசிரியராகவோ
வரமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படி இருக்கும்
போது இப்போது நம்முடைய நகரியங்களில், மாநகராட்சிகளில்,
நகராட்சிகளிலிருந்து எடுக்கப்படுகின்ற பள்ளி ஆசிரியர்களை எந்த
அடிப்படையில் எடுக்கப் போகிறீர்கள்? ' சி ' விங்கா? அப்படி
எடுத்து 'சி' விங்கிலிருந்து புரமோஷன் கொடுக்கின்றபோது எந்தச்
சூழ்நிலையில் எடுக்கப்படும் என்ற உணர்வுகளுக்கு எல்லாம் ஒரு
வரையறை செய்து ஆகவேண்டும். மேலும் நம்முடைய தமிழகப்
பள்ளி வளர்ச்சியை எண்ணும் கருத்துமாக எண்ணுகிறபோது
இந்தப் பள்ளியினுடைய ஆசிரியர்கள் சிறப்பாக பணியாற்றி
னாலும் இல்லையென்றாலும் கூட அந்த ஆசிரியர்களின் பிரச்
சினைகள் ஏராளமாக இருக்கின்றன. குறிப்பாக இந்த
செலக்‌ஷன் கிரேடு, ஸ்பெஷல் கிரேடு போன்றவை தருகின்றபோது
எந்த அடிப்படையில் தருகிறார்கள் என்ற ஒரு நிறைவான
சூழ்நிலை இருக்கும் வரையில் அவர்களுக்குச் செய்யவேண்டும்.

மேலும் ஒரே இடத்திலிருந்து பல்வேறு இடங்களுக்கு மாற்ற
வேண்டிய சூழ்நிலை இப்போது உருவாகப் போகிறது.
வேண்டிய சூழ்நிலை பொறுத்தவரையில் ஒரு சில நகரங்களில்
மாநகராட்சிகளைப் பொறுத்தவரையில் பல்வேறு இடங்களுக்கு மாற்ற
இருந்தாலும் நகராட்சிகளுக்குள் பல்வேறு இடங்களுக்கு மாற்ற
வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அப்படி மாற்ற வேண்டிய
சூழ்நிலையில் ஒரு குறிப்பிட்ட வரையறையை அரசு உருவாக்க
வேண்டும். சில அரசு ஆசிரியர்கள் கூட ஒரே இடத்தில் 15
ஆண்டுகள், 20 ஆண்டுகள் என்று இருந்து, அந்த ஊரில் உள்ள
மக்கள் மத்தியில் ஒரு அரசியல்வாதியைப்போல இயங்குகின்றவர்
களாக இருக்கிறார்கள். அவர்கள் மாற்றப்படவேண்டும்.
அப்படி மாற்றுகின்றபோது எந்த ஆசிரியரை மாற்றுகின்றார்களோ
அதே பாட ஆசிரியரைப் போடவேண்டும். குறிப்பாக அறிவியல்
ஆசிரியரை மாற்றினால் அதே அறிவியல் ஆசிரியரைத் தான் போட
வேண்டும். அறிவியல் ஆசிரியரை மாற்றிவிட்டு அதற்கு பதில்
சணக்கு ஆசிரியர்களைப் போடுகிறார்கள். இப்படிப்பட்ட
சூழ்நிலை இல்லாமல், எந்த ஆசிரியரை மாற்றுகிறார்களோ அதே
ஆசிரியரைப் போடவேண்டிய சூழ்நிலையை உருவாக்கவேண்டும்.

[திரு. ஜி. கே. ஜெ. பாரதி] [1986 நவம்பர் 18

மேலும் பல்வேறு கிராமங்களுக்குச் செல்வதற்கு ஆசிரியர்கள் தயங்குகிறார்கள். அவர்கள் கிராமங்களுக்குச் செல்லுகின்ற முறையில் அவர்களை ஊக்குவிக்கின்ற சூழ்நிலையில் நல்ல திட்டங்களை நாம் உருவாக்கவேண்டும். கண்டிப்பாக ஒரு கிராமத்தில் குறைந்தது 3 ஆண்டுகள், 5 ஆண்டுகள் பணியாற்றவேண்டும் என்ற ஒரு வரையறையை ஏற்படுத்தி அந்தப் பள்ளியில் ஒரு சிறப்பான சூழ்நிலையை உருவாக்கலாம்.

மேலும் மெடிக்கல் ரீ—இம்பர்ஸ்மெண்டு என்ற மருத்துவர் சலுகைகள் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவது இல்லை. அரசு ஆசிரியர்களுக்கு மட்டும் வழங்குகிறார்கள். தனியார் பள்ளிகளுக்குக் கூட சட்ட திருத்தம் கொண்டுவர இருக்கிறார்கள் கல்வி அமைச்சரவர்கள். இந்தச் சட்ட திருத்தத்திற்கு முன்னால் மெடிக்கல் ரீ—இம்பர்ஸமெண்டு என்று சொல்லுகின்ற அந்த மருத்துவ வசதியை செய்து கொடுப்பதற்கு இல்லை என்றாலும் அவர்களுக்கு அலவன்ஸ் ஆக நம்முடைய அரசு கொடுக்கலாம். குறிப்பாக மருத்துவ அலவன்ஸ் என்ற முறையில் நம்முடைய மற்ற ஆசிரியர்களுக்குக் கொடுப்பதைப் போல அவர்களுக்கும் கொடுத்தால் நலமாக இருக்கும் என்று நான் எண்ணுகிறேன்.

மேலும் நம்முடைய பள்ளிகளில், அரசு பள்ளிகளாக இருந்தாலும் சரி, மற்றும் தனியார் பள்ளிகளாக இருந்தாலும் சரி, இப்போது ஆங்கில மோகம் அதிகமாக இருப்பதை நாம் அறிவோம். ஆங்கில வகுப்பு அதிகமாக வேண்டும் என்று அரசியல் சூழலில் எண்ணுகிறார்கள். இப்படி அரசியல் சூழலில் எண்ணுகிறபோது (குறுக்கீடு) நான் கல்வி மானியமாக நினைத்துப் பேசவில்லை. ஆசிரியர்கள், அலுவலர்கள் பிரச்சினை என்பதால் சொல்லுகிறேன். எனக்கும் தெரிகிறது. (மணியடிக்கப்பெற்றது) சட்டத்தை கொண்டுவருகிறபோது அடிப்படை பாதிக்கப்படக்கூடாது, ஸ்ட்ரக்ச்சர் உடையாமல் இருக்கவேண்டும் என்பதுதான் எனது வேண்டுகோள். இந்த ஆசிரியர்கள் பிரச்சினை என்று சொல்லுகிறபோது, ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்படுகின்றபோது அரசு ஊழியர்களுக்கான சலுகைகளை அவர்கள் பெறவேண்டும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்.

மேலும் அரசு ஊழியர்களாக ஆக்குகின்றபோது மாநகராட்சியில் செக் மூலமாக ஊதியம் வழங்குவது போன்று, எல்லா ஊழியர்களுக்கும் அதை விரிவுபடுத்தினால் சிறப்பாக இருக்கும்.

மேலும் தனியார் பள்ளிகளை எடுக்கின்ற போது ஒரு வரையறை செய்து, தலைமை ஆசிரியர்களையும் இந்த அரசு ஊழியர்களாக ஆக்குகின்றோம் என்கிறீர்கள். என்னுடைய தொகுதியில் ஒரு தனியார் கன்னியர் குருகுல பெண்கள் உயர்



1986 நவம்பர் 18] ]திரு. ஜி. கே. ஜெ. பாரதி]

நிலைப் பள்ளியிலிருந்தும் அரசு ஊழியர்களாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி அந்த ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக எடுக்கப்பட்டபிறகும் அங்கே ஒரு தலைமையாசிரியர், ஜி. விசாலாட்சி என்பவர் 18 ஆண்டுகளாக தனியார் துறையிலேயே தலைமை ஆசிரியையாக இருந்திருக்கிறார். அவர்களை அரசு ஊழியர்களாக எடுக்கும் நாள் எப்பொழுது? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது கார்ப்பொரேஷன் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவது பற்றியது. தனியார் பள்ளிகளைப் பற்றியது அல்ல. பில்லையொட்டி பேசுங்கள். நிறைய பில்கள் இருக்கின்றன.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : தனியாராக இருந்தது இப்போது அரசாக ஆக்கப்பட்டது. அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்ட பிறகு, அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும். அதே போன்று தலைமை ஆசிரியர்களாக இருக்கின்றவர்கள் தலைமை ஆசிரியர் ஊதியத்தைப் பெறுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு அந்தப் பதவியைத் தருவதுடன் சீனியாரிட்டியையும் கொடுத்தால் நன்றாக இருக்கும். அரசு ஊழியர்களாக ஆக்கப்படுகின்ற ஆசிரியர்களின் நிலையை, நம்முடைய மேலவை இல்லையென்றாலும், அதன் சார்பாக நான் இங்கே பேசுகின்றேன். அரசு ஊழியர்களாக ஆக்குகின்றபோது, நகரியங்கள், நகராட்சிகள், மாநகராட்சிகள் போன்றவற்றில் இருக்கின்ற ஆசிரியர்களுடைய வளர்ச்சிக்காக இந்தச் சட்டமுன்வடிவு பயன்பெறவேண்டும். எல்லா அரசு ஊழியர்களுக்கும் தரப்படுகின்ற சலுகைகளை, இந்த ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குகின்றபோது, ஒரு வரையறை செய்து, அதன் மூலமாக அவர்களுக்கும் அளித்து, நன்மை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நினைவுபடுத்தி, சட்டமுன் வடிவின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வந்திருக்கக்கூடிய சட்ட முன் வடிவை ஆளும் கட்சி கொண்டு வந்திருக்கிறது என்ற காரணத்தால் தி.மு.க. நாங்கள் எதிர்க்கவில்லை. இதை நாங்கள் ஆதரிக்கின்றோம். ஆனால் அதே நேரத்தில், நகராட்சி, டவுன்ஷிப் இவற்றிலுள்ள ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள், உட்பட அனைவரும் அரசாங்க ஊழியர்களாக ஆக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை வருகின்ற நேரத்தில், அரசாங்கம் இன்னொரு அம்சத்தைப் பார்க்கத் தவறிவிட்டது. இன்றைக்குத் தனியார் பள்ளிகளில் ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அரசாங்க ஊழியர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்களா? என்றால், இல்லை. ஆனால் குறிப்பிட்ட சில நகராட்சிகளில் இருக்கிறவர்கள் மட்டும்தான் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். தனியார் பள்ளிகளில் இருக்கின்ற ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள்

[திரு. அ. ரகுமான்கான்] [1986 நவம்பர் 18

இன்றைக்கு அரசாங்க ஊழியர்களாக ஆக்கப்படாததால் இரண்டு வர்க்கங்கள் உருவாக்கப்படுகின்றன. காரணம், அரசாங்க ஊழியர்களாக இந்த ஆசிரியர்கள் ஆக்கப்படுகின்றபோது, அவர்களுக்குப் பல சலுகைகள் கிடைக்கின்றன. இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப் போல், தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இந்தச் சலுகைகள், அரசாங்க ஊழியர்களாக ஆக்கப்படாததால் கிடைக்காமல் போகின்றன. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், வீட்டு வாடகைப் படி. அரசாங்க ஊழியர்களாக ஆக்கப்பட்டவர்களுக்கு அந்தச் சலுகை கிடைக்கிறது. ஆனால் தனியார் பள்ளிகளில் பணிபுரிகிறவர்களுக்கு இது கிடைக்காது.

அதே போன்று மெடிகல் ரீ-இம்பர்ஸ்மெண்ட். அரசாங்க ஊழியர்களுக்குக் கிடைக்கின்ற இந்த மெடிகல் ரீ-இம்பர்ஸ்மெண்ட் சலுகை, தனியார் பள்ளி ஆசிரியர்கள் அரசாங்க ஊழியர்களாக ஆக்கப்படாததால் அவர்களுக்கு கிடைக்காமல் போகிறது.

இதைப் போல் இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். ஒருவர் பணியில் இருக்கும்போது இறந்துவிட்டால், அவருடைய வாரிசுதாரருக்கு ரூ. 20,000 கிடைக்கிறது. தனியார் பள்ளிகளில் இருக்கின்ற ஆசிரியர்கள், அரசு ஊழியர்களாக ஆக்கப்படாததால், அவர்களுக்கு தற்போது இந்தத் தொகை கிடைக்குமா என்று எனக்குத் தெரியாது. ஆகவே, ஆசிரியர் மத்தியிலே இரண்டு விதமான நிலைமைகள் இருப்பதைத் தவிர்த்து, அரசாங்க ஊழியர்கள் என்ற சலுகைகள், அந்த பெனிபிட்ஸ், தனியார் பள்ளிகளில் வேலை பார்க்கக் கூடிய ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுக்கும் போய்ச் சேர வேண்டும் என்பதை உங்கள் மூலம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

இன்னொன்றையும், அருமை இந்திரா காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் சுட்டிக் காட்டியதைப் போல், சீனியாரிட்டியைப் பற்றியது. இப்போது அவர்கள் அரசாங்க ஊழியர்களாக எடுத்து கொள்ளப்படுகிறார்கள். அப்படியானால், அவர்களுடைய கடந்த கால சீனியாரிட்டி குறித்து, இப்போது இந்த அரசாங்கம் என்ன முடிவு எடுக்கப் போகிறது? காரணம், அந்த சீனியாரிட்டி பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும். ஏற்கலவே அவர்கள் வாங்கிய சம்பளம் விகிதங்கள் பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும். அரசாங்க ஊழியர்களாக இருக்கின்றபோது, சம்பள விகிதம் உயர வேண்டுமே தவிர, குறைந்து போய்விடக் கூடாது. சீனியாரிட்டியும் பாதிக்கப்படக் கூடாது. இது குறித்து அமைச்சரவர்கள் தங்களுடைய பதிலிலே சொல்வார்களேயானால், சிறந்ததாக இருக்குமென்று கருதுகிறேன்.



1986 நவம்பர 18] [திரு. அ. ரகுமான்கான்]

(பிற்பகல் 12-50)

அடுத்து, அரசாங்க ஊழியர்களாக டவுன் ஷிப்பில் வேலை பார்க்கக்கூடிய ஆசிரிய பெருமக்களை ஆக்குகின்ற அதே நேரத்தில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். நீங்கள் யாரை அரசாங்க ஊழியர்களாக ஆக்குகின்றீர்களோ அவர்களுடைய பிரச்சனைகள் இன்னும் கோரிக்கையற்று இருப்பதை இந்த நேரத்தில் என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. நான்காவது சம்பளக் கமிஷன் கொண்டு வந்தோம். அதிலே குறைபாடுகள் இருப்பதாக,—யாரை நாம் அரசாங்க ஆசிரியர்களாக அறிவித்திருக்கிறோமோ, அந்த ஆசிரியர்களுக்கே குறைகள் உண்டு—அந்தக் குறைகளைக் களைவதற்காக, கார்த்திகேயன் கமிஷன் போட்டோம். அதனுடைய விவரங்கள் முழுவதும் உறுப்பினர்களுக்குத் தருகின்ற விதத்திலே நிலைமை இல்லை. இனியாவது அதைத் தெரிந்து கொள்வதற்கு......(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பில்லிலே பேசுங்கள். கார்த்திகேயன் குழு பற்றி நிதியமைச்சர் அவர்கள் இருந்தால்தான் பதில் சொல்ல முடியும். நீங்கள் பேசிக்கொண்டே போனால் பதில் சொல்வதற்கு வாய்ப்பு இருக்காது.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தவறாக தாங்கள் புரிந்துகொள்ளக் கூடாது. டவுன் ஷிப் முனிசிபாலிட்டியில் வேலை பார்க்கக்கூடிய ஆசிரியர்களை, அரசாங்கம் அரசாங்க ஊழியர்களாக ஆக்குகின்றது. அதையொட்டிய அடுத்த கருத்து, தனியார் பள்ளிக்கூடத்தில் வேலை பார்ப்பவர்களையும், அரசாங்க ஊழியர்களாக ஆக்கி, அந்த பெனிஃபிட்ஸ் அவர்களுக்குப் போய்ச் சேர வேண்டும். அதையொட்டிய மூன்றாவது கருத்து யாரை நாம் அரசாங்க ஊழியர்களாக ஆக்குகின்றோமோ, எந்தப் பலன் போய்ச் சேரவேண்டுமென்று கருதுகின்றோமோ, அவர்களுக்கு இன்னும் பலன் போய்ச் சேரவேண்டும். அந்த அடிப்படையிலே நான்காவது சம்பளக் கமிஷனிலே அவர்களுக்குக் குறைபாடுகள் உண்டு. ஆசிரியர்கள் பணியாற்றுகின்றார்கள் ஒரே கிரேடில் இருக்கக் கூடிய மற்றவர்களுக்கு அதிகமான சம்பளமும், அதே கிரேடில் வேலை பார்க்கக்கூடிய ஆசிரியர்களுக்குச் சம்பளம் குறைவாகவும் இருக்கிறது. இந்த அனாமலி, இந்த முரண்பாடு இந்த வேறுபாடு மாற்றப்பட்டு அவர்களுக்கு பெனிஃபிட்ஸ் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஆசிரியர்கள் கோரிக்கை வைத்தார்கள். போராடினார்கள். சிறைக்கு போனார்கள். கைது செய்யப்பட்டார்கள், கருப்பண்ணன் என்ற ஆசிரியர் சிறையிலே செத்தார். இவ்வளவுக்கும் பிறகு கமிஷன் போடப்பட்டது. கார்த்திகேயன் வந்தார். ரிப்போர்ட் சப்மிட் பண்ணினார். ஆனால் அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா என்றால் இல்லை....(குறுக்கீடு).

[1986 நவம்பர் 18

மாண்புமிகு [illegible], துணைத் தலைவர் : அரசு ஊழியர் களாக ஆக்கு[illegible] ஆசிரியர்களுக்கு இதையெல்லாம் செய்யுங் கள் என்று [illegible] போதும். நீங்கள் ஆசிரியர்கள் போராட்டம் [illegible] அவர் மாரடைப்பால் இறந் தார் என்று [illegible] சொல்வார்கள். நான் இங்கிருந்து பேசுவதால் [illegible] (குறுக்கீடு).

மாண்புமிகு [illegible] ண்முகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அ[illegible] பாடசாலையை அரசுடைமை யாக்குவது ப[illegible] பேசிக் கொண்டிருக்கிறார். இது நகராண்மைக் [illegible] கின்ற, மாநகராட்சியில் பணி யாற்றுகின்ற [illegible] லோரும் அரசு ஆசிரியர்களாக ஆக்குவதைப் [illegible] இதுபற்றிய கருத்து தெரிவித்தால் பரவாயில்லை. [illegible] வேண்டாம் என்பதுதான் கருத்து. வேண்டும் என[illegible] ரும் சொன்னார்கள். ஆகவே, சட்டத்தில் ஒ[illegible] அகவே, பிரச்சினை ஒன்றும் இல்லை. இ[illegible] ல்வித்துறை மானியத்திலே பேச வேண்டிய பிர[illegible] இதிலே பேசினால் யாரும் பதில் சொல்வதற்கில்லை.

திரு. அ. [illegible] : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கல்வித்துறை மானியம் வருகின்றபோது இதற்கான விளக்கம் தருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் முரண்பட்டு வாதம் செய்வதாக தயவுசெய்து யாரும் கருதக் கூடாது. தனியார் பள்ளிக்கூடங்களில் வேலை பார்க்கக்கூடிய ஆசிரியர்கள் என்னிடத்தில் மனு கொடுத்து, இந்தப் பிரச்சனை வருகின்றபோது, சட்டமன்றத்திலே சொல்லி, அரசாங்கம் எங்களுக்கு ஏதாவது சில நல்ல காரியங்களைச் செய்வதற்கு உங்கள் பேச்சின் மூலம் துணை செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டதனால்தான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வந்து, சம்பந்தப்பட்ட பிரச்சனையாக இருக் கின்ற காரணத்தினாலேதான் நான் இதைச் சொன்னேனே தவிர மற்றபடி அமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கம் கொடுக்கக் கூடிய நிலையில் இப்போது இல்லாமல் இருக்கலாம். ஆனால், பரிசீலிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் குறிப்பிடு கிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. ஆக, ஆசிரியர்கள் அர சாங்க ஊழியர்களாக ஆக்கப்படுவதை நான் எங்களுடைய திரா விட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வரவேற்கிறேன். அதே நேரத்தில் அவர்களுடைய கோரிக்கைகள் கோரிக்கையற்று கிடக்கின்றன. அவற்றையும் நிறைவேற்ற சர்க்கார் முயற்சிக்க வேண்டும் என்று வேண்டுகிறேன்.

*திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற 1986 ஆம் ஆண்டு



1986 நவம்பர் 18] [திரு. செ. செம்மலை]

தமிழ்நாடு நகராண்மைச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவை வரவேற்று அதற்கு ஆதரவான ஒருசில கருத்துக் களை இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன். மாநகராட்சிகள், நகராட்சிகள், நகரியங்களில் பணிபுரிகின்ற அனைத்து ஆசிரியர் களும், அனைத்து அலுவலர்களும் முழு நேர அரசுப் பணியாளர் களாக ஆகின்ற ஒரு தன்மையில் இந்தச் சட்டம் வகை செய் வதை நான் உள்ளபடியே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியில் கோரிக் கைகள் எந்த அளவுக்கு நிறைவேற்றப்படுகின்றன, அதுவும் நியாயமான கோரிக்கைகளை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றபோது, எப்படி அவை பரிசீலிக்கப்பட்டு நிறை வேற்றப்படுகின்றன என்பதற்கு இந்தச் சட்டம் ஒரு உதாரண மாக, ஒரு சாட்சியாக இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் சொல்லியாக வேண்டும்.

இன்றைக்கு உள்ளாட்சி அமைப்புகளின் கீழ், அவற்றினுடைய கட்டுப்பாட்டின் கீழ் இருந்த இந்த அலுவலர்கள், அரசாங்க அலுவலர்களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். எனவே, சலுகைகளை, உரிமைகளை அவர்கள் கேட்டு பெற்றிருக் கின்ற இந்த நேரத்தில், நான் அவர்களுக்கு இந்த மன்றத்தின் மூலமாக நினைவுபடுத்த விரும்புவது, எப்படி சலுகைகளை, உரிமைகளைக் கேட்டுப் பெற்றார்களோ, அதே போல், தங்களுடைய கடமையிலே அவர்கள் அலட்சியப் போக்குகளைக் காட்டக்கூடாது. அலட்சியத்தோடு நடந்து கொள்ளக் கூடாது என்பதுதான். காரணம், பொதுவாக பொது மக்களிடம், இப்படி உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் பணியாற்றிக்கொண்டிருக்கிற அலுவலர்கள், அரசு ஊழியர்க ளாக மாற்றப்படுகிற நேரத்தில் அவர்களுடைய quality of work—வேலையினுடைய தன்மை—குறைந்து வரு கிறது என்ற ஒரு குற்றச்சாட்டு பரவலாக இருந்து வருகிறது. எனவே, நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது—இப்படி அவர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்படும்போது, அவர் களுடைய பணிகள் அல்லது நான் எடுத்துச் சொன்ன அந்த Quality of work எந்த வகையிலேயும் குறைந்து விடாமல் பார்த்துக் கொள்வதற்கு அந்தச் சம்பந்தப்பட்ட துறை பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். இந்த அரசு அதிலும் அக்கறை செலுத்த வேண்டும் என்று நான் பணிவன் போடு கேட்டுக்கொள்கிறேன். காரணம், சலுகைகளை வழங்கி விட்டு, சங்கடங்களைத் தேடிக் கொள்ளக்கூடிய வகையில் இந்தச் சட்டம் இருந்துவிடக்கூடாது. அதேபோல், உரிமை களைக் கொடுத்துவிட்டு, உபத்திரவங்களை வாங்கிக் கொள் ளும் ஒரு சட்டமாக அமைந்துவிடக்கூடாது என்ற அக்கறை உணர்வோடுதான் இதை இந்த மன்றத்தின் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

[திரு. செ. செம்மலை] [1986 நவம்பர் 18

எனவே, சலுகைகளையும், உரிமைகளையும் பெற்று, அந்த உள்ளாட்சி அமைப்புக்களின் கீழ் பலனைப் பெற்றுக் கொண்டிருக்கிற அந்த அதிகாரிகள், அலுவலர்கள் தயவு செய்து கடமையுணர்வோடு இதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே எனக்கு முன்னாலே பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாண்புமிகு உறுப்பினர் அருமைச் சகோதரர் திரு. ரகுமான்கான் அவர்கள் தனியார் பள்ளியினுடைய ஆசிரியர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது என்று கேட்டார்கள். நிச்சயமாக, வேண்டுமென்றே தெரிந்தே மறைத்து அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார் என்று கருதுகிறேன். காரணம், நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில்தான் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குப் பாதுகாப்புச் சட்டங்கள் இரண்டை இயற்றி அவர்களுக்கு நேரடியாக சம்பளம், மேலும் அந்த ஆசிரியர் சங்கங்கள் இந்த அரசுக்கு முன் வைத்த அத்தனை பிரச்சினைகளையும் முடித்து, அவர்களுக்கு முழுக்க, முழுக்க பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை அவர் மறந்து விடவில்லை. மறந்ததுபோல் நினைத்துப் பேசியிருக்கிறார் என்றுதான் நான் இந்த நேரத்தில் அவர் பேச்சை எடுத்துக் கொள்ளமுடியும்.

அவர் சொன்ன கருத்தில் கூட, தனியார் பள்ளிகளை நாம் எடுத்துக்கொள்ளாதவரை, அந்தப் பள்ளிகளிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவதற்கு முடியாத ஒரு நிலை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலைமையில் அவர்களுக்கு நல்ல பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் கேட்ட நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற அக்கறையோடுதான் அரசு இந்த முடிவுக்கு வந்து இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அதை நான் உள்ளபடியே வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதோடு, அரசு ஒரு கொள்கைப் பிரச்சினையில் முடிவு எடுக்கிறபோது, அல்லது அறிவிக்கிறபோது, அதன் தொடர்பான ஒரு சில பிரச்சினைகளிலும் அதிகாரிகள் அல்லது சம்பந்தப்பட்ட துறை கவனம் செலுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதிலே ஆசிரியர்களை நாம் அரசு ஊழியர்களாக ஆக்கியிருக்கிறோம். அந்த ஆசிரியர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிற நகராட்சிகளுக்கு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு உட்பட்ட பள்ளிக்கூடங்களை என்ன செய்திருக்கிறோம் என்பதற்கு இதில் விளக்கம் இல்லை.



1986 நவம்பர் 18] [திரு. செ. செம்மலை]

ஏற்கனவே, ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கிற ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கியபோது, அந்தப் பள்ளிக்கூடங்களை எந்த அமைப்பின்கீழ் கொண்டு வருவது என்று திட்டவட்டமான முடிவை எடுக்கமுடியாமல் போனதனாலே இன்றைக்கு அந்தப் பள்ளிக்கூடங்களை எந்தத் துறை பராமரிப்பது, கல்வித் துறை பராமரிப்பதா, உள்ளாட்சித் துறை பராமரிப்பதா என்ற கேள்விக்குறியுடன், பழுதடைந்த கட்டிடங்கள் பழுது பார்க்கப்படாமல் இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இன்றைக்கு ஒன்றியத்தினுடைய துவக்கப் பள்ளிக்கூடம் என்ற பெயரைத் தாங்கி இருந்தாலும், ஊராட்சி ஒன்றிய அமைப்புகளில் அந்தப் பள்ளிக்கூடங்களைப் பழுது பார்க்க நிதி ஒதுக்கீடு இல்லாததால், அந்தப் பள்ளிக்கூடங்களை பழுது பார்க்க முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன என்று சொல்ல விரும்புகிறேன். காரணம், இதுவரை உள்ளாட்சி அமைப்புக்களுக்கு வந்து கொண்டிருந்த அந்த education grant இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. எனவே, உள்ளாட்சி அமைப்புக்களிடம் அந்தக் கட்டிடங்களைப் பழுது பார்க்க பணம் கிடையாது. பணம் இல்லாத நிலையில், மேலும் ஒன்றியத்திலே பொது நிதி இல்லாத நேரத்தில் நாம் என்னதான் அரசு ஊழியர்களாக ஆக்கினாலும் அந்தப் பள்ளிக்கூடங்கள் பராமரிப்பு இல்லாமல், திரும்பிக் கூடப் பார்க்கப்படாமல் இன்றைய தினம் இருந்து வருகின்றன என்பதை கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இந்தப் பிரச்சினை குறித்து, நான் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே வைத்தபோது கூட, அந்தக் கட்டிடங்கள் எல்லாம் கல்வித்துறைக்கு மாற்றப்படுவதற்கு அரசு கொள்கை அளவிலே ஒத்துக்கொண்டிருக்கிறது என்ற பதில்தான் வந்தது.

(பிற்பகல் 1-00)

எனவே, கல்வித் துறைக்கு அந்தக் கட்டிடங்கள் மாற்றப் படுகிற வரை, ஊராட்சி ஒன்றியங்களே அந்தப் பள்ளிக் கட்டிடங்களைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அரசு மூலமாகப் பதில் அனுப்பப்பட்டிருந்தது என்று சொன்னார்கள். அதையொட்டி நான் இப்போது ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களிடம் நிதி கிடையாது. இப்படி நிதி இல்லாத நிலையில் அவை எந்த நிதியிலிருந்து, எப்படி அந்தக் கட்டிடங்களைப் பராமரிப்பது என்று தத்தளித்துக் கொண்டிருக்

[திரு. செ. செம்மலை] [1986 நவம்பர் 18

கின்றன. எனவே மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்
அவர்களை நான் ஒன்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.
பாதுகாப்பு இல்லாமல், பராமரிப்பு இல்லாமல் இருக்கிற
பள்ளிக்கூடக் கட்டிடங்களைப் பராமரிக்கும் பொறுப்புக்கள்
கல்வித் துறைக்கு ஒப்படைக்கப்படுகிறவரை உள்ளாட்சிமன்றங்
களும் ஒன்றியங்களுமே அந்தக் கட்டிடங்களைப் பழுது
பார்த்து பராமரிக்க வகை செய்யும் முறையில் ஏதாவது
ஒரு தனி நிதி ஒதுக்கம் செய்ய வேண்டும். அதற்கான வழிவகை
செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நேற்றையதினம்கூட மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்
இங்கே அவையில் துணை மதிப்பீட்டை அளிக்கும்போது
இதைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. இருந்தாலும் இனி
மேலாவது உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான பள்ளிக்
கட்டிடங்களைப் பழுது பார்ப்பதற்கு என்று ஒரு தனி ஒதுக்
கீட்டைச் செய்ய வேண்டும். இந்தக் கட்டிடங்களையெல்லாம்
கல்வித் துறையிடம் ஒப்படைத்து அவர்கள் பராமரிப்பை
ஏற்றுக் கொள்கிற வரை இந்த இடைக் காலத்திற்கான
பொறுப்பை உள்ளாட்சி அமைப்புகளே மேற்கொள்ளும்
வகையில் நிதி ஒதுக்கம் செய்ய வழிவகை செய்ய வேண்டும்
என்று கேட்டு, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று,
வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

*திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் நோக்கத்தை
நான் வரவேற்கிறேன். காலத்திற்கு ஏற்றதொரு சட்டமாக
அமைந்திருப்பதைப் பார்த்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.
ஆனால் இதோடு தொடர்புடைய பல்வேறு பிரச்சினை
களுக்குத் தெளிவு பெற வேண்டிய நிலையில் இருக்கிறேன்
என்றும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தலைமை ஆசிரியர்கள் உட்பட ஆசிரியர்கள் அனைவரும்
அரசு ஊழியர்களாக மாற்றப்படுகிற நேரத்தில் மாநகராட்சி
யிலும், நகராட்சிகளிலும் மற்றும் பஞ்சாயத்துக்களிலும்
பணியாற்றுகிற மற்ற ஊழியர்களுடைய நிலைமை என்ன
என்று நான் அறிய விரும்புகிறேன். ஆசிரியர்களுக்கு மட்டும்
இந்தச் சலுகை கிடைத்தால் போதாது. மற்ற அனைத்து
ஊழியர்களுக்கும் மாநில அரசு வழங்குகிற சம்பளம்—ஊதியக்
குழுவின் பரிந்துரை பேரில் தரப்படுகிற ஊதிய உயர்வு மற்றும்
உள்ள சலுகைகள் அனைத்தையும் அவர்களுக்கு வழங்கு
வதற்கு அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தனியார்த் துறை பள்ளிகளைப்பற்றி கல்வி இலாக்காதான்
பேசவண்டும் என்று அமைச்சர் அவர்கள் விளக்கம் கூறி
னார்கள். உண்மைதான். ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தில்



1986 நவம்பர் 18) (திரு. வி. பி. சிந்தன்)

தனியார் பள்ளி ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக
ஆக்க வேண்டுமென வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.
50,000-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் சிறைக்குச் சென்ற
ஒரு காட்சியை இந்த மாநிலத்தில்தான் நாம் பார்த்
தோமே ஒழிய மற்ற எந்த மாநிலத்திலும் அத்தகைய துர
திருஷ்டமான நிலைமை ஏற்படவில்லை. பல்வேறு அமைப்பு
களைச் சார்ந்த ஆசிரியர்கள் எல்லாம் ஒன்றாக இணைந்து
நின்று நீண்ட காலமாகக் கேட்டுக் கொண்டு வந்த கோரிக்கைளை
ஏற்றுக்கொள்ளாத காரணத்தால்தான் இந்த எழுச்சி ஏற்பட்டது.
ஆனால் எதிர்க்கட்சிகளுடைய சூழ்ச்சிதான் இதற்கெல்லாம் கார
ணம் என்று உங்கள் தரப்பில் சொன்னாலும், உண்மையில் எதிர்க்
கட்சிக்காரர்கள் எந்த சூழ்ச்சி செய்தாலும் ஊழியர்களு
டைய கோரிக்கைகள் முறையாக நிறைவேற்றப்படுமானால்
அந்தச் சூழ்ச்சிகள் பலிக்காது என்பதை நீங்களே ஒப்புக்
கொள்வீர்கள் என்று நான் கருதுகிறேன். எனவே தனியார்ப்
பள்ளி ஆசிரியர்களுடைய கோரிக்கையை அரசு கைவிட்டுவிடக்
கூடாது என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள
விரும்புகிறேன்.

மேலும் ஒரு பிரச்சினையை மாண்புமிகு அமைச்சர்
அவர்களின் கவனத்திற்கும் அரசின் கவனத்திற்கும் கொண்டு
வர விரும்புகிறேன். எந்த நிதியிலிருந்து இதைக் கவனிக்கப்
போகிறீர்கள் ? ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படக் கூடிய
சம்பளத்திற்கு மீண்டும் நகராட்சிகளும் மாநகராட்சிகளும்
''ஒரு பகுதி நிதி கொடுக்க வேண்டும்'' என்று அரசு
வற்புறுத்தப் போகிறதா அல்லது அரசே இதற்கான முழுபொறுப்
பையும் ஏற்றுக் கொள்ளப் போகிறதா என்ற விளக்கத்தை
நான் கேட்க விரும்புகிறேன்.

பள்ளிக் கட்டிடங்களைப் பாதுகாப்பதற்கும், பள்ளிக்
கட்டிடங்களை அமைப்பதற்கும், அவற்றை நடத்துவதற்குமான
பொறுப்பை கல்வி இலாக்காவே முழுமையாக ஏற்றுக்
கொண்டால் நான் திருப்தியடைவேன். தனியார்த் துறையில்
உள்ள பள்ளிகளையெல்லாம் நாட்டுடமையாக்க வேண்டுமென்ற
கோரிக்கையை நான் இப்போது வலியுறுத்தவில்லை. நடை
முறையில் அந்தக் கோரிக்கையை வைப்பதால் சில சிக்கல்கள்
ஏற்படும் என்பதை நான் உணருகிறேன். ஆனால் தனியார்த்
துறை பள்ளியாசிரியர்களுடைய சம்பளத்தைப் பொறுத்த
வரையில் அரசுத் துறை ஆசிரியர்களுக்கு இணையானதாக
இருக்க வேண்டும்.

எல்லா இடங்களிலும் நடைமுறையில் இப்போது அப்படி
இருக்கிறதா என்ற பிரச்சினைக்கு நான் போகவில்லை. என்.
ஜி.ஓ.க்களுக்கு உள்ள சர்வீஸ் கண்டிஷன்களை அவர்களுக்கும்
கொடுக்க வேண்டும். பள்ளிக்கூடங்களை நாட்டுடமையாக்கா

மல் அவற்றைச் செய்ய முடியும் என்பது என்னுடைய கருத்து. இதிலே உள்ளடங்கியுள்ள பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி இந்தக் குறுகிய நேரத்தில் பேச முடியவில்லை. இருந்தாலும் நிதி என்பது முக்கியமான பிரச்சினை. அதையும் கவனிக்கும் முறையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்தச் சட்ட முன்வடிவின் நோக்கத்தை ஏற்றுக் கொண்டு நான் அமர்கிறேன்.

**திரு. குமரி அனந்தன் :** சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன்.

***திரு. வை. பாலச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள 1986-ஆம் ஆண்டு நகராண்மைச் சட்டத் திருத்தச் சட்டமுன்வடிவை இந்து முன்னணி இயக்கத்தின் சார்பாக நான் வரவேற்கிறேன். இச்சட்டமுன்வடிவை கொண்டு வந்துள்ள இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சி, நகரீயம் ஆகியவற்றில் பணியாற்றும் ஆசிரியர்களையும், அந்த நிறுவனங்களில் பணியாற்றுகின்ற மற்ற ஊழியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்குகின்ற இந்தச் சட்டமுன்வடிவின் மீது ஆக்கப்பூர்வமான பல கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் நல்கியிருக்கிறார்கள். குறிப்பாக இந்தச் சட்டமுன்வடிவு விவாதத்திற்கு அப்பாற்பட்டு, கருத்து வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு இருக்கிறது. பல ஆயிரம் ஆசிரியப் பெருமக்களுடைய நீண்ட நெடு நாளைய கோரிக்கையை எங்கள் இனிய தலைவர், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் ஏற்று அதற்கு ஒரு புதிய வடிவம் கொடுத்து உங்களுடைய ஒப்புதலுக்காக இன்றைக்கு வைக்கப்பட்டு இங்கே விவாதிக்கப்படுகிறது.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. கே. ஜெ. பாரதி அவர்கள் சில உணர்வுகளை வெளியிட்டார்கள். அவர் பேசுகின்றபோது மாநகராட்சி, நகராட்சி, நகரீயம் ஆகிய நிறுவனங்களில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆன பிறகு அதனால் சில நிலைகளில் சில மாறுதல்கள் ஏற்படுமே என்று குறிப்பிட்டு, குறிப்பாக அவர்களையெல்லாம் பணியில் நிர்ணயிப்பது எப்படி என்ற விவரத்தையெல்லாம் கேட்டார்கள். இது வரையில் மாநகராட்சியும், நகராட்சியும், நகரீயமும் பொறுப்பேற்றுக்கொண்டிருந்த பணியை இன்றைய தினம் கல்வித் துறை ஏற்றுக்கொள்கிற சட்டமுன்வடிவு இது. ஆகவே இதற்காக ஒரு தனி குழு அரசால் நியமிக்கப்பட்டிருக்கிறது. உள்ளாட்சித் துறையிலேயிருந்து கல்வித் துறைக்கு மாற்றப்படும் இந்த ஆசிரியப் பெருமக்களும் மற்ற பணியாளர்





களும் இந்த மூன்று நிறுவனங்களிலும் ஆசிரியர்களாகவும், உள்ளாட்சிப் பணியாளர்களாகவும் இதுவரை இருந்து வந்து இந்தச் சட்டமுன்வடிவின் வாயிலாக அரசு ஊழியர்களாக மாறுகிறார்கள்.

ஒரு துறையிலிருந்து பிரிதொரு துறைக்குச் செல்லும்போது இயற்கையாக எழுகிற மாறுதலால், வளர்ச்சியால் ஏற்படுகிற பிரச்சினைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்களும், மற்ற சகோதரர்களும் எடுத்துச் சொன்னார்கள். அவற்றையெல்லாம் கண்டறிந்து அவர்களுக்கு எந்த முரண்பாடும் ஏற்படாமல் எந்த அனாமலியும் ஏற்படாமல் legitimate rights ஓடு, அதாவது நியாயமான பணி பாதுகாப்போடு அவர்களை நிர்ணயிக்கும் வகையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குழு ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை கொடுத்த பிறகு take-over சம்பந்தமான பிரச்சினை பற்றி முடிவு செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் கருத்து தெரிவிக்கின்றபோது உள்ளாட்சித் துறையிலே இருந்து கல்வித் துறைக்கு மாறுதல் செய்வதோடு மட்டுமல்லாமல் நம்முடைய ஆசிரியப் பெருமக்கள் அந்தக் கல்வியின் தரத்தையும் தொண்டினையும் உயர்த்துகின்ற வகையில் அவர்களுடைய பணி அமைய வேண்டுமென்று எடுத்துச் சொன்னர்கள். உள்ளாட்சித் துறையிலேயிருந்து ஆசிரியர்களையும், பணியாளர்களையும் கல்வித் துறைக்கு மாற்றும் அளவிலேதான் இந்தச் சட்டமுன்வடிவு, வந்திருக்கிறது. வேறு எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், கல்வித் துறை அதனைக் கவனித்து அவர்களுக்கு வேண்டிய நலன்களையும், உரிமைகளையும் நல்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த மாமன்றத்திலுள்ள அனைத்து உறுப்பினர்களும் ஒருமனதாக இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றி சொல்லி, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. வி. பி. சிந்தன் :** குழுவிலே ஆசிரியர்களுக்கு இடம் அளிக்கப்படுமா ? அவர்களுக்கும் இடம் அளிக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்துகிறேன், வேண்டுகோள் விடுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு நியமிக்கும் குழுவில் ஏதாவது மாறுதல் தேவை என்றால் ஆசிரியர்கள் அரசிடத்தில் தகவல் சொல்லலாம். அதைப் பரிசீலிக்கலாம்.

(1986 நவம்பர் 18

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' 1986-ஆம் ஆண்டு தமிழ் நாடு நகராண்மைச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 64/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும் ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1986 ஆம் ஆண்டு தமிழ் நாடு நகராண்மைச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 64/1986) நிறைவேற்றப்பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

### (ஓ) இந்து சமய அறநிலையக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1986 ஆம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய அறநிலையக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு** (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 65/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

---

** 14-11-1986 ஆம் தேதியிட்ட தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



1986 நவம்பர் 18]

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்து சமய அறநிலையக் கட்டளைகள் திருத்தச் சட்ட முன்வடிவின்மீது இந்திய தேசிய காங்கிரஸ் சார்பாக ஒருசில கருத்துக்களைச் சொல்லலாமென்று ஆசைப்படுகிறேன். இந்த மாநிலத்தைப் பொறுத்தளவிலே கட்டணங்கள் வசூலிப்பதற்கான முழு அதிகாரம் இந்த மாமன்றத்திற்கு இருக்கிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலே வசூல் செய்யப்படும் கட்டணங்களை இரண்டாக வகைப்படுத்தியிருக்கிறார்கள். சர்வீஸ் சார்ஜஸ் என்ற அளவிலே கான்ட்ரிபியூஷன் அல்லது பீஸ் என்றும், விதிக்கப்படுகிற வரிகள் 'டாக்ஸ்' என்றும் இரண்டு வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்த வகையிலே இந்தச் சட்டத்திலே ஒன்று மிகத் தெளிவாக இருக்கிறது. In respect of the Services rendered by the Government என்று சொல்லி, 7 சதவீதம் ஆக இருப்பதை 10 சதவீதமாக உயர்த்தியிருக்கிறார்கள். அதாவது, இது வரியல்ல, கட்டணம் தான் என்று சட்ட வல்லுநர்கள் சொல்லுவதுபோல சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஒரு கட்டணத்தை உயர்த்தும்போது, அந்தக் கட்டணத்தை செலுத்தும் நபர்கள் அதற்கான சர்வீசை எந்த அளவுக்குப் பெறுகிறார்கள் என்பதையும், அவர்களுக்குத் தேவையான அலுவல்கள் செய்யப்படுகின்றனவா என்பதையும் பார்க்க வேண்டும். அப்படிக் கட்டணம் வசூலிக்கும்போது கூடுதலாக வசூலிக்கப்படுகிறதா என்றும் பார்க்க வேண்டும்.

இப்போது 7 சதவீதம் கான்ட்ரிபியூஷன், 1-1/2 சதவீதம் ஆடிட்ஃபீஸ் என்று இருக்கிறது. இதுவே கூடுதல் என்று சொல்லி சென்னை உயர் நீதி மன்றத்திலே பல 'ரிட்' பெட்டிஷன்கள் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருக்கின்றன. ஏற்கெனவே வசூலிக்கப்படும் பணம் கூடுதலா குறைவா என்பது குறித்து வழக்கு நீதிமன்றத்திலே இருக்கும்போது, அடிமேல் அடி விழுவதுபோல, 7 சதவீதம் என்பதை 10 சதவீதமாகவும், 1-1/2 சதவீதம் என்பதை 4 சதவீதமாகவும் உயர்த்தியுள்ளதை நான் ஆட்சேபிக்கிறேன். சட்டத்திலே மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. 'For the services rendered' என்று சொல்லும்போது, இன்றைக்கு இந்தத் துறையில் என்ன சர்வீஸ் செய்யப்படுகிறது, என்ன ஆடிட் செய்யப்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

1,000 ரூபாய்க்கு மேலே வருமானம் உள்ள கோவில்களுக்கு 'ஆடிட்' என்று சொல்லப்படுகிறது. மிகச் சிறிய கோவில்களை எல்லாம் துறை எடுத்துக்கொள்வதால், அந்தக் கோவில்களின் சர்வீஸ் சார்ஜ் உயர்ந்துகொண்டு போகிறது. குறைந்தபட்சம் மாதம் 500 ரூபாய்க்குக் கீழே வருமானம் வரக்கூடிய கோயில்கள், அதாவது வருடத்திற்கு 6,000 ரூபாய்க்குக் கீழே வருமானம் வரக்கூடிய கோயில்களுக்கெல்லாம், இன்றைக்கு எப்படி 'அப்பர் லிமிட்' என்று வைத்து, அதற்கும்

இன்கம் டாக்சிலே, ' மினிமம் பேசிக் லெவல் ' என்று வைத்து அந்த வருமானத்திற்கு வழிவகுத்து வைத்திருக்கிறார்களோ, அது போல இந்தச் சிறிய கோயில்களை எல்லாம் இந்தக் கோயில் களுடைய நிர்வாகம் என்பதன் பிடியிலேயிருந்து தளர்த்தி விடுவோமானால், நம்முடைய அட்மினிஸ்ட்ரேடிவ் எக்ஸ் பென்சஸ் என்று சொல்லப்படுகின்ற அந்த நடைமுறை செலவு களை நாம் குறைக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. வீணான செலவுகள் இன்றைக்கு எத்தனையோ துறைகளிலே இருக்கின்றன. அதையெல்லாம் குறைத்து இன்றைக்கு கோயில்களினுடைய வருமானங்களைப் பெருக்க வசதிகள் நிறைய இருக்கின்றன.

இன்றைக்கு கோயில்களின் நிலங்கள் குத்தகை பணங்கள் ஏகப்பட்டவை நிலுவையில் இருக்கின்றன. ஏகப்பட்ட இடங் கள் குறைந்த வாடகைக்கு விடப்பட்டு இருக்கின்றன. இந்த வாடகைப் பணங்களை வசூலிப்பதன் மூலமாக, அதிலேயிருந்து வருகின்ற பணத்தை, வருவாயை $7\frac{1}{2}$ பர்சென்டையும் நாம் ஒழுங்காக வசூலித்தால் நம்முடைய நிர்வாகச் செலவுக்குப் போதுமானதாக இருக்கும். ஆகவே இந்தக் கட்டண உயர்வு தேவையற்றது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இந்த கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு வருகின்றபோது, இது வரையில் எவ்வளவு ரூபாய் வசூலிக்கப்பட்டது ? எவ்வளவு ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கின்றது ? இந்த விவரங்கள் உறுப்பினர்களுக்குத் தரப்படவில்லை. இந்தக் கூடுதல் காரண மாக, $7\frac{1}{2}$ பர்சென்டிலிருந்து 10 பர்சென்ட் உயர்வால் எவ்வளவு வருமானம் அதிகமாக வருகின்றது ? அதிலே எவ்வளவு ரூபாய் அளவுக்கு மிச்சப்படுத்தப்போகிறோம் என்ற தகவல் தரப்படவில்லை.

அதுபோலவே, ஆடிட் பீஸ் $1\frac{1}{2}$ பர்சென்டிலிருந்து 4 பர்சென்ட்க்கு, அதாவது கிட்டத்தட்ட $2\frac{1}{2}$ பர்சென்ட் கட்ட ணத்தை உயர்த்தியிருக்கிறார்கள், எவ்வளவு வருமானம் இப்போது வந்துகொண்டிருக்கின்றது. எவ்வளவு வருமானம் இனி வர இருக்கிறது என்ற தகவல்களைத் தரவில்லை. இதை எதற்காகத் தர வேண்டும் என்று சொன்னால், அவையிலே ஒரு சட்டம் கொண்டு வரும்போது அதற்கான முழுத் தகவல் களையும் சட்டமன்றத்திற்குத் தரவேண்டும். அது மட்டு மல்ல, அது ஒரு டாக்ஸ் ஆக இல்லாத காரணத்தினாலே, இதன் மூலமாக இந்த அரசு லாபம் சம்பாதிக்கக் கூடாது என்ற கருத்து இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்திலே மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது என்ற காரணத்தினாலே அந்த விவரங்களைத் தரவேண்டும். இந்தக் கூடுதல் கட்டணமே தேவையற்றது. அனாவசியமானது என்று சொல்லிக்கொண்டு அதே நேரத்திலே சிறிய கோயில்கள் இந்த வருமான அடிப்படை யிலே இருந்தே விலக்களிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை **வைத்து அமர்கிறேன். வணக்கம்.**





திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று சர்வீஸ் சார்ஜஸ் பெயரிலே ஏற்கனவே உள்ள $7\frac{1}{2}$ பர்சென்ட்டை 10 சத விகிதமாக உயர்த்துவதற்கும் அதுபோலவே 1,000 ரூபாய்க்கு மேலே வருவாய் உள்ள கோயில்களுக்கு ஏற்கெனவே உள்ள $1\frac{1}{2}$ பர்சென்ட்டை 4 பர்சென்ட்டாக உயர்த்துவதற்கான சட்டத்தைக் கொண்டு வருகின்றார்கள். இது காரண காரிய விளக்கங்களிலே '' பல மட்டங்களிலே அரசு பணியாளர்களின் சம்பள விகிதங்களில் மாற்றம் செய்யப்பட்டிருப்பதை முன் னிட்டும், அதன் விளைவாக பணி செலவுகள் உயர்த்தப் பட்டிருக்கின்றன, அதன் காரணமாகக் கொண்டுவரப்பட்டி ருக்கிறது '' என்று இருக்கின்றது. இன்று கோயில்களிலே வேலை செய்யக்கூடிய ' கன்ட்டின்ஜென்ட் எம்ப்ளாயீஸ் ' என்ற ஒரு ' செட் ', ஊழியர்கள் இருக்கின்றார்கள். அவர் களைப் பொறுத்த வரையில் இந்த நடவடிக்கை காரணமாகப் பாதிக்கப்படுவார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகி றேன். ஏற்கனவே இந்த ஊழியர்களைப் பொறுத்த வரை யிலே இன்று மிகக் கம்மியான ஊதியம் வாங்கிக் கொண்டி ருக்கின்றவர்கள். வாழ்க்கையை நடத்துவதற்குக்கூட கஷ்ட மான நிலையில் இருக்கின்றார்கள். சில கோயில்களிலே 30 ரூபாய் ஊதியம்தான் பணியாளர்களுக்குத் தரப்படுகிறது. குமரி மாவட்டத்திலே பல கோயில்களிலே உள்ள நிலைமை களைப் பற்றி எனக்கு நேரடியாகவே தெரியும். அப்படி 30 ரூபாய் ஊதியத்தை வைத்துக்கொண்டு அவர்கள் வாழ்க் கையை நடத்த முடியவில்லை, அதிகமான ஊதியம் தர வேண்டும் என்று நிர்வாகத்திற்குக் கோரிக்கைகள் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்த இலாக்கா அதைப் பரிசீலித்து ஒரு நல்ல முடிவை எடுக்காத நிலையிலே விஷயங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. நிலை இப்படி இருந்து கொண்டிருக் கின்றது. ஏற்கெனவே 40 சதவிகிதம், அதாவது ' நெட் ' இன்கம்-ல் இருந்து 40 சதவிகிதத்தைத் தான் இந்த பணியாளர் களுக்குப் பங்கு போட்டுக் கொடுக்க முடிகிறது. இந்த நேரத் திலே $7\frac{1}{2}$ பர்சென்ட் என்பதை 10 சதவிகிதமாக உயர்த்திய பிறகு, மீதி வருகின்ற பணத்திலே 40 சதவிகிதத்தைப் பங்கு போட்டுக் கொடுப்பது என்ற நிலை வந்தால், அதனால் நிச்சயமாக இந்தப் பணியாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள். ஆனால் இந்தச் சட்டம் கொண்டுவரும்போது, இந்த அரசு ஊழியர்களாக மாற்றப்படுபவர்களுக்கு ஒருவிதமான நன்மை கள் ஏற்பட்டிருக்கலாம். நல்ல நிலை அவர்களுக்கு ஏற்பட்டி ருக்கலாம். அரசு ஊழியர்களுக்கு அரசினுடைய கஜானாவி லேயிருந்த சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆனால் இவர் களைப் பொறுத்தவரையில் கோயில் வருவாயிலிருந்து வருகிற வருமானத்தைத்தான் பங்கிட்டுக் கொடுக்கிறார்கள். இதன் மூலம் மேலும் பாதகம் வருகிற நிலைமை ஏற்படலாம்.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1986 நவம்பர் 18

[பிற்பகல் 1-20]

ஏற்கெனவே திருவிதாங்கூர்-கொச்சி மகாராஜாவால் கொடுக்கப்பட்ட ரூ. 51 இலட்சம் பணத்தின் மூலமாக இவர்களுக்கு நாம் ஊதியம் கொடுத்து வருகிறோம். அதே நேரத்தில் இப்போதும் மத்திய அரசிடமிருந்து இன்னும் அதிகமான தொகையைப் பெற்று இந்த ஊழியர்களுக்கு ஊதியத்தை உயர்த்திக் கொடுக்கலாம். இவர்களைப் பாதிப்புக்கு உள்ளாக்கிவிட்டு இன்னொரு அரசு ஊழியர்களை வளர்க்கின்ற நிலை வரலாம். இந்நிலையை மாற்றுகின்ற வகையில் வழிவகை செய்ய வேண்டும். நான் எதை வலுயுறுத்துகிறேன் என்றால், இன்றைக்கு எப்படி மற்றத் துறைகளில் பணியாற்றும் அரசு ஊழியர்களுக்குச் சலுகைகள் வழங்க அல்லது வசதிகளை அளிக்க அரசின் கஜானாவிலிருந்து பணம் ஒதுக்கி வழிவகை காணப்படுகிறதோ அதுபோல் இதற்கும் வழிவகை காண வேண்டும்.

சர்வீஸ் சார்ஜஸ் என்கிற வகையில் ஏற்கெனவே விதித்துள்ள 7 சதவிகிதத்தை 10 சதவிகிதமாகவும், 1½ சதவிகிதத்தை 4 சதவிகிதமாகவும் உயர்த்தியிருப்பதற்குப் பதிலாக அந்த ஊழியர்களுக்கு, கன்டின்ஜென்சி ஸ்டாப்க்கு நல்லமுறையில் வழிவகை செய்ய வேண்டும். அப்படி இல்லையென்றால் அவர்கள் பாதிக்கப்படுவார்கள். ஆகவே இச்சட்டமுன்வடிவை வாபஸ் பெற்றுக்கொண்டு அரசினுடைய கஜானாவிலிருந்து அவர்களுக்கு எடுத்துச் செலவு செய்ய வழிவகை காண வேண்டுமென்று சொல்லி அமர்கிறேன்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற தமிழ்நாடு இந்து சமய அறநிலையக் கட்டளைகள் திருத்தச் சட்டமுன்வடிவை வரவேற்று ஆதரவாக ஒருசில கருத்துக்களை நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். இந்தத் துறையிலே உருவாக்கப்பட்டுள்ள கூடுதல் பதவிகள், அதனால் ஏற்பட்டிருக்கிற பணச் செலவுகள், ஆகியவற்றை ஈடுகட்டுவதற்காக அல்லது கொடுத்துத் தீர்ப்பதற்கு இந்த நிறுவனங்களிலிருந்து அல்லது கோயில்களிலிருந்து வருகின்ற வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை உயர்த்த வகை செய்கிற இச்சட்ட முன்வடிவை நான் முதலில் வரவேற்கிறேன்.

பிரிவு 92 (1)-ல் கண்டுள்ளபடி 7 சதவிகிதம் இன்றைக்கு 10 சதவிகிதமாக உயர்த்தப்படுகிறது. ஏற்கெனவே நடைமுறையில் இருந்து வருவதை நாம் கணக்கில்கொண்டு பார்க்கும்போது 2 இலட்சம் ரூபாய் வருமானத்திற்கு அதிகமாக உள்ள கோயில்களுக்கு மட்டும்தான் இந்த 3 சதவிகித உயர்வுக்கு வழிவகை செய்யப்பட்டிருப்பதால்தான் இதனை வரவேற்கிறேன். அதே சமயத்தில் மற்ற கோயில்களைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே நிர்ணயிக்கப்



1986 நவம்பர் 18] [திரு. செ. செம்மலை]

பட்டுள்ள தொகையான ஆயிரம் ரூபாய் வரை வருமானம் வரக்கூடிய கோயில்களுக்கு 2 சதவிகிதம், 5 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் வரக்கூடிய கோயில்களுக்கு 3 சதவிகிதம், 20 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் வரக்கூடிய கோயில்களுக்கு 4 சதவிகிதம், 60 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் வரக்கூடிய கோயில்களுக்கு 5 சதவிகிதம், 2 இலட்சம் ரூபாய் வரை வருமானம் வரக்கூடிய கோயில்களுக்கு 6 சதவிகிதம் என்றெல்லாம் இந்தத் தொகை உயர்த்தப்படவில்லை என்பதை நான் எண்ணிப் பார்க்கிறபோது எப்படி எங்களுடைய இதயத் தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் விவசாயிகளில் சிறு விசாயிகள், நலிந்தவர்கள் இப்படிப்பட்டவர்களுக்கு எல்லாம் சலுகைகள் அளிக்கப்பட்டு வருகின்றனவோ அதுபோல் இங்கேயும் நலிந்த கோவில்களுக்குச் சலுகைகள் அளிக்கப்பட்டிருப்பதை நாம் பார்க்க முடிகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களின் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன். தணிக்கைக் கட்டணத்தைப் பொறுத்தவரையில் பிரிவு 92 (2)—லே ஒரு விஷயத்தைச் சொல்லியிருக்கிறார்கள். 1½ சதவிகிதம் என்பதை 4 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரிடமிருந்து இதுகுறித்து ஒன்றைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இது அனைத்துக் கோயில்களுக்கும் பொருந்துமா அல்லது 7 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதமாக உயர்த்துகிறோமே, அதாவது 2 இலட்சம் ரூபாய் வருமானத்திற்கும் மேற்பட்ட கோயில்கள் இருக்கின்றனவே அவற்றிற்கு மட்டுமா என்று அறிய விரும்புகிறேன். பொதுவாக எல்லா கோயில்களுக்கும் இது பொருந்தும் என்று சொன்னால் உள்ளபடியே மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்கள் சொன்னதைப்போல இது சற்று அதிகமான தொகைதான். என்னைப் பொறுத்த வரையில் 2 இலட்சம் ரூபாய் வருமானத்திற்கும் அதிகமாக வருகிற கோயில்களுக்கு இந்த 4 சதவிகிதம் என்பது பொருத்தமாக இருக்கும். ஏற்கெனவே கான்ட்ரிபியூசன் தொகைக்கு 2 சதவிகிதம், 3 சதவிகிதம், 4 சதவிகிதம் என்று ஒதுக்கியிருக்கிறார்கள்.

அதைப் போல் இந்தத் தணிக்கைக் கட்டணத்தையும் வருமானத்தின் அடிப்படையிலே ஒரு குறிப்பிட்ட வருமானம் வரை 2 சதவீதம் இருக்கலாம். ஒரு குறிப்பிட்ட வருமானம் வரை 3, சதவீதம் இருக்கலாம். இரண்டு இலட்சத்திற்கு மேல் உள்ள கோயில்கள் அனைத்துக்கும் 4 சதவீதம் இருக்கலாம் என்று

பிரித்து, அதை வகுத்துத் தெளிவாக அதிலே குறிப்பிடுவார்களேயானால் அது உள்ள படியே நன்மை பயப்பதாக இருக்கும் என்கிற ஒரு கருத்தை என்னுடைய ஆலோசனையாக நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு கருத்து. மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்கள் சொன்னதைப் போல, இப்படி வருகின்ற தொகையில் கொஞ்சம் கூட்டி, நாம் ஈடு கட்டுவது ஒரு பக்கம் இருந்தாலும், உள்ளபடியே கோயில் வருமானத்தைப் பெருக்குவதற்கு நாம் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும், அதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முழு அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும், என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். கோயில்களினுடைய சொத்துக்களுக்கு, அது நிலமாக இருந்தாலும் சரி, கட்டிடமாக இருந்தாலும் சரி, குத்தகை பாக்கிகள் வசூலிக்கப்பட முடியாத நிலைமை இருக்கிறது. நிர்ணயிக்கப்பட்ட குத்தகை குறைவாக இருக்கிறது. அதைப் போல கட்டிடங்களிலேயிருந்து வர வேண்டிய வாடகை பாக்கி இருக்கிறது. இவை முறையாக அந்தக் கோயில்களுக்குச் சேர்வதற்கு அல்லது வசூலிப்பதற்கு உண்டான வழி முறைகளை அமைச்சரவர்கள் ஆராய வேண்டும். இன்னும் சில கோயில்களில் சொத்துக்கள் பராதீனம் செய்யப்படுகின்றன. சில பேர்களுக்கு விற்றே விட்டார்கள். இவற்றையெல்லாம் மீட்டு இந்தக் கோயில்களுக்கு உட்படுத்தி அல்லது இந்தக் கோவில்களினுடைய நிர்வாகத்திற்குக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அதைப் போல நம்முடைய மத்திய அரசாங்கம், திரு. இராமசாமி ஐயர் தலைமையிலே ஒரு குழு அமைத்து, பரம்பரை அறங்காவலர்களுடைய பொறுப்பிலே இருக்கின்ற சொத்துக்களை, கோயில் நிர்வாகத்திற்குக் கொண்டு வருவதற்கு அக் குழு பரிந்துரைத்தது. அந்தப் பரிந்துரையினை எதிர்த்து அந்தப் பரம்பரை அறங்காவலர்கள் நீதி மன்றங்களுக்குச் சென்று தடை ஆணை பெற்றிருந்தாலும் நம்முடைய புரட்சித் தலைவர் அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், அந்தக் குழுவினுடைய பரிந்துரையை வைத்து ஒரு சட்டத்தை இயற்றி மத்திய அரசுக்கு அனுப்பி, கிட்டத்தட்ட மூன்றாண்டுகளுக்கு மேலாகிறது. இன்னும் அதற்கான அனுமதி வரவில்லை. அனுமதி வருவதற்குத் தாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்டச் சட்ட முன் வடிவுகளினுடைய அனுமதியை மத்திய அரசிலிருந்து பெற்று, அந்த நிலங்களையெல்லாம், கோயில் நிர்வாகத்திற்குக் கொண்டு வந்து கோயில்களினுடைய வருமானத்தை, கோயில்களுக்குச் சேர வேண்டிய அல்லது வர வேண்டிய வருமானத்தை உயர்த்துவதற்கு அமைச்சரவர்கள் இந்த முயற்சியோடு அந்த முயற்சியிலேயும் ஈடுபட வேண்டுமென்று சொல்லி, உள்ளபடியே உயர்த்தியிருக்கின்ற தொகையைப் பொறுத்த வரையில் அதிகமான தொகை அல்ல. அந்தத் தொகை கூட அந்த நிறுவனங்களில் பணிபுரிகின்ற அலுவலர்களுக்கு, அரசாங்கத்தினுடைய சம்பளத்திற்கு ஈடு கட்டுவதற்காகத்தான். எனவே இதை வரவேற்று ஒரேயொரு வேண்டுகோளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.





எங்களுடைய சேலம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், நீண்டகாலக் கோரிக்கையாக டி.சி. ஆபீஸ் அங்கே ஏற்படுத்த வேண்டும் என்பது இருக்கிறது. இப்பொழுது ஏ.சி. ஆபீஸ்தான் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியாகப் போடுங்கள் ; பில்லிலே இப்படியெல்லாம் பேசுவது சரியாக இருக்காது.

திரு. செ. செம்மலை : எனவே, டி. சி. அலுவலகம் அங்கே ஏற்படுவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்களும், இந்தத் துறை உயர் அதிகாரிகளும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்த வரையில் நான் வரவேற்று அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவில் உள்ள சட்டச் சிக்கல்களைப் பற்றியெல்லாம் சொல்லி விட்டார்கள். வக்கீல்களாக, வழக்கறிஞர்களாக இருக்கின்றவர்கள். இதிலே சாதாரணமானவர்களாக, சாமான்யமானவர்களாக இருக்கக் கூடிய குருக்கள், பணியாளர்கள் போன்றவர்களுடைய வருமானத்திற்கு, வாழ்வுக்கு வழி என்ன என்பதைப் பற்றி அரசு இதுவரை ஆராயாமல் இருப்பது வருத்தமாக இருக்கிறது.

ஒரு காலத்திலே மாமன்னர்களாக இருக்கக் கூடியவர்கள் தங்களுடைய அதிகமான வருமானங்களையெல்லாம் கோயில்களுக்கு எழுதி வைத்து, அவற்றினுடைய வளர்ச்சிக்கான பணிகளெல்லாம் நடந்தேறின. ஒரு வேளை அந்தக் காலத்து மாமன்னர்கள் அப்படிச் செய்தார்கள் என்று சொன்னால், இந்தக் காலத்து மன்னர்கள் அங்கிருந்து இப்படி எடுப்பது நியாயமா என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் சட்டத்தில் கூட சொல்லியிருக்கிறீர்கள் அரசு ஊழியர்களுக்கு சம்பளம் அதிகமாக ஆகிவிட்டது, இவர்களுக்குச் செல்வுத் தொகை அதிகமாக ஆகிவிட்டது என்ற காரணத்தினாலே அங்

கிருந்து எடுக்கிறோம் என்று சொல்கிறீர்கள். நாங்கள் கேட்டுக்கொள்வதெல்லாம், அங்கே பணியாற்றுகின்ற அரசாங்க அதிகாரிகளெல்லாம் முறையாக வேலை செய்கிறார்களா என்று கண்காணிக்க வேண்டிய நீங்கள், நீங்கள் கொடுக்கின்ற சம்பளத்திற்கு ஈடாக அவர்கள் வேலை செய்கிறார்களா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எந்த அதிகாரியாக இருந்தாலும், சூப்பிரண்டெண்டைப் போட்டாலும், எக்சிகியூட்டிவ் ஆபீசரைப் போட்டாலும் சரி, கோயில்களின் வருமானத்தை எடுத்துக் கொள்கின்ற நிலைமைகள்தான் இருக்கின்றனவே தவிர, கோயில்களின் வருமானத்தைப் பெருக்கி, அந்தக் கோயில்களின் வளர்ச்சிக்காகச் செய்யக் கூடிய பணிகள் மிக மிகக் குறைவாக ஆகியிருக்கின்றன. சாதாரணமாக வவுச்சர் வைக்க வேண்டியதுதான். கார்த்திகை மாதத்திலே தீபம் போட வேண்டுமென்று சொன்னாலும் கூட, கோயிலிலே பனை மரம் இருந்தாலும், பனை மட்டை விலைக்கு வாங்கியதாகத்தான் கணக்கு இருக்கிறதே தவிர, கோயிலிலே இருக்கின்ற பனை மரத்திலே இருக்கின்ற மட்டையைப் பயன்படுத்தியதாகக் கணக்குகளைப் பார்க்க முடியவில்லை. அப்படிப்பட்ட நிலைமைகள் ஏராளமாக இருக்கின்றன. ஆகவே, அதைக் கூட அப்படிச் செய்து கொண்டிருக்கின்ற நேரத்தில், எங்கே எடுத்தாலும் சரி, உண்டியலாக இருந்தாலும், வசூலாக இருந்தாலும் சரி, எதற்கெடுத்தாலும் கூட இன்றைக்கு அடிக்கக் கூடிய இந்தக் கொள்ளைகளில் பங்கு கொள்கின்றவர்களுக்கு எல்லாம் நீங்கள் கோயிலிலே இருந்து எடுத்துக் கொள்வது நியாயமா என்பதை எண்ணிப் பாருங்கள்.

அங்கே இருக்கக் கூடிய அதிகாரிகளைப் பற்றி எண்ணுகிறீர்கள். அங்கே இருக்கக் கூடிய சாமான்ய குருக்களுக்கு என்ன வழி இருக்கிறது ? இன்றைய வரை இறந்து போன குருக்களுக்கு அரசாங்கத்திலேயிருந்து வாழ்வளிக்க வேண்டுமென்ற பணத்தைக் கூட பட்டுவாடா செய்ய அதிகாரிகள் மறுத்துக் கொண்டு இருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் ஒரு கோயிலுக்கு வரக் கூடிய குருக்கள் இறந்து போய் அந்தக் கோயிலுக்கு வரக் கூடிய பணம் 1,000 ரூபாய் இனாம் என்று கணக்குப் பார்த்துக் கொடுத்தார்கள்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

திரு. மா. மணிமாறன் : அதைக் கொடுப்பதற்குக் கூட அதிகாரிகள் முன்வராத நிலையில் இன்றைக்கு நீங்கள் கோயில் வருமானத்தையும் அதிகமாக எடுத்துக் கொள்கிறீர்கள் என்பது சங்கடத்தை ஏற்படுத்துகிறது. உள்ளாட்சித் துறையாக இருந்தாலும், அரசுத் துறையாக இருந்தாலும் அந்தந்தத்





துறையைக் கண்காணிக்க அல்லது துறையின் பணிகளைக் கண்காணிக்க அதிகாரிகளை நியமிக்கிறபோது அதற்காகக் கூடுதல் செலவு ஏற்படுகிறது. அதைப் போலவே கோவில் நிர்வாகத்திலும் செலவு கூடுகிறதே தவிர குறையவில்லை. ஆகவே, பல்வேறு சிறிய சிறிய கோயில்களுக்குத் தனி அதிகாரிகளைப் போடுவதுபற்றி நீங்கள் மறு பரிசீலனை செய்ய வேண்டும். சிறிய கோயில்களின் கணக்குகளை நிர்வகிக்க அதிகாரிகளை நியமிக்க வேண்டியதில்லை. குறைந்த சம்பளம் கொடுக்கின்ற சிப்பந்திகளை நியமித்தால் போதும். அவர்கள் கணக்குகளை எழுதி வைத்துக் கொள்வார்கள். அதை வேண்டுமென்றால் ஆடிட் செய்து கொள்ளலாம். அதை விட்டுவிட்டு நிர்வாக அதிகாரிகளை நியமிப்பது என்பது ஒரு மாற்று சுரண்டலாகத்தான் இருக்கும் என்பதால் இது கண்டிக்கத்தக்கது, வருந்தத்தக்கது. இதை மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

அதிகாரிகளின் ஊதியத்தை உயர்த்துவதற்காக கோயில் வருமானத்தை எடுக்கச் சட்டம் கொண்டு வந்திருக்கிறீர்கள். ஆனால் அங்கே இருக்கிற குருக்களுக்கும் பணியாளர்களுக்கும் வேலைக்கு உத்திரவாதம் இல்லை. எக்சிகியூட்டிவ் ஆபீசர் நினைத்தவுடன் குருக்களை நீக்கி விடுவார், பணியாளை நீக்கி விடுவார். அவர்களைப் பணியிலிருந்து சர்வசாதாரணமாக நீக்கி விடுகிறார்கள். பின்னால் அவர்களுக்கு வேண்டிய கப்பங்களைக் கட்டினால்தான் மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இந்த நிலை மாற வேண்டும்.

கோயில் குருக்களோ அல்லது பணியாளர்களோ இறந்து விட்டால் அவர்களுடைய குடும்பங்களுக்குக் கொடுக்க வேண்டிய உதவித் தொகை ஒழுங்காகக் கொடுக்கப்படுவதில்லை. பல இடங்களில் இன்று வரையில் அந்த உதவித் தொகை கொடுக்கப்படவில்லை. அவற்றை எல்லாம் கவனித்து உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கோவிலில் அதற்கான வருமானம் இல்லை என்றால் அரசாங்கம் அதை ஈடு செய்து. அரசுப் பணியாளர் குடும்பங்களுக்கு எவ்வாறு கொடுக்கப்படுகிறதே, அதைப் போன்று கோவில் குருக்கள், பணியாளர் குடும்பங்களுக்கும் உதவித் தொகை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, நிர்வாகச் செலவுக்காக கோவில் பணத்தை எடுப்பது தவறு என்று கண்டித்து, அமருகிறேன்.

*திரு. வை. பாலசந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு, மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற 1986ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவின்மீது ஒருசில கருத்துக்களை இந்து முன்னணி பேரியக்கத்தின் சார்பாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த சட்ட முன்வடிவை அறிமுக நிலையிலேயே இந்து முன்னணி பேரியக்கத்தின் சார்பில் நான் எதிர்த்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு, இப்போது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை அருள்கூர்ந்து வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால், இந்து முன்னணியாக இருந்தாலும் அல்லது வேறு எந்த இந்து அமைப்பாக இருந்தாலும், அவை எல்லாமும், அதுபோல ஆன்றோர்கள், சான்றோர்கள், சமயத் துறவிகளாக இருந்தாலும் அவர்கள் எல்லோரும் அரசாங்க—அறநிலையத் துறையின் நிர்வாகத்தில் இருக்கும் இந்துமத நிறுவனங்களைத் தனித்து இயங்கக்கூடிய ஒரு தன்னாட்சி அமைப்பினிடம் ஒப்படைக்கவேண்டும் என்று வலியுறுத்தி வந்தோம். அதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நம்முடைய அரசும் கொள்கை அளவிலே ஏற்றுக் கொண்டார்கள் என்று ஒரு சில இயக்கங்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் எங்களுடைய இயக்கத்தின் தலைவர் திரு. தாணுலிங்க நாடார் அவர்களும், அமைப்பாளர் ஸ்ரீமான் இராமகோபாலன் அவர்களும் இந்து முன்னணியின் மாநில செயற்குழு கூட்டத்தில் இதுபற்றி கருத்துக்களைத் தெரிவித்தபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் முன்னாள் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களும் கொள்கை அளவில் 'இந்து சமய நிறுவனங்களை' தன்னாட்சி அமைப்பிடம் ஒப்படைப்பதை ஏற்றுக்கொண்டார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். எப்படி எப்படி அந்தத் தன்னாட்சி அமைப்பின் சட்டம் இருக்க வேண்டுமென்று நீங்கள் தெரிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் தெரிவித்திருக்கிறார் என்று கூறி பின்னர் இதை ஒரு தீர்மானமாகக் கொண்டுவந்து, இதற்கான சட்டத்தை ஆராய்ந்து முடிவு செய்ய மூத்த வழக்கறிஞர் சென்னை திரு. சம்பந்தகுமார் அவர்கள் தலைமையில் ஒரு குழுவும் இந்து முன்னணியினால் நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இன்றைக்கு இந்தச் சட்ட முன்வடிவைப் பார்க்கும்போது நாங்கள் எல்லாம் குழம்பிப் போயிருக்கிறோம். காரணம் கொள்கை அளவில் அரசாங்கம் இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு ஆலயத்தை விட்டு வெளியேறி, தனிப்பட்ட ஒரு அமைப்பிடம் நிர்வாகம் ஒப்படைக்கப்படும் என்று தெரிவித்த கருத்திற்கு மாறாக இந்தச் சட்ட முன்வடிவு வந்திருக்கிறது. ஒரு கொள்கை முடிவு எடுத்து, நிர்வாகத்தை தன்னாட்சி அமைப்பிடம் தந்துவிடுகிறோம் என்று தெரிவித்த பின்னால் இந்தச் சட்ட முன்வடிவு வந்திருப்பது எங்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. இந்து சமய நிறுவனங்களைத் தன்னாட்சி அமைப்பிடம் ஒப்படைத்து விடுவோம் என்று அரசு கொள்கை முடிவை மேற்கொண்டுள்ளது என்று ஒரு சாரார் சொல்வது ஒருகால் யாரையோ ஏமாற்றச் சொல்லப்படும் பொய்யாக இருக்குமோ என்று இந்தச் சட்ட முன் வடிவைப் பார்த்த





பிறகு சந்தேகம் ஏற்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்றும், இந்து சமய நிறுவனங்களைத் தன்னாட்சி அமைப்பிடம் ஒப்படைத்து விடுவதாகக் கொள்கை முடிவினை அரசு மேற்கொண்டுள்ளதா என்பதையும், இதை அரசு யாரிடமோ கூறியது என்று சிலர் கூறி நடப்பது உண்மையா என்பதையும் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு அறநிலையத் துறையில் 'ஆலய ஊழியர்களும்' 'அரசு ஊழியர்களும்' ஆலயப் பணியிலே இருக்கிறார்கள். அரசு ஊழியர்களுக்கு கொடுக்கப்படுகின்ற ஊதியத்தை உயர்த்தியதின் காரணமாக ஏற்பட்ட அதிகச் செலவையும் புதிய ஆய்வாளர்கள் நியமனம் செய்யப்பட்டதால் ஏற்பட்டுள்ள அதிகச் செலவையும் சரிக்கட்ட இதுவரையில் ஆண்டுதோறும் சமய நிறுவனங்கள் (Religious Institutions) கட்டிவந்த பங்குத்தொகையின் உச்சவரம்பு 7 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்று இப்போது சொல்லப்பட்டிருக்கிறது.

நான் அறநிலையத் துறையில் பணியாற்றும் அரசு ஊழியர்களுக்கும், அரசுப் பணியாளர்களுக்கும் கொடுக்கப்படுகிற அந்த ஊதியத்தை மாற்றியமைக்கக்கூடாது என்ற கொள்கைக்குச் சொந்தக்காரன் அல்ல. அவர்களுக்கு அதிகப்படுத்திக் கொடுக்கக் கூடாது என்பது என்னுடைய வாதம் அல்ல. நீங்கள் அள்ளிக் கொடுங்கள், அதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் அவர்களுக்கு அள்ளிக் கொடுக்கிறபோது அரசாங்க ஊழியர்கள் அல்லாதவர்களாக இருக்கும் ஆலயப் பணியாளர்களாக இருக்கிற அவர்களை நீங்கள் கிள்ளிவிடாதீர்கள் என்பதுதான் என்னுடைய வாதமாக இருக்கிறது. உதாரணமாகச் சொல்லப்போனால் ஆலயப் பணியாளர்களுடைய வருமானத்தில் உச்சவரம்பு வைக்கப்பட்டு இருக்கிறது. Hindu Religious Institutions—களுடைய அதாவது இந்து சமய நிறுவனங்களினுடைய வருமானத்தில் 40 சதவீதத்திற்கு மேற்படாத தொகையை அவர்கள் ஊதியமாகப் பெற்றுக் கொள்ளலாம் என்று வரையறை செய்து இருக்கிறார்கள். ஒரு ஆண்டுக்கு முன்னதாக அது 30 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. அந்த 40 சதவீதம் பெறுகிற உரிமை அவர்களுக்கு உண்டு. இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிற 92-வது பிரிவின் உட்பிரிவுகள் 1 மற்றும் 2 மூலமாக இதுவரையில் 7 சதவீதமாக இருந்த பங்களிப்புத் தொகையின் உச்ச வரம்பு 10 சதவீதமாக உயர்த்தப்படுகிறது. ஒன்றரை சதவீதமாக இருந்த தணிக்கைக் கட்டண உச்சவரம்பு 4 சதவீதமாக உயர்த்தப்படுகின்றது. இவற்றைப் பார்க்கிறபோது இந்த ஆலயப் பணியாளர்களின் மாத ஊதியம் குறைவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 92-வது பிரிவு உட்பிரிவு ஒன்று திருத்தப்பட்ட பிறகு இந்தப் பிரிவு

[திரு. வை. பாலச்சந்திரன்] [1986 நவம்பர் 18

எப்படி இருக்கும் என்றால் Every religious institution shall, from the income derived by it pay to the commissioner annually such contribution not exceeding 10 percen'um என்று இருக்கும் இந்து சமய நிறுவனங்களின் வருமானத்தில் 10 சதவீதத்திற்கு அதிகப் படாத தொகை கொடுக்கப்படவேண்டும் என்று வருகிறது. இன்கம் (Income) என்றால் என்ன என்பதற்கு ஒரு விளக்கம் கூட அதனுடைய ரூலிலே சொல்லப்பட்டு இருக்கிறது. the Assessment Levy and recovery of contribut.on cost rules 1960. அதிலே, இரண்டாவது விதியினுடைய உள்விதி இரண்டில் மிகத் தெளிவாக (What Is Incom·) என்பதற்கு விளக்கம் சொல்லி யிருக்கிறார்கள். Income under these rules, meens gross Income minus the accounts specified below....என்று சொல்லி 'ஏ' முதல் 'ஜி' வரையுள்ள 7 இனங்களைக் குறிப் பிட்டு இருக்கிறார்கள். அப்படி இரண்டாவது உட்பிரிவில் 'ஏ' முதல் 'ஜி' வரையில் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிற அந்த இனங்கள் ஆலயப்பணியாளர்களுக்குக் கொடுக்கப்படுகிற 40 சத வீதத்தை உள்ளடக்கியதாக இல்லை. ஆகவே இன்கம் (Income) என்று சொல்லுகிற போது இந்த 'எ' முதல் 'ஜி' வரையில் உள்ள 7 இனங்கள் சம்பந்தப்பட்ட தொகையைக் கழித்துவிட்டு, அதற் குப் பிறகு 92-வது பிரிவின் உட்பிரிவு ஒன்றில் வருகிறதைக் கழித்துவிட்டு, அதற்குப்பிறகு 92-வது பிரிவின் உட்பிரிவு இரண் டில் வருகிற தொகையையும் கழித்துவிட்டு அதற்குப் பிறகு வருகிற தொகையில்தான் 40 சதவீதம் ஆலயப் பணியாளர் களுக்கு ஊதியமாகக் கொடுக்கப்படும்.

உதாரணமாக ஒரு ஆலயத்தினுடைய வருமானம் 120 ரூபாய் என்று வைத்துக்கொள்ளுவோம். அங்கே இருக்கின்ற ஆலயப் பணியாளருக்கு அதாவது ஒரு 'ஏ'க்கு உச்சவரம்பாக 40 சதவீதம் ரூபாய்தான் ஊதியமாக தர வேண்டும் என்று அரசாங்கம் சொல் கிறது என்று வைத்துக் கொள்வோம். 40 சதவீதம் பெறுகிற உரிமை அவருக்கு வழங்கப்படுகிறது. அந்த 40 சதவீதம் எப் போது வருகிறது என்றால் விதி 2-ன் உள் விதி 2-ல் 'ஏ' முதல் 'ஜி' வரை இனங்களில் கூறப்பட்டுள்ள செலவுகள் 20 ரூபாய் என்றால் அதைக் கழித்துவிடுகிறார்கள். 120 ரூபாயில் 20 ரூபாய் போகிறது. ஆக மீதம் 100 ரூபாய். அதற்கு பிறகு வருகிற 10 சதவிகிதத்தைப் பிரிவு 92 (1)—ன்படி கழிக்கிறோம்; இப்போது மீதம் 90 ரூபாய். அதற்குப் பிறகு பிரிவு 92(2)ன் படி 4 சதவீதத்தைக் கழிக்கிறோம். இப்போது மீதம் 86 ரூபாய். ஆக 86 ரூபாயில்தான் 40சதவீதம் உச்சவரம்பாக ஆலயப்பணியா ளர்களுக்குக் கிடைக்கும். ஆனால் இந்தச் சட்டத் திருத்தம் வராது போனால் 120 ரூபாயில் 'ஏ' முதல் 'ஜி' வரையிலான செலவுகளை, அதாவது 20 ரூபாயைக் கழித்துவிட்டு பிறகு வரு வது 100 ரூபாய். அதன்பிறகு 7 சதவீதத்தைக் கழித்தால் 93 ரூபாய் மீதம் வரும். அதிலே ஒன்றரை சதவீதம் கழித்தால்



1986 நவம்பர் 18] [திரு. வை. பாலச்சந்திரன்]

வருகிற 91 ரூபாய் 50 பைசாவில் 40 சதவீதம் ஆலயப்பணியா ளர்களுக்குக் கிடைக்கும். ஆகவே சட்டத்திருத்தத்திற்கு முன்னால் உள்ள நிலைமை என்ன என்பதை மனதில் கொண்டால் 91 ரூபாய் 50 பைசாவில் 40 சதவீதம் கிடைக்கிறது. இந்தச் சட்டத் திருத் தத்திற்குப் பிறகு 86 ரூபாயில்தான் 40 சதவீதம் கிடைக்கிறது. ஆனால் ஆலயப் பணியாளர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஊதியம் போதாது என்று கதறிக்கொண்டு அழுகிற நிலைமையில் அவர்களுடைய குரல்வளையை ஒடிப்பதுபோல் இந்தச் சட்டத் திருத்தம் வந்திருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனதில் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அற நிலையத்துறை மானியக் கோரிக்கை வந்தபோது கூட கொள்கைக் குறிப்பிலே ஒன்றைச் சொன்னார்கள். There are 34,340 religious institutions under the control of the Hindu Religious and Charitable Endowments Department. Of these, 26,105 institutions are assessable for levy of department contribution. 26,105 மத நிறுவனங்கள் இந்தப் பங்களிப்புத் தொகை கொடுப் பதற்கான தகுதியான நிறுவனங்களாக இருக்கின்றன என்று இன்றைக்குச் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆக அவைகளை

(பிற்பகல் 1-40)

பங்களிப்புத் தொகை கொடுப்பதற்குத் தகுதியான நிறுவனங்கள் என்று கூறுவதைவிட அவைகள் பங்களிப்புத் தொகை கொடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு உட்படுத்தப்பட்ட நிறுவனங்கள் என்று சொல்லலாம். அந்தக் கட்டாயத்திற்கு உட்பட்டு பங்களிப்புத் தொகை கொடுக்க அரசால் கணக்கிடப்பட்டு அரசுக்கு வரும் வரு மானம் 22.88 கோடி ரூபாய். இந்த 22.88 கோடி ரூபாயிலிருந்து நாம் தோராயமாக ஒரு கணக்கைப் போட்டுப் பார்த்தால் 100-க்கு 10 சதவீதம் என்று பங்களிப்புத் தொகையின் உச்ச வரம்பை ஏற்றியிருக்கிறோம் அல்லவா. அப்படி ஏற்றியதற்கு பிறகு பார்த் தால் 2 கோடியே 28 லட்சம் ரூபாய் இந்த அரசுக்கு ஆண்டு ஒன் றுக்கு வருமானமாக வருகிறது. நாம் 7 சதவீதம் வைத்திருந்த போது பார்த்தால் 1 கோடியே 60 லட்சம் ரூபாய்தான் நம்மு டைய அரசுக்கு வந்து கொண்டு இருந்தது. பங்களிப்புத் தொகை யாக, ஆலய பணியாளர்களுக்கு ஆலய அரசுப் பணியாளர்களுக்கு ஊதியம் கொடுப்பதற்கு மட்டும், அப்படி ஒரு கோடியே 60 ஆயிரமாக இருந்தது இன்றைக்கு 2 கோடியே 28 லட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே ஆலய-அரசுப் பணியாளர்களு டைய ஊதிய விகிதம் மாற்றி அமைக்கப்பட்டு விட்ட காரணத் தால் இந்த அளவிற்கு உயர்வு ஏற்பட்டிருப்பதாக அறிகிறோம்.

''குருட்டுப் பிச்சைக்காரன் தட்டிலே இருந்து எடுத்துச் செவிட்டு பிச்சைக்காரன் தட்டிலே பிச்சை போடுவது'' போன்ற பணிகளில் இந்தஅரசாங்கம் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. ஊதியம் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது என்ற புள்ளி விவரத்தைக் காட்டி, இந்த அரசாங்கம் அளவுக்கு அதிகமான பணத்தை

மத நிறுவனங்களில் இருந்து உறிஞ்சுகிற சேவைகளை செய்து கொண்டிருக்கிறது. இன்றைக்குத் தணிக்கை செய்வதற்குக் கூட ஒரு புள்ளி விவரத்தைச் சொல்லி இருக்கிறார்கள். அன்றைக்கு அது 1.5 சதவீதமாக இருந்தது. அன்றைக்கு அதன்மூலம் 28 லட்சம் ரூபாய் வருமானமாக வந்து கொண்டிருந்தது. இன்றைக்கு அதை 4 சதவீதமாக உயர்த்தியிருக்கிறோம். அப்படி உயர்த்திய பிறகு வருகிற வருமானம் 22 லட்சத்து 88 ஆயிரம் ரூபாய், ஆண்டு ஒன்றுக்கு வருகிறது. ஆனால் ஒரு ஆண்டிற்கு எத்தனை ஆலயங்கள் தணிக்கை செய்யப்படுகின்றன என்று நம்முடைய குறிப்பேட்டிடிலே சொல்லுகிறார்கள்—

The audit of accounts of about 5500 temples have been completed this year as against 5057 in previous year.

கிட்டத்தட்ட 1 ஆண்டுக்கு 5 ஆயிரம் ஆலயங்களைத் தணிக்கை செய்வதற்கு 22 லட்சத்து 88 ஆயிரம் ரூபாய் அதிகப்படுத்தப்படுமேயானால், அது சாதாரண ஆலய ஊழியர்களுடைய வயிற்றிலே அடித்துத்தான் செய்ய முடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து நினைத்துப் பார்க்க வேண்டும்.

இந்த மசோதா இங்கே வருகிறபோது, ஆண்டவன் தன்னுடைய விளையாடல்களை நிகழ்த்தி இருப்பதாக நான் கருதுகிறேன். அமைச்சர் அவர்கள் இங்கே பசித்த வயிற்றோடு அமர்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி அமைச்சர் அவர்கள் பசித்த வயிற்றோடு அமர்ந்திருந்து, பசியோடு வயிற்றோடு போராடிக் கொண்டிருக்கிற ஆலயப்பணியாளர்களுடைய நிலைமையை எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான், ஆண்டவன் இப்படி விளையாடி விட்டான் என்று கருதுகிறேன். ஆகவே, அந்த அளவிற்கு ஆலயப்பணியாளர்களுடைய வயிற்றில் அடிப்பதற்கு இந்தச் சட்டம் கொண்டு வருவது நியாயமா? நம்முடைய அமைச்சர் அவர்கள் சட்டம் படித்தவர்கள். பல ஆண்டுக்காலம் வழக்கறிஞராக இருந்திருக்கிறார்கள். Natural justice என்பதைப் பற்றி அவருக்குத் தெரியும். Principle of natural justice ஆடி ஆல்ட்ரம் பாட்டம் என்ற விதி இருக்கிறது. எப்போது ஒருவனுக்கு பாதிப்பு வருகிறதோ அப்போது அவனையே சேர்த்து அழைத்து விசாரித்து அவனுடைய கருத்துக்களையும் அறிந்த பிறகு முடிவு எடுக்க வேண்டும் என்பது, ஆடிய ஆட்டம் பாட்டம் விதியினுடைய அடிப்படை. இன்றைக்கு உங்களுடைய சட்டத் திருத்தத்தின் மூலமாக ஆலயப் பணியாளர்கள் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்களே, அவர்களைக் கேட்டோமா? அந்த ஆலயப் பணியாளர்களுக்கு என்ன பாதிப்பு வருகிறது என்பதைப் பற்றி அவர்களுக்குத் தெரிவித்தோமா? அவர்கள் அங்கே வறுமையிலே கிடப்பவர்கள், எழுந்து நடக்கவே உடம்பில் தெம்பு இல்லாதவர்கள். ஓங்கி ஒலிக்கும் குரல் இன்றைக்கு அவர்களுக்கு இல்லை. அவர்களுக்கு இன்றைக்கு அதற்கான





வாய்ப்புகள் இல்லை. அந்த வாய்ப்புகள் அவர்களுக்கு இல்லாத காரணத்தால் அவர்களை எதை வேண்டுமானாலும் செய்யலாம் எப்படி வேண்டுமானாலும் அவர்களைத் துன்புறுத்தலாம் என்ற முடிவிற்கு அரசாங்கம் வரக்கூடாது என்பதை என்னுடைய வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது) இன்னும் ஒரு பாயின்ட், இதோ முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படி பேசிக் கொண்டே இருந்தால் எப்படி? டைம் ஆகிறது, சீக்கிரம் முடியுங்கள்.

திரு. வை. பாலச்சந்திரன் : ஒரே ஒரு நிமிடம். முடித்து விடுகிறேன். ஆகவே நம்முடைய அரசாங்கம் கொண்டு வந்திருக்கிற இந்தத் திருத்த சட்ட முன்வடிவை, சட்டமாக நிறைவேற்றினால், இது நிறைவேறிய பிறகும் கூட, 7 சதவீதம் கொடுப்பது நியாயம் என்று ஏற்கெனவே நீதிமன்றத்திலே தீர்ப்பு வந்திருந்தாலும் கூட, இந்த அதிகப்படியான 3 சதவீதம் என்பது நீதி மன்றங்கள்முன் நிற்க இயலாது.

If it is challenged in a Court of Justice, I think, it will not stand ஆகவே, பாதிக்கப்பட்டவர்களைக் கேட்காமல், அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்காமல் கொண்டுவரப்படும் இந்தத்திருத்தங்கள் ஒருக்கால் நமது அரசியலமைப்பு சட்டத்திற்கு உட்பட்டு வந்தாலும், நீதிமன்றத்திற்குள் நிற்க முடியாத சட்டமாகத்தான் இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து ஆலய ஊழியர்களுடைய வயிற்றில் நாங்களும் அடிப்போம், புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசும் அடித்தது என்ற சூழநிலையை உருவாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி கேட்டு விட்டு, இதை வாபஸ் பெற வேண்டும் என்ற வேண்டுகோளை நான் தெரிவிக்கிறேன். அப்படி வாபஸ் பெறுகிற நேரத்தில் (குறுக்கீடு) ஒரே ஒரு பாயிண்ட் தான், கன்குளுட்பண்ணி விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எங்கே கன்குளுட் பண்ணுகிறீர்கள்? போதும், ஒரே ஒரு பாயின்ட் என்று எத்தனை நேரம் சொல்லிக் கொண்டு இருப்பீர்கள். (குறுக்கீடு) இந்து மதத்தில் உள்ள தத்துவங்களையெல்லாம் சொலலிக் கொண்டிருந்தால் எப்படி? மாண்புமிகு அமைச்சர்....

*மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை 1951 ஆம் ஆண்டிற்கு முன்பு கழகமாக இருந்தது. பிற்பாடு அது அரசுத் துறையாக மாற்றப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் அதிகபட்சம் ஏழு சதவீதம் பங்குத் தொகையை இரண்டு லட்சத்திற்கும் அதிகமாக வருமானமுள்ள கோவில்கள்தான்

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1986 நவம்பர் 1

கொடுக்கின்றன. அதை ஐந்து லட்சத்திற்கு மேல் வருமானம்
வருகிற கோவில்களுக்கு 10 சதவீதமாக மாற்றவேண்டுமென்ற
நோக்கத்திலே இந்தத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்
கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் ஏன்
கஜானாவிலிருந்து பணம் கொடுக்கக் கூடாது என்று கேட்டார்கள்.
இந்து சமய அறநிலையத் துறைப் பணியாளர்கள் அரசுப் பணி
யாளர்களாக மாறிய பிறகு நான்கு சம்பளக் கமிஷன்கள் வந்
திருக்கின்றன. சம்பள உயர்வும், அகவிலைப்படியும் உயர்த்திக்
கொடுக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் அறநிலைய ஆட்சித் துறை
யில் 527 புதிய பதவிகளும், தணிக்கைப் பிரிவில் 334 புதிய
பதவிகளும் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு
எம்.ஜி.ஆர். அரசினுடைய கஜானாவிலிருந்துதான் இந்து சமய
அறநிலையத் துறைக்குச் செலவாகிறது. முதல்படியாக அரசி
லிருந்து செலவு செய்யப்படுகிறது. ஆண்டின் இறுதியில்தான்
இந்து சமய அறநிலையத் துறை அதை ஈடுகட்டுகிறது. இந்து
சமய அறநிலையத் துறை வருமானம் அல்லது நிதி என்றால்.
இந்தப் பங்குத் தொகை அல்லது தணிக்கை தொகையிலிருந்து
வருகிற தொகைதான் என்பது சட்டமாகும். அப்படி அந்தச் சட்டப்
படி இதுவரையில் இந்து சமய அறநிலையத் துறை அரசுக்குப்
பணம் செலுத்துவதில் கிட்டத்தட்ட உதவித் தொகை, பங்குத்
தொகை வருவதன் மூலமும், தணிக்கை கட்டணம் வருவதன்
மூலமும் சுமார் மூன்று கோடி ரூபாய் அரசுக்குக் கொடுக்க
வேண்டியிருக்கிறது. அந்தத் தொகையில்லாமல் 1985—86-ம்
ஆண்டு முடிய செயல் அலுவலர் சம்பளம் மூலம் அரசுக்கு இந்தத்
துறை தரவேண்டிய கடன் இரண்டு கோடியே 51 லட்சம் ஆகும்.
இப்படி கிட்டத்தட்ட ஐந்து கோடிக்கு மேலே இந்து சமய அற
நிலையத்துறை அரசுக்குக்கட்டவேண்டியிருக்கிறது. தற்போதுள்ள
ஏழுசதவீதம் அல்லது 1½சதவீதம் என்பது 26 ஆண்டுகளுக்குமுன்பு
நிர்ணயிக்கப்பட்டதாகும். கோவில்களில் உள்ள வருமானத்தை
இந்த அரசு அதிகமாகப் பெருக்குவதற்கு முயற்சி எடுத்திருக்கிறது.
சரித்திரத்தில் இதற்கு முன்பு எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத
அளவிற்கு, பல கோடி ரூபாய் வைப்பு நிதியாக வங்கியிலே
இப்போது வைத்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக
அறிவார்கள். அந்த வருமானத்தை மேலும் பெருக்குவதற்கும்
அரசு நடவடிக்கை எடுக்கும்.

இது குறிப்பிட்ட சிலபேரை வயிற்றில் அடிக்க வேண்டுமென்
பதற்காகக் கொண்டு வரப்பட்டதல்ல. ஏற்கனவே அரசுத் துறை
யிலிருந்து செலவை இந்து சமய அறநிலையத் துறை செலவு
செய்ததற்கு, புதியதாக 26 ஆண்டுகளுக்குப் பிற்பாடு, 5 லட்சம்
ரூபாய் வருமானம் வரக்கூடிய கோவில்களுக்கு ஏழு சதவீதத்
திலிருந்து 10 சதவீதம் என்று உயர்த்தியிருப்பது ஒரு பெரிய
தொகையாக இருக்காது. ஏனென்றால், இந்த ஏழு சதவீதம்



1986 நவம்பர் 18] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

என்பது மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள்
சொன்னதைப் போல குறைந்த வருமானம் உள்ள கோவில்களு
டைய சதவீதத்தை, பங்குத் தொகையை அதிகரிக்காமல்,
இரண்டு லட்சத்திலிருந்து 5 லட்சம் வரையில் வருமானம் உள்ள
கோவில்களுக்கு 7 சதவீதமும், 5 லட்சமும் அதற்கு மேல் வரு
மானமுள்ள கோவில்களுக்கு 10 சதவீதமும் என்ற முறையிலே
தான் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இப்படித்
திருத்தம் கொண்டு வந்ததால் 7 சதவீதத்திலிருந்து 10 சதவீத
மாக உயர்த்தியதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 31 லட்சம் ரூபாய்
வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது. அதைப்போல தணிக்கைத்
தொகையை 1½ சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக உயர்த்தியதன்
மூலம் 30 லட்சம் ஆண்டு ஒன்றுக்கு வருமானமாக எதிர்பார்க்கப்
படுகிறது. இது ஏற்கனவே 26 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்
பட்ட சதவீதம். இப்போது பல்வேறு வகையிலும் அரசுப் பணி
யாளர்களாக மாறிவிட்ட அலுவலர்களுக்குச் சம்பளமும், அக
விலைப்படியும் கொடுத்திருப்பதைக் கருத்தில் கொண்டு, இதை
உயர்த்துவோம் என்றுதான் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்
கிறது. இதிலே ஆறுகால பூசை இல்லாத கோவில்களுக்கு ஒரு
கால பூசையாவது இருக்கவேண்டுமென்று மாண்புமிகு புரட்சித்
தலைவர் அரசில் முடிவெடுக்கப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்
டதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

(பிற்பகல் 1-50)

இந்த அரசில் விளக்கே எரியாத கோயில்களில் விளக்கு எரிய
வும், சம்பளமே பெறாத அர்ச்சகர்களுக்குச் சம்பளம் கொடுக்க
வும், சம்பளங்களை உயர்த்தவும் ஏற்கனவே நடைமுறைப்படுத்
தப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள்.
இந்த ஒருகால பூஜை நடத்துகிற கோயில்களுக்கு ஏற்படுகிற
செலவை, ஏ முதல் ஜி வரை ஏற்படுகிற தவிர்க்க முடியாத
அத்தியாவசியச் செலவுகளை எல்லாம் கழித்த பிறகுதான் ஆலய
வருமானம் என்று கணக்கிடப்பட்டு, அதிலிருந்து பங்குத் தொகை
யையும், அதிலிருந்து தணிக்கைக் கட்டணத்திற்காக 1½ (ஒன்றரை)
சதவீதமும் வரையறுக்கப்படுவதைப் பற்றிச் சொன்னார்கள்.
இந்தத் தவிர்க்க முடியாத செலவில் ஏ முதல் ஜி வரை உள்ள
இனங்களில் உள்ளதை உடன் சேர்த்து ஒருகால பூஜைக்கு ஆகிற
செலவையும் நாம் இதிலே கழித்துவிட்டு, எஞ்சிய தொகையை
வருமானமாகக் கருதலாமா என்பதுதான் முதல் அமைச்சர் அவர்
களுடைய கொள்கையாகும். ஆகவே இந்தச் சட்டத் திருத்தத்
தினால் இந்து சமய அறநிலையத் துறையில் உள்ள அலுவலர்
களுக்குத்தான் பயன் அளிக்குமே தவிர, பணம் அதிகமாக வசூலா
கிற, வருமானம் வருகிற கோயிலுக்குத்தான் இந்தச் சதவீதம்
சேருமே தவிர, குறைந்த வருமானம் உள்ள கோயில்களை இது
பாதிக்காது என்று சொல்லி, பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த
மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த விவாதத்தில் கலந்து கொண்

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1986 நவம்பர் 18

டதற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 65/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 65/1986) நிறைவேற்றப் பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (19–11–1986) காலை 9–00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-52 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



1986 நவம்பர் 18]

8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படியான விதிகளும், ஆணைகளும்.

146. பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழுவின் 1984–85ஆம் ஆண்டிற்கான முதலாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

147. பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் 1984–85 ஆம் ஆண்டிற்கான மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

148. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் 1983–84 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 617-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

149. தமிழ்நாடு சரக்குப் போக்குவரத்துக் கழகத்தின் 1984–85 ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

150. சேரன் பொறியியற் கழகத்தின் 1983–84 ஆம் ஆண்டிற்கான பதினொன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ் ஆங்கிலம்).

151. தமிழ்நாடு கைத்திறப்பொருள் வளர்ச்சிக் கழகத்தின் 1983–84 ஆம் ஆண்டிற்கான பதினொன்றாவது ஆண்டறிக்கை. ]1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

21. 1986–87 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான துணை மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்).

22. 1986–87 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ்,ஆங்கிலம்).

23. 1986–87 ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீடுகள் பற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் உரை. (தமிழ், ஆங்கிலம்).

24. 1980–81 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். (தமிழ், ஆங்கிலம்).

25. 1980–81 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்).

26. 1980–81 ஆம் ஆண்டின் மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள் பற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் உரை. (தமிழ், ஆங்கிலம்).

27. 1986 ஆம் ஆண்டு பேரவை விதிகள் குழுவின் அறிக்கை. (எட்டாவது சட்டமன்றப் பேரவை.)

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 P. Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1 Ponniamman Koil Street, Egmore, Madras-8

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli rappalli-4.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 31, Old Post Office Road, Coimbatore 1
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavillas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 [illegible]ghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B. B. Ganguli Street, Calcutta-11

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

வெளியீடு 21-7-1987 Issued 21-7-1987

22782

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை நவம்பர் 19, 1986—தொகுதி 30 எண் 2

Wednesday the 19th November 1986—Volume 30 No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
Legislative Assembly Secretariat, Fort St. George, Madras-600009

விலை ரூ. 3] [Price Rs. 3

## உள்ளடக்கம்.

## (19-11-1986)


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1 | வினாக்கள்—விடைகள் | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 147—188 |
| 2 | முன்னாள் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கு பிறந்த நாள் புகழஞ்சலி | 188—191 |
| 3 | சவை ஈர்ப்பு— | |
| | ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை அரசு அனுமதியில்லாமல் தொடங்குதல் .. .. | 191—194 |
| 4 | தமிழ்நாடு மின்வாரிய நிதிநிலை அறிக்கை 1986-87 மற்றும் 1985-86-ம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை ஆகியவை மீது விவாதம் | 194—376 |
| | மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் | 194—105 |
| | திரு. ஏ. எஸ். ரவீந்திரன் .. .. | 195—206 |
| | திரு. கே. குப்புசாமி .. .. .. | 206—213 |
| | திரு. பொன் முத்துராமலிங்கம் .. | 214—222 |
| | திரு. வே. இரா. ஜெயராமன் .. | 223—226 |
| | திரு. வி. பி. சிந்தன் .. .. | 227—235 |
| | திரு. தி. அன்பழகன் .. .. | 236—240 |
| | திரு. எ. எஸ். ஏழ் ஆறுமுகம் .. .. | 243—246 |
| | திரு. மா. சுந்தரதாஸ் .. .. | 247—253 |
| | திரு. வே. கு. சின்னசாமி .. .. | 253—260 |
| | திரு. குமரி அனந்தன் .. .. | 260—269 |
| | திரு. ஆர். ரெங்கசாமி .. .. | 269—276 |
| 5 | பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. | 277 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

1986, நவம்பர் 19, புதன்கிழமை.

*கார்த்திகை 4, அட்சய—திருவள்ளுவர் ஆண்டு 2017.*

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

*''திறனறிந்து சொல்லுக சொல்லை; அறனும்*
*பொருளும் அதனினூங்கு இல்''*

*சொல்லின் திறத்தை அறிந்து சொல்லை வழங்கவேண்டும், அத்தகைய சொல் வன்மையைவிடச் சிறந்த அறமும் பொருளும் இல்லை.*

## *1.* வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### இராமநாதபுரம், திருநெல்வேலி கூட்டுறவு மத்திய வங்கிகள்

*71—(*வினா எண் 2574)* திரு. இரா. தாமரைக்கனி : *மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) இராமநாதபுரம், திருநெல்வேலி கூட்டுறவு மத்திய வங்கிகள் விவசாயிகளை சேனைக்கிழங்கு பயிரிட கட்டாயப் படுத்துவது அரசுக்குத் தெரியுமா ?*

*(ஆ) மற்ற விவசாயப் பயிர்கள் பயிரிட கடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?*

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) இராமநாதபுரம், திருநெல்வேலி மத்திய கூட்டுறவு வங்கிகள் சேனைக்கிழங்கு பயிரிட விவசாயிகளை கட்டாயப் படுத்துவதில்லை.*

*(ஆ) விவசாயிகளுக்கு இதர பயிர்களுக்கான, தேவையான கடன்களை, இவ்வங்கிகள் அளித்து விடுகின்றன.*

[1986 நவம்பர் 19

### ஆலங்குடி தொகுதி கீரமங்கலத்தை தனி வட்டமாக அமைத்தல்

72—(*வினா எண் 8121 திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, கீரமங்கலத்தை தனி வட்டமாக அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியாகிய ஆலங்குடி தொகுதியில் மொத்தம் 103 ஊராட்சிகள் உள்ளடங்கிய தொகுதியாக இருக்கின்ற காரணத்தாலும் இதில் கரம்பக்குடியில் 40 ஊராட்சிகளும், திருவரங்குளத்தில் 50 ஊராட்சிகளும், அறந்தாங்கி ஒன்றியத்தைச் சேர்ந்த 13 ஊராட்சிகளும் ஆக மொத்தம் 103 ஊராட்சிகள் இருக்கின்ற காரணத்தாலும் மொத்த வாக்காளர்கள் 1 லட்சத்து 20 ஆயிரத்திற்கு மேல் இருக்கிற காரணத்தாலும், கீரமங்கலம் பேரூராட்சியாக இருப்பதாலும், அது ஒரு ரெவின்யூ பிர்க்காவாக இருக்கின்ற காரணத்தாலும் கீரமங்கலத்தைச் சுற்றியுள்ள பைங்காள், மேற்பனக்காடு, பெரியலூர், வேம்பங்குடி, ஆவணத்தான் கோட்டை, திருநாளூர் மறமடக்கி இப்படி பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களை ஒன்றாக இணைத்து அதை ஒரு தனி வட்டமாக ஆக்கி பொது மக்களின் நலன் கருதியும், அரசின் சிரமங்கள் கருதியும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வருகின்ற கால கட்டத்திலாவது—தருவதற்கு முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை கோட்டத்தைச் சேர்ந்த ஆலங்குடி வட்டத்தில் உள்ள கீரமங்கலத்தை ஒரு தனிவட்டமாக ஆக்கலாம் என்று 1979 ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒரு செயற் குறிப்பை அனுப்பினார்கள். அந்த செயற்குறிப்பைப் பொறுத்து ஆலங்குடி மற்றும் அறந்தாங்கியை திருத்தி அமைக்கவேண்டும் என்ற கோரிக்கையையும் சொன்னார்கள். ஆனால் இதை பார்த்துவிட்டு வருவாய் மற்றும் நிர்வாக இணை ஆணையாளர் அந்த செயற்குறிப்பை ஏற்கவேண்டிய அவசியம் இல்லை என்று அரசுக்குத் தெரிவித்துவிட்டார்கள். ஆகவே அது நின்றுவிட்டது. இப்போது புதிய வட்டமாக அமைப்பதற்கு உரிய செயற்குறிப்பு எதுவும் ஆலங்குடியைப் பொறுத்தவரையில் அமையவில்லை. ஆக அங்கே இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் கூறியது போன்ற குறிப்புகளை எடுத்து அனுப்பி [illegible] வருவாய் நிர்வாகத் துறை ஆராய்ந்து அரசுக்கு அனுப்புகிற சூழ்நிலையில் அரசு அதை ஆராயும்.



1986 நவம்பர் 19]

திரு த. புஷ்பராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தொகுதி கீரமங்கலத்தை தனி வட்டமாக அமைக்கும் செயற்குறிப்பு இல்லை என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருந்த போதிலிருந்தே இந்தக் கோரிக்கையை நீண்ட நெடுங்காலமாக வலியுறுத்தி வந்திருக்கிறேன். அதோடு ஆலங்குடிக்கு எந்தப் பகுதியில் இருந்து வரவேண்டும் என்றாலும் 25 கிலோ மீட்டர் தூரத்திற்கு மக்கள் அங்கே தாலுக்கா அலுவலகத்திற்கு வந்து காரியங்களைச் செய்கின்ற ஒரு நிலை ஏற்படுகிறது. ஆகவே, அரசு மறுபரிசீலனை செய்து இதைத் தனி வட்டமாக அறிவிக்க நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கைகள் அந்தப் பகுதியில் இருக்கலாம். மாண்புமிகு உறுப்பினருக்கும் இருக்கலாம். நான் சொன்னது செயற்குறிப்பு இல்லை, நிலுவையில் இல்லை என்று சொன்னேன். அந்த செயற்குறிப்பு உருப்படியாக இருக்க வேண்டும் என்றால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற புள்ளிவிவரங்களை மற்றவைகளை வைத்து வருவாய் மற்றும் நிர்வாக துறைக்கு அனுப்புவார்களானால் அதற்குப் பிறகு அவர்கள் பரிந்துரையின் பேரில் அரசு ஆராயும் என்று குறிப்பிட்டேன்.

### தஞ்சை மாவட்ட நிலங்களுக்கு நில்வரி ரத்து.

73—(*வினா எண் 8488) திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1985–86-ல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு நிலவரி ரத்து செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) ஆம்.

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் 1395 ஆம் விளைச்சல் ஆண்டில் (1985-86) ஏற்பட்ட வெள்ளம் மற்றும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர் நிலங்களில் விளைச்சல் 37 பைசா (50 விழுக்காடு-வுக்கும் குறைவாக உள்ள நிலங்களை வருவாய் அலுவலர்கள்ால் நேரில் சென்று பார்வையிட்டபின்பு அந்நிலங்களுக்கு நிலவரி மற்றும் உள்ளூர் வரி வசூலை தள்ளுபடி செய்யுமாறு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 விழுக்காடு என்பது இரண்டு போகங்கள் நடுகின்ற நிலங்களில் ஒரு போகம் அறுவடை ஆகிவிட்டால், ஒரு போகம்

அறுவடை ஆன காரணத்தால், 50 சதவிகிதம் கணக்கில் எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால், இரண்டு போகங்கள் சாகுபடி செய்கின்ற நிலங்களில் ஒரு போகம் சாகுபடி செய்து, அதிலிருந்து வருகின்ற வருமானத்தை வைத்துத் தான் அடுத்த சாகுபடியைத் தொடங்க முடிகிறது. செலவும் சரியாக இருக்கிறது. எனவே, இரண்டு போகங்களிலும் விவசாயிகள் பலன் அடைந்தால்தான் முழுக்க 100 சதவிகிதம் கூட அல்ல, 50 சதவிகிதம்தான் கணக்கிடமுடியும். என்வே, ஒரு போகத்திலே விளைந்த நெல்லை கணக்கில் வைத்துக் கொண்டு, 50 சதவிகிதம் என்று சொல்லி, பல இடங்களில் வாய்தா தள்ளுபடி செய்யப் படவில்லை. எனவே அரசாங்கம் அதை மறுபரிசீலனை செய்து, இரண்டு போகங்களும் வெற்றி பெற்றால்தான் 100 சதவிகிதமாக கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என முடிவு எடுக்க அரசு முன்வருமா என்றும், சென்ற ஆண்டு 12 தாலுக்காக்களில் குத்தகைப்பாக்கியைத் தள்ளுபடி— . . . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாக கேளுங்கள்.

திரு. மா. மணிமாறன் : 12 தாலுக்காக்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு விட்ட காரணத்தினாலே குத்தகை பாக்கியை வசூலிக்கக்கூடாது என்று சட்டம் நாம் நிறைவேற்றியிருக்கிற இந்த நேரத்திலே இன்று வரை வாய்தா தள்ளுபடி செய்யப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு அதைப் பரிசீலிப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரி வஜா செய்வது, அதனைத் தள்ளி விடுவது என்பதற்கெல்லாம் வருவாய்த் துறையிலே ஒரு முறையும், வகையும் இருக்கிறது. அந்தத் தன்மையின் அடிப்படையிலேதான் அந்தப் பணிகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆக, வெள்ளச் சேதத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட 12 வட்டங்களில் 2,36,437 ஏக்கர் பாதிக்கப்பட்ட அளிவில் 51,72,317 ரூபாய் வரி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. தண்ணீர் பற்றாக்குறையின் காரணமாக மற்ற 10 வட்டங்கள் பாதிக்கப்பட்ட வகையில், 1,33,984 ஏக்கர் பாதிக்கப்பட்டது. அந்த வகையில் 29,73,405 ரூபாய் வரி தள்ளுபடி செய்ய உத்தேசிக்கப்பட்டு இருப்பதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அந்த உத்தரவு சென்றடைந்ததா என்ற விவரங்கள் இல்லை. அடையாமல் இருந்தால், அது அடைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அது மட்டுமல்லாது, 1–7–1985 முதல் 30–6–1986 முடிய வெள்ளம், வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலங்கள் வருவாய்த் துறை ஆணை 14-இன் கீழ் உள்ளூர் வரி, உள்ளூர் செஸ் மேல் வரி, கூடுதல் தண்ணீர் வரி, கூடுதல் வரி சிறப்பு தண்ணீர் வரி போன்றவைகளை தள்ளுபடி செய்யும்படியும், அரசுக் கடன்களை வசூல் செய்வதை அடுத்த பசலி ஆண்டுக்குத் தள்ளிப் போடும்படியும், 19–9–1986 ஆம் நாளிட்ட ஆணையின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.





திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12 வட்டங்களில் நாம் குத்தகை பாக்கி வசூலிக்கக்கூடாது என்று சட்டம் நிறைவேற்றியிருக்கிறோம். ஒட்டுமொத்தமாக ஒரு வட்டத்திலே குத்தகை பாக்கி வசூலிக்கக்கூடாது என்று சட்டம் நிறைவேற்றியதற்குப் பின்னால், ஒரு குறிப்பிட்ட ஏக்கரிலேதான் நிவாரணம் என்று சொன்னால், வருமானமே வராத விவசாயி, நில உடைமையாளர் எவ்வாறு வாய்தா கொடுக்கமுடியும்? நாம் குத்தகை வசூலிக்கக்கூடாது என்று சட்டம் நிறைவேற்றிய எந்தெந்த நிலங்கள் இருக்கின்றனவோ, அந்த நிலங்களுக்கெல்லாம் வாய்தா தள்ளுபடி செய்ய அரசு முன் வருமா என்று கேட்பதோடு, நம்முடைய பழைய ரெவினியூவிலே இருக்கின்ற வருமானங்களை 50 சதவிகிதம் கணக்கிடுவது—ஒரு காலத்தில் தஞ்சை மாவட்டத்தில் குறுவை நிலங்களே இல்லாமல், சம்பாவாக இருந்த காலங்களில் இருந்த கணக்கை இன்றைக்கும் தொடர்ந்து வெள்ளம் வருவதாக இருந்தாலும், தண்ணீர் பின்னாலே வந்தாலும் கூட, உணவுப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு குறுவை நடவேண்டும் என்று நாம் அரசாங்கத்திலே தீவிரப் பிரச்சாரம் செய்து, விவசாயிகளை ஊக்குவிப்பு செய்ததற்குப் பின்னால். . . . . . . . (மணியடிக்கப்பெற்றது) (பதில் இல்லை.)

### அரசு அலுவலர்களை அதிகரித்தல்.

74—(*வினா எண் 9082) திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு அலுவலகங்களில் பணியாளர்களை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், தமிழகத்தில் அதன் மூலம் பயனடைவோர் எண்ணிக்கை எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) விடையளிக்கும் நிலை எழவில்லை.

திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற போது, 'இல்லை' என்று சொன்னார்கள். 'இல்லை' எனில், படித்து விட்டு வேலையற்று இருப்பவர்களுக்கு வேலை தந்திட மாற்றுத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா? உள்ளது எனில், அந்த விவரங்களைத் தெரிவிக்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1986 நவம்பர் 16

(முற்பகல் 9.10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலகங்களில் அவ்வப்போது ஏற்படும் வேலை அதிகரிப்பின் காரணமாகப் பணியாளர்களின் எண்ணிக்கைத் தேவைக்கு ஏற்ப அதிகரிக்கப் படுகிறது. அரசின் புதுத்திட்டங்களுக்கும், சிறப்புப்பணிகளுக்கும் மற்றும் குறிப்பிட்ட பணிகளுக்கும் திட்டச் செயல்பாட்டிற்கும் அவ்வப்போது தேவைப்படும் பணியாளர்கள் நியமிக்கப் படுகிறார்கள். அதுமட்டுமல்ல. இரண்டாம் பகுதித் திட்டம் எனப்படும் ''பார்ட் 2 ஸ்கீம்'' அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்படும் போது அவசியம் காரணமாகத் தொழில் நுட்ப பணியாளர்கள்— அதுவும் மிகக் குறைந்த பணியாளர்களே— நியமிக்கப் படுவதற்கு கூடுதல் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டுமென்ற கருத்துரு அனுப்பப்பட வேண்டும் என்று துறைகளுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறு புதிதாக தொழில் நுட்பப் பணிகளுக்குரிய இடங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும் என்று கருதப்படும்போதும் சம்பந்தப்பட்ட துறைச் செயலரும், நிதித் துறைச் செயலரும், இரண்டாம் செயலரும் மற்றும் தலைமைச் செயலரும் உட்கார்ந்து முடிவு செய்கிறார்கள். படித்துவிட்டு வேலை இல்லாதிருக்கும் அத்தனைபேருக்கும் அரசுத் துறைகளிலேயே வேலை கொடுப்பது என்பது இயலாத ஒன்று. தேவைப்பட்ட இடங்களை மட்டுமே உருவாக்குவது என்றும் அந்த வகையில் உருவாக்கப்படும் பணியிடங்களுக்குத் தகுதியானவர்களையும் திறமையானவர்களையும் தேர்ந்தெடுப்பது என்ற முறையைக் கொண்டு வந்திருக்கிறோம். படித்துவிட்டு வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கான வழிவகைகளை வேறு பல துறைகளில் செய்து வருகிறோம். தொழில் துறை, கூட்டுறவுத் துறை, ஊரகத்துறை ஆகியவற்றில் அவர்களையெல்லாம் ஊக்குவித்து வருகிறோம், நிதி நிறுவனங்கள் மூலமாக அவர்களுக்குக் கடன் அளித்து சுயமாகத் தொழில் செய்ய நல்ல ஊக்கம் தரப்படுகிறது. சிறு தொழில்கள் துவங்க வங்கிகள் மூலமாகவும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், ஷெட்யூல்டு வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்கள் மூலமாகவும் ஊக்கத் தொகைகள் அளித்து வருகிறோம். இதுவும் கடந்த 10, 15 ஆண்டுகளில் அதிகமாகிக் கொண்டே வந்திருக்கிறது. இதையெல்லாம் இளைஞர்களும் மற்றவர்களும் பயன்படுத்திக் கொள்ள முன் வர வேண்டும். அந்த வகையில் தமிழகத்தில் நாம் வேலை வாய்ப்புகளை அதிகமாக உருவாக்கிக் கொண்டு வருகிறோம். படித்துவிட்டு வேலை இல்லாமல் இருப்பவர்கள் அத்தனை பேருக்கும் வேலை வாங்கித் தருகிற முழுப் பொறுப்பையும் அரசே ஏற்க இயலாது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலகங்களில் பணியாளர்களைக் கூடுதலாக நியமிப்பதைக் குறித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்



1986 நவம்பர் 19]

இங்கே குறிப்பிட்டார்கள். தற்போது வாரத்திற்கு 5 நாட்களே வேலை நாட்கள் என்று குறைத்திருப்பதால் பொதுமக்களுக்குப் பல்வேறு வகைகளில் சிரமம் ஏற்பட்டிருக்கிறது. அரசுப் பணிகளும் தடைப்படுகின்றன. பல்வேறு மாநிலங்கள் 5 நாட்கள் வேலை நாட்கள் என்று முதலில் ஏற்றுக் கொண்டன. இருந்தாலும் அண்டையிலுள்ள மாநிலம் ஒன்று வாரத்திற்கு 5 நாட்கள் வேலை நாட்கள் என்று ஆக்கியதை அண்மையில் மாற்றி வாரத்திற்கு 6 நாட்கள் பணிநாட்கள் என்று ஆக்கியிருக்கின்றது. இந்தத் திட்டத்தை அறிவித்த மத்திய அரசே கூட ஊழியர்களின் வேலை நேரத்தை அண்மையில் கூட்டியிருக்கிறது. இவ்வாறு 5 நாட்களாக ஆக்கியது பொதுமக்களுக்குப் பல வகையிலும் இடையூறாக இருக்கிறது. எனவே அவர்கள் மீண்டும் 6 நாட்கள் வேலை நாட்களாக ஆக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள். பெரும்பான்மையான அரசு ஊழியர்களும் குறிப்பாக பெண்களும் வாரத்திற்கு 6 நாட்கள் வேலை நாட்கள் என்று ஆக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களேகூட கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரின் போது இது குறித்து ஒரு வாக்குறுதி அளித்தார்கள். 6 மாதத்திற்குள் இந்த 5 நாள் வேலை முறை காரணமாக அரசுக்கு என்ன லாபநஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று பார்க்க ஒரு குழு அமைக்கப்படும் என்று சொன்னார்கள். தற்போது 6 மாதம் ஆகிவிட்ட காரணத்தால் முன்பு சொன்னபடி ஒரு குழு அமைத்துப் பரிசீலனை செய்ய முன்வருவாரா என்று அறிய விரும்புவதோடு அப்படி அமைக்கப்படும் குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுடைய பிரதிநிதிகளும் இடம் பெற வகை செய்வாரா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே இருக்கிற நிலைமைகளையெல்லாம் நன்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் சிலபல நன்மைகளைக் கருதி சிலபல முடிவுகளை எடுக்கிறோம். அப்படி எடுக்கப் படுகிற முடிவுகள் மூலமாக எதிர்பார்க்கிற நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் நிறைவேற வேண்டும். அவ்வாறு நிறைவேறாவிட்டால் எப்படி அதைச் சீர்திருத்தி அமைப்பது என்று பார்க்க வேண்டும். சிலபல மாநிலங்களும் மத்திய அரசும் இதைக் குறித்து ஒரு முடிவு செய்திருக்கின்றன. நான் முன்பே சொன்னபடி ஓராண்டுக் காலம் நம்முடைய மாநிலத்தின் அனுபவத்தையும் வைத்து பிற மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் அனுபவத்தையும் வைத்து அத்தோடு இங்கே பணியாற்றுகிற பணியாளர்களின் அனுபவத்தையும் கேட்டறிந்து மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். அவர்கள் இங்கே குறிப்பிட்ட மாதிரி மக்கள் பிரதிநிதிகளின் அனுபவத்தையும் கேட்டறிந்து அதன் அடிப்படையில் ஒரு திட்டவட்டமான, நிலையான முடிவு எடுப்பது நல்லது. அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும். அப்போது நான் முதலில் சொன்னபடி பொது

மக்களின் பிரதிநிதிகளோடு மற்றவர்களையும் கொண்ட ஒரு குழுவை அமைத்து அதன் மூலமாக ஆய்வு நடத்தி தக்க முடிவெடுக்கலாம் என்று அரசு கருதுகிறது.

திரு. எஸ். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலகங்களுக்குக் கடிதங்கள் எழுதினாலும் அவற்றிற்கு பல மாதங்களானாலும் பதில் வருவதில்லை என்பது ஒருபுறம் இருக்க பதில் வராத கடிதங்கள் ஏராளமாக இருக்கிற காரணத்தாலும், பல இடங்களில் அரசு அலுவலகங்களில் பல பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதாலும் வேறு மாநிலங்களில் அரசுப் பணியாளர்கள் எந்த அளவுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அரசு இதுவரை ஒப்பு நோக்கியிருக்கிறதா? அவ்வாறு ஒப்பு நோக்கியிருந்தால் காலியிடங்களை விரைவில் நிரப்ப முனைப்பான நடவடிக்கையை மேற்கொண்டு அதிக ஆட்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி முழு விவரம் சொல்லும் நிலையில் இல்லை. மூன்று திங்களுக்கு ஒரு முறை ஒரு திங்களுக்கு ஒரு முறை ஒவ்வொரு துறையைப் பற்றியும் ஆய்வு நடத்தி தலைமைச் செயலாளர் அவர்கள் எந்தெந்தத் துறையிலே பணியிடங்கள் காலியாக இருக்கின்றன' அல்லது குறைவாக இருக்கின்றன, உடனடியாக அந்த இடங்கள் நிரப்பப்பட வேண்டும், அல்லது ஓய்வு பெற்றோ அல்லது வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டோ இருந்தால் அங்கே ஆட்களைப் போடாமல் இருந்தாலோ அல்லது காலியாக இருந்தாலோ கணக்குச் சொல்ல வேண்டுமென்றும், உடனடியாக அவ்விடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்றும் நோக்கத்தை வைத்து அவ்வாறு கணக்கிட்டு உடனடியாக அந்தப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்ற தன்மையின் அடிப்படையில் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. அதனுடைய புள்ளி விவரங்கள் என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறியது போன்று தேக்க நிலை இருக்கக் கூடாது; காலத்தாழ்வு இருக்கக் கூடாது' காலத்தாழ்வு ஏற்பட்டு நிரப்பப்படவேண்டிய பணியிடங்கள் நிரப்பப்படாமல் தேங்குவதன் காரணமாக எதிர்பார்க்கப்படும் பலன்கள் பொது மக்களுக்கும், அரசுக்கும் ஏற்படாமல் போகிறது என்பதால் அரசு அவற்றை விரைவுபடுத்தும் முயற்சிகளை எல்லாத் துறைகளிலும் மேற்கொண்டு வருகிறது.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு விரைவாக நீதி வழங்க வேண்டுமென்ற கொள்கையை மாநில அரசு கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. மக்களுக்கு விரைவாக நீதி வழங்கப்பட வேண்டுமானால், அரசுப் பணியில் தேவைக்கேற்ப பணியாளர்களை நியமிக்க வேண்டும் அப்படி நியமிக்கப்படவில்லை என்பது பொதுவான கருத்தாகும். வளர்ந்து வரும் தமிழ்நாட்டின்



தேவைக்கேற்ப நிர்வாகப் பணியாளர்கள் இருக்கிறார்களா என்பதை ஆய்ந்து கண்டறிய ஒரு குழுவை அமைக்க மாநில அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே· இதற்காக தனிக் குழு அமைக்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் முதலிலே நான் சொன்னபடி கணக்குகள் அவ்வப்போது எடுக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு துறையைப் பொறுத்தவரையிலும் ஆண்டுக்கு எவ்வளவு பேர் ஓய்வு பெறுவார்கள். எவ்வளவு பேர் பதவியிலிருந்து வேறு பதவிகளுக்கு அனுப்பப்படுவார்கள் என்ற கணக்குகளின் அடிப்படையில் முன்கூட்டியே பதவி உயர்வு பட்டியலில் சேர்த்து வைக்கப்பட்டு காலி ஏற்படுகிறபோது போட வேண்டுமென்ற முறை குறிப்பாக வருவாய்த் துறையிலும், வேறு வளர்ச்சித் துறையிலும் பல துறைகளிலும் கையாளப்பட்டு வருகிறது. துணை வட்டாட்சித் தலைவர் பட்டியலில் இருந்து வட்டாட்சித் தலைவர் பட்டியலுக்கும், வட்டாட்சித் தலைவர் பட்டியலில் இருந்து கோட்டாட்சித் தலைவர் பட்டியலுக்கும் என்று தேர்ந்தெடுத்து வைத்திருக்கிறோம். அதிலிருந்து எடுத்துப் போடுகிறோம். அதிலே சுணக்கம் ஏற்பட்டால் காலியேற்பட வாய்ப்பு ஏற்படுகிறது. இப்படி சுணக்கம் ஏற்படக்கூடாது என்று எல்லாத்துறைக்கும் வற்புறுத்திச் சொல்லி வருகிறோம். காலத்தாழ்வு தேக்கம் ஏற்படக்கூடாது என்பதுதான் அரசின் கொள்கை.

திரு. வே. கு. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அரசு அலுவலகங்களில் பணியாளர்களை நியமிப்பது [illegible] இல்லை என்ற அறிவிப்பைத் தந்தார்கள். குறிப்பாக நான் அவைக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுப் பணித் துறையிலுள்ள நீர்ப்பாசனத் துறையில் சாதாரணமான லஸ்கர் போன்ற பணியாளர்கள்கூட பல ஆண்டுகளாக நியமிக்கப்படாமல் இருக்கின்றார்கள். அத்துறையில் நிறைய பேர் ரிட்டையர் ஆகியிருக்கிறார்கள். இரண்டு, மூன்று கிளை வாய்க்கால்களை பார்த்தவர்கள் இப்போது பத்துப் பதினைந்து கிளை வாய்க்கால்களைப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே நீர்ப்பாசனத் துறையைப் பொறுத்த வரையில் அத்தியாவசியமான பணியாளர்கள் என்று கருதி தற்காலிக பணியாளர்களாக லஸ்கர்களை ஏதாவது வழியில் நியமிக்க மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கூறியது போல தமிழகத்தைப் பொறுத்தவரையில் வேலை நாட்கள் [illegible] நாட்களாக இருக்க வேண்டுமென்று அதிகாரிகளே விரும்புகிறார்கள் என்பதால் [illegible] நாட்கள் வேலை என்பதை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு ஏற்கனவே பதில் சொல்லியாகிவிட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை நாட்களைப் பொறுத்த வரையில் அதிகாரிகள், அலுவலர்கள், பணியாளர்கள், பொது மக்கள் ஆகிய அத்தனை பேரையும் கலந்து திட்டவட்டமான, தெளிவான முடிவை எடுக்க வேண்டுமென்பதையும், அனுபவத்தின் அடிப்படையில் செய்ய வேண்டும் என்பதையும் முதலிலேயே நான் குறிப்பிட்டேன். நீர்ப்பாசனத் துறையைப் பொறுத்தவரையில் அந்தத் துறையில் இருக்கின்ற பணிகள் சிறப்புற, செம்மையுற நடைபெற வேண்டுமென்ற தன்மையின் அடிப்படையில் செயற்குறிப்புகளை அனுப்பியிருப்பார்களேயானால் அரசு அதைப் பற்றி கவனிக்கும், வேறு சிலபல திட்டங்களை ஏற்று நடத்தும் பணி முடிந்த பிறகு புதிய திட்டங்கள் ஏற்படுத்தும் போது அதிலிருந்து அந்த திட்டங்களுக்குப் பல பேரை மாற்றுகிறோம். தேவைப்படுகிற இடங்களில் புதிய புதிய துறைகளையும், பிரிவுகளையும் ஏற்படுத்தி, அதிகாரிகளையும், மற்றவர்களையும் நியமிக்க அவ்வப்போது ஆணை பிறப்பித்துக் கொண்டிருக்கிறோம். நீர்ப்பாசனத் துறையைப் பொறுத்தவரையில் கட்டிடங்கள் நடத்தும் பிரிவில் அத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகவே செய்யப்படவேண்டிய அளவிற்கு பணியாளர்கள் நியமீக்கப்படவில்லை என்றால் நியமிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போன்று இருக்குமானால், அதற்குரிய செயற்குறிப்பை நீர்ப்பாசனத் துறைதான் அனுப்பிவைக்க வேண்டும்,

[முற்பகல் 9-20]

திரு. கி கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. அதிகாரம் பரவலாக்கப்பட்டு அதிகாரிகள் பல இடங்களில் நியமிக்கப்படுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு கீழே வேலை செய்வதற்கு அலுவலர்கள் நியமிக்கப்படுவதில்லை. டி.ஆர்.ஓ., ஆர்.டி.ஓ. தாசில்தார், கோவாப்பரேடிவ் டெபுடி ரிஜிஸ்டிரார் போன்ற பல நூற்றுக்கணக்கான பதவிகள் காலியாக உள்ளன. அலுவலாளர் பதவிகளும் காலியாக உள்ளன, இதனால் அரசு அலுவல்கள் தாமதமாகிறது. மக்கள் பாதிக்கப்படுகிறார்கள், எனவே விரைவாக காலி இடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா ? அதற்கான செயற்குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு பிரிவை அல்லது ஒரு துறையை உருவாக்கும்போது, அதற்குத் தேவையான அதிகாரிகள், அலுவலாளர்கள். தட்டச்சர்கள், சுருக்கெழுத்தர்கள் ஆகியவர்கள் உன்பட அனைவருக்கும் சேர்த்து செயற்குறிப்பு கொடுக்கும்படி கேட்டுக்கொண்டிருக்கிறோம், அதிகாரிகளை நியமிப்பதற்கு ஆணை பிறப்பித்த பிறகு, பணியாவர்கள் வேண்டுமென்று கேட்கும்போது காலதாமதம் ஏற்படுகிறது. அதிகாரிகளை நியமித்துவிடுகிறோம். அலுவலாளர்களை நியமிக்கமுடியாத





நிலை இருக்கிறது. எனவே தேவைகள் அனைத்தையும் ஒரே சமயத்தில், சைமல்டேனியஸ்லி, ஒரே செயற்குறிப்பில் எழுதி அனுப்பினால், அனைவரையும் நியமிக்க வாய்ப்பு ஏற்படும் அப்படிப்பட்ட நிலை ஏற்படும்போது பணியில் சுணக்கம் ஏற்படாது,

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசுப் பணியாளர்களை நியமிப்பதில் கால தாமதம் ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் இதுவரை நியமிக்கப்படவில்லை. விரைவில் நியமிக்கப்படுவாரா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கவனிக்க வேண்டிய ஒன்று, தலைமைச் செயலாளர் மூலமாக விரைவிலே செய்யப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் விரைவிலே நியமிக்கப்படுவார். அதற்கான செயற்குறிப்பு இருக்குமென்று கருதுகிறேன்.

புதிய கோயில்கள்

75—*வினா எண் 5801 திரு. செ. செம்மலை : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கட்டுப்பாடில்லாமல் புதிய கோயில்கள் தேவையற்ற இடங்களில் உருவாகுவது குறித்து அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அவற்றை முறைப்படுத்த அரசு நடவடிக்கையாது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆம். பொதுவிடங்களில் கோயில்கள கட்டுவதை கட்டுபடுத்துவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே எப்படிப்பட்ட கட்டுப்பாடுகளை, அரசு விதிக்க இருக்கிறது என்ற விவரத்தையும், அரசின் ஆய்வில் உள்ள கட்டுப்பாடுகள் குறித்த விவரங்கள் என்ன என்பதையும் அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொது இடங்கள் அல்லது சர்ச்சைக்குரிய நிலங்களில் திடீரென்று இரவோடு இரவாக தோன்றும் மத வழிப்பாட்டுநிலையங்களைக் கட்டுவதை அகற்றுவதற்கான தனிச் சட்டம் இயற்றுவது குறித்து பரிசீலிக்கும்படி மத்திய அரசை மாண்புமிகு முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

இப்பொருள் பற்றிய 1954 ஆம்வருடத்திய ராஜஸ்தான் மாநிலச் சட்டத்தை முன்மாதிரியாகக் கொண்டு புதிய சட்டத்தை இயற்றுமாறும் வலியுறுத்தியுள்ளது. அதன் அடிப்படையில் பொது இடங்களில் கோயில் கட்டுவதை அகற்றுவதற்கான சட்டம் இயற்றுவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்படி பொது இடங்களில் கோயில்கள் உருவான பிறகு அதை அகற்றுவது அல்லது அப்புறப்படுத்துவது என்பது ஒரு சமுதாயப் பிரச்சினையாக, இன்னும் சொல்லப்போனால் ஆன்மீகப் பிரச்சினையாக உரு எடுக்கிறது, அந்த நிலையில், சட்டம் இடம் கொடுத்தாலும், அவற்றை அகற்றுவதில் சிக்கல் ஏற்படுகிறது. இருந்தாலும்! கோவில்கள் என்பது அறநிலையத் துறை சம்பந்தப்பட்டது. ஆனால் இடங்களைப் பொறுத்தவரையில் உள்ளாட்சித் துறையின் கீழ் வருகிறது. எனவே புதிதாகக் கோவில்களைக் கட்டுகிறபோது அல்லது சிலைகளை நிறுவுகிறபோது சம்பந்தப்பட்ட அறநிலையத் துறையிடம் முன் அனுமதி பெற வேண்டுமென்ற நிலை பரிசீலனையில் உள்ள சட்டத்தில் இடம் பெறுமளவுக்கு பார்த்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கருத்து, சட்டம் இயற்றுகின்றபோது கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொது இடங்களில், ஊருக்கு உபத்திரவம் இல்லாத இடங்களில் ஊர் மக்கள் சேர்ந்து கோவில் கட்டுகின்றபோது நிலைமைகள் வேறு. ஆனால் அமைச்சரவர்கள் சொல்லும் நிலைமை, சட்டத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கை இருக்கிறது என்பதாகும். நான் சொல்ல விரும்புவது, சட்டம் இருக்கிற இடத்திலேயே அதை அமுலாக்காமல், தவறு செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான். கோவை மாநகரம் போன்ற முனிசிபல் நகரங்களில் இதை ஒரு வியாபாரமாகக் கருதி, நடு ரோட்டில், 4 கற்களை வைத்து கோவில் என்று ஆரம்பிக்கிறார்கள். அந்த நிமிடத்திலேயே அதை ரிமூவ் பண்ண முனிசிபல் அதிகாரிகளுக்கு உரிமை இருக்கிறது. எந்தத் தடையையும் நடு ரோட்டில் உண்டாக்கக் கூடாது என்பது விதி. இன்றைக்கு அமுலில் இருக்கும் போக்குவரத்து விதிகளுக்கு உட்பட்டே அப்படிப்பட்ட நடவடிக்கைகளை தடுக்கலாம். இப்படி நடுத் தெருவில் கோவில்கள் கட்டுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற கோவில்களுக்கு மட்டும் அங்கீகாரம் அளித்து, புதிய கோவில்கள் தோன்றாமல் இருப்பதற்கு, புதிய இடங்களை ஆக்கிரமிப்பு செய்யாமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய சட்டத்தில் இதற்கான வழி வகுக்கப்படும்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற அந்த உயரிய தத்துவத்தை உள்ளடக்கி, தற்சமயம் பிறந்ததே போதும், இனி பிறப்பதைத் தவிர்ப்போம் என்ற குடும்பக் கட்டுப்பாடு நிலையைப்போல், இன்றுள்ள கோவில்களைக் காப்பாற்றினாலே போதும் என்ற நிலைமையில், தேவையற்ற, முறையற்ற போக்குவரத்திற்கு கெடுதல் விளைவிக்கின்ற வகையில் உள்ளவைகளை ஒழுங்குபடுத்த, முறைப்படுத்த அரசியல் ஆன்மீகம் கலந்த ஒரு குழுவை அமைத்து அரசு சீர்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, சொல்வன்மை மிக்க மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் இந்தப் பணியை மேற்கொண்டால், நல்ல பலன்களை விளைவிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 94, 95 மாண்புமிகு ஆதித்திராவிட நலத்துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க முன்னதாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

தமிழகத்தில் காட்டுநாயக்கர் வகுப்பினர்.

94— (*வினா எண் 3876)— திரு. அ. யாலுச்சாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் காட்டுநாயக்கர் என்ற வகுப்பினருக்கு சாதிச் சான்றிதழ் வழங்கப்படுகின்றதா ?

(ஆ) அவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் என்னென்ன?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ''காட்டுநாயக்கர்'' இனத்தைச் சார்ந்தவர்களுக்கு பழங்குடியினர் என்று இனச்சான்று வழங்கப்படுகிறது.

(ஆ) பழங்குடியினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் அனைத்தும் இவ்வினத்தாருக்கு அளிக்கப்படுகின்றன.

[1986 நவம்பர் 19

திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலேகூட காட்டு நாயக்கர்கள் ஒரு பகுதியில் இருக்கிறார்கள், ஆனால் அந்த காட்டுநாயக்கர்கள் அந்த ஜாதிச் சான்றிதழ் வாங்கச் செல்லுகின்றபோது, அது அவர்களுக்கு மறுக்கப்படுகிறது. அப்படி மறுக்கப்படாமல், காட்டுநாயக்கர்களுக்கு சான்றிதழ் வழங்குவதற்கான ஏற்பாட்டை ஆங்காங்கு அதிகாரிகள் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுநாயக்கர் வகுப்பைச் சார்ந்தவர்கள் பழங்குடியினராக இருந்தால், அந்தந்த மாவட்டங்களிலே இருக்கின்ற மாவட்ட ஆட்சியாளர்களை அணுகி, அவர்கள் அதை ஆய்வு செய்து கொடுப்பதற்கு ஆணையிடப்பட்டிருக்கிறது அப்படி இருப்பார்களானால், அதை கொடுப்பதற்கு ஆவன செய்யப்படும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியில் செங்கோட்டை தாலுகாவில் காட்டு நாயக்கர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பெரும்பாலும் பழைய கேரள மாநிலத்தைச் சார்ந்த கன்னியாகுமரி மாவட்டத்திலும் திருநெல்வேலி, செங்கோட்டை ஆகிய பகுதிகளில் அதிகமாக இருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு செங்கோட்டை பகுதியில் உள்ள காட்டு நாயக்கர்கள் ஜாதி சான்றிதழ் வாங்குவதற்கு கஷ்டப்படுகிறார்கள். பல முறை செங்கோட்டை தாசில்தார், ஆர். டி. ஓ. ஆகியோர்களிடம் சொல்லியும், அநத மக்களை அல்லலுறச் செய்து, இழுத்தடித்துக்கொண்டிருக்கிறார்கள். இவ்விஷயம் குறித்து அரசு குறிப்பு அனுப்பி, இதுபோன்ற ஏழை மக்களுக்கு உடனடியாக இந்த சர்டிபிகேட் கிடைக்கின்ற வகையில் வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுநாயக்கர்களைப் பொறுத்தவரையில் பழங்குடியினர் என்று மீண்டும் சான்றிதழ் வழங்குவதற்கு மைய அரசு அவ்வப்போது ஆணை பிறப்பித்து செயல் படுத்தி வருகிறது. அதை மாநில அரசு மாவட்ட ஆட்சியாளர்கள் மூலமாகக் கவனப்படுத்துகிறது. ஆகவே, அப்படிப்பட்ட பிரச்னையிருந்தால், அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காட்டுநாயக்கர்கள் சமுதாயத்தைப் பொறுத்த வரையில் அவர்கள் 6 மாதங்கள் காட்டிலும், 6 மாதங்கள் வீட்டிலும் என்றிருக்கக்கூடிய நிலைமையில், 6 மாதங்கள் வீட்டில் இருக்கக்கூடிய நேரத்தில் அரசு அதிகாரிகளிடம் சென்று சான்றிதழ் கேட்கின்றபோது, அதை அவர்கள் உடனடியாகப் பெற முடிவதில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் அதிகாரிகளைக்



1986 நவம்பர் 19]

கேட்கின்றபோது, அரசு சர்வே செய்தபோது, சில பகுதிகள் விடுபட்டிருக்கின்றன என்கிறார்கள். எனவே, இந்த காட்டு நாயக்கர்களுக்கு உதவுகின்ற நோக்கத்தோடு, அரசு மீண்டும் எந்தெந்தப் பகுதிகளிலே காட்டுநாயக்கர்கள் வசிக்கின்றார்கள் என்று ஆய்ந்து என்னுடைய தொகுதியாகிய. . . . . . . .(மணியடிக்கப்பெற்றது.)

(முற்பகல் 9.30)

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆவன செய்யும்.

திரு. மூ. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலே என்னுடைய தொகுதியிலே உள்ள கனக்காடு பகுதியிலே 125 குடும்பங்கள் காட்டு நாயக்கர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் வசிக்கிறார்கள். அந்த வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுடைய எஸ்.எஸ்.எல்.சி. சர்டிபிகேட்டில் காட்டு நாயக்கர் என்றுதான் பதிவாகியிருக்கிறது. ஆனால் அவர்கள் படித்து முடித்து வேலைக்குச் செல்லும் போதோ அல்லது உயர்படிப்பிற்குச் செல்லும்போதோ காட்டு நாயக்கர் என்று சர்டிபிகேட் கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு காட்டு நாயக்கர் என்று சர்டிபிகேட் கொடுக்கச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது உண்மையாக இருக்குமானால் அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

வெம்பக்கோட்டை ஒன்றியம், தாயில்பட்டி ஆதிதிராவிடர்களுக்கு தனி வாசக சாலை.

95—(*வினா எண் 7860) திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) வெம்பக்கோட்டை ஒன்றியம், தாயில்பட்டி கிராமத்தில் ஆதிதிராவிடர்கட்கு தனியாக வாசக சாலை கட்டும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) விரைவில் வேலை தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை (ஆ) எழவில்லை.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக தாயில்பட்டி கிராமத்திலே [illegible] அங்கே [illegible]

சென்று படிப்பதற்கு முடியவில்லை. ஆதிதிராவிட மக்களுக்கு எத்தனையோ நன்மைகளை அரசு செய்து கொண்டிருக்கின்றன. அப்படியிருக்கிறபோது இதையும் அரசு உத்தேசித்து அங்கே அவர்களுக்கு தனியாக வாசக சாலை ஒன்றை அமைத்துத் தர முன்வருமா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டம் வெம்பக்கோட்டை ஒன்றியம் தாயில்பட்டி கிராமத்திலே உள்ள ஆதிதிராவிட மக்களுக்கு தனியாக வாசகசாலை கட்டவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அங்கே பொது நூலகம் ஒன்று நூலக ஆணைக் குழுவின் கீழ் இயங்கிக்கொண்டிருக்கிறது. தாயில்பட்டி கிராமத்தில் 5347 மக்கள் இருக்கிறார்கள். அதிலே, ஆதிதிராவிடர்கள் 502 பேர்கள்தான் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கென்று தனியாக நூல்நிலையம் கட்டுவதற்கு எந்தவிதமான செலவும் செய்ய நிதி ஒதுக்கப்படவில்லை. அதன்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே ஆதிதிராவிட மக்களுக்கென்று தனியாக ஒரு பழைய கட்டடம் இருந்தது. அதை இடித்துவிட்டு யூனிசெப் மூலமாக ஒரு வாசக சாலை கட்டித்தருவதாக சொல்லப்பட்டது. அதையாவது மாண்புமிகு அமைச்சரவர்கள் தலையிட்டு அவர்களுக்காகக் கட்டித்தருவதற்கு முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களைப் பொறுத்தவரையில் தனியாக நூலகங்கள் கட்டிக் கொடுப்பதற்குத் திட்டங்கள் இல்லை. அப்படி இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி இருப்பதைப் பற்றித் தீவிரமாக ஆராய்ந்து என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அந்த நடவடிக்கையை அரசு எடுக்கும்.

பாப்பாக்குடி ஒன்றியம், வடக்கு அரியநாயகிபுரம் ஊராட்சியில் குடிநீர் பராமரிப்புக்கு ஆண்டுச் செலவு.

76—(*வினா எண் [illegible]) டாக்டர் கே. பி. இராமலிங்கம் மற்றும் திரு. கடலூர் இ. வி. வேலு: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாப்பாக்குடி ஒன்றியம், வடக்கு அரியநாயகிபுரம் ஊராட்சியில் 1982-83, 1983-84 மற்றும் 1984-85-ம் ஆண்டுகளில் குடிநீர்த் திட்டப் பராமரிப்புக்கென ஆண்டுக்கு ரூ. 40,000 செலவிடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், குறிப்பாக என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்பட்டன?



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பாப்பாக்குடி ஒன்றியம் வடக்கு அரியநாயகிபுரம் ஊராட்சியில் 1982-83, 1983-84 மற்றும் 1984-85-ம் ஆண்டுகளில் குடிநீர்த் திட்ட பராமரிப்புக்கென ஆண்டுக்கு ரூ. 40,000 செலவிடப்படவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

தஞ்சை பேருந்து நிலையம்.

77—(*வினா எண் 9515) திரு. ஆ. நடராசன் மற்றும் திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை நகரில் உள்ள பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டத்துடன் பயணிகள் தங்கும் விடுதியும் இணைக்கப்படுமா?

(இ) இதன் மதிப்பீடு எவ்வளவு?

(ஈ) பணி எப்போது தொடங்கும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) (இ) மற்றும் (ஈ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சைத் திருநகரில் இப்போது அமைந்துள்ள பேருந்து நிலையம் மிகக் குறுகிய இடத்தில் இருப்பதால் பக்கத்திலே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையமும் இருப்பதால் அங்கே வந்துபோகிற பேருந்துகளுக்கும் மக்களுக்கும் வசதிகள் இல்லாத காரணத்தினால் பேருந்துகள் வந்து போகமுடியாத நிலை இருக்கிறது. அதை ஆலோசித்து இப்போதுள்ள நகரப் பேருந்து நிலையத்திற்குப் பக்கத்திலே உள்ள இடங்களை அப்புறப்படுத்தி அங்கே பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த முன்னதாகவே ஒரு திட்டம் இருந்ததே அதைப் பரிசீலனை செய்து அந்த நடவடிக்கையை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற குறிப்பு என்னிடத்தில் இல்லை. தகவல் கேட்டு மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவிக்கிறேன்.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சையிலே அந்தப் பேருந்து நிலையம் மிக நெருக்கடியான நிலையிலே இருக்கிற காரணத்தினால் மேல் பகுதியிலே தொலை தூரம் செல்கிற பேருந்து நிலையமும், கிழக்குப் பகுதியிலே டவுன் பஸ்கள் போக்குவரத்துக்காக தனியாக பேருந்து நிலையமும் இருக்கிற காரணத்தினால் மக்கள் இங்கேயிருந்து அங்கே செல்வதற்கு நெருக்கடியாக இருக்கிறது. ஆகவே சுரங்கப் பாதை மூலமாக சாலையைக் கடப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது எந்த கருத்துருவும் அரசினிடத்திலே இல்லை.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை நகராட்சிப் பேருந்து நிலையம் மிகவும் நெருக்கடியான இடத்தில் இருக்கிறது. வெளியூர் பேருந்து நிலையத்திற்கும் நகரப் பேருந்து நிலையத்திற்கும் தனியாக நிலையம் ஏற்படுத்த அரசுக்கு யோசனையுண்டா ? நகரசபை அதை ஏற்படுத்தி வருகின்றார்கள். தனியாக ஏற்படுத்துவதற்கும் குறிப்பாக அந்தப் பேருந்து நிலையத் தொழிலாளர்களுக்கு சுகாதார வசதி, கக்கூஸ் வசதி போன்றவற்றையும் கட்ட அரசு உத்தர விடுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அப்படிப்பட்ட எண்ணம் எதுவும் இல்லை.

திரு. துரை கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை பேருந்து நிலையத்திற்கு அருகாமையிலே மருத்துவமனைக்கு சொந்தமான இடம் இருக்கின்றது. அங்கே இருக்கும் அந்த இடத்தை பேருந்து நிலையத்திற்கு பயன்படுத்துவதன் மூலம், மருத்துவ வசதிகளைப் பெறலாம். தற்போது உள்ள போக்குவரத்து நெரிசல் காரணமாக அங்கே தாமஸ் ஹாலில் இருந்து நோயாளிகளை எடுத்துச் செல்வதற்கும் இடையூறாக இருக்கின்றது. இந்த இடையூறுகளை நிவர்த்தி செய்ய மருத்துவ மனைக்குச் சொந்தமான இடத்தில் பேருந்து நிலையம் அமைக்க யோசனை உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

மதுரைக்கு துப்புரவுப் பணிக்குப் புதிய லாரிகள்.

78—(*வினா எண் 9708) திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகராட்சியின் துப்புரவுப் பணிக்காக புதிய லாரிகள் வாங்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?





மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1984–85–ஆம ஆண்டில் துப்புரவுப் பணிக்காக புதிதாக எட்டு லாரிகள் வாங்க மதுரை மாநகராட்சிக்கு அரசு அனுமதி வழங்கியது.

(ஆ) அவற்றில் 4 லாரிகள் வாங்கப்பட்டு விட்டன. மேலும் பாக்கியுள்ள 4 லாரிகளை வாங்க மதுரை மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதுரை மாநகராட்சியில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்வதற்கு மாட்டு வண்டிகளை உபயோகப்படுத்தி வந்தார்கள். திடீரென்று ஒரு நாள் சம்பளப் பிரச்சினைகாரணமாக அத்தனை மாட்டு வண்டிகளும் நிறுத்தப்பட்டுவிட்டன. அதற்குப் பின்னர் மாநகராட்சியின பல்வேறு துறைகளின் ஜீப்களுடன் பொருத்திய ட்ரைய்லர் வைத்து அந்த துப்புரவுப் பணிகளை செய்கிறார்கள். அந்த ஜீப்புடன் கூடிய ட்ரைய்லர்கள் கொள்ளளவு மிகவும் குறைவாக இருப்பதால் பெட்ரோல் செலவு மிகவும் அதிகமாக ஆகிறது. இதனால் துப்புரவுப் பணியில் மிகவும் கஷ்டமான நிலை ஏற்பட்டிருக்கின்றது. இந்த சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு அதிகமான அளவில் லாரிகளை வாங்க உடனடியாக ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆவன செய்யப்படும்.

திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் புறநகர் பகுதிகளில், வளர்ந்து வருகின்ற பகுதிகளில், அதாவது மதுரை வில்லாபுரம், எம். கே. புரம், ஜெய் ஹிந்துபுரம், ஜீவா நகர், அழகப்ப நகர், டி.வி.எஸ். நகர், பைக்காரா, மாடக்குளம், பழங்காநத்தம், சொக்கலிங்க நகர், சம்பட்டிபுரம், பெத்தானியபுரம், கோச்சடை, பொன்மேனி கண்மாய்கரை போன்ற இந்தப் பகுதிகளில் மிகவும் நெருக்கடியான குறுகலான சந்துப் பகுதிகள் இருக்கின்றன. இங்கெல்லாம் சீரான துப்புரவு பணிகளை மேற்கொள்கின்ற வகையிலே சின்னஞ்சிறு வண்டிகளை கைகளால் தள்ளிச் செல்லக்கூடிய வண்டிகளை பயன்படுத்த வேண்டும். அப்படி இந்த துப்புரவுப் பணிகள் செய்யப்படுமா? அப்படிச் செய்ய மதுரை மாநகராட்சிக்கு அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன சங்கடங்களை எல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு திட்டங்கள் தோற்றுவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வைகை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதுரை மாநகராட்சி பற்றிய கேள்வியாக இருந்தாலும் நான் இப்போது சென்னை மாநகராட்சியைப் பற்றி கேட்க விரும்புகிறேன். இங்கு குப்பைகளை அகற்றுவதற்கு மாட்டு வண்டிகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த முறை மிகவும் சிரமமுள்ளதாக இருக்கின்ற காரணத்தினால், அந்த முறையை மாற்றி ட்ரையலர் வண்டிகளைப் பயன்படுத்தலாம். அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரமாகச் சொல்லலாம்,

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியில் துப்புரவுப் பணிகளுக்காக எத்தனை லாரிகள் பணியாற்றுகின்றன? எத்தனை லாரிகள் ஓர்க்ஷாப்பில் நின்றுகொண்டிருக்கின்றன? ஓர்க்ஷாப்பில் எத்தனை ஆண்டுக்காலமாக அவைகள் நின்றுகொண்டிருக்கின்றன? இது பற்றிய விவரங்களை இந்த அரசு தெரிவிக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அது குறித்து விவரம் இல்லை. தனியாக கேள்வி போட்டால் முழு விவரம் கொடுக்கலாம்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த துப்புரவுக்கு பயன்படுத்துகின்ற லாரிகள் குப்பைகளை எடுத்துக்கொண்டு போகின்றபோது அதன் மேல் தார்பாலின் போடாமல் போவதால், அதிலிருந்து குப்பைகள் கொட்டுகின்ற நிலை இருக்கின்றது. அதையெல்லாம் தடுக்கின்ற அளவுக்கு ஏதாவது நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுத்திருக்கின்றார்களா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–40)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தார்பாலின் போடுகின்ற முறை அமுலில் இருக்கிறது. எங்காவது குறைகள் இருக்குமேயானால் அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் நிவர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எ. தெய்வநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியின் துப்புரவுப்பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள லாரிகள் அத்தனையும் பழுதடைந்த நிலையில் தனியார் ஓர்க்ஷாப்பில் நிற்கின்றன. இந்நிலையைத் தவிர்க்க மாநகராட்சிக்கும் சொந்தமாக தனியாக ஓர்க்ஷாப் அமைத்து அதன் மூலம் லாரிகள் பழுதடைந்த உடனே செப்பனிடும் வகையில் ஆவன செய்ய இந்த அரசு முயற்சி செய்யுமா?



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முயற்சி எடுக்கும்.

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு மத்திய அரசு ஒதுக்கிய தொகை

79—(*வினா எண் 10164) திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்திற்கு தமிழ் நாட்டிற்கு 1985-86 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு ஒதுக்கி உள்ள தொகை எவ்வளவு?

(ஆ) என். ஆர். இ. பி. மற்றும் ஆர்.எல்.இ.ஜி.பி. ஆகியவற்றிற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்திற்கு தமிழ் நாட்டிற்கு 1985-86-ம் ஆண்டிற்கு மத்திய அரசு ஒதுக்கிய தொகை ரூ. 3024.166 இலட்சங்கள். இதில் மைய அரசு ரூ. 1512.083 இலட்சங்களும், மாநில அரசு ரூ. 1512.083 இலட்சங்களும் பகிர்ந்து கொண்டுள்ளன.

(ஆ) என்.ஆர்.இ.பிக்கு (தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்) மத்திய அரசின் ஒதுக்கீடு ரூ. 4979.81 இலட்சங்கள். இதில் பாதியை மைய அரசும், மறுபாதியை மாநில அரசும் பகிர்ந்து கொண்டுள்ளன. ஆர்.எல்.இ.ஜி.பிக்கு (ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித்திட்டம்) ரூ. 4495.76 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இது மைய அரசின் முழு மான்யத்தோடு கூடிய திட்டம்.

திரு ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாவட்ட வாரியாக தமிழகம் முழுவதற்கும் 1985-86ஆம் ஆண்டில் மத்திய அரசு ஒதுக்கிய தொகை எவ்வளவு? இந்தத் தொகையின் மூலமாக என்னென்ன சமூகப்பணிகள் செய்யப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் மாவட்டங்களிலே இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில் பெரிய ஒன்றியங்களுக்கும், சிறிய ஒன்றியங்களுக்கும் ஒரே அளவு தொகைதான் அளிக்கப்படுகிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

[1986 நவம்பர் 19

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற தொகையைப் பொறுத்தவரையில் அங்குள்ள விவசாயிகளுடைய எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டி ருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தின் மூலமாக என்னென்ன சமூகப் பணிகள் செய்யப்படுகின்றன? மேலும் நடுவண் அரசு செயல் படுத்துகின்ற திட்டங்களையும், மாநில அரசு செயல்படுத்துகின்ற திட்டங்களையும், அது போல மத்திய மற்றும் மாநில அரசு கள் இரண்டும் இணைந்து செயல்படுத்துகின்ற திட்டங்களையும் மக்களுக்கு தெரியபடுத்தும் வகையில் மாவட்ட தலைநகரங் களிலும், ஒன்றிய அலுவலகங்களிலும் குறிப்பிட்ட இடங்களில் இத்திட்டம் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலை வர் அவர்களுடைய திட்டமென்று சொல்லி அவர்களுடைய அழகான சினனத்தை வைத்தும், அதுபோல இத்திட்டம் மத்திய அரசின் பிரதமர் மாண்புமிகு திரு. ராஜீவ் காந்தி அவர்களுடைய திட்டமென்று சொல்லி அவர்களுடைய சின்னத்தை பொறித்தும் அந்த வகையில் மக்களுக்கு இத்திட்டங்கள் பற்றியெல்லாம் தெரிவித்தால் சிறப்பாக இருக்கும் அல்லவா? அப்படி இந்த அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இக்கேள்விக்கு நான் பதிலளிக்கும்போது எந்தெந்தத் திட்டங்கள் மாநில அரசாலும் மத்திய அரசாலும் இணைந்து செயல்படுத்தப்படுகின்றன என்றும், எந்தெந்த திட்டங்கள் மத்திய அரசின் முழு மானியத்தோடு செய்யப்படு கின்றன என்றும் தெளிவாகக் கூறியிருக்கிறேன். இதனை அறி விப்பதில் சங்கடங்கள் ஒன்றுமில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இத்திட்டங்களின் மூலமாக என்னென்ன சமூகப் பணிகள் நடைபெற்றுள்ளன என்று கேட்டார்கள். குறிப்பாக தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தைப் பொறுத்தவரை யில் சமூக சொத்துக்களை உருவாக்குகின்ற குறிக்கோளோடு கூட கிராமப்புறங்களில் வாழ்கிற ஏழையெளிய விவசாயிகளுக்கு நிலையான வேலைவாய்ப்புகளை உருவாக்கிக்கொடுக்கின்ற திட்ட மாகும். சாலைகள் அமைத்தல், ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் கட்டுதல், குடிநீர் வசதியை பெருக்குதல், ஆதி திராவிடர் களுக்கு வீடுகள் கட்டுதல், சமுதாய காடு வளர்ப்பு போன்ற பணிகள் இத்திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. இதற்காக 3,622 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டதில் 31–8–1985 முடிய 1,464 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் நடப்பு ஆண்டிற்கு 39,400 மெட்ரிக் டன் உணவு தானியம், அரிசி, கோதுமை அளிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் கிராமப்புறத்திலே நிலமற்ற ஏழைத் தொழிலாளருக்குப் போது



1986 நவம்பர் 19]

வேலைவாய்ப்பு அளிப்பதற்கு ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் என்ற புதிய திட்டத்தை 1983-84 மற்றும் 1984-85 ஆம் ஆண்டுகளில் மாநிலத்தில் செயல்படுத்த மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் இரண்டு அடிப் படைகளைக் கொண்டது. (1) நிலமற்ற தொழிலாளர் களுக்கு வேலை வாய்ப்பு வசதிகளை மேம்படுத்த குறைந்த பட்சம் ஒரு தொழிலாளியின் குடும்பத்தில் ஒருவருக்கு ஒரு ஆண்டில் நூறு நாட்களுக்குக் குறையாமல் வேலை அளித்தல்; (2) கிராமப்புறப் பொருளாதாரம் வலிவடையச் செய்யும் வகை யில் கிராமப்புறங்களில் சமுதாய சொத்துக்களை உருவாக்கி, கிராமப்புறங்களை மேம்படுத்தல், இத்திட்டத்தைச் செயல்படுத்த ஆகும் செலவு முழுவதையும் மத்திய அரசு மானியமாக மாநிலத் திற்கு அளிக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். குறிப் பாக 1986-87வது ஆண்டு, இன்றைக்கு 3,949 இலட்சம் இதற் காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தின் கீழ் என்ன சேவை கள், என்ன பணிகள், என்ன காரியங்கள் நடைபெறுகின்றன என்றால், (1) கிராமப்புறங்களில் இணைப்புச் சாலைகள் அமைத்தல்; (2) சிறு பாசனத் திட்டங்கள்; (3) நில மேம் பாட்டு தரிசு நிலங்களை வளம் ஆக்குதல்; (4) தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு வீடு கட்டி இலவசமாகக் கொடுக்கும் திட்டம்; (5) சமூக நலக் காடுகள் வளர்க்கும் திட்டம்; (6) தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சுகாதார கழிப்பிடங்களைக் கட்டுதல்; (7) பல நோக்கு சமூகக் கூடங்களைக் கட்டுகின்ற அந்தப் பணி இந்தத் திட்டத்தினுடைய வாயிலாக இன்றைக்கு செய்யப்பட்டு அதன் காரணமாக 1986–87-வது ஆண்டில் 2,42,000 மனித நாட்கள் உருவாக்கப்பட வேண்டும். இதில் 31–8–1986 முடிய இன்றைக்கு—அந்த அடிப்படையில் அந்தத் திட்டங்கள் துரிதப் படுத்தப்பட்டு வருகின்றன என்பதனை மாண்புமிகு உறுப்பினர் களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க அவைத் தலை வர் அவர்களே, வறுமைக் கோட்டையே உறவாகக் கொண்டு வாடிக்கொண்டிருக்கின்ற ஏழை மக்களுக்கு வரப்பிரசாதமாக விளங்குகின்ற இந்த ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத் திலே தகுதி வாய்ந்த குடும்பங்களைத் தேர்ந்தெடுப்பதற்காக அரசு ஒரு குழுவினை நியமித்திருக்கிறது. அதிலே ஊராட்சி ஒன்றியத்தலைவர், ஆணையாளர், சட்டமன்றப் பேரவை உறுப் பினர், வட்டாட்சியர், தேசிய மயமாக்கப்பட்ட வங்கியினுடைய பிரதிநிதி ஒருவர் என்று அந்தக் குழுவை அமைத்திருந்தும், பல இடங்களிலே சட்டமன்ற உறுப்பினர்களை அழைக்காமலேயே, ஏனைய அதிகாரிகளையும் அழைக்காமலேயே ஊராட்சி ஒன்றியத் தலைவரும், ஆணையாளருமாக சேர்ந்து இந்தக் குடும்பங் களைத் தேர்ந்தெடுத்த காரணத்தினாலே, நான் உதாரணத்திற்குச்

சொல்கிறேன், எங்களுடைய திருமங்கலம் தொகுதியிலே புளியங்குளம் என்ற கிராமத்திலே தகுதி மீறிய குடும்பங்களைச் சேர்த்து அவர்களுக்கு இந்த உதவி போய் இருக்கிற காரணத்தினாலே—ஏன் அப்படிச் சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்து தேர்ந்தெடுக்கவில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடமும், திட்ட அலுவலரிடமும் தெரிவித்தும்கூட இதுவரை நடவடிக்கை எடுக்காத காரணத்தினாலே, உடனடியாக இது போன்ற நேர்வுகளில் இனியும் இப்படி நிகழாத வண்ணம் நடவடிக்கை எடுக்கும்படியும், அப்படி சட்டமன்ற உறுப்பினரை அழைக்காமல் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தக் குடும்பங்களைப் பற்றி மறுபரிசீலனை செய்வதற்கும், சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் மாண்புமிகு அமைச்சரவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த அரசு சட்டப்பேரவை உறுப்பினர்களை வைத்துக்கொண்டுதான், ஐ.ஆர்.டி.பி. என்ற அந்தத் திட்டத்தினுடைய பயன் பெறுபவர்களுடைய பட்டியலைத் தயாரிக்க வேண்டுமென்று தெளிவாக உத்தரவிட்டிருக்கிறது. அதனை பி.டி.ஓ., நிச்சயம் நிறைவேற்றியிருக்க வேண்டும். அப்படி எந்த அதிகாரியாவது தவறு செய்திருந்தால், நிச்சயமாக உரிய நடவடிக்கை, துரிதமாக எடுக்கப்படும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது குற்றம் இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடு) அதுபற்றி மறுபரிசீலனை செய்யப்படும்.

திரு. வி. எஸ். பஞ்சவர்ணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி. திட்டத்தில் மாவட்டவாரியாக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதனையும், அதில் குறிப்பாக, காமராஜர் மாவட்டத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதனையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமான விவரம்தான் இருக்கிறது. மாவட்டவாரியாக இல்லை. தனிக்கேள்வி போட்டால் அதற்குத் தகுந்த தகவலை அளிக்கிறேன்.

### தஞ்சை மருத்துவமனையில் சிறுநீரக சிகிச்சைக் கருவி.

80—(*வினா எண் 2459) திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிறுநீரக சிகிச்சை (டையாலிசிஸ்) கருவி பொருத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?





(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு டையலைசர் கருவி ஏற்கெனவே வாங்கி வழங்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-50)

திரு. எஸ். இராசாராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே டையலைசிஸ் கருவி வாங்கப்பட்டிருப்பது உண்மைதான். இருந்தாலும் பல ஆண்டுகளாக அது பொருத்தப்படவில்லையென்பதை அரசு அறியுமா ? அதைப் பொருத்தாததினுடைய காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர் பற்றிக் கொஞ்சம் தகராறு இருந்தது. அதெல்லாம் சரி செய்யப்பட்டு, 12-5-1986 முதல் செயல்பட்டு வருகிறது என்று அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது.

திரு. எஸ். இராசாராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீரைச் சுத்தம் செய்கின்ற கருவி வாங்கிவிட்டார்களா ? அந்த டையலைசிஸ் கருவி இப்பொழுது பயன்படுத்தப்படுகிறதா ? மேலும் புற்று நோய்க்காக பயன்படுத்துகிற Deep X-ray Therapy இப்பொழுது செயல்பட்டுக் கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, Haemo Dialysis கருவி இப்பொழுது செயல்பட்டுக் கொண்டு வருகிறது. தண்ணீர் பற்றிய பிரச்னை இப்பொழுது இல்லை. சுத்தம் செய்வது நடந்து கொண்டிருக்கிறது. மற்றைய கேள்வியைத் தனியாகக் கேட்டால் பதில் சொல்ல முடியும்.

### நோயாளிகளுக்கு மலிவு விலையில் எக்ஸ்ரே படம்.

81—(*வினா எண் 4948) மாண்புமிகு திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நோயாளிகளுக்கு ஒரு ரூபாய் செலவில் எக்ஸ்ரே படம் எடுக்கும் தொழில் நுட்பக் கருவி ஒன்றை இந்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித்து உபயோகத்திற்கு வந்துள்ளது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நமது மருத்துவமனைகளில் அதை பயன்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அரசுக்குத் தகவல் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இன்று எக்ஸ்-ரே மலிவாக எடுக்கிற நடைமுறையை சில மருத்துவ மனைகளிலே வைத்திருக்கிறார்கள். இப்பொழுது நாம் அரசாங்க மருத்துவமனையிலே ஒரு படம் எடுக்க வேண்டுமென்றால் அரசாங்கத்திற்கு ரூ. 40 செலவாகிறது. ஆனால், ரூ. 1-ல் எடுக்க முடியும் என்று கல்கத்தாவிலே என்.ஆர்.எஸ். வைத்தியக் கல்லூரியினுடைய ஜெபல்பூர் மருத்துவமனையில் பேராசிரியர் மனிஷ் முகர்ஜி கண்டுபிடித்துள்ளார். ரூ. 10,000 மதிப்புள்ள அந்தக் கருவியை கல்கத்தாவில் பல மருத்துவமனைகளில் வைத்திருக்கிறார்கள். பல்வேறு வகையிலும் பரீட்சித்துப் பார்த்து, தொழில் நுட்ப அறிஞர்கள் அதைப்பற்றி In cl.rity it is safe with a conventional X-ray Unit என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளை அங்கே அனுப்பி யாவது இந்த நடைமுறையைக் கொண்டுவந்தால் ரூ. 1-க்கு எக்ஸ்-ரே எடுக்க முடியும் என்றால், ரூ. 1 கோடி, ரூ. 2 கோடியை அந்தத் துறையில் மிச்சம் செய்ய முடியும். அதுபற்றி துறை நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாாண்மிகு திரு. ப. உ சண்முகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தருவது புதிய தகவலாக இருக்கிறது. அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் தற்போது நோயாளிகளை எக்ஸ்-ரே படம் எடுக்கிறார்கள். எக்ஸ்-ரே படம் எடுத்த பின்னாலே, அந்த நோயாளி இன்னொரு மருத்துவரிடத்திலே போகும்போது, அந்த எக்ஸ்-ரே காப்பியை நோயாளி கேட்டால் கொடுக்க மாட்டேன் என்று மருத்துவமனையில் சொல்கிறார்கள். இப்படிச் சொல் வதற்கு அங்கே இருக்கிற அதிகாரிகளும் ஒரு காரணத்தைச் சொல்கிறார்கள். இந்த எக்ஸ்-ரே பிலிம் தயாரிக்கிறபொழுது அதிலே சில்வர் நைட்ரேட் என்கிற இரசாயனப் பொருளைக் கலந்து வைத்துள்ளார்கள். ஆகவே, ஏ. ஜி. ஆடிட்டிலே ரூ. 1 இலட்சத்துக்கு எக்ஸ்-ரே பிலிம் வாங்கினால், ரூ. 10,000-க்காவது பழைய பிலிம்களை விற்று கணக்குக் காட்ட வேண்டுமென்று ஆடிட் ரிப்போர்ட்டிலே எழுதி விடுகிறார்கள். எனவே, பழைய பிலிம்களை நாங்கள் ஏலத்திற்கு விடுகிறோம் என்று சொல் கிறார்கள். அப்படி ஏலம் விடுகிறபோது 10-ல் 1 பங்கு விலைக்குத் தான் போகிறது. அதே தொகையை நோயாளிகள் கொடுக்க விரும்பினால், நோயாளிகளிடமிருந்து அந்தத் தொகையை வசூலித்துக் கொண்டு, அரசு மருத்துவமனைகளிலே எடுக்கிற அந்த எக்ஸ்-ரே படங்களை நோயாளிகளுக்குக் கொடுப்பதற்குத் துறை விரைவாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அந்த எக்ஸ்-ரே படங்கள் நோயாளிகளுக்குத் தேவைப்படும் என்ற நிலையிருந்தால் அதை என்ன விலைக்குக் கொடுக்கலாம் என்பதைப் பற்றி அரசு விரைவிலே ஆராய்ந்து முடிவெடுக்கும்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் இலவச மருத்துவம் பார்ப்பதற்கு மொத்த வருமானம் ரூ. 300 என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் தொகையை உயர்த்தி, ரூ. 600 என்று நிர்ணயிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இது எக்ஸ்-ரேயைப் பற்றியது. மற்றைய விவரங்கள் வேண்டுமென்றால் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டம் கோனாபட்டு கிராமத்தில் மருத்துவமனை.

82—(*வினா எண் 5016) திரு. த. புஷ்பராசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் கோனாபட்டு கிராமத்தில் மருத்துவமனை கட்டுவதற்கு மக்கள் பங்கு தொகை ரூபாய் 50,000 செலுத்தப்பட்டும் மருத்துவமனை கட்டப்படாததற்கான காரணம் என்ன?

(ஆ) மருத்துவமனை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): - அரசு கிராம மருந்தகங்களை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்ற அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அவற்றில் ஒன்றான புதுக் கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த கோனாபட்டு கிராம மருந்தகம், ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டுள்ளது. மேற்படி மருந்தகத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. த. புஷ்பராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோனாபட்டு கிராமத்திலே மருத்துவமனை வேண்டுமென்று கேட்டு, 12-12-1975-லேயே கிராம மக்கள் ரூ. 50,000 கட்டியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 11 வருஷம் ஆகிறது. 24-11-1978-ல் மருத்துவமனை கட்டும் திட்டம் ஆரம்பமாகியிருக்கிறது. 8 வருஷம் ஆகிறது. அந்த மருத்துவ மனைக் கட்டிடத்திற்கு 2 ஏக்கர் 4 சென்ட் இடமும் 19-3-1978-லே முடிவு செய்யப்பட்டது. ஆனால், இதுவரையில் அங்கே மருத்துவமனை கட்டப்படவில்லை. அதைக் கருத்திலே

கொண்டு உடனடியாக மருத்துவமனை வேலையைத் தொடங்க வேண்டுமென அரசு ஆணை பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் கோனாபட்டு கிராமத்தில் அரசு மருத்துவமனை தொடங்கப்படுவதற்காக அரசு ஆணை எண் 2056, சுகாதாரம், 24-11-1978 ஆம் நாளில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல 50,000 ரூபாய் கட்டியிருக்கிறார்கள். ஆனால் 2.04 ஏக்கர் நிலம்தான் கொடுத்திருக்கிறார்கள். அரசு மருத்துவமனை தொடங்குவதற்கு 5 ஏக்கர் நிலமும் 50,000 ரூபாயும் கொடுக்க வேண்டும். 5 ஏக்கர் நிலமும் 50,000 ரூபாயும் கொடுத்திருக்கிற பல ஊர்களிலே கூட அரசின் நிதி நிலையை உத்தேசித்து, இன்னும் மருத்துவமனை தொடங்கப்படவில்லை. நிதிநிலையைப் பொறுத்து ஒவ்வொன்றாக செயல்படுத்தப்படும்.

திரு. த. புஷ்பராஜ் : தலைவரவர்களே, 5 ஏக்கர் நிலம் வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த 5 ஏக்கர் நிலத்தையும் விரைவிலே கொடுக்க அந்த கிராம மக்கள் மூலம் நடவடிக்கை எடுக்கிறேன். கிராமப்புறமாக இருக்கிற அந்தப் பகுதியிலே வேறு மருத்துவமனை அருகில் இல்லாத காரணத்தால், அதைக் கருத்திற்கொண்டு விரைவில் மருத்துவமனைக் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, 5 ஏக்கர் நிலமும் 50,000 ரூபாயும் கட்டிய பல இடங்களிலே கூட இன்னும் கட்டிடம் கட்டப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல 5 ஏக்கர் நிலமும் தந்தால் வரிசைப்படி கட்டப்படும்போது, இதுவும் சேர்த்துக்கொள்ளப்படும்.

### வெளிநாட்டில் தடை செய்யப்பட்ட மருந்துகள்.

83—(*வினா எண் 7995) டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாட்டில் தடை செய்யப்பட்டுள்ள மருந்துகள் தமிழ்நாட்டில் உபயோகப்படுத்தப்படுகின்றனவா ?

(ஆ) என்னென்ன மருந்துகள் உபயோகப்படுத்தப்படுகின்றன ?

(இ) அவைகளை தமிழ்நாட்டில் தடை செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): கீழே குறிப்பிடப்பட்டுள்ள மருந்துகள் உபயோகப்படுத்தப்படுகின்றன :

(1) ஹைடிராக்சி குனோலைன்ஸ்
(Hydroxyquinolines)

(2) பென்பார்மின் (டி.பி.ஐ.)
[Phenformin (D.B.I.)]

(3) நைட்ரோபுரான் காம்பவுண்ட்ஸ்
(Nitrofuran Compounds)

(4) லைனஸ்ட்ரோனால்
(Lynestronol)

(5) பிப்ராசின் (ஆண்டிபார்)
[Piperazine (Antepar)]

(6) ஆக்ஸிபென்புடோஸோன்
(Oxyphenbutazone)

(7) அனால்ஜின்
(Analgin)

(இ) மைய அரசின் 1940 ஆம் ஆண்டு மருந்து மற்றும் அழகு சாதன சட்டத்தின்கீழ் மைய அரசு மருத்துவ வல்லுநர்களின் ஆலோசனைகளைப் பெற்று மேற்கூறிய ஏழு மருந்துகளை விற்பனைக்கு அனுமதித்துள்ளது.

டாக்டர். ந. மாசிலாமணி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது குறிப்பிட்ட மருந்துகள் எல்லாம் உடலிலுள்ள சிறுநீரகம், ஈரல் போன்ற முக்கியமான உறுப்புகளைப் பாதிக்கும் மருந்துகளாக இருக்கின்றன. இவற்றைவிட விலை குறைவாகவும் நல்ல மருந்துகளாகவும் இருப்பதாக மருந்து தயாரிப்புப் புத்தகத்தில் குறிப்பு இருக்கிறது. அவற்றை இந்தியாவிலேயே தயாரிக்கும் வசதியும் இருக்கிறது. எனவே தீங்கு விளைவிக்கும் இந்த மருந்துகளை நீக்கிவிட்டு, புதிய மருந்துகளைத் தயாரிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நான் குறிப்பிட்ட மருந்துகள் எல்லாம், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி அவர்கள் குறிப்பிட்டதுபோல, சிறுநீரகத்தையோ ஈரல் போன்ற உறுப்புகளையோ பாதிப்பதாக இல்லை. அமீபியா, டயோரியா, டிசென்டரி, சர்க்கரை வியாதி போன்ற வியாதிகளுக்குப் பயன்படுத்தும் மருந்துகள் இவை,

சில மருந்துகள் புண்ணுக்குத் தடவும் மருந்துகளாக இருக்கின்றன. இந்திய அரசின் வல்லுநர்கள் ஆராய்ந்து முடிவு செய்திருக்கிற காரணத்தால் இவற்றிற்கு தடை விதிக்கும் உத்தேசம் இல்லை. அவர்கள் குறிப்பிட்டதைப்போல வேறு மருந்துகள் இருந்தால் அவற்றையும் பரிசீலனை செய்யலாம்.*

### திருநெல்வேலியில் Ring Road அமைத்தல்.

84—(*வினா எண் 7740) திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி நகரைச் சுற்றி Ring Road அமைக்கும் திட்டம் அரசு செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, (அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி நகரைச் சுற்றி சாலை அமைக்கும் திட்டத்தின் முதல் கட்டமாக பொட்டல்புதூர் சாலை மற்றும் தென்காசி சாலை ஆகிய இரு சாலைகளையும் இணைத்து சாலை அமைக்கும் பணிக்கு தேவைப்படும் நிலத்தை கையகப்படுத்த 20 இலட்சம் ரூபாய் ஏற்பளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : பேரவைத் தலைவரர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தென்காசி சாலையையும் பொட்டல்புதூர் சாலையையும், 'ரிங் ரோடு' என்ற முறையில் இணைப்பதுபற்றி அறிவித்ததற்கு மகிழ்ச்சி. அதேநேரத்தில் தென்காசியிலிருந்து திருநெல்வேலி டவுனுக்குள் நுழையும் சாலையானது மிகவும் குறுகலாக இருப்பதால் போக்குவரத்து நெரிசலும் விபத்துகளும் ஏற்படுகின்றன. இதனைக் கருத்திற் கொண்டு, இந்தப் பணி எப்போது தொடங்கப்படும்; எப்போது பணி முடியும் என்ற விவரத்தை அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அந்தத் திட்டம் எப்போது முடியும் என்று இப்போது சொல்ல முடியாது. ஏனென்றால் நில ஆர்ஜிதம் செய்வதிலே பல்வேறு சிக்கல்கள் வருகின்றன. எனவே, பணி எப்போது தொடங்கப்படும், எப்போது முடியும் என்று திட்டவட்டமாக இப்போது சொல்ல முடியாது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திருநெல்வேலியிலிருந்து நாகர்கோவிலுக்குச் செல்லும் 'பை பாஸ் ரோடு' போடுவதற்கு மத்திய அரசால் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு, திருநெல்வேலி நகரின் குறுக்கே சாலை ஒன்று பரீட்சார்த்தமாக அமைக்கப்பட்டது. அது பின்னால் கைவிடப்பட்டது. இருந்தாலும் மாநில





அரசு அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டது. அது தற்போது எந்த நிலையில் இருக்கிறது என்ற விவரத்தை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி சம்பந்தப்பட்ட பிரச்சினையல்ல இது. இருந்தாலும் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன், திருநெல்வேலிக்கு நான் சென்றிருந்தபோது இது பற்றி விசாரித்தேன். அப்போது பாதியில் நிற்பதாக என்னிடத்திலே சொன்னார்கள். அதற்குத் தேவையான நிலம் கொஞ்சம் இன்னும் கையகப் படுத்தவேண்டிய நிலை இருக்கிறது என்று சொல்லியதாக எனக்கு நினைவு. எனவே அதுபற்றி தனியாக ஆய்வு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : பேரவைத் தலைநாயகர் அவர்களே, இந்த ரிங் ரோடு அமைக்கிறபோது பல்வேறு காரியங்கள் பாதிக்கப்படுகிற சூழ்நிலை தமிழகம் முழுவதும் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் புழல் ஊரில் அண்ணா நகர், பர்மா நகர் போன்ற பகுதிகள் எல்லாம் பாதிக்கப்படுகின்றன. 20 ஆண்டுகளாக இருந்து வருகிற ஊர்களை எல்லாம் காலி செய்யவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே ஊர்களே இல்லாத பகுதியாகப் பார்த்து ரிங் ரோடு அமைக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன் ? முடியவில்லை என்றால், அதை தவிர்க்க நடவடிக்கை எடுக்குமா ? (பதில் இல்லை).

### தஞ்சை மாவட்டம், சீதக்கமங்கலம்—பம்மல் சாலையில் திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே பாலம்.

85—(*வினா எண் 7983) திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியம், சீதக்கமங்கலம்—பம்மல் சாலையில் திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைத்துத்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் குடவாசல் ஒன்றியம் சித்தக்க மங்கலம்—பாமல் சாலையில் திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதன் மூலமாக பல நூற்றுக்கணக்கான குக்கிராமங்கள் இணைக்கப்படுகின்றன. அது மட்டும் அல்ல. தற்சமயம் 25 லட்சம் ரூபாய் அளவில் ஐவேஸ் துறையின் மூலமாக ஒரு பாலம் கட்டப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட குக்கிராமங்களை இணைக்கிற சாலைகளைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டாவது —வருகிற ஆண்டிலாவது எடுத்துக்கொண்டு பாலத்தைக் கட்டினால்தான் 25 லட்சம் ரூபாய் அளவில் செலவழித்து பாலம் கட்டுவதற்கான பயன் கிடைக்கும். வருகிற ஆண்டாவது பாலத்தைக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலையைப் பொறுத்துத்தான் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். வருகிற ஆண்டில் நிதிநிலை எப்படி இருக்கும் என்பதை இப்போது சொல்ல முடியாது. எல்லாப் பணிகளும் ஒன்றாக சேர்ந்து வருகிறபோது எது முக்கியமான பணி, எதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற நிலை இருக்கிறதோ அதை எல்லாம் பார்த்து தான் செய்ய வேண்டும். அந்தப் பட்டியலிலே இது வருகிற வாய்ப்பு இருந்தால் பிரச்சினை இருக்காது.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் ஐவேஸ் துறையின் மூலமாக பெரிய பாலங்கள் எத்தனை கட்டுவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டம் முழுவதும் இருக்கிற நிலைமையைப் பொறுத்தவரையில் எவ்வளவு பாலங்கள் எடுக்கப்பட்டு இருக் கின்றன என்ற விவரம் இல்லை. இந்த பாலம் பற்றிய விவரம் மட்டும் தான் இப்போது இருக்கிறது. எனவே, தனியாக கேள்வி கேட்டால் முழு விளக்கமும் தரப்படும்.

திரு. டி. என். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுப் பாலம் கட்டுவதற்கான கேள்வி இது. ஆனால் பாலங்கள் கட்டுவதற்கு ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டது சம்பந்தமாக கேள்வி கேட்க ஆசைப்படு கிறேன். நவம்பர் மாதம் 1985 ஆம் ஆண்டு வட ஆற்காடு மாவட்டத்தில் வெள்ளம் ஏற்பட்டது. குறிப்பாக செஞ்சி, திண்டிவனம், மரக்காணம், மேல்மலையனூர், ஆகிய பகுதிகள் அப்போது வெகுவாக பாதிக்கப்பட்டன. நிவாரணப் பணிக் காகவும், சாலை, பாலங்கள் சீரமைப்புக்காகவும், ஏராளமான நிதியை மத்திய அரசு வழங்கியது. அந்தப் பாலங்களை





புதியதாக கட்ட டெண்டர் போடப்பட்டு பணியும் ஆரம்பிக்கப் பட்டது. தற்சமயம் ஆரம்ப நிலையிலேயே உள்ளது. இந்தப் பணிகள் துரிதமாக நடைபெறாமல் இருப்பது கவலைக்குரிய ஒன்றாகும். அதிகாரிகளுக்கும், காண்டிராக்டர்களுக்கும் இடையே தகராறு இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். மேலும் அதிகாரிகள் அடிக்கடி மாற்றப்படுகிற காரணத்தால் இந்த வேலைகள் எல்லாம் நடைபெறாமல் ஆரம்ப நிலை யிலேயே இருக்கிறது என்ற கவலை இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கவலையை நீக்கி அங்கே பணிகள் துரிதமாக நடப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கேள்விகள் எல்லாம் சுத்தமாக மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாதவை. இருந்தாலும் பொதுவான விளக்கங்களை மட்டும் என்னால் தர முடியும். குறிப்பிட்ட பாலத்தைப் பொறுத்த வரையில் என்ன நிலைமை என்பதற்கான விவரம் இல்லாத காரணத்தால் இப்போது என்னால் சொல்ல முடியாது. எனவே இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கிறபோது மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி சட்டமன்றத்தில் வரட்டும் என்று காத்து இருக்காமல் எங்களிடத்திலே சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கும். அதிகாரிகள் மாற்றப் படுகிற காரணத்தால் வேலைகள் நிற்கின்றன என்று சொல்ல முடியாது. ஒரு அதிகாரி போய் இன்னொரு அதிகாரி வந்தால் உடனடியாக அந்த வேலைகளை எல்லாம் தொடங்குவதற்கான ஏற்பாடுகளை அவர்கள் தொடர்ந்து செய்யக் கடமைப்பட்டிருக் கிறார்கள். அப்படி யாராவது உங்களிடத்தில் தவறாகச் சொல்லியிருந்தால் அதை நீங்கள் திருத்திக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஏதேனும் காலதாமதம் இருந்தால் துரிதமான நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யலாம்.

## சென்னை வியாசர்பாடியில் புதிய இரயில் நிலையம்

86—(*வினா எண் 8605) திரு. பரிதி இளம்வழுதி : மாண்பு மிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை-திருவள்ளூர் பிரிவில் வியாசர்பாடி அருகே புதிய இரயில் நிலையம் ஒன்று ஏற்படுத்திட மத்திய அரசை மாநில அரசு கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : பேசின் பாலம் மற்றும் பெரம்பூர் இரயில் நிலையங்களுக்கிடையில் வியாசர்பாடியில் புதிதாக இரயில் நிலையம் ஒன்று அமைத்திடும் பணி விரைவாக நடந்துவருகிறது. இவ்வருட இறுதிக்குள் இப்புதிய இரயில் நிலையம் செயல்படத் தொடங்கும் என இரயில்வே நிர்வாக அதிகாரி தெரிவித்துள்ளார்.

[1986 நவம்பர் 19

குமரி மாவட்டத்தில் டயர், டியூப் தொழிற்சாலை.

87—(*வினா எண் 9127) திரு. எப். எம். ராசரத்தினம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்திலுள்ள தரமான ரப்பரைக்கொண்டு போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான டயர், டியூப் தயாரிக்கும் தொழிற்சாலை குமரி மாவட்டத்தில் அமைக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எப். எம். ராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக்கண்டத்திலே கிடைக்கிற ரப்பரிலேயே தரமான ரப்பர் கன்னியாகுமரி மாவட்டத்தில்தான் கிடைக்கிறது. அந்த ரப்பரைப் பதப்படுத்தி தனியார் தயாரிக்கிற பொருட்களைத்தான் போக்குவரத்துக்கழகப் பேருந்துகளுக்குப் பயன்படுத்தி வருகிறோம்; எனவே இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டும், வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கும் நோக்கத்துடனும் இனிமேலாவது குமரி மாவட்டத்தில் அரசு தொழிற்சாலை ஒன்றை போக்குவரத்துத் துறை மூலம் உருவாக்குவது பற்றி ஆய்வு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்டது. 100 கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்காகும் என்று கணக்கிடப்பட்டது. அப்படி 100 கோடி ரூபாயில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படுமேயானால் 5 லட்சம் டயர்களை ஒரு ஆண்டுக்கு தயாரிக்க முடியும் என்று சொல்லப்பட்டது. ஆனால் நமக்குத் தேவை அதில் 20 சதவீதம் மட்டும்தான். எனவே, மீதம் இருக்கிற 80 சதவீதத்தை மற்றவர்களோடு போட்டியிட்டு நாம் வெளியிலே விற்கவேண்டிய நிலை ஏற்படும். அதன் காரணத்தால் எதிர்காலத்தில் ஏதாவது பிரச்னை ஏற்படுமானால் அரசாங்கத்திற்கு அது மிகவும் தலைவலியாகப் போய்விடும் என்ற காரணத்தால் அந்த நிலையை நாம் அப்போது கைவிட்டோம். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் ஏற்கெனவே டயர்களை தயாரித்துக் கொண்டிருக்கிற தொழிற்சாலைகளுக்கு அதிகமான அளவுக்கு தயாரிக்க லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருப்பதாக நான் கேள்விப்பட்டேன். எனவே அந்தச் சூழ்நிலையில் லாபகரமாக இருக்குமா, அல்லது எதிர்காலத்தில் அதை கைவிட வேண்டிய நிலை ஏற்படுமா என்ற சந்தேகம் இருந்ததன் காரணத்தால் தான் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் அதைப் பற்றி பரிசீலித்து சூழ்நிலை சரியாக இருக்குமேயானால் அதன் மீது நடவடிக்கை எடுக்கலாம்.



1986 நவம்பர் 19]

திரு. எப். எம். ராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் கிடைக்கிற ரப்பரைக் கொண்டு சில தனியார்கள் தொழிற்சாலைகளை உருவாக்கி அந்தப் பொருள்களை நாம் வாங்குகிற சூழ்நிலை இருக்கிற காரணத்தாலேயும், நமக்கு மட்டும் அல்லாமல் வெளி மாநிலங்களுக்கும் அந்த ரப்பர் பொருள்களை அனுப்புகிற காரணத்தாலேயும், நம்முடைய அரசாங்கமே அப்படி ஒரு ரப்பர் தொழிற்சாலையை உருவாக்குவதன் மூலமாக நல்ல தரமான பொருள்களை உருவாக்கி வெளி மாநிலங்களுக்கும், வெளி நாடுகளுக்கும் கூட நாம் ஏற்றுமதி செய்யக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு அந்த திட்டத்தை உடனே நிறைவேற்றிட அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஏற்கெனவே அதைத்தான் நான் விளக்கமாகச் சொன்னேன். நாம் ஒரு பிரச்னையை எடுத்துக்கொண்டு அதை நல்லபடியாக செய்ய வேண்டும் என்ற முயற்சியை எடுக்கிறபோது, பார்க் கெட்டிலே பல நிலைமைகளிலே ஏற்றத் தாழ்வு ஏற்படுகிறது. அதன் காரணமாக போக்குவரத்துக் கழகங்களுக்கு எந்த இடையூறும் வந்துவிடக் கூடாது என்றுதான் நாம் அதை நடத்த முன் வரவில்லை. குறிப்பாக நம்முடைய முதல் நோக்கம் பொது மக்களுக்கு பேருந்து வசதிகளை செய்ய வேண்டும் என்பதுதான். எனவே வேறு பணிகளுக்கு போவதன் மூலமாக, நம்முடைய இந்தப் பணி தடைபட்டு விடக்கூடாது என்றுதான் நாம் கருதுகிறோம். இருந்தாலும் இதை சிறப்பாக வேறு துறையிலே அதாவது தொழில் துறை போன்ற துறையிலே எடுத்து நடத்த முடியுமா என்பது பற்றி ஆய்வு நடத்த முடியுமா என்று ஆலோசிக்கலாம். இருந்தாலும் திட்டத்தைப் பொறுத்துதான் செயல்படுத்த வேண்டுமே தவிர வேறு அல்ல. அன்றைக்கு 100 கோடி ரூபாய் என்று இருந்தது இன்றைக்கு 200 கோடியாக உயர்ந்திருக்கலாம் என்று கருதுகிறேன். சரியான தகவல் இல்லை. இருந்தாலும் இப்போது நிச்சயமாக அதிகமாயிருக்கும். எனவே அவைகளையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்துத்தான் தொடங்க வேண்டிய நிலை இருக்கிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் டான்சி நிறுவனத்தை அணுகி இப்படிப்பட்ட தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்ட நேரத்தில் அவர்கள், அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய டயர் போன்ற போக்குவரத்திற்கு உபயோகப்படும் பொருள்களை, அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் நிச்சயமாக வாங்கும் என்ற உறுதி இருக்குமேயானால், அதாவது உறுதியான நிலை இருக்குமேயானால், அப்படி ஒரு திட்டத்தை நிறைவேற்ற முன் வருவதாக கூறியிருப்பதாக தகவல் கிடைக்கப் பெற்று இருக்கிறது. அப்படி இருந்தால், போக்கு

வரத்து கழகங்கள் நிச்சயமாக அந்த டயர் போன்ற பொருள்களை டான்சி நிறுவனத்திடம் இருந்து வாங்கும் என்ற உறுதியைக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு அரசு நிறுவனம் தயாரிக்கிறது என்கிறபோது கட்டாயமாக அதை வாங்கவேண்டும் என்ற நிலைமையை நிச்சயமாக போக்குவரத்துத் துறை ஏற்றுக்கொள்ளும். அதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் வேண்டாம். ஆனால் மற்ற டயர்களோடு தரத்திலேயும் விலையிலேயும் சரியாக போட்டியிட அவர்கள் தயாராக இருப்பார்களேயானால் நிச்சயமாக இதில் எந்தவித மாறுபாடும் இருக்கவேண்டிய அவசியம் இல்லை. அப்படியில்லாமல், விலை அதிகமாக இருக்கிற நிலையும், தரம் குறைவாக இருக்கிற நிலையும் ஏற்பட்டால், அது போக்குவரத்துக் கழகத்திற்கு நட்டத்தை ஏற்படுத்தும். எனவே இவைகளையெல்லாம் செய்ய முடியுமா என்பதைப் பற்றி ஆய்வு செய்துதான் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நோக்கத்தை வைத்துத் தான் நான் ஏற்கனவே சொன்னேன். எனவே அரசு சார்பாக இருக்கிற எல்லாவற்றிற்குமே முக்கியத்துவமும், முன் உரிமையும் ஒவ்வொரு அரசுத் துறையும் கொடுக்கிறது.

## கல்பாக்கத்தில் யுரேனியத்திலிருந்து மின் உற்பத்தி

88—(*வினா எண் 5030) திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையை அடுத்த கல்பாக்கத்தில் யுரேனியத்தைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யக்கூடிய ஆராய்ச்சி 'Fast Breeder Reactor' நடத்தப்படுவது குறித்த தகவல் ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): அணு மின் நிலையங்களில் உபயோகப்படுத்தப்படும் எரிபொருள்களான யுரேனியம் மற்றும் தோரியம் இவற்றை எவ்வாறு சிறந்த முறையில் பயன்படுத்தலாம் என்பது குறித்து ஆராய்ச்சி செய்ய அதிவேக சோதனை அணு உலை (Fast Breeder Test Reactor) 18–10–85 முதல் கல்பாக்கத்தில் செயல்பட்டு வருகிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 18–10–1985 முதல் யுரேனியத்தைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யலாம், செய்ய முடியும் என்று ஆராய்ச்சி நடந்து வருவதாகச் சொன்னார்கள். அந்த ஆராய்ச்சி எப்போது முடிவு அடைகிறது? தமிழகத்தில் அதைப் பயன்படுத்தி அணு மின் நிலையம்



உருவாக்குகிற செயற் குறிப்பு ஏதேனும் இருக்கிறதா? அப்படி உருவாக்குகிறபோது வெளிநாட்டு உதவி ஏதேனும் நாடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–10)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இந்த 'பாஸ்ட் பிரீடர் டெஸ்ட் ரியாக்டர்' சோதனை நிலையத்திற்கு அன்னை இந்திரா காந்தி அம்மையார் பெயரிடப்பட்டிருக்கிறது. இதிலே ஆராய்ச்சி தொடர்ந்து நடத்தப்படும். இது ஆசியாவிலேயே மிகப் பெரிய கவுரவமான, பெருமைக்குரிய பரிசோதனை நிலையமாகும். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் இன்னொரு அணு மின் நிலையம் கூடங்குளத்தில் வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தி வருகிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில், நாகப்பட்டினத்தில் ஒரு அனல் மின் நிலையம் உருவாக்கிட வேண்டுமென்ற செயற்குறிப்பு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. யுரேனியத்தைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்கிற அணு மின் நிலையம் ஒன்று அனல் மின் நிலையத்திற்குப் பதிலாக தஞ்சையில் உருவாக்கிட தமிழ்நாடு அரசு முயற்சி எடுக்குமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, நாகப்பட்டினத்தில் கரியை உபயோகப்படுத்தி ஒரு மின் நிலையம் ஏற்படுத்த அரசு ஆய்வு செய்து வருகிறது. அணு மின் நிலையம் அங்கே நடத்துவதற்கு ஆய்வு இல்லை.

## வில்லிவாக்கம் தொகுதியில் மின் விளக்குகள்

89—(*வினா எண் 5205) திரு. வி. பி. சிந்தன் மற்றும் திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் தொகுதியில் பல இடங்களில் மின் துறை மற்றும் உள்ளாட்சி மன்றங்கள் இணைந்து செயல்படாமையால் தெரு விளக்குகள் எரிவதே இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1986 மார்ச் 19

திரு. வி. பி. சிந்தன்: தலைவர் அவர்களே, பல பகுதிகளில் என்னுடைய தொகுதியில் மின் விளக்குகள் எரிவதில்லை. 75 சதவீதம் மின் விளக்குகள் எரியாத பகுதிகளும் உண்டு. விளக்குகள் எரிவதற்கு வேண்டிய பொருள்கள், பல்புகள் போன்றவை முறையாக வழங்கப்படவில்லை. மின் வாரிய அதிகாரிகளை அணுகினால் எங்களுக்குத் தெரியாது என்று சொல்லிவிடுகிறார்கள். நாங்கள் பணம் கட்டியிருக்கிறோம், பல்புகள் எங்களுக்குக் கிடைக்கவில்லையென்று ஊராட்சி அதிகாரிகள் குறிப்பிடுகிறார்கள். இந்த நிலைமையில் பொது மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இது குறித்து ஏதாவது ஆக்கப்பூர்வமான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, அம்பத்தூர், ஆவடி, திருவெண்காடு, தாந்தான்குப்பம், எஸ். ஆர். பி. நகர், நூம்பல், நெற்குன்றம், மதுரவாயல், வானகரம், ஆலப்பாக்கம், செட்டியார் அகரம் ஆகிய இடங்களில் மொத்தம் 8,513 தெரு விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. அது 80 சதவீதம் தெரு விளக்குகள் எரிவதற்குச் சமமானது என்றும், வில்லிவாக்கம் பஞ்சாயத்து யூனியனில் நிறுவப்பட்டிருக்கிற 398 தெரு விளக்குகளில் 336 தெரு விளக்குகள் எரிகின்றன என்றும், அது 84.4 சதவீதம் என்றும், தெரு விளக்குகள் எரிவதைப் பற்றி உண்மை நிலையை அறியவும், துரித நடவடிக்கை எடுக்கவும், அவ்வப்போது உள்ளாட்சி மன்ற அலுவலர்களும், மின்வாரிய பொறியாளர்களும் இணைந்து தெரு விளக்குகள் எரியும் நிலைபற்றி பார்வையிடுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. பி. சிந்தன்: தலைவர் அவர்களே, நான் கணக்குகளுக்குப் போகவில்லை. சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு அம்பத்தூர் நகரியத்தில் 160 சோடியம் வேப்பர் லேம்ப்ஸ் ஏற்பாடு செய்யப்பட்டு, தேர்தல் முடிந்த மறுவாரத்தில் அவை எரியுமென்று அதிகாரிகள் சொன்னார்கள். எல்லா வேலைகளும் முடிந்துவிட்ட போதிலும், இன்று வரையில் அந்த விளக்குகள் எரியவில்லை. அவை எரிவதற்கு நடவடிக்கையெடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, அவைகள் விரைவில் எரிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, வில்லிவாக்கம் தொகுதியில் மட்டுமல்ல, தமிழகத்தின் பல இடங்களில் உள்ளாட்சி மன்றங்களுக்கும், மின்துறை ஊழியர்களுக்கும் போதுமான இணைப்பு ஏற்படாத காரணத்தால் காலாகாலத்தில் இந்த மின்சாரம் சம்பந்தமான வேலைகள் செய்யப்படவில்லையென்றும், அதன் காரணமாக பல்புகள் காலாகாலத்தில போடப்படாத நிலையும், வெளிச்சம் கிடைக்காத நிலையும் இருந்து



1986 மார்ச் 19]

கொண்டிருக்கிறது என்பதும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறதா? அப்படியானால் அந்த மாதிரியான நிலையை மாற்றுவதற்கு தகுந்த நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் உள்ளாட்சித்துறை, மின்துறை இரண்டையும் இணைத்து விளக்குகள் தேவைகளைப் பற்றி ஆய்வு செய்யவும், தேவையான விளக்குகளை வழங்கவும் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. வெகு விரைவில் இதுபற்றி அரசு ஒரு அறிக்கையை உள்ளாட்சித்துறை சார்பில் சமர்ப்பிக்கும்.

சென்னையில் கால்நடை மருந்தகங்கள்

90—(*வினா எண் 5464) திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் உள்ள கால்நடை மருந்தகங்கள் எவ்வளவு?

(ஆ) தேசிய வேளாண்மைக் குழுவின் பரிந்துரையின்படி அவைகள் அமைந்துள்ளனவா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சென்னை நகரில் உள்ள கால்நடை நிலையங்கள்:

1) கால்நடை மருத்துவமனை, சைதாப்பேட்டை.

2) கால்நடை மருந்தகம், இராயபுரம்.

3) கால்நடை மருத்துவக் கல்லூரியின் மருத்துவமனை, சென்னை.

(ஆ) இல்லை.

திருமதி. பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் பெருகி வரும் கால்நடைகளின் எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது இங்குள்ள மருந்தகங்கள் மிகவும் குறைவாக உள்ளன. எனவே அதிகமான கால்நடை மருந்தகங்களை ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா? மேலும் மாநகராட்சி துப்புரவு வண்டிகளில் வேலை செய்கிற கால்நடைகளுக்கு அரசு மருத்துவ வசதிகளைச் செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி துப்புரவு வண்டிகளில் கட்டப்படும் எருதுகளின் சிகிச்சைக்காக கீழ்க்கண்ட இடங்களில் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன: (1) கோடம்பாக்கம், (2) மைலாப்பூர், (3) புதுப்பேட்டை, (4) பேசின்பிரிட்ஜ், (5) பெரம்பூர். மேற்கூறிய இடங்களில் பொதுமக்கள் கால்நடைகளை எடுத்துச் சென்றாலும், அவைகளுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைக் குழுவின் பரிந்துரையின்படி ஏன் மருந்தகங்கள் அமைக்கவில்லை? கால்நடை மருந்தகங்களை அமைக்க மத்திய அரசு ஏதேனும் மானியம் அளித்து உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, மத்திய அரசு மானியம் ஒன்றும் அளிக்கவில்லை. வேளாண்மைக் குழு 1980 ஆம் ஆண்டில் 20 ஆயிரம் கால்நடைகளுக்கு ஒரு கால்நடை மருத்துவரும், அதற்குப் பிற்பாடு 15 ஆயிரம் கால் நடைகளுக்கு ஒரு மருத்துவரும் வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். பணம் இல்லாத காரணத்தால் அது அமல்படுத்தப் படவில்லை.

### திருமழிசை கிராமத்தில் துணை மின் நிலையம் அமைத்தல்.

91—(*வினா எண் 9117) திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா திருமழிசை கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) 33/11 கே. வி. துணை மின் நிலையம் அமைக்க தேவையான நிலத்தை கையகப்படுத்த நடவடிக்கைகளை மின் வாரியம் எடுத்து வருகிறது.

### பென்னாகரத்தில் இளம் பட்டுப்புழு வளர்ப்பு மையங்கள்

92—(*வினா எண் 9649) திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பென்னாகரம் தொகுதியில் எத்தனை இடங்களில் இளம் பட்டுப்புழுவளர்ப்பு மையங்கள் நடைபெற்று வருகின்றன?

(ஆ) நெருப்பூர், ஏரியூர் பெரும்பாளை ஆகிய ஊர்களில் மையங்கள் துவங்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : பேரவைத் தலைவர் அவர்களே, (அ) பென்னாகரம் தொகுதியில் நெருப்பூர், காட்டூர், ஆணைக்கல்லானூர், சின்னப்பட்டி, பிக்கம்





பட்டி, காலைக் குளாத்திரம்பட்டி, நாகதாசம்பட்டி, வத்மரத் ஹள்ளி ஆகிய எட்டு இடங்களில் இளம் பட்டுப்புழு வளர்ப்பு மையங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) நெருப்பூரில் ஏற்கனவே இளம் பட்டுப்புழு வளர்ப்பு மையம் செயல்பட்டு வருகிறது. எதிர்காலத்தில் பட்டுத் தொழில் ஏரியூரிலும், பெரும்பாளையிலும் அதிகம் வளர்ச்சி அடைந்தால், அங்குள்ள விவசாயிகளுக்கு தேவைக்கேற்ற அளவிற்கு இளம் பட்டுப்புழு வளர்ப்பு மையங்கள் அங்கேயே துவக்கப்படும்.

திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தெரிவித்த அந்த கிராமங் களில் எல்லாம் இளம் பட்டுப்புழு வளர்க்கின்ற நிலையங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன என்று சொன்னார்கள். நன்றி. அதோடு தர்மபுரி மாவட்டத்தில் இன்னும் எத்தனை இடங்களில் இதுபோன்ற இளம் பட்டுப்புழு உற்பத்தி செய்கிற நிலையங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன? மேலும் அமைக்க இருக்கிற இடங்களைத் தெரிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், தமிழகத்தினுடைய மொத்த பட்டு உற்பத்தியில் நான்கில் ஒரு பங்கு அங்கே உற்பத்தி ஆகிறது. அதிலே ஏறக்குறைய 17 இடங்களின் மூலமாக 67 மையங்களில் இப்படிப்பட்ட விதைப் பண்ணைகள், பட்டுப்புழு வளர்ச்சிப் பண்ணைகள், விதை உற்பத்தி மையங்கள், பட்டு முறுக்காலை போன்ற 67 மையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்பாக நடந்து வருகின்றன.

### ஜெயங்கொண்டத்தில் முந்திரித் தோலிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் ஆலை.

93—(*வினா எண் 9948) டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் முந்திரித் தோலிலிருந்து எண்ணெய் எடுக்கும் ஆலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதியில் முந்திரியைத்தான் அங்குள்ள விவசாயிகள் அதிகமாக பயிரிடுகிறார்கள். அங்கே தனியாருக்குச் சொந்தமான நான்கு தொழிற்சாலைகளில், அந்த முந்திரிகள் பிராசஸ் செய்யப்பட்டு, வெளிநாடுகளுக்கு

அனுப்புவதற்கும் மற்றும் முந்திரியிலிருந்து எஸ்.ஸெய் செய்வதற்கும் ஏற்பாடு செய்து, அதை லாபகரமான தொழிலாக அவர்கள் நடத்தி வருகிறார்கள். எனவே அவற்றை எல்லாம் ஆராய்ந்து, நமது அரசும் அதைச் செய்தால் நிச்சயமாக அந்தப் பகுதியிலே அது லாபகரமாக நடக்கும் என்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமது பதிலை மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகநாதன்:** தலைவர் அவர்களே, தனியார் யாராவது தொழில் தொடங்க முன்வந்தால் நிச்சயமாக அரசு உதவி செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

(முற்பகல் 10-20)

## 2. முன்னாள் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களுக்கு பிறந்தநாள் புகழஞ்சலி.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, இந்திய அன்னை பூமியினுடைய மாட்சிமைக்குரிய பிரதமராக 16 ஆண்டு காலம் ஆட்சி புரிந்தவரும், வங்க தேசத்திற்கு விடுதலையினை பெற்றுத் தந்தவரும், வங்கிகளை தேசியமயம் ஆக்கியவரும், 20 அம்சத் திட்டம் என்ற இணையற்ற திட்டத்தைத் தந்தவரும், நடுநிலை நாடுகளுடைய தலைவராகவும், சர்வதேச அரங்கத்தில் தாயகத்தினுடைய புகழை உயர்த்தியவராகவும், ஏழை எளிய மக்களுடைய இதய ஜோதியாகவும். மாதர்குல மாணிக்கமாகவும், குண்டு துளைத்த தொண்டராகவும், நமது நெஞ்சங்களில் என்றும் பசுமையாக விளங்குகின்ற அன்னை இந்திரா காந்தி அவர்களுடைய 70-வது பிறந்த தினமாகிய இன்று நாட்டின் ஒருமைப்பாடு தினமாகக் கொண்டாடுகின்ற இந்த நேரத்தில் நாட்டின் ஒருமைப்பாட்டில் அக்கறை கொண்டு இருக்கிற தமிழக அரசின் சார்பில் வாழ்த்து கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று நான்கூற விழைகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று இந்தியாவினுடைய பிரதமராக இருந்து, இந்தியாவினுடைய புகழையும், பெருமையையும் அகில உலகத்தில் நிலைநாட்டுவதற்கு முக்கிய காரணமாக இருந்து, இந்தியாவினுடைய செல்வாக்கை உயர்த்திய அன்னை இந்திரா காந்தி அம்மையாருடைய 70-வது பிறந்த





நாள் விழாவை இந்தியா சிறப்பாகக் கொண்டாடிக்கொண்டு இருக்கிறது. அவர்களுடைய பிறந்த நாளிலிருந்து ஒரு வார காலம்—25 ஆம் நாள் வரையில்—ஒருமைப்பாட்டு நாளாகக் கொண்டாட வேண்டும் என்று இந்திய அரசு தெரிவித்ததற்கு இணங்க எங்கு பார்த்தாலும் கொண்டாடப்பட்டு வருகிறது. அதனையொட்டி தமிழகத்தினுடைய எல்லா மாவட்டங்களிலேயும் இன்று முதல் 25 ஆம் நாள் வரையில் ஒருமைப்பாடு நாளாக பல் வேறு பிரிவினரையும், வகையினரையும் ஒன்றாக இணைத்து கொண்டாட வேண்டும் என்று ஆணையும் பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. அது இன்று முதல் துவங்குகிறது. அன்னை இந்திரா காந்தி அவர்களுடைய மறைவால் சிலபல பாடங்களை இந்திய மக்கள் கற்றுக்கொள்ள வேண்டியது இருக்கிறது என்ற காரணத்தாலும், இந்தியாவினுடைய சுதந்திரம் காப்பாற்றப்பட வேண்டும். அதனுடைய ஜனநாயகம் என்றும் பேணிக் காக்கப்பட வேண்டும், அதற்கு இந்திரா காந்தியினுடைய மறைவு நமக்கு ஒரு எச்சரிக்கையாக அமைந்து இருக்கிறது என்ற முறையில்தான் இந்த ஒருமைப்பாடு நாள் மேற்கொள்ளப்படுகிறது.

இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் 1984 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31 ஆம் நாள் படுகொலைக்கு ஆளானார்கள், அதற்கு முதல் நாள் 30 ஆம் நாள் அன்று இரவு 8, 8½ மணி அளவில் அவர்கள் ஒரிசா மாநிலத்தில் உள்ள புவனேஸ்வரில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகிறபோது நான் என்னுடைய உயிரைவிட அஞ்சவில்லை என்றும், என்னுடைய உயிரைவிடுகின்ற சூழ்நிலை ஏற்பட்டாலும் என்னுடைய உடலிலிருந்து சிந்துகின்ற ஒவ்வொரு சொட்டு ரத்தமும் இந்த நாட்டுக்கு வலிவூட்டுகின்ற வகையில், இந்த நாட்டுக்கு ஏற்றம் அளிக்கின்ற வகையில்தான் அமையும் என்றும் கூறினார்கள். சொல்லி வைத்தாற்போல மறுநாள் காலையிலேயே அவர்கள் ரத்தம் சிந்தவேண்டிய ஒரு சூழ்நிலையும் ஏற்பட்டது. அவர்கள் எடுத்த காரியத்தை முடிக்கின்ற அளவுக்கு, மிகச் சிறந்த முறையில் பணியாற்றி எல்லோருடைய உள்ளத்திலும் இடம் பெற்றார்கள். எல்லோராலும் பாராட்டத் தக்க அளவுக்குப் பணியாற்றினார்கள் என்பதை மிக நன்றாக நாம் அறிவோம்.

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து அவர்களுடைய புகழையும், பெருமையையும் நிலை நாட்டியவர்கள் அவர்கள். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு எழுதிய கடிதங்களில் கூட "வரலாற்றைப் படிப்பது நல்லதுதான். அதைவிட நல்லது வரலாற்றைப் படைப்பது" என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்த வகையில் இந்திரா காந்தி அம்மையார் வரலாற்றைப் படித்தவர்கள் என்பது மட்டும் அல்ல, இந்தியாவுக்கு நல்ல பல

வரலாற்றைப் படைத்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட புகழ்
பெற்று, பெருமைக்குரிய இந்தியாவினுடைய புகழையும் பெரு
மையையும் நிலைநாட்டியவர் அவர்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் எடுத்துத்
தெரிவித்தற்கு இணங்க கூட்டு சேரா நாடுகளுடைய மாநாட்டை
இந்தியாவில் நடத்தி பெருமைக்குரியதாக ஆக்கியவர்கள். ஆசிய
விளையாட்டுப் போட்டிகளை நடத்தி அதன் மூலமாக பெருமை
யையும், புகழையும் ஈட்டித் தந்தவர்கள். அதோடு மட்டும்
அல்ல, காமன்வெல்த் மாநாட்டை இங்கே கூட்டி அதன் மூலமாக
பெருமையையும், புகழையும் ஈட்டித் தந்தவர்கள். அதுமட்டு
மல்லாமல், பங்களாதேஷ் போரைச் சந்தித்து, 7½ கோடி
மக்களுக்கு விடுதலை வாங்கித் தந்து சாதிக்கமுடியாத
சாதனையைச் செய்தவர்களாவர்கள்.

அது மட்டுமல்லாமல், பங்களாதேஷ் போரை வென்றார்கள்
என்பது மட்டுமல்ல, வென்ற பகுதியை அடக்கி ஆளவேண்டு
மென்று எண்ணாமல் வென்ற மக்களே ஆளட்டும் என்று விட்ட
அந்த வரலாறு இரண்டாவது உலகப் போரிலே கூட ஏற்பட
வில்லை, ஜப்பானை வென்ற நிலையில்கூட, சில பல ஆண்டு
களாக அமெரிக்காதான் ஆண்டு கொண்டு இருந்தது.
பெர்லினை இன்றைக்கும் வல்லரசு நாடுகள்தான் ஆண்டு
கொண்டிருக்கின்றன. அந்தக் கோட்பாட்டை விடக்கூடாது
என்று வல்லரசுகள் எல்லாம் எண்ணுகின்ற நிலையில், பங்களா
தேஷ் முழுவதையும் அடக்கி ஆளுகின்ற சூழ்நிலை நமக்கு
ஏற்பட்டும், அந்த நிலையிலும்கூட, பங்களாதேஷை அந்த
மக்களிடத்திலே ஒப்படைக்கவேண்டுமென்ற ஜனநாயகப் பண்பு
களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருந்த வகையில், உருவாக்கித்
தந்தவர்கள், இப்படிப் பண்டித நேரு அவர்கள் அளித்த
ஜனநாயகப் பண்புகளுக்கு உறைவிடமாக விளங்கி, ஜனநாயக
கோட்பாடுகளையெல்லாம் மதித்து ஜனநாயக நடைமுறைகளை
எல்லாம் நடைமுறைப்படுத்திக் காட்டியவர்கள்.

அவர்களுடைய பிறந்த நாள் விழாவையொட்டி, ஒருமைப்
பாடு நாள் எங்கு பார்த்தாலும் கொண்டாடப்படுகிறது மன
ஒருமைப்பாடு வேண்டும். யூனிட்டி வேண்டும். யூனிபார்மிட்டி
என்பது ஒன்று, யூனிட்டி என்பது மற்றொன்று. யூனிபார்மிட்டி
இருந்தால் யூனிட்டி வரும் என்று பலபேர் கருதுகிறார்கள்.
யூனிபார்மிட்டி அல்ல இந்தியாவிற்கு வேண்டியது. இந்தியா ஒரு
மையமாகத் வெளி தோற்றத்திலே இருப்பதாகக் கருதி, ஒரே மய
மாக்கவேண்டுமென்று முயற்சி செய்கிறார்கள். அதிலே வெற்றி
கிடைக்காது. மன ஒருமைப்பாடுதான் வேண்டுமே தவிர, யூனி
பார்மிட்டி அல்ல ; யூனிட்டிதான் வேண்டும். யூனிட்டி மனதைப்
பொறுத்திருக்கிறது. அந்த நாள்தான் இந்த நாள். அதை
எல்லோரும் காப்பாற்றுவோமாக. அதுதான் மறைந்த இந்திரா
காந்தி அம்மையாருக்கு நாம் செலுத்தக்கூடிய புகழ் அஞ்சலி
.



என்று சொல்லி, இந்தப் பேரவையின் சார்பாக, பேரவையின்
அனைத்து உறுப்பினர்களின் சார்பாக, இந்தப் பேரவையில்
இருக்கின்ற அனைத்துக் கட்சிகளின் சார்பாக, மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களின் சார்பாக, புகழ் அஞ்சலியைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு.
சித்தன் அவர்கள் தெரிவித்த கருத்துக்களோடும், மாண்புமிகு
பேரவை முன்னவர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களோடும்,
மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார்
அவர்களுடைய பிறந்த நாளில் என்னுடைய புகழ் அஞ்சலியை
நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 3. கவன ஈர்ப்பு.

### ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை அரசு அனுமதியில்லாமல் தொடங்குதல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் வேடசந்தூர்
வி. பி. பாலசுப்பிரமணியன், க. சோலைராசு ஆகியோர் ஒரே
பொருள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர்.
அவர்களில் ஒருவர் அதை மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட
அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்
(பேரவைத் துணைத் தலைவர்):** தலைவர் அவர்களே, ''மாநிலத்தில்
பல இடங்களில் அரசு அனுமதி பெறாமல், பலர், ஆசிரியர் பயிற்சிப்
பள்ளி தொடங்கி மாணவர்களை சேர்க்க விளம்பரப்படுத்திக்
கொண்டிருப்பதால் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்த'', அவசரப்
பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி
மற்றும் சட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் தலைவர்
அவர்களே, அவையிலே விவரமான அறிக்கை ஒன்று வைக்கப்
பட்டிருக்கிறது.

### அறிக்கை.

தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (வரன்
முறைப்படுத்தும்) சட்டம், 1973-ல் பிரிவு 9-ன் கீழ் சிறுபான்மை
யினர்கள் பள்ளிகளைத் திறக்க, முன் அனுமதி பெறத்தேவை
யில்லை. இதனை பயன்படுத்திக்கொண்டு தமிழ்நாட்டில் பல பாகங்
களில் வணிக நோக்குடன் இடைநிலை ஆசிரியர்களுக்குப் பயிற்சி
அளிக்கும் ஏராளமான தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்
அரசின் அங்கீகாரம் இன்றி ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு
முன் அனுமதி இன்றி ஆரம்பிக்கும் தனியார் ஆசிரியர் பயிற்சி

நிறுவனங்கள் மூன்று மாதங்களுக்குள் அங்கீகாரம் பெறுவதற்காக விண்ணப்பிக்க வேண்டும். தமிழ்நாடு சிறுபான்மையினர் பள்ளிகள் (அங்கீகாரம் மற்றும் மானியம் வழங்கல்) விதிகள், 1977-ல் விதி 4(3)-ன் கீழ் அரசின் முன் அனுமதியில்லாமலேயே தமிழ் நாடு அரசு தனியார் பள்ளிகள் (வரன்முறைப்படுத்தும்) சட்டம், 1973 பிரிவு 9-ன் கீழ் திறக்கப்படும் தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கும் அதிகாரம் பள்ளிக் கல்வி இணை இயக்கு நருக்கு வழங்கப்பட்டு உள்ளது.

2. இதற்கிடையில் பயிற்சி பெற்ற இடைநிலை ஆசிரி யர்கள் இடையே நிலவி வரும் வேலையில்லா பிரச்சினையை தீர்ப்பதற்காக புதிதாக ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் ஏதும் துவக்கத் தேவையில்லை என அரசு கொள்கை முடிவெடுத்தது. அதன் அடிப்படையில் புதிதாகத் துவக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு அனுமதி ஏதும் கொடுக்கப்படவில்லை.

3. மேலும், அரசின் அங்கீகாரம் இன்றி நடைபெற்று வரும் தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களைப் பற்றி பொது மக்களுக்கு எச்சரிக்கை அளிக்கும் வகையில் அங்கீகரிக்கப் படாத நிறுவனங்களில் பயிற்சி பெறுபவர்கள், ஆசிரியர் பயிற்சிக் கல்வி பட்டயப் பொதுத் தேர்வில் தேர்வு எழுத தகுதி பெற்ற வர்கள் அல்லர் எனவும், இந்நிறுவனங்கள் வழங்கும் சான்றிதழ்கள் அங்கீகரிக்கப்பட்டவை அல்ல என்றும், இந்நிறுவனங்களில் பயிற்சி பெறுபவர்கள் வேலை வாய்ப்பிற்குத் தகுதியற்றவர்கள் என்றும், இது போன்ற நிறுவனங்களில் மாணவ/மாணவிகளைச் சேர்க்க வேண்டாம் என பொது மக்களைக் கேட்டுக்கொண்டும் அரசு தமிழ், ஆங்கிலச் செய்தித் தாள்களில் செய்திக் குறிப்பு வெளியிட்டது.

4. அப்படி விளம்பரம் வெளியிடப்பட்டும், மாநிலத்தில் மேலும் மேலும் ஏராளமாக தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள், சிறுபான்மையினர் என்ற போர்வையில் துவக்கப் பட்டு, வணிக நோக்குடன், அங்கீகாரம் ஏதுமின்றி செயல்பட்டு வருகின்றன. இடம்கோரி வரும் மாணவர்களிடமும் நிதிவசூல் செய்வதாக அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இவர்கள் மீது காவல்துறை மூலம் தக்க நடவடிக்கை எடுக்க பள்ளிக்கல்வி இயக்குநருக்கு தக்க அறிவுரைகள் வழங்கப் பட்டுள்ளன. இப்பள்ளி நிர்வாகிகள் அங்கீகாரம் கோரி, உயர் நீதிமன்றத்தில் வழக்குகளும் தனித்தனியாக தொடர்ந்துள்ளனர். இவைகள் இன்றும் நிலுவையில் உள்ளன. இதற்கிடையில் மேற்படி நிர்வாகிகள் அப்பள்ளிகளில் பயிலும் மாணவ/ மாணவிகள் தேர்வு எழுதவும், முடிவுகளை வெளியிடவும் உயர்நீதிமன்றத்தில் இடைக்கால ஆணை அவ்வப்போது பெற்று வருகின்றனர். உயர்நீதிமன்ற ஆணைக்கேற்ப, நடவடிக்கை எடுக்கப்படுகிறது.



**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் வைத்திருக்கின்ற விவர அறிக்கையைப் பார்க்கின்றபோது, மாணவர்களில் சிலபேரிட மிருந்து சுரண்டுபவர்களைத் தடுப்பதற்கு கண்ணுங் கருத்துமாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்தாலும்கூட, அந்தப் பள்ளிக்கு அனுமதி அளிக்கவேண்டும், அவர்களைத் தேர்வு எழுத அனு மதிக்கவேண்டுமென்ற நீதிமன்றத்தினுடைய ஆணைகள் அரசாங் கத்தினுடைய நல்ல நோக்கத்திற்குத் தடையாக இருக்கின்ற விவரங்கள் சொல்லப்படுகின்றன. உண்மையிலேயே அத்தகைய பள்ளியை ஆரம்பிப்பவர்களுடைய தீய நோக்கம் நிறைவேறு வதற்கான காரணம், மாணவர்கள் நிறையப் பேர் இத்தகைய பள்ளியில் படிக்கவேண்டுமென்று விரும்புவதுதான்.

நமது மாநில அரசு இந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை மேல்நிலைப்பள்ளி அளவிற்குக்கூட கொண்டுபோய், மாணவிகள் படிப்பதற்கான ஒரு சிறந்த வாய்ப்பை, கிராமப்புறங்களிலே இருப்பவர்கள் பெறுகின்ற வாய்ப்பை உருவாக்கியிருக்கிறது. எனவே நீதிமன்றத்தினுடைய தலையீடு இருக்கின்ற காரணத் தினால், இந்தத் தவறுகளை ஓரளவிற்குக் குறைப்பதற்கு மேல் நிலைப் பள்ளிகளில் பெண்களுக்கு அந்த வசதி கொடுத்திருப்பது போன்று ஒரு குறிப்பிட்ட சதவீதம், 10 பேர், 15 பேர் ஒரு பள்ளிக்கு என்ற அளவிலாவது ஆண்களுக்கும் இந்த வாய்ப்பைக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சனை அதைவிட சற்று ஆழமாக இருக்கிறது, தற்போது கிட்டத்தட்ட 7,500-க்கு மேற்பட்ட செகண்டரி கிரேட் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் வேலை இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதிகப்படியாக 300-லிருந்து 500 பேர்களுக்குத்தான் ஆண்டுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க முடிகிறது. இது இருக்கின்ற நடைமுறை சூழ்நிலை. பயிற்சி பெற்றிருக்கின்றவர்களுக்கு வேலைவாய்ப்பு தரவேண்டு மென்றாலே இன்னும் 15 ஆண்டுச்காலம் ஆகும். இப்படி இருக்கின்றபோது, Secondary Grade Teachers Training என்று தனியார்கள் துவக்கி பணத்தையும் வசூலித்து, அவர்களுக்கு அந்தப் பயிற்சியையும் கொடுத்து மேலும் 15 ஆண்டுக் காலம் வேலை இல்லாமல் இருக்கக்கூடிய ஒரு விபரீத நிலையை தனி யார் துறையினர் மேற்கொள்ளுகின்ற அணுகுமுறை ஏற்படுத்தி விடுமோ என்ற அச்சம்தான் அரசு கடுமையான நடவடிக்கை களை எடுப்பதற்குக் காரணமாக இருக்கிறது. உச்ச நீதிமன்றம் வரை அரசு இதை எடுத்துச் சென்றிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறிய ஆலோசனையை அரசு பரிசீலிக்கும்.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித்தரம் காப்பாற்றப்படவேண்டும் என்கின்ற வகையிலே இதுபோன்ற பள்ளிகளை ஆரம்பிக்கின்ற சிறுபான்மையினர்மீது இந்தப் பள்ளிகளைத் தடை செய்யவேண்டும் என்ற சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர அரசு முயற்சிக்குமா என்பதையும் ஸ்தல அதிகாரி என்கின்ற வகையிலே பள்ளி துணை ஆய்வர் அவர்களும், D.I. அவர்களும் உடனடியாகக் காவல் துறையிலே இப்படி துவக்கப்பட்ட பள்ளிகள் குறித்து புகார் செய்ய அவர்களுக்கு அறிவுரை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை இதில் எந்த அளவுக்குத் தலையிட முடியும் என்பது பிரச்சனையான ஒன்று. They resort to misappropriation of private funds. இதுபோன்று பணத்தைக் கையாடல் அல்லது சீட்டிங் போன்றவற்றில் ஈடுபடுவார்களேயானால் சட்டப்படி கிரிமினல் நடவடிக்கை கட்டாயம் எடுக்கப்படும். ஆனால் சிறுபான்மையோருக்கு அரசியல் சட்ட ரீதியாக சலுகை இருக்கிறது. முன் அனுமதி இல்லாத நிலையில் துவக்கலாம். ஆனால் டிஸ்கிரிமினேஷன் என்ற முறையிலே, சிறுபான்மையினர் அல்லது பெரும்பான்மையினர் என்ற முறையிலே பெரும்பான்மையினர் துவக்குகின்ற பயிற்சிப் பள்ளிகளுக்கு மட்டும் அனுமதி தந்து சிறுபான்மையினர் பள்ளிகளுக்கு அனுமதி தராமல் இருப்போமானால் that would be treated as a discriminatory one. அந்த நேரத்தில் அவர்களுக்குச் சட்ட ரீதியான பாதுகாப்பு நீதிமன்றம் மூலம் கிடைத்துவிடும். நமது அரசைப் பொறுத்தவரைக்கும் அது தனியாராக இருந்தால், சிறுபான்மையினராக இருந்தாலும் சரி, பெரும்பான்மையினராக இருந்தாலும் சரி, இதுவரை பயிற்சி பெற்றிருக்கின்ற 7,500 பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இவர்களுக்கு வேலை தருவதற்கே இன்னும் 15 ஆண்டுக் காலம் ஆகும் என்பதால் மேலும் பயிற்சிப் பள்ளிகளை ஆரம்பிக்க வேண்டாம் என்ற பொது முடிவை எடுத்து இருக்கின்ற காரணத்தினால், நீதிமன்றத்தில் அரசினுடைய நிலை வெற்றி பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இதை நாம் நிலைநிறுத்துவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 4. தமிழ்நாடு மின் வாரியத்தின் 1986–87–ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மற்றும் 1985–86–ம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை ஆகியவை மீது விவாதம்.

மாண்புமிகு திரு. வி. வி, சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1985–86-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1984–85-ம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை மீது சென்ற ஆண்டு விவாதிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் மீது வாரியம்



எடுத்த நடவடிக்கை பற்றிய அறிக்கை தனியே சுற்றனுப்பப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு மின் வாரியத்தின் 1986–87-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை* 1985–86-ம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கை@ ஆகியவற்றைப் பேரவையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

*திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் திருத்தப்பட்ட மதிப்பீடு மீதும் 1986-87 நிதிநிலை அறிக்கை மீதும் நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பிலே ஒரு சில கருத்துக்களைக் கூற முன்வந்திருக்கிறேன். சம்சாரம், அது மின்சாரம் என்றார்கள். மின்சாரம் அது சம்சாரம் அல்ல. ஆனால் இப்பொழுது மின்சாரம்தான் இந்த ஆட்சியிலே, ஆட்சிக்கும், கணக்கு வழக்குகளுக்கும் கட்டுப்படாத ஒரு சம்சாரமாக இருந்து வருகின்ற நிலையைக் காண்கின்றோம்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே 1985–86-ம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட மதிப்பீட்டிலே ரூ. 213.78 கோடி நஷ்டம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது, அதேபோல 1986–87-ம் ஆண்டுக்கான உத்தேச நஷ்டம் ரூ. 226.03 கோடி என்று இருக்கிறது. ஆக இந்த நிதிநிலை அறிக்கையைக் காணும்போது மின்சார வாரியத்தின் நிதிநிலைமை தமிழக அரசின் தலையிலேயே மொத்தமாகக் கைவைத்துவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்து வருகிறது. ஆகவே, இந்த மின் வாரியத்தின் செயல் முறைகள் ஆட்சியில் இருப்பவர்களுக்கும் சரி, பொது மக்களுக்கும் சரி, மகிழ்ச்சி ஊட்டுவதாக இருக்க முடியாது என்பதை மனச்சாட்சி உடையவர் எவரும் மறுக்க முடியாது. இந்த நஷ்டங்களுக்குக் காரண காரியங்களை ஆராய்கையில் குறிப்பாக ஒன்று கண்ணை உறுத்தத்தான் செய்கிறது. அதுதான் லைன் லாஸ். வழியிலே ஏற்படுகின்ற நஷ்டம். அது மட்டும் 2,397 மில்லியன் யூனிட் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது, உற்பத்தி ஆகும் மொத்த உற்பத்தித்திறனில் 18,65 சதவிகிதம் வழியிலே ஏற்படுகின்ற நஷ்டம். அந்த வழி நஷ்டத்தை ஈடுகட்ட அல்லது தடுத்து நிறுத்த அரசு என்ன செய்யப் போகின்றது என்றுதான் புரியவில்லை. ஆனால், குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், இத்தகைய மின் நஷ்டங்கள் அரசினுடைய கவனத்திற்கோ, அல்லது மின் வாரியத்தின் கவனத்திற்கோ வரவில்லை என்று சொல்ல முடியாது.

அண்மையிலே கூட பல பத்திரிகைகளிலே புகைப்படம் எடுத்து போடப்பட்டு இருந்தது. குறிப்பிட்ட ஒரு விழாவிற்கு, ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு நேரடியாக தெரு விளக்கிலிருந்து மின்சாரம் எடுக்கப்பட்டிருந்தது. ஆனால், செய்தித்தாள்களில்,

---

@ 277 முதல் 308ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

எடுக்கப்பட்ட விதத்தைப் பற்றி 'போட்டோ' தான் வந்ததே தவிர, இதுவரை அது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டதா, என்ன என்பதைப் பற்றி யாருமே தெரிவிக்கவில்லை.

ஒன்றை மட்டும் நான் இங்கு உணர்த்தக் கடமைப்பட்டிருக் கிறேன், அது யார் செய்த தவறாக இருந்தாலும் சரி, அது மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தவறு அல்ல, எந்தக் கட்சியாக இருந்தாலும், இதுபோன்ற முறைகேடுகளை வளரவிடுவது, ஊக்குவிப்பது நல்லது ஆகாது; ஆரோக்கியமான அரசியலாக இருக்கமுடியாது, ஆட்சி வேறு. கட்சி வேறு என்ற மனப்பான்மையிலே இருந்து இத்தகைய தவறுகளைக் கண்டித் தால்தான் தமிழகம் உருப்படும் என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், திட்டங்களை நிறைவேற்றுவதைப் பார்க்கையில்' I can say that there is inordinate delay அளவு கடந்த கால தாமதம் ஏற்பட்டு வருகின்றது. இத்தகைய காலதாமதத்தின் காரணமாகத்தான் பெரும்பாலும் உத்தேச மதிப்பீட்டிற்கும், உண்மை மதிப்பீட்டிற்கும் இடையே வேறுபாடு ஏற்படுகின்றது. இந்த நிதிநிலை அறிக்கையை நாம் கருத்திலே கொண்டு பார்த்தால், 1974-லே சேர்வலாறு நிலையத்திற்கான மதிப்பு போடப்பட்டது. அப்போது ரூ. 8.35 கோடி உத்தேசச் செலவு என்று கணக்கிடப்பட்டது. ஆனால் அந்தத் திட்டம் இன்றுவரை பூர்த்தி பெறவில்லை. இன்று கடைசி நிலவரப்படி அதனுடைய அனுமானம் ரூ. 39.43 கோடி. ஆக, ரூ. 8.35 கோடியிலே முடிந்திருக்கக்கூடிய திட்டம், நாள் கடந்து செய்யப்பட்டதன் காரணமாக இன்று ரூ. 39 கோடியை எட்டியிருக்கிறது, ஏறத் தாழ 5 மடங்கு செலவுத் தொகை ஏற்படுகிறது. இத்தகைய திட்டங்களை உடனடியாக செயல்படுத்துவதன் மூலமாகச் செலவுகளைக் குறைக்கமுடியும். அதே நேரத்தில், மின் உற்பத்தியையும் அதிகரிக்க முடியும்.

அதேபோல், காடம்பாறை திட்டத்தை எடுத்துக் கொண்டாலும், 1973-லே ........

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறும் திட்டம் ஏற்கனவே முடிக்கப்பட்டு, மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மன்னிக்கவேண்டும். எங்களுக்குக் கொடுக்கப்பட்ட அறிக்கையை வைத்துத்தான் நாங்கள் விவாதம் செய்யமுடியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கொடுத்து இருக்கும்போதே, ஒரு 'சப்ளிமெண்டரி' அறிக்கையைக் கொடுத்து இன்னின்ன திட்டங்கள் பூர்த்தி அடைந்து விட்டன, செயல்பட்டுவிட்டன என்பதைத் தெரிவித்து இருந்தால், இந்த நிலை எனக்கும் ஏற்பட்டு இருக்காது. இடையிலே விளக்கம்



கூறவேண்டிய நிலை அமைச்சருக்கும் ஏற்பட்டிருக்காது. இங்கு இருப்பது, '......at the latest cost of Rs. 39.43 crores....'' அதை வைத்துத்தான் இங்கே பேசுகிறோம். அதே போல், சாத்தனூர் புனல் மின் நிலையத்தை எடுத்துக் கொண்டால் ரூ. 5.3 கோடியிலே முடிக்கப்படவேண்டிய திட்டம் தற்போது ரூ. 10.46 கோடியாக ஆகி இருக்கின்றது என்று இருக் கின்றது. இவ்வாறு திட்டங்களை உடனடியாகச் செயல படுத்தாத காரணத்தினால் செலவுத் தொகை அதிகரித்துக் கொண்டே போகின்றது. இதன் காரணமாக அரசுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்படுகின்றது. இதற்கான காரண காரியங்களை, ஏன் காலதாமதம் என்பதைப் பார்த்தால், அதைப்பற்றி இந்த அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதிலே குறிப்பிடுகிறார்கள். பிப்ரவரி மாதம்— 1968 ஆம் ஆண்டிலே தொடங்கத் திட்டமிடப்பட்ட 'சோழட்டிப்புழா' திட்டமானது கேரள மாநில அரசின் சம்மதத்திற்காக, ஒப்பு தலுக்காகக் காத்திருக்கிறது என்று. விந்தையாக இருக்கிறது. அது 1968. இப்பேது 1986; 18 ஆண்டுகளாக ஒரு திட்டமானது ஒரு அண்டை மாநில அரசின் சம்மதத்திற்காகக் காத்து இருக் கிறது என்றால் அதை உடனடியாகச் செயல்படுத்த அரசு ஏன் முன் வரவில்லை என்றுதான்......

(முற்பகல் 10—40)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1986—87 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை என்கிற புத்தகத்தில் பக்கம் 7-ல் ''சேர்வலாறு புனல் மின் திட்டம் 20 மெ. வா. திறன் கொண்டது 20—3—1986-ல் செயல்படத் தொடங்கிவிட்டது'' என்று எழுதப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கை காலையில்தான் அவையில் வைக்கப் பட்டிருக்கிறது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : உறுப்பினர்களுக்குப் போதிய கால அவகாசம் கொடுக்கப்படுவதில்லை என்று ஏற்கெனவே சொல்லப் பட்டிருந்தாலும்கூட இன்று காலையில் அறிக்கையை வைத்துவிட்டு நாங்கள் பார்க்கவில்லை என்று சொல்வது எப்படி?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்களின் ''பேச்சு'' மட்டும்தான் இன்றைக்கு வைக்கப் பட்டிருக்கிறது. மற்றவை ஏற்கெனவே கொடுக்கப் பட்டிருக்கின்றன. (குறுக்கீடுகள்) அந்த அறிக்கையில் 10, 20 பக்கங்கள்தான் இருக்கின்றன. அதைப் படித்திருக்கலாம். இதைப் போய்ப் பெரிதாகச் சொல்ல வேண்டியதில்லை. மனமிருந்தால் மார்க்கம் உண்டு.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : அவையில் முன்னதாகவே வைக்காமல் உறுப்பினர்கள்மீது குறை சொல்லக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் சொன்னீர்கள் என்று அமைச்சர் அவர்கள் தவறைத் திருத்திவிட்டார்கள். இரண்டும் ரெக்கார்டில் இருக்கிறது. மேலே பேசுங்கள்,

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: அதைப் போலவே அப்பர் அமராவதி திட்டமானது ஜனவரி, 1972-லிருந்து காத்துக் கொண்டிருக்கிறது. 1982 ஆம் ஆண்டு அல்ல, 1972 ஆம் ஆண்டு. கருநாடக—கேரள அரசுகளுக்கு எழுதப்பட்டு அவர்களுடைய சம்மதத்திற்காகக் காத்திருக்கிறது. அதைப் போலவே ஷண்முகாநதித் திட்டம் 1972 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து இருக்கிறது. அடுத்து சின்னார்—சித்தார் டைவர்ஷன் திட்டம் 1970 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து காத்திருக்கிறது. அக்காமலை திட்டம் 1975 ஆம் ஆண்டு ஜூலையிலிருந்து காத்திருக்கிறது. இப்படி நீண்டகாலமாக ஒப்புதல் கிடைக்கவில்லை, அனுமதி கிடைக்கவில்லை என்ற காரணத்தால் இந்தத் திட்டங்களை காலந்தாழ்த்திக் கொண்டே போவதால் அரசுக்குப் பொருள் இழப்பு ஏற்படுவதுடன் மின் உற்பத்தியும் குறிப்பிட்ட இலக்கை அடைய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே தயவுசெய்து உடனடியாக இந்தத் திட்டங்களுக்கான அனுமதியைப் பெறுவதற்குரிய முயற்சிகளில் மின்வாரியத் துறையும் அரசும் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மின்வாரியத்தின் சில நடைமுறைச் செயல்கள் காரணமாகப் பொதுமக்கள், குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஒரு கிணற்றிலிருந்து ஒரு விவசாயி தனக்கு உரிமையான மற்றொரு கிணற்றிற்கு சர்வீசை மாற்றி மின் இணைப்பை வாங்குவது என்றால் குறைந்தது 6 அல்லது 8 மாத காலம் ஆகிறது என்பதோடு மட்டுமல்லாமல் ஏராளமான பொருட்செலவும் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் தவிர்க்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே மதுரை மாவட்டத்தில் இன்னும் குறிப்பாக சிவகாசி போன்ற பகுதிகளில் 3 எச். பி. எலெக்ட்ரிக் மோட்டார் பம்ப் போடுகிறவர்களுக்கு ஒரு கண்டிஷன் போடப்பட்டுள்ளது. என்ன அந்த நிபந்தனை என்றால் விவசாயிகள் 3 குதிரைத் திறன் கொண்ட பம்ப் செட் போட்டாலும்கூட 10 ஆண்டுக்காலத்திற்கு 5 குதிரைத் திறனுக்கான கட்டணத்தைச் செலுத்தவேண்டும். அதாவது குதிரைத் திறன் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 75 என்று குறிப்பிட்டு



கட்டணம் செலுத்த வேண்டும் என்று மின்வாரியம் சொல்லுகிறது. அதாவது 10 ஆண்டுக் காலம் கியாரண்டி பீரியட் என்ற அடிப்படையில் இத்தகைய ஒப்பந்தம் செய்யப்படுகிறது. ஆனால், இந்த ஒப்பந்தக் காலம் பூர்த்தியடைந்த பிறகும்கூட ''ஒப்பந்தக் காலம்தான் பூர்த்தியடைந்துவிட்டதே இனிமேல் நான் உபயோகப்படுத்துகிற குதிரைத் திறனுக்குத்தான் கட்டணம் செலுத்துவேன்—அதாவது குதிரைத் திறன் ஒன்றுக்கு ரூ. 75 வீதம் மட்டுமே என்னிடமிருந்து வசூலிக்க வேண்டுமென்று'' விவசாயி விண்ணப்பித்தாலும் கூட ஆண்டுக் கணக்கில் இன்னும் பழைய அடிப்படையிலேயே 5 குதிரைத் திறனுக்குக் கட்டணத்தை வசூலித்து வருகிறார்கள். உதாரணமாக மேலவை உறுப்பினராக இருந்த சகோதரி திருமதி ஜெயலட்சுமி அவர்களுக்கே இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றால் மற்ற சாதாரண விவசாயிகளின் நிலைமையை மாண்புமிகு. அமைச்சர் அவர்கள் சற்று எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே மின் இணைப்பு கேட்டால் ரெட் நோட்டீஸ் என்று பெயர்—3 மாத காலத்திற்குள் அதற்குத் தேவையான மின் உபகரணங்களை வாங்கி வைத்து மின்சார வாரியத்திற்குத் தகவல் கொடுத்தால் இணைப்புக் கொடுக்கப்படும். ஆனால், இந்த மோட்டார் பம்பு முதலியவை உடனடியாகக் கிடைத்தால் விவசாயிகள் வாங்க தயங்கப்போவதில்லை. சில காரணங்களால் ஒருகால் காலதாமதம் ஏற்படின் அதை மின்சார வாரியத்திற்குத் தெரியப்படுத்தி, 15 நாட்களுக்குத் தவணையை நீட்டித்துக் கொடுங்கள் என்று கேட்டாலும் உடனே அதை ரத்து செய்துவிடுகிறார்கள். எனவே இது குறித்து அமைச்சர் அவர்கள் கலந்து பேசி 15 நாட்களுக்கு அல்லது 20 நாட்களுக்கு கிரேஸ் பீரியட் என்று சொல்லுவார்களே அந்தப் போல தரலாம். எத்தனையோ இலட்சக்கணக்கான ரூபாய் கட்ட வேண்டிய சேல்ஸ்—டாக்ஸ், இன்கம்—டாக்ஸ் ஆகியவற்றுக்குக்கூட கிரேஸ் டைம் கொடுக்கிறார்கள். அதைப் போலவே ஏழை விவசாயிகளுக்கு மின் உபகரணங்கள் வாங்கிக் கொடுக்க 15 அல்லது 20 நாட்கள் தவணையை நீட்டிப்பதால் எந்தவிதமான நஷ்டமும் அரசுக்கோ அல்லது மின் வாரியத்திற்கோ ஏற்படாது. ஆகவே மனிதாபிமானத்துடன் அமைச்சர் அவர்கள் இதைக் கருத்திற்கொண்டு முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல மின் கட்டணங்களைச் செலுத்துவதில் சில பிரச்சினைகள் புதிது புதிதாக எழுகின்றன. உதாரணமாக, என்னுடைய தொகுதிக்கு அடுத்த தொகுதி பில்லூர். பில்லூருக்கும் கலசப்பாக்கத்திற்கும் இடையே 3 கிலோமீட்டர் தூரம் உள்ளது. இப்போது பில்லூரைச் சேர்ந்த கிராம மக்கள் தங்கள் மின் கட்டணத்தைச் செலுத்த நாயுடுமங்கலத்திற்குச் செல்லுகிறார்கள். அதற்காக அவர்கள் எட்டு கிலோமீட்டர்கள்

செல்ல வேண்டும். ஆகவே, விவசாயிகளுக்குள்ள இத்தகைய சிரமங்களைக் குறைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நெய்வேலி மின் திட்டத்திலும், தூத்துக்குடி மின் திட்டத்திலும், மேட்டூர் மின் திட்டத்திலும் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் திருவாரூரில் உள்ள மின் நிலையத்திற்கு வந்து அங்கிருந்து கும்பகோணத்திற்கு வழங்கப்படுகிறது. திருவண்ணாமலைக்கு வழங்கப்படும் மின்சாரம் ஈரோட்டிலிருந்து சிங்காரப்பேட்டைக்கு வந்து அங்கிருந்து வழங்கப்படுகிறது. அதற்குப் பதிலாக ஆடுதுறை வழியாக கும்பகோணத்திற்குத் தனி லைன் போட்டு சப்ளை செய்தால் இவ்வட்டாரத்தில் அடிக்கடி ஏற்படும் மின் தட்டுப்பாடும், பெருந் தொல்லைகளும் நீக்கப்படும். சிங்காரப்பேட்டைக்குப் பதில் ஈரோட்டிலிருந்து திருவண்ணாமலைக்குத் தனியாக லைன் இழுத்து அதன் மூலம் மின் இணைப்புக் கொடுத்தால் மக்களுக்கு நலமாக இருக்கும். கும்பகோணம், திருவண்ணாமலை போன்ற பகுதிகள் விவசாயத்தை நம்பியிருக்கின்ற பகுதிகள். இங்கெல்லாம் மின்சார மோட்டார் இணைப்புக்காக மனு கொடுத்தால் ஆண்டுக் கணக்கில் காத்திருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இத்தகைய குறைபாடுகளைப் போக்கி உடனடியாக விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கும்பகோணம் ரூரல் எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷனுக்குக் கிடைக்கவேண்டிய மத்திய அரசின் நிதியுதவி தமிழக அரசின் மெத்தனத்தால் சுமார் ஒன்றரை ஆண்டுகளாக முடங்கிக் கிடக்கிறது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கையொப்பமிட்டு அந்தக் கோப்பினை உடனடியாக அனுப்பினால் கும்பகோணம் ரூரல் எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷனுக்குக் கிடைக்க வேண்டிய மத்திய அரசின் நிதியுதவி உடனடியாகக் கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஏற்கெனவே 15 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன் :** முடித்துக்கொள்கிறேன். மற்ற நண்பர்களுடைய தொகுதியையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்த நேரத்திலே நீங்கள் பேசி முடித்துவிடலாம்.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன் :** முதலிலே நான் குறிப்பிட்டபடி இந்த இலாக்காவானது அரசாங்கத்திற்கு அடங்காத துறையாக இருந்து வருகிறது என்பதை மீண்டும் நினைவூட்ட வேண்டிய நிலை இருக்கிறது. ஏனென்றால் மற்ற அரசுத் துறை அனைத்திற்கும் ஒரு சேர்மென், நான்-அஃபிஷியல் சேர்மென் இருப்பார்.



மானேஜிங் டைரக்டர் அதிகாரியாக இருப்பார். ஆனால் என்ன காரணத்தாலோ தெரியவில்லை. இந்தத் துறைக்கு மட்டும் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி இருந்து வருகிறார். அவர் * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்தக் கடைசி வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மாதிரி தனிப்பட்ட நபர்களை விமர்சிக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன் :** தனிப்பட்ட நபர்களை விமர்சனம் செய்வது என்னுடைய நோக்கமல்ல. ஒரு குறிப்பிட்ட பதவியில்......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** * * * என்று சொல்லக்கூடாது. ஆகவே நான் பேசியது உட்பட அந்த வார்த்தைகளை நீக்கிவிடுகிறேன்.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த அளவிற்கு மின்சார வாரியத் தலைவரின் நடவடிக்கை ஒரு அதிகாரியின் செயலாக இல்லாமல் இருக்கிறது என்பதைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 10-50)

ஏனென்றால் ஏற்கெனவே மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினையை இதே மன்றத்திலே கொண்டு வந்திருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 'பெண்டிங்' ஆக இருப்பது பற்றி அவையிலே விமர்சிக்கக்கூடாது. அது பேரவைத் தலைவர் அவர்களிடம் இருக்கிறது.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது குறித்த விவாதத்தில் நான் ஈடுபட விரும்பவில்லை. என்றாலும் கூட அந்த சுற்றறிக்கையின் நகல் எங்களுக்கும் கிடைத்திருக்கிறது. நான் கூறுவதெல்லாம் அந்தக் குறிப்பிட்ட அதிகாரியின்மீது சென்னை உயர்நீதி மன்றத்திலே..

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, சென்னை உயர்நீதிமன்றம் மின் வாரியத் தலைவர் மீது சொன்ன தீர்ப்பின்மீது உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. ஆகவே அந்தப் பற்றி பேசாமல் இருப்பது நல்லது. (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

Mr. DEPUTY SPEAKER : It is appaled against, If the appeal is pending in the Higher Court, the matter should not be referred to.

Thiru. A. S. RAVINDRAN : What I want to say is this. Certain observations which are admitted by the Chairman himself can be mentioned here. That will not be affected by sub judice. In any way it is not going to affect the merrits of the appeal. He has filed an affidavit stating certain facts. But, later on, it had been accepted by him that they are all mistakes and that he has signed the affidavit without going through It. This is an admission by him. I am not going into the merrits of the case.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எப்படி இதையெல்லாம் அவையில் சொல்லமுடியும் ? ஸ்பீக்கர் அனுமதித்தால்தான் 'அபிடவிட்' எல்லாம் இங்கே காண்பிக்க முடியும். அந்த அதிகாரியைக் கூப்பிட்டு இங்கே விசாரிக்க முடியாது. You are relying on an affidavit filed by the Chairman. (குறுக்கீடு) நீங்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறீர்களா ? பத்திரிகையில் போட்டதையெல்லாம் வைத்துக்கொண்டு பேசினால் சபையை நடத்த முடியாது. பேப்பரில் எழுதுவதை எல்லாம் பேசமுடியுமா ? (குறுக்கீடு) அதற்குப் பொறுப்பு ஏற்றுக் கொள்ளமுடியுமா? (குறுக்கீடு)

திரு. வி. பி. சிந்தன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்பைப்பற்றி நான் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தை மாண்புமிகு சபாநாயகர் அவர்களிடம் கொடுத்தபோது, அவையிலே இந்த விவாதம் வர இருக்கிற காரணத்தால், அந்த நேரத்திலே அந்தத் தீர்ப்பைப் பற்றிக் குறிப்பிடலாமென்று சபாநாயகர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதிலே தவறு இல்லை. உச்சநீதிமன்றத்தில் அப்பீல் செய்திருக்கிறார்கள். எனவே ஆட்டமேட்டிக்காக சப்-ஜுடிஸ் ஆகிவிடும், அதைப்பற்றி சபையிலே விவாதிக்க முடியாது என்பதை கன்வென்ஷன்-ஆக ஃபாலோ பண்ணி வருகிறோம். The appeal is pending before the Supreme Court. (குறுக்கீடு)

THIRU. A. S. RAVINDRAN . I am not going into the merits of the judgement.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தப் பேரவைக்கும், மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கும் தகவலுக்காகச் சொல்ல விரும்புகிறேன். சென்னை உயர்நீதி மன்றம் மின் வாரியத் தலைவர் மீது சொன்ன தீர்ப்பை எதிர்த்து, S.L.P.



has been numbered as 14311 of 1986 என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் சொன்னபோதும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னபோதும், இந்த வழக்கு பதிவு செய்யப்படாமல் இருந்திருக்கலாம். இப்போது பதிவு செய்யப்பட்டிருப்பதை இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திரு. வி. பி. சிந்தன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே உறுப்பினர்களுடைய உரிமையைப் பாதுகாக்கும் பொறுப்பு உங்களுக்கு உண்டு என்பதை மீண்டும் நான் நினைவுபடுத்துகிறேன். ஒரு அப்பீல் நீதிமன்றத்தில் இருந்தாலும், அது சப்-ஜுடிஸ், என்றால், அந்தத் தீர்ப்பு பற்றி பேசக்கூடாது என்று பாராளுமன்றத்தில்கூட முடிவு இல்லை. சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் இருக்கும்போது, வழக்கு பற்றி பேச அங்கே அனுமதிக்கிறார்கள். நீதிபதியின் நோக்கத்தைக் குறிப்பிட்டோ அல்லது மற்ற தகவல்களைச் சொல்லியோ பேசக்கூடாது. சுப்ரீம் கோர்ட்டிலே அப்பீல் செய்திருப்பதாலேயே, உயர்நீதி மன்றத்தில் இப்படி தீர்ப்பு வந்திருக்கிறது என்று சொல்லுவது குற்றமாகாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வழக்கில் உள்ள மெரிட்ஸ், டீமெரிட்ஸ் பற்றி இங்கே விவாதித்தால், கோர்ட் விவாதிப்பதற்கு முன்னாலே இங்கே விவாதித்தால் ... (குறுக்கீடு) வழக்கிலே இந்த நியாயம் இருக்கிறது, அந்த நியாயம் இருக்கிறது என்று இங்கே விவாதிக்க முடியாது. (குறுக்கீடு) பல தடவை இதைச் சொல்லி இருக்கிறோம். (குறுக்கீடு) அபிடவிட்டில் ஒரு குறிப்பிட்ட அதிகாரி தவறை ஒத்துக்கொண்டிருக்கிறார் என்று திடீரென்று சொல்லுகிறார். அபிடவிட்டில் அப்படி இருக்கிறதா, இல்லையா என்பது எப்படி எங்களுக்குத் தெரியும்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : ஜட்ஜ்மெண்டில் ஜட்ஜ் சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதை விட்டு, வேறு விஷயத்தைச் சொல்லுங்கள்,

திரு. ஆர். ரெங்கசாமி : அப்பீல் பண்ணிவிட்டால் பேச முடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்களும் சொல்கிறார்.

THIRU. A. S. RAVINDRAN : Mr. Deputy Speaker, Sir, you, as a lawyer and I as a lawyer, know it well.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் . இங்கே கேஸ் மெரிட்டைப் பற்றி விவாதிக்கமுடியாது, பழையபடி 'மெரிட்'ல்-பேசப் போகின்றார்கள்.

[1986 நவம்பர் 19

THIRU. A. S. RAVINDRAN : I am mentioning a fact which is admitted by the party himself.

Mr. DEPUTY SPEAKER : Where is the proof for admission? என்னிடம் ஏற்கெனவே காண்பிக்கவில்லை. All of a sudden பேப்பரில் வந்திருப்பதைச் சொல்கிறார். குறைந்தபட்சம் உறுப்பினர் ரவீந்திரன் அவர்கள் ஏற்கெனவே காண்பித்திருக்க வேண்டும். நான் இப்போது Allow பண்ண முடியுமா ? நான் எல்லோரையும்தான் பாதுகாக்க வேண்டும். ஒரு நடைமுறையை வைத்துக்கொள்ளுங்கள். உங்களுக்காக என்று அல்ல, அதிகாரிகளுக்காக என்று அல்ல விதிமுறைகளைப் பின்பற்றி செய்யுங்கள்.(குறுக்கீடு)திரு. சிவராமன் அவர்கள் உட்காருங்கள். திரு ரவீந்திரன் அவர்கள் பேசட்டும்.

திரு. ஏ. எஸ் ரவீந்திரன், நன்றி. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இவ்வளவு தூரம் கூறிய பிறகு இதைப் பற்றி அதிகமாகப் பேச விரும்பாது, அதில் எனக்கு கருத்து உடன்பாடு இல்லாத காரணத்தினாலும், இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன்.

மின்சாரத் துறை செயல்முறைகளைப் பற்றி பேச உரிமையுண்டு. இந்த காரணத்திற்காகச் சொல்லிக்கொள்கிறேன். மறைந்த அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு என்று ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தார்கள்: ஆனால் இன்று மின்வாரியத்திலே மேற்படி கொள்கை நிறைவேறாத வகையில் அவர்களுடைய சங்கத்தின் பதிவினை நீக்கியிருக்கின்றார்கள்,

அதுபோலவே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகின்ற இந்த நேரத்தில், பல வகைகளிலும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுத்தரவேண்டும் என்று இருக்கின்ற இந்த நேரத்தில் கிட்டத்தட்ட 25 ஆயிரம் பேர்களை நீக்கியிருக்கின்றார்கள் இந்த மின் வாரியத் துறையில், விபத்தின் காரணமாக அகால மரணம் அடைந்தால் அவர்கள் வாரிசுகளுக்கு வேலை தரவேண்டுமென்பது அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனிதாபிமான அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும், ஆனால் இன்று அது புறக்கணிக்கப்படுகிறது, அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர் யாரேனும் ஒரு தனிநபர் கம்பெனியில் வேலைசெய்தாலும் இறந்தவரின் வாரிசுக்கு வேலையில்லை என்ற நிலை வந்திருக்கின்றது, இதே துறையிலே வேலைசெய்து வந்தால்கூட, ஏற்கெனவே அவருடைய நெருங்கிய வாரிசு இதே துறையிலே பணியாற்றுவதால் வேலைகொடுக்க முடியாது என்று கூறலாம். ஆனால் தனி நபர் நிறுவனத்திலே பணியாற்றினால்கூட, யாரேனும் ஒரு வாரிசுக்கு, அந்த நபருக்கு மின் வாரியத்தில் பணி கொடுக்கமுடியாது என்ற நிலை இருக்கின்றது. அதை தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து தகுந்த உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1986 நவம்பர் 19] [திரு. ஏ. எஸ். ரவீந்திரன்]

அதுபோல் அரசினுடைய ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கருத்து கணவன் மனைவியைக் கூடுமான வரையில் உத்தியோகத்தின் காரணமாக பிரியக்கூடாது என்பது, ஆனால் மின்வாரியத்தில் இந்த நடைமுறை ஏற்றுக்கொள்ளப்படவில்லை, மேலும் 15 வருடமாக நடைமுறையில் இருந்துவந்த மாற்றக்கொள்கையை ரத்து செய்துவிட்டு, இன்று சுமார் 6,000, 7,000 பேர்கள் 300 கிலோ மீட்டருக்கு அப்பால் மாற்றப்பட்டிருக்கிறார்கள், திருவண்ணாமலையிலிருந்து உடுமலைப்பேட்டைக்கு மாற்றியிருக்கிறார்கள், இவ்வாறு 300, 400 கிலோ மீட்டர் தூரத்திற்கு மாற்றுவது என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல, அதுவும் இந்த மாறுதல்களை கல்வி ஆண்டின் தொடக்கத்தில் செய்தால் நலமாக இருக்கும், நினைத்தபோதெல்லாம் மாறுதல் செய்வதைப் பற்றி யோசிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

அதுபோலவே, மின்வாரியத் துறையைச் சேர்ந்த ஊழியர்கள் மாலை நேரக் கல்வி பயில்வதைக்கூட ஒரு தவறாகக் கொண்டு அவர்களுக்கு ஷோ காஸ், எக்ஸ்பிளனேஷன், மெமோ என்றெல்லாம் கொடுக்கிறார்கள், அது முறையானதுதானா ? அவர்கள் அறிவை வளர்த்துக் கொள்ளச்செய்யும் காரியத்திற்குக்கூட இவ்வாறு தண்டனை கொடுப்பது, விளக்கம் கேட்பது என்பதெல்லாம் முறையானதுதானா என்று கேட்கிறேன்,

அதுபோலவே தொழிலாளர்களுக்குச் செய்யவேண்டிய சிறு சிறு சலுகைகள், பதவி உயர்வுகளுக்குக்கூட அவர்கள் நீதிமன்றம் செல்லவேண்டியிருக்கின்றது. ஒரு உதாரணம் சொல்லி முடித்துக்கொள்கிறேன். ஒரு கணக்காயர் வேலையிலிருந்து தானாக சம்மதம் தெரிவித்து, முறையாக வரவேண்டிய ஓய்வு காலத்திற்கு முன்னாலேயே விலகிவிட்டார்.

(முற்பகல் 11-00)

திரு. வெங்கடரமணன் என்கிற நபர் திருவண்ணாமலையில் சிப் என்ஜினியருக்கு பி. ஏ.-ஆக இருந்தவர். எனக்குத் தெரிந்தவர். அவரைக் கேட்டேன், இன்னும் நீங்கள் 5 ஆண்டுக்காலம் பணியாற்றலாமே என்று. உண்மைதான் இன்னும் 5 ஆண்டுக்காலம் பணியாற்றலாம், ஆனால் மகளின் திருமணத்திற்குப் பணம் இல்லை, வேலையை விட்டு நின்று விட்டால் பி.எஃப்., கிராஜுவட்டி கிடைக்கும், ஆகவே ராஜிநாமா செய்து விட்டேன் என்றார். இப்படிப்பட்ட சலுகைகள் எல்லாம் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பிறகுதான் கிடைக்கும். அவர் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பிறகும் இன்னும் அவருக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் ஒன்றும் கிடைக்கவில்லை. அது மட்டுமல்ல, வேலையிலிருந்து அவரை விடுவித்த பிறகு, ஒரு மாதத்திற்குப் பிறகு அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி செய்யக் கூடாது என்பது நீதிமன்றங்களாலும், தொழிலாளர் சங்கங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. ஒருவர் பதவியில் இருக்கிறவரையில்தான் ஒழுங்கு நடவடிக்கை

எடுக்க முடியும். பதவியில் இல்லாத நிலையில் ஒருவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. இருந்தும் அந்த நபருக்கு இது நாள்வரை பி.எப்., கிராஜுவிட்டி போன்ற ஓய்வுகால பலன்கள் கிடைக்காததால் தன்னுடைய மகளுடைய திருமணமும் நடக்கவில்லை. இப்படி தன்னுடைய ஊழியர்களை ஏதோ அடிமைகளைப் போல நடத்தி, அவர்களுடைய அடிப்படை உரிமைகளைப் பறிப்பது போன்ற செயல்களைச் செய்வது ஒரு வாரியத்தின் தலைவருக்கு அழகல்ல. மீண்டும் என்னுடைய கருத்தை இங்கே வலியுறுத்துகிறேன். தயவுசெய்து மற்ற துறைகளில் இருப்பதுபோல இதற்கும் அரசு பற்றில்லாத ஒருவரைத் தலைவராக போட்டு, ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரை மானேஜிங் டைரக்டராகபோட அரசு ஏற்பாடு செய்யவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இராமலிங்கம் அவர்களைப் போட்டாலும் எனக்கு ஆட்சேபணை இல்லை. கடைசியாக, நாகப்பட்டினத்தில் அனல் மின் நிலையத்தையும் சாத்தனூரில் புனல் மின் நிலையத்தையும் அமைக்கின்ற திட்டங்களைப் பொறுத்த வரையில் உடனடியாக அவற்றைக் கொண்டுவருவதற்கான வேலைகளைத் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன்.

*திரு. கே. குப்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1986—87 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். பொருளாதார நெருக்கடி மின்வாரியத்திற்கு இருந்தபோதிலும்கூட தூத்துக்குடி, எண்ணூர் அனல் மின் நிலையங்களைப் பொறுத்தவரையில் அவற்றின் செயல்திறன் குறித்து நல்லமுறையில் செயல்பட்டதற்காக மைய அரசிடமிருந்து பரிசு பெற்றிருப்பதையும் நாம் பார்க்கிறோம். அதுபோல் 1985—86 ஆம் ஆண்டில் அரசின் இலக்கினை அடைந்திருப்பதையும், மோட்டார் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதைப் பொறுத்தவரையிலும், குடிசைகளுக்கு ஒரு மின் இணைப்பு திட்டத்தை நடைமுறைப் படுத்துவதைப் பொறுத்தவரையிலும் அரசின் இலக்கினைத் தாண்டியிருப்பதற்காக நான் மனதாரப் பாராட்டுகிறேன். ஆனாலும்கூட இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பிலே 7-வது ஐந்தாண்டுத் திட்ட முடிவில்கூட மின் பற்றாக்குறை இருக்கும் என்று கூறியிருப்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப் பட்ட நிலையில் மைய அரசாலே மின் உற்பத்தி செய்வதற்கான பல திட்டங்கள் இன்னும் அங்கீகாரம் இல்லாமல் காத்துக் கிடப்பதையும் நான் எண்ணிப்பார்க்கிறேன்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சுட்டிக்காட்டுகிறேன். அண்ணா மாவட்டம் பழனி பகுதியில் இருக்கிற ஷண்முகா நதி மின் உற்பத்தித் திட்டத்திற்கு இன்னும் மைய அரசின் அங்கீகாரம்



கிடைக்கவில்லை. காவிரி நீர்ப் பிரச்சினை இதிலே குறுக்கிடுகிற நிலை வருவதால் அதற்கான அங்கீகாரம் கொடுக்கவில்லை என்று அவர்கள் காரணம் சொல்கிறார்கள். இது கொடைக்கானல்—பழனி மலைத் தொடரிலே, மேற்கு தொடர்ச்சி மலைத் தொடரிலே இருக்கின்ற தமிழகத்தின் ஒரு பகுதியில் வருகின்ற நதி நீரைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்கின்ற திட்டமாகும். இப்படிப்பட்ட ஒரு திட்டத்தைத் தீட்டித்தான் தமிழக அரசு மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது. இதற்கும் காவிரி நீர் பிரச்சினைக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. கர்நாடகாவில் இருந்து வருகிற நதி நீரைப் பயன்படுத்தி, தடுத்து நிறுத்தி நாம் மின் உற்பத்தி செய்தால் ஒருவேளை அவர்கள் ஆட்சேபணை செய்வதில் அர்த்தம் இருக்கலாம். ஆனால் தமிழகத்தில் உற்பத்தியாகிற நதி நீரைத் தடுத்து நிறுத்தி நாம் மின் உற்பத்தி செய்ய முயலும்போது அதற்கு மைய அரசு ஏன் அங்கீகாரம் கொடுக்காமல் மவுனம் சாதிக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. எனவே, காவேரி பிரச்னையோடு சம்பந்தப்பட்ட பிரச்சினை என்று சொல்லி, இதுபோன்ற நல்ல திட்டங்களை அங்கீகரிப்பதிலே மைய அரசு காலதாமதம் காட்டுமானால் எதிர்காலத்தில் இன்னும் எத்தனை ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டாலும் மின் பற்றாக்குறை தமிழகத்திலே இருந்தே தீர வேண்டிய ஒரு சூழ்நிலை நிச்சயம் உருவாகும். அந்த வகையிலே கர்நாடகத்திலேகூட 1974-லே காவேரி உடன்படிக்கைக்கு மாறாக பல அணைகள் கட்டப்பட்டிருப்பதையும், பல, மின் உற்பத்தி நிலையங்கள் தொடங்கப்பட்டு இருப்பதையும் துணைத் தலைவரவர்களே, உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

மைய அரசினுடைய ஆட்சேபணைகளையும் பொருட்படுத்தாமல் அங்கே முனைப்பாக கர்நாடக அரசு வேலைகளை நடத்துகிறது. எனவே, மைய அரசு அங்கீகாரம் கிடைக்கவில்லை என்பதால் பல நல்ல திட்டங்கள்—மின் உற்பத்தி திட்டங்கள் தேங்கிக் கிடக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே, ஷண்முகா நதி போன்ற மற்றும் மைய அரசின் கிடப்பிலே இருக்கின்ற ஏழு மின் திட்டங்களை உடனடியாகச் செயல் படுத்துவதற்குத் தமிழக அரசு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இப்பொழுது பருவமழை, வடகிழக்குப் பருவமழையாக இருந்தாலும், தென்மேற்குப் பருவமழையாக இருந்தாலும் கடந்த பத்தாண்டுக் காலமாகத் தவறியே வருகிறது மழை போதாத நிலையே இருந்து வருகிறது. இந்த நிலையில் புனல் மின் நிலைய உற்பத்தி மிகவும் குறைவாகவே தமிழகத்திலே இருக்கிறது. அதுபோன்றே, நிலக்கரி சுரங்கங்கள் இருக்கின்ற இடத்திலேயிருந்து, தமிழ்நாடு மிகத்

[திரு. கே. குப்புசாமி] [1986 நவம்பர் 19

தொலைவிலே இருக்கின்ற காரணத்தால் நிலக்கரியைத் காலா காலத்துலே கப்பலிலே கொண்டு வருவதிலே காலதாமதம் ஏற்படுகிறது. கட்டணம் அதிகம் ஆகிறது. தரமான நிலக்கரியும் கிடைப்பதில்லை. இதனால் வெளிநாட்டிலேயிருந்து இறக்குமதி செய்யலாம் என்றால் அதற்கும் மைய அரசு அனுமதி கொடுக்க, இசைவை கொடுக்க அவ்வப்போது மறுத்து வருகிறது. இதனால் அனல் மின் உற்பத்தியும் தமிழகத்திலே குறைந்து வருகிறது என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, புனல் மின் உற்பத்தியும், அனல் மின் உற்பத்தியும் தொடர்ந்து குறைந்து வருகின்ற நிலையிலே புதிதாகத் தொடங்குகின்ற அணுமின் உற்பத்தி நிலையங்களைத் தமிழகத்திலே அதிகமாக ஏற்படுத்த தமிழக அரசு மைய அரசைத் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது, பாராட்டுகிறேன். இந்த முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு, வரவிருக்கின்ற அணுமின் உற்பத்தி நிலையங்கள் தமிழகத்திலே அதிகம் ஏற்படுவதற்குத் தமிழக அரசு தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் தங்கள் மூலமாகத் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பேட்டில், தனியாரோடு சேர்ந்து கூட்டுறவுத் துறையிலே மின் உற்பத்தி செய்கின்ற திட்டம் ஒன்றும் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே இங்கே இருக்கின்ற நிதி நெருக்கடி காரணமாக, தனியாரோடு சேர்ந்து, அங்கங்ரே கூட்டுறவுத் துறை மூலமாக மின் உற்பத்தி செய்ய முடியுமானால் அதைச் செய்வதற்குத் தமிழக அரசு முன் வர வேண்டும். இது ஒரு பாராட்டுக்குரிய திட்டம் என்று நான் கருத்து தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோன்று விவசாயிகளுக்குப் பகலிலே சில மணி நேரமும், இரவிலே சில மணி நேரமும் மின் விசை கொடுக்கப் படுகிறது. இரவிலே மின்சாரம் கொடுக்கப்படும்பொழுது அவர்களுக்குப் பயிர்கள் இருக்கின்ற நிலங்களில் விளக்குகளைப் போட்டுக் கொள்வதற்கு சலுகைகள் கொடுக்கப்பட்டாக வேண்டும். இருட்டு காலங்களில் தண்ணீர் கட்டுவதில் ஏற்படுகின்ற சிரமங்களைத் தவிர்க்கின்ற முறையில் பயிர்கள் இருக்கின்ற நிலங்களிலே அவர்களுடைய செலவிலே விளக்குகள் போட்டுக் கொள்கின்ற சலுகைகளை அவர்கள் பெற்றாக வேண்டும்.

அதேபோன்று மலைப் பகுதியிலே, குன்றுப் பகுதியிலே இருக்கின்ற பயிர் நிலங்களில் எல்லாம் காட்டு மிருகங்களிடமிருந்து பயிர்களைக் காப்பாற்றுகின்ற முறையிலேயும், அவர்கள் பயிர்கள் இருக்கின்ற நிலங்களிலே இரவு நேரங்களில் விளக்குகளைப் போட்டுக் கொள்வதில் மின் துறை சலுகைகள் காட்ட வேண்டுமென்றும் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



1986 நவம்பர் 19] [திரு. கே. குப்புசாமி]

அதே போன்று, பல இடங்களில் மின் பற்றாக்குறை காரணமாக மின் மோட்டார்கள் புகைந்து விடுகின்ற நிலைமைகளை நாம் பார்க்கிறோம். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவீந்திரன் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, மின் துறைக்கும், பொதுமக்களுக்கும் இப்பொழுது மிகப் பெரிய ஒரு இடைவெளி இருப்பதை யாரும் மறுத்துவிட முடியாது. ஒரு கம்யூனிகேஷன் கேப்பே இருக்கிறது. மற்ற துறைகளிலேயெல்லாம் மக்கள் குறை கேட்கின்ற நாள் இன்றைக்குச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உண்மையிலேயே மக்கள் குறைகளைக் கேட்டு நீக்குகின்ற ஒரு நிலைமை உருவாக்கப்பட வேண்டிய துறை ஒன்று இருக்குமேயானால், அது தமிழ் நாடு மின் வாரியம்தான். மாதம் ஒரு முறையாவது கோட்ட அளவிலாவது, துணைக் கோட்ட அளவிலாவது, வட்டார அளவிலாவது பொறுப்புள்ள மின் வாரிய அதிகாரிகள் மக்கள் குறை கேட்கிற நாளை ஏற்பாடு செய்து மக்களினுடைய குறைகளைக் கேட்டு அவற்றை நிவர்த்திக்கிற ஒரு நிலையை மின் வாரியம் உருவாக்க முன்வர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

டிரான்ஸ்பார்மர்களில் அடிஷனல் லோடு இருக்கின்ற இடங்களில்—லோடு இல்லாத இடங்களைப்பற்றிப் பிரச்சினை இல்லை, வேர் சர்வீஸ் கனெக்ஷன் கேட்கிறார்கள். அது கொடுப்பதிலே என்ன நஷ்டம் என்று எனக்குத் தெரியவில்லை. சில காலம் வேர் சர்வீஸ் கொடுத்தார்கள். மின் பற்றாக்குறை காரணமாக இப்பொழுது அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-10)

நான் சொல்லிக் கொள்வதெல்லாம் அடிஷனல் லோடு இருக்கிற டிரான்ஸ்பார்மர்களில் இந்த வேர் சர்வீஸ் கனெக்ஷன் கொடுப்பதிலே என்ன கஷ்டம்? அதே போன்று 5 ஹார்ஸ் பவர் மோட்டார் வைத்திருப்பவர்கள், 7½ ஹார்ஸ் பவர் கேட்டால், அதிலே அடிஷனல் லோடு இருந்தால், அடிஷனல் சாங்க்ஷன் கொடுப்பதிலே என்ன கஷ்டம் இருக்கிறது என்பது எனக்கு உண்மையிலேயே புரியவில்லை.

இப்பொழுதெல்லாம், மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவீந்திரன் எடுத்துச் சொன்னதைப் போலவே, ஒரு சாதாரண விவசாயி, ஏற்கனவே ஒரு கிணற்றிலே தண்ணீர் வற்றி விட்ட பொழுது, அதிலே இருக்கிற மோட்டாரை, புதிய கிணற்றுக்கு மாற்றலாம் என்று ஷிப்டிங் எழுதிக் கொடுத்தால், அதற்கு வருடக் கணக்கில் ஆகிறது என்பதை வேதனையோடு சொல்லியாக வேண்டும். இந்த நிலை ஏற்படுவதைத் தவிர்க்க நடவடிக்கைகளை மின்துறை எடுத்தாக வேண்டும். இந்நிலையில் விவசாயிகளுடைய சாதாரண பிரச்னைகளை நல்லமுறையிலே கேட்டு, உடனடியாகக் களைகிற நடவடிக்கைகளை மின்சார வாரியம் எடுக்குமானால் பொதுமக்களுக்கு மின் துறையின் மீது இருக்கிற அதிருப்தி போவதற்கான சூழ்நிலை உருவாகும்.

பொது மக்களைப் பொறுத்தவரையில், மின் துறை காவல் துறையைப் போல் செயல்படுகிறது என்ற அதிருப்தி, வெறுப்புணர்ச்சி அவர்களிடத்திலே உருவாகியிருக்கிறது என்பதை நான் மெத்தப் பணிவன்புடன் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

விவசாயிகளைப் பொறுத்தவரையில், விவசாயத்தோடு தொடர்புடைய ரூரல் இன்டஸ்ட்ரீசான, பட்டுப் பூச்சி, கோழி வளர்ப்பு, பால் பண்ணை போன்றவற்றை நடத்துகிறார்கள். ஒரு சாதாரண விவசாயி தோட்டத்திலே குடியிருக்கிறான். விளக்குகள் போட்டிருக்கிறான். அங்கே ஒரு ஹால் இருக்கிறது என்றால், அந்த ஹாலிலே இரண்டு பட்டுப் பூச்சி வளர்ப்புக் கூடையை வைத்திருந்தால் கூட, இன்டஸ்ட்ரியல் டாரிஃப் என்று சொல்கிறார்கள்.

பஞ்சாபிலே, அரியானாவிலே எல்லாம் விவசாயிகள் இத்தகைய ஆன்சிலரி இன்டஸ்ட்ரீஸ் போன்றவற்றிற்கு லைசன்சே வாங்க வேண்டிய அவசியம் இல்லை; அவர்களுக்கு மின் இணைப்பே, மின் சக்தியே இலவசமாகக் கொடுக்கப்படுகிறது; அல்லது அக்ரிகல்ச்சுரல் டாரிஃபில் கொடுக்கப்படுகிறது என்று நான் அறிகிறேன். ஆகவே விவசாயத்தோடு தொடர்புடைய பட்டுப் பூச்சி வளர்ப்பு, கோழி வளர்ப்பு, பால் பண்ணை போன்றவற்றிற்கும் இன்டஸ்ட்ரியல் டாரிஃப் என்பதை விட்டுவிட்டு, அக்ரிகல்சுரல் டாரிஃப் என்பதை வைக்க வேண்டுமென்றுதான் நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். காரணம் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது, இந்த நாட்டினுடைய முதுகெலும்பு விவசாயி என்று.

விவசாயத்தைப் பொறுத்தவரையில், எல்லா மாநிலங்களிலும் சரி, குறிப்பாக, தமிழகத்தில் விவசாயம் கட்டுப்படியான நிலையிலே இல்லை; விவசாய விளைபொருளுக்குக் கட்டுப்படியான விலை இல்லை. விவசாயம் இலாபகரமான தொழிலாக இல்லை. வேறு தொழிலுக்கு விவசாயி செல்ல வேண்டுமென்றால், அவனுக்குத் தொழில் தொடங்க மூலதனம் இல்லை. எனவே, விவசாயி கடன்பட்டு ஒரு மோட்டாரை வாங்குகிறான். மின் துறையிலிருந்து நோட்டீஸ் வருகிறது, இணைப்பு கொடுக்கிறோம், மோட்டார் வாங்கு என்று. மோட்டார் வாங்கி 3 ஆண்டுகளாகியும் இணைப்பு என்பது இப்பொழுது கனவாகி வருகின்ற நிலை கிராமங்களில் இருந்து வருகிறது. கடனைப் பெற்று, மோட்டாரை வாங்கி, ஆண்டுக் கணக்கில் மோட்டாரையும் இயக்க முடியாமல், கடனையும் கொடுக்க முடியாத நிலை கிராமங்களில் இருந்து வருகிறது என்பதை மின் வாரியத்தின் கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன்.





இப்பொழுது சர்வீஸ் கனெக்ஷனைப் பொறுத்தவரையில், சாதாரண கிணறு வெட்டுகிற மக்களுக்கு ஆர்டர் பிரகாரம் கொடுக்கிறார்கள். சில இடங்களிலே டியூப் வெல் போடுகிறார்கள். அங்கே தண்ணீர் ஏராளமாக வருகிறது என்றால், அங்கே ஆயில் இன்ஜின் வைத்துக் கொள்ள முடியாது : பக்கத்திலே ஒரு வறண்ட கிணற்றுக்குக் கொடுத்துள்ள கனெக்ஷனை ஷிப்ட்டிங் செய்வதென்றால் எளிமையான முறைகளைக் கையாளலாம் ; அல்லது நேரடியாகக் கூட அவர்களுக்கு சர்வீஸ் கனெக்ஷன் கொடுக்கிற முறைகளை பரிசீலிக்கவேண்டுமென்று நான் மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு ஆழ்குழாய்களுக்கு அதிகமான சலுகைகள் வேண்டுமென்று அங்கத்தினர்கள் இங்கே குரல் எழுப்புவதை உங்கள் மூலமாகத் தெரிவித்து, அதற்கு முன்னுரிமை கொடுக்க மின் வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு 10¾ இலட்சம் பம்ப் செட்கள் தமிழகத்தில் இருக்கின்றன. 1 இலட்சம் பேர்கள் இலவச மின்சாரம் பெறுகிறார்கள், என்ற தகவல் இருக்கிறது. அந்த இலவச மின்சாரத்தை வட்டாட்சியர் கொடுத்த சான்றிதழை வைத்துதான் கொடுத்து வந்தார்கள். இப்பொழுது மின்சார வாரியமே சிறு விவசாயிகளைத் தேர்ந்தெடுக்கிற நிலை உருவாகியிருக்கிறது. வாரியத்தினர் சென்று பார்க்கும்போது இரண்டு மாடுகள் இருந்தால் கூட, அவை பால் கறந்தால், வருடத்திற்கு ரூ. 2,000-க்கு மேல் வருமானம் வரும், ஆகவே, சிறு விவசாயி அல்ல என்று அவர்கள் கோடிட்டுக் காட்டி விடுகிறார்கள். எனவே, உண்மையிலேயே இதனாலே, பயன்பெறுகிற, இலவசமாக மின்சாரம் பெறுகிற, விவசாயிகள் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறார்கள். எனவே, ஏற்கனவே இருந்த, வட்டாட்சியர் மூலமாக அந்தச் சான்றிதழ் பெறுகிற நிலையை, மீண்டும் அறிமுகப்படுத்தி, அதன் அடிப்படையில், அவர்களுக்கு இலவச மின்சாரம் கொடுக்க துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்போது 'இன்ஸ்டால்மென்ட் பேசிஸ்' என்ற முறையில் இரண்டு தவணைகளில் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தி வருகிறார்கள். ஆனால் பருவ மழை தொடர்ந்து தவறி வருகிறது. அதனால் 'வாட்டர் லெவல் மிகவும் கீழே போய்க்கொண்டிருக்கிறது. சில கிணறுகளில் குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லை. இருந்தபோதிலும் மின்சாரக் கட்டணத்தை இரண்டு தவணைகளில் கட்டாயமாகச் செலுத்த வேண்டிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. உண்மையிலேயே வறண்ட கிணறுகள், தண்ணீர் வற்றிப்போன கிணறுகளாக இருந்தால். தண்ணீர் மிகவும் குறைவாக இருக்கிற கிணறுகளாக இருந்தால் அந்தக்

கிணறுகளுக்குப் பயன்படுத்துகின்ற மின்சாரத்திற்குச் சலுகை
காட்ட வேண்டும். இல்லை என்றால் விவசாயிகள் மிகவும்
பாதிக்கப்படுவார்கள். எனவே அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு
சலுகை காட்ட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்
கிறேன்.

இப்போது விவசாயிகளுக்கு மின்சாரத் துறையின் மூலமாக
பல்வேறு சலுகைகளை அளித்து வருகிறோம். கிட்டத்தட்ட
10.75 இலட்சம் பம்புசெட்டுகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன.
அவற்றிற்காகக் கிட்டத்தட்ட 38 கோடி அல்லது 40 கோடி
ரூபாய் மானியமாகச் செலவிடப்படுகிறது என்று நான் அறி
கிறேன். மின் உற்பத்தியைப் பெருக்கி, மின் இணைப்பைச்
சுருக்கி, மத்திய அரசின் உதவிகளை எல்லாம் பெற்று, இந்த
38 கோடி ரூபாய் மானியத்தை விவசாயிகளுக்குக் கொடுக்
கிறோம், மேலும், விதை வாங்க, உரம் வாங்க போன்ற
காரியங்களுக்கு மானியம் கொடுக்கிறோம். இவை முழுமையாக
விவசாயிகளுக்குச் சென்று சேரவில்லை. இடையிலே இருக்கிற
வர்கள் சாப்பிடுகின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே இந்த
மானியங்களைக் குறைத்து, உண்மையிலேயே பயன்படுத்துகின்ற
வர்களுக்கு மட்டும் மானியங்களைக் கொடுத்து விட்டு, மீதி
மானியத் தொகையிலிருந்து வருகிற நிதியை மின்சாரத்திற்குக்
கொடுக்கிற மானியத்தோடு சேர்த்து, தமிழக விவசாயப் பெருங்
குடி மக்களுக்கு மின்சாரத்தை இலவசமாகக் கொடுக்கின்ற ஒரு
நடவடிக்கையை நம்முடைய அரசு பரிசீலனை செய்ய வேண்டு
மென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மின்சார வாரியம் ஏற்கெனவே இழப்பில் இருக்கும்போது
இது எப்படி சாத்தியம் என்று சொல்லக்கூடும். ஆகவே தான்
உரம், விதைபோன்ற மற்ற காரியங்களுக்குக் கொடுக்கின்ற மானி
யங்களை உண்மையாகவே பயன்படுத்துகிறவர்களுக்கு மட்டும்
அளித்துவிட்டு, மீதி வருகின்ற பணத்தை மின்சாரக் கட்டணத்
திற்குப் பயன்படுத்தலாம் என்ற ஆலோசனையைத் தெரிவிக்
கிறேன். அதோடு மத்திய அரசின் உதவியையும் பெற்று, மின்
சாரத்தை விவசாயிகளுக்கு இலவசமாகக் கொடுத்தால் தமிழ்
நாடு விவசாயத்தில் மறுமலர்ச்சி அடையும் என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்,

வடமாநிலங்களை அண்மையில் சென்று பார்க்கும் வாய்ப்பு
கிடைத்தது. வற்றாத ஜீவநதியாக, எப்போதும் தண்ணீர் பெருக்
கெடுத்து ஓடும் பிரம்மபுத்திரா, அஸ்ஸாம், மேகாலயா, திரி
புரா, மணிப்பூர் ஆகிய மாநிலங்களில் ஓடுகிறது. எப்போதும்
தண்ணீர் ஓடுகின்ற ஜீவநதி அங்கே இருந்தும் கூட அந்த
மாநிலங்கள் எல்லாம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைய
வில்லை. இன்னொரு ஜீவநதியான கங்கை நதி ஓடுகின்ற
உத்திரபிரதேசம், பீகார் மாநிலங்களிலே கூட உணவுப் பிரச்
சனை முழுமையாகத் தீர்க்கப்படவில்லை. ஆனால் தமிழ்நாட்
டில் எந்த ஜீவநதியும் ஓடவில்லை. நமக்குத் தேவையான



தண்ணீருக்குக் காவிரியை எதிர்நோக்கியிருக்கின்ற சூழ்நிலையில்
மிக சிரமமான நிலைமையில் இருந்தாலும் உணவுப் பிரச்சனையை
முற்றிலுமாகச் சமாளித்து வருகிறோம். உணவு உற்பத்திப்
பெருக்கத்திற்காக தங்களுடைய உயிரைக் கொடுத்து உழைக்
கின்ற உழவர் பெருமக்களுக்கு நன்றி செலுத்துகின்ற வகையிலே
தமிழக விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் கொடுக்கும்
நிலைமையை பரிசீலனை செய்ய வேண்டுமென்று நம்முடைய
அரசை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்,

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். விவ
சாயப் போராட்டக் காலத்தில் சிலர் விவசாயச் சங்கத்தால்
உந்தப்பட்டு, மின் கட்டணத்தைச் செலுத்தவில்லை, அதற்குப்
பின்னால் நடப்புக் கட்டணத்தோடு (current bill) பாக்கிக் கட்ட
ணத்தில், ஒரு தவணையையும் (+1) சேர்த்து செலுத்த வேண்டு
மென்று முடிவு செய்யப்பட்டு, இந்தத் திட்டத்தைக் கொண்டு
வந்தார்கள். இப்படி ஒரு நேரத்தில் இரண்டு தவணைகளை
விவசாயிகள் செலுத்திவருகிறார்கள். பருவ மழை தவறிய நிலை
யிலும் இந்த முறையில் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தி வரு
கிறார்கள். இருந்தபோதிலும் அந்தப் பாக்கிக் கட்டணத்திற்கு
இப்போது அபராத வட்டி விதித்திருக்கிறார்கள். விவசாயிகள்
கட்டிய பணத்திற்கு விதிக்கப்பட்டிருக்கிற அபராத வட்டியை
ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மின்
வாரியம் அதைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்
கொள்கிறேன்.

அதைப் போன்று voluntary disclosure என்ற முறை கொண்டு
வரப்பட்டிருக்கிறது, ஒருவர் 5 எச். பி, மோட்டார் வைக்க
உரிமைபெற்று, மறைமுகமாக அவர் 7 எச், பி, மோட்டார்
வைத்திருந்தால் அது சட்டவிரோதமானது அப்படி வைத்திருந்
தாலும் அவர்களாகவே voluntary disclosure செய்தால்,
அதற்குரிய மின் கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு, அந்த
மோட்டார்களை ரெகுலரைஸ் செய்யும் திட்டம் இருக்கிறது.
ஆனால், அந்த வகையில் அதிகமாக மின் கட்டணத்தைச் செலுத்
தியும், அந்த மோட்டார்கள் ரெகுலரைஸ் செய்யப்படவில்லை.
அதிகமாகக் கட்டணம் வாங்கிக் கொண்டு ரெகுலரைஸ் செய்யா
மல் இருப்பது சரியல்ல அவற்றை ரெகுலரைஸ் செய்ய உரிய
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 11-20)

எதிர்காலத்தில் நாட்டினுடைய பொருளாதாரத்திலும் சரி,
சமுதாயத்திலும் சரி முதுகெலும்பாக இருக்கிற விவசாய முன்
னேற்றத்திற்கு, அதை நம்பியே வாழ்கிற கோடிக்கணக்கான
மக்களுடைய வாழ்க்கையிலே ஒளி ஏற்றுகிற வகையில், அவர்
களோடு தொடர்பு கொண்டு, அவர்களுக்கு இருக்கிற நடைமுறை
சிக்கலை தீர்த்து அவர்களுடைய வாழ்க்கையிலே ஒளி ஏற்ற
நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்
நன்றி, வணக்கம்.

*திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986–87ஆம் ஆண்டுக்கான மின் வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கை மீதும், 1985–86ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கை மீதும் நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில பல கருத்துக்களை மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்,

இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே தரப்பட்டிருக்கிற விவரங்களின் அடிப்படையில் 1985–86 ஆம் ஆண்டுக்கு, அனல் மின் திட்டம் மூலமாகவும், புனல் மின் திட்டம் மூலமாகவும், அணு மின் திட்டம் மூலமாகவும் ஏறத்தாழ 15,400 மில்லியன் யூனிட்டுகள் தேவைப்படுவதாகத் தெரிகிறது. ஆனால், இந்த 3 திட்டங்களின் அடிப்படையில் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்ட மின் சக்தியினுடைய அளவு என்பது 13,750 மில்லியன் யூனிட்டுகள் ஆகும், இது போன்று 1986-87 ஆம் ஆண்டுக்கு தேவைப்படுகிற மின் அளவு ஏறத்தாழ 16,300 மில்லியன் யூனிட்டுகள் ஆகும், ஆனால் அனல் மின் திட்டமானாலும், புனல் மின் திட்டமானாலும், அணு மின் திட்டமானாலும், எதிர்பார்க்கப் படுகிற மின்விசையினுடைய அளவு 14,889 மில்லியன் யூனிட்டுகள் ஆகும். 1985-86 ஆம் ஆண்டில் குறைந்த அளவே மின் சக்தி உற்பத்தி செய்யப்பட்ட காரணத்தாலே ஏற்பட்ட மின் வெட்டு அதிகப் பட்சமாக 40 விழுக்காடுகளை எட்டியிருக்கிறது.

இதிலே உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கு மட்டும் இந்த மின வெட்டு 40 சதவீத அளவு இருந்ததேயல்லாமல், குறைந்த அளவு மின் அழுத்தம் உள்ள தொழிற்சாலைகளுக்கோ, விவசாயிகளுக்கோ, குடியிருப்புக்களுக்கோ மின் வெட்டு அமுல்படுத்தப்படவில்லை என்று சொல்லியிருப்பதோடு பகல் வேளைகளிலே 6 மணி நேரமும் இரவு வேளைகளிலே 8 மணி நேரமும், ஆக 14 மணி நேரம் நாங்கள் மின் சக்தி வழங்கியிருக்கிறோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் யதார்த்தமான சூழ்நிலை என்னவென்றால், கிராமப்புறத்திலே எப்போது மின்சாரம் வருகிறது, எப்போது மின்சாரம் நிறுத்தப்படுகிறது என்பதெல்லாம் தெரியாமல் இருக்கிறது. கிராமப்புறங்களிலே இப்போது வேடிக்கையாகக் கூடச் சொல்கிறார்கள், 'இந்த மின்சாரத் திருடன் எப்போது வருவான் எப்போது போவான் என்பது கூடத்தெரியவில்லையே என்று' அந்த நிலைமை இருக்கிறதே தவிர இந்த மின்சாரம் என்பதைத் திட்டமிட்டு, இந்தக் கொள்கை குறிப்பேட்டிலே கொடுக்கப்பட்டிருக்கிற முறைகளின் அடிப்படையில் கிராம மக்களுக்கும் வழங்குவது இல்லை, சிறிய தொழிற்சாலைகளுக்கும் வழங்குவதில்லை, பெரிய தொழிற்சாலைகளுக்கும் வழங்கப்படுவதில்லை என்பதைத் தான் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன்,





இந்த 1986–87 ஆம் ஆண்டில், 1985-86 ஆம் ஆண்டைவிட மின் வெட்டை குறைத்து விடலாம் என்ற நம்பிக்கையை இந்தக் கொள்கை குறிப்பு தெரிவிக்கிறது, ஆனால் கல்பாக்கம் அணு மின் நிலையத்தின் இரண்டாவது பிரிவு என்பது 14–8–1986 ஆண்டோடு மூடப்பட்டு இருக்கிறது. அதற்கடுத்து 210 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட மேட்டூர் அனல் மின் நிலையத்தில் மின் உற்பத்தி என்பது, டிசம்பர் 1986 லிருந்துதான் தொடங்கும் என்று தெரிவிக்கிறார்கள். அதே போல, நெய்வேலி 210 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்டது. இந்த நெய்வேலி இரண்டாவது திட்டம் என்பது மார்ச் மாதம் 1987 ஆம் ஆண்டுதான் உற்பத்தியையே தொடங்கும் என்று தெரிவிக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, நாம் இராமகுண்டத்திலிருந்து எடுக்கப்பட வேண்டிய 132 மெகா வாட் மின்சக்தியைப் பொறுத்தமட்டில் நமக்கு 400 கிலோ வோல்ட் கம்பித் தொடர் இல்லாத காரணத்தால் ஆந்திராவிலிருந்து வருகிற கம்பித் தொடர் மூலமாக மின்சக்தியை எடுத்து வரவேண்டிய நிலையில் இருக்கிறோம். நேரடியாக 400 கிலோ வோல்ட் கம்பித் தொடர் இல்லாத காரணத்தால் நாம் எடுத்து வருகிற மின்சாரம் 719 மில்லியன் யூனிட்டுகள் குறைக்கப்பட்டு, கிட்டத்தட்ட 340 என்கிற அளவிலேதான் இன்றைக்கு மின்சாரம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. எனவே இந்த முரண்பாட்டுச் சூழ்நிலைகளை எண்ணிப்பார்ப்பீர்களானால் 1985-86 ஆம் ஆண்டில் இருந்த மின்வெட்டை விட இந்த ஆண்டில் நிச்சயமாக மின்வெட்டு அதிகமாக இருக்குமென்பதைத்தான் இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த மன்றத்திற்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஏன் அனல் மின் நிலையத்தைப் பொறுத்தவரையில் உற்பத்திக் குறைகிறது? ஏன் உற்பத்திச் செலவு அதிகமாகிறது என்பதற்கான அடிப்படை காரணங்களை இந்தக் கொள்கைக் குறிப்பேட்டில் பார்த்தால் நிலக்கரி ஏற்றி வருவதற்குச் செலவு அதிகமாகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக மேட்டூரில் தொடங்கியிருக்கிற அனல் மின் நிலையத்திற்கு நேரடியாக சிங்கரேணிக்குப் பக்கத்தில் சென்னூர் என்கிற சுரங்கத்திலிருந்து தான் நிலக்கரி வரவேண்டும். ஆனால் அப்படி வர இயலாத காரணத்தால் அது சென்னை எண்ணூர் அனல் மின் நிலையத்திற்கு வந்து, திரும்பவும் மேட்டூர் பகுதிக்கு அனுப்பப்படுவதால் ஒரு டன்னுக்கு 350 ரூபாய் அதிகமாக செலவு செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிப்பதெல்லாம் மத்திய அரசு இந்த 350 ரூபாய்க்கு நஷ்ட ஈடு தரவேண்டுமென்று நீங்கள் கேட்பது ஒருமுனை வாதம். இன்னொரு பக்கத்தில் இந்தியாவில் பல் வேறு பகுதிகளிலிருந்து இங்கே கொண்டு வரப்படுகிற நிலக்கரியெல்லாம் தரம் குறைந்தவையாக இருக்கின்றது. கலப்புள்ளவை

யாக இருக்கின்றது. எனவே ஆஸ்திரேலியாவிலிருந்து தரம் மிகுந்த நல்ல நிலக்கரியைக் கொண்டு வருவதற்கு நீங்கள் மத்திய அரசிடம் அனுமதி கேட்க வேண்டுமென்று நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல. இந்தியாவின் வடபுலத்திலிந்து கொண்டு வருகிற நிலக்கரியைக் காட்டிலும் ஆஸ்திரேலியாவிலிருந்து கொண்டு வரப்படுகிற நிலக்கரியின் தரம் நன்றாக இருக்கிறது, விலையும் குறைவாக இருக்கிறது என்று எனக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. எனவே மத்திய அரசை மாநில அரசு நிர்ப்பந்தப் படுத்தி இந்த மின் பற்றாக்குறையை எடுத்துச் சொல்லி, ஆண்டுதோறும் மின்பற்றாக்குறை தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. இது ஒரு முடிவுறாத தொடர் கதையாக நீண்டுகொண்டு போகிறது, எனவே இந்த சூழ்நிலையை எண்ணிப்பார்த்து ஆஸ்திரேலியாவிலிருந்து நிலக்கரியை நாம் இறக்குமதி செய்வதற்கு தனித்த அனுமதியை இந்த அரசு பெற்றிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு ஒரு அனல் மின்நிலையத்தை நிர்மாணிக்கிற நேரத்தில், localisation of industries என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே, அதேபோல ஒரு தொழிற்சாலையை அல்லது இப்படிப்பட்ட நிறுவனங்களை நீங்கள் உருவாக்குகிற நேரத்தில் நிலக்கரி அருகாமையில் இருக்கிறதா என்று பார்த்து, அப்படி கிடைக்கவில்லையென்றால் அனல் மின் நிலையங்களைத் தவிர்த்து அணு மின்நிலையங்களை உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும். அந்த அதிகாரம் மத்திய அரசிடம் இருந்தால், மத்திய அரசினை வற்புறுத்தி, நிலக்கரி கிடைக்காத காரணத்தால் அனல் மின் நிலையம் உருவாக்குவதில் தடையாக இருக்கிறது. எனவே அணு மின்நிலையங்களை உருவாக்க தமிழகத்திற்கு அதிகப் பங்கைத் தரவேண்டுமென்ற வாதம் மாநில அரசின் சார்பாக எடுத்து வைக்கப்பெறுமானால், காலச் சுழற்சியில் மின்வெட்டுக் குறைப்பிற்கும், தமிழ் நாட்டின் மின் தேவைகளுக்குகொப்ப மின் சாரத்தை வழங்குவதற்கும் இது நல்ல வாய்ப்பாக இருக்கும்.

அதேபோல வடக்கே எங்கெங்கெல்லாம் நிலக்கரி அதிகமாக இருக்கிறதோ அங்கெல்லாம் அனல் மின் நிலையங்களை நிர்மாணிபதும், நிலக்கரி கிடைக்காத இடங்களில் அணு மின் நிலையங்களை உருவாக்குவதும், அகில இந்திய அளவில் நல்ல நிலையை உருவாக்கும் என்பதை இந்த மன்றத்தின் வாயிலாக நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல புனல் மின் நிலையங்களைப் பொறுத்த வரையில் எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ரவீந்திரன் அவர்களும், திரு. குப்புசாமி அவர்களும் எடுத்துத் தெரிவித்தார்கள். பல்வேறு புனல் மின் திட்டங்கள் எல்லாம்





மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு அவை எல்லாம் அனுமதிக்கப் படாத சூழ்நிலைகள் இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கின்றன. ஒகேனக்கல் புனல் மின திட்டத்தைப் பொறுத்தவரையில் மைசூர் அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி இதற்கு ஒரு இணக்கமான முடிவையெடுத்து, மத்திய அரசு அனுமதி தந்து, புனல் மின் நிலையம் ஒகேனக்கல் திட்டத்தில் உருவாக்க வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு மாநில அரசு கடுமையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இங்கே கொள்கைக் குறிப்பேட்டில் தந்திருக்கிற சில விவரங்கள் மாறுபட்ட விவரங்களாக இருக்கின்றன என்பதற்கு சில விளக்கங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்,

(முற்பகல் 11-30)

விவசாயிகளைப் பொறுத்த மட்டில் இந்த அரசு தெரிவிக்கிறது. விவசாயிகளுக்குச் சலுகை அடிப்படையில் மின்சாரம் வழங்கிய காரணத்தாலே, குடிசைப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கிய காரணத்தாலே 10.41 கோடி ரூபாய் நட்டமாகிறது என்று. அதோடு இன்னும் ஒரு குறிப்பும் தெரிவிக்கிறது. மின்சாரத் திருட்டை கண்டுபிடித்ததன் மூலமாக 2 கோடி ரூபாய்க்கு மேலாக இன்றைக்கு மிச்சப்பட்டு இருக்கிறது என்று தெரிவிக்கிறது. அந்த அடிப்படையில் நீங்கள் ஒரு கணம் ஆழமாக சிந்தித்துப் பார்த்தால் மின்சாரத் திருட்டு முழுமையாக கண்டு பிடிக்கப்பட்டுவிட்டால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட சலுகையின் அடிப்படையில் நட்டமாகும் 10.41 கோடி ரூபாய் என்பது அதிகமான தொகை அல்ல என்பதைத்தான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல, உயர் அழுத்தத் தொழிற்சாலையான மால்கோ தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் 20.04 கோடி ரூபாய் இன்னும் அரசுக்குப் பாக்கி தரவேண்டிய நிலையில் இருக்கிறது. அது போன்று உயர் அழுத்தத் தொழிற்சாலைகள் பல இன்னும் வாரியத்திற்குப் பாக்கி தரவேண்டிய நிலையில் இருக்கின்றன. இது பற்றி உச்ச நீதி மன்றத்தில் வழக்கு போட்டு இருப்பதாக ஒரு செய்தி தெரிவிக்கிறது. உச்ச நீதி மன்றத்தில் வழக்கு போட்டு இருப்பதாகச் சென்ற ஆண்டும் தெரிவித்து இருக்கிறார்கள். எனவே இதை விரைவில் முடித்து 20 கோடி ரூபாய் என்பது சாதாரண தொகை அல்ல, அது ஒரு பெரும் தொகை—அதை வாங்குவதற்கு உடனடியாக நடவடிக்கையை நீதிமன்றத்தின் மூலமாக எடுக்கவேண்டும் என்று நான் மாநில அரசை இந்த மன்றத்தின் மூலமாக கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது என்பதே ஒரு சாக்காக அமைந்து விடக் கூடாது. நீதிமன்றத்தில் வழக்கு இருக்கும். நாம் அதில் அக்கறை செலுத்தாவிட்டால் அது தொடர்ந்து கொண்டேதான்

போகும். எனவே அக்கறை எடுத்துக்கொண்டு அந்த 20 கோடி ரூபாய் பெறுவதற்கான நடவடிக்கைகளை நாம் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொரு வேடிக்கையான கருத்தும் இந்தக் கொள்கைக் குறிப்பில் இருக்கிறது. பக்கம் 11 என்று கருதுகிறேன், அதிலே தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு அருகாமையில் தனிப்பட்டவர்களது 12 தொழில் நிறுவனங்கள் ஒன்றாகச் சேர்ந்து SEDCO என்கின்ற அமைப்பின் கீழ் 420 மெகா வாட் உற்பத்தித் திறன்கொண்ட ஒரு அனல் மின் நிலையத்தை உருவாக்குவதற்கு தமிழக அரசு அவர்களுக்கு அனுமதியை கொடுக்க இருப்பதாக அறிகிறேன். அது மட்டும் அல்ல, மத்திய அரசிடம் ஆஸ்திரேலியாவிலிருந்து நிலக்கரியை வாங்கிக்கொள்வதற்கு அவர்களுக்கு அனுமதி தரவேண்டும் என்ற அடிப்படையில் மாநில அரசு அந்த 12 தொழில் நிறுவனங்களுக்காக வக்காலத்து வாங்கியிருக்கிறது என்ற விவரமும் இதிலே இருக்கிறது இந்தச் சூழ்நிலையில் இந்த அனுமதி மாநில அரசாலே வழங்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே அனல் மின் நிலையம் தூத்துக்குடியில் இருக்கிறது. அது நல்லமுறையில் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. அகில இந்திய அளவில் பரிசுகளைப் பெற்று இருக்கிறது என்று கொள்கைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு இடத்தில் அதற்கு அருகாமையிலேயே இப்படி தனிப்பட்ட தொழில் நிறுவனங்களுக்குக் கொடுப்பது ஏதோ விளங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு அதைப்போட்டு இருக்கிறார்களே ஒழிய 12 தொழில் நிறுவனங்கள் என்று சொல்வதைக் காட்டிலும் 12 தொழில் முதலாளிகளுக்கு இந்தச் சலுகை வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில் ஏற்கெனவே—மின் பற்றாக்குறையில் இருக்கிறோம், ஏற்கனவே வெற்றிகரமாக ஓடிக்கொண்டு இருக்கிற இந்த அனல் மின் நிலையத்தின் அருகில் தனிப்பட்டவர்கள் 420 மெகா வாட் உற்பத்தித் திறன் கொண்ட அனல் மின் நிலையத்தை நிர்மாணிப்பதினால் எந்த அளவுக்குக் காலத்தின் சுழற்சியால் கேடுபாடுகள் வரும் என்பதை அருள் கூர்ந்து இந்த மாநில அரசு எண்ணிப் பார்க்கவேண்டும்.

மாநில அரசைப் பொறுத்தவரையில் இன்றைக்குச் சமதர்மக் கோட்பாட்டிலிருந்து மாறி ஏதோ வேறு திசையில் சென்று கொண்டிருப்பதாக நான் அறிகிறேன். அதற்கு ஒப்ப, காரைக் குடியில் ஒரு கெமிக்கல் தொழிற்சாலை இன்றைக்குத் தனி யாருக்கு மாற்றப்பட்டதாக செய்தி வந்திருக்கிறது. இந்த நிலைமை நீடிக்குமானால் நான் இந்த மன்றத்தின் வாயிலாக தெளிவாக உணர்த்த கடமைப்பட்டிருக்கிறேன், நீங்கள் அண்ணாவினுடைய வழியிலிருந்து திசைமாறி செல்கிறீர்கள். அதைத் தான் உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.



அடுத்து இன்னொரு பிரச்சினை, தொழிலாளர்கள் பிரச்சினை. எப்படி மின் வாரியம் விவசாயிகளுக்கு ஆதரவாக இருக்கிறதோ, எப்படி மக்களுக்கு அது ஒத்துழைப்பாக இருக்கிறதோ அதைப் போன்று இன்றைக்கு மின் வாரியத்தில் பணியாற்றிக்கொண்டு இருக்கிற தொழிலாளர்கள் நிலைமையையும் நாம் பாதுகாத்திட வேண்டும். அந்தத் தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு வேலை வேண்டும் என்று கேட்கின்ற நேரத்தில் வாரிசு அடிப்படையில் வேலை கொடுக்கின்ற நேரத்தில் கல்வித் தகுதி தடையாக இருந்தால்கூட ஓரளவுக்குத் தளர்த்தி விட்டு அவர்களுக்கு வேலை வாய்ப்பைத் தரலாம் என்று முன்னால் இருந்த அமைச்சர் அவர்கள் வாக்குறுதி தந்ததாக அறிகிறேன். அந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். மற்ற அரசு ஊழியர்களைப்போல் இவர்களுக்கும் டிராவல் கன்செஷன், எல்.டி.சி. போன்ற சலுகைகளை வழங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இவர்களைப் பொறுத்தவரையில் எப்படிப் போக்கு வரத்துக் கழகத்திலே நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் பெருமுயற்சியாலே ஒரு பொறியியல் கல்லூரி நிறுவப்பட்டு, அவர்களுக்கு எல்லாம் வாய்ப்பு வழங்கப்பட்டிருக் கிறதோ, அது போன்று நம்முடைய மின் வாரியத் தொழிலாளர் களுக்கும் பொறியியல் கல்லூரி நிறுவி, மின் வாரிய தொழிலாளர் களின் குழந்தைகள் படிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டும். இடைக்காலத்திலே மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் கலந்து பேசி, ஒரு குறிப்பிட்ட சதவீதமாவது இந்த மின்சாரத் தொழிலாளர்களின் குழந்தைகள் அந்தக் கல்லூரியில் படிப்பதற் கான வாய்ப்பினை நிச்சயமாக உருவாக்கித் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

வட சென்னையிலே இன்றைக்கு உருவாக்கப்படுகின்ற அனல் மின் நிலையம் 420 மெகாவாட் உற்பத்தித் திறனைக் கொண்டது. அதற்கான நிலம் ஆர்ஜிதம் செய்யப்படும் நேரத்தில், ஒண்டர் லேண்ட் என்ற இடம் ஆர்ஜிதம் செய்யப்படவேண்டும். இந்த நிலம் ஆர்ஜிதம் செய்வதில் தடை இருப்பதாகக் கூட செய்திகள் தெரிவிக்கின்றன. இவற்றையெல்லாம் மாநில அரசு கவனித்து, அக்கறை எடுத்துக்கொண்டு, தனி நபரை அழைத்துப் பேசி, மின் பற்றாக்குறையை கவனத்தில் கொண்டு, அதற்கான விரைவான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் தெரிவிக்காமல் இருந்தால், என்னுடைய கடமையிலிருந்து நான் தவறியவனாகக் 'கருதப்படுவேன். மின் வாரியம் என்பது சாதாரண மக்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், ஆலைகளை நடத்திக் கொண்டிருப்பவர்கள் போன்ற

[திரு. பொன் முத்துராமலிங்கம்] [1986 நவம்பர் 19

அனைத்து தரப்பு மக்களிடமும் பழகக் கூடிய அன்றாட நடைமுறைகளை கவனத்தில் கொண்டு, அவர்களுக்கு உறுதுணையாக ஒரு புறமும், மறுபுறத்திலே பொது அடிப்படையிலும், நிறுவன அடிப்படையிலும் இயங்குகின்ற ஒரு நிறுவனமாகும். இந்த நேரத்திலே பொறுப்பேற்று நடத்துகின்றவர்கள், ஓரளவிற்கு எல்லோரையும் அனுசரித்து செல்லக் கூடிய நல்லவர்களாக இருக்கவேண்டும் என்பது அடிப்படை நியாயமாகும்.

இன்றைக்கு ஒரு தீர்ப்பைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவீந்திரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தத் தீர்ப்பைப் பற்றி நான் விமர்சனம் செய்யத் தயாராகயில்லை. அந்தத் தீர்ப்பு என்ன என்று சொல்வதில் தவறொன்றுமில்லை. அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் வாரியத் தலைவர் கண்டனத்திற்குள்ளாகிறார். அதன் மீது... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தத் தீர்ப்பைப் பற்றிச் சொல்லக் கூடாது. அதைப்பற்றி ஏகப்பட்ட ரூலிங்ஸ் இந்தச் சபையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 1969-லிருந்து இன்று வரை பல சபாநாயகர்கள் ரூலிங் கொடுத்திருக்கிறார்கள். The possibility of an arising litigation is itself subjudice. இதே பிரச்சினையைப் பற்றி இந்த அவையிலே 1969-லும், 1975-லும் எழுப்பப்பட்டு, தீர்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. High Court decision has not reached the finality. வேறு கருத்து சொல்லுங்கள். When an appeal is pending before the Supreme Court it is definitely subjudice.

THIRU. PON MUTHURAMALINGAM : Sir, I am just reading the judgment.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதுவே கூடாது. சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் பெண்டிங்காக இருக்கின்ற தீர்ப்பைப் பற்றி பேசக் கூடாது. அந்தப் பிரச்சினையைப் பற்றி பல பேர் இந்த அவையிலே பேசி தீர்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தில் வழக்கு இருக்கின்றபோது இது குறித்து சபையில் பேசுவது சப்-ஜுடிஸ் என்று நீங்கள் சொல்வதில் எனக்கு ஒன்றும் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் அதே நேரத்தில் இது ஆக்ட் ஆப் ஆபீசரைப் பற்றியது. ஆகவே நீதிமன்றத் தீர்ப்பிற்குப் பிறகுகூட, நீதிமன்றத் தீர்ப்பு சம்பந்தமாக மின் வாரியத்தில் பல்வேறு நடவடிக்கைகள் நடைபெற்றிருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த வழக்கு விவரங்கள், சரியா, உண்மையா, பொய்யா என்பது பற்றி விமர்சிப்பது கூடாது.



1986 நவம்பர் 19]

திரு. அ. ரகுமான்கான் : நீதிமன்றத் தீர்ப்பிற்குப் பிறகு அந்தத் தீர்ப்பைப் பற்றி சில நடவடிக்கைகள் மின் வாரியத்தில் எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த மின் வாரியத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் காரணமான சம்பவம், நீதிமன்றத் தீர்ப்பில் இடம் பெற்றிருக்கிறது. அதை அவர் குறிப்பிடுகிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஹைகோர்ட் தீர்ப்புகள் சம்பந்தப்பட்ட விவரங்களைச் சொல்லவேண்டாம். அந்தத் தீர்ப்பே அப்பீலில் இருக்கிறது. அதிகாரிகள் நடவடிக்கை பற்றி விமர்சிப்பது கூடாது. நீதிமன்றப் பிரச்சினைகளைப் பற்றியும் இங்கே விவாதிக்கக் கூடாது.

(முற்பகல் 11-40)

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட முறையில் எந்த வருத்தத்தின் காரணமாகவும் எதையும் இங்கே நாங்கள் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அதே நேரத்தில் நீதிமன்றத்தில் ஒரு தீர்ப்பு கொடுக்கப்பட்டு அது அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது. அதில் உள்ள வாசகங்கள் சம்பந்தமாக நீங்கள் பேசக் கூடாது என்று சொல்வதில் எங்களுக்குக் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால் எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் சொல்ல வருவது அந்தத் தீர்ப்பில் இருக்கக்கூடிய அம்சங்களையொட்டி சில நடவடிக்கைகள் எடுக்கப் பெற்றிருக்கின்றன. அந்த நடவடிக்கைகளுக்கு காரணம் அந்தத் தீர்ப்பு. ஆகையினால் அதைத் தீர்ப்பு என்று நாம் சொல்ல வேண்டியதில்லை....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நடவடிக்கையைச் சொல்லலாம். திரு. ரகுமான்கான் அவர்கள் சொல்கிற மாதிரி இங்கு நாங்கள் தனிப்பட்ட எந்த அதிகாரியையும் பாதுகாக்கின்ற முறையில் சொல்லவில்லை. மரபுகள், விதிகள் இருக்கின்றன. அவை மீறப்படக்கூடாது. எல்லாவற்றிற்கும் ஆபத்து வரலாம். தீர்ப்புபற்றிச் சொல்லாமல் விஷயங்களைச் சொல்வதில் ஆட்சேபணை இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட அந்த அதிகாரி மீது உங்கள் எல்லோரைக் காட்டிலும், அதிக மரியாதையும், அவர் சிறந்த அதிகாரி என்பதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லாதவன் நான். ஆனால் எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் சொல்ல வந்தது நீதிமன்றத் தீர்ப்பு என்று சொல்லாமல் ஒரு அதிகாரியின் நடவடிக்கை, அது சரியாகவும் இருக்கலாம், தவறாகவும் இருக்கலாம், அதை விமர்சிப்பது வேறு விவகாரம். அந்த உரிமையைத்தான் கேட்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதிகாரி நடவடிக்கையைப்பற்றி அமைச்சர் பதில் சொல்வார். நீதிமன்றம் சம்பந்தப்பட்டதைப்பற்றி பேசக்கூடாது. சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள்.

திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, மரபுகளின் அடிப்படையில் மறுக்கப்பட்ட ஒரு
தீர்ப்பில் யார் தெரிவிக்கப்பட்டிருக்கிறார் என்பது பற்றி இந்த
மன்றம் நன்றாக அறியும். அவரைப்பற்றி பலமுறை இந்த
மன்றத்திலேயே விவாதிக்கப்பட்டு இருக்கிறது. எனவே அப்படிப்
பட்ட ஒருவர், இது மக்களோடு தொடர்ந்து தொடர்புள்ள ஒரு
நிறுவனம் என்ற அடிப்படையில் நிலைமைகளை எல்லாம் பார்த்து
நடந்துகொள்ள வேண்டும் என்பதைத்தான் இந்த மன்றத்தின்
வாயிலாக நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

விவசாயிகளைப் பொறுத்தமட்டில் சலுகை தந்திருப்பதாக
அரசு தெரிவித்திருக்கிறது. 2½ ஏக்கரா நிலம் உள்ளவர்களுக்கு
இன்றைக்கு ஒரு எச். பி. ரூ. 75 ஆண்டுக்கு கட்ட வேண்டும்
என்று அரசு உத்திரவு வழங்கியிருக்கிறது. ஒரு ஆண்டில் 5
எச்.பி. அளவுள்ள எலெக்ட்ரிக் மோட்டார் வைத்திருக்கக்கூடிய
ஒரு விவசாயி ரூ. 375 கட்டவேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளா
கிறார். ஆனால் இப்போதுள்ள சூழ்நிலையில் low voltage,
கிணற்றிலே தண்ணீர் இல்லாத நிலைமை, பகல் நேரங்களில் மின்
வெட்டு; தஞ்சை போன்ற மாவட்டங்களில் சில காலங்களில்
தான் மோட்டாரைப் பயன்படுத்துகின்ற நிலைமை இருக்கிறது.
இந்தச் சூழ்நிலையை வைத்து எண்ணிப் பார்த்தால் ரூ. 375,
2½ ஏக்கரா நிலம் வைத்துள்ள விவசாயிகளுக்குச் சலுகை என்ற
அடிப்படையிலே அரசு வழங்கியிருக்கின்ற சலுகை என்பது
உண்மையிலேயே தண்டத் தீர்வையே தவிர வேறு ஒன்றும்
அல்ல என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவிக்க விரும்பு
கிறேன். எனவே, அப்படிப்பட்ட விவசாயிகள் மீண்டும் அந்த
மீட்டர் அடிப்படையிலேயே கட்டணத்தைச் செலுத்துவதற்கு
அரசு முன்வரவேண்டும் என்று இங்கே நான் தெரிவிக்க விரும்பு
கிறேன்.

தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் இன்றைக்கு 7-ந்
தேதியளவிலே தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகிறது.
மின் கட்டணத்தைப் பொறுத்தமட்டில் 1-ந் தேதியே அவர்களுக்கு
நோட்டீஸ் கொடுத்துவிட்டு 7-ந் தேதியே கட்டவேண்டுமென்று
நிர்பந்திப்பதாகத் தெரிவிக்கிறார்கள். அதை 10-ந் தேதியள
விலே கொடுத்து பின்னாலே ஒரு மாத தவணையிலே மீண்டும்
10-ந் தேதி கொடுப்பார்களேயானால் தொழிற்சாலையிலே பணி
புரிபவர்களுக்கு நல்ல வாய்ப்பாக இருக்கும். அவர்களுக்குச்
சிரமம் இல்லாமல் பணம் கட்ட நல்ல வாய்ப்பாக இருக்கும்
என்ற கருத்து இருப்பதன் காரணத்தினால் அவற்றையெல்லாம்
ஆழமாக அரசு சிந்தித்து உரிய முடிவுகளை மேற்கொள்ள
வேண்டும். மின் பற்றாக்குறை என்பது நிரந்தர நோயாக
தமிழ்நாட்டிலே இருந்துவிடாமல் அதற்கு ஒரு பரிகாரம் காண்
பதற்கு அரசு முன்வரவேண்டும் என்று கேட்டு விடைபெறு
கிறேன். நன்றி, வணக்கம்.





*திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவையினுடைய
துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின் வாரியத்தின்
1986-87-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதும்,
1885-86-ம் ஆண்டுக்கான துணை நிதி நிலை அறிக்கையின் மீதும்
எனது கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். மின்சார
வாரியம் என்பது பலவகைப்பட்ட சிக்கல்களும், பிரச்சனை
களும் நிறைந்த ஒரு நிறுவனமாகும். எனவே அதன் செயல்
திறனை மேம்படுத்த எப்போதும் வழிவகைகள் உண்டு என்று
இந்த கொள்கைக் குறிப்பிலே ஒரு குறிப்பினைத் தந்திருக்கிறார்
கள். அந்த வகையிலே எனது கருத்துக்களை இங்கே எடுத்து
வைப்பது முறையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.
எனக்கு முன்னாலே பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்
திரு. ரவீந்திரன் அவர்கள் திட்டங்கள் போடும்போதும்,
திட்டங்களை மதிப்பிடும்போதும் முதலிலே போடப்படுகின்ற
எஸ்டிமேட் நிலையிலிருந்து அதனுடைய முடிவான நிலைக்கு
வரும்போது திட்டங்களுடைய செலவினமானது அதிகரித்து
வருகிறது என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். உதாரணமாக
சேர்வலாறு திட்டம் என்பது 1974 ஆம் ஆண்டு துவக்குவதற்கு
அனுமதி அளிக்கப்பட்டு ரூ. 8.35 கோடியிலிருந்து ரூ. 39.43
கோடியாக உயர்ந்தது.

அதைப் போல், காடம்பாறை திட்டம் 1973-இலே
அனுமதிக்கப்பட்டு, ரூ. 35·12 கோடியிலிருந்து, ரூ. 164.51
கோடியாக உயர்ந்திருக்கிறது. அதைப் போல் லோயர் மேட்டூர்
திட்டமானது 1980-இலே அனுமதிக்கப்பட்டு, ரூ. 83.60 கோடி
யிலிருந்து ரூ. 147 கோடியாக உயர்ந்திருக்கிறது. குந்தா
அடிஷனல் யூனிட் மின் திட்டமானது 1980-இலே அனுமதிக்கப்
பட்டு, ரூ. 5 கோடியிலிருந்து, ரூ. 10 கோடி அளவுக்கு உயர்ந்
திருக்கிறது. ஆக, திட்டங்கள் தீட்டப்படும்போதே உயர்ந்து
வரக்கூடிய செலவினங்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு
திட்டங்கள் தீட்டப்படவேண்டும் என்று பொதுப் பணித்துறை
யினருக்கு ஆணையிட்டு இருக்கிறார்கள். அது இந்த மின்சார
வாரியத்திற்கும் பொருந்தும். வரும் காலங்களிலாவது, முடிவான
செலவினங்களையும் உள்ளடக்கி திட்டங்கள் தீட்டப்பட
வேண்டும் என்று வேண்டி, விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசாங்கம் அனுமதி கொடுக்கின்ற நிலை மாறி,
மிகவும் காலதாமதமாகக் கொடுப்பதால், அந்தத் திட்டச்
செலவுகள் அதிகமாகின்றன என்ற முக்கியமான உண்மையை
மறுக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

அதைப் போல, தமிழகத்தின் மின்சார வாரியம் என்பது,
இப்போது சட்டமன்றத்திலேயும், மற்றும்
பொது மக்கள் மத்தியிலேயும் தினம் தினம் விமர்சிக்கப்படுகின்ற
ஒன்றாக இருக்கிறது.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே, அன்று மின்சார வாரியத்திலே நடந்த பணிகளையும் விமர்சித்தார்கள், அதற்குப் பின், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே எல்லா இடங்களுக்கும் மின்சார உற்பத்தியே இல்லாமல் கம்பிகளை நீட்டி மின்சாரம் கொடுத்தார்கள். அதையும் விமர்சித்தார்கள். இன்றையதினம் இலவச மின்சாரம் வழங்கிய புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலேயும் மின் வாரியத்தை விமர்சிக்கிறார்கள்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு மின்சார வாரியத்தினுடைய நடவடிக்கைகளை, குறிப்பாக அதனுடைய தலைவரை இன்றையதினம் நீதிமன்றம் விமர்சிக்கின்றது என்றால் அந்த நீதிமன்றத்திற்கும் சில வரைமுறைகள் உண்டு. இந்த நேரத்திலே நீதிமன்றத்தினுடைய ஜட்ஜ்மென்டுகளிலே குறிப்பாக வாரியத் தலைவர் மீது கொடுக்கப்பட்ட அந்தக் கண்டன அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்து வைப்பது முறையாக இருக்கும் என்று....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது 'கான்ட்ரவர்சியாக இருக்கும். ஏற்கனவே சொல்லி முடித்துவிட்டேன். யாரும் அதைப்பற்றிப் பேசவேண்டாம். மற்ற நடவடிக்கைகளைப் பற்றி பேசுங்கள். நீங்கள் பாராட்டிப் பேசுங்கள்.

திரு. வே. இரா. ஜெயராமன் : நான் அதைச் சொல்லவில்லை. I am not going into the matter which is *subjudice*. ஒரு மின் வாரியத்தினுடைய தலைவர் மீது ஒரு கோர்ட் strictures பாஸ் பண்ணுகிறது. அந்த ஸ்டிரிக்ச்சர்ஸ் பாஸ் பண்ணுவதற்கு முன்னால் அந்தக் கோர்ட்டிலே, ** ** (குறுக்கீடு) அதற்கு சுப்ரீம் கோர்ட்டிலேயே ஜட்ஜ்மெண்ட் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ** (குறுக்கீடு) அது அப்பீல். It can be decided only by the Appellate Court. நீதிபதிகளைப் பற்றி அவர் சொன்ன 'போர்ஷனை' நீக்கி விடுங்கள். (குறுக்கீடு)

திரு. வே. இரா. ஜெயராமன் : அதற்கு உதாரணமாக நான் சொல்கிறேன். **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் இங்கே இருந்து அதைச் சொல்லமுடியாது. அங்குதான் நமக்கு சிக்கல் வருகிறது. அந்த உரிமைக்கு அரசியல் அமைப்புச் சட்டமே திருத்தப்படவேண்டும். அதுவரைக்கும் பேசமுடியாது.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





திரு. வே. இரா. ஜெயராமன் : சரி, அதனை நான் விட்டு விடுகிறேன். அதற்குப் பிறகு, நடைமுறைச் சிக்கல்கள் இன்றைய தினம் மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையிலே...... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ** அவற்றை எல்லாம் நீக்க உத்தரவிடுகிறேன்.

திரு. மா. சின்னராசு : ** முடிந்து போன விவகாரம். அது ஏன் இருக்கக்கூடாது என்கிறீர்கள் ? ** சுப்ரீம் கோர்ட்டிலே வந்து......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைப் பற்றி இந்தப் பிரச்சினையிலே பேசுவது தேவை இல்லாதது. I am expunging it as irrelevant for this discussion. (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்).

திரு. வே. இரா. ஜெயராமன் : மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில், இன்றையதினம் பெரும்பாலான விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதிலே உள்ள நடைமுறைச் சிக்கல்கள் குறித்து தான் விமர்சனம் எழுப்பப்படுகிறது. அந்த நடைமுறைச் சிக்கல்களைத் திருத்துவதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளடக்கிய ஒரு குழுவை அமைத்து—24 சிஸ்டம்கள் இருக்கின்றன ; ஒவ்வொரு சிஸ்டத்திற்கும் ஒரு குழுவாக—அந்தந்தப் பகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களை நியமித்து—அங்கே விவசாயிகளுடைய குறைகளை அறிந்து அவற்றைப் போக்குவதற்கு அங்கே இருக்கிற ரீஜனல் சீஃப் இன்ஜினியருக்கு அதிகாரத்தைக் கொடுத்து உடனடியாக முடிக்கப்படவேண்டும் என்ற கருத்தை நான் வலியுறுத்துகிறேன்.

அதைப் போல், ரீஜனல் கார்ப்பரேஷன்களை ஆங்காங்கே ஏற்படுத்தி அங்கே மின்சார விநியோகத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை இங்கே வைக்கிறேன்.

(முற்பகல் 11-50)

அதைப் போலவே எனது தொகுதியான தேனியில் 230 கே. வி. ஏ. சப்-ஸ்டேஷன் அமைக்கும் வேலை நடைபெற்று வருகிறது. அதை இன்னும் தீவிரப்படுத்த வேண்டும். ஏனென்றால் தொழில் வளம் பெருகிக் கொண்டிருக்கிற அந்தப் பகுதிக்கு இன்றையதினம் மின்சாரம் அதிகமாகத் தேவைப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கன்சல்டேடிவ் கவுன்சில் மூலமாக ஆங்காங்கே உள்ளவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளித்து அதன் மூலம் நடைமுறைச் சிக்கல்களைக் களையவும்,

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

மின் வாரிய ஆணைகளை ஆங்காங்கே வெளியிடவும் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விவசாயிகள் மின் கட்டணம் கட்டாத காலத்திற்கு 1 பிளஸ் 1 என்ற முறையில் பணம் கட்டிவிட்டபோதிலும்கூட மேலும் அபராத வட்டி போடுவதை நீக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன் அதைப் போலவே 5 எச். பி., 7 எச். பி. பம்ப் செட்டுகளுக்கான காயில் வெந்து போகும் போது, காயில்களைப் புதுப்பிப்பதன் மூலம் அந்த பம்பு செட்டுகளுக்கு ½ எச். பி. அல்லது 1 எச். பி. திறன் அதிகமாக ஆகிறது. அதையெல்லாம் மின்சாரத் திருட்டு என்று விவசாயிகளுக்கு ரூ. 30,000 அல்லது ரூ. 40,000 என்று பெனால்டி போடுகிற நிலை இருக்கிறது. அதற்கெல்லாம் ஒரு அளவுகோலை நிர்ணயித்து "லிமிட்டபிள் எச். பி." என்று அமைத்து அதிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தற்போது "வேர் சர்வீஸ் கனெக்ஷன் முறை" எடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் போலவே ஷிப்டிங் ஆப் சர்வீஸ் கனெக்ஷன்களையும் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அதையெல்லாம் மீண்டும் துரிதப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுடன் குறிப்பாகக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்படும் இடங்களில் மின்சாரத்தைத் தவிர வேறு எதன் மூலமும் தண்ணீரை எடுக்க முடியாத நிலை இருக்கிற காரணத்தால் குழாய்க் கிணறுகளுக்கு சீனியாரிட்டி அடிப்படையிலிருந்து விதி விலக்களித்து முதலில் இணைப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. தஞ்சை மாவட்டத்தில் குழாய்க் கிணறு போட்டால் அங்கே உடனடியாக மின் இணைப்புத் தருகிறார்கள். ஆனால் மதுரை மற்றும் அண்ணா மாவட்டங்களில் குழாய்க் கிணறுகளை அமைத்தால் மின் இணைப்புக்கு வரிசைப்படி வாருங்கள் என்கிறார்கள். அப்படியென்றால் கி.பி. 2000-ல் தான் பம்பு செட்டுகளுக்கு அங்கெல்லாம் மின் இணைப்பு கிடைக்கும் என்ற நிலைதான் இருக்கிறது. எனவே எல்லா இடங்களிலும் ஈக்வலாக, சரிசமமாக ஒரு முறையைக் கையாள வேண்டும் என்று சொல்லி இந்த மின்வாரிய நிதிநிலை அறிக்கையை வரவேற்று அமைகிறேன். நன்றி.

*திரு. வி. பி. சிந்தன் : மதிப்பிற்குரிய துணை சபாநாயகர் அவர்களே, மின்வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துக்களைக் கூறுவதற்காக நான் அவைமுன் நிற்கிறேன்,





மின் உற்பத்தியும், மின் உபயோகமும் இந்த நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு எவ்வளவு இன்றியமையாதது என்பதை இங்கே நான் விளக்கமாகச் சொல்லத் தேவையில்லை. ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இன்றையதினம் தொழில் வளர்ச்சிக்கும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் ஒரு உந்துகோலாக இருக்க வேண்டிய மின்சார வாரியம் குறித்தும், மின் உற்பத்தி நிலையங்கள் குறித்தும், மின் விநியோக முறைகளைக் குறித்தும், மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடிய அளவைக் குறித்தும், இதற்கெல்லாம் நாம் ஒதுக்கிக் கொண்டிருக்கிற பணத்தைக் குறித்தும் எண்ணிப் பார்த்தால் நம்முடைய முன்னேற்றத்திற்கு முக்கியமான தடையாக இருப்பது மின்சார நெருக்கடிதான் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

கடந்த 5 ஆண்டுக் காலத்தில் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற தொழில் வளர்ச்சியை மட்டும் கணக்கில் கொண்டு பார்த்தால் நாம் 3000 மெகா வாட் அளவுக்கு அதிகமாக மின் உற்பத்தி செய்திருந்தால்தான் நம்முடைய தேவையை நாம் பூர்த்தி செய்திருக்க முடியும். ஆனால் இந்த 5 ஆண்டுக் காலத்தில் நாம் எவ்வளவு உற்பத்தி செய்தோம் என்று பார்க்கும்போது நெய்வேலியில் 210 மெகா வாட் உற்பத்தி அதிகப்படுத்தப் பட்டிருக்கிறது. அதைப் போலவே கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் 470 மெகா வாட் அதிகமாகியிருக்கிறது. ஆக மொத்தம் 680 மெகா வாட் மின்சாரம் மட்டுமே இரண்டு மின் நிலையங்கள் மூலமாகவும் அதிகமாக உற்பத்தி செய்யப் பட்டிருக்கிறது.

அதோடு நம் மின்சார வாரியத்தின் முயற்சியால் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் 420 மெகா வாட் மின்சாரமும் சேர்வலாரில் 20 மெகா வாட்டும் ஆக மொத்தம் 440 மெகா வாட் மின்சாரம் கடந்த 5 ஆண்டுகளில் உற்பத்தி அதிகரிக்கப் பட்டிருக்கிறது ஆனால் அதே நேரத்தில் பேசின் பிரிட்ஜ் நிலையத்தின் மூலமாக 90 மெகா வாட் மின்சாரமும் சேர்வலாறு காண்ட்ராக்டில் ஏற்பட்ட குறைபாடுகள் காரணமாக கடந்த மழையின்போது அது நாசமாக்கப்பட்ட காரணத்தால் மீண்டும் அது திருத்தி கட்டப்பட்ட பிறகு அங்கே 5 அல்லது 6 மெகா வாட் மின்சாரம் மட்டும்தான் உற்பத்தி ஆனது

அந்தக் கணக்குகளைப் பார்த்தால், இந்த ஐந்தாண்டுகளில் தமிழகத்தின் மின்சார வாரியத்தின் பொறுப்பில் உற்பத்தியாக்கப்பட்ட 440 மெகா வாட்டில் 105 மெகா வாட்டை இன்றைய தினம் உபயோகப்படுத்த முடியாத நிலை இருக்கிறது. ஆகவே 335 மெகா வாட் மின்சாரத்தை ஐந்தாண்டுகளில் உற்பத்தி செய்திருக்கிறோம் என்றால் ஓராண்டுக்கு எவ்வளவு என்று கணக்குப் போட்டுப் பார்க்கலாம். மின் உற்பத்தியில் நாம் மிகவும் பின்தங்கியிருக்கிறோம் என்பது இந்தக் கணக்கிலேயிருந்து தெரியும்.

அது மட்டுமல்ல. இந்த மின் உற்பத்திக்கு மாநில அரசும், மின்சார வாரியமும் முழு பொறுப்பு என்று நான் சொல்ல மாட்டேன். காரணம் 300 கோடி ரூபாய் செலவு செய்யும் 15 ஆண்டுகள் ஆகியும், காடம்பாறை திட்டம் இன்னும் கண்ணுக்குத் தெரியாமல்தான் இருந்து கொண்டிருக்கிறது. காடம்பாறை திட்டம் மட்டுமல்லாமல் ஏறத்தாழ 1,500 மெகா வாட் உற்பத்தி செய்ய வேண்டிய திட்டங்கள் எல்லாம் பத்து ஆண்டுகளாக மத்திய அரசின் பைலில் இருக்கின்றன. ஆகவே மத்திய அரசு ஆக்கபூர்வமான முடிவை எடுத்திருந்தால், போதுமான உதவியைச் செய்திருந்தால், நிச்சயமாக இந்தத் மின்திட்டங்களை நிறைவேற்றுவதற்கும், மின் உற்பத்தியை இன்னும் அதிகப்படுத்துவதற்கும் நம்மாலே முடிந்திருக்க முடியும்.

இங்கே குறிப்பிட்டதைப் போல அண்டை மாநிலங்களில் இருந்து வரக்கூடிய நதி நீரைப் பயன்படுத்தி நாம் நிறைவேற்ற வேண்டிய திட்டங்கள் தடைபட்டிருக்கின்றன. என்னுடைய கருத்தெல்லாம் ஒகேனக்கல் திட்டமானாலும் சரி, பாண்டியாறு திட்டமானாலும் சரி, புன்னம்புழா திட்டமானாலும் சரி, மாநில அரசுக்கு மத்திய அரசு உதவி செய்து, பக்கத்திலேயுள்ள மாநிலங்களோடு இருக்க கூடிய தாவாவை பேசித்தீர்க்க ஏற்பாடு செய்திருந்தால் இந்தத் திட்டங்களையெல்லாம் என்றைக்கோ நிறைவேற்றியிருக்க முடியும். இதே முறையில் தமிழக அரசு போட்டிருக்கக் கூடிய பல திட்டங்களைப்பற்றி எடுத்துச் சொல்ல முடியும் என்றாலும், நேரம் இல்லாததால் விட்டுவிடுகிறேன்.

ஆயிரம் மெகாவாட் உற்பத்தி செய்யக்கூடிய திட்டங்கள் பாதி நிறைவேற்றப்பட்டோ அல்லது கால் பங்கு நிறைவேற்றப் பட்டோ அல்லது அதற்கான கால்நாட்டு விழா நடைபெற்றோ இருக்கக் கூடிய நிலைமையில் இருந்து கொண்டிருக்கின்றன என்பதை மிக வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். இதை நான் எடுத்துக் கூறுவதற்குக் காரணம் ஒரு மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்பட வேண்டுமானால் இன்றைக்கு கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய் செலவாகிறது. ஆகவே நம்முடைய தேவையைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது இன்னும் 300 மெகாவாட் உற்பத்தி செய்யவேண்டுமானால் 600 கோடி ரூபாய் நமக்கு தேவைப்படுகிறது. இப்படி நமக்கு தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு எவ்வளவு நிதி தேவைப் படுகிறது என்பதைக் கணக்கெடுத்துப் பார்க்கவேண்டும். அவ்வப்போது திட்டங்களை முறையாக நிறைவேற்றுவதற்கு நம்முடைய அதிகாரிகளும், சம்பந்தப்பட்டவர்களும் முயற்சி எடுத்திருந்தால் இந்த அனாவசியமான செலவைச் சிக்கனப் படுத்தியிருக்க முடியும். இதனுடைய விளைவாக இன்றைய தினம் நமக்கு மின் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு பம்புசெட் இயக்கப் போதுமான அளவிற்கு மின்சாரம்



விநியோகிக்க முடியவில்லை, தெருவிளக்குகள் எரியவில்லை. வீடுகளுக்குத் தேவையான மின்சாரம் கிடைக்கவில்லை; தொழிற்சாலைகள் குறிப்பாக ஆயிரக்கணக்கான சிறு தொழிற் சாலைகள் முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ மூட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

இன்றைக்கும் நம்முடைய மின் உற்பத்தியின் கணக்கை எடுத்துப் பார்த்தால், ஆண்டுக்கு சராசரி ஒரு நபருக்கு தமிழகத்திலே உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்தின் கணக்கு 192 யூனிட்டு தான். எந்த அளவிற்கு நாம் பின் தங்கியிருக்கிறோம் என்பதை இதிலேயிருந்து நாம் புரிந்துகொள்ள முடியும். அமெரிக்காவிலோ அல்லது சோவியத் நாட்டிலோ இன்றையதினம் உள்ள கணக்கைப் பார்த்தால் ஒரு வருஷத்திற்கு சராசரி ஒரு நபருக்கு அங்கேயெல்லாம் 19 ஆயிரம், இருபதாயிரம் யூனிட்டுகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. நம்முடைய நாட்டிலே, நம்முடைய தமிழகத்திலே 192 யூனிட் மட்டும்தான் நம்மாலே உபயோகப்படுத்த முடிகிறது. இங்கே மின்சாரம் பெருமளவிற்குப் பயன்படுத்தப்படுவதில்லையென்று சொன்னால் முன்னேற்றம் எவ்வளவு தடைபடுகிறது, தொழில் வளர்ச்சி எவ்வளவு தடைபடுகிறது, நாட்டின் நாகரிக வளர்ச்சியும், பொருளாதார வளர்ச்சியும் எவ்வளவு தடைபடுகிறது என்பதைப் பார்க்கும்போது இது ஒரு முக்கியமான அமைப்பு என்பதையும், இதை மிகச் சிறப்பாக நடத்த வேண்டும் என்பதையும் நாம் கணக்கிலே எடுத்துக்கொள்ள வேண்டும்.

(நண்பகல் 12-00)

மாநில அரசுகளுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு, மாநில அரசுகளுக்கு ஊக்கமும், உதவியும் கொடுக்கக் கூடிய அளவுக்கு ஒரு கொள்கையை மத்திய அரசு கடைப் பிடிக்கவில்லை. அப்படிப்பட்ட கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று இந்த மாமன்றம் வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இந்தத் திட்டங்களை நிறைவேற்றும்போது நம்முடைய திறமை முழுவதும் பயன்படுத்தப் படுகிறதா என்றால் பயன்படுத்தப்படவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. நம்முடைய மாநிலத்தில் நிறுவியிருக்கக் கூடிய நிறுவனங்களின் திறமையையும், ஆற்றலையும் உபயோகப் படுத்திக்கொண்டு எவ்வளவு உற்பத்தி செய்யமுடியுமோ—installed capacity—அதிலே சிறு பகுதியைப் பயன்படுத்தித்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. நமக்குத் தெரிந்த ஒரு உற்பத்தி முறை, சுலபமாக உற்பத்தி செய்கின்ற முறை, புனல் மின்நிலையங்களை உருவாக்குவதுதான். குறிப்பாக தமிழகத்திலே உள்ள நீர் மின் நிலையங்கள் மூலமாக 2,500 மெகா வாட் மின்சாரத்தை

உற்பத்தி செய்ய முடியுமென்று நிபுணர்கள் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இதுவரையில் நம்முடைய நீர்த் தேக்கங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்தது 1,389 மெகா வாட் மட்டும்தான். மேலும் 1,000 அல்லது 1,000-க்கு மேலான மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பு இங்கே இருக்கிறது. அதையெல்லாம் நம்மால் திறமையாகப் பயன் படுத்த முடியவில்லை என்பது இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

அடுத்து, மின் உற்பத்தியை திறமையாகச் செய்ய வேண்டிய நிர்வாகத்திலே இருக்கக்கூடிய கோளாறுகளும், நிர்வாகத்தினுடைய திறமை இன்மையும் இதற்கு ஒரு பிரதான காரணமாக இருக்கிறது என்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது.

உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு பற்றி நான் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தை இங்கே பிரேரேபித்தேன். ஆனால் அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. ஒருவேளை அனுமதி தாமதித்ததனாலே, உச்ச நீதி மன்றத்தில் அப்பீல் போடுவதற்கான வசதியை * * என்னவோ, எனக்குத் தெரியாது. நான் குற்றம் சாட்டவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அப்படி குற்றம் சாட்டக் கூடாது. * * என்று சொன்னதை நீக்கிவிடுகிறேன்.

**திரு. வி. பி. சிந்தன் :** பேச்சு பூராவையும் நீக்குகிற உரிமை தங்களுக்கு உண்டு....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்த மாதிரிப் பேசினால் நீக்காமல் இருக்க முடியாது. நீக்குகிற மாதிரி பேசக் கூடாது. அதைத் தவிர்த்தால் நன்றாக இருக்கும், சௌகரியமாக இருக்கும்.

**திரு. வி. பி. சிந்தன் :** மிக முக்கியமான பிரச்சினை ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். திட்டங்களை எல்லாம் திறமையாக அமுல் நடத்துவதற்காக இந்த வாரியமும், வாரியத்தின் உயர்தர அதிகாரிகளும் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்களா என்ற பிரச்சினையை சீரியஸ்-ஆன பிரச்சினையாக எழுப்ப விரும்புகிறேன். இதற்கு ஒரு நிர்வாக அமைப்பு உண்டு. எலக்ட்ரிசிட்டி போர்ட் மின் வாரியம் இருக்கிறது அந்த மின்வாரியம் முறையாகச் செயல்படுகிறதா என்று நான் அறிய விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது, அதைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். எத்தனை முறை அந்த போர்ட் கூட்டம் கூட்டப்பட்டது ? அதற்கு முறையான மினிட்ஸ் உண்டா ? அதிலே எடுக்கக்கூடிய

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



முடிவுகள் முறையான முடிவுகள்தானா ? ரெகார்ட்ஸ் எல்லாம் முறையாக வைக்கப்படுவது உண்டா ? அரசுத் தரப்பில் 2, 3 பிரதிநிதிகள் இருக்கிறார்களே, அவர்கள் முறையாக அந்தக் கூட்டங்களில் கலந்துகொள்வது உண்டா ? இந்த முக்கியமான துறையில் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றுவதற்கு அவர்கள் முயற்சி எடுத்தது உண்டா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன். குறிப்பாக போர்டின் ரிக்கார்டுகள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ரிக்கார்டுகள் பூராவும் பரிசீலனை செய்தவன் அல்ல நான். ஆனால் பல்வேறு ஆடிட் ரிப்போர்ட்டுகள் வரும் போது, மின்வாரியத்தில் எவ்வளவு குறைபாடுகள், எவ்வளவு குறைகள் இருக்கின்றன என்பது, அவற்றைப் படித்துப் பார்த்தால் தெரியும்.

மின் வாரியத்திற்குத் தலைவர் உண்டு. நான் ஒன்றை அறிய விரும்புகிறேன். அந்தத் தலைவர், இந்த இலாக்கா பொறுப் பேற்றுள்ள அமைச்சரைச் சென்ற ஆண்டு ஒரு தடவைகூட பார்க்கவில்லை என்பது குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டை, அமைச்சரவர்கள் மறுக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அமைச்சருக்கும், வாரியத் தலைவருக்கும் அத்தகைய உறவு இருக்கக்கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள். அந்த வாரியத்தினுடைய தலைவரின் நடவடிக்கை எப்படி இருக்கிறது என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஒரு அதிகாரி எந்த உணர்வுகளுக்கும் தன்னை உள்ளாக்கிக் கொள்ளாமல்—டிஸ்பேஷனேட்டாக இருந்துகொண்டு—டிரான்ஸ்பர் செய்ய வேண்டும், அவருக்கு வேண்டாதவர்களை டிரான்ஸ்பர் செய்கிறார். நூற்றுக் கணக்கான கிலோ மீட்டர்களுக்கு அப்பால் உள்ள ஊர்களுக்கு ஊழியர்களையும், அதிகாரிகளையும் டிரான்ஸ்பர் செய்கிறார். மின் வாரியத்திலே திறமையான இன்ஜினியர்கள் இருக்கிறார்கள். பல இன்ஜினியர்களிடம் தொடர்பு கொண்டவன் என்பதால் சொல்கிறேன். அவர்கள் திறமையை முழுமையாகப் பயன்படுத்த வாரியத் தலைவரும், வாரியம் செயல்படக்கூடிய முறையும் குறுக்கே நின்று கொண்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

அது மட்டுமல்ல. இந்த மன்றத்திலே இரண்டு முறைகள், பேரவைத் தலைவர் அவர்களிடம், இந்த வாரியத் தலைவர் அவர்கள் நடவடிக்கையைப் பற்றி விமர்சித்தது உண்டு. உயர் நீதிமன்ற தீர்ப்புபற்றி பேச அனுமதிக்கப்படாத காரணத்தாலே, அதைப் பற்றி பேசமுடியவில்லை. குறிப்பிட்டிருக்கின்ற எல்லா குற்றச்சாட்டுகளையும் நிரூபிக்கின்ற முறையிலே பல ஆதாரங்கள் என்னிடம் உள்ளன. ஆனால் நிலைமையை மனதில் கொண்டு, உயர்நீதிமன்ற தீர்ப்பை வைத்து பேசக்கூடாது என்று சொன்ன காரணத்தினால் நான் பேசமுடியாது.

மற்ற இலாக்காக்களை விட இந்த இலாக்கா மிகவும் பொறுப்பானதாகும். அதுதான் தமிழகத்தினுடைய மிகச் சிறந்த வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும் அவசியமான இலாக்காவாகும். இந்த இலாக்கா இப்பேர்ப்பட்ட தலைவரின் பொறுப்பில் எப்படி முறையாகச் செயல்படமுடியும் என்பதையும், அந்தத் துறையில் உள்ள தொழிலாளிகள் என்ன நினைக்கின்றார்கள் என்பதையும் தமிழக அரசு கவனிக்கவேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதுதான் என்னுடைய விருப்பம். இதுபற்றி நான் நம்முடைய முன்னாள் அமைச்சர் அவர்களிடமும், முதலமைச்சர் அவர்களிடமும் பல தடவைகள் பேசியதுண்டு. கவனிக்கலாம் என்று சொன்னார்கள். இதுவரையில் கவனிக்கவில்லை.

அங்கே தொழிற்சங்கங்களுக்கு முறையான அனுமதி வழங்கப்படுகிறதா ? போக்குவரத்துத் துறையிலே ஆயிரம் சண்டைகள் எங்களுக்கு இடையிலே இருந்தாலும், அனைத்துத் தொழிற்சங்கத் தலைவர்களையும் அழைத்து வைத்து அமைச்சர் அவர்களும் உட்கார்ந்து பேசி ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. ஆனால் மின் துறையிலே சில சங்கங்களிடம்தான் தலைவர் தொடர்பு வைத்துக்கொள்வார். சில சங்கங்களைப் பார்க்கவே அவர் விரும்பமாட்டார்.

அது மட்டுமல்ல, ஒரு மின்சார வாரியத்தினுடைய அதிகாரி, வாரியத்தினுடைய தலைவரே லட்சக்கணக்கான துண்டு பிரசுரங்களைப் போட்டு ஒரு குறிப்பிட்ட சங்கத்தை பகிரங்கமாக தாக்கி நோட்டீஸ் வெளியிடுவது எப்படி இருக்கிறது ? திரு. ரெங்கசாமி அவர்களுடைய சங்கத்தைத் தாக்கி நான் நோட்டீஸ் போடுவதை என்னால் புரிந்துகொள்ளமுடியும். என்னுடைய சங்கத்தைப் பற்றி அவர் நோட்டீஸ் போடலாம். ஆனால் மின் வாரியத்தினுடைய தலைவரே, 85 ஆயிரம் தொழிலாளர்கள் பணியாற்றுகின்ற ஒரு நிறுவனத்தினுடைய தலைவர், பகிரங்கமாக சங்கங்களைத் தாக்கி லட்சக்கணக்கான துண்டு பிரசுரங்களை வெளியிட்டு இதை எல்லாத் தொழிலாளர்களுக்கும் விநியோகம் செய்யுங்கள், எல்லா பொதுமக்களுக்கும் விநியோகம் செய்யுங்கள் என்ற குறிப்போடு அதிகாரிகளுக்கு அனுப்புகிறார். இதை நான் ஆணவம் என்று சொல்வதா அல்லது பல ஆண்டுகளாக, கண்ணீரும், செந்நீரும் சிந்தி போராடிப்பெற்ற தொழிற்சங்க உரிமையை ஒரு சர்வாதிகாரி பறிக்கிறார் என்று வர்ணிப்பதா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் இந்த மாமன்றத்திலே ஒரு குறையாகவே அதைச்சொல்கிறேன். இந்த அதிகாரிகள் தொழிற்சங்கங்களுக்கு எந்த ஊக்கமும் அளிக்கவில்லை. சில தொழிற்சங்கங்களின் ஆதரவைப் பெற்று மற்ற சில சங்கங்களை அடக்குவதற்கு வேலை செய்கின்றார்.



ஆயிரக்கணக்கான ஊழியர்களை டிரான்ஸ்பர் செய்வதுண்டு. இந்த டிரான்ஸ்பர்களை எல்லாம் நிர்வாகத்திற்குத் தேவையான இடத்திற்கு, மாநில அளவில் ஏதாவது ஒரு பகுதியிலே ஆள் பற்றாக்குறை என்று சொன்னால் எந்தப் பகுதியிலேயாவது போதுமான ஆட்கள் இல்லை என்றால் உடனடியாக கவனிக்கப் படவேண்டும் என்று சொல்லலாம். மின் வாரிய ஊழியர்கள் கன்னியாகுமரியிலே இருந்து கோயம்புத்தூருக்கும், கோயம்புத் தூரிலிருந்து சேலத்திற்கும் இடம் மாற்றம் செய்வதை நாம் ஆட்சேபிக்க முடியாது. அந்த உரிமை அந்த வாரியத்திற்கு உண்டு. நான் இப்போது கேட்கிறேன். கடந்த ஒரு ஆண்டுக் காலமாக மின் வாரியத்திலே நடத்தப்பெற்ற டிரான்ஸ்பர்கள் எவ்வளவு ? 2,000, 2,500 தொழிலாளர்களை மாற்றம் செய் திருக்கின்றார்கள். இதையெல்லாம் நீதி விசாரணைக்கு விடத் தயாரா ? இதை மட்டும் நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன். ஒரு குறிப்பிட்ட சங்கத்தினுடைய ஆண்டு விழா நடந்தது. அந்த ஆண்டு விழாவிலே ஒரு மலர் வெளியிட்டார்கள். அந்த மலர் வெளியிடுவதிலே பொதுமக்களிடம் இருந்து, வியாபாரிகளிடமிருந்து விளம்பரம் பெற்றார்கள். அந்த விளம்பரம் பெற்ற காரணத்திற்காக 45 ஊழியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. அவர்களால் அந்த ஒழுங்கு நடவடிக்கையை நிறைவேற்ற முடியாது. நான் பரிபூரணமாக நம்புகிறேன். சுப்ரீம் கோர்ட்டிலே சமீபத்திலே வந்திருக்கக்கூடிய தீர்ப்பிலே சொல்லியிருக்கின்றார்கள். உங்களுடைய நடைமுறைச் சட்டங்கள் என்பது, உள்ளே நடக்கக்கூடிய நடவடிக்கைகளுக்குத்தான் பொருந்துமே தவிர, வெளியிலே நடக்கக்கூடிய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தாது. அப்படி கட்டுப்படுத்துவதற்கு நிர்வாக அதிகாரிகளுக்கு அதிகாரம் இல்லை என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு சொல்லியிருக்கின்றது. ஆகவே எங்களைப் பாதுகாத்துக்கொள்ள எங்களால் முடியும். அதற்காக நான் சொல்லவில்லை. ஆனால் அந்த விளம்பரம் வாங்கும்போது இலாக்காவினுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி துஷ்பிரயோகம் செய்திருந்தால் நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று சொல்லலாம். அவர்களை வேலையிலே இருந்து நீக்கு வது பற்றி மட்டுமல்ல, சிறைத் தண்டனையே அளித்தாலும் நாம் அதை ஏற்றுக்கொள்ளத் தயார். ஆனால் இப்படிச் செய்ததற்குப் பிறகு, அதனுடைய விளைவாக இப்போது உயர்நீதி மன்றத்திலே வழக்கு போட்டிருக்கின்றார்கள். வாரியத் தலைவர் அவர்கள் 'உன்னை ஏன் வேலையிலிருந்து நீக்கக்கூடாது, நீ விளம்பரம் வாங்கியதன்' என்று சொன்னதற்கு, அந்த குற்றச் சாட்டுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட மறுகணமே உயர்நீதி மன்றத்திலே இருந்து தடை போடப்பட்டிருக்கின்றது. தமிழக அரசுக்கு வந்திருக்கிறது. தொழிலாளர்களுக்கும் நிர்வாகத் திற்கும் தகராறு ஏற்படும்போது அந்தத் தகராறை தீர்த்து வைப்பதற்கு லேபர் டிபார்ட்மென்ட் உண்டு. ஒரு ஐ.ஏ.எஸ்

திரு. குமரி அனந்தன் : துணை சபாநாயகர் அவர்களே, on a point of clarification, சுதந்திரப் போராட்ட காலத்தில் கதர் சட்டை அணிந்தவர்கள் எங்கேயாவது சாப்பிட்டுவிட்டுப் போனால் காந்தி கணக்கு என்று சொல்லிவிட்டு போய்விட்டால் அது இலவசம். அப்போது அந்தத் தியாகிகள் அதை அனுமதித்தார்கள். சில செல்வந்தர்கள் அதை அனுமதித்தார்கள். அப்படித்தான் வந்ததே தவிர வேறு வகையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படி என்றால் இந்த காந்தி இருக்கலாம்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்னது உண்மை. ஆனால் காலப்போக்கில், அது, கொடுத்ததை ஏமாற்றப் செய்கின்றவர்களுக்கு......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது மின்சார வாரியம் சம்பந்தப்பட்ட விவாதம்.

*திரு. கி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்வாரியத்தினுடைய 1986-87 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதும், 1985-86 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்திருக்கின்ற விவாதத்தின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

உலக மக்களுடைய நவீன சாதனமாகவும், உலக வளர்ச்சியிலே பெரும் பங்கினை வகிக்கின்ற துறையாகவும் இருப்பது மின்துறை ஆகும். மக்களின் வாழ்வுக்கு அடித்தளமாக இருக்கின்ற வேளாண்மைத் துறைக்கும், தொழில் துறைக்கும் அடித்தளமாக இருப்பது இந்தத் துறையாக இருக்கிறது. இந்தத் துறையிலே தனிக் கவனம் செலுத்தி, தமிழகத்தை மின் உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற மாநிலமாக உருவாக்கிக் காட்டுகின்ற அளவிற்கு இன்றைக்குப் புரட்சித் தலைவர் அரசு சிறப்பாகச் செயல்பட்டிருக்கிறது. தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு மின்துறையினுடைய அவசியம் எந்த அளவிற்கு அத்தியாவசியமாக இருக்கிறது என்பதை விளக்குகின்ற வகையிலே, 1986-87 ஆண்டுக்கான ஆண்டுத் திட்டத்திலேயும், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயும் மின் உற்பத்தி முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் அளித்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. திட்டச் செலவிலே 32.15 சதவீதம் மின்சாரத்திற்காக ஒதுக்கப்பட்டு இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.



இந்தியாவிலுள்ள மாநிலங்களிலேயே அதிக எண்ணிக்கையில் விவசாயிகளுக்கு மின்னிணைப்பு பெற்றுத் தந்த மாநிலமாகத் தமிழ்நாடு இருக்கிறது என்கிற பெருமையை இன்றைக்கு நாம் பெற்றிருக்கிறோம். 3-3-1986 வரை தமிழ்நாடு முழுவதும் இணைப்பு பெற்ற பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 10,73,000-க்கும் அதிகம் ஆகும். மின்சாரம் இல்லாத கிராமமே இல்லை என்று சொல்கின்ற அளவிற்கு, தமிழகத்திலே 20 கிராமங்கள் தவிர மற்ற அனைத்துக் கிராமங்களுக்கும் இன்றைக்கு மின்னிணைப்பு தரப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் புரட்சித் தலைவருடைய அரசின் மூலமாக புரட்சிகரமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற குடிசைகளுக்கு மின்சாரம் வழங்குகின்ற திட்டத்தில் இன்றைக்குத் தமிழகம் முழுவதும் 7.10 இலட்சம் குடிசைகளுக்கு இந்தத் திட்டத்திலே மின்னிணைப்பு வழங்கப்பட்டு, சாதாரண, சாமான்ய மக்கள் மின் உற்பத்தியினுடைய பலனை இன்றைக்கு அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். சிறு விவசாயிகளுக்கு இலவசமாக மின் விசை தருகின்ற அந்தத் தன்னிகரில்லாத திட்டத்தையும் இன்றைக்குத் தமிழகத்திலே இந்த அரசு சிறப்பாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

மின் துறையில் பற்றாக்குறை மாநிலமாகிய தமிழகத்தைத் தன்னிறைவு பெற்ற மாநிலமாக உருவாக்கிக் காட்டுவதில் அக்கறை எடுத்து, தொலைநோக்குப் பார்வையோடு இன்றைக்கு புரட்சித் தலைவரின் அரசு செய்து முடித்திருக்கிறது, செய்து கொண்டிருக்கிறது. குந்தா புனல் மின் திட்டம், சேர்வலாறு புனல் மின் திட்டம், சுருளியாறு மின் திட்டம், தூத்துக்குடி அனல் மின் திட்டம், மேட்டூர் அனல் மின் திட்டம், கீழ் மேட்டூர் புனல் மின் திட்டம் போன்றவை இந்த ஆட்சியின் மாபெரும் திட்டங்கள் ஆகும். சென்ற ஒன்பது ஆண்டுகளில் 1,475 மெகா வாட் மின்சாரம் கூடுதலாகப் பெற்று செயல்பட்டுக் கொண்டிருப்பது இந்தத் துறையினுடைய சாதனையாகும். அதைப் போல, தூத்துக்குடி, எண்ணூர் அனல் மின் நிலையங்கள் சிறப்பு மிக்க செயல் திறனுக்கென மத்திய அரசிடம் பரிசைப் பெற்றிருப்பதும் இந்தத் துறை சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

இந்தத் துறையில் தமிழகத்திலே ஆண்டுதோறும் மின்வெட்டு வருவது வாடிக்கையாக இருக்கிறது என்பதைச் சொல்லுகின்ற பொழுது, இந்த நிகழ்ச்சி தமிழகத்திலே மட்டுமல்ல, மின் உற்பத்தியிலே தன்னிறைவு பெற்ற மாநிலங்களிலே கூட கால நிலையின் காரணமாக மின்வெட்டை அறிவிப்பதும், பிறகு அதைத் தீர்க்கின்ற வழிகளைச் செய்துகொண்டிருப்பதையும் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த வகையிலே பார்க்கின்றபொழுது தமிழகத்திலே இன்றைக்குப் பருவமழை தவறிய

[திரு. தி. அன்பழகன்] [1986 நவம்பர் 19

பிறகு, புனல் மின் திட்டங்களின் மூலமாக, குறிப்பிட்ட நேரத்தில் மின் உற்பத்தியை பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டு இருப்பதையும், அதைப் போல அனல் மின் திட்டங்களிலே ஏற்படுகின்ற கோளாறுகளின் காரணமாகவும் அப்படிப்பட்ட மின் தடங்கல் ஏற்படுவதையும் நாம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அந்த வகையிலே பார்க்கின்றபொழுது இன்றைக்கு மின் வெட்டு இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல், அத்தியாவசியமான தேவைக்கும், உற்பத்திக்கும் இடைவெளி அதிகமாக இருக்கின்ற காரணத்தால், மின் வெட்டைக் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணம் இல்லை என்றாலும் கூட, அத்தியாவசியமான நிலையில் மின் வெட்டு வருவது என்பது வாடிக்கையாக நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரையில் தண்ணீரைப் பயன்படுத்தி புனல் மின் திட்டங்களை உருவாக்குவதற்கு ஒருசில திட்டங்கள்தான் இருக்கின்றன. ஆனால் அதே நேரத்தில் அனல் மின் திட்டங்களை விரிவுபடுத்துவதற்கும் புதிய பல மின் திட்டங்களை உற்பத்தி செய்வதற்கும் இன்றைக்கு அரசு முனைந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட திட்டங்களுக்கு மைய அரசு உடனடியாக அனுமதியை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மேல் அமராவதி, சண்முகா நதி, பைக்காரா, பவானி, பரளியாறு, சாத்தனூர் அணை, கீழ்பவானி அணை போன்ற புனல் மின் திட்டங்கள் மைய அரசினுடைய அனுமதிக்காகக் காத்து இருக்கின்றன. இப்படிப்பட்ட திட்டங்களுக்கு உடனடியாக அனுமதியை வழங்குவதற்கு மைய அரசு முன்வர வேண்டுமென்று நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 12-20)

மத்திய மின்சார உற்பத்தித் திட்டத்திலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தைப் பங்கீடு செய்வதிலே இன்றைக்கு ஒரு ஏமாற்றம் தமிழகத்திற்கு இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்றால் மாநிலங்களில் இருக்கிற மின்சாரப் பற்றாக்குறையின் அடிப்படையில் மத்திய அரசு மின்சாரத்தைப் பகிர்ந்தளிக்கவில்லை. மின்சாரப் பற்றாக்குறையில் முதலிடம் பெறுவது இன்றைக்கு தமிழ்நாடுதான். ஆனால் மத்திய அரசு மின்சாரத்தைப் பகிர்ந்தளிக்கும்போது மின் துய்ப்பு முறையைக் கணக்கெடுத்து, அதன் அடிப்படையில் மின்சாரத்தைப் பகிர்ந்தளிக்கும் நடைமுறையைக் கையாளுகிறது. அது மட்டுமல்லாமல் மத்திய அரசிடமிருந்து மாநில அரசு பெறுகின்ற நிதி உதவி அடிப்படையிலும் மின்சாரத்தைப் பகிர்ந்தளிப்பதால் பற்றாக்குறை மாநிலமாக இருக்கிற தமிழ்நாடு பெரிதும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, இந்த முறையை மாற்றியமைக்க வேண்டும்.



1986 நவம்பர் 19] [திரு. தி. அன்பழகன்]

தமிழ்நாடு மின்சாரப் பற்றாக்குறையால் பெரிதும் பாதிக்கப்படுவதால் நெய்வேலியிலும், கல்பாக்கத்திலும் உற்பத்தியாகும் மின்சாரம் முழுவதையும் தமிழ்நாட்டுக்குத் தரவேண்டுமென்று மத்திய அரசோடு வாதாடிக் கொண்டிருக்கிறது. நாம் இப்படி வற்புறுத்துவதை ஒருசிலர் ஏதோ ஒரு காரணத்தால் குறைகூறுகிறார்கள். தமிழ்நாட்டில் இந்த மின் உற்பத்தித் திட்டங்கள் இருப்பதால் உற்பத்தியாகின்ற மின்சாரம் முழுவதையும் தமிழகத்திற்குத் தரவேண்டுமென்று கேட்கவில்லை. தமிழ்நாடு இன்றைக்கு மின்சாரத்தில் பெரிதும் பற்றாக்குறை மாநிலமாக இருப்பதால் தான் கேட்கிறோம். அதையும் நாம் இப்போது கேட்கவில்லை; நெய்வேலி அனல் மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் வேலை தொடங்கிய நேரத்திலிருந்தே கேட்டுக்கொண்டிருக்கிறோம். மின்சாரப் பற்றாக்குறையின் அடிப்படையில்தான் அங்கே உற்பத்தியாகின்ற மின்சாரத்தை முழுமையாக தமிழகத்திற்குத் தரவேண்டுமென்று கேட்கிறோம்.

இன்றைக்கு, கல்பாக்கத்தில் உற்பத்தியாகின்ற மின்சாரத்தில் 75 சதவீதத்தை மட்டும் தமிழ்நாட்டிற்குத் தருகிறார்கள். இது நம்முடைய தேவைக்குப் போதாது. ஆகவே நெய்வேலி அனல மின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தையும் கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தையும் முழுமையாக தமிழகத்திற்குத் தரவேண்டும் என்று மத்திய அரசை நாம் வற்புறுத்திக் கேட்டு, பெற வேண்டும்.

அனல் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு நிலக்கரி அடிப்படையாக இருக்கிறது. நிலக்கரி தட்டுப்பாடு வருகிறபோது தமிழ்நாடு எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறது என்பதைப்பற்றி இங்கே சொன்னார்கள். சென்ற சில ஆண்டுகளுக்கு முன்னால் தூத்துக்குடி அனல் மின்சார நிலையம் நிலக்கரி இல்லாமல் தவித்ததை நாம் பார்த்தோம். இப்படிப்பட்ட நேரத்தில் வெளிநாட்டிலிருந்து நிலக்கரியைப் பெறுவதற்கு, வெளிநாட்டிலிருந்து தமிழ்நாடு நிலக்கரியை இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசு அனுமதி அளிக்க வேண்டுமென்று வற்புறுத்த வேண்டும்.

அனல் மின்சார நிலையங்களில் சில தடைகள் காரணமாக அவை சிறப்பாகச் செயல்படவில்லை. அப்படிப்பட்ட நேரங்களில் அதற்கு மாற்று ஏற்பாடாக 'காஸ் டர்பைன்' மூலம் உற்பத்தி செய்ய வழிவகை காணவேண்டும். 'காஸ் டர்பைன்' வேண்டுமென்று நாம் மத்திய அரசைக் கேட்டபோது வெளிநாடுகளிலிருந்து அவற்றை இறக்குமதி செய்யவேண்டியிருப்பதால் அன்னியச் செலாவணி அதிகமாகும் என்று சொல்லி, அதற்கான அனுமதியை மறுத்துவிட்டார்கள். அதே நேரத்தில் மராட்டிய மாநிலத்திற்கு 'காஸ் டர்பைன்' வைக்க மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிறது. அந்த வகையில் தமிழகத்திற்கும் அனுமதி தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அனல் மின் நிலையங்களில் உற்பத்தி தடைபடுகிறபோது 'காஸ் டர்பைன்' மூலம் மின் உற்பத்தி செய்ய உடனடியாக மத்திய அரசு நம் மாநிலத்திற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று நம்முடைய அரசு வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மலிவு விலையில் மின்சாரத்தைத் தயாரிக்க ஜப்பான் நிறுவனத்தோடு ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டதாக நான் அறிகிறேன். அந்த முறையில் உற்பத்தியாகும் மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 16 முதல் 20 காசுதான் செலவாகும் என்று சொல்லப்பட்டது. அந்த அடிப்படையில் தமிழ்நாடு முழுவதும் 100 சிறிய புனல் மின்சார நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் இருக்கின்ற இயற்கை வளங்களையும் பயன்படுத்தி மின்சார உற்பத்தியைப் பெருக்க வேண்டும். காற்றின் சக்தியிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற முயற்சியில் ஹாலந்து, பெல்ஜியம், ஜப்பான் போன்ற நாடுகள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அதைப் போன்று தமிழ்நாட்டிலும் காற்றின் சக்தியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்ய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரையில் தனியார்கள் மின்சாரம் உற்பத்தி செய்ய அனுமதி அளித்தது சம்பந்தமாக அருமை அண்ணன் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் இந்த அரசை குறை கூறினார்கள். இந்த அரசு தனியாருக்கு மின்சாரம் உற்பத்தி செய்ய அனுமதி அளித்ததனால் அண்ணாவின் கொள்கையிலிருந்து தவறிவிட்டது என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி நடத்துகின்ற மேற்கு வங்கத்தில் தனியார்கள் மின்சாரம் உற்பத்தி செய்ய அனுமதி கொடுத்திருக்கிறார்கள். கல்கத்தா நகருக்குத் தனியார் மின் உற்பத்தி நிலையத்திலிருந்துதான் மின்சாரம் வழங்கப்படுகிறது என்பதை அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில், மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதன் காரணமாக, பல தொழிற்சாலைகள் மின்சாரம் உற்பத்தி செய்ய அனுமதி வேண்டுமென்று கேட்டதை நன்கு ஆராய்ந்து பார்த்த பின்னால் அந்தத் தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் உற்பத்தி செய்ய அனுமதி வழங்குவதிலே எந்தவிதமான தவறும் சிக்கலும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.





விவசாயிகளுக்கு பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு தருவதிலே இருக்கிற பல பிரச்னைகளைப் பற்றி, பல சிக்கல் களைப்பற்றியெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். இன் றைக்கு நிர்வாகத்திற்குள்ளேயே கூட, ஒரு சில திட்டங்களைச் செயல்படுத்துகிறபோது, மின் வாரிய உள்பிரிவுகளுக்கிடையே கூட ஒன்றுக்கொன்று சில வேற்றுமைகள் ஏற்படுகின்றன. விவசாயிகளுக்கு பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக் கும் பணியை சில இடங்களில் செக்ஷன் ஆபிசில் இல்லாமல், கோட்டப் பொறியாளர்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் தருகிறபோது மிகக் கால தாமதம் ஏற்படு கிறது. ஆனால் ஒரு சில மின் திட்டங்களில் செக்ஷன் ஆபிசிலேயே அதை ஏற்றுச் செய்வதற்கு வழி வகைகள் செய்யப்பட்டிருக் கின்றன. ஆகவே இவை அனைத்தையும் ஒன்றாகச் செய்வதற்கு மின் வாரியம் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மின் கட்டண பாக்கியைப் பற்றியும் இங்கே பலரும் எடுத் துச் சொன்னார்கள். இன்றைக்கு ஒரு தனிப்பட்ட நிறுவனம் 20 கோடி ரூபாய்க்கு மேல் பாக்கியை வைத்துக் கொண்டு, தொழிலாளர்களைக் காரணம் காட்டி, வழக்கு மன்றத்தைக் காரணம் காட்டி, அதன் மூலம் காலதாமதத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. அதே சூழ்நிலையில் பார்க்கிறபோது 2 கோடி ரூபாய்தான் சாதாரண விவசாய மக்கள் பாக்கி வைத்தி ருக்கிறார்கள். நான் அரசையும் மின் வாரியத்தையும் பணிவோடு கேட்டுக் கொள்வது, இன்றைக்குத் தொழிலாளர்களையும், வழக்கு மன்றத்தையும் காட்டி தப்பித்துக்கொள்கிற அப்படிப் பட்ட நிறுவனங்களுக்கு மாற்று ஏற்பாடு செய்கிற வகையில், ஏதாவது சட்டத்தைக் கொண்டு வந்தாவது அந்தப் பணத்தை மீண்டும் வசூல் செய்ய முடியுமா என்பதை ஆராய்ந்து பார்த்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

லைன் லாஸ் பற்றியெல்லாம் சொன்னார்கள். இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரையில் 18.65 சதவீதம்தான் லைன் லாஸ் ஏற்படுகிறது. ஆனால், மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், இது ஒன்றும் அவ்வளவு அதிகமான அளவுக்கு இல்லையென்றுதான் சொல்லவேண்டும். இன்னும் சொல்லப்போனால் தமிழகத்திலே பத்து லட்சத்திற்கும் மேலாக பம்ப் செட்டுகள் இருக்கின்றன. மின் வாரியக் கம்பித்தொடர் இருட்டு இந்தியத் திருநாட்டிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு அதிகமாக இருக்கிற காரணத்தாலேதான் லைன் லாஸ் என்பது அதிகமாகி இருக்கிறதே தவிர, அது ஒன் றும் குறிப்பிட்டு குற்றம் சொல்லுகிற அளவுக்கு இல்லை என்று தான் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு விவசாயத் துறையிலே மின் இழப்பால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறபோது, அவற்றைச் சரி செய்து கொடுக்கும் பணிகளை மின் வாரியம் விரைந்து உடனடியாக கவனித்து காலத்திலே செயல்பட்டாக வேண்டும்.

கிராமப்புறங்களிலே இருக்கிற டிரான்ஸ்பார்மர்கள் பழுதடைந்திருக்கின்றன என்றால் உடனடியாக அவை பழுது பார்க்கப்படுகின்றனவா என்றால் நிச்சயமாக இல்லை. காரணம் அங்கே கைவசம் ஸ்பேர் டிரான்ஸ்பார்மர்கள் இல்லை என்று சொல்லப்படுகிறது. அதன் காரணமாக எங்காவது டிரான்ஸ்பார்மர் பழுது அடைந்திருக்கிறது, அதனால் மின் தடங்கல் ஏற்படுகிறது என்று சொன்னால், பழுதடைந்த அந்த டிரான்ஸ்பார்மரை ஒரு மாத காலம் ஆனாலும் கூட மாற்றுவதற்கு வழி இல்லாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே ஒவ்வொரு கோட்டப் பொறியாளர் அலுவலகத்திலும் ஸ்பேராக டிரான்ஸ்பார்மர்களை வைத்துக் கொள்வதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மின் துறையைப் பொறுத்தவரையில் சொந்தக் கட்டிடம் என்பதே எந்த அலுவலகத்திற்கும் இல்லாமல், வாடகைக் கட்டிடங்களிலேயே தமிழகம் முழுவதும் பல லட்சம் ரூபாயை வாடகையாக தந்துகொண்டு மின் வாரியம் செயல் பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, அரசு இதற்கு ஏதாவது ஒரு வழிமுறையில் முடிவு எடுத்து, இந்த அலுவலகங்கள் அனைத்திற்கும் கட்டிடங்களை அரசின் மூலமாக கட்டித் தருவதற்கு ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் பணியாற்றுகிற இளநிலைப் பொறியாளர்களாக இருந்தாலும் அல்லது ஹெல்ப்பர் ஆக இருந்தாலும் அவர்கள் கிராமப்புறங்களில் வசிக்கிறார்கள் என்ற காரணத்திற்காகவாவது அவர்களுக்கு வீட்டு வசதி ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மின் திட்டங்களை எடுத்துக் கொண்டால் வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள வேலூர் மின் திட்டம் மிகப் பெரிய திட்டமாகும். இந்த மின் திட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்கான எண்ணம் இருக்கிறது. அப்படி இரண்டாகப் பிரிக்கிறபோது திருப்பத்தூரை தலைமையகமாகக் கொண்டு, திருப்பத்தூர் மின் திட்டத்தை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று மின் வாரியத்தையும், அரசையும் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.



என்னுடைய தொகுதியிலே கந்திலி என்ற பகுதியிலே ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக மூன்று ஆண்டுகளுக்கு முன்பே அறிவிக்கப் பட்டிருந்தது. இன்று வரையில் வேலை துவங்கப்படாமல் இருக்கிறது. உடனடியாக அந்தப் பணியைச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, மின் வாரியத்தைப் பொறுத்தவரையில் சிக்கல் நிறைந்த, பிரச்னைகள் நிறைந்த வாரியமாக இருந்தாலும், தமிழகத்தைப் பற்றாக்குறை மாநிலமாக இல்லாமல் தன்னிறைவு பெற்ற மாநிலமாக உருவாக்கிக் கொடுப்பதில் அரசும் மின் துறையும் இணைந்து செயலாற்றி வருகிறது. அதை இன்னும் சற்று சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, முடிக்கிறேன்.

(முற்பகல் 12—30)

*திரு. எ, எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையின் மீது ஜனதா கட்சியின் சார்பாக எனது கருத்துகளை எடுத்து வைக்கின்றேன். மின் வாரியத்தின் சாதனைகளைப் பற்றி இங்கே கூறினார்கள். மின் வெட்டு இல்லாமல் தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் கொடுக்க முடியவில்லை என்பதை நீங்களே ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள். அனல் மின்சாரத்தை விட புனல் மின்சார செயல்பாடு குறைவாக இருக்கிறது என்பதையும் நீங்களே ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள். பல திட்டங்கள் கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்தும் முடியாமல், செயல்படாமல் இருக்கின்றன. கல்பாக்கம் அணுமின் நிலையம் செயல்பாட்டில் உள்ள ஏதோ குறைபாட்டின் காரணமாக முதல் ஆண்டே 20—7—1986 வரை மூடப்பட்டிருந்தது. இப்பொழுது இரண்டாவது நிலையமும் 14—8—1986 முதல் மூடப்பட்டிருக்கிறது. வருகின்ற ஆண்டிலாவது மின் வெட்டு இல்லாமல் ஏற்பாடுகள் செய்வோம் என்று சொல்ல முடியவில்லை. மேட்டூர் அனல் மின் நிலைய முதல் பிரிவு, நெய்வேலி அனல் மின் நிலைய இரண்டாவது பிரிவு ஆகியவை சரியாக செயல் படுமேயானால் இன்றுள்ள நிலை இருக்கும். இல்லாவிட்டால் மேலும் மின்வெட்டு அதிகமாக வரலாம் என்று காரணங்கள் சொல்லப்படுகின்றன, ஆந்திராவிலுள்ள ராமகுண்டத்திலிருந்து 719 மில்லியன் யூனிட்டுகளை வாங்குவதற்குப் பதிலாக 340 மில்லியன் யூனிட்டுகள் தான் உங்களால் வாங்க முடிந்திருக்கிறது. அதற்குக் காரணம் மின் கம்பி தொடர்பு இணைப்பு. வேலை இன்னும் முடிவுறவில்லை, 1986 ஆம் வருடம் மார்ச் மாதம்தான் முடிவுறும் என்று சொல்லியிருக்கிறார்கள். உங்களுக்கே மின் இணைப்பு போட முடியாத நிலையில், பொதுமக்களுக்கு எப்படி சரியான முறையில் மின் இணைப்பு கொடுக்கப் போகிறீர்கள் என்று தெரியவில்லை.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அது மின்சார வாரியம் போடுவதல்ல, நேஷனல் தெர்மல் பவர் கார்ப்பரேசன் போடுவது.

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் விளக்கம் சொல்லியிருக்கிறார். எங்களுடைய குறிப்பிலே எழுதியிருப்பதைத் தான் நான் சொல்கிறேன். இந்தக் குறிப்பைக் கூட இன்று தான் சபையிலே வைத்திருக்கிறார்கள். வேறு அலுவல்களைக் கவனிக்காமல் நாங்கள் இதைப் படித்துக்கொண்டு இருக்கக் கூடிய சூழ்நிலையிலே வைத்திருக்கிறார்கள். மற்ற குறிப்பு களைப் போல முதல் நாள் இரவே எங்களுக்கு அனுப்பினால் படித்து விட்டுப் பேச வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்து, அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக் கரி கிடைக்கவில்லையென்றும் சொல்லியிருக்கிறார்கள். அதற் குக் காரணம் மத்திய அரசின் தயக்கம்தான் என்றும் சொல்லி யிருக்கிறார்கள். ஒரு தீர்மானத்தைப் பேரவையிலே போட்டு மத்திய அரசுக்கு அனுப்பலாமே. அதிலே நீங்கள் ஏன் தயக்கம் காட்டுகிறீர்கள் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மின்சார வாரியம் சாதாரணமாக சிக்கல்களும் பிரச்னைகளும் நிறைந்த ஒரு நிறுவனம் என்று சொல்லியிருக் கிறார்கள். அது மிகவும் உண்மையாக இருக்கிறது. உதார ணமாக தூத்துக்குடியில் உப்பளத்தை வைத்திருந்த திரு. ஓ.பி. அருணாசலம் என்பவர் 1978ஆம் ஆண்டிலே உப்பளத்தை வேறு ஒருவருக்கு விற்றிருக்கிறார். அவர் தன்னுடைய டெப்பா சிட் தொகையை வாங்குவதற்காக 1-12-1981 தேதி முதல் தமிழ்நாடு மின்சார வாரியத்துடன் தொடர்பு வைத்து பல்வேறு மனுக்களையும் பல்வேறு தகவல்களையும் கொடுத்தும் கூட அந்த டெப்பாசிட் தொகையை அவரால் வாங்க முடிய வில்லை. அந்த உப்பளத்தை வாங்கியவர் வேறு ஒருவருக்கு விற்று விட்டுச் சென்று விட்டார். இன்னும் பெயர் மாற்றம் இல்லை. பெயரையும் மின் இணைப்பையும் கேன்சல் செய்ய மனு கொடுத்திருக்கிறார். கடைசியாக அவர் 20-2-1986 அன்று மின்சார வாரியத் தலைவருக்கும் ஒரு மனு கொடுத்திருக் கிறார், 20-2-1986 அன்று கொடுத்த மனுவுக்கும் எந்த விதமான பதிலும் இதுவரை இல்லை. இதுதான் சிக்கல் நிறைந்தது என்று சொல்லுகிறார்களோ என்று நான் நினைக் கின்றேன்.





அதைப்போல வீடுகளுக்கு மின் இணைப்புக் கொடுப் பதிலே கூட தேவையில்லாமல் காலம் தாழ்த்துகிறீர்கள். பொதுமக்களை மின்வாரிய அலுவலகத்திற்கு அலைய விடுகிறீர் கள். முதலில் மின்சார மீட்டர் வாங்கிக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அதாவது எங்களிடம் மின்சார வாரிய மீட்டர் இல்லை, ஆகவே வாங்கிக்கொடுங்கள் என்று சொல்கிறார்கள். பிறகு இணைப்புக்கு உள்ள பல்வேறு சாதனங்களையும் நீங்களே வாங்கிக் கொடுங்கள் என்று சொல்கிறார்கள். மின் இணைப்புக் குக் கொடுக்கப்பட்ட மீட்டருக்கு ரசீது வாங்கிக் கொண்டு உரிய தொகையை கொடுப்பதில்லை. கேட்டால், அரசாலே ஒதுக்கப்பட்ட தொகை என்று சொல்லி ஏதோ ஒன்றைத் தரு கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் நண்பர் குப்புசாமி அவர்கள் சொன்னதுபோல அரசிடம் கடன் வாங்கி பம்புசெட் மற்றும் மோட்டார் வாங்கி வைத்து பல வருடம் ஆகியும் அவர்களுக்கு மின் இணைப்பு கிடைக்கவில்லை. அதை உடனடியாக சரி செய்ய வேண்டும்.

அடுத்து, பெயர் மாற்றம் செய்ய வேண்டுமென்று சொன் னால் சட்டமன்ற உறுப்பினர்கள் கையெழுத்து போட வேண்டு மென்று சொல்லி ஒரு பாண்ட் பத்திரத்தில் கையெழுத்து வாங்கச் சொல்கிறார்கள். இது தேவைதானா என்று அறிய விரும்புகிறேன். ஒருவர் தன்னுடைய பெயரை மாற்ற வேண்டு மென்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினர் பாண்ட் பத்தி ரத்தில் கையெழுத்து போடுவது தப்பு இல்லையா? அது எப்படி போடலாம்? சட்டமன்ற உறுப்பினர் கையெழுத்து போட்டுக் கொடுத்து, அவர் தான் இவர் என்று நிருபிக்க வேண்டுமா என்று அறிய விரும்புகிறேன். அவர்களிடமிருந்துதான் இது வரை பணம் பெற்றிருக்கிறீர்கள். வசூலித்து வந்திருக்கிறீர்கள். அவர்களிடமே அந்தப் பெயர் மாற்றத்தை செய்து கொடுத் தால் என்ன? சட்டமன்ற உறுப்பினர் பாண்ட் பத்திரத்தில் கையெழுத்து போட வேண்டுமென்று சட்டம் ஏதாவது இருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை. இவற்றையெல்லாம் மின்சார வாரியம் தவிர்க்க வேண்டும்.

இன்னொன்று, கிராமங்களிலும், நகரங்களிலும் மின் வாரி யத்தால் போடப்பட்ட விளக்குகள் சரியாக எரிவதில்லை. கிராமங்களைச் சொன்னால் யூனியனில் கொடுத்து விட்டோம் என்று சொல்வீர்களோ என்னவோ தெரியவில்லை. அது எப்படி இருந்தாலும் கிராமங்களிலும், நகரங்களிலும் மின் விளக்குகள் சரியாக எரியவில்லை, அதைச் சரிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1986 நவம்பர் 19

இன்னொன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். திருவொற்றியூர்
நகர்மன்றத் தலைவர் காஞ்சிபுரத்தில் நடந்த மதிப்பீட்டுக் குழுக்
கூட்டத்தில் ஒரு விவரத்தைச் சொன்னார்கள். மின் வாரியத்
தில் புதியதாக இணைப்புகள் போடுவதற்கு நகர்மன்றம்
மனு கொடுத்திருக்கிறது. அதற்கு உரிய பணத்தைக் கட்டச்
சொல்லி மின்வாரியம் கேட்கிறது. அதற்குரிய பணத்தைக்
கட்டிவிட்டார்கள். ஆனால் மின் வாரியம் என்ன சொல்லி
யிருக்கிறது? நீங்கள் தரவேண்டிய பாக்கிக்காக இதை வரவு
வைத்துக்கொண்டோம். இன்னும் அதிலே பாக்கியிருக்கிறது.
அதையும் கட்டிவிட்டு பிறகு இதற்கு பணம் கட்டுங்கள் என்று
சொல்லியிருக்கிறார்கள். இதுதான் பிரச்னையென்று நீங்கள்
சொல்கிறீர்கள் என்று நான் கருதுகிறேன். சிக்கலும், பிரச்
னையும் இப்படித்தான் இருந்து கொண்டிருக்கின்றன. நகர்
மன்றங்களில் பணம் இல்லையென்பது அனைவருக்கும் தெரிந்த
விஷயம். நகர்மன்றங்கள் 15 ஆண்டுகளாக வீட்டு வரியை
உயர்த்தாமல் இருக்கின்றன. இதில் ஏப்ரல் மாதத்திலிருந்து
நிலைமை சீர்திருந்தும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.
அப்படியிருக்கிறபோது பழைய பாக்கிகளை வசூலிப்பதை
நீங்கள் தள்ளி வைத்திருக்கலாம். இப்படிப் பணம் கட்டச்
சொல்லி விட்டு மின் இணைப்புத் தராமல் இருப்பது நியாயம்
தானா? திருவொற்றியூர் நகர்மன்றத் தலைவருக்கே இந்த கதி
என்றால் சாதாரண மக்களின் நிலைமை என்னவென்பதை
எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன்.

கடைசியாக நான் தெரிவிக்க விரும்புவது மின் வாரியத்
தலைவரைப் பொறுத்தவரையில் அவருடைய திறமையில் நான்
குறை காண முடியாது. அவர் திறமைசாலிதான் என்று நான்
நம்புகிறேன். ஆனால் மின் வாரியத்தில் உள்ள ஊழியர்கள்
அனைவரும் ஒட்டுமொத்தமாக இவரை விலக்க வேண்டு
மென்று மனுக்களைக் கொண்டு வந்து கொடுத்துக் கொண்டே
இருக்கிறார்களே? அவர்கள் எட்டு லட்சம் பேர்கள் இருக்கி
றோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். போராட்டத்
தைத் துவங்கவிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இதெல்
லாம் தேவைதானா? ஏற்கெனவே இந்த அரசு ஆசிரியர்
போராட்டத்தில் எவ்வளவு சிரமப் பட்டிருக்கிறது? இன்னொரு
போராட்டம் தேவைதானா? இந்த ஐ. ஏ. எஸ். அதிகாரி
யினுடைய திறமை வேறு இலாக்காவிலே பயன்படலாமே ?
பல்வேறு இலாக்காக்களில் அவருடைய பணி சிறப்பாக இருக்கு
மென்று நம்புகிறேன். இதை இந்த அரசாங்கம் கவனிக்க
வேண்டுமென்று கேட்டு, அளித்த வாய்ப்பிற்கு நன்றி கூறி
முடித்துக்கொள்கிறேன்.



1986 நவம்பர் 19]

*திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சியின் சார்பாக
மின்வாரிய நிதிநிலை அறிக்கை மீது ஒருசில கருத்துக்களைச்
சொல்ல முன் வந்துள்ளேன்.

நாட்டினுடைய முதுகெலும்பாக இருப்பது மின்சாரம்.
ஆனால் இங்கே மின்சாரம் சரியான முறையில் கிடைக்க
வில்லையென்று பல்வேறு உறுப்பினர்களும் பேசினார்கள்.
சில உறுப்பினர்கள் பேசும்போது மத்திய அரசு புதிய திட்டங்
களுக்கு அனுமதி வழங்கவில்லையென்று குற்றம் சாட்டினார்
கள். இது குறித்து மத்தியில் இருப்பவர்களுடன் நான் நேரடி
யாகப் பேசியதுண்டு, அவர்கள் சொல்வது என்னவென்றால்.
மாநில அரசிடமிருந்து வரும் பைல்களில் ஏதாவது விளக்கங்
களைக் கேட்டால் அந்த பைல்கள் திரும்ப வருவதே
இல்லையென்பதுதான். மேலும் முன்னாள் மின்சாரத் துறை
அமைச்சர் மாண்புமிகு பண்ருட்டியார் அவர்கள் மாண்புமிகு
முதல்வர் அவர்களுடன் அடிக்கடி டெல்லிக்கு செல்கிறவர்
கள். அப்படிச் செல்கிறபோது முதல்வர் அவர்களிடம் தெரி
வித்து, இத்தகைய சிக்கல்கள் இருக்கின்றன, மின் வாரியத்
திற்கு அனுமதி கிடைக்கவில்லையென்று தெரிவித்து, அதைப்
பாரதப் பிரதமரிடம் சொல்லி சுலபமாக முடித்திருக்கலாம்.
அப்படிச் செய்யாமல் இருந்து விட்டு 14 வருடம், 15 வரு
டங்களாக பெர்மிஷன் கிடைக்கவில்லையென்று இந்த அறிக்
கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்னையைத் தீர்க்க
நேரடியாகவே அமைச்சர் அவர்கள் டெல்லிக்கு சென்று,
அங்கேயிருந்து பேசி முடித்திருக்கலாம். இதைத்தான் டெல்லி
அமைச்சர்கள் சொல்கிறார்கள், அனுமதி கிடைக்கவில்லை
யென்று சொல்லியிருக்கிற காரணத்தினால் இதனைச் சொல்
கிறேனே தவிர வேறொன்றும் இல்லை. அனுமதி வழங்க
வேண்டியது மத்திய அரசினுடைய கடமைதான். ஆனால்
அந்தக் கோப்பில் ஒரு 'கொரி' போட்டு வந்தால் அதனைப்
பார்க்கவேண்டிய பொறுப்பு மாநில அரசுக்குத்தான் இருக்
கிறது. அதைத் தீர்ப்பதற்கு இங்கேயிருக்கிற அமைச்சர்கள்
மத்திய அமைச்சரைச் சந்தித்துப் பேச வேண்டும். அதைச்
செய்யாமல் விட்டு விட்டு மத்தியிலே தேங்கியிருக்கிறது என்று
அறிக்கையிலே சொல்லியிருப்பது சரியல்ல. நான் யாரையும்
குறை சொல்லவில்லை. மத்திய அரசு உண்மையிலேயே
கொடுக்கவில்லையென்றால் அது குற்றம்தான். அதை வாங்கு
கிற பொறுப்பு மாநில அரசுக்கு உண்டு என்பதை உணர
வேண்டும், அதைத் தட்டிக்கழிக்கக் கூடாது என்றுதான் இந்த
நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த வாரியத்தைப் பொறுத்தவரையில் தொழிலாளர்
களுக்கும் அங்கேயிருக்கிற மேல் அதிகாரிகளுக்கும் சுமூகமான
உறவு முறை இருப்பதாகத் தெரியவில்லை. காரணம் அடிக்கடி
ட்ரான்ஸ்பர் செய்வதாகச் சொல்கிறார்கள். குறிப்பாக
கன்னியாகுமரி மாவட்டத்தில் என்னுடைய தொகுதியைத்
தாண்டினால் அடுத்து இருப்பது கேரளாதான். அங்கே இருக்கிற
அதிகாரிகள் யார் என்றால் இந்த வாரியத்திலிருந்து பல
தவறுகள் செய்தவர்கள் என்று வாரியத்தில் சொல்லலாம்.
ஆனால் நாங்கள் தவறு செய்யவில்லை, விளவங்கோடு சட்ட
மன்றத் தொகுதியில் இருக்கிற மக்கள் தவறு செய்ய
வில்லை. அந்த அதிகாரிகளைக் கேட்டபோது சட்டமன்ற
உறுப்பினர் இனி மாற்றினால் எங்களைக் கேரளாவிற்குத்தான்
மாற்ற முடியும்; கேரளாவிற்கு மாற்ற முடியாது. ஆகவே
எங்களுடைய பக்கத்து ஊராகத்தான் மாற்ற முடியுமென்று
சொல்கிற அளவிற்கு நிலைமை இருக்கிறது. அங்கே

(முற்பகல் 12-40)

பார்த்தால் ஜெ. இ. கிடையாது. டி. இ. இருக்க
மாட்டார். எந்த அளவுக்கு இருக்கிறது என்றால், அவர்கள்
என்ன சொல்லுகிறார்கள் என்றால், எங்களுக்கு இங்கே
வேலை செய்ய விருப்பம் இல்லை என்று சொல்லுகிறார்கள்.
அந்த அளவுக்கு இங்கே இருக்கிற செயலாளரோ இங்கே
இருக்கிற மேல் அதிகாரிகளோ நிச்சயமாக டிரான்ஸ்பர்
செய்யக்கூடாது. அந்த ஊழியர்களை வரவைத்து அவர்களை
வசதியான இடங்களுக்கு டிரான்ஸ்பர் செய்யவேண்டும். 100
கிலோ மீட்டர், 200 கிலோ மீட்டர் தூரத்தில் டிரான்ஸ்பர்
செய்தால் பரவாயில்லை, ஆனால் திடீர் என்று 500 கிலோ
மீட்டர், 1,000 கிலோ மீட்டர் தூரத்திற்கு அவர்களை
டிரான்ஸ்பர் செய்வது நல்லது அல்ல அவர்களுடைய குடும்பம்
இங்கே இருக்கிறது. அவர்கள் அங்கே வேலை செய்கிறார்கள்.
இப்படி இருந்தால் நிச்சயமாக அவர்கள் அந்த வேலையை
ஒழுங்காக செய்வது இல்லை. இது நான் குறிப்பாக நேரடியாகக்
கண்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் ஒரு
வேலையைச் செய்யவேண்டும் என்றால் அவர்கள் என்ன
சொல்லுகிறார்கள்? எங்களுக்கு வேலைக்கு ஆள் இல்லை என்று.
ஏ.ஈ.யைக் கேட்டால் 24 ஆயிரம் போஸ்டுகளை காலி செய்து
விட்டதாக அவர்கள் சொல்லுகிறார்கள். வேலைவாய்ப்பு
இன்றி கஷ்டப்படுகின்ற இந்தக் காலத்திலே நிச்சயமாக அந்த
போஸ்டுகளை அபாலிஷ் செய்வது சரி அல்ல. அது அரசி
னுடைய கொள்கையும் அல்ல. நிச்சயமாக அதிகமான போஸ்டு
களை கிரியேட் செய்து வேலைவாய்ப்பைத் தரவேண்டும்.
ஆனால் தமிழ்நாடு மின் வாரியத்தைப் பொறுத்த மட்டில்
அனேக போஸ்டுகளை காலி செய்தாகி விட்டது. ஏறத்தாழ





5 ஆயிரம் ஊழியர்களைப் பல்வேறு இடங்களுக்கு மாற்றியதாக புகார் சொல்லப்படுகிறது. அது அட்மினிஸ்ட்ரேட்டிவ் கிரவுண்டில் மாற்றியிருக்கலாம். நான் மாற்றக் கூடாது என்று சொல்லவில்லை. ஆனால் அங்கே இருக்கிற ஊழியர்களின், அதிகாரிகளின் சிரமங்களை எல்லாம் கணக்கில் எடுத்துப் பார்த்து மின்சார வாரியம் நடந்து கொள்ளவேண்டும் என்பது தான் என்னுடைய வேண்டுகோள்.

மேலும் எங்களுடைய மாவட்டத்தில் உள்ள நல்ல அதிகாரிகளை எல்லாம் மாற்றி பல்வேறு மாவட்டங்களுக்குப் போட்டு இருக்கிறார்கள். குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இன்ஜினியர்கள் அதிகமாக உள்ள மாவட்டம். டி.இ., ஏ.இ. என்று எந்தப் பகுதியிலும் அதிகாரிகள் இருப்பார்கள். ஆனால் அவர்களை எல்லாம் வெளிமாவட்டங்களில் போட்டுவிட்டு எங்களுக்கு எங்கோ இருந்து, வாரியத்தில் பல தப்புகள் செய்தவர்களைப் போட்டார்கள் என்று நான் சொல்ல வரவில்லை. அதிகாரிகளைக் குறை சொல்ல நான் தயாராக இல்லை. இருந்தாலும் அங்கே வருகின்றவர்கள் ஒழுங்காக வேலை செய்வதாகத் தெரியவில்லை.

குறிப்பாக நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன், இந்தியாவிலேயே பார்க்க முடியாது, தமிழகத்தில் வீட்டுக்கு மின் இணைப்பு கேட்டு மனு போட்டு 7 ஆண்டுக் காலமாக எங்கள் மாவட்டத்தில் தேங்கி இருக்கிறது. என்னுடைய சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில் 1978-1979 ஆம் ஆண்டில் வீட்டுக்கு மின் இணைப்பு வேண்டும் என்று மனு கொடுத்து இதுவரை நிறைவேற்றப்படவில்லை. கடந்த ஒரு வாரத்திற்கு முன்னால் சேர்மனைப் பார்க்கவேண்டும் என்று சென்றேன். பார்க்க முடியவில்லை. ஆனால் மனுவை மட்டும் கொடுத்தேன். சி.இ. (மெட்டிரியல்ஸ்) என்பவரைப் பார்த்து கேட்டேன். நீங்கள் உடனடியாக எங்கள் தொகுதியில் வீட்டுக்கு மின் இணைப்பு தரவேண்டும் என்றும் அப்படி கொடுக்கவில்லை என்றால் நான் இங்கேயே மறியல் செய்வேன் என்றும் மனு கொடுத்தேன். மாண்புமிகு முதலமைச்சருக்கும் கடிதம் எழுதியிருக்கிறேன். குமரி மாவட்டத்தில் உள்ள எஸ்.இ. 117 கிலோ மீட்டர் நீளம் இருக்கின்ற கம்பி கிடைத்தால்தான் 7 ஆண்டுக் காலமாக தேங்கி இருக்கின்றவர்களுக்கு மின் இணைப்பு கொடுக்க முடியும் என்று சொல்கிறார். சி.இ. (மெட்டிரியல்ஸ்) சொல்லுகிறார், இது எங்களுக்கு பெரிய பிரச்சினை உள்ள காரியம் அல்ல, 1,800 கிலோ மீட்டர் நீளம் உள்ள கம்பி நெல்லை மாவட்டத்தில் இருக்கிறது என்று. அங்கே இருந்தால் மட்டும் போதுமா? நெல்லை மாவட்டத்திலிருந்து குமரி மாவட்டத்திற்குக் கொண்டுவர ஆணையிட்டால்தானே அது குமரி மாவட்டத்திற்கு வந்து சேரும்.

குறிப்பாக என்னுடைய பகுதியில் ஒரு தொழிற்சாலை இருக்கிறது. தனியார் அதை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அதிலே இருந்து வருகின்ற கம்பிகளை கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு ஒதுக்கி இருக்கிறார்கள். இப்போது என்னுடைய தொகுதியில் உள்ள டி.இ.யிடம் கேட்டால் அவர் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்தவர், ஈரோடு மாவட்டத்திலிருந்து டிரான்ஸ்பரில் வந்தேன் என்று சொன்னார்கள். ஈரோட்டில் வீட்டுக்கு கரண்டு கொடுக்க வேண்டும் என்றால், ஒரு மாதத்திலேயே இணைப்பு கொடுத்து விடுகிறார்கள் என்று சொல்லுகிறார். அதேபோல் சென்னையிலும் கொடுத்துவிடுவதாகச் சொல்லுகிறார்கள். ஏன் குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் விளவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்கு மட்டும் 7 ஆண்டுக் காலம் காலதாமதம் என்று இந்த மாமன்றத்தில் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நாங்கள் என்ன இரண்டாம் தரக் குடிமக்களா? இல்லை நாங்கள் கேரளாவைச் சேர்ந்தவர்களா? தமிழ்நாட்டுக்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லையா? ஒரு வீட்டுக்கு மின் இணைப்பு வேண்டும் என்று கேட்டால் அதற்கு 7 ஆண்டுக் காலம் என்று சொன்னால் நாங்கள் எங்கேபோய் சொல்லுவது? நாங்கள் அதை இந்த மாமன்றத்தில்தான் சொல்ல முடியும். நான் இதுபற்றி பல இடங்களில் பல அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறேன். வளர்ச்சி மன்ற (D.D.C.) கூட்டத்திலும் சொல்லியிருக்கிறேன். ஆனாலும் எந்தப் பலனும் எங்களுக்குக் கிடைக்கவில்லை.

மேலும் மின்சாரம் அங்கே மாலை 6 மணி முதல் இரவு 10 வரை கிடைப்பது இல்லை. மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை மண்ணெண்ணெய் விளக்கில்தான் மாணவர்கள் படிக்க வேண்டும். இரவு 10 மணிக்கு மேல்தான் மின்சாரம் வந்து மின்சார விளக்குகள் எரியும். இந்தப் பகுதிகளுக்கு நீங்கள் ஏன் பணம் வசூல் செய்கிறீர்கள் என்று நான் கேட்கிறேன். இதுபற்றி நான் பல அதிகாரிகளிடமும் சொல்லியிருக்கிறேன். அதற்கு அதிகாரிகள் சப்-ஸ்டேஷன் இல்லை 1964-க்குப் பிறகு இந்த மாவட்டத்தில் எந்த ஒரு பகுதியிலும் சப்-ஸ்டேஷன் உருவாக்கப்படவில்லை, அதுதான் காரணம் என்று சொல்லுகிறார்கள். மேலும் மின்சாரம் தூத்துக்குடி தெர்மல் ஸ்டேஷனிலிருந்துதான் வருகிறது, இங்கே நீங்கள் எல்லைப் பகுதியில் இருக்கிறீர்கள், உங்களுக்கு இந்தப் பகுதியில் வேண்டும் என்றால் ஒரு சப்-ஸ்டேஷன் உருவாக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். 1964-க்கு பிறகு எங்கள் மாவட்டத்தில் எந்த சப்-ஸ்டேஷனும் உருவாக்கப்படவில்லை. இதை பல தடவை நான் சொல்லியிருக்கிறேன். இந்த மாமன்றத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன், 1964-க்குப் பின்னால் ஏறத்தாழ 22 வருடங்களில் எவ்வளவோ திட்டங்களை நாம் உருவாக்கியிருக்கிறோம். ஆனால் ஒரு சப்-ஸ்டேஷன்





கூட எங்கள் மாவட்டத்திற்கு, என்னுடைய தொகுதிக்கு தரவில்லை, தரக்கூடாதா? இந்த அளவுக்கு அங்கே அதிகாரிகள் வேலை செய்ய மாட்டேன் என்கிறார்கள். நீதிமன்றத்தில் ஜட்ஜுகள் இல்லை. ஜட்ஜ்மெண்ட் வாங்கமுடிவதில்லை. 10 நாட்களாக சிம்னி விளக்குகளைப் பயன்படுத்துகிறார்கள். ஆகவே நீதிபதிகள் கூட வர மாட்டேன் என்கிற சூழ்நிலையில் எங்கள் தொகுதியிருக்கிறது. இதைப் பல அதிகாரிகளிடமும் சொல்லியும், எந்தவித பிரயோசனமும் இல்லை.

அடுத்து சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், 1980—82-லிருந்து எந்தவித தொழிற்சாலையும் வரவில்லை. சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், ரூ. 25,000 லோன் எடுத்திருக்கிறார்கள், படித்த இளைஞர்கள். ஆனால் ஒரு தொழிற்சாலைக்குக் கூட மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. 1982-லிருந்து 1986 வரை ஒரு தொழிற்சாலையாவது சுய வேலைவாய்ப்பு, 'Self-employment scheme' திட்டத்தின் கீழ் எங்கள் தொகுதிக்குக் கொடுக்கப்படவில்லை. TIIC-ல் பல கோடிக் கணக்கான ரூபாயைக் கடனாகக் கொடுக்கிறார்கள். வங்கிகளில் கொடுக்கிறார்கள். ஆனால் ஒரு தொழிற்சாலைகூட சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 1982-லிருந்து எங்களது குமரி மாவட்டத்திற்குக் கொடுக்கப்படவில்லை. அதை கேட்டால், [illegible] ஸ்கீமில் லோன் வாங்குகிறார்கள், அதற்குப் பவர் கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். தொழிற்சாலையும் துவக்கப்படவில்லை, பணமும் திரும்பக் கொடுக்கப்படுவதில்லை. ஆனால் லோன் வாங்குகிறார்கள். சீட்டிங் கேஸ் கூட பாங்குகள் மூலமாக போடுவதாகச் சொல்லி, இண்டஸ்ட்ரியல் லோன் எடுத்தவர்களை மிரட்டுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அதற்கு ஆர்.ஆர். ஆக்ட் மூலமாக பணத்தை வசூலிக்க 'TIIC' நிறுவனம் தயாராக இருக்கிறது. அந்த அளவிற்கு 4 ஆண்டுகளாக லோன் எடுத்ததற்குப் பின்னும்கூட, மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை. மெட்டீரியல்ஸ் இல்லை என்று சொல்கிறார்கள், அதிகாரிகள். இதையெல்லாம் கவனிக்கும் பொறுப்பு யாருக்கு இருக்கிறது என்று கேட்கிறேன்.

எங்களுடைய குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, அதிலும் குறிப்பாக விளவங்கோடு தொகுதி, நிச்சயமாக மின்சார வாரியத்தால் புறக்கணிக்கப்படுகிறது என்பதைத்தான் சொல்லமுடிகிறது. அங்கே மின்சார வசதி இல்லாமல் இருக்கிறது. இதையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்க்கின்றபோது, எந்தவிதத் தொழிற்சாலையும் வருவதற்கில்லை. ஆகவே [illegible] பல கோடீஸ்வரர்களைப் பார்த்து இங்கே [illegible] கிடைக்கிறது, இண்டஸ்ட்ரீஸ் ஆரம்பிக்க வசதி இருக்கிறது. [illegible] இண்டஸ்ட்ரீஸ் ஆரம்பியுங்கள், 'கேஷியூ' கிடைக்

றது தொழிற்சாலையை ஆரம்பியுங்கள் என்று கேட்டால், அவர்கள் கரண்டிற்கு எங்கே போவது என்கிறார்கள். ஒரு சப்-ஸ்டேஷன் இல்லை. சப்-ஸ்டேஷன் இல்லாத எல்லா இடங்களிலும் டிரான்ஸ்பார்மர் வைத்தாவது மின் இணைப்பு கொடுங்கள் என்று கேட்டால், அங்கே மெட்டீரியல்ஸ் இல்லை என்று சொல்கிறார்கள். இதற்கே இப்படி என்றால், மற்ற விவகாரங்களைப்பற்றிச் சொல்லவே வேண்டாம்.

ட்வாடு போர்டு மூலமாக பல கோடிக்கணக்கான ரூபாயைச் செலவு செய்து, தமிழக அரசு குடிநீர்த் திட்டங்களைத் தீட்டியிருக்கிறது. என்னுடைய தொகுதியில் மாத்திரம் 30 குடிநீர்த் தொட்டிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படாமல் 4 ஆண்டுகளாகத் தேங்கியிருக்கிறது. இதை எங்கே சொல்வது? ஒரு தொகுதிக்கு 30 தொட்டிகள் என்றால், நிச்சயமாக இந்த அரசைப் பாராட்டியாகவேண்டும். அங்கேயிருக்கின்ற அனைத்து அதிகாரிகளும் வேலை செய்கிறார்கள். ஆனால் மின் வாரியத்தைக் கேட்டால், அங்கே மெட்டிரியல்ஸ் இல்லை என்று சொல்கிறார்கள். அந்த அளவுக்குக் குடிநீர்ப் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எத்தனை கோடிக்கணக்கான ரூபாய் செலவிட்டாலும்கூட, மின்சாரம் இல்லாத காரணத்தாலே குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்த முடியாத நிலையிருக்கிறது.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் மின் வாரியம் ஒதுக்கியிருக்கிறது என்று நினைக்கிறேன். வருகின்ற அதிகாரிகளைப் பொறுத்தவரை பார்த்தால், அவர்களுக்கு எந்தவிதமான இண்ட்ரஸ்ட்டும் கிடையாது. நான் தஞ்சாவூர்க்காரன், கோயம்புத்தூர்க்காரன், நேற்றுதான் எனக்கு ஆர்டர் வந்திருக்கிறது, நேற்றுதான் ஜாயின் பண்ணியிருக்கிறேன் என்று பழியை நேரடியாக சேர்மன் மீது போடுகிறார்கள். எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால் அதை அங்கேயிருக்கின்ற பிரதிநிதிகள் கவனிக்கவேண்டும். அது மட்டுமல்லாமல் அவர்களுடைய அலுவலகத்திற்குச் சென்று குறைகளைச் சொல்லியிருந்தேன். ஆனால் இதுவரை குறைகள் எந்தவிதத்திலும் நிறைவு செய்யப்படவில்லை.

வேலைசெய்யும்போது வேலைகளை காண்ட்டிராக்டிற்கு விடுகிறீர்கள். காண்ட்ராக்ட்டர் ஒழுங்காக வேலை செய்வதில்லை. அங்கே ஊழியர்கள் கிடையாது. டீ.இ. வருகிறார். காண்ட்டிராக்ட்டுக்கு விடுகிறார். காண்டிராக்ட்காரர்கள் ஏதோ வேலை செய்துவிட்டுப் போகிறார்கள்.

எங்களுடைய பகுதியைப் பொறுத்தவரையில் புதிய கோதையாறு ஹைட்ரோ எலெக்ட்ரிக் ப்ராஜெக்ட் இருக்கிறது. 1966-ல் காமராசர் அவர்களால் துவக்கப்பட்டது. அதற்குப் பின்னர், எந்த ஒரு டெவலப்மெண்டும் செய்யாமல், அது சரியான



முறையில் இயங்காமல் இருக்கிறது. கோதையாறு ஹைட்ரோ எலெக்ட்ரிக் ப்ராஜெக்ட் திட்டத்தைத்தவிர, குளச்சல் சட்டமன்ற உறுப்பினர்கூட அவருடைய தொகுதியில் ஒரு அனல் மின் நிலையம் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அமைச்சர் அவர்களிடம் பல கூட்டங்களில் சொல்லியிருக்கிறார். அவர்களும் செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்திலாவது ஒரு தெர்மல் ஸ்டேஷன் உருவாக்கித் தந்தால்தான், நிச்சயமாக அங்கேயிருக்கின்ற மின் பற்றாக்குறையைக் குறைக்கமுடியும்.

விளவங்கோடில் ஒரு சப்-ஸ்டேஷன் உருவாக்கி, அங்கே இருக்கின்ற பிரச்சினையைத் தீர்த்து வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய மாவட்டம் படித்தவர்கள் அதிகமான அளவில் இருக்கக்கூடிய மாவட்டம், அங்கே தொழிற்சாலைகள் வசதி பெருகவேண்டுமென்றால், மின்சாரம் இல்லாமல் ஒன்றுமே செய்யமுடியாது. ஆகவே மின்சார இலாக்கா குமரி மாவட்டத்தை தனியாகக் கவனிக்க வேண்டுமென்று சொல்லி முடிக்கிறேன்.

(முற்பகல் 12-50)

*திரு.வே. கு. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள 1986-87-ம் ஆண்டிற்கான மின் வாரியத்தினுடைய நிதி நிலை அறிக்கையின் மீதும் 1985-86-ம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கையின் மீதும் என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன். குறிப்பாக இங்கே உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து உரைத்த நேரத்தில் மரியாதைக்குரிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் மாண்புமிகு திரு. சிந்தன் அவர்கள் மிகப் பெரிய ஒரு குற்றச்சாட்டை மின் வாரியத் தலைவர் அவர்கள் மீது சுமத்தியுள்ளார்கள். தொழிற்சங்கங்களைப் பற்றியெல்லாம் அவர்கள் எடுத்து உரைத்தார்கள். அதைப்பற்றி நான் சொல்ல விரும்பவில்லை, அந்த தொழிற் சங்கங்களுடைய நிலைமை குறித்து எனக்கு அவ்வளவாக ஈடுபாடு இல்லை என்ற காரணத்தினால்.

குறிப்பாக மின்வாரியத் தலைவரைப் பொறுத்தமட்டில் திறம்பட மின் வாரியத்தை நடத்துகின்ற ஒரு தலைவர் என்பதை இந்த மாமன்றம் அறியும் என்பதை குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக இங்கே ஜனதா கட்சியினுடைய தலைவர் மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் மின் வாரியத் தலைவர் திறம்பட பணியாற்றுபவர் என்ற உண்மையை அவரே சொல்லியிருக்கிறார்,

ஆக இந்த நாட்டிலே எத்தனையோ ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தமிழகத்திலே பணிபுரிந்தாலும் இந்த மின் வாரியத்தினுடைய தலைவரும் அதிலே ஒருவர் என்பதை நாம் ஒத்துக்கொண்டாக வேண்டும். ஆக இத்தனை ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைக் கட்டிக் காத்து வருகின்ற தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களை, நம்முடைய மரியாதைக்குரிய உறுப்பினர் அடிக்கடி சந்திக்கின்ற வாய்ப்பைப் பெறுகின்றவர். ஆகவே மின் வாரியத் தலைவரைப் பற்றிய குற்றச்சாட்டு இருக்குமானால், முதல்வர் அவர்களிடத்தில் உறுப்பினர் அவர்கள் எடுத்து உரைத்தால் அதுபற்றிய நடவடிக்கை அல்லது அதைப் பரிசீலிக்கின்ற நிலைமை ஏற்படும் என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே ஜனதா கட்சித் தலைவர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் மின்சார வாரியத்தில் 8 இலட்சம் பேர்கள் பணியாற்றுகின்றார்கள் என்ற கருத்தினை சொல்லியிருக்கிறார்கள். அது எப்படிப் பொருந்தும் என்பதை நான் இங்கே கேட்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். காரணம் கிட்டத்தட்ட 85,000 பேர்கள்தான் அதிலே பணியாற்றுபவர்கள் என்பதை நாம் முதலிலே தெரிந்துகொண்டாக வேண்டும். ஆக 85,000 பேர்கள் பணியாற்றுகின்ற அந்த நிறுவனம் கிட்டத்தட்ட 4, 5 ஆண்டுக்காலமாக எந்தவித ஸ்டிரைக் போன்ற மின் பணிகள் தடைபடுகின்ற நிலைமைகள் இல்லாமல் நடைபெற்றுக்கொண்டு வருகிறது என்பதை ஒத்துக்கொண்டாக வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்தமட்டில் மின் இணைப்பினை எந்த அளவிற்குச் சீராகக் கொடுத்துள்ளார்கள் என்பதை நிச்சயமாக ஒவ்வொருவரும் பாராட்டியாக வேண்டும். அமைச்சராக இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும், மேலவை உறுப்பினராக இருந்தாலும் முறைப்படி, சீனியாரிட்டி அடிப்படையில் இன்றையதினம் மின் இணைப்பு கொடுக்கப்பட்டு வந்துள்ளது என்பதை ஒத்துக்கொண்டாக வேண்டும். ஆக இந்த அடிப்படையில் இன்றையதினம் மின் வாரியம் செயல்பட்டுக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே நம்முடைய மரியாதைக்குரிய திரு. அன்பழகன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் கீழ்பவானி மின் திட்டத்திற்கு மத்திய அரசினுடைய அனுமதி கிடைக்கவில்லை என்பதைச் சொன்னார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வது,



இந்தத் திட்டமானது மத்திய அரசின் அனுமதி பெற்று, வேலைகள் துவங்கப்பட்டு, 3, 4 மாதங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அது கிட்டத்தட்ட ரூ. 10 கோடியளவில் 8 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற திறன் கொண்டது, அதற்கான பணிகள் துவங்கப்பட்டு, அதிகாரிகளும் நியமிக்கப்பட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் அந்தப் பணியை இன்னும் கொஞ்சம் துரிதப்படுத்தி கூடிய விரைவிலே முடிக்கின்ற நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்பதை இந்த மன்றத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

குறிப்பாக மின்சார வாரியத்தைப் பொறுத்தமட்டில் இன்றையதினம் 10.74 இலட்சம் மின் இணைப்புகள் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு உள்ளதாக இங்கே குறிப்பிட்டுள்ளார்கள். ஆக 10 இலட்சத்திற்கு மேலாக கொடுக்கப்பட்டிருந்தாலும் இன்னும் எத்தனையோ இலட்ச அப்ளிக்கேஷன்களுக்குக் கொடுக்கப்படாமல் இருக்கின்றன என்பதை நாம் ஒத்துக்கொண்டாக வேண்டும். ஒரு விவசாயி மின் இணைப்பு கேட்டு விண்ணப்பம் கொடுத்தால் அல்லது மின் இணைப்புக்கு ஆகின்ற ஒட்டுமொத்தமான செலவை அந்த விவசாயியே ஏற்றுக்கொள்கின்ற ஒரு நிலைமை வருமேயானால், நாம் அந்த சீனியாரிட்டி உத்தரவை கொஞ்சம் தளர்த்திக் கொடுக்க முன்வரவேண்டும் என்பதை இந்த மன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் மின்சார வாரியத்திலே மெட்டீரியல் வாங்குவதற்குப் பணம் இல்லையென்று சொல்கிறார்கள். ஆகவே, விவசாயிகளே ஒட்டுமொத்தமாக 10, 15 பேர்கள் சேர்ந்து ஒரு டிரான்ஸ்பார்மருக்குண்டான செலவை நாங்களே ஏற்றுக்கொள்கின்றோம், அந்த மின் இணைப்புகளுக்கான கம்பங்கள், கம்பிகளுக்கான செலவை நாங்களே ஒட்டுமொத்தமாக ஏற்றுக்கொள்ளுகின்றோம், எங்களுக்கு சீனியாரிட்டி இல்லாமல் மின் இணைப்பைக் கொடுங்கள் என்று வாரியத்திற்கு அல்லது அமைச்சருக்கு எழுதுவார்களேயானால், அதை சீனியாரிட்டி இல்லாமல் கொடுப்பதற்கு மின் வாரியம் முன்வரவேண்டும். இந்தக் கருத்து விவசாயிகள் எங்களிடம் தெரிவித்த கருத்து. ஆகவே, இதை தயவுசெய்து மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். காரணம், மின் இணைப்பு இலவசமாக கொடுக்கப்படும் என்று அமல்படுத்துகின்ற திட்டத்தைத் தாங்கள் கையிலே வைத்துக்கொண்டிருந்தாலும், அது ஒரு விதிமுறையாக இருந்தாலும், இந்த நேரத்திலே இந்தக் கொஞ்சம் மாறுதல் செய்து, அவர்களே ஏற்றுக்கொள்ள முன்வருவார்களேயானால் அதைக் கொடுப்பதில் அரசாங்கத்திற்கு எந்தவிதமான நஷ்டமும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் ஆழ் குழாய்க் கிணறுகளை அமைக்கிறார்கள். இதுவரையிலும் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைப்பதற்குண்டான இயந்திரங்கள் அரசாங்கத்திலே இல்லாமல் இருந்தது. இப்போது கிணறுகள் வெட்டுவது என்பது எவ்வளவு சிக்கலானது என்பது இங்கே இருக்கின்ற, விவசாயப் பகுதியிலிருந்து வந்த உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் தெரியும். பெரிய கிணற்றை ஆழப்படுத்துவதை விட, ஒரே நாளில் ஆழ் குழாய்க் கிணறுகள் 300 அடி, 400 அடி அமைத்து விவசாய நிலங்களுக்குத் தேவையான தண்ணீரைப் பெறுகின்ற எளிமையான முறைகள் இன்றையதினம் இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன.

அப்படிக் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரங்களினால் ஆழ் குழாய்க் கிணறுகளை அமைத்தால், விவசாயிகள் ஆயில் இன்ஜின் வைத்தோ அல்லது வேறு வழியிலோ தண்ணீர் இறைக்கமுடியாது. கண்டிப்பாக மின் இணைப்பு கொடுத்தால்தான், ஆழ் குழாய்க் கிணற்றிலிருந்து அவர்கள் தண்ணீரை எடுக்கமுடியும். ஆழ்குழாய்க் கிணற்றை ஆயிரக் கணக்கில் செலவு செய்து அமைக்கின்ற அந்த விவசாயிகளுக்கு சீனியாரிட்டி இல்லாமல். விண்ணப்பம் கொடுத்தால் கூடிய விரைவில் மின் இணைப்பு கொடுக்கின்ற, மறுபரிசீலனை செய்கின்ற உத்தரவை அரசாங்கம் இடவேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்,

காரணம், பல விவசாயிகள், வறட்சி ஏற்பட்ட நேரத்தில் தங்களுடைய பயிர்களை உடனடியாகக் காப்பாற்றவேண்டுமானால் ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்தாவது அந்தப் பயிர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று கடன் எல்லாம் வாங்கி அதை அமைத்து இருக்கிறார்கள். ஆனால் அந்த ஆழ் குழாய்க் கிணறுகளிலிருந்து தண்ணீரை இறைக்க அவர்களால் இயலவில்லை. ஆனால் மின் மோட்டார் இருக்குமானால் அவர்கள் சப்-லைன் மோட்டார் வைத்து அதிலிருந்து தண்ணீரை எடுத்து விவசாயத்தைக் காப்பாற்றுகின்ற நிலைமை உள்ளது என்பதை எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றையதினம் குடிநீர் வடிகால் வாரியத்திற்கென்று தனியாக, தனி லைன் அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டு விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. காரணம், அங்கே இருக்கின்ற குடிநீர்ப் பிரச்சினையை முழுமையாகத் தீர்க்க வேண்டுமென்றால், அங்கே இருக்கின்ற மக்களுக்கு முழுமையாகத் தண்ணீர் கிடைக்கவேண்டும் என்றால், இந்த வறட்சி நேரத்தில் 24 மணி நேரமும் இயங்குகின்ற குடிநீர்த் திட்டமாக இருக்குமானால்தான் அந்தத் திட்டத்தினுடைய முழுப் பலன் அங்கே இருக்கின்ற மக்களுக்குக் கிடைக்கும். ஆக,



அப்படிக் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் அதற்குண்டான கட்டணத்தைக் கட்டுகிறோம் என்று விண்ணப்பிக்கின்றபோது அதற்குண்டான எஸ்டிமேட்டுகளைத் தயார் செய்து கொடுப்பதிலே மின்வாரியத்தில் காலதாமதம் ஆவதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். ஆகவே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் வருகின்ற விண்ணப்பங்களுக்கு உடனடியாக உத்தரவுகளைத் தரவேண்டும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

இன்றையதினம் குடிசைகளுக்கு மின் இணைப்பு கொடுக்கின்ற மாபெரும் திட்டத்தைச் செயல்படுத்துவதோடு நிறுத்திக் கொள்ளாமல், ஓடு போட்டிருக்கின்ற வீடுகளுக்கும் மின் இணைப்புக் கொடுக்கவும் முன் வந்துள்ளார்கள். அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதே நேரத்தில், புதிதாக பேரூராட்சிகளாகி இருந்தால் அது இல்லை என்ற ஒரு குறைபாட்டை எங்களிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். பேரூராட்சியாக இருந்தாலும், நகராட்சியாக இருந்தாலும், ஊராட்சியாக இருந்தாலும் குடிசை வீடுகள் எங்கே இருக்கின்றனவோ, ஆதிவாசிகள், ஆதி திராவிடர்கள் வாழ்வதற்கு, ஏழை எளியவர்கள் வாழ்வதற்கு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறோமோ அவை அனைத்திற்கும் மின் இணைப்பு கொடுக்க, ஒரு விளக்கு மின் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல், 'அடிஷனல் லோட்' கொடுப்பதைப் பற்றி இங்கே பல உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள். ஒரு விவசாயி 5 எச்.பி. மோட்டார் வைத்து இருக்கிறார் என்றால், இன்றையதினம் அதற்குப் பக்கத்தில் 4 ஏக்கர், 5 ஏக்கர் வாங்கியிருப்பார்கள். ஆகவே, 5 ஏக்கர், 10 ஏக்கர் பூமி வைத்து இருந்த ஒரு விவசாயிக்கு தற்போது 15 ஏக்கர் பூமி இருக்கும். அப்படி இருக்கின்ற ஒரு விவசாயி 5 எச்.பி. வைத்து இருக்கிறவர், 7½ எச். பி. கேட்கிறார் என்றால், அதனால் மின் வாரியத்திற்கு ஒரு பைசா கூட நஷ்டம் இல்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். காரணம், அதற்குண்டான மீட்டர், ஒயர் அனைத்தும் கம்ப்ளிட்டாக விவசாயிகளே வாங்கி அவர்கள் செலவிலேயே செய்து கொள்கிறார்கள். ஆகவே, அதற்குண்டான அடிஷனல் லோடு கொடுக்கும் உத்தரவை உடனடியாக வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, வறட்சி நேரத்தில் விவசாயிகள் கிணறு வெட்டுகின்ற பணியை மிகத் தீவிரமாக தமிழகத்திலே கடைப்பிடித்து வந்தார்கள். அப்படி அவர்கள் கிணறு வெட்டுகின்ற நேரத்தில், கிணறுகளை ஆழப்படுத்துகின்ற நேரத்தில் அந்தக்

[திரு. வே. கு. சின்னசாமி] [1986 நவம்பர் 19

கிணற்றிலிருந்து மண், கற்களை மாடுகள் அல்லது ஆட்களை வைத்து எடுக்கும் சாத்தியக்கூறுகள் நிச்சயமாக இல்லை. ஆக, அவர்கள் என்ன செய்கிறார்கள்? மண் எடுக்கின்ற இயந்திரங்களை, கிரேன் போன்ற இயந்திரங்களை வைத்து அங்கே மண் எடுக்கின்ற சூழ்நிலை உருவாகிறது, அப்படி அந்த மண் எடுக்கின்ற இயந்திரங்களைப் பயன்படுத்த, அதற்கு மின்சாரத்தைப் பயன்படுத்தி ஆகவேண்டும். அப்படி அவர்கள் மின்சாரத்தைப் பயன்படுத்துகின்ற நேரத்தில், மின் வாரிய அதிகாரிகள் பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை அவர்கள் மீது தண்டனையாகச் சுமத்தி வசூல் செய்கின்ற நிலைமை உருவாகி வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். கிணறு ஆழப்படுத்துகின்ற விவசாயிகள் மண் எடுக்கின்ற இயந்திரங்களை பயன்படுத்துகின்ற தகவலை கோட்டப் பொறியாளரிடமோ, மேற்பார்வைப் பொறியாளரிடமோ அல்லது செயற்பொறியாளரிடமோ தெரிவிப்பார்களானால், மண் எடுக்க அனுமதியை அந்த விவசாயிகளுக்குத் தருவதற்கான உத்தரவை தயவுசெய்து பிறப்பிக்கவேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

[பிற்பகல் 1-00]

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை, பெரியார் மாவட்டம் சத்தியமங்கலம் வட்டத்தில் கொத்தமங்கலம் என்ற பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு அது மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களாலே திறந்து வைக்கப்பட்டது. அப்போது அந்த துணை மின் நிலையத்தை அமைப்பதற்காக தங்கள் நிலங்களையே கொடுத்த விவசாயிகள் அமைச்சர் அவர்களிடம் ஒரு விண்ணப்பத்தைக் கொடுத் தார்கள். அதற்கு நிலம் கொடுத்த அந்த நிலச் சொந்தக்காரர் களுக்கு இதுவரை இழப்பீட்டுத் தொகையாகப் பணம் தரப்பட வில்லை என்று அந்த விண்ணப்பத்திலேயே சொல்லியிருந்தார் கள். ஆனால் அது என்ன காரணத்தாலோ இதுநாள் வரை அந்த விவசாயிகளுக்குப் போய்ச் சேரவில்லை என்பதை மிகுந்த வருத்தத்தோடு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். அந்தப் பணம் மின் வாரியத்திலிருந்து கொடுக்கப்பட வில்லையா அல்லது வருவாய்த் துறையிலிருந்து பணம் போய் சேரவில்லையா என்று எனக்குத் தெரியவில்லை என்று சொல்லிக் கொள்வதோடு அவர்களுக்கு உடனடியாக அந்தப் பணம் கிடைக்கும் நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1986 நவம்பர் 19] [திரு. வே. கு. சின்னசாமி]

தமிழ்நாடு மின் வாரியத்தின் 3—வது அனல் மின் நிலையத்தை அமைக்க எண்ணூருக்கு அருகில் இருக்கிற ஒரு இடத்தைத் தேர்வு செய்துள்ளதாகவும் அந்த இடத்தில் வி.ஜி.பி.யினுடைய அதிசய உலகம் அமைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் எனக்குத் தகவல் வந்திருக்கிறது. எந்த அடிப்படையில் அந்த இடம் அவர்களுக்கு வழங்கப்பட்டது என்பதைப் பார்த்து இதை மறு பரிசீலனை செய்து 3-வது அனல் மின் நிலையம் அமைப்பதற்கான அந்த நிலத்தை உடனடியாக ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வடசென்னையில் 3வது அனல் மின் நிலையம் எண்ணூர் ஊராட்சி எல்லைக்குள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும் அதன் காரணமாக 4 கிராமங்களை அங்கேயிருந்து காலி செய்ய உத்திரவிட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக அந்தப் பகுதியில் 2,000 ஏக்கருக்கும் மேற்பட்ட அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்கள் இருப்பதாகச் சொல்லப் படுகிறது. அரசுக்குச் சொந்தமான அந்த இடத்தில் அந்த மின் நிலையம் அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கான வாய்ப்பு அளித்ததற்கு மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்குமுன் இங்கே உள்ள அனைத்து உறுப்பினர்களின் சார்பாகவும், பேரவைத் தலைவர் அவர்கள் சார்பாகவும் துணைத் தலைவர் அவர்கள் சார்பாகவும் ஒரு கருத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே ஸ்பெஷல் பிரையாரிட்டி என்ற ஸ்கீம் ஒன்று இருந்தது. அந்த திட்டத்தை இப்போது நிறுத்தி விட்டார்கள். அதை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பொதுப்பணியில் ஈடுபடுகிற சட்டமன்ற உறுப்பினரானாலும் சரி, அமைச்சர்களானாலும் சரி, நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, வேறு பொறுப்பில் இருக்கிறவர்களானாலும், சரி தம்முடைய குடும்பங் களை விட்டுவிட்டு பொதுமக்களுக்கு உழைக்கிற சூழ்நிலை உருவாகிறது. ஆகவே ஒரு மாதத்தில் தன்னுடைய சொந்த வேலையை 2, 3 நாட்களுக்கு மட்டும் பார்த்தாலும் கூட மீதமுள்ள நாட்களையெல்லாம் மற்றவர்களுக்காகத்தான் செலவிட வேண்டியிருக்கிறது. அப்படி கவனித்தாலும் தம்முடைய விவசாய நிலங்களை ஓரளவுக்காவது ஒழுங்காகக் கவனித்தால்தான் நாம் அரசியல் வாழ்விலும் பொதுவாழ்விலும் ஒழுக்கமுள்ளவர்களாக நடக்க முடியும் என்ற அடிப்படையில் இந்த ஸ்பெஷல் பிரையாரிட்டி என்ற சலுகையை மீண்டும்

அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரசின் தரப்பில் தரப்பட்டு வந்த அந்தச் சலுகையை மீண்டும் அமைச்சர் அவர்கள் அளிக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் இது இங்கே உள்ள அனைத்து உறுப்பினர்களின் ஒட்டுமொத்தமான கருத்து. இதிலே கட்சி வேறுபாடு ஏதுமில்லை. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று பாகுபாடில்லை. எல்லோருடைய ஒட்டுமொத்தமான கருத்து. தலைவர் அவர்களையும் சேர்த்தே நான் சொல்லுகிறேன். எனவே கண்டிப்பாக மீண்டும் அந்த ஸ்பெஷல் பிரையாரிட்டியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளிக்க முன்வர வேண்டுமென்று மாமன்றத்தின் மூலமாக வலியுறுத்தி அமைகிறேன். வணக்கம். நன்றி.

*திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, புதிய பொறுப்பேற்றிருக்கிற அமைச்சர் அவர்களுடைய பெயரால் வந்திருக்கிற இந்த அறிக்கையில் கண்டுள்ள குறிப்புகளில் பல பாராட்டத்தக்க அம்சங்களாகவும் சில அம்சங்களைப் பொறுத்தவரையில் அவர்கள் இன்னும் சிறப்பாகச் செய்வதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்கிற வகையிலும் இடம் பெற்றிருப்பதைப் பார்க்கிறேன்.

புதிய புதிய முயற்சிகளில் அரசு ஈடுபட வேண்டுமென்று சொல்கிற ஆசையினால், காற்று இயந்திரங்களின் மூலம் மின்சாரம் பெறுகிற முயற்சியை இந்தியாவில் இருக்கின்ற நான்கு மாநிலங்கள் இன்று சோதனையாக, பரிசோதனையாக ஆரம்பித்திருக்கின்றன. தமிழ்நாட்டிலும் தூத்துக்குடி பக்கத்திலேயும் இது நடைபெற்றிருக்கிறது. ஆனால் இதைப் பற்றித் தெரிந்த வல்லுநர்கள் ஆயிரம் கிலோமீட்டருக்கு மேலே கடற்கரையைக் கொண்ட நமது தமிழகத்திலே கடற்கரைப் பகுதியில் எல்லாம் இவற்றை ஏற்படுத்தினால் அந்தந்த பகுதியில் இருக்கின்றவர்களுக்கு அந்தந்த காற்றாடி இயந்திரத்தின் மூலம் இருக்கின்ற மின்சாரத்தைக் கொடுத்துவிடலாம், அதனாலே நீளமான கம்பிகளைப் போடும் வேலையில்லை, கம்பிகள் வழியாக மின்சாரம் செல்லுகிற நேரத்தில், வீணாவதைப்போல இதிலே வீணாக இடமில்லை, மின்சாரத் திருட்டுக்கு வழியில்லை, எனவே இதில் அதிக அக்கறையோடு தமிழகத்திலே நடத்தலாம் என்ற குறிப்பைச் சொல்லுகிறார்கள். அமைச்சர் பெருமகனாரும் வாரியத் தலைவரும் இதைக் கவனத்திலே கொள்ளுவார்கள் என்று கருதுகிறேன். கடற்கரை மட்டுமல்லாமல் மேட்டுப்பாங்கான இடங்களிலும் அதனைச் செய்யலாம். 'Tidal waves' என்ற கடலலைகளின் மூலமும் மின்சாரம் பெறுவது என்பது உலகத்திலே இப்போது நடைமுறைச் சாத்தியமாகிவிட்டது.



கடலலைகளின் மூலமும் மின் உற்பத்தி செய்யப்போகிற முயற்சியை மேற்கொள்வதாக ஒரு தடவை குறிப்பு வந்தது. அதற்குமேல் செய்திகள் வரவில்லை. இப்படிப் புதிய வழியில் மின்சக்தியைப் பெறுகிற வழியை ஆராய்ந்து நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியா முழுவதற்குமே மின் உற்பத்தியை மிகச் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்ற நோக்கோடு இன்னும் 22 ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தை ஏழாவது திட்டத்திலே கொண்டு வந்துவிட வேண்டுமென்று சொல்லுகிற முயற்சியில் மத்திய அரசு ஈடுபட்டிருக்கிறது. அதற்காக 34 ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறது. இத்தனை கோடி ஒதுக்கிய பிறகும் நமக்குப் போதுமான மின்சாரம் கிடைக்காது என்ற தகவல் வருகிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், 'ஹைடல் புராஜெக்ட்' என்று சொல்லுவது தென் பகுதியில் முழுக்க முழுக்க பயன்படுத்தியாகிவிட்டது என்று ஓரளவிற்குச் சொல்லலாம். வடபுலத்திலே 16 சதவீதம்தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை, அறிந்தவர்கள் கூறுகிறார்கள். 'ட்ரை-ஜங்ஷன்' என்ற இடத்திலே, அதாவது கங்கை, யமுனை, பிரம்மபுத்திரா ஆகிய நதிகள் வடபுலத்தில் பாய்ந்து கொண்டிருக்கிற பகுதிகளில் மின்சார உற்பத்தி செய்து பல்வேறு இடங்களுக்கு கொண்டு செல்லுகிற சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்றும், இந்தியாவில் உற்பத்தியாகிற மின்சாரம், அது எந்த முறையில் உற்பத்தியாக்கப்பட்டாலும் அவைகளையெல்லாம் 'நேஷனல் கிரிட்' என்று சொல்லுகிற அளவிற்கு இந்தியா முழுமைக்கும் ஒரு 'எனர்ஜி கிரிட்' வருவது மிகத் தேவை என்பதையும் வல்லுநர்கள் கூறுகிறார்கள். அந்த திசையை நோக்கி நமது முயற்சி முன்னேறிக் கொண்டிருக்க வேண்டுமென்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். காரணம், எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர், பொதுவுடைமைக் கட்சியின் உறுப்பினர், அமெரிக்கா போன்ற நாடுகளில் ஒரு மனிதனுக்கு இருபதாயிரம் யூனிட் மின்சாரம் கிடைக்கிறது, தமிழ்நாட்டில் 192 யூனிட் மின்சாரம் தான் கிடைக்கிறது என்று சுட்டிக்காட்டினார். தமிழகத்திலே இருக்கின்ற நிலையை விட இந்தியாவில் இருக்கின்ற நிலையைச் சுட்டிக்காட்ட வேண்டுமென்று சொன்னால், தேசிய சராசரி 154 யூனிட்டாக இருக்கும்போது, டில்லியில் இருக்கிறவர்களுக்கு 467 யூனிட் என்ற அளவிற்குக் கிடைக்கிறது. டில்லியிலே இருக்கின்றவர்களுக்கு 467 யூனிட் கிடைக்கிற போது, தேசிய சராசரி 154 யூனிட்டாக இருக்கின்றபோது இந்த தமிழகத்திலே 192 யூனிட்டுதான் கிடைக்கிறது என்றபோது நம்முடைய முயற்சி இன்னும் அதிகமாக, வேகமாக, விரைவாக அந்தத் திசையை நோக்கிச் செல்லவேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இங்கே அணு மின் நிலையம், அனல் மின் நிலையம் பற்றியெல்லாம் பேசினார்கள். அணு மின் நிலையத்தை கல்பாக்கத்திலே வைத்திருப்பது மகிழ்ச்சியாக இருந்தாலும், அடிக்கடி மூடப்பட்டு அதன் உற்பத்தி நிறுத்தப்பட்டு இருப்பதற்குக் காரணம் சொல்வது என்னவென்றால், கடலில் தோன்றுகிற மின் உற்பத்தியைத் தடுத்து 'ஜெல்லி ஃபிஷ்' என்ற மீன் இடையிலே அடைத்துக்கொள்வதாகச் சொல்கிறார்கள். இவ்வளவு பெரிய சாஃபிஸ்டிகேடட் மெஷினரியை வைத்துச் செய்கிற பெரிய இயந்திரக் கூடத்திலே இப்படிப்பட்ட மீன்கள் வருமென்று எதிர்பார்த்துத்தானே அமைத்திருப்பார்கள் என்பது வியப்புக்குரியதாக இருக்கிறது. இப்படிப்பட்டக் குறைபாடுகளைத் தவிர்த்து, அதைத் தொடர்ந்து சிறந்த முறையில் உற்பத்தியைப் பெருக்க, கல்பாக்கத்திலே இன்னும் அதிக அளவு உற்பத்தியைப் பெருக்க என்னென்ன வழிவகைகள் இருக்கின்றன என்பதை நம் நாட்டிலேயுள்ள விஞ்ஞானிகள், அணுசக்தி விஞ்ஞானிகள் மட்டுமல்லாமல் இந்தத் துறையிலுள்ள மற்ற விஞ்ஞானிகளும், சிறப்பாகச் செய்திருக்கிறார்கள்.

[முற்பகல் 1-10]

உதாரணமாக 'கார்பைட் ப்யூயல்' என்று சொல்வதிலிருந்து எனர்ஜியைக் கொண்டுவருவதற்கு. அதாவது அந்த இயக்கத்தைக் கொண்டுவருவதற்கு, வேறு யாரையும் சாராமல், நாமே ஆராய்ச்சி செய்து வெற்றி பெற்றிருக்கிறோமென்று ஜெர்மனி நாட்டு வல்லுநர்கள் போற்றுமளவுக்கு அற்புதத்தை விளைவித்திருக்கிறோம். அப்படி அற்புதம் விளைவித்திருக்கும்போது, ஏன் நம்மால் இன்னும் அதிக உற்பத்தி செய்யமுடியவில்லை என்று பலர் கேட்பதைப்போல நானும் கேட்க விரும்புகிறேன். ஒரு சின்ன உதாரணம் சொல்ல விரும்புகிறேன். காடம்பாறை நீர் ஏற்று மின் நிலையம் 1973-லே தொடங்கப்பட்டு, இவ்வளவு நாட்களாகியும் உற்பத்தி வராதிருப்பதற்கு பல்வேறு காரணங்கள் சொல்கிறார்கள். அதிலே முக்கியமானது அங்கே உள்ள நிர்வாகக் கோளாறு என்று சொல்கிறார்கள். தயவு செய்து கூர்ந்து கவனிக்கவேண்டும். அங்கே நிர்வாகக் கோளாறு இருந்தால் அது ஒட்டுமொத்தமாக நிர்வாகத்தைப் பாதிக்கும், பிரதிபலிக்கும் என்கின்ற காரணத்தால் வாரியத்தின் தலைவர் போன்றவர்கள் அதிலே அதிக அக்கறை செலுத்தவேண்டும். 1973-ல் இருந்து அது இன்னும் செயல்படுவதற்குரிய சூழ்நிலை கூட இல்லை என்று சொல்கிறார்கள். அப்படி இருக்கும் போது, அதிகப்படியான சாதனைகளைச் செய்வதுகூட முடியாமல் போகிறது.





அடுத்து, தெரு விளக்குகள் எரியவில்லை என்பது முற்றிலும் உண்மை. பல இடங்களில் எரியவில்லை. சில இடங்களில் வீடுகளில் உள்ள விளக்குகள் மின்மினிப் பூச்சி அளவுக்குத்தான் வெளிச்சம் தருகின்றன. மின் விளக்கைப் போட்டு, சில இடங்களிலே குத்து விளக்கு எங்கேயிருக்கிறது என்று கண்டுபிடிக்கிறார்கள். ஏனென்றால் மின் விளக்கு வெளிச்சத்தில் படிக்க முடியவில்லை. எனவே குத்து விளக் கையும், அரிக்கேன் விளக்கையும் தேடிக் கண்டுபிடிக்கத்தான் மின் விளக்கு பயன்படுகிறது. என்னுடைய இராதாபுரம் தொகுதியில் பல இடங்களில் இதுதான் நிலை. வட்டார வளர்ச்சிக் கூட்டத்திலேகூட இதைப் பற்றிச் சொல்லியிருக் கிறேன். பஞ்சாயத்திலேயிருந்து கட்டவேண்டிய பணத்தைக் கட்டவில்லை என்பதற்காக ஊரிலுள்ள மக்கள் தண்டிக்கப்படு வதுபோல, பல இடங்களில் மின்சாரம் கொடுக்க மின் வாரியம் மறுக்கிறது. இரண்டும் அரசு இயந்திரமாக இருப்பதால், இரண்டும் இணைந்து, அங்கேயுள்ள மக்கள் அல்லல்படாமல் தடுக்கும் வழிவகைகளைக் காண வேண்டுமென்று கூற ஆசைப் படுகிறேன்.

அடுத்து முக்கியமானது, செலவு அதிகம் ஆகிறது என்பதற்கு நிலக்கரி காரணம் என்று சொல்கிறார்கள். ஒரு டன் நிலக்கரி யைக் கொண்டு வருவதற்கான போக்குவரத்துச் செலவு 350 ரூபாய்க்கு மேலே ஆகிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். ஏற்கெனவே நான் பல முறை சொல்லியிருக்கிறேன். எப்படி இரும்புக்கு இந்தியா முழுவதும் ஒரே விலை விகிதம் வைக்கப்பட்டிருக்கிறதோ ; எப்படி இந்தியா முழுவதும் சர்க்கரைக்கு ஒரே விலை விகிதம் வைக்கப்பட்டிருக்கிறதோ ; எப்படி சிமெண்டுக்கு இந்தியா முழுவதும் ஒரே விலை விகிதம் வைக்கப்பட்டிருக்கிறதோ அதைப்போல நிலக்கரிக்கும் இந்தியா முழுவதும் ஒரே விலை விகிதம் வைக்கப்பட்டால் நமக்கு இவ்வளவு இழப்பு ஏற்படாது என்பதை எடுத்துச் சொல்ல வேண்டும். இரண்டாவதாக—இதை ஏற்கெனவே இந்தச் சட்ட மன்றத்தில் குறிப்பிடும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறேன்— நெய்வேலி நிலக்கரி தோண்டி எடுக்க திட்டம் போட்டபோதே, திரு. டி. டி. கே. போன்றவர்கள் கூடியிருந்து பேசி, அங்கே ஒரு டன் நிலக்கரி தோண்டி எடுக்கப்படுமானால், அதிலிருந்து வருகிற வருவாயில் 10-ல் 1 பங்கை தமிழக அரசுக்குக் கொடுக்க வேண்டும் என்பது பற்றிப் பேசியிருக்கிறார்கள். அந்த ராயல் டியை நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திடமிருந்து கேட்டுப்பெறும் முயற்சியில் ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நிலக்கரியிலே கல் கலந்து வருகிறது என்றும், கல்லைப் பிரித்துப்போட்ட பிறகு, அதிலே ஆஷ் அதிகமாக இருக்கிறது. சாம்பல் சத்து அதிகமாக இருக்கிறது என்று

எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் இருக்கிற ஒரு பகுதியிலிருந்து வருவதிலேயே இத்தனை சிக்கல்கள் இருந்தால், அதையெல்லாம் செம்மையாகத் தீர்க்க வழிவகை பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

மேலும் சில காரியங்கள் செய்வதற்கு உரிய முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். உதாரணமாக, விவசாயிகளுக்கு மின் சாரத்தைக் கொடுக்க நாம் முயல்கிறோம். எந்த அளவுக்கு என்றால் இலவச மின்சாரம் கொடுக்க வேண்டும் என்று முயன்றோம். இந்த நாளை, என்னைப் பொறுத்த வரையில் மிக மகிழ்ச்சியான நாள் என்று சொல்ல வேண்டும். ஏனென்றால், ஆளுங்கட்சித் தரப்பிலிருந்து தமிழகத்திலுள்ள $10\frac{3}{4}$ இலட்சம் விவசாய மின்சார பம்ப் செட்டுகளுக்கும் இலவச மின்சாரத்தைக் கொடுக்க வேண்டுமென்று ஆலோசனை தரப்பட்டுள்ளது. 1984-க்கு முன்னாலேயிருந்து இதை நான் வலியுறுத்தி வருகிறேன். விருதுநகரில் பெருந் தலைவர் காமராஜ் அவர்களுடைய பிறந்த நாள் விழாவில், அவர் பெயரால் மாவட்டத்தை அமைக்கும்போது மாண்புமிகு முதல்வரவர்கள் அங்கே ஒன்றை அறிவித்தார்கள். 'காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பில் குமரி அனந்தன், தமிழகத் திலுள்ள விவசாயிகள் அனைவருக்கும் இலவச மின்சாரம் கொடுத்தால் 34 கோடி ரூபாய்தான் செலவாகுமென்று சொல் கிறார்கள்' அது என் உள்ளத்தைத் தொடாமல் இல்லை' என்று சொன்னார்கள். அவருடைய உள்ளத்தைத் தொட்டதால், பொன்மனச் செம்மலின் உள்ளத்தைத் தொட்ட காரணத்தால், அதே ஆண்டு, ஆகஸ்டு திங்கள், இதே இடத்தில் கொடியேற்றி வைத்துவிட்டு, இலவச மின்சாரம் வழங்குவது பற்றி அறிவித் தார்கள். அப்படி அறிவிக்கும்போது, படிப்படியாகப் போக வேண்டுமென்று விரும்பியிருப்பார்களோ, என்னவோ; அதன் காரணத்தால் $2\frac{1}{2}$ ஏக்கர் நஞ்சை, 5 ஏக்கர் புஞ்சை வைத்திருப் பவர்களுக்கு இலவச மின்சாரம் என்று சொன்னார்கள். ஆனால் அதன் பிறகு நிபந்தனைகளை சேர்க்க ஆரம்பித்தார்கள். அவ்வாறு நிபந்தனைகள் சேர ஆரம்பித்ததற்குப் பின்னாலே எத்தனை பேருக்கு இலவசமாக மின்சாரம் கொடுக்க முடிந்தது என்று எண்ணிப்பார்க்க வேண்டும். எந்த நோக்கத்திற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்களோ அந்த நோக்கம் நிறைவேறியிருக்கிறதா? இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதுபோல் இரண்டு பசு மாடு வைத் திருந்தால், பீடி சுற்றுகிற வேலை செய்தால் வேறு வருமானம் வருகிறது என்று சொல்லி அவர்களுக்கு இலவசமாக மின்சாரம் கொடுப்பதில்லை. அவர்களுடைய கோரிக்கையை தள்ளிவிடு கிறார்கள். அரசாங்கம் முனிசிப்பாலிட்டி, உள்ளாட்சி நிறு வனங்கள், தனியார் நிறுவனங்கள் போன்ற துறைகளில் வீட்டிலே



யாராவது வேலை செய்தால் அத்தகையவர்களுக்கும் இலவச மின்சாரம் இல்லையென்று சொல்கிறார்கள். இப்படி பலவித மான நிபந்தனைகள் சேர ஆரம்பித்ததன் காரணமாக இலவச மாக மின்சாரம் பெறுகிறவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறை வாகிக்கொண்டிருக்கிறது.

அடுத்து, மோட்டாரை பயன்படுத்தாமல் இருந்தால், தண்ணீரை வாரி எடுக்க முடியாத நிலை இருந்தால், ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லாத நிலை இருந்தால்கூட பொருத் தப்பட்டிருக்கின்ற மின்சார பம்ப் செட்டுகளுக்கு ஒரு குதிரை சக்திக்கு 75 ரூபாய் கட்டியாக வேண்டுமென்ற நிலைமை இருக்கிறதே, அது மிகக் கொடுமையான ஒன்று. இப்படி மின் சாரத்தைப் பயன்படுத்தாதவர்கள் நூறு பேரிலே 60 பேருக்கு மேல் இருக்கிறார்கள். அப்படி என்றால் நூற்றுக்கு 10 சத விகிதப் பேர் மட்டுமே இலவசமாக மின்சாரம் பெறுகின்ற நிலை இருந்தால், நம்முடைய திட்டங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்ன நோக்கங்களுக்காக, என்ன லட்சியங்களுக்காக அறிவித்தார்களோ அந்த நோக்கங்களும், லட்சியங்களும் நிறை வேறுகின்றனவா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். நூற்றுக்கு 60 பேர்களுக்குமேல் பாதிக்கப்படும் நிலை இருக்கிறது. இதை யெல்லாம் எண்ணிப்பார்க்கிற நேரத்தில் 'உழவன் சேற்றிலே கை வைக்காவிட்டால் நாம் சோற்றிலே கை வைக்க முடியாது' என்கிற நிலைமைக்கு அவர்களைப் போகவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து மின்சார மோட்டார் மீட்டர்களை மேலும் மேலும் பொருத்த வேண்டாம். மின்சார மோட்டார் மீட்டர்களைப் பொருத்த மின்சாரச் செல்வு அதிகமாகும். இந்த மின்சாரத்தை வைத்துக்கொண்டு இன்னும் 2 இலட்சம் கிணறுகளுக்கு மின்சார இணைப்பு கொடுக்கலாம். இந்த வகையில் 34 அல்லது 38 கோடி ரூபாய்தான் வருகிறது என்று சொன்னால் தயவுசெய்து இலவச மின்சாரம் என்று அறிவித்து விடுங்கள். சில இடங்களிலே மிச்சம் பிடித்திருப்பதையும் நாம் பார்க்கிறோம். மின்சார வாரியத் தலைவர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தூத்துக்குடியில் இருக்கிற அனல் மின் நிலையத்தில் ஃபர்னஸ் ஆயிலைப் பயன்படுத்துவதை குறைத்ததன் மூலமாக இந்த ஆண்டு மட்டும் 23 கோடி ரூபாய் மிச்சம் வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு இடத்தில் இவ்வளவு நுணுக்கமாக ஆய்ந்தறிந்து எரிபொருளை மிச்சப்படுத்தியதன் வாயிலாகவே 23 கோடி ரூபாய் மிச்சம் வருகிறது என்றால் இன்னும் இம்மாதிரி பல இடங்களில் நுணுக் கமாக ஆய்ந்தறிந்தால் கோடிக்கணக்கில் மிச்சம் வரும். அந்த வகையில் 38 கோடி ரூபாய் அளவுக்கு விவசாயிகள் பயன் படுத்துகின்ற மின்சாரத்தை இலவசம் என்று அறிவித்தால்

[திரு. குமரி அனந்தன்] [1986 நவம்பர் 19

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழ்நாட்டிலே தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மட்டும் தான் இலவசமாகக் கொடுக்கிறார் என்கிற சாதனையை நாம்தானே பெறமுடியும். அதற்கு இப் போது புதிதாகப் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற மாண்புமிகு மின், சுற்றுலா, மதுவிலக்குத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, இங்கே மின்சார உற்பத்தியை யார் யார் கொண்டு வருவது என்கிற பிரச்சினை இருக்கிறது. தனியாருக்குக் கொடுப்பது பற்றி காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒன்றைச் சொல்கிறேன். காரணம் மிகவும் முக்கியமான கொள்கைகளை வரவேற்கும் ஓர் அமைப்பு எங்களுடையது. மின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக இன்னும் சிலர் நமக்கு ஆக்கத்தோடு, ஊக்கத்தோடு துணைக்கு வந்தால், அவர்கள் தங்களுடைய உழைப்பையும், முதலீட்டையும் கொடுக்கத் தயார் என்றால் அப்படிப்பட்டவர்களையும் நாம் பயன்படுத்துவதிலே தவறே இல்லை. அப்படி மற்றவர்களுடைய உழைப்பையும், ஒத்துழைப்பையும் பயன்படுத்தி மின்சார உற்பத்தியை தமிழகத்தில் பெருக்கி பொதுமக்களுக்கு அந்த மின்சாரத்தை அதிகமாகக் கொடுக்கவேண்டும். அதே நேரத்தில் அப்படிப்பட்ட நிலையில் தனியார் துறை வருவதன் மூலம் பொதுத் துறை பாதிக்கப்படாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும். அங்கே வேலை செய்கின்ற தொழிலாளர்களும் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அடுத்து, இங்கே மாண்புமிகு உறுப்பினர்களால் பேசப்பட்டதால் ஒன்றை நான் பணிவோடு சொல்கிறேன். வட சென்னையிலே இன்னொரு அனல் மின் நிலையம் வர வேண்டும். வட சென்னை என்பது மிக அதிகமாக புகை கக்கிக் கொண்டிருக்கிற ஓர் இடம். அதிலும் இந்தியாவிலேயே மிக மிக அதிகமான அளவில் என்விரோன்மென்டல் ஹஸார்ட் சுற்றிச் சூழ்ந்து காற்று கெட்டுப் போய்கொண்டிருக்கிற ஒரு பகுதி. அந்தப் பகுதிக்கு எந்தவிதமான தீங்கும் வராமல் ஒரு காரியத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், வாரியத் தலைவர் அவர்களும் செய்ய வேண்டும்.

அடுத்து, அந்தப் பகுதியில் தனியார் ஒருவர் ஒண்டர் லேன்ட் அமைக்க ஏற்பாடு செய்கிறார் என்றும், அது எப்படி வந்தது என்றும் இங்கே பேசப்பட்டதால் ஒன்றைச் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். டிஸ்னி லேன்ட் என்று சொல்கிற அதிசய லேன்ட் அமெரிக்கத் திருநாட்டிலே இருக்கிறது. அந்த அதிசய



1986 நவம்பர் 19] [திரு. குமரி அனந்தன்]

உலகத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்த்து வந்தார்கள். நானும் அதைப் பார்க்கின்ற வாய்ப்பைப் பெற்றேன். அதனுடைய 15-வது ஆண்டு விழாவை கோலாகலமாகக் கொண் டாடும் அளவுக்கு அதிசய உலகம் விளங்கிக்கொண்டிருக்கிறது. அதேமாதிரி அதிசய உலகம் இங்கேயும் வருவதாக இருந்தால், அதை அமைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தால், பெருமளவுக்கு அதிலே பணம் போட்டிருந்தால், ஏற் கனவே இருந்த அரசின் தடைகளை மீறாமல் செயல் பட்டுக்கொண்டிருந்தால் அப்படிப்பட்டவர்களை நாம் கூப்பிட்டுப் பேசுவது நல்லது என்றே நான் கருதுகிறேன.

(முற்பகல் 1-20)

எனக்குத் தெரிந்த அளவிலே திருவொற்றியூர் சட்ட மன்ற உறுப்பினராக இருந்த காரணத்தால் சொல்கிறேன், இருபத்தி இரண்டு ஆயிரம் ஏக்கர் நிலங்கள் அங்கே கிடக்கின்றன. 22 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் அங்கே கிடக்கிறபோது, ஒரு ஆயிரம் ஏக்கர் நிலத்திலே ஒரு அதிசய உலகத்தை ஒருவர் கொண்டு வருகிறார் என்று சொன்னால், அது வட சென்னை யிலே இருக்கிற மக்களுக்கு பொழுது போக்காக அமையும் என்று சொன்னால், வெளியிலேயிருந்து வருகிறவர்கள் தென் சென்னையை மட்டும் பார்த்துக்கொண்டு போவதை விட்டு, வட சென்னையையும், தென் சென்னையையும் பார்க்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கி நமது மக்களுக்கு பொழுது போக்கைக் கொண்டு வந்தால், அந்தப் பகுதியிலே சுற்றி இருக்கிறவர்களுடைய செல்வம் வளரும்; அங்கேயிருக்கிற மீனவர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லாமல், அங்கே யிருக்கிற மக்களுக்கு வேறு எந்தவிதத் தொல்லையும் இல்லாமல், வணிகமும் பெருகுவதற்கு உரிய ஒரு சூழ்நிலை உருவாகு மானால் அதனை நீங்கள் பரிசீலிப்பது நல்லதோ, அவர்களைக் கூப்பிட்டுப் பேசுவது நல்லதோ என்று நல்ல உள்ளங்கள் நினைப் பதைப் போலவே நானும் நினைக்கிறேன். வேறு வகையிலே இல்லை. ஏன் என்றால், வட சென்னையிலே மின் உற்பத்தியும் வரவேண்டும். இன்னொருவர் உற்சாகத்தால் செய்து கொண்டிருக்கிற அந்தப் பணியும் தடைபடாமல் இருப்பதற் குரிய முயற்சிகளிலே எல்லாம் நீங்கள் ஈடுபடவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்று காலையிலே சில தொழிலாளர்கள் என்னை வந்து பார்த்த போது, அவர்கள் சொன்ன குறைகளை எல்லாம் நான் இங்கே அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. ஏன் என்றால், அதிலே அதிகமாக ஈடுபட்டு இருப்பவர்கள் சொல்லுகிறார்கள், எனவே நான் அனைத்தையும் சொல்ல வேண்டியதில்லை.

ஆனால் இறுதியாக ஒரு செய்தி, அந்தத் தொழிலாளர் சகோதரர்கள் குமுறிக் குமுறிச் சொன்ன செய்தியிலே ஒரு பகுதியைச் சொல்லவேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஏன் என்றால் காற்றிலே வந்த செய்தியாக இல்லாமல், கரத்தாலே உழைத்து, கருத்தாலே அது நன்றாக இருக்கவேண்டும் என்று எண்ணுகிற அந்தத் தொழிலாளர் பெருமக்கள் பிரம்பாக்களாக இருக்கிற அவர்கள் சொன்ன காரணத்தாலே அந்தச் செய்தியை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். என்ன என்று சொன்னால், அவர்களுக்கு ஒரு அச்சம், ஐயா, ஒவ்வொரு தடவையும் அரசாங்கத்தினுடைய சார்பிலே எத்தனை எத்தனையோ முயற்சிகள் செய்த போதிலும் எங்களுக்கு இருக்கிற சில நன்மைகளைச் செய்வதற்கு அவர்கள் விட்டுவிடுகிறார்கள். உதாரணத்திற்கு ஒவ்வொரு தடவையும், எப்படி எப்படி மின்சாரக் கட்டணம் கூட்டப்படுகிறது என்பதை அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். உதாரணத்திற்குச் சொல்லுகிறேன், 16–5–1983-லே மின்சாரக் கட்டணம் திருத்தி அமைக்கப்பட்டு, 53 கோடியே 57 லட்சம் ரூபாய் வருவாய் அதிகரிக்கப்பட்டது. இது 1983-லே. மீண்டும் 15–6–1984-லே கட்டணம் உயர்த்தப்பட்டது. இதன் மூலம் 64 கோடி ரூபாய் மீண்டும் வந்தது. மீண்டும் 1985–லே மே மாதம் கட்டணம் உயர்த்தப்பட்டது, இதிலே 79 கோடியே 19 லட்சம் வந்தது. நான் கேட்க ஆசைப்படுவது, 3 வருடங்களுக்குள்ளே 3 தடவை கூட்டிக் கூட்டிக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் சொல்லுகிறார்கள், இப்போது கூட பேசுகிறார்களாம், பல இடங்களிலே பேச்சு அடிபடுகிறதாம், மின்சாரக் கட்டணத்தைக் கூட்டப் போகிறார்கள் என்று. நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன், சிறு தொழிலுக்கும், நடுத்தரத் தொழிலுக்கும், பெருந்தொழிலுக்கும் மின்சாரக் கட்டணத்தைக் கூட்டப் போவதாகவும், பெரும் அளவிலே கூட்டப் போவதாகவும், அதோடு மட்டுமல்லாமல், வீடுகளுக்கு வாங்கப்படுகிற மின்சாரத்திலே கூட ஒரு 5 பைசாவோ என்னவோ கூட்டப் போவதாகவும், அந்தத் தொழிலாளர்கள் காற்றிலே பேச்சு அடிபடுகிறது என்று சொன்னதைக் கேட்டு நான் மிக வருந்தினேன், நான் மிக நொந்து போனேன். காரணம் என்ன என்று சொன்னால், ஒரு பக்கத்திலே நாம் மின்சார உற்பத்தியை பெருக்குவதினுடைய நோக்கமே எல்லோருக்கும் மின்சாரத்தை கொடுக்கவேண்டும் என்பதுதான். எல்லோருக்கும் மின்சாரத்தைக் கொடுக்கவேண்டும் என்று விரும்புகிற நாம், அதிலே இழப்பு இருக்கிறது, வருவாய்க்கும், செலவிற்கும் ஈடுகட்ட முடியவில்லை என்று சொன்னால், சிந்தித்துப் பாருங்கள், தூத்துக்குடியிலே 23 கோடி ரூபாயை உங்களுடைய ஆற்றலால்தானே இப்போது பெற முடிந்தது. அந்த ஆற்றல் உங்களுக்கு இருக்கத்தானே செய்கிறது. எனவே



வீணாவதை இன்னும் குறையுங்கள், திருட்டைத் தடுத்து நிறுத்துங்கள், இன்னும் உற்பத்தியையும் நிர்வாகத்தையும் மிகச் சிறப்பாக நடத்துங்கள். பெரிய பெரிய பணக்காரர்கள் மட்டும் நமக்கு வைத்திருக்கிற பாக்கி எவ்வளவு தெரியுமா? 60 கோடி ரூபாயை முதலாளிகள் தராமல் வைத்திருக்கிறார்கள். அந்த 60 கோடி ரூபாயை வைத்திருக்கிறார்களே பாக்கி, அவைகளை எல்லாம் வாங்குங்கள், இப்படி எல்லாம் வாங்கினீர்கள் என்று சொன்னால், நிச்சயமாகச் சொல்லுகிறேன், அந்தத் தொழிலாளர்கள் சொன்னது உண்மையாக இருக்கக்கூடாது என்பதற்காகச் சொல்லுகிறேன், நீங்கள் கட்டணத்தை உயர்த்தக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன், எந்தத் தொழிலுக்கும் நீங்கள் மின் கட்டணத்தை உயர்த்தாதீர்கள், வீட்டுக்கு மின் கட்டணத்தை உயர்த்தாதீர்கள். ஒன்றே ஒன்றை உயர்த்துங்கள், உற்பத்தியை உயர்த்துங்கள் என்று கேட்டு, அமைகிறேன், வணக்கம்.

*திரு. ஆர். ரெங்கசாமி : மதிப்பிற்குரிய உதவித் தலைவர் அவர்களே, நான் சார்ந்துள்ள காங்கிரஸ் கட்சியின் சார்பிலே இந்த மின்சார பட்ஜெட்டைப் பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். மின்சார பட்ஜெட்டைப்பற்றிப் பேசுவதற்கு முன்னாலே ஒருசில முக்கியமான கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மின்சார போர்டோடு நெருங்கிப் பழகியவன் என்ற முறையிலேயும், தொழிற்சங்கத் தலைவர் என்ற முறையிலேயும் இதை நான் கூற விரும்புகிறேன். இப்பொழுதுள்ள நமது சேர்மன் விஜயராகவன் அவர்கள் he is the best administrator in the country. அதோடு அவர்கள் வாரியத்திற்கு வந்த பிற்பாடு he has increased the prod c ion and produc ivity. அதை யாரும் மறுக்க முடியாது. அதோடு நம்முடைய அனல் புனல் நிலைய மின்சார நிலையங்களை அதனுடைய கெப்பாசிட்டி என்று சொல்கிறார்களே, சக்தியையெல்லாம் கூட்டியிருக்கிறார்கள். He has increased the capacity cf the Units. அடுத்தபடியாக, சிக்கன முறையைக் கையாண்டு கோடிக்கணக்கான ரூபாய்களை பாதுகாத்திருக்கிறார்கள். அதை யாரும் மறுக்க முடியாது. இதற்கெல்லாம் சேர்ந்துதான் இந்திய அரசு அவருக்குப் பரிசைக் கொடுத்துள்ளார்கள். மற்றவர்கள் சொல்லுகிற மாதிரி அவர் மிகப்பெரிய சர்வாதிகாரி என்று சொன்னால் இதையெல்லாம் செய்திருக்க முடியாது. அதுமட்டும் அல்ல, தொழிலாளர் வர்க்கத்திற்காக அவர்கள் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு ஒரு பென்ஷன் முறையைக் கொண்டு வந்து இருக்கிறார்கள். ஒப்பந்தம் மூலமாக சம்பள உயர்வைக் கொடுத்திருக்கிறார்கள். நாங்கள் டிரான்ஸ்போர்ட்டிலே டிமான்ட் என்ன சொன்னோம் தெரியுமா?

We want the same pay scale as given by the Electricity Board என்று கேட்டோம், கொடுக்கவில்லை. அந்த அளவிற்கு இங்கே கொடுத்து இருக்கின்றார்கள். இன்க்ரிமெண்டைப் பொறுத்த மட்டிலே எங்கும் இல்லாத அளவிற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல; போனஸ் தொகையை அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட ஒரு அதிகாரியைத் தவறுதலாகப் பேசுவது சரியல்ல, சொல்லப்போனால், he is an honest, efficient, sincere and independent officer—என்றுதான் சொல்ல வேண்டும். அவர் வந்த பிற்பாடு வாரியத்திலே பல ஊழல்களைக் களைந்துள்ளார்கள். பல குறைகளைப் போக்கியுள்ளார்கள். எனவே, நான் சொல்ல விரும்புகிறேன், நம்முடைய சிந்தன் அவர்கள் சொன்னார்கள், சங்கத்தைக் கூட்டிப் பேச வேண்டுமென்று சொன்னார்கள், அசெம்பிளியிலே மந்திரி கூறியமாதிரி, அங்குள்ள ஏ.ஐ.டி.யூ.சி., அங்குள்ள சி.ஐ.டி.யூ., அங்குள்ள ஐ.என்.டி.யூ.சி. போன்ற எல்லாச் சங்கங்களோடும்தான் பேசுகிறார்கள். இல்லையென்று சொல்ல முடியாது. ஒத்துப் போகாமல் இருக்கலாம். அந்த விஷயம் வேறு. ஆனால் அவர்கள் எல்லாச் சங்கங்களையும்தான் அழைக்கின்றார்கள், பேசுகின்றார்கள். எனவே, தங்களுக்கு ஆதரவாக இல்லை என்ற காரணத்திற்காக வேண்டி குறை சொல்வது முறை அல்ல என்பதைச் சொல்லிக்கொள்ளப் பிரியப்படுகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயத்திற்கு 1978 வரையில்தான் பம்பு கனெக்ஷன் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் பத்தாண்டுக் காலம் ஆகிறது. ஒரு விவசாயி பம்பு செட்டுக்கு மின்சார கனெக்ஷன் பெறுவதற்காக வேண்டி பத்தாண்டுக் காலம் பொறுத்திருக்க வேண்டியுள்ளது, இது நியாயமா என்று கேட்பதற்குப் பிரியப்படுகிறேன். அதே மாதிரி உ.பி., பீகார் போன்ற மற்ற மாநிலங்களிலே உள்ள அரசாங்கங்கள் மூன்று மாதத்தில்—ஒரு விவசாயி பம்பு செட்டுக்கு அப்ளை செய்தால் within three months he gets the connection. எனவே, அந்த முடிவை ஏன் இங்கே அமல் செய்ய முடியவில்லை? எனவே, விவசாயத்தைப் பொறுத்த மட்டிலே நம்முடைய அரசானது நாங்கள் விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுக்கிறோம், நாங்கள் ஆதரிக்கின்றோம் என்றெல்லாம் சொல்லக்கூடிய இந்த அரசானது, ஏன் பத்தாண்டுக் காலம் பொறுத்திருக்கச் செய்ய வேண்டும்? எனவே, நான் சொல்லக்கூடிய காரணம் என்னவென்றால், வருஷாவருஷம் கொடுக்கக்கூடிய கனெக்ஷன்களையெல்லாம் அவர்களுக்கு மிகவும் குறைவாகக் கொடுக்கிறார்கள். அதை இன்க்ரீஸ் செய்தால் ஓரளவு நாம் பூர்த்தி செய்யக்கூடிய வசதி இருக்கிறது. எனவே, விவசாயிகளுக்கு



அவர்கள் அப்ளை செய்து ஒரு வருஷத்திலேயாவது—மற்ற இடங்களில் மூன்று மாதங்கள் என்று வைக்கிறார்கள், நீங்கள் ஒரு வருஷம் என்றாவது பண்ணிக்கொள்ளலாம்.

அடுத்தபடியாக, ஒரு ஹார்ஸ் பவருக்கு 75 ரூபாய் சார்ஜ் செய்கிறோம். நீங்கள் இதை கம்மி என்று நினைக்கலாம். ஆனால் பீகார், உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களிலே ஒரு ஹார்ஸ் பவருக்கு ரூபாய் 30 தான் வசூல் செய்கிறார்கள். எங்கே 30 ரூபாய் எங்கே? இங்கே 75 ரூபாய் எங்கே? எனவே, விவசாயிகளுக்கு அனுதாபம் உள்ள அரசாங்கம் அதே மாதிரி 30 ரூபாய் என்று கொண்டு வர வேண்டுமென்று பிரியப்படுகிறேன்.

அதுபோக, இந்தத் தண்ணீர் பற்றாக்குறையினால் பம்பு ஓடாமல் இருக்கிறது. அப்பொழுது அவர்கள் உண்மையிலே கரண்டை உபயோகப்படுத்துவது இல்லை. ஆகவே, அவர்களுக்கு 75 ரூபாய் இருப்பதைக் காட்டிலும் 75 ரூபாய் அல்லது, actual meter charges, whichever is less என்று போட்டால்தான் சரியாக இருக்கும். எனவே 75 ரூபாய் அல்லது அந்த மீட்டர் சார்ஜ் இதில் எது கம்மியோ அதை வாங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 1–30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையின் முன் அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஆர். ரெங்கசாமி: அடுத்தபடியாக, 'ட்ரான்ஸ்பர்' பற்றி எல்லாம் இங்கே சொன்னார்கள். நானும் அதுபற்றி பலமுறை பேசியிருக்கிறேன். எஞ்சினீயர்கள், மற்றுள்ள அதிகாரிகளை மாற்றினால், அதற்கு 'அட்மினிஸ்டிரேடிவ் ரீசன்ஸ்' என்று காரணம் சொன்னால் நாம் புரிந்துகொள்ளலாம். ஆனால் கிளாஸ் 3, கிளாஸ் 4 ஊழியர்களை ஏன் மாற்ற வேண்டும்? அவர்களை மாற்றுவதற்கு என்ன காரணம் என்று எனக்கு புரியவில்லை. அவர்கள் என்ன பெரிய எக்ஸ்பர்ட்ஸா இடம் விட்டு இடம் மாற்றுவதற்கு? அவர்கள் சாதாரண வேலைகளை, ரொட்டீன் வேலைகளைத்தான் செய்கிறார்கள். மற்றத் துறைகளில் இந்த கிளாஸ் 3. கிளாஸ் 4 ஊழியர்களை மாற்றுவது கிடையாது. அப்படி இருக்க, இபி-யில் மட்டும் ஏன் மாற்றுகிறார்கள்? மற்றத் துறைகளில் இருக்கின்ற நடைமுறைகளையே இந்த எலக்ட்ரிசிட்டி போர்டிலும் உருவாக்க வேண்டும். எந்தத் துறையிலும் இல்லாத நடைமுறையை இபி செய்யக்கூடாது. எனவே, கிளாஸ் 3, கிளாஸ் 4 ஊழியர்களை மாற்றக்கூடாது. அவர்கள் ஏதாவது தப்பு செய்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம்.

[திரு. ஆர். ரெங்கசாமி] [1986 நவம்பர் 19

நான் இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இப்படிப்பட்ட ஊழியர்களை ட்ரான்ஸ்ஃபர் பண்ணியதால் இரண்டு பெண்கள் இறந்துவிட்டார்கள். ஆகவே, இந்தமாதிரி செய்யக்கூடாது. அவர்களிடத்தில் மனிதாபிமானத்தோடு நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Electricity is a basic industry for all industries என்று சொல்வார்கள். மின்சாரம் இல்லாமல் இன்றைக்கு இருக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. சோவியத் நாட்டிலே கூட லெனின் ஆட்சிக்கு வந்தவுடனே முதல் கட்டமாக எல்லாவற்றையும் மின்சாரமயமாக்க வேண்டுமென்று சொன்னார். அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது இந்த மின்சாரம். நம்முடைய அரசு இதிலே உரிய கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. இதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும். முதல் இட்டமாக கவனிக்க வேண்டிய மின்சார உற்பத்தியை லாஸ்ட் இட்டமாக வைத்திருக்கிறார்கள்.

ஹைடல் பவர், தெர்மல் பவர் எல்லாம் சேர்ந்து இன்றைக்கு நமக்கு கிடைப்பது 8,666 மில்லியன் யூனிட்தான். நாம் பர்ச்சேஸ் பண்ணுவது 4,835 மில்லியன் யூனிட். ஆக உற்பத்தி செய்வது, பர்ச்சேஸ் பண்ணுவது எல்லாம் சேர்த்தாலும் 13,501 மில்லியன் யூனிட்தான் வருகிறது டோட்டல் லைன் லாஸ் எவ்வளவு என்று பார்த்தால் 2,385 மில்லியன் யூனிட். இது கிட்டத்தட்ட 18.7 சதவீதமாகிறது. மொத்த உற்பத்தியில் 18.7 சதவீதம் லைன் லாஸ் வருகிறது என்று கணக்கு கொடுத்திருக்கிறார்கள். மேல் நாடுகளிலும் ஜப்பான் போன்ற கீழை நாடுகளிலும் லைன் லாஸ் 8 சதவீதம்தான். எட்டு சதவீதம் எங்கே? 18.7 சதவீதம் எங்கே? இந்த வித்தியாசம் இருக்கக் கூடாது. வேண்டுமானால் பாக்கி மாநிலங்களைக் காட்டிலும் இங்கே லைன் லாஸ் குறைவாக இருக்கிறது என்பதிலே பெருமைப்படலாம். இருந்தாலும் 18.7 சதவீதம் என்பது மிகவும் ஜாஸ்தியாக இருக்கிறது. இதைக் குறைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

லைன் லாஸைக் குறைப்பதற்கு என்ன செய்யலாம் என்பதை ஆராய ஒரு கமிட்டி கூட அமைத்தார்கள். அந்தக் கமிட்டி பற்றி ஒன்றுமே தெரியவில்லை இதை அரசாங்கம் முக்கியமாகக் கவனிக்க வேண்டும்! லைன் லாஸைக் குறைக்க உரிய; நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், தமிழ்நாட்டிற்குக் குறைந்தபட்சம் 25,000 மில்லியன் யூனிட் மின்சாரப் தேவை. இன்டஸ்டிரிஸ், டொமஸ்டிக், அக்ரிகல்சர் போன்ற எல்லாவற்றிற்கும் சேர்ந்து குறைந்தபட்சம் 25,000 மில்லியன் யூனிட் தேவைப்படுகிறது. ஆனால் நமக்குக் கிடைப்பதோ 11,000 மில்லியன் யூனிட் தான்.



1986 நவம்பர் 19] [திரு. ஆர். ரெங்கசாமி]

மேற்கொண்டு ஒகனேக்கல் போன்ற மின் உற்பத்தித் திட்டங்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டங்கள் மூலம் சுமார் 8.000 மில்லியன் யூனிட்தான் கிடைக்கும். இப்போது போட்டிருக்கின்ற திட்டங்களையும் நிறைவேற்றினால்தான் மொத்தம் நமக்கு 19,000 மில்லியன் யூனிட் மின்சாரம் கிடைக்கும். எனவே, பாக்கி மின்சாரத்திற்கு நாம் என்ன செய்வது? அனல் மின்சாரம், புனல் மின்சாரம் எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தாலும் இந்த அளவுக்குத்தான் கிடைக்கிறது. பற்றாக்குறையைப் போக்க அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். காடம்பாறை மின்சாரத் திட்டம் 1962-லே ஆரம்பிக்கப்பட்டது. அதைப் போன்று ஆரம்பிக்கப்பட்ட பல திட்டங்கள் அப்படியே இருக்கின்றன. 1962 ஆம் ஆண்டில் ஆரம்பித்த திட்டங்கள் கூட நிறைவேறவில்லை. ஏன் நிறைவேறவில்லை? என்ன காரணம்? என்ன தவறு? எங்கே தவறு? என்று பார்க்கக் கூடாதா? இது மாதிரி பணிகளில் மின்சார வாரியம் தன்னுடைய கவனத்தைச் செலுத்தக்கூடாதா? டிரான்ஸ்பர் பண்ணுகிற வேலை: ஆக்ஷன் எடுக்கிற வேலை என்று இவைகளையெல்லாம் விட்டுவிட்டு எப்படி மின் உற்பத்தியை அதிகமாகப் பண்ணலாம் என்று கவனித்தால் நிறைய உற்பத்தி செய்யக் கூடிய வாய்ப்பு வரும். 1962 ஆம் ஆண்டிலே போட்ட ஸ்கீம் கூட நிறைவேறவில்லை. இப்போது என்ன? 1986லே இருக்கிறோம். அதற்கு அப்போதிருந்த கவர்ன்மெண்ட் காரணம், அதற்கு பின்னாடி வந்த கவர்ன்மென்ட் காரணம் என்று சொல்வது எல்லாம் வெறும் சால்ஜாப்பு. ஆகவே இவைகளை அவசியமாக, நியாயமாக எடுத்துக் கொண்டு, சென்டிரல் கவர்ன்மெண்ட்டோடு பேசியோ அல்லது வேறு ஏதாவது ஸ்டேட் கவர்ன்மென்ட்டுகளோடு பேச வேண்டுமென்றாலும் பேசியோ. எல்லா திட்டங்களையும் எடுத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முதலிலே அரசாங்கத்திற்கு பிளான் இருக்க வேண்டும். நமக்கு ஒரு ஆண்டுக்கு இன்னின்ன பண்ண வேண்டும் என்றும் எப்படி பிளான் பண்ணுகிறோமோ அது போல இவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டும் என்று அரசாங்கத்திற்கு பிளான் இருக்க வேண்டும். அப்படி பிளான் பண்ணிச் செய்தால்தான் காரியம் ஆகும்.

அடுத்தாற்போல காடம்பாறை, சேர்வலார் மின் திட்டத்தைப் பற்றி ஏதோ ஊழல் இருப்பதாக பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது. அதை எல்லோரும் படித்திருப்பீர்கள். நம்முடைய சேர்மேன் அவர்கள் ஓர் ஹானஸ்ட் மேன். ஆகவே அவர்கள் ஷ்யூராக இதைக் கவனித்து ஆக்ஷன் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கொண்டு, டிஸ்டிரிபியூஷனைப் பொறுத்தமட்டில் ஒழுங்காக மெட்டீரியல்ஸ் கிடைக்கவில்லை என்று குறைபாடு இருக்கிறது. வேண்டிய அளவு மின் கம்பிகளும், மின் சாதனங்களும் சப்ளை பண்ணுவதில்லை என்று சொல்லுகிறார்கள். டிலே ஆகிறது என்றும் சொல்லுகிறார்கள். மெயின்டென்னஸ் பிராப்பராக பண்ண வேண்டும் என்று சொன்னால், ஒழுங்காக அவைகளை செய்தால் தான் பண்ண முடியும், மேற்கொண்டு, திருட்டு ஜாஸ்தியாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இதில் ஏதோ கவர்ன்மெண்ட் ஆக்ஷன் எடுக்கிறது. ஆனால் உங்களிடம் வந்தால் தான் எடுக்கிறீர்கள் நீங்களாகவே போய்ப் பார்த்து எதையும் பண்ணுவதில்லை. இந்த தெஃப்ட்டை பொறுத்த மட்டில் சுருக்காக ஆக்ஷன் எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்,

அடுத்து, இணைப்பு கொடுப்பதை பொறுத்தமட்டில் டிலே ஆகிறது என்றுசொல்லுகிறார்கள். காரணங்கள் இருக்கிறது என்றும் டிரான்ஸ்பார்மர்கள் கிடைப்பதில்லை என்றும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். டிரான்ஸ்பார்மர்கள் வருவதற்கு ஒரு மாதம் ஆகிறது என்றும் சொல்லுகிறார்கள். எனவே நான் சொல்ல விரும்புவது, சில இடங்களில் சப்-ஸ்டேஷன் இல்லை என்றும் சொல்லுகிறார்களாகையால், சப்-ஸ்டேஷன்களை ஆங்காங்கே அமைப்பதற்குப் பதிலாக ஜப்பானில் உள்ளதுபோல் மொபைல் சப்-ஸ்டேஷன் வைத்துக் கொள்ளலாம். ஏனென்றால் ஒரு சப்-ஸ்டேஷன் வைப்பதற்கே ரூபாய் ஒரு கோடிக்கு மேல் செலவு ஆகும். ஆகவே மொபைல் சப்-ஸ்டேஷன் வைத்தால் கரண்டும் கொடுக்கலாம், சீக்கிரமாகவும் ஆங்காங்கே போய் உதவி செய்ய முடியும். ஆகவே அந்த முறையைக் கையாள முடியுமா என்று ஆராயவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கன்சம்ப்ஷனைப் பொறுத்த மட்டில், இந்த பாயின்ட்டில் ஒரு அபாயம் இருக்கிறது சார். கரண்ட் வேண்டுமா, மீட்டர் வாங்கி வாருங்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். மீட்டரை 240 ரூபாய்க்கு வெளியிலே வாங்குகிறார்கள். அதற்கு நீங்கள் தரக்கூடிய ரூபாய் 85 மட்டும்தான். ஏன் அப்படி? நீங்கள் ஏன் மீட்டரை வாங்கி வைத்துக்கொள்ளக் கூடாது? இந்தியா மீட்டர்ஸ் இருக்கிறது, சிம்கோ மீட்டர்ஸ் இருக்கிறது. அவர்கள் எல்லாம் அதிகமாக உற்பத்தி செய்து வைத்துக்கொண்டு, விற்க முடியாமல் இப்போது வேலை இல்லாமல் உட்கார்ந்திருக்கிறார்கள். மீட்டர் வாங்கவே முடியவில்லை, மார்க்கெட்டிலேயே கிடைக்கவில்லை என்று சொன்னால் என்னால் ஓரளவு உங்கள் கூற்றை புரிந்துகொள்ள முடியும். ஆனால் நிறைய மீட்டர்கள் ஸ்டாக் இருக்கின்றன. விற்காமல் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவைகளை வாங்கி நீங்கள் கொடுக்கக் கூடாதா? மீட்டரைப் பொறுத்தமட்டில் கன்சியூமரை வாங்கச் சொல்லாமல், நீங்களே ஒழுங்காக வாங்கித்தர ஏற்பாடு



செய்யவேண்டும். When I can get it within a minute, can't you get it within a day? அதேபோல இந்த 85 ரூபாய் என்று மீட்டர் வாங்குவதற்கு கொடுக்கிறார்களே அது என்ன கணக்கு? மார்க்கெட்டிலே அவர்கள் என்ன விலைக்கு வாங்கியிருக்கிறார்களோ அதைக் கொடுங்கள் அல்லது நீங்களே மீட்டரை வாங்கித்தர ஏற்பாடு செய்யுங்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தாற்போல கனெக்ஷன் கொடுப்பதற்கு பிரையாரிட்டி முறை இருந்தாலும் இஷ்டம்போல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவைகள் எல்லாம் மிக அநியாயமான முறை. சேவை நோக்கத்தோடுதான் இந்த வாரியம் செயல்படவேண்டும், சேவைக்காகத்தான் நாம் இருக்கிறோம் என்பதை மறந்து விடக்கூடாது. சப்ளை கொடுப்பதிலேயும் ஓரே பார்ஷியாலிட்டி காட்டுகிறார்கள். ரூபாய் தந்தால் உடனேயே, அன்றைக்கே சப்ளை கிடைத்துவிடும், தரவில்லை என்றால் டிலே பண்ணுகிறார்கள். கணக்கு வைத்துக்கொள்ளுங்கள் ஆபீசிலே, இன்றைக்கு இவர்களுக்குக் கொடுக்கவேண்டும், நாளைக்கு இவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று பிரையாரிட்டி முறையிலே வைத்துக்கொள்ளக் கூடாதா? அதைவிட்டு, நான் பணக்காரன் என்றால் நான் கொஞ்சம் பணம் கொடுத்துவிட்டால், உடனேயே, அன்றைக்கே எனக்கு சப்ளை கிடைத்துவிடும். ஆனால் பணம் இல்லாத ஏழை என்ன செய்வான்? அதனால் ஏழைகளுக்கு அப்படி சுலபமாக வாங்க முடியவில்லை (மேசையைத் தட்டல்). அடுத்து அக்கவுண்ட் ஸைடிலே வசூல் அமௌன்ட் சரியாக இருப்பது இல்லை. என்னுடைய அபிப்பிராயம் உங்களுடைய பாங்க் பாலன்ஸஸுக்கும் உங்களுடைய அக்கவுண்ட்ஸ் புக்ஸ் பாலன்ஸஸுக்கும் டாலியாக வேண்டும். ஆனால் அப்படி ஆவதில்லை என்பதை நான் லாஸ்ட் இயரே பாயின்ட் அவுட் பண்ணியிருக்கிறேன். ஆனால் இன்னமும் அதை சரி பண்ணவில்லை. எனவே அதை சரிபார்த்து வைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-40)

இரண்டாவது, ஸ்டோருடைய ஸ்டாக்கிற்கும் உங்களுடைய அக்கவுண்ட்ஸ் பேலன்சிற்கும் 'டாலி' ஆகவில்லை. இதற்கு என்ன அர்த்தம்? ஸ்டோரில் சாமான்கள் இல்லையென்று அர்த்தமா? ஆகவே இந்த இரண்டும்தான் மெயின் பாயின்ட்ஸ். இந்த அக்கவுண்ட்சைப் பற்றி நன்றாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆடிட் ரிப்போர்ட்டை போர்டில் வைப்பதே இல்லை. வைத்தாலும் நீங்கள் பரிசீலனை செய்வதில்லை. போர்டு இதை சீரியசாக எடுத்துக்கொண்டு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆர். ரெங்கசாமி] [1986 நவம்பர் 19

அடுத்தபடியாக, சப்ளைஸ் வாங்குவதில் அநேகமாக நீங்களே வாங்குகிறீர்கள். அதில் தவறில்லை. ஆனால் டி.ஜி.எஸ்.டி. மூலம் வாங்கினால் உங்களுக்கு விலையும் குறையும், சப்ளையும் சீக்கிரம் வருமென்று நினைக்கிறேன். ஆகவே கூடியவரையில் நீங்களாக வாங்காமல், டி.ஜி.எஸ்.டி. மூலமாக வாங்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அரசாங்கம் வருடா வருடம் மின் வாரியத் திற்கு சப்சிடி கொடுப்பீர்கள், மானியம் கொடுப்பீர்கள். கடந்த மூன்று வருடங்களாக ஏன் அதைக் கொடுக்கவில்லை? வாரியத்தை பல காரியங்களைச் செய்யச் சொல்கிறீர்கள். விவசாயிகளுக்கு கரண்ட் கம்மி விலையில் கொடுக்க வேண்டுமென்று சொல் கிறீர்கள். கரண்ட் 'ப்ரியாக' கொடுக்க வேண்டுமென்று சொல் கிறீர்கள். சோஷியோ எக்னாமிக் பாயின்ட் ஆப் வியூவில் இது சரிதான் அதனால் மின்வாரியத்திற்கு இழப்பு வருகிறதே, அதற்கு நீங்கள் மானியம் கொடுக்கவில்லை. அதை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது). அடுத்து மின் வாரிய ஊழியர்களுக்கு ப்ரீயாக கரண்ட் கேட்டிருந் தோம். அதைக் கொடுக்கவில்லை. அதைக் கொடுக்க வேண்டும். அடுத்து எல்.டி.சி. கோரிக்கை. அதையும் கவனிக்க வேண்டும். அடுத்தபடியாக அபாலிஷன் ஆப் காண்ட்ராக்ட் சிஸ்டம் கோரிக் கையையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கேஷுவல் லீவ் கவர்ன்மெண்ட் சர்வென்ட்டிற்கு எல்லாம் அதிகரித்துக் கொடுத்தார்கள். ஆனால் இவர்களுக்கு கொடுக்க வில்லை. ஆகவே 'ப்ரீ கரண்ட்', எல்.டி.சி., கேஷுவல் லீவ், மெடிகல் அலவன்ஸ், அபாலிஷன் ஆப் காண்ட்ராக்ட் சிஸ்டம் ஆகிய வற்றைக் கவனிக்க வேண்டும். ஏனென்றால் 20, 30 ஆயிரம் பேர்கள் காண்ட்ராக்ட்டில் வேலை செய்கிறார்கள், ஆகவே அந்த சிஸ்டத்தை அபாலிஷ் செய்து ஒழுங்கான முறையில் அவர்களை வேலைக்கு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேற்கொண்டு சென்ட்ரல் கவர்ன்மெண்டில் கொஞ்சம் ஜாஸ்தி யாக தொடர்பு வைத்துக்கொண்டு மின்சாரம் சம்பந்தமாக நீங்கள் அதிகமான பணிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். ஜெய் ஹிந்த்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (20-11-1986) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-42 மணிக்கு ஒத்திவைக்கப் பற்றது.



5. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ.) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

152. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1984-85 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (சிவில்). (இந்திய அரசியல மைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவை முன்வைக்கப் பெற்றது). (ஆங்கிலம்)

153. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1984-85 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (வணிகம்). (இந்திய அரசியல மைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (ஆங்கிலம்)

154. தமிழ்நாடு அரசின் 1984-85 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள். (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (ஆங்கிலம்)

155. தமிழ்நாடு அரசின் நிதிநிலைக் கணக்குகள் (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (ஆங்கிலம்)

(ஆ). அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

28. 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1984 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் காலவரைக்கான தமிழ்நாடு ஒழுக்கக் கண்காணிப்பு ஆணைக் குழுவின் பதினெட்டாவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

இணைப்பு.

[195ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க].

அவையின் முன் வைக்கப்பட்ட தமிழ்நாடு மின்வாரியத் தின் 1986-87 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை/ 1985-86 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை.

2. தமிழ்நாடு மின் ஆலோசனைக் குழுவின் ஒப்புதலைப் பெற்று, 1948 ஆம் ஆண்டு, மின் சக்தி (வழங்கல்) சட்டத்தின் 61ஆம் பிரிவிற்கிணங்க தமிழ்நாடு மின் வாரியம் இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. வாரியத்தின் செயல் முறை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக் கும் கருத்துக்களை அரசும் மின் வாரியமும் கருத்தில் கொள் ளும். முந்தைய ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை இந்த அவையின் கடந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டபோது மாண்பு மிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் மீது வாரியம் மேற்கொண்ட நடவடிக்கை பற்றிய அறிக்கை, தனியே சுற்றனுப் பப்பட்டுள்ளது.

3. 1985-86 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1984-85ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் அவையில் கடந்த 1985 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 18 மற்றும் 19ஆம் நாட்களில் நடைபெற்றது.

4. தூத்துக்குடி மற்றும் எண்ணூர் அனல் மின் நிலையங்களின் தனிச் சிறப்பு மிக்க செயல் திறனுக்கென, தமிழ்நாடு மின் வாரியம், மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட சிறந்த மின் உற்பத்திக்கான பரிசுகளைப் பெற்றதனை இந்த அவைக்கு அறிவிப்பதில் பெரு மகிழ்ச்சி கொள்ளுகிறேன். சமீப காலமாக செயல்திறன், மேம்பாட்டுக்கென மின்வாரியம் எடுத்து வரும் தொடர் நடவடிக்கைகள் பயனளிக்க ஆரம்பித்துள்ளன. 1985-ல் செயல் திறனுக்கென ரூ. 3.68 இலட்சம் பரிசு பெறும் வகையில், எண்ணூர் நிலையத் திறன் குறியீடு 1983-84 ஆம் வருடம் 27.9 சதவிகிதம் ஆகவும், 1984-85-ல் 36.2 சதவிகிதம் ஆகவும். 1985-86-ல் 52.2 சதவிகிதம் ஆகவும் பெருமளவில் கூடியுள்ளது. தூத்துக்குடி அனல் மின் நிலையத் திறன் குறியீடு 1983-84 ஆம் வருடத்துக்கான 50.5 சதவிகிதத்திலிருந்து 1984-85—ல் 62 சதவிகிதம் ஆக உயர்ந்து 1985-86-ல் 65.5 சதவிகிதம் ஆக முன்னேற்றம் கண்டுள்ளது.

இந்நிலையமும், 1984ல் தனது செயல் திறனுக்கென ரூ. 6 இலட்சம் பரிசு பெற்றுள்ளது. 1985-86—ல் அகில இந்திய சராசரி நிலைய செயல்திறன் குறியீடான 50 சதவிகிதத்துக்கு எதிராக எண்ணூர் மற்றும் தூத்துக்குடி அனல் மின் நிலையங்களின் செயல் திறன் குறியீடு முறையே 52.2 சதவிகிதம் மற்றும் 65.5 சதவிகிதம் ஆக இருந்தது. பெல் நிறுவனத்தினால் வழங்கப்பட்டு நாட்டிலுள்ள பல்வேறு அனல் மின் நிலையங்களில் இயங்கிவரும் இயந்திரங்களின் 1985-86 ஆம் நிதியாண்டுக்கான திறமைப் பட்டியலில் பெல் நிறுவனத்தால் 60 மெகாவாட் திறனுடன் வழங்கப்பட்ட 13 இயந்திரங்களில் முறையே 64.7 மற்றும் 52.9 சதவிகிதம் நிலைய செயல் திறன் குறியீடு கொண்ட எண்ணூர் அனல் மின் நிலையத்தின் முதல் மற்றும் இரண்டாம் பகுதி இயந்திரங்கள் முதலிடம் வகிக்கின்றன. பெல் நிறுவனத்தால் 110 மெகாவாட் திறனுடன் வழங்கப்பட்ட 31 இயந்திரங்களில் 57.5 சதவிகிதம் நிலைய செயல் திறன் குறியீடு கொண்ட எண்ணூர் மின் நிலையத்தின் ஐந்தாம் பகுதி ஆறாவது இடத்தையும் மேற்படி நிறுவனம் 210 மெகாவாட் திறனுடன் வழங்கிய 47 இயந்திரங்களில் 72.3 சதவிகிதம் நிலைய செயல் திறன் குறியீடு கொண்ட தூத்துக்குடி நிலையத்தின் இரண்டாம் பகுதி எட்டாவது இடத்தையும், 68.8 சதவிகிதம் குறியீடுள்ள முதல் பகுதி பதினோறாவது இடத்தையும் 63.8 சதவிகிதம் குறியீடுள்ள, மூன்றாவது பகுதி பதினாறாவது இடத்தையும் பெற்றுள்ளன நடப்பாண்டிலும் மேற்கண்ட செயல்திறனை எதிர்பார்க்கலாம்.

5. 1985-86 ஆம் ஆண்டுக்கென அரசால் நிர்ணயிக்கப்பட்ட எல்லா இலக்குகளையும் தமிழ்நாடு மின்வாரியம் அடைந்துள்ளது என்பதனை இந்த அவைக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி கொள்ளுகிறேன்.





விவசாய விசையேற்றங்களைப் பொறுத்தவரையில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 40,000 விசையேற்றங்களுக்கு மாறாக, வாரியம் 40,628 விவசாய விசையேற்றங்கட்கு மின் இணைப்பு வழங்கியுள்ளது. 31—3—1986 நிலவரப்படி, மின் இணைப்பு பெற்ற மொத்த பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 10.74 இலட்சமாகும்.

கிராமப்புறங்களில், சமுதாயத்தின் நலிந்த பகுதியினருக்கும் மின்சாரத்தின் நன்மைகளை வழங்கும் நோக்குடன் 1979ஆம் ஆண்டு அரசால் செயலாக்கப்பட்ட ''குடிசைக்கோர் மின் விளக்குத்'' திட்டத்தின் கீழ், நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 40,000 இணைப்புகட்கு மாறாக வாரியம் 74.344 இணைப்புகளை வழங்கியுள்ளது. 31—3—1986 நிலவரப்படி, மின் இணைப்புப் பெற்ற குடிசைகளின் மொத்த எண்ணிக்கை 7.1 இலட்சமாகும். ஊரக மின் இணைப்புகளைப் பொறுத்தவரை, 15 கிராமங்கட்கு மின் இணைப்பு வழங்கியதன் மூலம் வாரியம் தனது இலக்கான ஒன்பதை மிஞ்சியது. மின் இணைப்பு பெறாது எஞ்சியுள்ள கிராமங்கள் 20 மட்டுமே. எஞ்சியுள்ள கிராமங்கட்கும், 1986-87—ல் மின் இணைப்பு வழங்க வாரியம் எண்ணியுள்ளது.

சேர்வலாறு புனல் மின் நிலையம் (20 மெ.வா.) 20—3—86 அன்று செயல்படத் துவங்கியது.

தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாக, தூத்துக்குடியிலுள்ள முல்லைக்காடு கிராமத்தில், 55 கிலோவாட் திறன் கொண்ட 10 காற்றாலைகள் செயல்படத் துவங்கின. மேலும் 10 காற்றாலைகள் அதே கிராமத்தில் நிறுவப்பட்டு வருகின்றன.

6. தமிழ்நாடு மின்வாரியத்துக்குச் சொந்தமான அனல் மின் நிலையங்களின் சிறப்புறு செயல்திறன் மற்றும் மத்திய அரசின் மின் நிலையங்களிலிருந்து பெறப்பட்ட கூடுதல் மின்சக்தி ஆகியவை இருந்த போதிலும், பருவமழை தவறியதால் புனல் மின் நிலைய உற்பத்திக் குறைவின் காரணமாக, 1985 ஜுலை முதல் 1986 ஜுன் வரையிலான நீராண்டு, இடர் மிக்கதாகவே அமைந்தது. சென்ற ஆண்டு பெறப்பட்ட 3,658 மி.யூ. மற்றும் கடந்த பத்து ஆண்டு சராசரியான 3,619 மி.யூக்கு எதிராக இந்த ஆண்டு பெறப்பட்ட மொத்த நீரின் அளவு 2,450 மி.யூ. மட்டுமே. கடந்த பத்து ஆண்டுகளில் 1985-86ஆம் ஆண்டில் பெறப்பட்ட அளவே மிகவும் குறைந்ததாகும்.

1984-85 (ஜூலை - ஜூன்) மற்றும் 1985-86ஆம் ஆண்டுகளில் கிடைத்த மின்சக்தி ஒப்பீட்டு அளவு கீழ்க்கண்ட அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

(மில்லியன் யூனிட்டுகளில்)

| | 1984-85 | 1985-86 |
|---|---|---|
| புனல் மின்சாரம் .. .. | 3,993 | 2,941 |
| எண்ணூர் .. .. .. | 1,675 | 2,152 |
| தூத்துக்குடி .. .. | 3,182 | 4,006 |
| பேசின்பிரிட்ஜ் .. .. | 87 | 1 |
| நெய்வேலி உதவி .. .. | 3,066 | 2,915 |
| கல்பாக்கம் உதவி .. .. | 978 | 1,424 |
| தேசிய அனல் மின் கழகம் .. | 178 | 416 |
| மற்றவை .. .. .. | 179 | (—) 105 |
| மொத்தம் .. | 13,338 | 13,750 |

குறைவான பருவமழை அளவின் காரணமாக, வரையறை யற்ற தேவையான 15,400 மி.யூனிட்டுகளுக்கு மாறாக, மின் வாரியம், 1985-86 ஆம் நீராண்டில் 13,750 மி.யூனிட்டுகள் மட்டுமே வழங்க முடிந்தது. இதன் காரணமாக, உயர் அழுத்தத் தொழிற்சாலைகட்கு தேவை மற்றும் சக்தியின் அளவில் ஜூலை 85 முதல் டிசம்பர் 85 வரை 30 சதவிகிதமும் ஜனவரி 86 முதல் 22—8—1986 வரை 40 சதவிகிதமும் மின்வெட்டு தேவைப்பட்டது. பின்னர், தேவை மற்றும் சக்தியின் மீதான மின்வெட்டு 20 சத வீதமாகக் குறைக்கப்பட்டது. சுமார் 62 இலட்சம் பயனீட்டா ளர்களில் சுமார் 1,000 உயர் அழுத்த தொழிற்சாலைகட்கு மட்டுமே மின் வெட்டு அமுல் படுத்தப்படும். குறைந்த அழுத்தத் தொழிற்சாலைகள், குடியிருப்பு இணைப்புக்கள், விவசாய இணைப்புக்கள் மற்றும் குறைந்த அழுத்த இணைப்புகட்கு மின் வெட்டிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. ஊரகப் பகுதிகட்கு பகலில் 6 மணி நேரமும் இரவில் 8 மணி நேரமுமாக மொத்தம் நாள் ஒன்றுக்கு 14 மணி நேரம் மின்சாரம் வழங்கப்படுகிறது.

7. மின் வெட்டினை முழுவதுமாகத் தவிர்க்க இயலாவிடி னும், 1986-87-ல் மின் வழங்கல் நிலை (ஜூலை-ஜூன்) 1985-86-ஐவிட நன்றாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற வருடம் இதே நாளில் இருந்த 989 மி. யூனிட்டுகளுக்கு மாறாக, 1-11-1986 நிலவரப்படி, மேட்டூர் நீங்கலாக மற்ற எல்லா நீர்த்தேக்கங்களின் நீரளவு 1,286 மில்லியன் யூனிட்டு



களாகும். 1-11-1986 அன்று மேட்டூரில் நீரளவு சென்ற வருட அளவான 8 மில்லியன் யூனிட்டுகளுக்கு மாறாக 27 மில்லியன் யூனிட்டுகளாகும். தென் மேற்குப் பருவ மழையின் காரணமாக சென்ற வருடத்தை விட அதிக அளவில் நீர் வரவு இருப்பினும், கடந்த பத்து வருட சராசரி நீர் வரவைவிட இந்த அளவு குறை வானதாகும். வருட ஆரம்பத்திலுள்ள குறைந்த நீரளவின் காரண மாக, சென்ற வருடத்தைவிட இந்த வருடம் புனல் மின்சக்தி உற்பத்தியில் பெருமளவு முன்னேற்றம் ஏதும் இராது. சென்ற வருட வரையறையற்ற தேவை இவ்வாண்டு 5.5 சதவிகிதம் கூடும் என்னும் கணிப்பில் ஜூலை 86 முதல் ஜூன் 87 வரையான நீராண்டுக்கான வரையறையற்ற மின்சக்தித்தேவை 16,300 மில்லி யன் யூனிட்டுகளாக இருக்கும் என மதிப்பிடப்படுகிறது. இதற்கு மாறாக, கையிருப்பு 14,889 மி.யூனிட்டுகள் மட்டுமே என மதிப் பிடப்படுகிறது. 1986-87 ஆம் நீராண்டுக்கான எதிர்நோக்குகள் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

(மில்லியன் யூனிட்டுகளில்).

| | |
|---|---|
| புனல் மின்சக்தி .. .. .. .. | 3,282 |
| எண்ணூர் அனல் மின்சக்தி .. .. .. | 2,021 |
| தூத்துக்குடி அனல் மின்சக்தி .. .. .. | 4,062 |
| மேட்டூர் அனல் மின்சக்தி .. .. .. | 270 |
| நெய்வேலி உதவி (I மற்றும் II) .. .. | 3,460 |
| கல்பாக்கம் உதவி .. .. .. .. | 1,294 |
| தேசிய அனல் மின் கழகம் .. .. .. | 644 |
| மற்றவை .. .. .. .. .. | (—) 144 |
| மொத்தம் .. | 14,889 |

கல்பாக்கம், சென்னை அணு மின் நிலையத்தின் செயல் பாட்டில் ஓர் இடர்பாடு ஏற்பட்டுள்ளது. முதல் பிரிவிலுள்ள மின் அழுத்த மாற்றி செயல்படாததால் 20—3—86 முதல் 26—7—86 வரை நான்கு மாதங்கட்கு முதல் பிரிவினை மூடும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து இரண்டாம் பிரிவில் எரிபொருள் இறக்கம் செய்யும் அமைப்பில் இடர் ஏற் பட்டதால் இப்பிரிவு 14—8—86 முதல் மூடப்பட்டுள்ளது.

8. இவ்வாண்டில், மேட்டூர் அனல் மின் நிலையத்தில் 210 மெ. வாட் திறன் கொண்ட முதல் பிரிவும், நெய்வேலி இரண் டாவது அனல் மின் நிலையத்தின் 210 மெகாவாட் திறனுடைய இரண்டாம் பிரிவும், முறையே டிசம்பர் 86 மற்றும் மார்ச் 87-ல் செயல்படத் துவங்கும் என எதிர்நோக்கப்படுகிறது. எதிர்

நோக்கும் இக்கூடுதல் உற்பத்தியின் துணையுடன் 1987 கோடை மாதங்களில் மின்சக்தி நிலையினை, மின்வெட்டை உயர்த்தாமலேயே சமாளிக்கலாம் என எதிர்நோக்கப்படுகிறது.

9. ஆந்திராவிலுள்ள இராமகுண்டத்தில் இந்திய அரசு ஒரு பெரும் பேரனல் மின் நிலையத்தை நிறுவி வருகிறது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக ஒவ்வொன்றும் 200 மெகாவாட் திறன் கொண்ட மூன்று பிரிவுகள் செயலாக்கப்பட்டுள்ளன. இந்திய அரசு வகுத்துள்ள விதிமுறைகளின்படி இத்திட்டம் ஒரு மண்டலத்தைச் சார்ந்த திட்டமாதலால், தமிழ்நாடு இத்திட்டத்திலிருந்து 132 மெகாவாட் மின் சக்தி பெற உரிமை பெறுகிறது. எனினும், இராமகுண்டம் பெரும் பேரனல் நிலையத்தின் 400 கிலோ வோல்ட் திறன் கொண்ட மின் கம்பித் தொடர்கள் அமைக்கும் பணி முடிவு பெறாததால் தமிழ் நாட்டுக்கும் இராமகுண்டத்துக்கும் நேரிடை இணைப்பு இல்லை. எனவே, ஆந்திர மாநிலத்தின் மின்கம்பித் தொடர்கள் வழியாகவே தமிழ் நாட்டின் பங்கினைப் பெற வேண்டியுள்ளது.

ஆந்திராவின் மின் கம்பித் தொடர்களிலுள்ள குறைபாடுகளின் காரணமாக இராமகுண்டத்திலிருந்து பெற வேண்டிய முழுமையான பங்கைப் பெறமுடியவில்லை. 1985–86-ல் (ஏப்ரல்–மார்ச்) நமது பங்கான 719 மி. யூனிட்டுகளுக்கு மாறாக 340 மி. யூனிட்டுகள் மட்டுமே பெற முடிந்தது. மின் கம்பித் தொடர் நிர்மாண வேலைகள் மார்ச் 87-இல்தான் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின்னர், தமிழ்நாடு மின்வாரியம் தனது முழுப் பங்கினையும் பெற இயலும் என நம்பப்படுகிறது.

10. அனல் மின் நிலையங்கள் முழு உற்பத்தித் திறனுடன் செயல்பட, தரமான நிலக்கரி, உரிய காலத்தில் வழங்கப்பட வேண்டியது ஒரு அத்தியாவசியமான தேவை என்பதை மாண்பு மிகு உறுப்பினர்கள் அறிவர். நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து வெகு தொலைவில் அமைந்துள்ள தமிழ்நாட்டுக்கு இவ்வகையில் பெருமளவில் வசதிக் குறைவு ஏற்படுகிறது. உத்தேசிக்கப்பட்டுள்ள மேட்டூர் அனல் மின் நிலையம் தனது நிலக்கரித் தேவைக்கென சிங்கரேணி சுரங்கங்களின் சென்னூர் என்னும் ஒரு புதிய சுரங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இச் சுரங்கம் இன்னும் முன்னேற்றம் அடையவில்லை. இதன் காரணமாக, மேட்டூர் அனல் மின் நிலையத்துக்குத் தேவையான நிலக்கரியைச் சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கங்கள் வழங்க இயலவில்லை. எனவே, என்னூர் மின் நிலையத்துக்கென சிங்கரேணியிலிருந்து பெறப்படும் நிலக்கரியை மேட்டூருக்குத் தடமாற்றம் செய்து, என்னூருக்கென மத்திய பிரதேசம் மற்றும் ஒரிஸா மாநிலங்களிலுள்ள சுரங்கங்களிலிருந்து விசாகபட்டினம்/பிரதீப் மற்றும் சென்னைத் துறைமுகம் வழியாக இரயில் மற்றும் கடல் மார்க்கமாகக் கொண்டுவரவும், கடல் வழிக்கெனப் பெருந்தொகையை சரக்குக் கட்டணமாகச் செலுத்துவதற்கும் ஒப்புதல் அளிப்





பதைத் தவிர தமிழ்நாடு மின்வாரியத்துக்கு வேறுவழியில்லை. இதனால் ஏற்படும் கூடுதல் செலவு டன் ஒன்றுக்கு ரூ. 350 ஆகும். கூடுதல் சரக்குக் கட்டணத்தினால் ஏற்படும் இழப்பினை ஈடுகட்டும் வகையில் உதவித் தொகை வழங்க வேண்டுமென இந்திய அரசிடம் தமிழ்நாடு மின் வாரியம் வலியுறுத்தி வருகிறது.

நிலக்கரிச் சுரங்கங்களின் முன்னேற்றம், அனல் மின் நிலையங்களின் முன்னேற்றத்துக்கு ஈடு கொடுக்க முடியவில்லை என்பது இதனால் தெளிவாகிறது. பெரும் பொருட் செலவில் அமைக்கப்படும் அனல் மின் நிலையங்கள் நிலக்கரித் தட்டுப்பாட்டினால் பாதிக்கப்படாவண்ணம், இந்திய அரசு நிலக்கரிச் சுரங்கங்களை முன்னதாகவே மேம்படுத்த வேண்டும். குறிப்பாக, நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து வெகு தொலைவில் அமைந்துள்ள அனல் மின் நிலையங்களின் தேவைக்கென, நிலக்கரியை இறக்குமதி செய்வதில் இந்திய அரசு தயக்கம் காட்டுதல் கூடாது.

11. மின்சாரம், முன்னேற்றத்துக்கும் தொழில் வளர்ச்சிக்கும் தூண்டுகோலாக இருப்பதால், மாநிலத்தில் மின் பற்றாக்குறை ஏற்பட்டு அதன் விளைவாக மின்வெட்டும், மின் கட்டுப்பாடுகளும் ஏற்படாவண்ணம் தேவையான அளவுக்கு மின் உற்பத்தியைப் பெருக்குவதில் தனக்குள்ள பொறுப்பினை மாநில அரசு நன்கு உணர்ந்துள்ளது. மத்திய மின்சார ஆணைக் கழகத்தின் 12 ஆவது அளவீட்டுக் குழுவின் மதிப்பீட்டின்படி, தமிழ் நாட்டின் 1989–90 ஆம் ஆண்டுக்கான மின்சக்தித் தேவை 4,142 மெ. வா./22496 மில்லியன் யூனிட்டுகளாக அதிகரிக்கும். எனவே, மின்துறையில் பெருமளவில் முதலீடு தேவைப்படுகிறது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1985–90), நடைபெற்று வரும் எல்லாத் திட்டங்களையும் முடித்து, கூடுதலாகப் புனல் மற்றும் அனல் மின் திட்டங்களை மேற்கொள்வது குறித்து வலியுறுத்தப்படுகிறது.

12. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1985–90) செயலாக்கப்பட உள்ள, தற்போது நடைபெறும் மற்றும் புதிய உற்பத்தித் திட்டங்களின் விவரம் வருமாறு :—

| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | மொத்த திறன். மெ.வா. | ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பயன்கள் மெ.வா. |
|---|---|---|
| 1. சேர்வலாறு புனல் மின் திட்டம் .. | 20 | 20 |
| 2. காடம்பாறை நீரேற்றுத் திட்டம் | 400 | 400 |
| 3. கீழ்மேட்டூர் புனல் மின் திட்டம் .. | 120 | 120 |

[1986 நவம்பர் 19

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 4. குந்தா V விரிவாக்கம் .. .. | 20 | 20 |
| 5. சிறிய நீர் மின் திட்டங்கள் .. | 16 | 16 |
| 6. மேட்டூர் அனல் மின் திட்டம் கட்டம் I. .. | 420 | 420 |
| 7. மேட்டூர் அனல் மின் திட்டம் கட்டம் II. .. | 420 | 210 |
| 8. தூத்துக்குடி அனல் மின் திட்டம் கட்டம் III. | 420 | 210 |
| 9. வடசென்னை அனல் மின் திட்டம். | 630 | .. |
| | | 1,416 |

சேர்வலாறு புனல் மின் திட்டம் (20 மெ.வா.) ஏற்கனவே 20–3–1986 அன்று செயல்படத் துவங்கி விட்டது.

13. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செயல்படக் குறிக்கப்பட்டுள்ள 1,416 மெகாவாட் உற்பத்தியில், 1986–87-ல் 325 மெகாவாட் உற்பத்தித் திறனும் (மேட்டூர் அனல் மின் நிலை யத்திலிருந்து 210 மெகாவாட், கீழ் மேட்டூர் புனல் மின் திட்டத் திலிருந்து 15 மெகாவாட், மற்றும் காடம்பாறை நீரேற்றுத் திட்டத்திலிருந்து 100 மெகாவாட்) 1987–88-ல் 520 மெகாவாட் உற்பத்தித்திறனும் (மேட்டூர் அனல் மின் நிலையத்தின் ஒரு கூடுதல் பிரிவிலிருந்து 210 மெ.வா., காடம்பாறை நீரேற்றுத் திட்டத்திலிருந்து 200 மெகாவாட், கீழ் மேட்டூர் புனல் மின் திட்டத்திலிருந்து 90 மெகாவாட், மற்றும் குந்தா—விரிவாக்கம் V-லிருந்து 20 மெகாவாட்) செயலாக்கப்படும்.

14. மேற்கண்ட, மாநில அரசின் நடைபெற்றுவரும் திட்டங் களைத் தவிர, இப்பகுதியில் நிறுவப்பட்டுவரும் மத்திய அரசின் மின் நிலையங்களிலிருந்து ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத் தில் 462 மெகாவாட் உற்பத்தியை தமிழ்நாடு தனது பங்காகப் பெறும்.

15. கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் மின் உற்பத்தியைப் பகிர்ந்து கொள்ளுவது குறித்த கருத்து வேற்றுமை மாநிலத்தின் திருப்திக்கு ஏற்றவாறு தீர்க்கப்பட்டுள்ளது. ஆறாவது ஐந்தாண் டுத் திட்ட காலத்தில் (1980–85) செயல்படத் துவங்கிய முதல் பகுதியின் உற்பத்தி முழுவதும், நடப்புத்திட்டத்தில் செயல்படத் துவங்கிய இரண்டாம் பிரிவின் உற்பத்தியில் 50 சத விகிதம் இவை இரண்டும் சேர்ந்து நிலையத்தின் மொத்த உற்பத்தித் திறனில் 75 சத விகிதம் தமிழ் நாட்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



1986 நவம்பர் 19]

16. தனது இரண்டாவது அனல் மின் நிலையத்தின் மொத்த
நிறுவுத் திறனை, 1,470 மெகாவாட் அளவிற்குக் கொண்டு வரும்
நோக்கத்துடன் முதல் கட்டத்தில் ஒவ்வொன்றும் 210 மெகாவாட்
திறன் கொண்ட மூன்று பிரிவுகளை முதற் கட்டமாக நிறுவி
பின்னர் இரண்டாவது கட்டமாக ஒவ்வொன்றும் 210 மெகாவாட்
திறனுடைய நான்கு கூடுதல் பிரிவுகளுடன் விரிவாக்கும் வகையில்,
நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் இரண்டாவது அனல் மின்
நிலையம் ஒன்றினை அமைத்து வருகிறது. முதல் பிரிவு
29–3–1986 அன்று செயல்படத் துவங்கியது. ஏழாவது ஐந்
தாண்டுத் திட்டம் முடிவுறு முன்னர் மேலும் மூன்று பிரிவுகள்
செயல்படத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழக
அரசு, முதல் மூன்று பிரிவுகளின் உற்பத்தி முழுவதும் தமிழ்
நாட்டுக்கே தரப்படல் வேண்டும் என வலியுறுத்தி வந்தபோதி
லும், மத்திய அரசின் பகிர்வுத் திட்டத்தின்படி இந்த உற்பத்தி
யினைத் தமிழ்நாடு, ஏனைய தென்மண்டல மாநிலங்களுடன்
பகிர்ந்து கொள்ள வேண்டுமென மத்திய அரசு கருத்து கொண்
டுள்ளது. மத்திய அரசின் பகிர்வு முறைப்படி, ஏழாவது ஐந்
தாண்டுத் திட்ட முடிவில் நிறைவு பெறும் 840 மெகாவாட்
மொத்த நிறுவுத் திறனில் தமிழ் நாடு 235 மெகாவாட் மட்டுமே
பெறும.

17. ஏற்கெனவே கூறியபடி, மத்திய அரசின் பகிர்வு முறை
யின்படி இராம குண்டம் பெரும் பேரனல் திட்டத்தின் உற்பத்தி
யில் தமிழ் நாட்டுக்குப் பங்கு உண்டு. ஆறாவது ஐந்தாண்டு
திட்ட காலத்தில் இராமகுண்டத்தில் செயல்படத் துவங்கிய
200 மெகாவாட் திறன் கொண்ட மூன்று பிரிவுகளுடன் ஏழாவது
ஐந்தாண்டுத் திட்ட முடிவுக்குள் 500 மெகாவாட் திறனுடைய
மேலும் ஒரு பிரிவு செயல்படத் துவங்கும் என எதிர்பார்க்கப்
படுகிறது. இப்பிரிவிலிருந்து தமிழ் நாடு பெறும் பங்கு 110
மெகாவாட் ஆகும்.

18. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில் எதிர்பார்க்கப்
படும் பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்கு, தற்போது
நடைபெறும் மாநிலத் திட்டங்களிலிருந்து கிடைக்க உள்ள
கூடுதல் உற்பத்தியும், மத்திய மின் நிலையங்களிலிருந்து கிடைக்
கக் கூடிய பங்கும் போதுமானது அல்ல என நமது மதிப்பீடுகள்
தெளிவாக்குகின்றன. எனவே மாநிலத்தின் மின் பற்றாக்குறை
யைத் மேற்கொள்வதற்கான நீண்ட காலத் தீர்வு, கூடுதலான
அனல் மற்றும் அணுமின் நிலையங்களை நிறுவுவதே ஆகும். இந்த
சூழ் நிலையில்தான், வட சென்னையில் ஒரு அனல் மின் நிலையம்
நிறுவுதல் மற்றும் தூத்துக்குடியில் தற்போதுள்ள மின் நிலை
யத்தை விரிவாக்குதல் ஆகிய திட்டங்கள் தீட்டப்பட்டு 1981
டிசம்பரில் மத்திய மின்சார கழகத்தின் இசைவுக்கென அனுப்பப்
பட்டன. ரூ. 356.38 கோடி செலவில் ஒவ்வொன்றும் 210
மெகாவாட் திறன்கொண்ட இரண்டு பிரிவுகளைத் தூத்துக்குடியில்
கூடுதலாக அமைக்கும் விரிவாக்கத் திட்டத்தைச் செயல்படுத்தவும்

ரூ. 547.79 கோடி செலவில் வட சென்னையில் ஒவ்வொன்று 210 மெகாவாட் திறனுடைய மூன்று பிரிவுகளுடன் ஒரு புதிய அனல் மின் நிலையம் அமைப்பதற்கும் மத்திய திட்டக்குழு தன் இசைவை அளித்துள்ளது. தூத்துக்குடி விரிவாக்கத் திட்டத்தின்கீழ் 210 மெகாவாட் திறனுடைய ஒரு பிரிவு ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செயலாக்கப்படும்.

19. வட சென்னை அனல் மின் திட்டம் (630 மெகாவாட்) மத்திய அரசால் ஆசிய நாடுகளின் முன்னேற்ற வங்கியின் நிதி உதவிக்கென சமர்ப்பிக்கப்பட்டது. இரண்டு பிரிவுகட்கான மின் உற்பத்தி இயந்திரங்களை வாங்குவதெற்கென பெருமளவில் தேவைப்படும் 150 மில்லியன் அமெரிக்க டாலருக்கான கடன் உதவி, வெற்றிகரமாகக் கருத்து பரிமாற்றம் பெற்று மத்திய அரசு மற்றும் ஆசிய நாடுகளின் முன்னேற்ற வங்கியின் முடிவான இசைவினை எதிர்நோக்கியுள்ளது என்பதை அறிவதில் மாண்பு மிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சி கொள்வர். ஆசிய நாடுகளின் முன்னேற்ற வங்கி இந்தியாவில் ஒரு மின் திட்டத்துக்கு நிதி உதவி செய்ய முன்வந்துள்ளது இதுவே முதல் முறையாகும். முதல் பிரிவினை மார்ச் 1991-ல் செயலாக்கத்துக்குக் கொணர்ந்து பின்னர் 9 மாத இடைவெளிகளுடன் மற்ற இரண்டு பிரிவுகளை யும் செயலாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

20. உச்ச கட்டத்திறன் பற்றாக்குறையைச் சமாளிக்கவும், பயன் தரும் காலம் முடிவுபெற்ற தற்போதுள்ள பேசின்பிரிட்ஜ் மின் நிலையத்துக்கு ஒரு மாற்றாகவும் பேசின் 'பிரிட்ஜ் நிலை யத்தில் ரூ. 47.10கோடி செலவில் ஒவ்வொன்றும் 50 மெகாவாட் திறனுடன் கூடிய இரண்டு வாயு மின் உற்பத்தி நிலையங்களை நிறுவ அரசு கருத்து கொண்டுள்ளது. எனினும் மத்திய மின் சாரக் கழகத்தின் கருத்திற்கேற்ப, இத்திட்டம், ரூ. 56.48 கோடி செலவில் ஒவ்வொன்றும் 30 மெகாவாட் திறனுடைய 4 பிரிவுகளை நிறுவும் விதத்தில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது பெட்ரோலியம் அமைச்சகம் எரி எண்ணெய் ஒதுக்கீடு செய்தால் இத்திட்டத்துக்கு இசைவு அளிப்பதாக மத்திய மின்சாரக் கழகம் கூறியுள்ளது. இது குறித்து மத்திய சக்தித் துறை அமைச்ச ருடன் தொடர்பு கொண்டுள்ளோம். விரைவில் ஏற்பு கிடைக்கப் பெறும் என நாம் நம்பலாம்.

21. மின் துறையில் பெருமளவில் முன்னேற்றம் இருப்பினும் தொடர்ந்து மின் பற்றாக்குறை நிலவுகிறது என்பதும் உற்பத் தியை விட தேவை கூடுதலாக உள்ளது என்பதும் கடந்த கால வரலாறு. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் எதிர் பார்க்கப்படும் பற்றாக்குறையை முற்றிலும் போக்க, மாநிலத்தின் 1,416 மெகாவாட் திறன் கொண்ட கூடுதல் திட்டங்களும் 462 மெகாவாட் திறன் கொண்ட மத்திய அரசின் திட்டங்களும் போதுமானவை அல்ல.



22. மின் திட்டங்கள் நிறுவப்பட்டு பயன்தர நீண்ட காலம் ஆகிறது. எனவே, எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கான மின் திட்டப் பணிகள் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தி லேயே மேற்கொள்ளப்படல் வேண்டும், இதைக்கருத்தில் கொண்டு ஆரம்ப நிலையில் 630 மெகாவாட் திறனுடன் கடலூரில் ஒரு அனல் மின் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறு களைத் தமிழ் நாடு மின் வாரியம் ஆராய்ந்து வருகிறது. திட்ட அறிக்கை தயாரிப்பில் உள்ளது.

பைக்காரா இறுதிக் கட்டம் (150 மெ.வாட்) பவானி கட்டளை முதல் கட்டம், (90 மெ.வா.), சாத்தனூர் அணை மின் நிலையம் (15 மெ. வா.) மற்றும் கீழ்பவானி வலது கரைக் கால்வாய் மின் நிலையம் (8 மெ.வா.) ஆகியவை விரைவில் மத்திய மின்சாரக் கழகத்தின் இசைவினை எதிர்நோக்கியுள்ள திட்டங்களாகும்.

23. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கூடுதலாகத் திட்டங்களைச் செயலாக்கத்துக்கு எடுத்துக்கொள்வதில் உள்ள முதன்மையான இடையூறு நிதி வசதி இன்மையே ஆகும். இந்த நிலையில் மாநிலத்தில் மின் திட்டங்களைச் செயலாக்க நிதி உதவிக்கென மத்திய அரசு வெளி நாடுகளின் மூலதனத்தை எதிர்நோக்கியுள்ளது. வட சென்னை அனல் மின் நிலையத்துக் கான கடன் உதவி இவ்வகையில் ஒரு முன்னோடியாகும். ரஷ்ய நாட்டின் உதவியுடன் கடலூர் அனல் மின் நிலையத்துக்கான நிதி உதவி செய்வதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆராயு மாறு மாண்புமிகு முதலமைச்சர் இந்தியப் பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

24. மின்சாரத்துக்கெனத் தொடர்ந்து அதிகரித்து வரும் தொழில் துறையின் தேவையினையும், மின்பற்றாக் குறையைப் போக்குவதற்கென, உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்குத் தேவை யான நிதிப் பற்றாக் குறையினையும் கருத்தில் கொண்டு, தமிழக அரசு தனியார் துறையின் கூட்டுறவுடன், தனிப்பட்ட கழகங் களின் மூலம், தமிழ் நாடு மின் வாரியம் தனக்குச் சொந்தமான உற்பத்தித் திட்டங்களுக்கென ஏற்கெனவே அமைத்துள்ள எல்லா வசதிகட்கும் எவ்வித இடையூறும் ஏற்படா வண்ணம், மின் உற்பத்தி செய்வதற்கான கருத்துருக்களை ஆய்ந்து வருகிறது. மேலும் இவ்வகையிலான திட்டங்கள் மின் துறையில் கூடுதல் உற்பத்தியையும் கூடுதல் முதலீட்டினையும் அளிக்க வேண்டும், மத்திய அரசினால் ஏற்கெனவே ஏற்பளிக்கப்பட்டு, தமிழ்நாடு மின் வாரியத்தினால் செயலாக்கப்பட இருக்கும், தூத்துக்குடி விரிவாக்கத் திட்டத்துக்கு (420 மெகாவாட்.) நிதி உதவி செய்ய வும், செயலாக்கவும், இயக்கவும் ''செட்கோ'' என்னும் அமைப் பின்கீழ் 12 தொழில் நிறுவனங்கள் ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்த முன் வந்துள்ளன. இந்நிலையத்தினை இயக்க நீண்ட

கால அடிப்படையில் ஆஸ்திரேலியாவிலிருந்து நிலக்கரி இறக்குமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளிப்பதோடன்றி ''செட்கோ'' வின் கருத்துருவினை ஏற்பதால் மாநில அரசுக்கு மீதமாகும் ரூ. 300 கோடியை நெய்வேலி மூன்றாவது அனல் மின் நிலையத்தில் முதலீடு செய்து, மாநில அரசும் அத்திட்டத்தில் பங்கு பெற மத்திய அரசு ஏற்பளித்தால் மட்டுமே மாநில அரசு ''செட்கோ'' வின் கருத்துருவை ஏற்றுக் கொள்ளும். இந்த விபரங்கள் குறித்து மத்திய அரசிடம் மாநில அரசு எடுத்துரைத்துள்ளது.

25. நாட்டில் கூடுதலாக அணுமின் நிலையங்கள் அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. நமது ஆய்வின்படி, நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து வெகு தொலைவில் அமைந்துள்ள மாநிலங்களில் அணுமின் உற்பத்தி, அனல் மின் உற்பத்தியைவிடச் செலவில் குறைந்தது என்பதன் காரணமாக புது அணு மின் நிலையங்களை இது போன்ற மாநிலங்களிலேயே அமைக்க வேண்டுமென மத்திய அரசை நாம் வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். அணுமின் நிலையம் அமைக்க நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள கூடங்குளம் என்னும் இடத்தைத் தேர்ந்தெடுத்துள்ளோம். இந்த இடத்தில் ஒரு அணுமின் நிலையம் அமைக்க மத்திய அரசு முன் வரும் என இந்த அரசு நம்புகிறது.

26. உற்பத்தி நிலையங்களிலிருந்து மின்சாரத்தை வெளியே கொண்டு வந்து நுகர்வோருக்குப் பகிர்ந்திட, எடுத்துச் செல்லுதல் மற்றும் விநியோகிக்கும் பணிகள் பெருமளவில் வலுப்படுத்தப்பட்டு விரிவாக்கப்படல் வேண்டும். மின் அனுப்புதல் மற்றும் விநியோகத் திட்டப் பணியின்கீழ், 1985-86-ல் 11 கூடுதல் உயர் அழுத்தத் துணை மின் நிலையங்களும், 33/11 கே.வி. திறன் கொண்ட 3 துணை மின் நிலையங்களும் 310 கி.மீ. நீளமான கூடுதல் உயர் அழுத்த மின் கம்பித் தொடர்களும் பயனுள்ள வகையில் அமைக்கப்பட்டன.

27. மத்திய அரசின் அனல் மின் நிலையங்களான இராமகுண்டம், மற்றும் நெய்வேலி இரண்டாவது சுரங்க மின் நிலையம் இவற்றிலிருந்து வழங்கப்படும் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில் மின்வாரியம் ஸ்ரீபெரும்புதூர், சேலம் மற்றும் உடுமலைப்பேட்டையில் துணை மின் நிலையங்களை நிறுவி வருகிறது. 400 கே.வி. திறன் கொண்ட ஸ்ரீபெரும்புதூர் துணை மின் நிலையம் டிசம்பர் 1986-ல் தயார் நிலைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

28. நாட்டிலுள்ள மற்ற மின் வாரியங்களைப் போலவே தமிழ் நாடு மின்வாரியத்தின் மிகப் பெரிய பிரச்சினை, புதிய மின் திட்டங்களிலும், புதிய மின் கம்பித் தொடர் அமைக்கும் பணிகளிலும் முதலீடு செய்யத் தேவையான நிதியைத் தானே திரட்ட இயலாமையே ஆகும். நிலக்கரி மற்றும் எரி எண்ணெய் விலையில் பெருமளவில் வருடாந்தர ஏற்றம், இரயில் கட்டணம், கப்பல் கட்டணம் மற்றும் வெளியில் வாங்கும் மின்சாரத்தின் விலை ஆகியவற்றில் வருடந்தோறும் உயர்வு ஆகியவையே இந்நிலைக்கான முக்கிய காரணங்களாகும்.



1979 ஆம் ஆண்டுக்கான செலவினத்துடன் ஒப்பிடுங்கால், மின் வாரியம் இவ்விலை ஏற்றங்களின் காரணமாக ஆண்டு தோறும் ரூ. 185 கோடி கூடுதலாகச் செலவிட வேண்டியுள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரை, மொத்த மின் சக்தியில் இராமகுண்டம் மற்றும் நெய்வேலியிலிருந்து வாங்கும் மின்சாரம் உட்பட அனல் மின்சாரத்தின் விகிதாச்சாரம் ஆண்டுதோறும் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருவது மற்றொரு காரணமாகும். சமீபத்தில் 1980-81-ல் குறைந்த விலை புனல் மின்சாரம் மற்றும் உயர்ந்த விலை அனல் மின்சாரம் ஆகியவற்றின் விகிதாச்சாரம் ஏறத்தாழ 50 : 50 என இருந்தது. ஐந்து வருடங்களுக்குள் இது 30 : 70 என மாறியுள்ளது. இவற்றின் காரணமாக ஆண்டுக்கு ஆண்டு மின்வாரியத்தின் செலவு அதிகரித்துக் கொண்டே வருகிறது. பருவமழை குறைவின் காரணமாக நீர் மின் உற்பத்தி குறையும் ஆண்டுகளில் இந்தக் கூடுதல் செலவினம் மிக அதிகமாகும். பயன்படும் பொருட்களின் விலையேற்றத்தை கட்டுப்படுத்துவதற்கென நிலக்கரி விலை, எண்ணெய் விலை, கப்பல் கட்டணம் மற்றும் இரயில் கட்டணம் இவற்றை உயர்த்துவது பற்றிச் சிந்திக்கும் போது மாநிலங்களையும் கலந்து ஆலோசிக்க வேண்டுமென மத்திய அரசிடம் மாநில அரசு ஏற்கெனவே வலியுறுத்தியுள்ளது.

29. வெவ்வேறு அனல் மின் நிலையங்கட்கு வழங்கப்படும் நிலக்கரியின் விலையில் வேறுபாடு அமைவதின் காரணமாக நாட்டிலுள்ள அனல் மின் நிலையங்களிடையே உற்பத்திச் செலவு வேறுபடுகிறது. உற்பத்திச் செலவு ஒரே சீராக அமைவதற்கென எஃகு, சிமெண்ட் ஆகியவற்றிற்கு விலை நிர்ணயிக்கப்படுவது போன்று நிலக்கரிக்கும் நாடு முழுவதும் ஒரே சீரான விலை நிர்ணயிக்கப்பட வேண்டும், இந்த அரசு மத்திய அரசிடம் இந்தப் பிரச்சினையை எழுப்ப இருக்கிறது.

30. கடந்த 6 ஆண்டுகளில் மின் வாரியத்தின் நிதிநிலைச் செயல்பாடு கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது :—

| | 1980—81 | 1981—82 | 1892—83 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | உள்ளபடி செலவுகள். | |
| வருவாய் (மானியம் நீங்கலாக) .. .. | 2,65.91 | 2,83.68 | 3,27.56 |

| | 1983—84 | 1984—85 | 1985—86 ஆரம்ப நிலை கணக்குகள் |
|---|---|---|---|
| | உள்ளபடி செலவுகள். | | |
| (1) | (5) | (6) | (7) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| வருவாய் (மானியம் நீங்கலாக) .. .. | 3,71,85 | 5,58.42 | 6,29,78 |

[1986 நவம்பர் 19

| (1) | | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| வருவாய் செலவு | .. | 2,89,48 | 3,60,07 | 4,22,66 |

| (1) | | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|
| வருவாய் செலவு | .. | 4,67,57 | 5,54,71 | 6,37,64 |

| (1) | | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| வட்டி, தேய்மானம், சேமநிதி மற்றும் பொது சேமநிதி | .. | 89,83 | 99,98 | 1,15,85 |

| | | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|
| | | 1,17,72 | 1,41,58 | 1,58,63 |

| (1) | | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| பற்றாக்குறை | .. | 1,13,40 | 1,76,37 | 2,10,95 |

| | | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|
| | | 2,13,44 | 1,37,87 | 1,66,49 |

31. செலவுக்கும் வருவாய்க்குமுள்ள இடைவெளியைச்
சரி செய்யக் கட்டணத் திருத்தம் அவசியமாகிறது. இதற்கென,
தகுந்தவாறு கட்டணத்தைத் திருத்துவது பற்றிக் கருத்து
சொல்லவும், பரிந்துரை வழங்கவும் 1983 மார்ச் திங்களில்
அரசு ஒரு தனி நபர் குழுவினை நியமித்தது.

இக்குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது.
பரிந்துரையைப் பெருமளவில் ஏற்று விவசாயிகள் குழுவின்
ஏனைய நுகர்வோருக்கான கட்டணம் 16–5–1983 நீங்கலாக
அமைக்கப்பட்டது. இத் திருத்தம் வருடத்துக்கு முதல் திருத்தி
கோடி கூடுதல் வருவாயை அளித்தது. உயர் ரூ. 53.57
மற்றும் குறைந்த அழுத்தத் தொழிற்சாலைகள் அழுத்தம்
பொதுநோக்க நுகர்வோர் பிரிவுக்கான கட்டணம் 15–6–1984 மற்றும்
முதல் மீண்டும் திருத்தியமைக்கப்பட்டது. இதன் மூலம்
ஆண்டுக்கு ரூ. 64 கோடி கூடுதல் வருமானம் கிடைத்தது.
ஆண்டொன்றுக்கு மொத்தம் ரூ. 77.19 கோடி வருவாய்
கிடைக்கும் வகையில் உரிமதாரர் உட்பட உயர் அழுத்தத்
தொழிற்சாலைகள் மற்றும் குறைந்த அழுத்தத் தொழிற்
சாலைகட்கும், கடைகள், தங்கும் விடுதிகள் போன்ற பிரி
வினருக்கும் பொருந்தும் கட்டண விகிதங்களை அரசு



1986 நவம்பர் 19]

1985 மே திங்களில் மீண்டும் திருத்தி அமைத்தது. எனினும் விவ
சாயிகள் மற்றும் பஞ்சாயத்துகளிலுள்ள குடிசை வாழ்
வோருக்கு 15–9–1984 முதல் வழங்கப்பட்ட சலுகைகளின்
காரணமாக ஆண்டுக்கு ரூ. 10.41 கோடி வருவாய் இழப்பு
ஏற்பட்டது.

32. விவசாயிகட்குக் குறைந்த விலையில் மின்சாரம் வழங்கு
வதால் மின்வாரியத்துக்குப் பெருமளவில் இழப்பு ஏற்படுகிறது
என்பதை இங்கு வலியுறுத்த வேண்டும். நமது பொருளா
தாரத்தின் முதுகெலும்பாக விவசாயம் விளங்குவதாலும், உண
வுப் பண்டங்களின் விலையினை நியாயமான நிலையில்
வைப்பதற்கெனவும் விவசாயத்துக்குக் குறைந்த விலையில்
மின்சாரம் வழங்குவது தவிர்க்க முடியாதது. இப் பெருஞ்
சுமையை மாநில அரசு மட்டுமே முழுவதுமாக ஏற்கமுடியாது.
புதுடில்லியில் 1984 ஜூலையில் நடைபெற்ற மின்சார அமைச்சர்
கள் மாநாட்டில் இச்சுமையில் மத்திய அரசும் பங்கேற்க வேண்
டும் என மாநில அரசு கருத்துத் தெரிவித்துள்ளது.

33. 1986–87-ல் வருவாய் வரவு ரூ. 670.85 கோடியாக
இருக்கும் எனவும், வருவாய் செலவினம் ரூ. 897.48 கோடியாக
இருக்கும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. செலவினத்தில் எரி
பொருளுக்கென ரூ. 249.29 கோடியும், வெளியில் வாங்கும்
மின்சாரத்துக்கென ரூ. 260.36 கோடியும், பராமரிப்புக்கென
ரூ. 44.42 கோடியும், பணியாளர் மற்றும் நிர்வாகச் செலவுக்
கென ரூ. 150.36 கோடியும், அரசுக் கடன் தவிர ஏனையக்
கடன்களுக்கான வட்டி ரூ. 61.49 கோடியும், தேய்மானத்துக்
கென ஒதுக்கீடு ரூ. 45.98 கோடியும், அரசுக் கடன்களுக்கான
வட்டி ரூ. 85.58 கோடியும் அடங்கும். எனவே, வருவாய்
செலவினத்தை ஈடுசெய்ய வருவாய் வரவு போதுமானதாக
இராது. பற்றாக்குறை ரூ. 226.63 கோடியாக இருக்கும்.

34. நாட்டின் முன்னேற்றத்துக்கு மின்சாரத் துறை
அத்தியாவசியமானது என்பதை உணர்ந்து, 1986–87 ஆம்
ஆண்டுக்கான ஆண்டுத் திட்டத்திலும், ஏழாவது ஐந்தாண்டுத்
திட்டத்திலும், மின் உற்பத்தியின் முன்னேற்றத்துக்கு முக்கி
யத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. 1986–87 ஆம் ஆண்டில்
மாநிலத்தின் மொத்த ஒதுக்கீடான ரூ. 1,200 கோடியில்,
32.15 சதவீதம் மின்சாரத்துக்கென ஒதுக்கத் தீர்மானிக்கப்
பட்டுள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 34.78
சதவீதமாக ரூ. 5,750 கோடியாக ஒதுக்கீடு அமையும்.

35. 1985-86 ஆம் ஆண்டுக்கான தனது வரவு செலவுத்
திட்டத்தில் மின்வாரியம் முதலீட்டுச் செலவுகளுக்கென
ரூ. 362.38 கோடி செலவிட உத்தேசித்தது. இதில் மின்
உற்பத்திக்கென ரூ. 239.75 கோடியும், அனுப்புகை-பகிர்வுக்கு

ரூ. 70 கோடியும், திட்டத்துக்குப் புறம்பான செலவினமான
ரூ. 27 கோடியையும் சேர்த்து ஊரக மின் இணைப்புகளுக்
கென ரூ. 42.18 கோடியும் ஆய்வு, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி
அளித்தலுக்கென ரூ. 1 கோடியும், மத்திய உதவி பெறும் திட்
டத்தின் கீழ், மின் நிலையங்களின் புனரமைப்பு மற்றும் நவீன
மாக்குதலுக்கென ரூ. 9.45 கோடியும் உள்ளடங்கும். எனினும்,
மத்திய திட்டக் குழு 1985–86-ல் முதலீட்டுச் செலவுகளுக்கென
ரூ. 333.33 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்ய ஏற்பு அளித்தது.
இத்தொகையில் மின் உற்பத்திக்கென ரூ. 218.82 கோடியும்,
அனுப்புகை-பகிர்வுக்கு ரூ. 65 கோடியும், திட்டத்துக்குப் புறம்
பான ஒதுக்கீடான ரூ. 27 கோடியையும் சேர்த்து ஊரக மின்
இணைப்புகளுக்கென ரூ. 42·18 கோடியும் ஆய்வு முதலியவற்
றுக்கென ரூ. 1 கோடியும், மத்திய உதவி பெறும் திட்டத்தின்
கீழ் மின்நிலையங்களின் புனரமைப்பு மற்றும் நவீனமாக்கு
தலுக்கென ரூ. 6.33 கோடியும் உள்ளடங்கும். 1985-86-ல்
ஏற்பளிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை முழுவது
மாகச் செலவிடப்பட்டது என்பதனை மாண்புமிகு உறுப்பினர்
களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். 1985–86
ஆம் ஆண்டுக்கான தற்போதைய விவரப்படி அறுதியிட்ட
செலவு ரூ. 333.10 கோடியாகும். இதில் மின் உற்பத்திச்
செலவு ரூ. 219.98 கோடியும் அனுப்புகை-பகிர்வுச் செலவு
ரூ. 65.01 கோடியும், திட்டச் செலவுகட்குப் புறம்பான விசை
யேற்றங்கள் உட்பட ஊரக மின் இணைப்புகளுக்கான
செலவு ரூ. 39 கோடியும் ஆய்வு, ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான
செலவு ரூ. 1.01 கோடியும் மத்திய உதவி பெறும் திட்டத்தின்
கீழ் மின் நிலையங்களின் புனரமைப்பு மற்றும் நவீனமாக்கு
தலுக்கான செலவு ரூ. 8.10 கோடியும் உள்ளடங்கும்.

36. மத்திய திட்டக் குழுவுடன் நடந்த பேச்சுவார்த்தை
களின் அடிப்படையில் 1986–87 ஆம் ஆண்டில் தமிழ்நாடு
மின்வாரியம் முதலீட்டுச் செலவுகளுக்கென ரூ. 422.66 கோடி
ஒதுக்கீடு செய்யத் தீர்மானித்துள்ளது. இதில் மின் உற்பத்திக்
கென ரூ. 259.41 கோடியும், அனுப்புகை மற்றும் பகிர்வுக்கென
ரூ. 107.00 கோடியும், திட்டத்துக்குப் புறம்பான செலவின
மான ரூ. 27 கோடியையும், சேர்த்து ஊரக மின் இணைப்பு
களுக்கென ரூ. 44.45 கோடியும் ஆய்வு முதலியனவற்றுக்காக
ரூ. 2 கோடியும், மத்திய உதவி பெறும் திட்டத்தின் கீழ் மின்
நிலையங்களின் புனரமைப்பு மற்றும் நவீனமாக்குதலுக்கென
ரூ. 9.80 கோடியும் அடங்கும்.

37. மின்வாரியத்தின் நடவடிக்கைகள் விறுவிறுப்புடன்
செயல்பட மாநில அரசு பெருமளவில் நிதி உதவி செய்கிறது.
1985–86-ல் மாநில அரசு கடன்/ஈகை/வழிவகை முன்பண
மாக மின்வாரியத்துக்கு ரூ. 280 கோடி வழங்கியது.
1986–87-ல் ரூ. 300 கோடி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
அரசின் உதவி தவிர, மின்வாரியம், வெளிச் சந்தையிலிருந்தும்



மத்திய ஊரக மின்
ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்தும், வணிக வங்கிகளிடமிருந்தும்
இணைப்புக் கழகத்திடமிருந்தும்,
கடன் உதவி பெறுகிறது.

38. மத்திய ஊரக மின் இணைப்புக் கழகத்திடமிருந்து பெறப்
படும் நிதி உதவியை, விரிவான அளவில், மின்வாரியம் ஊரக மின்
இணைப்புகளுக்கெனப் பயன்படுத்துகிறது. 31–3–1986 நில
வரப்படி மத்திய ஊரக மின் இணைப்புக் கழகம் ரூ. 187.99
கோடி கடன் உதவி பெறும் 643 திட்டங்களுக்கு ஏற்பளித்
துள்ளது. இக்கடன் உதவியில் ரூ. 91.03 கோடி மத்திய ஊரக
மின் கழகத்திடமிருந்தும் ரூ. 43.88 கோடி வங்கிகளிடமிருந்தும்
பெறப்பட்டுள்ளது. விசையேற்ற மின் இணைப்புத் திட்டங்
களுக்கென 1986–87-ல் மத்திய ஊரக மின் கழகத்திடமிருந்தும்
வங்கிகளிடமிருந்தும் நிதி உதவி பெறப்படும்.

39. தனது செயல்திறனை அதிகரிக்கவும் செலவினங்களைக்
குறைக்கவும் தமிழ்நாடு மின் வாரியம் பல நடவடிக்கைகளை
மேற்கொண்டுள்ளது. செலவைக் குறைக்கும் வகையில் தூத்து
குடி மற்றும் எண்ணூர் மின் நிலையங்களில் எரி எண்ணெய்
பயனீட்டைக் குறைத்தது ஒரு பெரும் சாதனையாகும். 1983–
84 ஆம் ஆண்டில் தூத்துக்குடியில் ஒரு யூனிட் மின் உற்பத்
திக்கு 57 மில்லி லிட்டராகவும் எண்ணூரில் 27.9 மில்லி லிட்ட
ராகவும் இருந்த எரி எண்ணெய் பயனீடு, 1985–86-ல் முறையே
9.86 மில்லி லிட்டராகவும் 7.8 மில்லி லிட்டராகவும் குறைக்கப்
பட்டது. மின் வாரியத்தின் வருவாயினை அதிகரிப்பதற்கு,
மின் திருட்டைக் கண்டுபிடித்தல் ஒரு சிறந்த ஏற்பாடாகும்.
1985-இல், 566 மின் திருட்டுகளும் 6821 தவறான உபயோ
கங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றின் மூலம்
ரூ.201.78 இலட்சம் வருவாய் கிடைக்கும் என மதிப்பிடப்பட்
டுள்ளது.

1986 ஆம் ஆண்டில் ஜனவரி முதல் ஆகஸ்ட் வரையிலான
கால அளவில் 430 மின் திருட்டுகளும் 4692 தவறான உப
யோகங்களும் ரூ. 345.58 இலட்சம் வருவாய் மதிப்புடன் கண்டு
பிடிக்கப்பட்டன.

பயனீட்டாளரிடமிருந்து நிலுவைத் தொகையினை வசூ
லிக்க மின்வாரியம் தீவிர நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.
31–3–1986 முடிய உயர் அழுத்த மின் பயனீட்டாளரிடமிருந்து
ரூ. 28.64 கோடியும், குறைந்த அழுத்த மின் பயனீட்டா
ளரிடமிருந்து ரூ. 11.76 கோடியும் ஆக மொத்த நிலுவை
ரூ. 40.40 கோடியும் இருந்தது. மிகப் பெரிய நிலுவைத்
தொகையான ரூ. 20.04 கோடி மால்கோ நிறுவனத்திடமிருந்து
வர வேண்டியுள்ளது. இது குறித்து, உச்ச நீதி மன்றத்தில்
ஒரு வழக்கு உள்ளது. விவசாயப் பயனீட்டாளரைப் பொறுத்த
வரை 1980 நவம்பரில் ரூ. 37.59 கோடியாகக் இருந்த நிலுவைத்
தொகை 31–3–1986 அன்று ரூ. 2.44 கோடியாகக் குறைக்கப்
பட்டுள்ளது.

40. தனது பணியாளரின் நலனை முன்னேற்றும் வகையில்
தமிழ்நாடு மின் வாரியம் பணியாளரின் ஊதியங்களை 1-12-1984
முதல் திருத்தி அமைத்தது. திருத்திய ஊதியங்களால் ஆண்
டொன்றுக்கு ஆகும் கூடுதல் செலவு ரூ. 18.75 கோடியாகும்.
அனுமதிக்கப்பட்ட 8.33 சதவிகிதம் போனஸ் வழங்கியதோடு
மட்டுமல்லாமல் ஒவ்வொரு பணியாளருக்கும் 1984-85-ல்
ரூ. 275-ம் 1985-86-ல் ரூ. 375-ம் கருணைத் தொகை அளிப்
பாக வழங்கப்பட்டது.

பல்வேறு தொழிற்சங்கங்களின் நெடுநாளையக் கோரிக்கை
யினை ஏற்று மின் வாரியம் பங்குத் தொகை பெறும் வருங்
கால வைப்பு நிதித் திட்டத்தின் கீழ்வரும் எல்லா நிரந்தரத்
தொழிலாளருக்கும் ஓய்வு கால ஊதியம் வழங்கும் திட்டத்
தினை 1-7-1986 முதல் அமுல்படுத்தியுள்ளது. இத்திட்டத்
தினால் ஏறத்தாழ 65,000 மின்வாரியத் தொழிலாளர் பயன்
பெறுவர்.

41. நிரந்தரத் தொழிலாளரின் பணியமைப்பு தொடர்பான
வேலைகளைப் பரவலாக்கும் நோக்கத்துடன், இதுவரை மேற்
பார்வைப் பொறியாளரின் அலுவலகத்தில் நடைபெற்று
வந்த மேற்படி வேலைகளை 1-5-1986 முதல் கோட்டப்
பொறியாளரின் அலுவலகங்களுக்கு மாற்றி, வாரியம் ஆணை
பிறப்பித்துள்ளது. தங்களது பணியமைப்பு பற்றிய குறை
களைப் பணியாளர் விரைவில் தீர்த்துக் கொள்ள இத்திட்டம்
பெருமளவில் வழி வகுக்கும்.

42. ஒப்பந்தப் பணியாளரது நன்மைக்கென, எண்ணூர்
அனல் மின் நிலையத்தில் மின்வாரியம் ஒரு தொழில் கூட்டு
றவுப் பணிச் சங்கத்தினை அமைத்துள்ளது. நிலைய வேலை
கள், பராமரிப்பு, முழுச் சீரமைப்பு, பொருட்களின் போக்கு
வரத்து போன்ற இது நாள்வரை டெண்டர் அடிப்படையில்
ஒப்பந்தக்காரர்கள் மூலமாகச் செய்து வரப்பட்ட பணிகள்,
தற்போது, நியமன அடிப்படையில் மேற்படி கூட்டுறவு
சங்கத்திடம் தரப்படுகின்றன. சங்கத்தின் பங்கு மூலதனத்தில்
வாரியம் பங்கேற்று, செயல்முறை மூலதனச் செலவுக்கென வட்டி
யற்ற கடன் உதவியும் செய்து வருகிறது.

ஏற்ற காலத்தில், இத்திட்டத்தினைத் தூத்துக்குடி அனல்
மின் நிலையத்துக்கும் விரிவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

43. நிர்வாகத்தை நெறிப்படுத்தும் நோக்கத்துடன் மின்
வாரியம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.
சென்னைப் பகிர்வு மண்டலம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு,
வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு, தர்மபுரி, திரு
வண்ணாமலை மற்றும் வேலூர் மின் அமைப்புகளுக்குப்
பொறுப்பேற்கும் வகையில் ஒரு புது மண்டலம் ஏற்படுத்தப்
பட்டது. தஞ்சாவூர் மற்றும் செங்கல்பட்டு, பகிர்வு அமைப்பு
களும் இரண்டாகப் பிரிக்கப்பட்டு விட்டன. அனல் மின்





நிலையங்கள் மற்றும் அனல் மின் திட்டங்களுக்கான மேலாண்
பணிகளை வலிவுபெறச் செய்யும் நோக்கத்துடன் அனல்
வடிவமைப்புக்கான பொறுப்புக்கென ஒரு தலைமைப்
பொறியாளர் (மின்) பதவியினை வாரியம் ஏற்படுத்தியுள்ளது.
மேலும், தேவையான உதவியாளருடன், வட சென்னை
அனல் மின் திட்டத்துக்கென ஒரு தலைமைப் பொறியாளர்
பதவியும் தனியே வாரியத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

44. தனது அதிகாரிகள் மற்றும் பணியாளரது அறி
வினையும், திறனையும் இந்நாள் நிலைக்கு முன்னேற்றுவதற்கு
தமிழ்நாடு மின் வாரியம் அதிக முக்கியத்துவம் கொடுத்து வந்
துள்ளது. இதற்கென, பொறியாளர் மற்றும் தொழில் நுட்பக்
கலைஞர்களுக்குப் பயிற்சி அளிக்க நான்கு நிலையங்களையும்,
பணியாளருக்குப் பயிற்சி அளிப்பதற்கென ஆறு பயிற்சி
நிலையங்களையும் வாரியம் நடத்தி வருகிறது. 1985 ஆம்
ஆண்டில் மேற்படி பயிற்சி நிலையங்களில் 284 பொறியாளர்
மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்களும் 490 பணியாளர்
களும் பயிற்சி பெற்றனர்.

நிதி மற்றும் பணியாளர் மேலாண்மை குறித்து, அதிகாரிகள்
தேவையான அளவில் தேர்ச்சி பெறும் வகையில் பல்வேறு
மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழில்நுட்ப
நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட குறுகிய காலப்
பயிற்சிகளுக்கும், கூட்டங்களுக்கும் வாரியத்தின் 330 அதிகாரி
கள் வாரியத்தினால் அனுப்பப்பட்டனர். மேலும், மேட்டூர்
புதிய அனல் மின் நிலையத்தில் பணியமர்த்தப்படுவதற்கெனப்
புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டம் பெற்ற 100
பொறியாளர்கள் அனல் மின் நிலைய இயக்கம்பற்றி மின்
பொறியாளர் பயிற்சிச் சங்கத்தினால் நடத்தப்பட்ட ஆறு
மாத காலப் பயிற்சிக்கென அனுப்பப்பட்டனர்.

45. மாநிலத்தின் மொத்த மின் உற்பத்தி மற்றும் மின்
அனுப்புதலைக் கண்காணிக்கும் பொருட்டு சென்னையிலுள்ள
வாரியத்தின் தலைமையிட வளாகத்தில் ஒரு தலைமை மின்
அனுப்புகை மையம் 1986 பிப்ரவரி முதல் செயல்படுகிறது.
மேலும், மதுரையில் ஒரு துணை மின் அனுப்புகை மையமும்
நிறுவப்பட்டது.

46. மின்சார வாரியம் என்பது பல்வகைப்பட்ட சிக்கல்
களும் பிரச்சினைகளும் நிறைந்த ஒரு நிறுவனமாகும். எனவே
அதன் செயல் திறனை மேம்படுத்த எப்போதும் வழிவகைகள்
உண்டு. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் செயல் திறனை மேம்
படுத்த இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்
துக்களை நான் வரவேற்கிறேன்.

## இணைப்பு I

### தமிழ் நாட்டில் திட்ட வாரியான மின் வளர்ச்சி.

(ரூபாய் கோடியில்.)

| தொடர் எண்ணும் விளக்கமும். | திட்டத் திற்கு முன்பு. 31-3-1951 | 1 ஆம் திட்டம். 1951-56 | 2 ஆம் திட்டம். 1956-61 | 3 ஆம் திட்டம். 1961-66 | ஆண்டுத் திட்டம். 1966-69 | 4 ஆம் திட்டம். 1969-74 | 5 ஆம் திட்டம். 1974-78 | ஆண்டுத் திட்டம். 1978-80 | 6 ஆம் திட்டம். 1980-85 | (தற்காலிக மானது) ஆண்டுத் திட்டம். 1985-86 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| (அ) மின் உற்பத்தி— | | | | | | | | | | |
| 1. நிறுவுத் திறன் (மெ.வா.) .. | 156 | 256 | 571 | 1,070† *300 | 1,070† *400 | 1,654† *600 | 1,824† *600 | 2,119† *600 | 2,509† *600 **235 | 2,529† *600† **352 ***132 |
| 2. உச்சத் தேவை (மெ.வா.) .. | 110 | 172 | 381 | 717 | 997 | 1,287 | 1,641 | 1,710 | 2,154 | 2,076 |
| 3. மொத்த மின் உற்பத்தி மற்றும் கொள்முதல் (மெ.வா.) .. | 630 | 1,053 | 2,243 | 4,041 | 5,260 | 6,948 | 9,453 | 10,414 | 13,731 | 13,500 |
| (ஆ) மின் அனுப்புகை மற்றும் மின் பங்கீடு— | | | | | | | | | | |
| 1. கூடுதல் உயர் அழுத்த மின் கம்பித் தொடர்கள் (கி.மீ.) .. | 6,936 | 11,479 | 24,194 | 39,806 | 48,336 | 68,737 | 72,689 | 77,126 | 87,250 | 88,141 |
| 2. குறைவு அழுத்த மின் கம்பி தொடர்புகள் (கி.மீ.) .. .. | 5,728 | 13,055 | 35,352 | 73,198 | 1,04,977 | 1,97,017 | 2,22,659 | 2,49,226 | 2,78,515 | 2,84,257 |
| 3. கூடுதல் உயர் அழுத்த துணை நிலையங்களின் எண்ணிக்கை. | 31 | 48 | 70 | 98 | 119 | 146 | 174 | 192 | 230 | 241 |
| 4. உயர் அழுத்த துணை நிலையங் களின் எண்ணிக்கை. .. .. | 25 | 41 | 73 | 103 | 114 | 125 | 150 | 164 | 209 | 212 |
| 5. மின் பங்கீட்டு துணை நிலையங் களின் எண்ணிக்கை. .. .. | 1,591 | 3,773 | 10,004 | 17,360 | 22,842 | 37,453 | 43,666 | 48,595 | 63,667 | 64,750 |
| 6. பயனீட்டாளர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்). .. .. | 2.5 | 4.3 | 7.7 | 13.6 | 18.22 | 27.07 | 34.00 | 39.97 | 58.27@ | 62.24 |
| 7. நபர் வாரியான பயன்பாடு (யூனிட்டுகள்). .. .. | 12 | 21 | 60 | 92 | 116 | 127 | 157 | 183 | 195 | 19 |
| (இ) கிராம மின் வசதி— | | | | | | | | | | |
| 1. மின் இணைப்பு செய்யப்பட்ட நகரங்கள் - கிராமங்கள், சிற்றூர் களின் எண்ணிக்கை. .. .. | 1,813 | 3,548 | 10,760 | 22,137 | 31,727 | 61,072 | 63,329 | 63,428 | 63,648 | 63,62 |

[1988 தொடர்ச்சி]

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2. அரிஜன் காலனிகள் மின் இணைப்பு வழங்கப்பட்டவை. | .. | .. | 939 | 3,546 | 7,282 | 23,768 | 24,797 | 25,653 | 26,137 | 26,211 |
| 3. மின் இணைப்பு வழங்கப்பட்ட வேளாண்மை பம்பு செட்டுகளின் எண்ணிக்கை. | 14,373 | 33,440 | 1,17,695 | 2,58,594 | 4,10,119 | 6,81,205 | 8,05,616 | 8,87,227 | 10,33,556 | 10,74,184 |
| 4. மின் இணைப்பு வழங்கப்பட்ட குடிசைகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்). | .. | .. | .. | | | | | 1.67 | 6.36@ | 7.10 |
| **இ. மூலதன செலவு வருவாய் (கோடியில்)** | | | | | | | | | | |
| 1. மொத்த மூலதனச் செலவு | 23.82 | 54.01 | 133.21 | 253.38 | 356.07 | 552.20 | 799.09 | 1,042.90 | 1,881.81 | 2,241.91 |
| 2. மொத்த வருவாய் | 3.18 | 5.94 | 15.82 | 34.67 | 50.22 | 114.28 | 223.14 | 284.19 | 705.00 | 829.78† |

* நெய்வேலி **கல்பாக்கம் ***இராமகுண்டம் @ 6.36 இலட்சம் குடிசைகளையும் சேர்த்து. † நிதி உதவி இல்லாமல்.

## இணைப்பு—II

### ஆண்டுத் திட்டம்.

| தொடர் எண்ணும், விவரமும். | அனுமதி நாள். | மதிப்பீட்டுச் செலவு. | 1980-85. 6-வது திட்டம் ஏற்பளிக்கப் பட்டது. | 1980-85. 6-வது திட்டம் உள்ளபடி | 31-3-85 முடிய செலவினம். | 1985-90 7-வது திட்டம்— ஏற்பளிக்கப் பட்ட மூலதனச் செலவு. | 1985-86 ஏற்பளிக்கப் பட்ட மூலதனச் செலவு. | 1985-86 உள்ளபடி செலவினம். (தற்காலிகம்.) | 1986-87 ஏற்பளிக்கப் பட்ட மூலதனச் செலவு. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| | | (ரூபாய் கோடியில்.) | | | | | (ரூபாய் கோடியில்.) | | |
| 1. மின் உற்பத்தி | | | | | | | | | |
| நிறைவேற்றி முடிக்கப்பட்ட திட்டங்கள். | | | | | | | | | |
| 1 தூத்துக்குடி-I நிலை 2200 மி.யூ. (2 × 210 மெ. வா.) | நவம்பர் 1973 | 178.00 | 17.93 | 17.86 | 177.93 | .. | .. | 0.74 | .. |
| 2 தூத்துக்குடி-II நிலை (1 × 210 மெ. வா.) 1,100 மி.யூ. | செப்டம்பர் 1977 | 93.59 | 36.53 | 41.91 | 89.66 | 0.50 | 0.50 | (—)0.74 | .. |
| 3 மற்ற நிறைவேற்றி முடிக்கப் பட்ட திட்டங்கள். | | .. | 3.92 | 4.72 | .. | .. | .. | 0.18 | .. |
| பகுதி மொத்தம் | | .. | 58.38 | 73.77 | 267.59 | 0.50 | 0.50 | 0.18 | .. |
| நடப்புத் திட்டங்கள்— | | | | | | | | | |
| 1 சேர்வலாறு நீர் மின்விசைத் திட்டம் (1 × 20 மெ.வா.) 75 மி.யூ. | ஜூலை 1974 | 39.43 | 13.07 | 30.54 | 35.71 | 2.75 | 3.19 | 4.02 | 0.57 |
| 2 காடம்பாறை மின் நிலையம் (4 × 100 மெ.வா.) 79 மி.யூ. | பிப்ரவரி 1973 மற்றும் டிசம்பர் 1977 | 164.51 | 65.00 | 88.08 | 118.70 | 85.77 | 24.43 | 25.58 | 15.91 |
| 3 கீழ் மேட்டூர் நீர் மின் விசைத் திட்டம் (8 × 15 மெ. வா.) 537 மி.யூ. | செப்டம்பர் 1980 | 147.09 | 86.02 | 100.54 | 103.83 | 43.23 | 23.00 | 23.00 | 15.00 |
| 4 குந்தா கூடுதல் யூனிட் 5 ஆம் மின் நிலையம் (1 × 20 மெ.வா.) 36 மி.யூ. | மே 1980 | 10.40 | 5.03 | 1.71 | 1.65 | 5.24 | 2.00 | 2.01 | 5.32 |
| 5 பைக்காரா அணை (சிறு புனல் மின் திட்டம்) 2 மெ.வா. 10 மி.யூ. | ஆகஸ்ட் 1981 | 2.22 | .. | 0.11 | 0.11 | 2.05 | 0.25 | 0.16 | 1.72 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6 கீழ்பவானி சிறு புனல் மின் திட்டம் (8 மெ. வா.) 39 மி.யூ. | ஆகஸ்டு 1981 | 7.70 | .. | | .. | 7.74 | 1.05 | 0.16 | 4.09 |
| 7 வைகை அணை சிறு புனல் மின் திட்டம் (2 × 3 மெ. வா.) 25 மி.யூ. | | 4.96 | .. | | .. | 4.87 | 0.70 | 0.12 | 3.75 |
| 8 பார்சன் பள்ளத்தாக்கு (1 × 30 மெ. வா) 53 மி.யூ. | ஜூன் 1982 | 13.73 | .. | .. | .. | 13.63 | .. | .. | 0.01 |
| 9 மேட்டூர் அனல் மின் திட்டம் முதல் நிலை (2 × 210 மெ. வா.) 2,200 மி.யூ. | செப்டம்பர் 1980 | 384.32 | 161.30 | 170.89 | 170.86 | 214.35 | 126.01 | 126.01 | 76.00 |
| 10 மேட்டூர் அனல் மின் திட்டம் இரண்டாம் நிலை (2 × 210 மெ. வா.) 2,200 மி.யூ. | மே 1983 | 269.02 | .. | 10.00 | 10.00 | 240.00 | 20.00 | 20.00 | 65.00 |
| பகுதி மொத்தம் | .. | .. | 330.42 | 401.87 | | 570.33 | 200.62 | 201.06 | 187.37 |
| புதிய திட்டங்கள் (ஏற்பளிக்கப்பட்டவை) | | | | | | | | | |
| 1 அத்திக்கடவு (சிறு மின்) (2 × 2.5 மெ. வா.) 20 மி.யூ. | ஜூன் 1985 | 4.80 | .. | .. | .. | 2.50 | 0.50 | .. | 0.10 |
| 2 பூனாச்சி (சிறு மின்) (1 × 1 மெ. வா.) 4 மி.யூ. | ஆகஸ்டு 1982 | 0.85 | .. | .. | .. | 0.85 | .. | .. | 0.10 |
| 3 மரவகண்டி (சிறு மின்) 1 × 0.75 மெ. வா.) 3 மி.யூ. | ஜனவரி 1985 | 0.77 | .. | .. | .. | 0.77 | .. | .. | 0.05 |
| 4 சந்திநல்லா மேல் கொடுமுண்டு வழி மாற்றுத் திட்டம் 7 மி.யூ. | நவம்பர் 1981 | 0.75 | .. | 0.01 | 0.01 | .. | .. | 0.01 | 0.10 |
| 5 விளாம்பட்டி (சிறு மின்) (1 × 5 மெ. வா.) 2 மி. யூ. | ஜூன் 1983 | 0.48 | .. | .. | .. | 0.48 | .. | .. | .. |
| 6 தூத்துக்குடி விரிவாக்கம் (2 × 210 மெ. வா.) 2,200 மி.யூ. | ஜூன் 1985 | 356.38 | .. | .. | .. | .. | .. | 11.71 | 35.00 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏற்பளிக்கப்படாதவை : | | | | | | | | | |
| 7 வட சென்னை அனல் மின் நிலையம் முதல் நிலை (3 × 210 மெ.வா.), 3.300 மி.யூ. | .. | 547.72 | 125* (LS) | 0.18 | .. | 642.59 (LS) | 13.57 (LS) | 1.44 | 15.00 |
| 8 எரிவாயு மின் நிலையம்.. (4X30 மெ. வா.) 172 மி.யூ. | .. | 56.48 | .. | .. | .. | .. | .. | .. | 5.00 |
| *அனைத்து புதிய திட்டங்களுக்கும் | .. | | | | | | .. | .. | 1.00 |
| 9 நீர்வீழ்ச்சி சிறுமின் நிலையம் (2 × 2.5 மெ.வா.) 15 மி.யூ. | ஆகஸ்ட் 1984 | 3.78 | .. | .. | | | | | |
| 10 பைக்காரா இறுதிநிலை நீர்மின் விசைத் திட்டம் (100 மெ.வா.) 211 மி.யூ. | .. | 51.66 | .. | .. | | | | | |
| 11 சாத்தனூர் நீர் மின் விசைத் திட்டம் (2 × 10 மெ.வா.) 33 மி.யூ. | .. | 16.76 | .. | .. | | | | | |
| 12 பரளையாறு நீர்மின் விசைத் திட்டம் (25 மெ. வா.) 74 மி.யூ. | .. | 17.70 | .. | .. | | | | | |
| 13 கீழ்பவானி வலது கரைக் கால்வாய் நீர் மின் விசைத் திட்டம் (2 × 5 மெ. வா.) 37 மி.யூ. | .. | 5.60 | .. | .. | | | .. | .. | .. |
| 14 பாண்டியாறு—புன்னம்புழா நீர் மின் விசைத் திட்டம் (ஏற்பளிக்கப்பட்டது). (100 மெ.வா.) 422 மெ. வா. | அக்டோபர் 1968 | 110.00 | 30.00 | .. | 0.75 | .. | .. | .. | .. |
| 15 நெல்லித்தோறை நீர் மின் விசைத் திட்டம். (50 மெ. வா.) 109 மி.யூ. (ஏற்பளிக்கப்பட்டது). | ஜூன் 1974 | 23.70 | 10.00 | .. | 0.45 | .. | .. | .. | |
| துணை மொத்தம் | .. | .. | 165.00 | 0.14 | .. | 647.19 | 14.07 | 13.16 | 5.0 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மின் நிலையங்களைப் புனரமைத்தல்.— | | | | | | | | | |
| 1 பைக்காரா மேட்டூர் அணை பாபநாசம் மின் நிலையங்களில் ஜெனரேட்டர்களை இயக்குதல். | .. | 4.75 | .. | .. | .. | 4.75 | .. | .. | .. |
| 2 எண்ணூர் அனல் மின் நிலைய மேம்பாட்டுத் திட்டம் முதல் நிலை. | மே 1985 | 47.39 | 18.50 | 29.47 | .. | 4.80 | 2.25 | 1.00 | 8.45 |
| 3 எண்ணூர் அனல் மின் நிலைய மேம்பாட்டுத் திட்டம் இரண்டாம் நிலை. | மே 1985 | 52.78 | .. | .. | .. | 30.35 | 1.18 | 4.24 | 0.90 |
| 4 தூத்துக்குடி அனல் மின் நிலைய மேம்பாட்டுத் திட்டம். | மே 1985 | 8.14 | .. | .. | .. | 0.90 | 0.20 | 0.24 | 1.44 |
| துணை மொத்தம் .. | .. | .. | 18.50 | 29.47 | .. | 40.80 | 3.63 | 5.58 | [illegible] |
| மின் உற்பத்தித் திட்டங்களின் மொத்தம் | .. | .. | 572.30 | 505.25 | .. | 1,258.82 | 218.82 | 219.98 | 259.41 |
| II. மின் அனுப்புகையும் மின் பங்கிடும் திட்டங்களும். | .. | .. | 325.00 | 296.63 | .. | 650.00 | 65.00 | 65.01 | 107.00 |
| III. கிராம மின் வசதி .. | .. | .. | 115.00 | 176.99** | .. | 81.18 | 15.18 | 15.27 | 17.45 |
| IV. ஆய்வும் புலனாய்வும் பல் வகையும். | .. | .. | 10.50 | 4.94 | .. | 10.00 | 1.00 | 1.01 | 2.00 |
| மொத்தம் I முதல் IV வரை | .. | .. | 1,022.80 | 983.81 | .. | 2 000.00 | 300.00 | 301.27 | 385.86 |
| V. திட்டத்திற்கு புறம்பான ஊரக மின் இணைப்பு வேலைகள். | .. | .. | .. | .. | .. | 135.00 | 27.00 | 23.73 | 27.00 |
| VI. மத்திய அரசு உதவி பெறும் மின் நிலைய புனரமைப்புத் திட்டங்கள் | .. | .. | .. | .. | .. | 24.06 | 6.32 | 8.10 | 9.25 |
| பெரு மொத்தம் I முதல் VI வரை | .. | .. | 1,022.80 | 983.81 | .. | 2,159.06 | 333.33 | 333.10 | 422.66 |

** திட்டத்தில் சேராத செலவினங்களும் அடங்கும்.

## இணைப்பு— 3.

### கிராம மின் வசதி

31—3—1985 நிலவரப்படி கிராம மின் வசதியின் முன்னேற்றம்.

| தொடர் எண் மற்றும் இனம். | தற்போதுள்ளவை. | மின் இணைப்பு செய்யப்பட்டவை. 31-3-1985ல் உள்ளவாறு. | 1985-86. | மொத்தம் 31-3-1986ல் உள்ளவாறு. | சதவிதம். | 31-3-1986 ஆம் நாளன்று உள்ளவாறு மின் இணைப்பு கொடுக்கப் பட வேண்டியவை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 நகரங்கள் .. .. .. | 439 | 439 | .. | 439 | 100 | .. |
| 2 கிராமங்கள் .. .. | 15,735 | 15,700 | 15 | 15,715 | 99.9 | 20* |
| 3 சிற்றூர்கள் .. .. | 47,838 | 47,509 | 6 | 47,515 | 99.3 | 323 |
| 4 நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்கள். | 64.012 | 63,648 | 21 | 63,669 | 99.5 | 343* |
| 5 ஆதி திராவிடர் குடியிருப்புக்கள் | கிடைக்கப் பெறவில்லை. | 26,137 | 74 | 26,211 | .. | .. |
| 6 வேளாண்மை விசையேற்றங்கள் | ஷை | 10,33,556 | 40,628 | 10,74 184 | .. | .. |
| 7 மின் இணைப்பு செய்யப்பட்ட குடிசைகள். | ஷை | 6,35.771 | 74,344 | 7.10,115 | .. | .. |

*குடியிருப்பு இல்லாத நான்கு கிராமங்களையும் சேர்த்து.

136/197
சென்னை-600 008.

இணைப்பு VI

1984-85 ஆம் ஆண்டிலிருந்து மின் வெட்டு.

| நாள். | வேளாண்மை | வீட்டு உபயோகம். | குறைந்த அழுத்த மின்சக்தி பயன்படுத்தும் தொழில் நிறுவனங்கள். | குறைந்த அழுத்த மின்சக்தி பயன்படுத்தும் வணிக நிறுவனங்கள். | உயர் அழுத்த மின்சக்தி பயன்படுத்தும் இன்றியமையாப் பணிகள். | உயர் அழுத்த மின் சக்தி பயன்படுத்தும் தொழில் நிறுவனங்கள். | உயர் அழுத்த மின் சக்தி பயன்படுத்தும் வணிக நிறுவனங்கள். | உயர் அழுத்த மின் சக்தி பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு மின் வெட்டு. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1—4—1984 .. .. | மின் வெட்டு இல்லை. | உயர் அழுத்த சக்தியைப் பயன் படுத்து வோருக்கு 15 சதவீதம் வெட்டு. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | உயர் அழுத்த மின் சக்தியைத் தொடர்ந்து பயன்படுத்தும் தொழில் நிறுவனங்களுக்கு 30 சதவீதம் மின் வெட்டு மற்ற உயர் அழுத்த தொழில்களுக்கு மின் வெட்டு இல்லை. | மின்வெட்டு இல்லை. | உயர் அழுத்த மின் சக்தியைத் தொடர்ந்து பயன்படுத்தும் தொழில் நிறுவனங்களுக்கு 30 சதவீதம் மின் வெட்டு ஏனைய உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கு 15 சதவீதம் உயர் அழுத்த வணிக தொழில்களுக்கு 15 சதவீதம். |
| 15—6—1984 .. .. | மின் வெட்டு இல்லை. | உயர் அழுத்த சக்தியைப் பயன் படுத்து வோருக்கு 15 சதவீதம் வெட்டு. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | உயர் அழுத்த மின் சக்தியை தொடர்ந்து பயன்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு 15 சதவீதம் ஏனைய உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கு 15 சதவீதம் உயர் அழுத்த வணிக நிறுவனங்களுக்கு 15 சதவீதம். |
| 20—7—1984 .. .. | மின் வெட்டு தளர்த்தப்பட்டது. | | | | | | | |
| 1—2—1985 .. .. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | 30 சதவீதம். | மின் வெட்டு இல்லை. | 30 சதவீதம். |
| 1—2—1985 .. .. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கு 50 சதவீதம் ஏனையவற்றிற்கு 40 சதவீதம். | மின் வெட்டு இல்லை. | உயர் அழுத்த தொழிற்சாலைகளுக்கு 50 சதவீதம் ஏனையவற்றிற்கு 40 சதவீதம். |
| 1—7—1985 .. .. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | 30 சதவீதம். | மின் வெட்டு இல்லை. | 30 சதவீதம். |
| —1—1986 .. .. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | 40 சதவீதம். | மின் வெட்டு இல்லை. | 40 சதவீதம். |
| 2—8—1986 .. .. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | மின் வெட்டு இல்லை. | 20 சதவீதம். | மின் வெட்டு இல்லை. | 20 சதவீதம். |